இந்தியா—நாடும் மக்களும்

நாணயங்கள்

நாணயங்கள்

பரமேச்வரி லால் குப்தா

தமிழாக்கம் :

அ. குழந்தை, பி.ஏ. (ஆனர்ஸ்)

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

புது டில்லி

1978 (1900)

ரூ. **20-00**

Original : COINS (English)

Tamil translation : NANAYANGAL

விநியோகிப்பாளர்கள் :

பாரி நிலையம்

59, பிராட்வே,

சென்னை–600 001

PUBLISHED BY THE DIRECTOR, NATIONAL BOOK TRUST, INDIA

A-5, GREEN PARK, NEW DELHI-110 016 AND

PRINTED AT TAX AND COMPANY LAW PRESS, MADRAS-600 032

முன்னுரை

கடந்த 2700 ஆண்டுக் காலத்தில் எத்தனையோ அரசுகள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் தோன்றி மறைந்துள்ளன என்பதை வரலாறு கூறுகிறது. அவற்றுள் சில விரிவடைந்து, பேரரசுகளாயும், மற்றவை ஒரு சில மைல் பரப்பளவை மட்டும் கொண்ட சிற்றரசுகளாயும் இருந்திருக்கின்றன. இவற்றை யெல்லாம் எத்தனையோ வமிசத்தினரும், ஒவ்வொரு வமிசத்திலும் எத்தனையோ மன்னர்களும் ஆண்டுள்ளனர். எனினும், எல்லா அரசுகளுமே தத்தமக்கென்று நாணயங்களை வெளியிட்டுள்ளன. இவ்வாருக, இமயத்திலிருந்து குமரி வரையும், பர்மா எல்லையி லிருந்து அரபிக்கடல் வரையும் விரிந்து பரந்துள்ள நமது பாரதத்தில் வெவ்வேறு உலோக நாணயங்கள் பல்லாயிரக்கணக்கில் புழங்கி வந்திருப்பது நமது பேறேயாகும்.

பல்வேறு காலங்களில் உருவாக்கப்பட்ட வெவ்வேறு நாணயங்கள் அனைத்துமே தத்தம் பணியினைச் செம்மையாகச் செய்து வந்துள்ளன. அதோடு மட்டுமன்றி, இன்றும்கூட அவற்றிற்கு மதிப்பும் முக்கியத்துவமும் உண்டு. நமது நாட்டு வரலாற்றினைப் படிப்படியாக எடுத்துப் பகரும் அரிய சான்றுகளாக அவை உள்ளன ; அதோடு, அவற்றை வெளியிட்டோரின் வாழ்க்கை யையும் வரலாற்றையும்கூட அவை நம் மனக்கண்முன் கொண்டு வருகின்றன. நடந்த உண்மையான நிகழ்ச்சிகளைப்பற்றிய தகவல் களையும் நமக்குத் தருகின்றன. நமது நாட்டின் கடந்த கால நிகழ்ச்சிகளைப்பற்றி நமக்குத் தேவையான நிரூபணங்களைக் கொண்ட நூலேதும் நம்மிடம் இல்லை. இருக்கின்ற நூல் களும் அரைகுறையானவை. எனவே, நமது நாட்டை ஆண்ட மன்னர்களைப்பற்றியோ, அவர்களது பெயர்கள், பரம்பரை, சிந்தனை, செயல்களைப்பற்றியோ உண்மையான விவரங்களை அந் நூல்களில் முழுமையாகக் காண முடியாது. இந் நிலையில் அவ்வுண்மை விவரங்களையெல்லாம் நாம் பெரும்பாலும் அறிந்து

கொள்வதற்கு நாணயங்கள்தான் உதவுகின்றன. இதனுல்தான் நம் நாட்டு வரலாற்றினை முழுமையாக அறிந்துகொள்வதற் கேற்ற முக்கியச் சான்றுகளாய் நாணயங்கள் பயன்படுகின்றன.

சான்ருக, கி.மு. 200 முதல் 100 ஆண்டுகள் வரை பஞ்சாப் பகுதியை ஏறக்குறைய முப்பது பாக்டிரிய மன்னர்களும் ராணி களும் ஆண்டிருக்கின்றனர் என்ற விவரத்தை அவர்களது நாணயங்களிலிருந்துதான் அறியவருகிருேம். பழங்கால கிரேக்க ரோமானிய வரலாற்று நூல்களிலோ அவர்களைப்பற்றிய குறிப்பு ஏதுமில்லை. ஆனுல், அவர்கள் வெளியிட்ட தங்க, வெள்ளி, செம்பு நாணயங்களை 2000 ஆண்டுகளுக்குப் பின் கண்டுபிடித்ததன் வாயிலாகத்தான் இந்தியாவுக்கும் கிரேக்கத்திற்கும் பெருமை யளிக்கக்கூடிய இவ் வரலாற்று உண்மையை அறிந்துகொள்ள முடிகிறது. பாக்டிரிய மன்னர்களைப் பின்பற்றியே அவர்களுக்குப் பின் வந்த பார்த்திய, சைதிய நாட்டுப் படையெடுப்பாளர்களும் தம் நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர். இந்நாணயங்களும் வரலாற்று முக்கியத்துவம் கொண்டவை. இவற்றிலிருந்துதான் அப் படையெடுப்பாளர்களின் பெயர்களையும் வரலாற்றையும் நாம் தெரிந்துகொள்ள முடிகிறது. இவ்வாருக, கிறிஸ்து பிறப் பிற்கு முன்பும் பின்பும் நமது நாட்டில் தோன்றிய பல்வேறு நகரக் குடியரசுகள், இனக் குடியரசுகள், முடியாட்சிக்குட்பட்ட அரசுகள் அனைத்தையும்பற்றிய தேவையான வரலாற்று விவரங் களைத் தரக்கூடிய முக்கியமான சாதனங்களாக நாணயங்கள் பயன்படுகின்றன.

நமது நாட்டை ஆண்ட பலரைப்பற்றிய வரலாற்றிற்கு வேறு பல ஆதாரங்கள் இருந்தபோதிலும், அவர்கள் வெளியிட்ட நாணயங்களும் முக்கியமான சான்றுகளாகும். உதாரணமாக, தக் காணத்தை ஆண்ட சாதவாகனர்களைப்பற்றிய விவரங்களுக்குப் புராணமும் கல்வெட்டுக்களும் இருக்கின்றன ; இருந்தபோதிலும் இவ் விவரங்கள் சரியானவையா அல்லது தவருனவையா என்பதை உறுதிப்படுத்துவதற்கும், தவருனவை எனின் அவற்றைத் திருத்திக்கொள்வதற்கும், அரைகுறையாயின் அவற்றை நிறைவுபடுத்துவதற்கும் நாணயங்கள்தாம் நமக்கு உதவுகின்றன. எடுத்துக்காட்டாக, அக்பரைப்பற்றியும் அவரது

சமயப் பண்புகளைப்பற்றியும் அவரது கால ஆய்விலிருந்து நாம் நன்கறிவோம். எனினும், ராமன், சீதை உருவங்களுடன் அவர் வெளியிட்ட நாணயங்களிலிருந்துதான் அவர் வைணவ பக்தி வழியைக் கடைப்பிடித்தார் என்பதை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. அதேபோல், பம்பாயிலிருந்த ஆங்கில வணிகத்தலங்களுக்கு எதிராக ஔரங்கசீப் பொங்கி எழுந்தார் என்ற உண்மையை வரலாறு புலப்படுத்துகிறது; எனினும், அவரது எதிர்ப்புக்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதை நாணயங்களிலிருந்துதான் அறிய முடியும்.

மதம்பற்றிய வரலாற்றிலும் நாணயங்களுக்கு முக்கியப் பங்கு உண்டு. சான்றாக, கி.பி. முதலாவது, இரண்டாவது நூற்றாண்டுகளில் வடமேற்கு இந்தியாவை ஆண்டு வந்த குஷானர்கள் வெளியிட்ட நாணயங்களில் கிரேக்க, இரானியத் தெய்வங்கள் மட்டுமன்றி, புத்த, பிராமணத் தெய்வங்களின் உருவங்களும் உள்ளன. அம் மன்னர்களது ஆட்சிக்குட்பட்டிருந்த மக்கள் வணங்கிய தெய்வங்கள் என்னென்ன என்பதை மட்டுமன்றி, எவ்வாறு ஒவ்வொரு இனத்தவரும் வெவ்வேறு தெய்வத்தை வழிபட்டனர் என்பதையும், சிலை வழிபாட்டு முறை எப்படி வளர்ந்தது என்பதையும் இந்நாணயங்கள் எடுத்துக்காட்டுகின்றன. மேலும், கனிஷ்கரின் நாணயங்களில்தாம் புத்தரின் உருவம் முதன்முதலில் பொறிக்கப்பட்டது என்பதையும், அவருக்கு முன்பு புத்தரை உணர்த்தக்கூடிய சின்னங்கள்தாம் பொறிக்கப்பட்டு வந்தன என்பதையும் நாணயங்கள் தெரிவிக்கின்றன. அதே போன்று, நான்கு கரங்களுடன் தோன்றும் சிவனது உருவம்கூட இந்நாணயங்களில்தாம் முதன்முறையாகப் பொறிக்கப்பட்டது. மேலும், குஷான மன்னர்களின் நாணயங்களில் விஷ்ணுவையோ அவரைச் சார்ந்தவர்களையோ காண முடியாது; ஆனால் அதே சமயம், சைவ மதக் கடவுள்களான உமா, விசாகன், ஸ்கந்தன், மஹாஸேனர் ஆகியோரின் உருவங்கள் உள்ளன. இதிலிருந்து, அவர்களது ஆட்சியின்போது வைஷ்ணவக் கடவுள்கள் மக்களிடையே பிரபலமாகவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. குப்தர்களின் நாணயங்களில் துர்க்கை, கங்கை, லட்சுமி ஆகியோரின் உருவங்களைக் காணலாம். இந் நாணயங்களில்

லட்சுமியைப் பல்வேறு வடிவங்களில் தீட்டியுள்ளனர். இதிலிருந்து ஓர் உண்மை புலனாகிறது. அதாவது, குஷானர்களின் நாணயங்களில் லட்சுமியைப் போன்ற செல்வ நாயகியான அர்டோக்ஷோவின் உருவத்தைப் போன்றே லட்சுமியின் உருவமும் முதன் முதலில் இருந்தது. ஆனால், படிப்படியாக லட்சுமிக்குப் பல வடிவங்கள் தந்து, இறுதியில் அவளைத் தாமரையில் இருத்தி, அவளது கையில் தாமரை மலரையும் வைத்து, அம் மலரிலிருந்து காசுகள் கொட்டுவதுபோல் சித்திரித்து, அவளைச் செல்வத்தின் தெய்வமாக வழிபடும் முறை வளர்ந்தது.

நிற்க, இந்தியாவிற்கு முதன்முதலில் படையெடுத்து வந்த முஸ்லிம் மன்னர்களான முகமது கஜினியையும் முகமது கோரியையும் வர்ணிக்கும் வரலாற்று ஆசிரியர்கள், அவர்களை இந்துமத விரோதிகளாயும் இந்துக் கடவுள்களின் சிலைகளை உடைப்போராயும் சித்திரிக்கின்றனர். ஆனால், அவர்களது நாணயங்களோ இதற்கு மாறான கருத்தைத் தெரிவிக்கின்றன. சான்றாக, சிலை வழிபாட்டுக்காரர்கள் என்றும் தாழ்ந்தவர்கள் என்றும் கருதப்பட்ட இந்துக்களின் ஸம்ஸ்கிருத மொழியில் நாகரி லிபியில் கலிமாவின் உண்மையான மொழிபெயர்ப்பைத் தந்தவர் கஜினி முகமதுதான். அதேபோல், தான் வெளியிட்ட தங்க நாணயங்களில் லட்சுமியின் உருவத்தைப் பொறித்ததோடு, தன் பெயரையே நாகரி லிபியில் தீட்டியவர் முகமது கோரி. இவ்விரு மன்னர்களும் தாங்கள் இழித்துப் பழித்த இந்துக்களின் உணர்ச்சிகளை நன்குணர்ந்திருந்தனர் என்பதையும், தங்களுக்குப் பின் டில்லியில் ஆட்சிபுரிந்த முஸ்லிம் மன்னர்களைவிடப் பரந்த மத நோக்கம் உள்ளவர்கள் என்பதையும் இந் நாணயங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம். முஸ்லிம் மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் கலிமாவைப் பொறித்து வந்த பழக்கத்தைக் கைவிட்டவர் ஔரங்கசீப்தான். இதிலிருந்தே அவரது பரந்த மனப்பான்மை வெளிப்படுகிறது; எனினும், குரானின் புனிதச் சொற்களைக்கொண்ட கலிமாவை நாணயங்களில் பொறித்து, அந் நாணயங்களை முஸ்லிம் அல்லாதோர் புழங்கினால் கலிமாவின் புனிதத் தன்மை மாசுபட்டுவிடுமே என்று ஔரங்கசீப் நினைத்

திருக்கலாம். தீரம் ஷராய் என வழங்கப்பட்ட நாணயங்களை ஔரங்கசீப்தான் வெளியிட்டார் ; இந் நாணயங்கள் வரதட்சணை வாங்குவதையும், இஸ்லாமிய சட்டப்படி தண்டனையாக விதிக்கப் பட்ட வரியையும் கண்டிக்கும் வகையில் உருவாக்கப்பட்டவை யாகும். இவ்வாருக, பொருளாதார வரலாற்றில்கூட நாணயங் களுக்கு முக்கியத்துவம் உண்டு என்பது வெளிப்படை. இவ்வுண்மையை எவரும் மறுக்க இயலாது.

நாணயங்கள் வரலாற்று முக்கியத்துவம் மட்டும் கொண்டவை யல்ல ; கலைத்திறனும் அழகும் கொண்டவை ; நாணயங்களை உருவாக்குவதற்காகப் பொறிக்கப்பட்ட அச்சுக்கள் அக்காலத்திய கலைஞர்களின் திறமையை மட்டுமன்றி, கலை அழகை ரசிக்கும் மக்களின் மனப்பான்மையையும் வெளிப்படுத்துகின்றன. இந்திய - பாக்டிரிய நாணயங்களின் கலைநுணுக்கத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவற்றிலுள்ள அரசர்களின் உருவங் களும் ஏனைய உருவங்களும் கிரேக்க நாட்டுக் கலைத்திறனைப் பிரதிபலிக்கின்றன. அதேபோல், சாதவாகன மன்னர்களின் நாணயங்களிலும் வனப்புமிக்க சின்னங்கள் பொறிக்கப் பட்டுள்ளன. அதோடு, அவ்வரசர்களின் நிஜ உருவங்களை அவை படம்பிடித்துக் காட்டுவதுபோல் உள்ளன. குப்த வமிச மன்னர்களின் தங்க நாணயங்கள்கூட கிரேக்க முறையில், இயற்கையைத் தத்ரூபமாய் சித்திரிக்கும் வகையில் தொடர்பு கொண்டது. ஜஹாங்கீர் நாணயங்களிலுள்ள அழகு நிறைந்த சின்னங்கள் மொகலாய அரண்மனைகளில் தீட்டப்பட்ட வண்ண ஓவியங்களுக்கு இணையானவை. அதோடு, அந் நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்களும் அக்காலத்திய கலைநுணுக்கத் திற்குச் சிறந்த சான்றுகளாகும்.

இவ்வாருக, இந்திய நாணயங்கள் வரலாற்று ஆசிரியர்களை மட்டுமன்றி, கலைத்திறனை ரசிக்கும் மக்களையும் கவரக்கூடியவை. பல ஆண்டுகளாகப் பாமரமக்களும்கூட நாணயங்களைச் சேகரித்து வந்தனர். அறிவை வளர்ப்பதற்கும் பொழுதுபோக்கிற்கும் இந்திய நாணயங்களைச் சேகரிக்கும் பழக்கம் நம் நாட்டின ரிடையே மட்டுமன்றி, பிற நாட்டவரிடமும் உண்டு. எனினும் நம் நாட்டில் என்னென்ன நாணயங்கள் புழங்கி வந்துள்ளன

என்பதை விவரிக்கும் புத்தகம் ஏதும் நம்மிடம் இல்லாததால், வெறும் நாணயங்களை மட்டும் கொண்டு வரலாற்று முக்கியத் துவத்தை அறிய விரும்புவர்கள்கூட அவதிப்படவேண்டி யுள்ளது. இதனால்தான் நாணயங்களைச் சேகரிக்கும் பழக்கத் திற்கு அவ்வளவு செல்வாக்கு இல்லை.

மேற்கூறிய உண்மைகளையெல்லாம் மனத்தில்கொண்டு, என் னால் முடிந்தவரை நமது நாட்டு நாணயங்களின் வரலாற்றை இந் நூலில் விவரிக்க முற்பட்டுள்ளேன். எனது இந்த முயற்சியில் குறைகளும் இருக்கலாம். எனினும், நம் நாட்டு நாணயங்களைப் பற்றிப் பொதுமக்கள் அறிந்துகொள்வதற்கு ஒரு நூல்கூட இல்லையே என்று வெகுநாட்களாகவே என் மனத்தில் ஒரு குறை இருந்து வந்தது. இக் குறையைப் போக்க வேண்டும் என்ற எழுச்சியின் காரணமாகத்தான் இந் நூலை எழுதியுள்ளேன். இதில் எவற்றைச் சேர்ப்பது, எவற்றை விடுவது என்பதைத் தீர்மானிப்பது கடினம். ஆனாலும், நாணயங்கள் சேகரிப்போர், தம்மிடமுள்ள நாணயங்களின் முக்கியத்துவத்தை உணர்வ தற்கும், அவை எவ்வளவுதூரம் வரலாற்றுச் சிறப்புக் கொண்டவை என்பதைச் சித்திரித்துக் காட்டுவதற்கும் அவசிய மான விவரங்களையே தந்துள்ளேன். இது போன்ற நூல்களில் எல்லா விவரங்களையும் தந்தால், அது வாசிப்போருக்குச் சலிப்பை ஏற்படுத்திவிடும். ஒருவேளை, இந் நூல் அப்படியேகூட இருக்கலாம். எனினும், பொதுமக்கள்கூட இந் நூலை ஆர்வத் துடன் வாசிப்பர் என்றே கருதுகிறேன்.

இறுதியாக, இந் நூலினை எழுதுவதற்குப் பெரும் துணை புரிந்த அனைவருக்கும் நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாக, நாணயங்களைப்பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்வ தற்கு அரிய வாய்ப்பினை அளித்து, உதவியும் செய்த லண்டனி லுள்ள பிரிட்டிஷ் தொல்பொருட் காட்சிசாலை, பம்பாயிலுள்ள வேல்ஸ் இளவரசர் தொல்பொருட் காட்சிசாலை அறங்காவலர் களுக்கும், பாட்னா தொல்பொருட் காட்சிசாலை அதிகாரி களுக்கும் எனது கடப்பாட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், வேறு பல தொல்பொருட் காட்சிசாலைகளும், நிறுவனங்களும், தனிப்பட்ட நாணயச் சேகரிப்பாளரும், நண்பர்

களும் தம்மிடமிருந்த புகைப்படங்களையும் நாணயங்களையும் கொடுத்து உதவினர். அவற்றை நான் தாராளமாக இந் நூலில் பயன்படுத்தியுள்ளேன். அவர்கள் அனைவருக்கும் என் நன்றி. இந் நூலின் பொருளடக்க அட்டவணையைத் தயாரித்த எனது மகள் ஜோட்ஸனுவுக்கும் எனது பேரன் சுனிலுக்கும் எனது அன்பு கனிந்த நன்றி.

பரமேச்வரி லால் குப்தா

பொருளடக்கம்

அதிகாரம் 1

நாணயங்கள் தோன்றிய விவரம்

நாணயங்கள் தோன்றிய வரலாறு மனித வரலாற்றோடு பின்னிப் பிணைந்தது. அதன் வரலாறு எப்படித் தொடங்கியது என்ற விவரத்தை அறிய வேண்டுமாயின் மனிதன் தனியாக அல்லது தன் குடும்பத்தோடு மட்டும் தனித்து வாழ்ந்த பழங்காலத்தை நினைவுகொள்ள வேண்டும். அக் காலத்தில் அவனுக்குத் தேவைப் பட்டதெல்லாம் உணவு, உடை, உறைவிடம்தான். இவற்றைக் கூட அவன் இயற்கையின் வாயிலாகவும் பூமாதேவியின் வழியாகவுமே பெற்று, வேறு எவ்வித விருப்பமும் கவலையுமின்றி வாழ்ந்துவந்தான். நாளடைவில் பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து தனி இனமாக அல்லது சமுதாயமாக வளர்ந்தது. இவ்வாறு தோன்றிய ஒவ்வொரு இனத்தவரும் தமக்கென்று குறிப்பிட்டவொரு வாழ்க்கை முறையை மேற்கொண்டனர். தாம் உற்பத்தி செய்த எல்லாவற்றையும் அந்தந்த இனத்தவரே ஆண்டு அனுபவித்தனர். காலப்போக்கில், ஓர் இடத்தில் வாழ்ந்த இனத்தவர் மற்ற இடங்களில் வாழ்ந்த இனத்தவரோடு தொடர்புகொண்டு புதியதொரு வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டனர். இவ்வாறு பல்வேறு இனத்தவரிடையே சமுதாயத் தொடர்பு ஏற்பட்ட பின்னர், ஒவ்வொரு இனத்தவரும் மற்ற வர்கள் உற்பத்தி செய்த பொருள்களை அறிந்து, அவற்றை அடைவதற்கு விரும்பினர். இந் நிலையில் ஒரு பண்டத்தைக் கொடுத்து மற்றப் பண்டங்களை வாங்கும் புதிய பழக்கம் தோன்றி யது. பள்ளிச் சிறுவர்கள் சிலர் தம்மிடமுள்ள கோலிகளைக் கொடுத்து, தபால் தலைகளைப் பெறுவதுபோல், ஒவ்வொருவரும் தாம் உற்பத்தி செய்த பண்டத்தைக் கொடுத்து, மற்றவர் உற்பத்தி செய்த பண்டங்களைப் பெற்றுவந்தனர்.

பின்னர், மக்கள் குறிப்பிட்ட இடங்களில் குடியமர்ந்து, பெரிய சமுதாயமாக வளர்ந்து வாழ நேரிட்டபோது, பண்டங்களுக்குப்

பண்டம் பரிவர்த்தனை செய்யும் பழக்கமும் அவசியமாயிற்று; இப் பழக்கமே ஒரு வியாபாரம்போல் வளர்ந்து பண்டமாற்று முறையாக மலர்ந்தது. இவ்வாறு தோன்றிய பண்டமாற்று முறையில் பல சிக்கல்கள் எழுந்தன, அச் சிக்கல்களைப் போக்குவதற்காகப் புதியதொரு முறை கண்டுபிடிக்கப்பட்டது. எல்லா வியாபாரத்திலும் பொருள்களைக் கொடுப்போரும் பெறுவோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பொதுப்பண்டத்தை நிர்ணயித்தனர். இதனால் நாளடைவில் சில பண்டங்களுக்கு மற்றவற்றை விடக் கிராக்கியும் மதிப்பும் ஏற்பட்டது. அப் பண்டங்களே பரிவர்த்தனை செய்வதற்கேற்ற சாதனங்களாக மாறின; அவற்றைக்கொண்டு பிற பண்டங்களின் மதிப்பு அளவிடப்பட்டது. இவ்வாறாக, மதிப்பின் அளவுகோல் எனற கருத்து உருவாகி, நாணய வரலாற்றிற்கு முதல் படிநிலை தோன்றியது.

இந்தியாவில் ஹரப்பாவில் வாழ்ந்த மக்கள் சுமார் கி.மு. 3000 வருஷங்களுக்கு முன்பே விவசாயப் பண்டங்களைத் தமது பரிவர்த்தனை சாதனங்களாகப் பயன்படுத்தியிருக்கலாம் என்று தெரிகிறது. ஹரப்பாவாசிகள் சிந்துச் சமவெளியிலிருந்து குஜராத்தின் தெற்குப் பகுதி, பஞ்சாப், டெல்லியின் மேற்குப் பகுதி வரையிலும் பரவியிருந்தார்கள். ஹரப்பா, மொகஞ்சதாரோ நகரங்களிலிருந்த களஞ்சியங்களெல்லாம் அரசாங்கத்திற்கு மக்கள் அளித்த கொடையின்மூலம் நிரம்பி வழிந்ததாகவும், இன்றைய அரசாங்க பாங்கு செய்யும் பணிகளை அக் களஞ்சியங்களே அன்று செய்து வந்ததாகவும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் நம்புவர்.

வேத காலத்தில் கால்நடைகளை வளர்த்து வாழ்க்கை நடத்திய மக்கள், தம்மிடமிருந்த பசுக்களைக் கொடுத்து, பிற பொருள்களை வாங்கினர். இதனால் பசுக்களே பரிவர்த்தனைக்கேற்ற சாதனங்களாக மதிக்கப்பட்டன. இதற்கு ரிக் வேதத்தில் பல சான்றுகள் உள்ளன. இந்திரனின் சிலையொன்று பத்துப் பசுக்களுக்கு விற்கப்பட்டதாக ரிக் வேதத்திலுள்ள வாசகம் கூறுகிறது. பிறிதொரு வாசகத்தின்படி, ரிஷி ஒருவர் தன்னிடமிருந்த இந்திரனின் சிலையைப் பத்தாயிரம் பசுக்களுக்குக்கூட விற்க மறுத்துவிட்டாராம். மற்றொரு வாசகத்தில் பாரதப் படையினர் பசுக்களைப்

பெற வேண்டுமென்ற ஆசையில் படையெடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது. களவு போன தனது சொத்துகளான பசுக்களை மீட்டு வருவதற்காக இந்திரன் தூது அனுப்பியதாகவும் அறிய வருகிறோம். வேத காலத்திய ஆரியர்கள் சோமப் பயிரைக் கொடுத்து, பசுக்களைப் பெற்றனர்; இதனால் சோமப் பயிர்களுக்கும் அதிகக் கிராக்கி ஏற்பட்டது. பசுக்கள்தாம் செல்வமாக மதிக்கப்பட்டதாக **ஐதரேய பிராமணம்**கூடக் கூறுகிறது. உயிர்ப் பலி கொடுப்பதற்காகச் சுனச்சேபனை வாங்கிய **அரிச்சந்திரன்** நூறு பசுக்களை விலையாகக் கொடுத்தார். மேலும், அப் பையனைத் தூணில் கட்டிவைத்துப் பலி கொடுக்கும் பணியைச் செய்வதற்கு எவரும் முன் வராததால், அவனது தந்தை அப் பணியை ஏற்றுக் கொண்டு, அதற்கு விலையாக நூறு பசுக்கள் கேட்டார். அதோடு, தன் மகனைப் பலி கொடுக்க மேலும் நூறு பசுக்கள் வேண்டுமெனக் கோரினாராம். அதுமட்டுமன்றி, புரோகிதர்களுக்குத் தட்சிணையாக (கட்டணமாக)ப் பசுக்களையே கொடுத்து வந்தனர் என்பதற்குப் பிந்திய வேத நூல்களில் ஏராளமான சான்றுகள் உள்ளன.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுவரை பசுக்கள்தாம் பண்டமாற்றுச் சாதனங்களாகப் பயன்படுத்தப்பட்டன என்பதைப் பாணினி எழுதிய **அஷ்டாத்யாயி** என்ற நூலிலிருந்து அறிய வருகிறோம். **கோபுச்சம்** வழியாகத்தான் பொருள்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டதாக இந் நூலிலிருந்து தெரிகிறது. பசுக்களைக் குறிப்பிட கோபுச்சம் என்ற சொல்தான் பயன்படுத்தப்பட்டது. கோபுச்சம் என்றால் பசுவின் வால் என்றுதான் பொருள். பசுவை விலையாகப் பெற்றவர்கள் அதன் வாலைப் பிடித்துத்தான் பெற்றுக்கொண்டனராம். இப் பழக்கத்தின் நினைவாக, இன்றும்கூடப் பசு தானம் செய்யும் சடங்குகளில் இந்துக்கள் அதன் வாலைத்தான் புரோகிதர் கையில் கொடுக்கின்றனர்.

அக் காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பசுவே சிறந்ததாக இருந்ததனால் பசுக்களையே அதிகமாகப் பயன்படுத்தியிருக்கின்றனர். பசுக்கள் விரைவில் இறந்துவிடுவதில்லை; அதோடு விவசாயப் பண்டங்களைவிட அவற்றிற்கு அதிக மதிப்பும் இருந்தது. பசுக்களை இன விருத்தியின்மூலம் அதிகரிக்கவும் வேலைக்குப்

பயன்படுத்தவும் முடியும்; அதே சமயம் அவற்றிலிருந்து பால் கறக்கவும்கூடும். இதனால்தான் அவற்றிற்கு அதிக மதிப்பு இருந்தது. இருந்தபோதிலும், பிற்காலத்தில் பொருள்களை வாங்குவதற்கென்று பசுக்களைச் சேகரித்து வைப்பது கடினம். அவற்றை அக்கரையுடன் பராமரிப்பது சிரமம். அதே சமயம், பணத்தைச் செலுத்திப் பண்டங்களைப் பெறுவதுபோல் பசுவைக் கொடுத்துப் பெறுவதில் சிக்கல்களும் இருந்தன. மலிவான சின்னஞ்சிறு பண்டங்களைப் பசுவைக் கொடுத்துப் பெற முடியாது; ஏனெனில், பசுவின் மதிப்பு அதிகம். அதற்காக, அதன் காலையோ தலையையோ துண்டித்தும் தர முடியாது. அவ்வாறு துண்டித்துவிட்டால், அது புலாலுக்குத்தான் பயன் படுமேயன்றி, பசுவாகப் பயன்படாது; அப்போது அதற்கு அவ்வளவு மதிப்பும் இராது. இவ்வாறாக, பசுக்களைக் கொண்டு எல்லாப் பொருள்களையும் வாங்குவதோ விற்பதோ முடியாது. அதோடு, பிற்காலத்திற்கென அவற்றைச் சேமித்து வைக்கவும் இயலாது. இதனால்தான் வேதகால மக்கள் **நிஷ்கம்** எனப்பட்ட நகையைக் கண்டுபிடித்து அதையே பரிவர்த்தனைக்காகப் பயன் படுத்தினர். நிஷ்கம் என்பது கழுத்தில் அணியும் ஒரு வகை நகையாக இருந்திருக்கலாம். ரிக் வேதத்தில்கூட ருத்திரன் **விசுவரூபம்** போன்ற **நிஷ்கத்தை** அணிவதுபோல் சித்திரிக்கப் படுகிறார். **விசுவரூபம்** என்றாலென்ன என்பதைத் திட்டவட்ட மாகக் கூற முடியாது. எனினும், அது பல வண்ணங்கள் கொண்ட சுருள் வடிவங்கள் கொண்டது. வடிவம் எப்படியிருந் திருப்பினும் அஃது அழகும் நுணுக்கமான கலைத் திறனு முடையது. இதனால்தான், நிஷ்கம் அல்லது மாலையை அணிந் திருப்பதுபோல் காலைப்பொழுதின் வண்ணக்காட்சியை வர்ணிப்பர். இதிலிருந்து, வேதகாலத்தில் நகைகளிலெல்லாம் மதிப்புயர்ந்தது நிஷ்கம்தான் என்று தெரிகிறது.

கக்ஷீவத் என்ற முனிவர், **பவ்விய** மன்னனிடமிருந்து பத்துக் குதிரைகளையும் பத்து நிஷ்கங்களையும் வெகுமதியாகப் பெற்றதை **ரிக் வேதப்** பாடலொன்றில் விவரிக்கிறார். அதேபோன்று, நூறு நிஷ்கம், பத்துக் கழுத்தணிகள், முந்நூறு குதிரைகள், பத்து ஆயிரம் பசுக்கள் ஆகியவற்றைப் பரிசாகப் பெற்ற புலவர் பாடி

யுள்ளதை **அதர்வண வேதத்தில்** காணலாம். மேலும், குரு பாஞ்சாலநாட்டின் அறிஞரான **உத்தாலக ஆருணி** என்பார் வாதப் போட்டியில் தன்னை வெல்வதற்கு நாட்டிலேயே எவருமில்லை யென்றும், அப்படி யாராவது வென்றுவிட்டால் அவருக்கு நிஷ்கம் ஒன்று கட்டப்பட்ட கொடியைப் பரிசளிப்பதாகச் சவால் விட்டு, நாட்டையே சுற்றிவந்தார்[1] என்பதை **கோபத பிராமணத்திலிருந்து** அறிய வருகிறோம். மேலும், மந்திர வித்தையில் கை தேர்ந்த ஒருவரிடமிருந்து சில அரிய மந்திரங்களை எப்படியாவது தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பிய மன்னர் ஒருவர், அவருக்கு தன் மகளைமட்டுமன்றி, ஆயிரம் பசுக்கள், ஒரு குதிரை, குதிரைவண்டி, ஒரு கிராமம், நிஷ்கம் ஆகியவற்றைத் தருவதாக வாக்களித்ததாகச் **சாந்தோக்கிய உபநிடதம்** கூறுகிறது. இவற்றிலிருந்து, வேதகாலத்தில் பசுக்கள் மட்டுமன்றி, நிஷ்கம் என்னும் நகையும் செல்வத்தின் சின்னமாய்க் கருதப்பட்டது என்று தெரிகிறது. அக் காலத்திய மன்னர்கள் தம் புரோகிதர்களுக்குக் கொடையாக நிஷ்கத்தையே பெரும்பாலும் அளித்தனர்.

இவ்வாறு நகையே பண்டமாற்றுச் சாதனமாகப் பயன்பட்ட போது அந் நகைக்குப் பதிலாக அதன் உலோகத்தையே பயன்படுத்தலாமே என்று சிலர் நினைத்திருக்கலாம். ஏனெனில், குறிப்பிட்ட உருவத்தைக் கொண்ட அந் நகைக்குப் பதிலாக எந்த உருவத்தையும் ஆக்குவதற்கேற்ற உலோகம் மேலானதுதானே என்று அவர்கள் கருதியிருக்கக்கூடும். எனவே, காலப் போக்கில், இந்தியாவில் தங்கமே பரிவர்த்தனைக்கேற்ற சாதனமாக அமைந்தது. நதிகளின் மணல்களில் தங்கம் கலந்திருந்ததால், அம் மணல்களைக் கழுவிச் சுத்தம் செய்து தங்கத்தைப் பிரித்தெடுத்துவிடலாம் ; அதோடு, இந்தியாவின் தெற்குப் பகுதியில் தங்கம் தாராளமாகக் கிடைத்ததுமட்டுமன்றி, மத்திய ஆசியா, ஆப்கானிஸ்தானம், திபெத் ஆகிய இடங்களிலிருந்தும் ஏராளமான

---

[1] காசியில் இன்றும்கூட இவ் வகைப் போட்டி நிகழ்வதை இங்குக் குறிப்பிடலாம். ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் கஜாலி என்னும் பருவப்பாட்டுப் போட்டி அங்கு நடைபெறுகிறது. இப் போட்டியில் பல குழுவினர் பங்கு கொள்கின்றனர். ஒவ்வொரு குழுவினருக்கும் ஒவ்வொரு கொடியும் அக் கொடியில் பணமும் உண்டு. போட்டியில் தோல்வியடையும் குழுவினர் தம் கொடிகளை வெற்றியடையும் குழுவினருக்கு வெற்றிக் கேடயம்போல் தந்துவிடுகின்றனர்.

தங்கம் வந்து சேர்ந்தது. தங்கமே பணமாகப் புழங்கியது என்பதற்குச் சான்ருக, திவோதாசன் என்ற மன்னர் தனது புரோகிதருக்கு பத்து (தங்க?) மூட்டைகள், பத்துக் குதிரைகள், பத்து ஆடைகள், பத்துத் தங்கக்கட்டிகள் ஆகியவற்றை வெகு மதியாக அளித்ததாக ரிக்வேதம் கூறுகிறது.

உலோகம் புழக்கத்திற்கு வந்தபின், பிரச்சினைகள் தீர்ந்து விடவில்லை. அதனை எடை போட்டுச் சரி பார்க்க தராசு அவசிய மாயிற்று தராசைக் கண்டு பிடித்த பின்னர். எதனை வைத்து உலோகத்தின் எடையைக் கணக்கிடுவது என்ற பிரச்சினை எழுந்தது. அக் காலத்திய மக்கள் உலோகத்தை ஒரு தட்டிலும் விதைகளை மற்ரொரு தட்டிலும் வைத்து எடை பார்த்தனர். இதற்காக ஒரே அளவான விதைகளைப் பொறுக்கியெடுத்து, அவற்றைமட்டும் பயன்படுத்தினர். இவ்வாருக, விதைகளின் எண்ணிக்கையைக் கொண்டு உலோகத்தின் மதிப்பை அளவிட்டனர். இராஜசூய யாகத்தின்போது தேர்ப்போட்டியில் பங்கு கொண்ட ஒவ்வொருவருக்கும் ஒரு **கிருஷ்ணளம்** தங்கம் கொடுக்கப் பட்டதாகத் **தைத்திரீய பிராமணத்தில்** கூறப்படுகிறது. இதிலிருந்து உற்சவங்களில் பங்கு கொண்ட ஒவ்வொருவருக்கும் ஒரு **கிருஷ்ணளம்** தங்கமோ அல்லது வேறு உலோகமோதான் கொடுக்கப்பட்டது என்று தெரிகிறது. கிருஷ்ணளம் என்பது ஒரு வகை விதையாகும். இதுவே பிற்கால நூல்களில் **ரக்திகம், குஞ்சம்** என்று வழங்கப்பட்டது. இன்று **ரத்தி** என வழங்கப்படுகிறது. இதுவும் **குன்றிமணியும்** ஒன்றுதான். நமது நாட்டில் **யவம்** (பார்லி), **தண்டுலம்** (நெல்), **மாஷம்** (பருப்புவகை) ஆகியவற்றைக்கொண்டும் உலோகத்தை எடை போட்டனர். **கர்ஷம், களஞ்சு** எனப்படும் இருவகைப் பெரிய விதைகளைக்கூடப் பயன் படுத்தியதாகத் தெரிகிறது.

உலோகங்கள் கை மாறும்போதெல்லாம் ஒவ்வொரு தடவையும் அவற்றை எடைபோட்டுச் சரிபார்ப்பது சலிப்பை உண்டாக்கியது. இச் சிக்கலைப் போக்குவதற்குக் குறிப்பிட்ட எடையும் மதிப்பும் கொண்ட உலோகக் கட்டிகளைப் பயன்படுத்கலாமென எண்ணினர். இதற்குச் சான்ருக, பிந்திய **சம்ஹிதை, பிராமணங்களில்** வட்ட வடிவம் கொண்ட உலோகத் துண்டான **சதமானம்** என்பது

குறிப்பிடப்பட்டுள்ளது. (சதமானம் என்ருல் நூறு அலகுகள் என்று பொருள்). மன்னனுக்கு மகுடம் அணியும் விழாச் சமயத்தில் நடந்த இராஜசூய யாகத்தின்போது தேர்ப்போட்டி நடத்துவது வழக்கம்; இப் போட்டியில் கலந்து கொண்ட மன்னரின் தேர்ச்சக்கரங்கள் இரண்டில் ஒவ்வொரு **சதமானத்தைக்** கட்டிவைத்தனராம். நாளடைவில் **சதமானத்தையே** புரோகிதர் களுக்கும் கொடுக்க முற்பட்டனர். **சதமானத்தைப்**போல் (நான்கில் ஒரு பங்கு எனப் பொருள்படும்) **பாதம்** எனப்படும் உலோகக் கட்டியும் பயன்படுத்தியதாக **பிருஹதாரண்யக உபநிடதத்தில்** விதேகத்தைச் சேர்ந்த ஜனக மன்னர் செய்த **பகுதக்ஷிண யாகத்தை** விளக்கும் பகுதியிலிருந்து அறிய வருகிருேம். அம் மன்னர், அறிஞர்களிலெல்லாம் சிறந்தவர் யார் என்பதை அறிந்துகொள்வதற்காக, தனது அரண்மனையில் அவர்களுக்கு விவாதப் போட்டி வைத்தார். அப் போட்டியில் வெற்றியடையும் அறிஞருக்கு வியக்கத்தகுந்த பரிசாகப் பத்துப் பாதங்களை ஒவ்வொரு பசுவின் கொம்பிலும் கட்டி, அவ்வாருன ஆயிரம் பசுக்களை அளிக்க ஏற்பாடு செய்தார் என்று தெரிகிறது.

இவ்வாருக, இந்திய வரலாற்றில் கி.மு. 1500ஆவது ஆண்டி லிருந்து 800ஆவது ஆண்டுவரை நாணயங்கள் எவ்வாறு படிப்படி யாகப் புகுத்தப்பட்டன என்பதில் இரு படிநிலைகளைப் பற்றிய விவரங்களை வேதகால நூல்களில் காணலாம். எனினும், இவ் விவரங்கள் அனைத்தும் அங்கும் இங்குமாகவும் ஒன்ருே டொன்று பின்னியும்தான் இந் நூல்களில் உள்ளன. இதனுல் நாணய வரலாற்றில் முதல் படிநிலையிலிருந்து எப்படி, எப்போது நமது முன்னோர்கள் இரண்டாவது படிநிலைக்கு வந்தனர் என்பதைக் கூறுவது கடினம்.

குறிப்பிட்ட எடையும் வடிவமும் கொண்ட உலோகத்தைக் கொண்டு பண்டங்களை விற்கும் வாங்கும் பழக்கம் ஏற்பட்ட போதிலும், இம் முறையில்கூடச் சில குறைகள் இருந்தன. அவ் வுலோகம் கலப்படமற்றதோ, குறிப்பிட்ட எடை கொண்டதோ என்பதற்கு எவ்வித உத்திரவாதமும் இல்லாததால், அதைப் பெற்ருேர் தம்மைத் தாமே திருப்தி செய்துகொள்ள வேண்டிய நிலை இருந்தது. இதற்காக ஒவ்வொருவரிடமும் தராசும் உறை

கல்லும் வைத்திருக்கவேண்டியிருந்தது. எனவே, அவ்வுலோகம் இவ்வளவு எடையும் தூய்மையுமுள்ளது என்பதை உறுதிப் படுத்தி, அதற்கு உத்திரவாதம் அளிக்கும் வகையில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அவற்றில் குறிப்பிட்ட அடையாளத்தை முத்திரையிடலாமென எண்ணினர். இவ்வாருக, நமது நாட்டில் மட்டுமன்றி, பிற நாடுகளிலும் பழைய முறையிலிருந்த குறைகள் நீக்கப்பட்டு, நாணயங்கள் முறையாகத் தோன்றிவிட்டன.

இவ்வாருக, நாணயங்களைக் கண்டுபிடித்ததால் வணிகர்களுக்கு எவ்வளவோ நன்மை ஏற்பட்டது. சிக்கலின்றி வியாபாரம் செய்ய முடிந்தது. தான் விரும்பும் பொருளை வாங்குவதற்கு முத்திரை யிட்ட உலோகத் துண்டைக் கொடுத்தால்போதும் என்ருகி விட்டது. இதனுல், வியாபாரிகள்தாம் நாணயங்களை உருவாக் கும் பொறுப்பை ஏற்றிருக்கவேண்டுமெனச் சிலர் கூறுவர். ஆனுல், இவ்வாறு கூறுவது தவறு. ஏனெனில், எந்த நாணயமாக இருந்தாலும் அதன் மதிப்பு அதை முத்திரையிட்டு வெளியிடும் அதிகாரிகளின் நல்லெண்ணத்தையும் நேர்மையையும் சார்ந்தது. வியாபாரிகள், வியாபாரச் சங்கங்கள், அல்லது வியாபாரக் கார்ப்ப ரேஷன்களின் செல்வாக்கு அவர்கள் இருந்த இடத்தில் மட்டுமே இருந்தது. எனவே, நாணயங்களை அவர்கள் வெளியிட்டிருந்தால் அவை நாடெங்கிலும் புழங்கியிருக்க முடியாது. எனவே, நாணய வெளியீட்டில் அவர்களுக்குப் பங்கு இருந்திருக்குமாயின், அது தொடக்கநிலையில் இருந்திருக்கலாம். மேலும், வியாபாரிகளும் வணிகர்களும்தாம் நாணயங்களை வெளியிட்டனர் என்பதற்கு நமது நாட்டு நூல் எதிலுமே ஆதாரம் கிடையாது. அதோடு, எந்த நாணயமும் அதற்குச் சான்ருக இல்லை. எனவே, எவரும் மறுக்கவோ, எதிர்க்கவோ முடியாத அரசுகள்தாம் நாணயங்களை வெளியிடும் பொறுப்பை ஏற்றிருக்க வேண்டும். இதுதான் உண்மை. நாளடைவில் நாணயங்களை அச்சிட்டு வெளியிடும் உரிமை அரசின் சிறப்புரிமையாகிவிட்டது.

முத்திரையிட்ட நாணயங்களை வெளியிடும் இந் நிலையை வேத காலத்திய மக்கள் அடைந்திருக்க முடியாது. ஏனெனில், **பாணினி** அவர்கள் எழுதிய இலக்கண நூலான **அஷ்டாத்யாயி**யில்தான் முத்திரையிட்ட நாணயங்களைப்பற்றிய முதல் குறிப்பு உள்ளது.

இந் நூல் எந்த ஆண்டு எழுதப்பட்டது என்பதில் இன்றும்கூட ஐயமுண்டு. சிலர் கி.மு. ஆருவது நூற்ருண்டில் என்பர்; வேறு சிலர் கி.மு. ஐந்தாவது நூற்ருண்டிலேயே எழுதப்பட்டுவிட்ட தென்பர். எவ்வாறிருப்பினும், வேதகாலத்தின்போது வெறும் நகையாக மட்டும் இருந்த **நிஷ்கம்**தான் நாணயமாகப் பயன் பட்டதாக இந் நூல் கூறுகிறது. அதோடு, ஒரு நிஷ்கத்திற்கு வாங்கிய பொருளைக் குறிக்க **நைஷ்கிகம்** என்ற சொல்லும், இரு நிஷ்கம் மதிப்புடைய பொருளைக் குறிப்பிட **த்வி நைஷ்கிகம்** என்ற சொல்லும், மூன்று நிஷ்கம் மதிப்புடையதைக் குறிக்க **த்ரி நைஷ்கிகம்** என்ற சொல்லும் பயன்பட்டதாகத் தெரிகிறது. மேலும், சதமானங்களைக் கொண்டு பொருள்கள் வாங்கப் பட்டதைக் குறிப்பிடும் சான்றுகளும் இந் நூலில் ஏராளமாக உள்ளன. அதோடு, **நிஷ்கம், சதமானம், பாதம்** ஆகிய சொற்கள் மட்டுமன்றி, நாணயங்களைக் குறிக்கும் **விம்சதிக, த்ரிம்சதிக, சாண, கர்ஷபண** ஆகிய சொற்களும் இந் நூலில் காணப்படுகின்றன. இதிலிருந்து, **அஷ்டாத்யாயி** எழுதப்பட்ட காலத்திலேயே நமது நாட்டில் நாணயங்கள் பிரபலமாகி, ஏராளமாகப் புழங்கின என்பதை அறிய வருகிரும்.

நாணயங்களைப் பயன்படுத்துவதில், அக் காலத்திலேயே இந்தியா அதிகம் முன்னேறிவிட்டது என்பதை மேற்கூறிய சான்றுகள் உணர்த்துகின்றன. அதன் பின்னர் பல ஆண்டுகள் கழித்துத் தான் முத்திரையிடப்பட்ட நாணயங்கள் வெளிவந்திருக்கின்றன. எனவே, **அஷ்டாத்யாயி** வெளியான காலத்திற்கு முன்பே இந்தியாவில் முத்திரையுள்ள நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டன என்ருல், அது தவருகாது. **பிராமணங்களிலோ உபநிடதங்களிலோ** நாணயங்களைப்பற்றிய தெளிவான குறிப் பேதுமில்லை. இதிலிருந்து, இப் பெருநூல்கள் வெளியான சிறிது காலத்திற்குள், ஒருவேளை கி.மு. ஏழாவது நூற்ருண்டில் நாணயங் கள் முழு உருவம் எடுத்திருக்கவேண்டும். நாம் மேற்கூறிய தனைத்தும் உண்மையென்ருல், லிடியா அல்லது சைனுவில் நாணயங்கள் தோன்றுவதற்கு நூருண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் அவை தோன்றிவிட்டன எனப் பெருமையுடன் கூறலாம்.

அதிகாரம் 2

பண்டைய இந்திய நாணயங்கள்

வேதகாலத்திய மக்கள் முதன்முதலில் தங்கத்தை ஆபரணங்கள் செய்வதற்கே பயன்படுத்தினர். பின்னர்தான் செலாவணிக்காக வும் பணத்திற்காகவும் அதைப் பயன்கொண்டனர். பல ஆண்டுகள் கழித்து, தங்கம் ஏராளமாகக் கிடைத்ததால், அது மக்களிடையே பிரபலமாகிவிட்டது. கி.மு. 518ஆம் ஆண்டி லிருந்து 350ஆம் ஆண்டு வரை அக்கிமினிட் பேரரசில் சேர்ந்த இந்திய மாநிலம், ஆண்டொன்றுக்கு 300 தாலந்து தங்கத்தைக் கப்பமாக அப் பேரரசுக்குச் செலுத்திவந்ததாக வரலாற்று நிபுண ரான ஹெரொடோடஸ் கூறுகிறார். இருந்தபோதிலும், கி.மு. இரண்டாம் நூற்றாண்டு தொடங்கி முதல் நூற்றாண்டுவரை, அதாவது, இந்தோ-பாக்டிரியர்கள் இந்தியாவிற்கு வரும்வரை, நமது நாட்டில் தங்க நாணயங்கள் இருந்ததாகத் தெரியவில்லை. அப்போதெல்லாம் வெள்ளி நாணயங்கள்தான் புழக்கத்திலிருந் தன. ஒரு வேளை, அக் காலத்தில் மற்ற நாடுகளைவிட இந்தியாவில் தங்கம் மலிவாக இருந்திருக்கலாம்; அதனால்தான் நமது நாட்டு வணிகத்தில் தங்கம் ஏற்றுமதிப் பொருளாகவும், உள்நாட்டுப் பரிவர்த்தனைக்கு வெள்ளியும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

பழங்கால நூல் எதிலும் அக் காலத்திய நாணயங்கள் எவ்வாறு செய்யப்பட்டன என்ற விவரம் இல்லை. எனினும், கி.மு. நான்காம் நூற்றாண்டில் சந்திரகுப்த மௌரியரின் மந்திரியாக இருந்த கௌடில்யர் என்பவர் அரசுக்கலைபற்றி எழுதிய நூலான அர்த்த சாத்திரத்தில் கள்ள நாணயம் தயாரித்தோரை (கூடரூப காரர்)பற்றிக் குறிப்பிடும்போது, நாணயங்கள் செய்வதற்கு வேண்டிய சாதனங்களை யெல்லாம் தற்செயலாகக் குறிப்பிட் டிருப்பது கவனத்திற்குரியது. உலோகத்தை முதலில் மட்கலத்தில் (மூசை) உருக்கி, பின்னர், காரப்பொருள் சேர்த்து அதைச் சுத்தம் செய்து, சுத்தம் செய்த உலோகத்தைப் பட்டடைக்கல்லில்

வைத்து, அதைச் சம்மட்டியால் அடித்து, நீண்ட தகடுகளாகச் செய்து, கத்தரிக்கோலால் அவற்றைச் சின்னஞ்சிறு துண்டுகளாக வெட்டி, கடைசியில் முத்திரைப் பொறிகளைக்கொண்டு அவற்றில் முத்திரையிட்டனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இன்றும் கூட இதே முறையில்தான் நாணயங்கள் உலகம் எங்கும் அச்சடிக்கப்படுகின்றன. இதைத் தவிர, தானுக இயங்கும் இயந்திரங்களைக்கொண்டு அச்சடிக்கும் முறையும் இன்று உண்டு.

நாணயங்கள் சரியான எடையுள்ளவையாயிருக்க வேண்டுமென்பதற்காக, அதற்கேற்ப அக் காலத்தில் தகடுகளைக் கத்தரித்திருக்கின்றனர். அதோடு, அக்காலத்திய நாணயங்கள், இன்றுள்ளதைப்போலன்றி, எல்லா வடிவங்களிலும் உள்ளன. வட்டம், நீள்வட்டம், முட்டை வடிவம் என்று பல வடிவங்களில் அவை இருக்கின்றன. சில சமயங்களில் சரியான எடையுள்ள நாணயம் செய்வதற்கு வேண்டிய உலோகத்தை உருக்கி, அதைத் தரையில் அல்லது சமமான பலகையில் ஊற்றிவிட்டு, அது எந்த வடிவத்தில் வந்தாலும் அதை நாணயம் அடிக்கப் பயன்படுத்தியிருக்கின்றனர். வேறு சில சமயங்களில் உருக்கப்பட்ட உலோகத்திலிருந்து சிறு குமிழ் வடிவங்கள் செய்து, அவற்றை அடித்துத் தகடாக்கி முத்திரைப் பொறியின் உதவியால் ஒரு பக்கம் பதித்திருக்கின்றனர். இன்றுள்ள நாணயங்களில் பெரும்பாலும் ஒரு முத்திரை தான் உண்டு ; ஆனல், அக்கால நாணயங்களிலோ ஒன்றிலிருந்து ஐந்து முத்திரைகளைக் காணலாம். அவ்வாறு பல முத்திரைகளிட்டு உருவாக்கப்பட்ட நாணயங்களை "முத்திரையிடப்பட்ட நாணயங்கள்" என வரலாற்று அறிஞர்களும் நாணய ஆராய்ச்சியாளரும் கூறுவர்.

அந் நாணயங்களில் வெறும் முத்திரைச் சின்னங்கள் தாம் உள்ளன ; எந்த எழுத்துகளும் அவற்றில் பொறிக்கப்படவில்லை. எழுத்துகளுக்குப் பதிலாக, குன்றுகள், மரங்கள், பறவைகள், பிராணிகள், ஊர்வன, மனிதன் போன்ற உருவங்களைப் பல வகையிலும், மதத்தின் அடையாளங்கள், சதுரம், முக்கோணம் போன்ற வடிவங்களையும் அவற்றில் பொறித்துள்ளனர். இவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணத்திற்காக அல்லது குறிக்கோளுக்காகப் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது,

இந்த வகை நாணயத்திற்கு இந்தச் சின்னம், அல்லது இந்த இடத்தில் புழங்கும் நாணயத்திற்கு இவ்வகை அடையாளம் என்று போட்டிருக்கின்றனர். எனவே, எந்தெந்த நாணயங்கள் எந்தெந்த இடத்திற்குரியது என்றும், எந்தெந்த அரசிற்குரியது எந்தக் காலத்திற்குரியது என்றும் எளிதாகப் பாகுபடுத்தி விடலாம்.

மேற்கூறியதுபோல், அக் கால நாணயங்களில் ஒரு புறம் மட்டும்தான் முத்திரைச் சின்னங்கள் போடப்பட்டன. இதை முன்புறம் என்று வைத்துக்கொள்வது நன்று. பின்புறம் எவ்வித முத்திரைச் சின்னமுமின்றி, வெறுமையாக விடப்பட்டது. நாளடைவில் பின்புறத்திலும் நுணுக்கமான ஏதாவது சிறிய அடையாளங்களை முத்திரையிட்டிருக்கின்றனர். ஆனால், இச் சிறு அடையாள முத்திரைகளை நாணயச்சாலைகள் போடவில்லை; மாறாக, புழக்கத்திற்கு விடப்பட்ட பின், அந் நாணயங்களை வைத்திருந்தோர் தாம் அச் சிறு அடையாளங்களை முத்திரையிட்டுக் கொண்டனர். இதனால், அந் நாணயங்களில் முன்புறம் ஒரு சின்னமோ அல்லது ஒரே மாதிரியான பல சின்னங்களோ இருக்கும். பின்புறம் ஒன்று, வெறுமையாயிருக்கும்; அல்லது பல சிறு அடையாளங்கள் இருக்கும். பின்புறம் அடையாளங்கள் உள்ள நாணயங்களை எடுத்துக்கொண்டால், அவற்றில் ஓரிரண்டு அடையாளங்கள்மட்டுமோ அல்லது பத்துப் பன்னிரண்டு அடையாளங்களோ உள்ளன. ஓரிரு அடையாளங்கள்மட்டும் இருந்தால் அவை அழியாமல் தெளிவாகவும், நிறைய இருந்தால் அவை தேய்ந்து அல்லது பழுதடைந்தும் உள்ளன. இதிலிருந்து ஓர் உண்மை புலனாகிறது. பின்புறம் அழியாத ஓரிரு அடையாளங்களைமட்டும் கொண்ட நாணயங்கள் மக்களிடையே அதிகமாகப் புழங்கியிராது; நிறைய அடையாளங்களுள்ளவை அதிகமாக அல்லது பல ஆண்டுகள் புழங்கியிருக்கும். பின்புறம் அடையாளமே இல்லாதவை, ஒன்று புழக்கத்திற்கே வந்திராது அல்லது ஏதோ பெயருக்கு ஓரிரு தடவைமட்டும் புழங்கியிருக்கும். ஏனெனில், இந்த அடையாளங்களை வட்டிக்கடைக்காரர்கள், பாங்கர்கள், அல்லது நாணயத்தைச் சோதித்துப் பார்ப்போர், அந் நாணயங்கள் தரமானவைதாம், சரியானவைதாம் என்பதற்

குச் சான்ருகப் போட்டிருக்கலாம். இதிலிருந்து, அவை அதிகாரம் பூர்வமானவையென்ருலும், அவற்றின் தரத்திலும் மதிப்பிலும் அக்காலத்திலேயே மக்களுக்குச் சந்தேகம் இருந்திருக்கவேண்டும் என்று தெரிகிறது.

இவ்வகை முத்திரையிட்ட வெள்ளி நாணயங்கள் நாடெங்கிலுத் ஏராளமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் தொடக்கப் தில் வெளியானவை குறிப்பிட்டவொரு இடத்தில் அல்லது பகுதியில் மட்டும் காணப்படுகின்றன. இவற்றை பாரத யுத்தத் திற்குப் பின், அதாவது கி.மு. பதினேரும் நூற்ருண்டிலிருந்த **ஜனபதங்கள்** எனப்பட்ட சிறிய அரசுகளும், **மகாஜனபதங்கள்** என்றழைக்கப்பட்ட பெரிய அரசுகளும் வெளியிட்டிருக்கின்றன. நாளடைவில் இவ்வரசுகள் அனைத்தும் கி.மு. ஐந்தாம் நூற்ருண்டில் தோன்றி, கி.மு. நான்காம் நூற்ருண்டுவரை விரிவடைந்த மகதப் பேரரசில் மூழ்கிவிட்டன. இந் நாணயங்களிலிருந்து, இவற்றை வெளியிட்ட அரசுகள் யாவை என்பது தெரிகிறது. அதாவது, சூரசேனம் (மதுராப் பகுதியைச் சுற்றியுள்ள தற்கால பிராஜ்), உத்தர பாஞ்சாலம் (ரோகில் கண்டு பகுதி), தட்சிண பாஞ்சாலம் (கங்கையிலிருந்து சம்பல் வரை பரந்துள்ள தோஆப் பகுதி), வத்சம் (கங்கையிலிருந்து தெற்கே அவந்தி அல்லது உஜ்ஜயினி வரையுள்ள பெரும் பகுதி), குணைம் (ஒருவேளை இக்கால கொண்ட, பராய்ச் மாவட்டங்கள்), கோசலம் (மேற்கே கோமதி நதி, தெற்கே தற்கால சாயி எனப்படும் சர்ப்பிகா, கிழக்கே இன்றைய கந்தக் எனப்படும் சதநீரா, வடக்கே நேபாளக் குன்றுகள் வரை அடங்கியிருந்த பகுதி), காசி (வாரணசியைச் சுற்றி ஜோன்பூர், காஜிபூர், மிர்சாபூர் ஆகிய மாவட்டங்களும் சேர்ந்த பகுதி), மல்லா (தியோரியா மாவட்ட மும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளும்), மகதம் (வடக்கே கங்கை நதி, மேற்கே சோன் நதி, தெற்கே சோட்டா நாகபுரி வரையுள்ள அடர்ந்த காடுகள், கிழக்கே பகல்பூர் பகுதி வரை அடங்கிய பிராந்தியம்), வங்கம் (வங்காளம்), கலிங்கம் (ஒரிசாவில் வைதாரிணியிலிருந்து ஆந்திரா எல்லை வரையுள்ள கடற்கரைப் பகுதி முதல், மேற்கே அமர்கண்டகம் என்னும் மலங்காட்டுப் பகுதி வரை), ஆந்திரா (கோதாவரி, கிருஷ்ண நதிகளின்

டெல்டாப் பகுதி), அஸ்மகம் (மகாராஷ்டிரத்தில் கோதாவரிக்குத் தெற்கேயுள்ள பகுதி), மூலகம் (ஹைதராபாத் உள்பட அஸ்மகத் திற்கருகிலுள்ள மாநிலம்), சௌராட்டிரம் (கத்தியவார் பகுதி), காந்தாரம் (ஆப்கானிஸ்தான எல்லைப் பகுதியிலுள்ள வடமேற்குப் பகுதி) ஆகிய அரசுகள்தாம் இந் நாணயங்களை வெளியிட்டன.

இவற்றில் சில அரசுகள், அல்லது ஒருவேளை, எல்லா அரசு களும் **பிராமண உபநிடத** காலங்களில், அதாவது கி.மு. எட்டாம் நூற்றாண்டில், உலோகத்தைப் பணத்திற்காகவும் செலாவணிக் காகவும் பயன்படுத்தியிருக்கக்கூடும். எனவே, நாணயங்களைப் பற்றிய எண்ணம் இவ்வரசுகளிடம்தாம் முதன்முதலில் தோன்றி யிருக்கக்கூடும். ஆனால், அவ்வெண்ணம் யாரிடம், எப்போது தோன்றியது என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. மேலும், இவ்வரசுகளின் நாணயங்களில் வருடம் பொறிக்கப் படாமலிருப்பதால், எந்த வருடம், எந்த அரசால் நாணயங்கள் முதலில் வெளியிடப்பட்டன என்று கூற முடியவில்லை. இருந்த போதிலும், இவ்வரசுகள் வெளியிட்ட நாணயங்கள் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன்பே புழக்கத்தில் இருந்தன வென்றும், கி.மு. நான்காம் நூற்றாண்டின் இறுதியில் மகதப் பேரரசு விரிவடைந்தபோது அவை கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிட்டன என்றும் கூறலாம்.

இவ்வரசுகள் வெளியிட்ட நாணயங்கள் ஒன்றுக்கொன்று மாறு பட்டவை. நாணயத்தின் செயற்பாங்கு, எடை, தோற்றம், உலோகத்தின் தரம், முத்திரைச் சின்னம் ஆகிய ஒவ்வொன்றிலும் வேறுபாட்டைக் காணலாம். சான்றாக, சூரசேனம், உத்தர பாஞ்சாலம், தட்சிண பாஞ்சாலம், குணளம், சௌராட்டிரம், அஸ்மகம் ஆகிய அரசின் நாணயங்களில் ஒரே சின்னம்தான் உள்ளது. எனினும், இச் சின்னம் தோற்றத்தில் மட்டுமன்றி, செயற்பாங்கிலும்கூட வெவ்வேறாக உள்ளன. இவற்றில் அஸ்மகம், குணளம் ஆகிய இரு அரசுகள்மட்டும் உலோகத்தை உருக்கி, அதை ஒரே மட்டமான தகட்டில் ஊற்றி, அது உலர்ந்து கெட்டியாவதற்கு முன் சின்னத்தை முத்திரையிட்டு, நாணயங் களைச் செய்திருக்கின்றன. ஏனைய அரசுகள் அனைத்தும் உலோகத்

தகட்டைச் சிறு துண்டுகளாகக் கத்தரித்து, அவற்றில் சின்னம் பொறித்து நாணயங்களைத் தயாரித்திருக்கின்றனர். அஸ்மகத்தின் நாணயங்கள் தடிப்பாகவும், வட்டமாக அல்லது நீள்வட்டமாகவும் இருப்பதோடு, சிறிது குழிவாகவும் உள்ளன. இவற்றில் வட்டமான முத்திரையும், இவ் வட்டத்தில் தெளிவும் அழுத்தமுமான சின்னமும் உள்ளது. நாணயத்தின் ஓரம் கெட்டியாகவும், மெழுகில் பதிவானதைப் போன்ற வரம்பைக் கொண்டதாகவும் காணப்படுகிறது. இதன் சின்னம் மிகச் சாதாரணமானது. இரண்டு உருளைகளைத் தனித்தனி கயிற்றால் பெரியதொரு உருளையோடு இணைத்திருப்பதுபோல் தோன்றுகிறது. இந் நாணயங்கள் மூன்று எடையிலுள்ளன:—சில 99 முதல் 108 தானிய மணி எடையும், மற்றவை 21 முதல் 32 தானிய மணி எடையும் உள்ளன. குணுள அரசின் நாணயங்கள் அஸ்மக நாணயங்களைப் போன்று தடிப்பாக உள்ளன; ஆனால், இவற்றிற்குத் திட்டவட்டமான வடிவமோ வரம்போ இல்லை. இவற்றில் வட்டமான கோடும், அக் கோட்டிற்குள் அழுத்தம் திருத்தமான சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளன. குணுள நாணயங்களுக்கும் அஸ்மக நாணயங்களுக்கும் முக்கியமானவொரு வேறுபாடு உண்டு. குணுள நாணயங்களில் நடுவில் ஒரு பெரிய சின்னமும், அதைச் சுற்றிச் சில, பெரும்பாலும் நான்கு சிறு சின்னங்களும் உள்ளன. இச் சிறு சின்னங்களை, பெரிய சின்னத்தைப் போட்டபின் உடனடியாகப் போட்டிருக்கின்றனர். இப் பெரிய சின்னம் தாமரை வடிவம்போல், அல்லது மூன்று அரை வட்டங்கள் ஒரு குமிழைச் சுற்றி முடிவதுபோல் உள்ளது. குணுள நாணயங்கள் 105 தானிய மணி எடையிலும் 50 தானிய மணி எடையிலும் உள்ளன.

சௌராட்டிர நாணயங்கள் 15 தானிய மணி எடையில் சிறியதாயும் மெல்லியதாயும் உள்ளன. இவற்றின் ஓரங்கள் மட்டமாகவும், நடுப்பகுதிகள் குழியாகவும் இருக்கின்றன. இவற்றின் சின்னமாக ஓர் எருதும் அதைச்சுற்றிப் பல சிறிய அடையாளங்களும் உள்ளன. சூரசேனம், உத்தர பாஞ்சாலம், தட்சிண பாஞ்சாலம் ஆகிய மூன்று அரசுகளின் நாணயங்களுமே ஏறக்குறைய 25 தானிய மணி எடை கொண்டவை. இவற்றில் சூரசேன நாணயங்களும், உத்தர பாஞ்சால நாணயங்களும் ஒரே மாதிரி

அமைப்பையும் சின்னத்தையும் உடையன. இந் நாணயங்கள் சிறியதாகவும் தடிப்பாகவும் இருக்கின்றன. இவற்றில் முத்திரைப் பொறியின் ஒரு பகுதி மட்டுமே பதிக்கப்பட்டுள்ளது. உத்தர பாஞ்சால நாணயங்களில் மீன், எருது, தனியாகவோ அல்லது யானைப் பாகனுடனே உள்ள யானை ஆகிய மூன்று சின்னங்கள் தாம் பெரும்பாலும் உள்ளன. சூரசேன நாணயங்களில் உள்நோக்கிய இரு அரைவட்டங்களும் எருது போன்ற சின்னமும் சேர்ந்து ஒரு குன்றுபோல் தெரிகிறது. இக் குன்றின்மீது ஒரு பூனை அல்லது சிங்கம் போன்ற மிருகம் பொறிக்கப்பட்டுள்ளது. இந் நாணயங்களின் வலப் பக்கம் எருது போன்ற உருவம், சூலம் போன்ற வடிவம், வளர்மதி ஆகியவையும் காணப்படுகின்றன. இவ்விரு அரசுகளின் நாணயங்களிலும் பின்புறம் வெறுமையாக உள்ளது. தட்சிண பாஞ்சால நாணயங்கள் வேறு வகையானவை. வடிவத்தைக் கொண்டும் சின்னத்தைக் கொண்டும் இவற்றை நூறு இனங்களாகப் பாகுபடுத்தலாம். பெரும்பாலும் இவற்றின் சின்னங்கள் வட்ட வடிவமானவை. இவற்றில் புள்ளிகள், தொடர்ச்சியான கோடுகள், விட்டு விட்டுப் போடப்பட்ட கோடுகள் ஆகியவற்ருலான வட்டங்களும், சிறு சிறு கோடுகள், குமிழ்கள், சதுரங்கள், எருது போன்ற பல வடிவங்களைக் கொண்டு தீட்டப்பட்ட வட்டங்களும் உள்ளன. இவ் வட்டமான சின்னத்தைப் பெறுவதற்காக இவற்றை முறையாகவும் சீராகவும் தொகுத்திருக்கின்றனர். எனினும், இந் நாணயங்களின் முத்திரை யிடப்பட்ட பகுதிகள் முத்திரைப் பொறிகளைவிடச் சிறியவை; இதனுல் எதிலும் முத்திரைச் சின்னம் முழுமையாக இல்லை. இவற்றின் பின்புறம் சின்னஞ்சிறிய பல சின்னங்கள் உள்ளன. இவற்றைப் பதிப்பதற்காகப் பட்டடைக்கல்லில் நாணயத்தைக் குப்புற வைத்து, பின்புறத்தில் முத்திரைப் பொறியை வைத்துச் சுத்தியலால் அடித்திருக்கின்றனர், இதனுல் முன்புறமுள்ள சின்னம் பாதிக்கப்பட்டு, தெளிவின்றி மங்கலாக ஆகிவிட்டது.

காந்தார நாணயங்கள் நீண்ட துண்டுகளில் உள்ளன; இவை குழிவாகக் காணப்படுகின்றன. இவற்றின் நீளம் 1 அங்குலத்தி லிருந்து $1\frac{3}{4}$ அங்குலம் வரையிலும், அகலம் சராசரி 4 அங்குலமும் உள்ளன. இத் துண்டுகளை நீள்சதுர வடிவமான

உலோகத் தகடுகளிலிருந்து கத்தரித்திருக்கின்றனர். அத் தகடுகள் ஒரே கனமுள்ளவையாய் இருந்திருக்கவேண்டும்; எனவே, அவற்றின் அகலத்திற்கேற்பப் பல்வேறு நீளத்தில் இவை கத்தரிக்கப்பட்டிருக்கின்றன. வேண்டிய எடைக்கேற்ப, தகடுகளைத் துண்டு போட்ட பின்னர், நாணயத்தின் எடைக்கேற்ப ஓரங்களை அராவியிருக்கின்றனர். பின், இந்நாணயங்களில் மேலும் கீழும் ஒரே முத்திரைச் சின்னத்தைப் பதித்திருக்கின்றனர். மரப்பட்டரைக் கல்லில் சூடான நாணயத் தகடுகளை வைத்து, சின்னங்களை அடித்திருப்பதால், நாணயங்கள் குழிவானவையாகி விட்டன. பெரிய முத்திரைப் பொறிகளைக் கொண்டு சின்னங்களைப் பதித்திருப்பதால், இச் சின்னங்கள் முழுமையாகப் பதியவில்லை. இச் சின்னங்களும் வட்ட வடிவமானவை. இவ் வட்டத்தில் ஆறு கிளைகளும் நடு வட்டத்திலிருந்து ஒரு கம்பம் எழுவதுபோலும் இச் சின்னம் காணப்படுகிறது. இந் நாணயங்கள் செய்யப்பட்டபோது 183 தானியமணி எடை இருந்திருக்கவேண்டும்; ஆனால் இப்போது இவற்றின் பிரயோகத்திற்கும் நிலைமைக்கு மேற்ப இவை 150 முதல் 180 தானியமணி எடைதான் உள்ளன. இவற்றில் சில நாணயங்களின் பின்புறமும் சில சிறிய அடையாளங்கள் உள்ளன. இவை புழக்கத்திலிருந்தபோது இவற்றைச் சோதித்துப் பார்த்தோர் இவ்வடையாளங்களைப் போட்டிருக்க வேண்டும். இந் நாணயங்கள் அனைத்தும் கி.மு. ஆறும் நூற்றுண்டின் இறுதியிலிருந்து கி.மு. நான்காம் நூற்றுண்டின் மத்திவரையிருந்த பாரசீகப் பேரரசின் பகுதியில் தான் காணப்படுகின்றன. எனவே, இவற்றின் எடை பாரசீக நாணயங்களின் எடையான **சிக்ளாவை** யொட்டி இருப்பதாகவும், இவை இரண்டு சிக்ளா எடை இருப்பதாகவும் சில அறிஞர்கள் கூறுவர். காந்தாரத்தில் 90, 80, 43, 20, 7 தானியமணி எடைகளுள்ள சிறு நாணயங்களும் பயன்பட்டதாகத் தெரிகிறது. பெரிய நாணயங்களிலுள்ள அதே சின்னம்தான் இவற்றிலும் உள்ளது. எனினும், இவற்றின் வடிவமும் தோற்றமும் வேருக உள்ளன. இவை அனைத்தும் கிண்ண வடிவம் போல் இருந்தாலும், அமைப்பு வெவ்வேருக உள்ளன.

வங்க நாணயங்கள் நீள்சதுர வடிவத்தில் மெல்லியதாய்

உள்ளன. இவற்றின் அளவு சுமார் அரை அங்குலம்தான். எடையோ 50 முதல் 52 தானியமணி உள்ளது. இவற்றில் மூன்று வெவ்வேறு சின்னங்கள் காணப்படுகின்றன. சிலவற்றில் ஒரு தளமுள்ள கப்பலும், வேறு சிலவற்றில் ஒரு சக்கரமும், ஏனையவற்றில் இரு வட்டங்களும் அவற்றைச் சுற்றி ஆறு கிளைகள்கொண்ட சின்னமும் உள்ளன.

ஏனைய எட்டு அரசுகளில், வத்சம், கோசலம், காசி, மகதம், கலிங்கம், ஆந்திரா ஆகிவற்றின் நாணயங்கள் மெல்லியதாகவும், மல்லா, மூலகம் ஆகியவற்றின் நாணயங்கள் தடிப்பாகவும் கனமாகவும் இருக்கின்றன. இந்த எட்டு அரசுகளும் தத்தம் நாணயங்களில் நான்கு சின்னங்களைத்தான் பயன்படுத்தியுள்ளன. இந்த நான்கு சின்னங்களும் மூன்று வகையில் உள்ளன. இம் மூன்று வகையில், முதலாவதாக, நான்கு சின்னங்களைப் பெறுவதற்கென்று இரண்டு சின்னங்களைச் சோடி சோடியாகப் போட்டிருக்கின்றனர். இதில் ஒரு சோடியிலுள்ள சின்னங்கள் இரண்டும் ஒன்றையொன்று நோக்கியிருப்பதுபோல் சில நாணயங்களில் உள்ளன. இரண்டாவது வகையில், நான்கு சின்னங்களில் ஒரு சோடியும், ஏனைய இரண்டும் தனித்தனியான வேறு சின்னங்களாயும் உள்ளன. மூன்ருவது வகையில், வெவ்வேறு தனித்தனி சின்னங்களாகவே நான்கும் உள்ளன. இம் மூன்று வகையிலும் தீட்டப்பட்ட நான்கு சின்னங்களும் மகதம், வத்சம் ஆகிய அரசுகளின் நாணயங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளன. காசி அரசு, இச் சின்னங்களை முதல் இரண்டு வகைகளில் பயன்படுத்தியுள்ளது. மூலகம், இரண்டாவது வகையில் மட்டும் பயன்படுத்தியுள்ளது. ஆந்திரா, இரண்டாவது வகையிலும் மூன்ருவது வகையிலும் பயன்படுத்தியுள்ளது. கோசலம், மல்லா, கலிங்கம் ஆகியவை மூன்ருவது வகையில் மட்டும் பயன்படுத்தியுள்ளன. இம் மூன்று வகையும் ஒன்றிலிருந்து மற்றென்ருக வந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது.

வத்ச நாணயங்கள் மெல்லியதாயும் பெரியதாயும் உள்ளன. இவை ஓர் அங்குலத்தில் வட்டமாய் இருக்கின்றன. இவற்றில் வட்டம், நீள் வட்டம், சதுரம், முக்கோணம் போன்ற வடிவங்களும், பிராணிகள், சுருள்கள், ஆறு கிளைச் சின்னமும், தேள்

போன்ற உருவங்களும் சின்னங்களாக அமைந்துள்ளன. இவற்றில் கடைசியாகக் கூறப்பட்ட சின்னம்தான் தெளிவாக இருக்கின்றது. இந் நாணயங்கள் ஏறத்தாழ 50 முதல் 54 தானிய மணி எடையுள்ளன. கோசல நாணயங்களை, தொடக்கத்தில் வெளியானவை என்றும், பிற்காலத்தில் வெளியிடப்பட்டவை என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். தொடக்கத்தில் வெளியான நாணயங்கள் வட்டவடிவில் பெரியதாயும் மெல்லியதாயும் உள்ளன. இவற்றில் பின்புறம் சிறிய பல்வேறு சின்னங்கள் பொறிக்கப்பட்டிருப்பதால், பின்புறம் நைந்து தோன்றுகிறது. பிற்காலத்திய நாணயங்கள் ஓரளவு தடியானவை. இவற்றிலும், பின்புறத்தில் சிறிய பல சின்னங்கள் முத்திரையிடப்பட்டுள்ளன. எனினும், முன்புறமுள்ள சின்னங்கள் பாதிக்கப்படாமல் தெளிவாகவே தோன்றுகின்றன. இவற்றில் வட்டம், சதுரம், முக்கோணம் போன்ற வடிவங்களும், யானை, காளை, முயல் ஆகியவற்றின் உருவங்களும்தான் பெரும்பாலும் சின்னங்களாக உள்ளன. ஒரு சில நாணயங்களில் சில மரங்கள்கூடக் காணப் படுகின்றன. எனினும், இச் சின்னங்களில் ஒரு சிறு குமிழைச் சுற்றி மூன்று S வடிவம் கொண்ட சின்னம்தான் அதிகமாகவும் தெளிவாகவும் உள்ளது. இந் நாணயங்கள் அனைத்தும் 42 தானிய மணி எடையுள்ளன. காசி நாணயங்கள், வத்ச நாணயங்களைப் போன்றும், தொடக்கத்தில் வெளியிடப்பட்ட கோசல நாணயங் களைப் போன்றும் மெல்லியதாய் முட்டை வடிவத்தில் உள்ளன. ஆனால், சின்னங்களை முத்திரையிட்ட முறையின் விளைவாக இந் நாணயங்கள் ஓரளவு கோப்பை வடிவில் தோன்றுகின்றன. இவற்றில் சின்னங்களில் ஒரு சோடிச் சின்னங்கள் மற்ற சோடியைவிடச் சிறியதாயுள்ளன. இவற்றில் பல சிக்கலான சுருள்களும், அவற்றிலிருந்து நான்கு கரங்கள் நீட்டிக்கொண் டிருப்பதுபோல வடிவமும், பல்வேறு வளைவுகளும் சின்னங்களாக உள்ளன. இவற்றில் சில தாமரைப் பூ போன்ற வடிவத்தில் உள்ளன. இந் நாணயங்கள் சுமார் 75 தானியமணி எடை இருக்கின்றன.

ஆந்திர நாணயங்கள் சிறியவை; மெல்லியவை. இவற்றிற்குக் குறிப்பிட்ட அமைப்போ உருவமோ இல்லை; எனினும்,

இவற்றில் முத்திரையிடப்பட்ட சின்னங்கள் தெளிவாக இருக்கின்றன. பெரும்பாலும், எல்லா நாணயங்களிலுமே யானையின் சின்னம்தான் உள்ளது; அதுவும் வலப் பக்கமோ இடப் பக்கமோ திரும்பியுள்ளதைப்போல் இருக்கிறது. மேலும், அக்காலத்திய மரபுப்படி போடப்பட்ட மரங்களின் சின்னத்தையும், வேறு பல சின்னங்களையும்கூடக் காணலாம். இவற்றில் பொதுவாக வட்டம், சதுரம், முக்கோணம், புள்ளிகள், வளை கோடுகள் போன்ற வடிவங்களும், காளை போன்ற உருவங்களும்தான் அதிகமாகக் காணப்படுகின்றன. சில நாணயங்களில் காளையின் சின்னமும் உள்ளது. இந் நாணயங்கள் பெரும்பாலும் 20 தானியமணி எடைதான் உள்ளது. கலிங்கத்தின் நாணயங்களும் ஆந்திர நாணயங்களைப் போல் மெல்லியதாயும் சிறியதாயும்தான் இருக்கின்றன. அதோடு, இவற்றில் ஆந்திர நாணயச் சின்னங்களில் ஒன்றுதான் காணப்படுகிறது. எனவே, இவ்விரு நாணயங்களும் ஒன்றோடொன்று தொடர்புள்ளதுபோல் அறிய வருகிறோம். மூலக நாணயங்கள் கனமாகவும் வட்டமாகவும் உள்ளன. இவை 65 தானியமணி எடையுள்ளன. இவற்றில் நான்கு சின்னங்கள் இருந்தபோதிலும், அவற்றில் ஒன்று இரண்டு இடங்களில் முத்திரையிடப்பட்டுள்ளது. இவ்வாறு சோடியாகவுள்ள சின்னம் அரைவட்ட வடிவக் கோடுகளால் தீட்டப்பட்டு எளிமையானதாகத் தோன்றுகிறது மற்ற தனித்தனியான இரண்டு சின்னங்களில், ஒன்று, வட்டமாகவும் அதைச் சுற்றிலும் குமிழ்குமிழான பல கதிர்களாகவும் உள்ளது. மற்றொன்று, குன்றின்மீது வாத்துப்போன்ற பறவையொன்று பறப்பதுபோல் உள்ளது.

மல்லா நாணயங்களை இரு வகையாகப் பிரிக்கலாம். முதல் வகை நாணயங்கள் தடித்த வார்ப்புக் கட்டிகளைப் போல் உள்ளன. இவை 65 தானியமணி எடையுள்ளன. இவற்றில் சாதாரணக் கோடுகளைக் கொண்டு இரண்டு சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இச் சின்னங்களில் ஒன்று பெரியதாயும் பிறிதொன்று சிறியதாயும் உள்ளன. இரண்டாவது வகை, நாணயங்களை அதிக மதிப்புடையதென்றும் குறைந்த மதிப்புடையதென்றும் இரு இனங்களாகப் பாகுபடுத்தலாம். அதிக

மதிப்புடைய நாணயங்கள் 48 முதல் 50 தானிய மணி எடையுள்ளன. இவற்றில் நான்கு சின்னங்கள் உள்ளன. குறைந்த மதிப்புடைய நாணயங்கள் 10 முதல் 12 தானியமணி எடைதான் உள்ளன. இவற்றில் வட்டம், சதுரம், முக்கோணம் போன்ற வடிவத்தில் இரண்டே சின்னங்கள் தான் உள்ளன.

மகத அரசின் நாணயங்களை, அவை வெளியான காலத்தைக் கொண்டு இரு இனங்களாகப் பாகுபடுத்தலாம்: (1) மகத அரசு, சாதாரணச் சிற்றரசாக இருந்தபோது வெளியிட்ட நாணயங்கள். இவற்றை 'உள்ளூர்' நாணயங்கள் என வைத்துக்கொள்ளலாம். (2) இவ்வரசு பேரரசாக விரிவடைந்த காலத்தில் வெளியிட்ட நாணயங்கள். இவை நாடெங்கிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 'உள்ளூர்' நாணயங்களை மூன்று வகையாக முறைப்படுத்தலாம் ஒருவேளை இம் மூன்று வகை நாணயங்கள் வெவ்வேறு காலத்தில் வெளியிடப்பட்டிருக்கலாம். இம் மூன்றில் முதல்வகை நாணயங்கள் அதிக மதிப்புடையவை, குறைந்த மதிப்புடையவை என்று இரு தரமாகப் பிரிக்கலாம். உயர்ந்த தர நாணயங்கள் மெல்லியதாயும் தட்டையாயும் முட்டை வடிவத்தில் உள்ளன. இவை சுமார் ஒன்றரை அங்குல நீளமும் ஓர் அங்குல அகலமும் இருக்கின்றன. இவற்றில் தெளிவான சின்னங்கள் இரண்டும், அவற்றில் ஒன்று பெரியதாயும் மற்றொன்று சிறியதாயும் உள்ளன. அளவில் இவ்விரு சின்னங்களும் வெவ்வேறாக இருந்த போதிலும், இவ்விரண்டுமே தாமரை வடிவத்தில்தான் உள்ளன. இந் நாணயங்கள் ஏறக்குறைய 125 தானியமணி எடையுள்ளன. குறைந்த தரமுள்ள நாணயங்கள் 3 தானியமணி எடையே உள்ளன. இவற்றில் சிறியதொரு தாமரைச் சின்னம்தான் உள்ளது. இரண்டாவது வகை நாணயங்கள் நான்கு தரங்களில் உள்ளன. இவற்றில் முதல் தர நாணயங்களும் இரண்டாம் தர நாணயங்களும் வட்டமாக அல்லது நீள் வட்டமாக இருக்கின்றன. இந் நாணயங்களைச் செய்வதற்கு, உலோகத்தை உருக்கி, தகடு போல் தட்டையாக ஆக்கி, அது ஓரளவு குளிர்ந்து கெட்டியாவதற்கு முன்பே முத்திரைப் பொறியால் சின்னங்களைப் பதித்திருக்கின்றனர். இதனால் சின்னங்கள் மழுமழுப்பாக இல்லாமல் மேடும் பள்ளமுமாக ஆகிவிட்டன. சில நாணயங்களில் உலோகம்

சரியாக உலருமுன்பே முத்திரையிட்டதனால் சின்னங்கள் கறை படிந்துள்ளன. நன்றாகக் குளிர்ந்து உலர்ந்தபின் முத்திரையிடப் பட்ட நாணயங்களில் சின்னங்கள் முழுமையாகப் பதியவில்லை. இவற்றில் முதல்தர நாணயங்களில் நான்கு சின்னங்கள் உள்ளன. சில நாணயங்களில் இரண்டு சின்னங்கள் மட்டும் சோடி சோடியாக உள்ளன; வேறு சிலவற்றில் ஒரு சின்னம் மட்டும் சோடியாகவும் மற்ற இரண்டும் வெவ்வேறாகவும் இருக்கின்றன. எனினும், எல்லா நாணயங்களிலும் ஒரு சோடி சின்னங்கள் மற்ற இரண்டையும்விடச் சிறியவை. இரண்டாம் தர நாணயங்களிலோ ஒரு சின்னம் மட்டுமே உள்ளது. இவ்விரு தர நாணயங்களும் முறையே 92 முதல் 97 தானியமணி எடையும், 46 முதல் 49 தானியமணி எடையும் உள்ளன. அடுத்து வரும் மூன்றாம், நான்காம் தர நாணயங்கள் அமைப்பிலும் தோற்றத்திலும் முற்றிலும் மாறுபட்டவை. இவை மெல்லிய தகடுகளிலிருந்து செய்யப்பட்டுள்ளன. இவற்றில், மூன்றாம் தர நாணயங்கள் பெரியதாயும், நான்காம் தர நாணயங்கள் சிறியதாயும் இருக்கின்றன. பெரிய நாணயங்கள் நீண்டும் ஓரங்கள் வட்டமாயும் உள்ளன. சிறியவை வட்டமானவை. பெரிய நாணயங்களில் இரண்டு சின்னங்களும் சிறியவற்றில் ஒரு சின்னமும் இருக்கின்றன. முத்திரைப் பொறியை வைத்து அடித்ததால் பெரிய நாணயங்கள் படகு போன்றும் சிறியவை தாளம் போன்றும் ஆகி விட்டன. அதோடு, முன்புறச் சின்னங்கள் பிதுங்கியும் பின்புற முள்ள சின்னங்கள் பள்ளமாயும் ஆகியுள்ளன. இதனால், இச் சின்னங்கள் பின்புறமிருந்து அடித்து உருவாக்கப்பட்ட ஒப்பனை வேலைபோல் தோன்றுகின்றன. இவற்றில் பெரிய நாணயங்கள் 13-லிருந்து 16 தானியமணி எடையும், சிறியவை 7-லிருந்து 8 தானியமணி எடையும் இருக்கின்றன. மேற்கூறிய நான்கு தர நாணயங்களும் இரண்டு முறைகளில் செய்யப்பட்டவை யெனினும், இவற்றின் சின்னம் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. ஆறு கிளைச் சின்னம் தோன்றுகிறது; ஆனால் இது என்னவென்று உறுதியாகக் கூற முடியாது. இந் நாணயங்களை யெல்லாம் **ராஜ கிரகம்** என இன்றழைக்கப்படும் **கிரிவிராஜத்தைத்**

தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பிருஹத்திரதா வமிசத்தினர் வெளியிட்டிருக்கலாம்.

மூன்ருவது வகை மகத நாணயங்கள் வத்சம், கோசலம், காசி நாணயங்களைப்போல் மெல்லியதாயும் பெரியதாயும் இருக்கின்றன. இவற்றில் சின்னங்கள் தெளிவாகவும் முழுமையாகவும் உள்ளன. இவற்றில் காணப்படும் சின்னங்கள் வருமாறு: (1) பதிஞறு கதிர்களுடன் தோன்றும் சூரியன்; (2) ஒன்றுவிட்டு ஒன்று போடப்பட்ட மூன்று காளை உருவங்களும் மூன்று முட்டை வடிவங்களும்; (3) இடது சாயலாக நிற்கும் காளை; (4) இடது சாயலாக நிற்கும் சிங்கம். இந்த நாணயங்களை மகத அரசின் கடைசி மன்னஞக ஆட்சி செய்த பிம்பிசாரர் வெளியிட்டிருக்கலாம்; ஏனெனில், அவரது மகஞன அஜாதசத்ருவின் காலத்திலிருந்து மகத அரசு ஒரு பேரரசாக விரிவடையத் தொடங்கி விட்டது.

மகதப் பேரரசு காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்கள், அஜாதசத்ரு காலம் தொடங்கி, கி.மு. இரண்டாம் நூற்றுண்டில் மௌரிய வமிசம் மறையும்வரை நாடெங்கிலும் புழங்கிவந்தன. இந் நாணயங்கள் அனைத்தும் சுமார் 54 தானியமணி எடை இருந்திருக்க வேண்டும். ஏனெனில், புழக்கத்திலேயே இல்லாமல் புத்தம் புதிதாகக் காணப்படும் நாணயங்கள் 54 தானியமணி எடைதான் உள்ளன. புழக்கத்திலிருந்த நாணயங்களோ 50 முதல் 52 தானியமணி எடை இருக்கின்றன. உலோகத் தகடுகளிலிருந்து வெட்டிச் செய்யப்பட்ட இந் நாணயங்கள் எல்லா வடிவங்களிலும் காணப்படுகின்றன. 1·25 அங்குல அகலத்திலிருந்து 0·4 அங்குல அகலம்வரை இந் நாணயங்கள் உள்ளன. இவற்றின் அளவுக்கேற்ப இவை .02 அங்குலத்திலிருந்து .025 அங்குல கனம் வரை உள்ளன. இவற்றில் பெரிய நாணயங்கள் மெல்லியதாயும் சிறியவை தடிப்பாயும் உள்ளன. காலக் கணிப்பில் பார்த்தால், மெல்லிய நாணயங்கள் பேரரசின் தொடக்க காலத்திலும் தடிப்பானவை கடைசிக் காலத்திலும் வெளியிடப்பட்டிருக்கவேண்டும். எல்லா நாணயங்களிலுமே தனித்தனி முத்திரைப் பொறிகளால் போடப்பட்ட ஐந்து சின்னங்கள்தான் இருக்கின்றன. இவற்றில் சில எளிமையானதாயும் மற்றவை சிக்கலானதாயும் தெரிகின்றன.

வட்டம், சதுரம் என்று வடிவியல் அமைப்பிலும், அலங்காரமான சக்கரங்கள், சூரியன், மனித உருவங்கள், காளை போன்ற விலங்கினங்கள், யானை, முயல், மான், காண்டாமிருகம், மீன், ஆமை, முதலை ஆகிய உருவங்களும், வில்லும் அம்பும் போன்ற பல வடிவங்களிலும் இச் சின்னங்கள் உள்ளன. இச் சின்னங்கள் குறைந்தது 300 வகையாவது இருக்கும். இவற்றையெல்லாம் குறிப்பிட்ட வகையில் பதித்திருக்கின்றனர். எனவே, இச் சின்னங்கள் தொகுக்கப்பட்டுள்ள முறையைக் கொண்டு இந் நாணயங்களை சுமார் 500 வகையாகப் பாகுபடுத்தலாம். இவற்றின் அடிப்படையில் இந் நாணயங்களையெல்லாம் பல்வேறு தொகுதிகளாகப் பிரித்துப் பார்த்தால், கடைசியில் இவை ஆறு வகையாக அமையும். இவை செய்யப்பட்டிருக்கும் அடிப் படையில் இவற்றின் காலம் எதுவென்று வரிசைப்படுத்தி விடலாம். முதல் இரண்டு வகை நாணயங்கள் மெல்லியவை ; அடுத்த இரு வகை நடுத்தரமானவை ; எனினும், மூன்றாவது வகை நாணயங்களில் சில மெல்லியதாயும், நான்காவது வகையில் சில தடிப்பானதாயும் இருக்கின்றன ; ஐந்தாவது வகை நாணயங்கள் ஓரளவு தடிப்பானவை ; ஆனால், ஆறாவது வகை நாணயங்கள் அனைத்துமே தடிப்பானவை. இவற்றில் முதல் நான்கு வகை நாணயங்கள் தொடக்கத்தில் வெளியானவை என்பதற்குச் சான்றாக, அவற்றின் பின்புறத்தில் சிறு அடையாளங்கள் பல முத்திரையிடப்பட்டுள்ளன. ஐந்தாவது வகை நாணயங்களில் பின்புறம் பழைய சிறு அடையாளங்கள் மட்டுமன்றி, புதுவகை அடையாமொன்றும் உள்ளது. இதை முந்திய நான்கு வகை நாணயங்களில் பார்க்க முடியாது. ஆறாவது வகை நாணயங்களில் மட்டும் முன்புறமுள்ளதைப் போல் பின்புறமும் பெரிய சின்னம் உள்ளது. இவ்வாறு பின்புறமும் பெரிய சின்னத்தைக் கொண்ட நாணயங்கள் குறிப்பிட்டவொரு இனத்தை சேர்ந்தவை. இவ்வாறாக, மகதப் பேரரசு காலத்தில் முத்திரைச் சின்னங்களுடன் வெளியான வெள்ளி நாணயங்களைப் பற்றி அறிந்து கொள்வது எளிதல்ல. எனவே, ஒவ்வொரு வகை நாணயங்களையும் குறிப்பிட்ட ஓர் அரசரோ, வமிசத்தினரோ வெளியிட்டிருக்கலாம் என்று மட்டுமே கூறலாம். அதோடு,

இந் நாணயங்களை வெவ்வேறு தங்கசாலைகள் வெளியிட்டிருக்கலாம் என்றும் தெரிகிறது. எது எப்படியிருப்பினும், இவற்றின் சின்னங்கள் எதைப் புலப்படுத்துகின்றன என்பதைத் திட்ட வட்டமாகக் கூற இயலாது. இவை ஹரப்பாவின் எழுத்துகளைப் போல் புரியாத புதிராக இருக்கின்றன.

முத்திரைச் சின்னங்களுடைய வெள்ளி நாணயங்களை வெளி யிடும் பழக்கம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் கைவிடப்பட்டது. எனினும், அடுத்த நான்கைந்து நூற்றாண்டுகாலத்தில் அது அதிகச் செல்வாக்குப் பெற்று விளங்கியது. குப்த வமிசத்தினரின் ஆட்சிக் காலம் வரை, உத்தரப் பிரதேசத்திலும் பீஹாரிலும் வெள்ளி நாணயங்களே கிடையாது. எனவே, அதுவரை மகதப் பேரரசின் சின்னங்களுடன் வெளியான நாணயங்கள்தான் புழக் கத்தில் இருந்துவந்தன. இவை, காலத்திற்கேற்பப் பல்வேறு நிலைமைகளில் உள்ளன என்பதைத் தொல்பொருள் ஆராய்ச்சியி லிருந்து அறிய வருகிறோம். இந் நாணயங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டபோதெல்லாம் பழைய நாணயங்களைப்போலவே சின்னங் கள் பொறித்து அதைச் சரி செய்தனர். நாணயங்களில் சின்னங்களைப் பொறித்து வெளியிடுவதற்காகப் பயன்படுத்தப் பட்ட களிமண்ணால் செய்யப்பட்ட வார்ப்படங்களை மதுரா, (அலகாபாத்திலுள்ள) ஜூசி, (ஓரிசாவில்) சிசுபாலகர், (ஆந்திராவில்) கொண்டபுரி ஆகிய இடங்களில் கண்டுபிடித் துள்ளனர். மேலும், முத்திரைச் சின்னங்களைப் பதிப்பதற்காகப் பயன்படுத்தியவெண்கல அச்சு வார்ப்பினை (மத்தியப் பிரதேசத் தில்) எரான் என்னுமிடத்தில் கண்டுபிடித்துள்ளனர்.

மௌரியப் பேரரசர்களின் தங்கசாலைகளிலிருந்து **பணம், அர்த்த பணம்** (அரைப் பணம்), **பாதம்** (கால் பணம்), **அஷ்ட பாதம்** அல்லது **அர்த்த பாதிகம்** (அரைக்கால் பணம்) ஆகிய நான்கு மதிப்புடைய வெள்ளி நாணயங்கள் வெளியிடப்பட்டதாக **அர்த்த சாத்திரத்திலிருந்து** அறியவருகிறோம். ஆனால், இதுவரை 50–52 தானியமணி எடையுள்ள ஒரே மதிப்புக்கொண்ட நாணயங் கள்தான் மகதப் பேரரசில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந் நாணயங்கள் **பணம்** அல்லது **கார்ஷபணம்** என்னும் வகை என்று நம்பப்படுகிறது. எவ்வாறிருப்பினும், மகதப் பேரரசின் முழு

நாணயத்தைச் சரிபாதியாக வெட்டி அதையும் பயன்படுத்தினர் என்பதற்குச் சான்ருக, அரை நாணயங்களும் பல இடங்களில் கிடைத்துள்ளன. நாணய மதிப்பில் பாதி மதிப்பையுடைய பண்டங்களை வாங்குவதற்கு இப் பாதி நாணயத்தைப் பயன் படுத்த அரசு உத்திரவாதம் அளித்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. பிற்காலத்தில் பயன்படுத்திய பாதி நாணயங்கள் கூட ஒரு சில இடங்களில் கிடைத்துள்ளன. இவை தவிர, 2, 3 தானியமணி எடையுள்ள மற்ருெரு வெள்ளி நாணயமும் அக் காலத்தில் பயன்பட்டதாகத் தெரிகிறது. இச் சிறு நாணயங்களை, சின்னஞ்சிறு வெள்ளித் துண்டுகளைத் தட்டையாக்கி அவற்றில் முத்திரையிட்டுத் தயாரித்துள்ளனர். இவை மகதப் பேரரசின் போது புழக்கத்திலிருந்த **பணங்களைப்** போன்றது. இவற்றை **மாஷகம்** என்றழைத்திருக்கின்றனர். இவை சில சமயங்களில் **பணங்களோடு** கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

செம்பு நாணயங்களைப்பற்றி கௌடில்யர் கூறியுள்ளதைப் பார்க்கும்போது, இவை ஒருவேளை மௌரியர்கள் காலத்தின் தான் முதன்முறையாகப் பயன்பட்டன என்று எண்ணத் தோன்றுகிறது. எனினும், முத்திரையிடப்பட்ட செம்பு நாண யங்கள் கிடைப்பது அரிது. மௌரியர் காலத்திற்குப்பின் ஆங்காங்கே வேண்டுமாளுல் செம்பு நாணயங்கள் வெளியிடப் பட்டிருக்கலாம். இவ்வகை நாணயங்கள் மகதம் - அங்கம், உஜ்ஜயினி - விதிசம், மீவார் (ராஜஸ்தான்) ஆகிய பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முத்திரைச் சின்னம் கொண்ட செம்பு நாணயங்களைப் போலன்றி, வார்ப்படத்தின்மூலம் சின்னம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் வட இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலும் புழங்கி வந்ததாகத் தெரிகிறது. இவற்றில் அதிக மாகக் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள் வட்டமாயும் சிறிய தாயும் உள்ளன. இவற்றின் முன்புறம் ஒரு யானை உருவமும் பின்புறம் மூன்று வளைவுகள் கொண்ட மலையும் சின்னங்களாகப் பதிக்கப்பட்டுள்ளன. சில சமயங்களில் இவ்வகை நாணயங்கள் இரண்டு ஒன்ருேடொன்று சிறிய கம்பியால் பிணைக்கப்பட்டிருப் பதையும் காணலாம். இதைப் பார்த்தால், இரண்டு மடங்கு விலை கொடுப்பதற்கு ஏதுவாக இவை புழக்கத்தில் இருந்ததா,

அல்லது தங்கசாலையின் கவனக் குறைவால் இவை ஒன்றோடொன்று இணைந்துவிட்டதா என்று தெரியவில்லை. மேற்கூறிய செம்பு நாணயங்கள் கி.மு. மூன்றும் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றும் நூற்றாண்டு வரை புழக்கத்திலிருந்ததெனினும், கி.மு. முதல் நூற்றாண்டிலேயே இவை அச்சிட்டு வெளியிடப்படுவது நின்றிருக்கக்கூடும்.

அதிகாரம் 3

அந்நியப் படையெடுப்பாளரின் நாணயங்கள்

கி.மு. 326ஆம் ஆண்டின் இளவேனில் பருவத்தில் மா வீரரான அலெக்ஸாண்டர் இந்தியாவிற்குள் புகுந்தது இந்திய வரலாற்றிலேயே ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்துவிட்டது. சிந்துவைக் கடந்து, தட்சசீலத்தை அடைந்த அவர் ஹைடஸ்பஸ் (ஜீலம்) நதிக்கு விரைந்து முன்னேறினர். அப்போது வீர மகஞன புரு **(போரஸ்)** அவரை எதிர்த்துப் போராடினர். போர்க்களத்தில் காயமுற்ற புரு அவரை எதிர்த்துச் சமாளிக்க முடியாமல் பின் வாங்க நேரிட்டது அலெக்ஸாண்டருக்கு வெற்றியைத் தந்தது. இந்த வெற்றியின் நினைவாக டெக்கா டிராம்ஸ் என்ற சில வெள்ளி நாணயங்கள் வெளியிடப்பட்டதாகவும், இவற்றை பாபிலோனியாவிலிருந்த செல்யூகஸ் வெளியிட்டிருக்கலாமென்றும் கூறப்படுகிறது. இவற்றில் ஒரு புறம் கிரேக்கநாட்டுத் தெய்வமான ஸீயுஸ் போன்ற உருவம் உள்ளது. இவ்வுருவத்திலுள்ள அடையாளங்களைக் கொண்டு, இது அலெக்ஸாண்டர்தான் எனச் சிலர் கூறுவர். மற்ெருரு புறம், கையில் ஈட்டியை ஏந்தியுள்ள குதிரை வீரன் ஒருவன், போர்க்களத்தில் பின்வாங்கிச் செல்லும் யானையைப் பிடிக்க முயல்வது போன்றும், அந்த யானைமீதுள்ள வீரர்கள் இருவர், அந்த குதிரை வீரனைச் சுற்றிமுற்றிப் பார்ப்பது போன்றுமான காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. இக்காட்சி அலெக்ஸாண்டருக்கும் புருவுக்கும் நடந்த யுத்தத்தைச் சித்திரித்துக் காட்டுகிறதெனச் சிலர் கூறுவர். ஆனல், இதை மறுப்போரும் உளர். எனவே, இச் சித்திரம் அப்படி உண்மையானதுதான் என ஒப்புக் கொண்டால், இந்தியாவுடன் தொடர்புடைய முதல் அயல்நாட்டு நாணயங்கள் இவைதாம் எனலாம்.

எனினும், அலெக்ஸாண்டரின் மறைவுக்குப் பின் அவர் வென்ற அரசுகளையெல்லாம் அவரது படைத்தலைவர்கள் பகிர்ந்துகொண்ட பின்னரும், செல்யூகஸ் தலைமையில் மாபெரும் கிரேக்கப் பேரரசு சிரியாவில் ஏற்படுத்தப்பட்ட பின்னரும்தான் இந்தியாவில் வெளிநாட்டு நாணயங்கள் புழங்கின. கிரேக்கப் பேரரசு யூஃபிரேடஸிலிருந்து ஆக்ஸஸ், சிந்து வரை விரிவடைந்தது. செல்யூசிட் மன்னரான இரண்டாம் அண்டியோகஸ் ஆட்சிக் காலத்தில், அதாவது கி.மு. 250-ல் அண்டியோகஸ் தியோஸ் என்பவரின் மறைவால் நாடு குழப்பமுற்றது. இதை அனுகூலமாக்கிக் கொண்டு, இந்துகுஷுக்கு வடக்கிலுள்ள பாக்டிரியாவின் ஆளுநரான தியோடோடஸ் சுதந்திர மன்னனாக ஆகிவிட்டார். தியோடோடஸுக்குப் பின் அதே பெயருடைய அவரது மகன் ஆட்சிக்குவந்தார். பின், யூதிதேமுஸ் ஆட்சியைக் கைப்பற்றினார். இவருக்குப்பின், இவரது மகன் தெமெத்ரியஸ் ஆட்சிக்கு வந்து, தன் அரசை பாக்டிரியாவிற்கப்பால் ஆப்கானிஸ்தானம், பஞ்சாப் வரை விரிவுபடுத்தினார். ஆனால், தெமெத்ரியஸின் விரோதியான யூகிரதிதெஸ் அவரைக் கவிழ்த்துவிட்டு, தனது அரசை காந்தாரம் வரை விரிவுப்படுத்தினார். தெமெத்ரியஸுக்குப் பின் பந்தாலியன் என்பவர் ஆப்கானிஸ்தானத்தையும், அகதோகிளிஸ் என்பவர் பஞ்சாப்பையும் ஆண்டு வந்தனர். பின்னர், **மிலிந்த பன்ஹா** என்னும் நூலில் குறிப்பிடப்படுகின்ற இந்திய மரபுப்படி மிலிந்தர் என அழைக்கப்படும் மெனாண்டருக்கு அவர்களது அரசு உடைமையாகிவிட்டது. மெனாண்டர் அகதோகிளியாவை மணந்தார். அகதோகிளியா அகதோகிளிஸின் சகோதரியாக அல்லது தெமெத்ரியஸின் மகளாக இருக்கலாம் எனக் கருதுவர். இந்தோ-பாக்டிரிய மன்னர்களில் மெனாண்டர்தான் செல்வாக்கு மிக்கவர். இவர் காந்தாரம், பஞ்சாப் உள்பட மாபெரும் அரசிற்கு மன்னராக இருந்ததோடு, கங்கைச் சமவெளியில் வெகு தூரம் வரை படையெடுத்துச் சென்ற பெருமைக்கும் உரியர். இவர், தம் பேரரசை ஆட்சி செய்வதற்கென்று சில சிற்றரசர்களை நியமித்திருக்கலாம். இச் சிற்றரசர்களில் பாலிக்ஷீனஸ், எபாந்தர் ஆகிய இருவரும் செல்வாக்குப் பெற்றவர்கள். யூகிரதிதெஸ், மெனாண்டர் ஆகிய இருவரும் மறைந்த பின், இந்தோ-பாக்டிரிய

மன்னர்களின் வரலாறு குழப்பமானதாக உள்ளது. காந்தாரம், பஞ்சாப் ஆகிய அரசுகளைப் பல பகுதிகளாகப் பிரித்து, பல மன்னர்கள் ஒரே சமயத்தில் ஆண்டதாகக் கூறுவர். இம் மன்னர்கள் தவிர, மேலும் 22 இந்திய–பாக்டிரிய மன்னர்கள் இருந்திருக்கவேண்டுமென்பதை அவரவர்களின் நாணயங்களி லிருந்து அறிய வருகிறோம். அதாவது அமின்தாஸ், அந்தியால் கிதஸ், அந்திமாகுஸ், அபொல்லோதாதஸ், அபொல்லோபேனஸ், அர்கிபியஸ், அர்திமிதோரஸ், தியோமிதஸ், தியோனிசியஸ், ஹெலியோகிளிஸ், ஹெர்மீயஸ், ஹிப்பாஸ்திரதஸ், லிசியஸ், நிசியஸ், பியூகொலாசஸ், பிளேடோ, பிலாக்ஷீனஸ், சோபிதெஸ், ஸ்திராதோ, தெலிபஸ், தியோபிலஸ், ஜாய்லஸ் ஆகிய மன்னர் களும் இருந்திருக்கின்றனர். மேலும், அந்திமாகுஸ், அபொல்லோ தாதஸ், திமெத்ரியஸ், தியோதாதஸ், யூகிரதிதெஸ், யூதிதேமுஸ், ஹெலியோகிளிஸ், ஸ்திராதோ, ஜாய்லஸ் ஆகிய மன்னர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ள நாணயங்களை இதே பெயர்கள் கொண்ட வேறு சில மன்னர்களும் வெளியிட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஒருவேளை இக் கருத்து உண்மையாகவும் இருக்கலாம்.

இந்தோ–பாக்டிரிய மன்னர்கள் காலத்தில்தான் தங்க நாண யங்கள் முதன்முதலாக வெளியிடப்பட்டன. இவற்றை தியோ தாதஸ், யூகிரதிதெஸ், யூதிதேமுஸ் ஆகிய மன்னர்கள் வெளி யிட்டனர். ஆனால் இவை இந்தியாவில் வெளியிடப்படாமல், பாக்டிரியாவிற்குமட்டும் வெளியிடப்பட்டன. எவ்வித எழுத் துக்களுமே பொறிக்கப்படாத ஒரு சில தங்க நாணயங்கள் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றை வெளியிட்டது யார் என்று தெரியவில்லை. எனினும், இவற்றின் தோற்றத்திலிருந்து மெனண்டர்தான் இவற்றை வெளியிட்டிருக்க வேண்டுமென்று கருதுவர். இக் கருத்து உண்மைதானென்றால், இந்தியாவில் வெளியிடப்பட்ட முதல் தங்க நாணயங்கள் இவைதாம் எனலாம். மற்றப்படி, இம் மன்னர்கள் மட்டுமன்றி, மேற்குறிப்பிடப்பட்ட மற்றவர்களும்கூட வெள்ளி, செம்பு நாணயங்களைத்தான் பெரும்பாலும் வெளியிட்டிருக்கின்றனர். பந்தாலியன், அகதோ கிளிஸ் ஆகிய இருவர் மட்டும் ஒரு சில நிக்கல் நாணயங்களையும்

வெளியிட்டிருக்கின்றனர். இவைதாம் உலகிலேயே முதன் முறையாக வெளியான நிக்கல் நாணயங்கள். இரண்டாம் ஸ்திராதோ என்பவர் சில ஈய நாணயங்களைக்கூட வெளியிட்டுள்ளார். தியோதாதஸ், யூதிதேமுஸ் ஆகிய இருவரும் வெளியிட்ட ஒரு சில தங்க **ஸ்டேடர்,** வெள்ளி **தெத்ராடிராம்ஸ்** நாணயங்கள் ஏதென்ஸ் நாணய அளவைக் கொண்டவை. பாக்டிரிய மன்னர்களான இவர்கள் அனைவரும் ஏதென்ஸ் நாணய முறையைத்தான் பின்பற்றினர். இம்முறையை அலெக்ஸாண்டரும் இவருக்குப் பிந்திய மன்னர்களும் ஏற்கெனவே சிரியாவில் கடைப்பிடித்துவிட்டனர். இந்தோ–பாக்டிரிய வெள்ளி நாணயங்களில் அபொல்லோதாதஸ், பிலாக்ஷீனஸ் இருவரும் வெளியிட்ட சதுர வடிவமான ஹெமிடிராம்ஸ் நாணயங்களைத் தவிர டைடிராம்ஸ், ஹெமிடிராம்ஸ் ஆகிய அனைத்தும் பாரசீக முறையில் வட்ட வடிவமாகச் செய்யப்பட்டவை. சதுரவடிவமான செம்பு நாணயங்கள் ஏராளமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இச் செம்பு நாணயங்கள் அனைத்தும் உள்நாட்டு தட்சசீல நாணயங்களைப் போல் வெளியிடப்பட்டதாகக் கூறுவர்.

இந்தோ–பாக்டிரிய மன்னர்களின் நாணயங்களிலிருந்து இந்தியா பல புதிய முறைகளைத் தெரிந்துகொண்டது. கிரேக்க முறையைப் பின்பற்றி, அவர்கள் தம் நாணயங்களில் சின்னங்களை முத்திரையிடும் முறையைக் கையாண்டது இந்தியாவிற்கு அக்காலத்தில் புதுமையானதாக இருந்தது. இவ்வாருக, இந்தியாவிற்கு ஏற்பட்ட அனுகூலங்கள் பல. முதலாவதாக, நாணயங்களின் முன்புறம் மன்னர்களின் உருவங்களை முத்திரையிடும் பழக்கத்தைக் குறிப்பிடலாம். பெரும்பாலும், மகுடமோ, தலைக் கவசமோ அணிந்த மன்னர்களின் தலை அல்லது அவர்களின் மார்பளவு உருவம் மட்டுமோதான் முத்திரையிடப்பட்டன. சான்ருக, தெமத்ரியஸ் நாணயங்கள் சிலவற்றில், தலையில் யானை உருவம் போன்ற தலைப்பாகையுடன் அவர் தோன்றுகிருர். அதே போல், அந்தியால்கிதஸின் நாணயங்கள் சிலவற்றில் காஸியா எனப்படும் சப்பட்டையான குல்லாயுடன் அவர் உருவம் உள்ளது. அலெக்ஸாண்டர், அந்தியோகஸ், தியோதாதஸ், யூதிதேமுஸ், தெமெத்ரியஸ் ஆகியோரின் நினைவாக அகதோகிளிஸ் வெளியிட்ட

நாணயங்களில், முன்புறம் அவர்களது தலை உருவம் மட்டுமே பொறிக்கப்பட்டுள்ளது. மேலும், தனது பெற்றோர்களான ஹெலியோகிளிஸ், லியோதைஸ் ஆகியோரின் நினைவாக யூகிரதிதெஸ் வெளியிட்ட நாணயங்களில் அவர்களது மார்பளவு உருவங்கள் இரண்டும் சேர்ந்து காணப்படுகின்றன. இவ்வாறு மார்பளவு உருவங்கள் இரண்டைச் சேர்த்து முத்திரையிடப்பட்ட நாணயங்கள் வேறிரண்டும் உள்ளன. அவற்றில் ஒன்று, அகதோ கிளியாவின் உருவமும் அவளது மகன் முதலாம் ஸ்திராதோவின் உருவமும் கொண்டது. மற்றொன்று, ஹெர்மீயஸ் உருவமும் அவரது மனைவி கல்லியோப்பின் உருவமும் சேர்ந்தது. இந் நாணயங்களிலுள்ள உருவங்கள் உயிர் தோற்றத்தோடு தெளிவாக வும் பெரிதாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. அதோடுமட்டு மன்றி, இவ்வுருவங்களிலிருந்து, அக்காலத்தில் இந்தியாவிற்குப் படையெடுத்து வந்த வெளிநாட்டவர்கள் எப்பேர்ப்பட்டவர்கள் என்பதையும் நாம் அறிந்துகொள்ளக் கூடும். ஆனால், பிற்காலத் தில் ஆட்சிக்கு வந்த இரண்டாம் ஸ்திராதோ, ஹெர்மீயஸ் போன்ற மன்னர்களின் நாணயங்களிலிருந்து நாணயங்களை உருவாக்கும் கலைத்திறன் படிப்படியாகக் குன்றிவிட்டது என்பதைத் தெளிவாக உணரலாம்.

இரண்டாவதாக, இந்தோ–பாக்டிரிய மன்னர்கள் தம் நாணயங் களில் தெய்வ உருவங்களையும் பொறித்தனர். ஸீயுஸ், ஆர்திமிஸ், ஹெராகிளிஸ், பாசிடான், அபோல்லோ, டியோஸ்குராய், நிகே, பல்லாஸ் ஆகிய கிரேக்கத் தெய்வங்களின் உருவங்களைத் தம் நாணயங்களில் புகுத்தினர். சில சமயங்களில் தெய்வ உருவங் களுக்குப் பதிலாக, தெய்வ வழிபாட்டுச் சின்னங்களைக் காணலாம். இச் சின்னங்களில் அதிகமாகக் காணப்படுவது பிலாய் எனப்படும் தியோஸ்கௌராயின் தொப்பியும், அபோல்லோவின் முக்காலி யும்தான். இவையனைத்தும் பெரும்பாலும் நாணயங்களின் பின் புறம்தான் காணப்படுகின்றன; சில சமயங்களில் முன்புறமும் உள்ளன. அரச உருவங்கள் இல்லாத நாணயங்களில் இவை பெரிதாகப் பொறிக்கப்பட்டுள்ளன. யூகிரதிதெஸ் வெளியிட்ட சில செம்பு நாணயங்களில் பின்புறம் ஒரு தெய்வமும், அதற்கு மேற்புறம் கரோஷ்தியில் **'கபீச நகரத்தின் தெய்வம்'** என்ற வாசகத்

தையும் காணலாம். இந் நாணயங்களிலுள்ள தெய்வத்தை உற்று நோக்கினால், இது கிரேக்கநாட்டுக் கருத்தில் உருவாக்கப்பட்டதா, அல்லது இந்தியத் தெய்வம் கிரேக்கநாட்டுப் பாணியில் பொறிக்கப்பட்டுள்ளதா, அல்லது கருத்தை விளக்குவதற்காக இந்தியப் பாணியில் உருவாக்கப்பட்டுள்ளதா என்பதைக் கூற இயலாது. எனினும், இந்தோ–பாக்டிரிய மன்னர்கள் அனைவரும் இந்தியக் கலாசாரத்தையொட்டி வந்தனர் என்பது மட்டும் தெரிகிறது. இந் நாணயங்களில் வேறு சிலவற்றில், குதிரை வீரன், யானை, திமில் பெருத்த காளை, பாக்டிரிய ஒட்டகம் ஆகியவற்றின் சின்னங்களையும் காணலாம்.

அடுத்து, நாணயங்களில் வாசகங்களைப் பொறித்திருப்பது மற்றொரு முக்கியமான அம்சம். இது இந்தியாவிற்கு முற்றிலும் புதுமையானது. தியோதாதஸ், யூதிதேமுஸ் ஆகியோர் வெளியிட்ட நாணயங்களில் பின்புறம் கிரேக்க வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இந் நாணயங்களனைத்தும் இந்தியாவிற்கப்பால் பாக்டிரியாவில்தான் வெளியிடப்பட்டன. இவ்வாறு பின்புறம் வாசகங்கள் பொறிக்கப்பட்ட நாணயங்களை தெமெத்ரியஸ், ஹெலியோகிளிஸ் ஆகியோரும் வெளியிட்டனர். இவர்களது நாணயங்களில் இரண்டுபுறமும் கிரேக்க மொழியும், பின்புறம் கரோஷ்தி வடிவத்தையுடைய பிராகிருதமும் பயன்பட்டுள்ளன. எனவே, இந் நாணயங்கள் இந்தியாவில்தான் வெளியாயின என்று கூறப்படுகிறது. இவ்வாறாக, கிரேக்கமொழி மட்டும் உள்ள நாணயங்கள் பாக்டிரிய மக்களுக்கென்றும், இரண்டு மொழிகளும் உள்ள நாணயங்கள் கரோஷ்தி மொழி பயன்பட்ட இந்தியப் பகுதிகளுக்கென்றும் வெளியிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஏனைய மன்னர்களெல்லாம் தம் நாணயங்களில் இரு மொழிகளையும் பயன்படுத்தினர். எனவே, இவர்களுக்கு பாக்டிரியாவோடு எவ்விதத் தொடர்பும் இருந்ததில்லை எனக் கூறுவர். இவர்களில் பந்தாலியன், அகதோகிளிஸ் ஆகிய இருவரும் கரோஷ்திக்குப் பதிலாக பிராமி எழுத்துக்களையே பயன்படுத்தினர். இந் நாணயங்களில் மூன்று கிரேக்க வாசகங்கள் உள்ளன. (1) அரசரைக் குறிக்கும் சொல்லான **பசிலியஸ்**; (2) **சோதோரோஸ், மெகாலவ், அந்திகிதோ, நிகெபோரோ, ஃபிளாபத்ரோஸ் எபிபனோ, டிக்காய்யோ**

ஆகிய பட்டங்களில் ஒன்று; (3) நாணயத்தை வெளியிட்ட அரசரின் பெயர். இரண்டு மொழிகளுமுள்ள நாணயங்களில் இம் மூன்று வாசகங்களும் பிராகிருதத்தில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன.

மத்திய ஆசியாவைச் சேர்ந்த சகர்கள் என்னும் இனத்தவர், இந்தியாமீது பாக்டிரியா கொண்டிருந்த ஆதிக்கத்தை ஒழித்துக் கட்டினர். ஏறக்குறைய கி.மு. 135ஆம் ஆண்டிலேயே ஹெலியோகிளிஸ் வசமிருந்த பாக்டிரியாவை அவர்கள் கைப் பற்றினர். ஆனால், கி.மு. 126-ல் மத்திய ஆசியாவைச் சேர்ந்த யூச்சிகள் என்னும் மற்றொரு நாடோடி இனத்தவர் சகர்களை நெருக்க முற்பட்டனர். அதன்பின், இந்தோ-பாக்டிரிய ஆட்சிக்கு முடிவு கட்டிவிட்டு, படிப்படியாக இந்தியாவின் வடக்குப் பகுதியிலும் வடமேற்குப் பகுதியிலும் தம் ஆதிக்கத்தை விரிவு படுத்தினர். இந்தோ–பாக்டிரிய மன்னர்களில் கடைசியாக ஆட்சி புரிந்த ஹிப்பாஸ்திரதஸ், ஹெர்மீயஸ் ஆகியோரை ஏறக்குறைய கி.மு. 75-ல் ஒழித்துக்கட்டினர்.

இந்தியாமீது படையெடுத்து ஆட்சிக்கு வந்த சகர் இனத்தவரில் இரண்டு பரம்பரையினரைப்பற்றி அவர்களது நாணயங்களிலிருந்து அறியவருகிறோம். ஒன்று, பஞ்சாபையும் அதன் சுற்றுப்புறங்களையும் ஆண்டு வந்த மாயஸ் என்பவரின் பரம்பரை ; பிறிதொன்று, காண்டஹார் (அரகோஷியா), பலுசிஸ்தானம் (ஜெத்ரோசியாவும் திராங்கியானவும்) ஆகியவற்றில் ஆட்சி செய்த வொனேனெசும் அவரைச் சார்ந்தவர்களும். மாயசும் வொனேனெசும் ஒரே காலத்தில் ஆட்சி செய்த மன்னர்களென்று கருதுவர். ஒருவேளை இவ்விருவரில் மாயஸ் முந்தியவராக இருந்திருக்கலாம். மாயஸ் வெளியிட்ட வெள்ளி, செம்பு நாணயங்கள் இந்தோ–பாக்டிரிய மன்னரான அபொல்லோதாதஸின் நாணயங்களைப் போலவே இருக்கின்றன. எனவே, காலத்திற்கும் இடத்திற்குமேற்ப இவ்விரு நாணயங்களுக்கும் தொடர்பு இருந்திருக்கவேண்டுமெனத் தெரிகிறது. மாயஸ், இந்தோ–பாக்டிரிய மன்னர்களின் நாணய முறையைத்தான் பின் பற்றினர் ; எனினும், அவரது நாணயங்களில் அவருடைய உருவம் இல்லாமலிருப்பது வியப்பாக உள்ளது. அதோடு,

அவரது நாணயங்களின் அமைப்பும் சின்னங்களும் ஏராளமான தாயும் சிக்கலானதாயும் உள்ளன. எப்படியிருப்பினும், அவரது காலத்தில் இந்தியாவில் புழக்கத்திலிருந்த பாக்டிரிய நாணயங்களைப் போலவேதான் தனது நாணயங்களையும் அச்சிட்டு வெளியிட்டார். ஆனால், ஒரு சில நாணயங்களில் நாடோடி இனத்தவரின் அம்சங்களும் உள்ளன. சான்றாக, மன்னன் ஒருவன் தன் கையில் ஈட்டி வைத்துக்கொண்டு குதிரைச் சவாரி செய்யும் சின்னத்தைக் குறிப்பிடலாம். இவ்வாறு, ஆயுதங்களுடன் குதிரை மீது சவாரி செய்வதுபோல் சித்திரித்துக் காட்டியிருப்பது நாடோடி இனத்தவரின் பண்பைச் சுட்டிக் காட்டுவதுபோல் உள்ளது. இதுவே சகர்களின் நாணயங்களில் முக்கியச் சின்னமாக ஆகிவிட்டது. மாயஸின் பல்வகை நாணயங்களில் பின்புறம் ஒரு மனிதன் சம்மனங்கூட்டி உட்கார்ந்திருப்பது போன்ற சின்னம் உள்ளது. எனவே, இச் சின்னத்தில் இருப்பது புத்தர் தான் என்று ஒரு சில அறிஞர்கள் சுட்டிக்காட்டுவர். ஆனால், அது அரசனின் உருவமாகத்தான் இருக்கவேண்டும். பிறிதொரு வகை நாணயத்தில் ஒரு மனிதன் திரிசூலத்தையும் தடியையும் கையில் வைத்துக்கொண்டு வேகமாய் நடப்பதுபோல் சித்திரிக்கப்பட்டிருக்கிறதைப் பார்த்தால், இது சிவன் உருவமோ என்று எண்ணத் தோன்றுகிறது. இது சிவன் உருவம்தான் என்று வைத்துக்கொண்டால், இந்தியக் கடவுளுக்கு மனித உருவம் தரும் கலையில் முதலிடம் பெறுவது இதுதான் எனலாம். ஆனால், இது சிவன் உருவம்தான் என்று நிச்சயமாகக் கூற முடியாது. மாயஸ் வெளியிட்ட நாணயங்களில் பெரும்பாலானவை செம்பு நாணயங்கள்தாம். இவற்றில் முன்புறம் யானையின் தலை உருவம் உள்ளது. பின்புறம் கிரேக்கத் தெய்வம் ஹெர்மிஸின் கைக்கோல் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வகை நாணயங்களில் பின்புறம் மாயஸ் மன்னன் என்ற வாசகத்தை கிரேக்க மொழியில் பொறித்திருப்பது முந்திய பாக்டிரிய நாணயங்களை நினைவுபடுத்துகிறது. மாயஸ் வெளியிட்ட மற்ற நாணயங்களில் கிரேக்கத்திலும் பிராகிருதத்திலும் வாசகங்கள் உள்ளன. இவ் வாசகம் **மாயஸ் மன்னன்** என்று மட்டுமோ, அல்லது **மாபெரும் மன்னாதி மன்னன் மாயஸ்** என்று பிரபலியமாகவோ கிரேக்க மொழியில் உள்ளது.

இவ் வாசகத்தைக் கரோஷ்தி வடிவில் **மகாராஜா மாயஸ்** என்ரு, அல்லது **ராஜாதி ராஜ மகாராஜா மாயஸ்** என்று பிராகிருதத் திலோ காணலாம்.

மாயஸ் காலத்திலேயே அரக்கோஷியாவில் ஆட்சி புரிந்த வொனேனெஸ் வெளியிட்ட நாணயங்கள் சொற்பம்தான். இவரது வெள்ளி நாணயங்களில் முன்புறம் ஒரு மன்னன் தன் கையில் ஈட்டியுடன் குதிரைச் சவாரி செய்வது போன்ற சின்னம் உள்ளது. பின்புறம், கிரேக்கத் தெய்வமான ஸீயுஸ் நீண்ட செங்கோலுடனும் மின்னலின் கருக்கூருகக் கருதப்படும் கோலுட னும் சித்திரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். செம்பு நாணயங் களில் முன்புறம் ஹெராகிளிஸ் நின்றுகொண்டு முடிசூட்டிக் கொள்வது போன்ற சின்னமும், பின்புறம் ஏதென்ஸின் தெய்வ மான பல்லாஸ் போர்க்கவசத்துடனும் ஈட்டியுடனும் நின்று கொண்டிருக்கும் சின்னமும் உள்ளன. இவரது நாணயங்கள் எல்லாவற்றிலும் இந்தோ–பாக்டீரிய நாணயங்களில் உள்ளதைப் போன்று **மாபெரும் மன்னுதி மன்னன் வொனேனெஸ்** என்பதைக் குறிப்பிடும் கிரேக்க வாசகமும், அதற்கு இணையாக கரோஷ்தி மொழிபெயர்ப்பும் பின்புறம் பொறிக்கப்பட்டுள்ளன. எனினும், சில நாணயங்களில் இவ் வாசகம் கரோஷ்தியில் மட்டும் உள்ளது. சான்ருக, ஒரு வகை நாணயங்களில் **மகாராஜ–பிரதா த்ரமிகஸ ஸ்பலஹோரஸ** என்ற வாசகம் உள்ளது; பிறிதொரு வகை நாணயங்களில் **ஸ்பலஹோரபுத்ரஸ த்ரமிகஸ ஸ்பாலகதமஸ** என்ற வாசகம் இருக்கிறது. இவ் வாசகங்களிலிருந்து, வொனேனெஸ் தனியாக ஆட்சிபுரியாமல் தன் சகோதரன் ஸ்பலஹோருடனும், அவரது மகனுக ஸ்பலகதமாவுடனும் சேர்ந்து ஆட்சிபுரிந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. ஆனுல், அதே சமயம் வொனே னெஸின் கீழ்தான் மற்ற இருவரும் பணிபுரிந்திருக்க வேண்டு மென எண்ணுவதற்கும் இடமுண்டு.

வொனேனெஸுக்குப்பின், அவரது தமையனுகக் கருதப்படும் ஸ்பலிரிஸ் என்பவர் ஸ்பலஹோரின் மகனை ஸ்பலகதமாவுடன் சேர்ந்து ஒரு சில காலம் ஆட்சி புரிந்தார். அப்போது ஸ்பலிரிஸ் சொந்தமாகவே தனது பெயரைப் பொறித்து, சில நாணயங்களை வெளியிட்டார். ஆனுல், அவரது சுயேட்சை ஆட்சி விரைவில்

முடிவுற்றது. பின்னர், ஏஸெஸ் என்பவருடன் சேர்ந்து ஆட்சி செய்ததாகத் தெரிகிறது. அவரது நாணயங்களிலெல்லாம் முன் புறம் குதிரை வீரனின் உருவமும், பின்புறம் கிரேக்கத் தெய்வ மான ஸீயுஸ் அல்லது ஹெராகிளிஸின் உருவமும் உள்ளன. இவர் முதன்முதலில் வெளியிட்ட நாணயங்களில் மன்னுதி மன்னன் என்ற பொருளை உணர்த்தும் **பசிலியஸ் பசிலியோன்** என்ற கிரேக்க வாசகமும், ஏஸெஸோடு ஆட்சி செய்தபோது வெளியிட்ட நாணயங்களில் மன்னனை மட்டும் குறிப்பிடும் **பசிலியஸ்** என்ற சாதாரண வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பின் புறம் கரோஷ்தியில் ஸ்பலிரிஸ் பயன்படுத்திய பட்டத்தையும் ஏஸெஸ் என்ற மன்னனின் பெயரையும் காணலாம். இதிலிருந்து இவ்விரு மன்னர்களும் சம அந்தஸ்துள்ளவர்களாக இருந்திருக்க வேண்டும் என்ற எண்ணத் தோன்றுகிறது. அதோடு, வொனேனெஸ் பரம்பரையில் ஸ்பலிரிஸ்தான் கடைசி மன்னராக இருந்திருக்கவேண்டும் என்றும் தெரிகிறது. மேலும், அச் சமயத் தில் மாயஸ் குடும்பமும் வொனேனெஸ் குடும்பமும் ஒன்றுக இணைந்துவிட்டதாவும் அறியவருகிறோம்.

எனவே, மேற்குறிப்பிட்ட ஏஸெஸ் மன்னன் முதலாம் ஏஸெஸ் என்று அழைக்கப்படுகிறர். இவர் சொந்தமாகத் தன் பெயருடன் வெளியிட்ட **தெத்ராடிராமஸ்–டிராமஸ்** எனப்படும் (டிட்ராமஸ், ஹெமிடிராமஸ் என ஒரு சிலர் கருதும்)வெள்ளி நாணயங்கள் வட்ட வடிவமானவை; செம்பு நாணயங்களோ சதுரமானவை. இந்த வெள்ளி, செம்பு நாணயங்களில் முன்புறம் கையில் ஈட்டியுடன் குதிரைச் சவாரி செய்யும் மன்னனின் உருவம்தான் பெரும்பாலும் உள்ளது. ஆனல், பின்புறமுள்ள சின்னங்கள் வெள்ளி நாண யங்களில் ஒரு மாதிரியாகவும், செம்பு நாணயங்களில் வேறு மாதிரியாகவும் இருக்கின்றன. வெள்ளி நாணயங்களில் பின்புறம் கிரேக்கத் தெய்வங்களில் ஸீயுஸ், நைக், பல்லாஸ் அல்லது இனம் தெரியாத வேருெரு தெய்வம் ஒன்று கையில் குருத்தோலையையும் தீபத்தையும் ஏந்திக்கொண்டு நிற்பதைக் காணலாம். செம்பு நாணயங்களிலோ திமில் பெருத்த காளை அல்லது ஹெராகிளிஸ் நின்றுகொண்டிருப்பதைப்போன்ற அல்லது உட்கார்ந்திருப்பதைப் போன்ற உருவம் உள்ளது. இவ்வகையான நாணயங்களைத்

தவிர, புதுமாதிரியான நாணயங்களையும் மாயஸ் வெளியிட்டிருக்கிறார். இப் புதுவகை நாணயங்களில் அங்குச ஆயுதத்துடன் மன்னன் இரட்டைத் திமில் கொண்ட பாக்டிரிய ஒட்டகத்தின் மீது சவாரி செய்யும் சின்னம் உள்ளது. இதைப் பார்க்கும்போது, அம் மன்னனின் நாடோடித் தன்மையே நம் நினைவுக்கு வருகிறது. முதலாம் ஏஸெஸுக்குப் பின் ஏஸிலிசிஸ் ஆட்சிக்கு வந்தார். இவர், தனக்குமுன் ஆண்ட மாயஸ், முதலாம் ஏஸெஸ் ஆகியோரின் நாணயங்களைப்போல் பல வகை நாணயங்களை வெளியிட்டார். ஆனால், அதே சமயம், இந்திய மரபை யொட்டி ஒரு புதுமையான சின்னத்தை இவர் புகுத்தியிருக்கிறார். அதாவது, தாமரை மலரை நோக்கி லட்சுமி நின்றுகொண்டிருப்பது போலவும் அம் மலரிலுள்ள இரண்டு இலைகளில் இரு யானைகள் நின்றுகொண்டு, அவள் தலைமீது நீரைத் தெளிப்பது போன்றுமுள்ள அபிஷேக லட்சுமியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு புதிய முறையில் இந்தியப் பண்பாட்டின்படி, நாணயங்களை முதன் முறையாக வெளியிட்டவர் ஏஸிலிசிஸ்தான். இதிலிருந்து பிற நாட்டவர் நமது நாட்டில் வெளியிட்ட நாணயங்களில் இந்தியத் தெய்வத்தின் உருவத்தைப் பொறித்திருப்பது இதுதான் முதல் முறை என அறிந்துகொள்கிறோம். ஏஸிலிசிஸுக்குப் பின்னர், இரண்டாம் ஏஸெஸ் ஆட்சிக்கு வந்தார். இவர் வெளியிட்ட நாணயங்களில் (முதலாம் ஏஸெஸ் வெளியிட்ட நாணயங்களில் காணப்படும் ஈட்டிக்குப் பதிலாகச்) சாட்டையைக் கையில் பிடித்து அரசன் குதிரைமீது சவாரி செய்யும் சின்னம் உள்ளது. எனினும், இவரது நாணயங்களிலுள்ள உருவங்கள் செம்மையின்றி மேடு பள்ளமாக உள்ளன. அதோடு, இவை மாற்றுக் குறைந்த கலப்படமான உலோகங்களில் செய்யப்பட்டுள்ளன. மேலும், இவர் தனது அரசின் மேற்குப்பகுதியில் இந்திரவர்மா என்பவருடனும், படைத் தலைவரான ஆஸ்பவர்மாவுடனும் சேர்ந்து ஒரு சில நாணயங்களை வெளியிட்டுள்ளார்.

இரண்டாம் ஏஸெஸுக்குப் பின், முதலாம் கொண்டொஃபாரெஸ் ஆட்சிக்கு வந்தார். இவர் பண்டைக்கால மேற்கு ஆசிய அரசாகிய பார்த்தியாவைச் சேர்ந்தவர். இவர் அரகோஷியா, செய்ஸ்தான், சிந்து, காந்தாரம், பரபமிசதோவிலுள்ள காபூல்

பள்ளத்தாக்கு ஆகிய பகுதிகளும் சேர்ந்த மாபெரும் அரசை ஆட்சி புரிந்த புகழ்பெற்ற மன்னர். எனினும், இவர் தனது ஆட்சியைக் கிழக்குப் பஞ்சாப் வரை விரிவாக்கவில்லை என்று தோன்றுகிறது. இவர் வெளியிட்ட நாணயங்களில் செம்பு நாணயங்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன: வெள்ளி நாணயங்களில் முன்புறம் குதிரைச் சவாரி செய்யும் மன்னனின் உருவமோ, பார்த்திய நாட்டவனின் மார்பளவு உருவமோ அல்லது அரியணையில் அமர்ந்துள்ள மன்னனின் உருவமோதான் உள்ளது. பின்புறம், ஸீயுஸ், நைக், பல்லாஸ் ஆகிய கிரேக்கத் தெய்வங்களின் உருவங்களே பெரும்பாலும் காணப்படுகின்றன. கொண்டொஃபாரஸும், இரண்டாம் ஏஸெஸோடு முன்பு ஆட்சி செய்த ஆஸ்பவர்மாவும் சேர்ந்து வெளியிட்ட நாணயங்களும் சில கிடைத்துள்ளன. ஆஸ்பவர்மாவுக்குப் பின், அவரது அண்ணன் மகனை சஸாவுடன் சேர்ந்து கொண்டொஃபாரஸ் வெளியிட்ட நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சஸா மட்டும் தனியாக வெளியிட்ட சில வெள்ளி நாணயங்களும் உள்ளன. இந் நாணயங்களில் பார்த்திய நாட்டவனின் மார்பளவு உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இந் நாணயங்கள் தட்சசீலத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து கொண்டொஃபாரெஸ் மறைவுக்குப் பின், அப் பகுதியை சஸா என்பவர்தான் சுதந்திரமாக அல்லது ஓரளவு சுயேச்சையாக ஆண்டதாகத் தெரிகிறது. தட்சசீலத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள வேறு சில நாணயங்களிலிருந்து சபெதானர், சதவஸ்திரர் என்ற வேறிரு மன்னர்களும் அப் பகுதியை ஆண்டிருக்கின்றனர் என்று தெரிகிறது. இவ்விரு மன்னர்களின் நாணயங்களும் சஸாவின் நாணயங்களைப் போலவே உள்ளன. எனவே, இவ்விரு மன்னர்களும் சஸாவிற்குச் சற்று முன்னரோ பின்னரோ ஆட்சியில் இருந்திருக்கலாம்.

கொண்டொஃபாரெஸுக்குப் பின்னர், அவரது தமையன் மகனை அப்தகாசெஸ் ஆட்சிக்கு வந்தார். இவருக்குப் பின்னர் பார்த்திய மன்னர்களான அர்தாக்னெஸ், பகோரெஸ், இரண்டாம் கொண்டொஃபாரெஸ், அர்காசெஸ், சானபாரெஸ் ஆகியோர் ஆட்சிக்கு வந்தனர் என்பதை அவர்களது நாணயங்களிலிருந்து

அறிய வருகிறோம். இந் நாணயங்களனைத்தும் கொண்டொ ஃபாரெஸின் நாணயங்களைப் போல் உள்ளன. கொண்டொ ஃபாரெஸ் ஆண்ட அரசையே இவர்கள் ஆண்டிருக்க வேண்டு மெனினும், இவர்கள் காலத்தில் அரகோஷியாவும் செய்ஸ்தானும் மட்டுமே இவர்கள் ஆண்ட பகுதியாக இருந்திருக்கிறது. சக-பஹலவர் இனத்தவரின் ஆட்சி கி.பி. முதல் நூற்றாண்டு வரை தான் இந்தியாவில் இருந்திருக்கிறது; குஷானர்கள் வருகைக்குப் பின்னர், இவர்களது ஆட்சி முடிந்துவிட்டது.

இவ்வதிகாரத்தை முடிக்குமுன்பு, சுவையானதோர் உண்மை யைக் கூறவேண்டும். அதாவது, க்ஷத்ரபா என்னும் அமைப்பைத் தோற்றுவித்தவர்கள் அக்கிமீனிடுகள் ஆவர். இவ்வமைப்பு சகபஹலவர் ஆட்சியின்போது வடமேற்கு இந்தியாவில் மிகப் பிரபலியமாகிவிட்டது. க்ஷத்ரபர்கள் என்போர் அரசருக்குத் துணையாக, அவருக்குக் கீழ் ஆட்சி செய்து வந்தவர்கள். இவர் களுக்குப் பல்வேறான அரசியல் செல்வாக்கு இருந்தது. இவர்களில் சிலர் சொந்தமாக நாணயங்களை அச்சிட்டு வெளியிடக்கூடிய அளவுக்குச் சுதந்திரமாக ஆட்சிபுரிந்திருக்கின்றனர். இவர்களில் ஜியானிசெஸ் என்பவர் ஒருவர். இவர் ஒருவேளை தட்சசீலத்துக் கருகிலுள்ள சாச் பெரும் சமவெளியான சுக்ஷா பகுதியை ஆண்டிருக்கலாம். இவர் தரமற்ற உலோகங்களில் வெள்ளி, செம்பு நாணயங்களை வெளியிட்டிருக்கிறார். காரஹோஸ்டஸ் மற்றொருவர். இவர் வடமேற்குப் பஞ்சாபில் சொந்தமாகவே நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். தட்சசீலப் பகு தியை ஆண்ட லாய்கா கோஸுலகா மற்றொருவர். இவர் மிகச் சிறிய நாணயங்களை வெளியிட்டுப் பெயர் பெற்றவர். இவர்கள் அனைவருமே தமது சக-பஹலவத் தலைவர்களைப் பின்பற்றித்தான் தம் நாணயங்களை வெளியிட்டனர்.

அதிகாரம் 4

குஷானர்களும் அவர்களின் பின் தோன்றல்களும் வெளியிட்ட நாணயங்கள்

கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சீன எல்லைப் புறத்தில் வாழ்ந்து வந்த யூச்சி என்னும் நாடோடி இனத்தவர் ஆக்ஸஸ் நதி தீரத்தத்தை அடைந்து, பின்னர் பாக்டிரியாவில் குடியமர்ந்தனர். இவர்கள் பாக்டிரியாவில் நூறு ஆண்டுகள் வாழ்ந்தனர். இந்த யூச்சி இனத்தில் கியூசுவான்ங் (குஷானர்) என்ற பிரிவைச்சேர்ந்த இளவரசர் ஒருவர் பார்த்தியாவின்மீது அல்லது ஆப்கானிஸ்தானத்திலிருந்த இந்தோ-பார்த்திய அரசின் பகுதிகளின்மீது படையெடுத்து, நாளடைவில் மத்திய ஆப்கானிஸ்தானம், காந்தாரம், ஸ்வாட் பள்ளத்தாக்கு ஆகிய வற்றைக் கைப்பற்றினர். அவருக்குப் பின் ஆட்சி செய்தோர், அதுவரை வெளிநாட்டு ஆதிக்கத்திற்குட்படாமலிருந்த வட இந்தியப் பகுதிகளுக்கும் தம் ஆட்சியை விரிவுபடுத்தினர். இவ்வாறாக, குஷானர்கள் கிழக்கே வாரணாசி வரையுள்ள பகுதியையும் ஆக்கிரமித்துக்கொண்டனர்.[1] அதோடு, மேற்கே இந்திய எல்லைக்கப்பால்கூடத் தம் ஆட்சியை விரிவுபடுத்தினர். இவ்வாறாக இவர்கள் உருவாக்கிய பேரரசு நூற்றாண்டுகளுக்கு மேல் நிலைத்திருந்தது.

ஒரு சில வகைச் செம்பு நாணயங்கள் பெரும்பாலும் பாக்டிரியப் பகுதியிலிருந்து கிடைத்துள்ளன. இவற்றில் பெரிய மீசை, நீண்ட மூக்கு, அகன்ற தாடை, காதுமேல் விழும் நீண்ட தலைமுடி, தலையில் மகுடம் உள்ள அரசன் ஒருவனின் மார்பளவுச் சின்னம்

[1] குஷானர்கள், பீஹார், வங்காளத்தில் கங்கைச் சமவெளிவரை, ஒரு வேளை ஒரிசாவரைகூடத் தம் ஆதிக்கத்தைப் பரப்பினர் என ஒரு சில அறிஞர்கள் கூறுவர்.

உள்ளது. இந் நாணயங்களில் ஹீரோஸ் (மீயோஸ்), ஹிர்கோடெஸ், பிசிகாச்சாரிஸ் என்ற பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. யூச்சி இனத் தலைவர்கள் அல்லது ஒரு வேளை கியூசுவான்ங் (குஷானர்) பிரிவைச் சேர்ந்த தலைவர்கள் இவற்றை வெளியிட்டிருக்கக் கூடும். ஆனால், குஷானர் என்ற சொல் ஹீரோஸ் வெளியிட்ட நாணயங்களில் மட்டும்தான் உள்ளது. இவர், இந்தியாவில் ஆட்சி செய்த குஷான மன்னர்களில் முதல்வரான குஜூலா கட்பீஸஸ் என்பவருக்கு முந்தியவராக அல்லது அவரது தந்தையாக இருக்கக்கூடுமென்று சிலர் யூகமாகக் கூறுவர்.

இந்தோ-குஷானர்களின் நாணயங்களிலெல்லாம் முந்தியது, குஜூலா கட்பீஸஸ் வெளியிட்ட செம்பு நாணயங்கள்தான். இவற்றில், தொடக்கத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில், முன்புறம் பாக்டிரிய மன்னர்களில் கடைசியான ஹெர்மேயஸின் உருவமும், பின்புறம் ஹெராகிளிஸின் உருவமும் உள்ளன. இந் நாணயங்கள், ஹெர்மேயஸ்க்குப் பின் ஆட்சி செய்த பார்த்திய மன்னர்களின் நாணயங்களைப்போல் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவருடைய நாணயங்களில் பிறிதொரு வகையில், முன்புறம் ரோமானியப் பாணியில் மகுடமணிந்துள்ள ஆடவனின் தலை உருவம் பொரிக்கப்பட்டுள்ளது. இவ்வுருவம் ரோமாபுரி நாணயங்களிலிருந்து எடுத்தாண்டிருப்பதாகத் தெரிகிறது. இவ்வுருவத்தின் அமைப்பும் பாணியும் பொதுவாக இருப்பதால் எந்த ரோமாபுரிச் சக்கரவர்த்தியின்நாணயங்களைப் பின்பற்றினர்கள் என்று சொல்ல முடியாது. அநேகமாய் அகஸ்தஸ் சக்கரவர்த்தியின் நாணயங்களாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. குஜூலா கட்பீஸஸின் நாணயங்களில் பின்புறம் இந்தோ-சைத்திய ஆடை அணிந்துள்ள ஒருவர் வளைவு நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் சின்னம் உள்ளது. இச் சின்னத்திலுள்ள உருவம் குஜூலா கட்பீஸஸாகத்தானிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. மூன்ருவது வகை நாணயங்களில் ஒரு புறம் காளையின் உருவமும் மறுபுறம் பாக்டிரிய நாட்டு இரட்டைத் திமில் கொண்ட ஒட்டகத்தின் உருவமும் உள்ளன. இச் சின்னங்கள் குஷானர்களின் நாடோடித் தன்மையைப் பிரதிபலிப்பதாகத் தோன்றுகிறது. இந் நாணயங்கள் அனைத்திலும் முன்புறம் கிரேக்க வாசகமும், பின்புறம் கரோஷ்தி வாசகமும் உள்ளன.

குஜுலாவுக்குப் பின், அவரது மகன் விமா கட்பீஸஸ் ஆட்சிக்கு வந்தார். இவரது நாணயங்கள் குஜுலாவின் நாணயங்களிலிருந்து எவ்வளவு வேறுபட்டவையென்றால், வேறு சான்றுகள் ஏதுமில்லாதிருந்தால், குஜுலாவுக்குப் பின் ஆட்சிக்கு வந்தது யார் என்ற ஐயமே ஏற்பட்டிருக்கலாம். குஜுலாவின் நாணயங்களிலுள்ள சின்னங்கள் நாகரீகமற்ற நாடோடிப் பண்பை உடையவை; ஆனால், அவரது மகன் விமாவின் நாணயங்களில் திட்பமான, நாகரீகச் சின்னங்கள்தான் உள்ளன. தம் முன்னோர்களின் மரபையொட்டி, விமா செம்பு நாணயங்களையும் வெளியிட்டுள்ளார். எனினும், இந்தியாவில் முதன்முறையாக தங்க நாணயங்களை ஏராளமாக வெளியிட்ட பெருமைக்குரியவர் விமாதான். ரோமானியர்கள் வியாபாரம் செய்தற்கென்று இந்தியாவில் கொண்டு வந்து குவித்த தங்க நாணயங்களைப் பார்த்த விமா, தானும் தங்க நாணயங்களை வெளியிடவேண்டுமென எண்ணியிருக்கலாம். இவர் வெளியிட்ட தங்க நாணயங்கள் **தினாரா, இரட்டைத்தினாரா, கால்தினாரா** என்று மூன்று வகைப்படும். இவற்றில் **கால்தினாரா** நாணயங்கள் கிடைப்பது அருமை.

இந் நாணயங்கள் விமா மஞ்சத்தில் உட்கார்ந்திருப்பதுபோல், கால் மேல் கால் வைத்து உட்கார்ந்திருப்பது போல், சன்னலில் உட்கார்ந்திருப்பது போல், யானையில் சவாரி செய்வது போல், பிக்காவில் ஓட்டிச்செல்வது போல், பலிபீடத்தில் நின்றுகொண்டு பலி கொடுப்பதுபோல் பல சாயல்களில் அவரது உருவம் முத்திரையிடப்பட்டுள்ளது. இவ்வுருவத்தில் விமா ரொம்பத் தடித்தவராகவும் வயதானவராகவும் தோன்றுகிறார், பலிபீடத்தில் நின்று பலி கொடுப்பது போன்ற சின்னம் செம்பு நாணயங்களில் மட்டும்தான் உள்ளது. இச் சின்னத்தைத்தான் விமாவிற்குப் பின் ஆட்சி செய்த குஷான மன்னர்கள் அடிப்படையான அம்சமாகத் தம் நாணயங்களிலெல்லாம் பொறித்தனர். விமாவின் நாணயங்கள் சிலவற்றில், அவர் மேகங்களுக்கு ஊடே மிதந்தோ உயர்ந்தோ செல்வது போலவும், அவரது தோள்களிலிருந்து ஒளி தோன்றுவது போலவும் பொறிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து தான் தெய்வமென்று அவர் உரிமை கொண்டாடியிருக்க வேண்டுமென்று தெரிகிறது.

விமாவின் நாணயங்கள் அனைத்திலும் பின்புறம் சிவனது உருவம்தான் உள்ளது. பெரும்பாலானவற்றில் சிவன் நீண்ட திரிசூலத்துடனும், வேறு சிலவற்றில் காளை மாட்டுடனும் தோன்றுகிறார். ஒரு சில நாணயங்களில் சிவனைக் குறிக்கும் வகையில் அவரது திரிசூலமும் கோடரியும் உள்ளன. இச்சின்னங்களைப் பார்க்கும்போது, இந்தியச் சூழ்நிலைக்கேற்ப விமா வாழ்ந்திருக்க வேண்டுமென்றும், சைவ மதத்தைத் தழுவியிருக்க வேண்டுமென்றும் தெரிகிறது. அதோடு, தனது நாணயங்களில் கிரேக்க, கரோஷ்தி வாசகங்களைப் பொறித்து வெளியிட்ட கடைசி மன்னர் விமாதான் என்று குஷானர் நாணயங்களின் ஆய்விலிருந்து அறிய வருகிறோம்.

விமா கட்பீஸஸுக்கு பின்னர், கனிஷ்கர் (முதலாம் கனிஷ்கர்) ஆட்சிக்கு வந்தார். இவர், விமாவைப் பின்பற்றித் தங்கத்திலும் செம்பிலும் நாணயங்களை வெளியிட்டிருக்கிறார். ஆனால், விமா தனது நாணயங்களில் தன் உருவத்தைப் பல சாயல்களில் வெளியிட்டார்; கனிஷ்கரோ ஒரே சாயலில்தான் தன் உருவத்தை முத்திரையிட்டிருக்கிறார். அதாவது, நீண்ட, தளர்ந்த ஆடையான சால்வார் உடுத்தி, மார்புப் புறம் இரு வெள்ளிப்பட்டைகளால் இணைக்கப்பட்ட போர்வை போர்த்தி, வட்டமான குல்லாய் அணிந்து, தன் இடக் கையில் ஈட்டியை ஏந்தி, பலி பீடத்தில் நின்று பலி கொடுப்பது போன்ற சின்னத்தையே முன்புறம் பயன்படுத்தியிருக்கிறார். ஆனால் அதே சமயம், இவரது நாணயங்களில் பின்புறம், ஒரே தெய்வத்திற்குப் பதிலாக, பல தெய்வங்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும், கிரேக்க மொழி, கரோஷ்தி ஆகிய இரண்டிலுமே வாசகங்களைப் பொறிப்பதை விட்டுவிட்டு, தன் நாணயங்களில் ஒரு சிறிது காலம் வரை '**மன்னாதி மன்னன் கனிஷ்கர்**' என்று பொருள்படும் கிரேக்கச் சொற்களை மட்டுமே பொறித்து வந்தார். இந்நாணயங்களில் பின்புறம் கிரேக்கப் பெயர்களுடன் **ஹீலியோஸ், சாலெனி, ஹெபாய்ஸ்டஸ்** ஆகிய மூன்று தெய்வங்களின் உருவங்கள் உள்ளன. ஆனால், இவ்வுருங்கள் அனைத்தும் கிரேக்க வடிவத்தில் இல்லை. சிறிது காலம்கழித்து வெளியிட்ட நாணயங்களில் பின்புறம் கிரேக்க மொழிக்குப் பதிலாக, இடைக்கால ஏரானிய

(பாக்டிரிய) மொழியில் அல்லது கோட்டானியர்—சகர்களின் புது மொழியில் வாசகங்களைப் பொறித்தார். இந் நாணயங்களில் பின்புறம் பல்வேறு தெய்வங்களின் உருவங்கள் உள்ளன. அதாவது, **மிஹிரன்** அல்லது **மித்ரன்** (சூரியன்), மாவோ (சந்திரன்), **ஓடோ** (வாயு, காற்று), **ஆர்லக்னோ** (எரான் படையினரின் தெய்வமான விருத்ரக்னு), **லுஷ்ரஸ்பா** (கால்நடைகளின் உடல் நலக் காவலனான த்ருவஸ்பா), **அத்ஷோ** (நெருப்பு), **ஃப்பாரோ** (பேரரசின் பெருமையைக் குறிக்கும் கருத்தான குவரினோ), **மனவ் பாகோ** (நல்ல மனத்தின் உருவகமான ஒகு-மனு) **மஜ்டா** (சௌராஸ்டியரின் உயர் கடவுள்), **நானு** அல்லது **நானு ஷாவோ** அல்லது **நானியா** (இயற்கையின் பெண் தெய்வமான இன்னனா, இஷ்தார்), **அர்டோக்ஷோ** (இந்திய லட்சுமிக்கு இணையான தெய்வம்) ஆகிய தெய்வங்கள் எரானியப் பெயர்களுடன் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும், தனக்கு முந்திய மன்னர்களைப் போல் கனிஷ்கரும் தனது நாணயங்களில் சிவன் உருவத்தை **ஓஷோ** (பவீஷா அல்லது ஹவீஷா) என்ற பெயரில் பொறித்துள்ளார். அதோடு, **புத்தா** அல்லது **சாகமனோ புத்தா** என்ற வாசகத்தோடு புத்தரின் உருவத்தையும் தம் நாணயங்களில் புகுத்தியுள்ளார்.

கனிஷ்கருக்குப்பின் ஆட்சிக்கு வந்த ஹூவிஷ்கா புதிய முறையில் தன் உருவத்தைச் சின்னமாகப் புகுத்தியுள்ளார். இவரது தங்க நாணயங்களில் இவரது மார்பளவு உருவம்தான் பெரும்பாலும் உள்ளது. அதுவும் பெரும்பாலும் இடது சாயலாக பொறிக்கப்பட்டுள்ளது; எனினும், ஒருசிலவற்றில் வலது சாயலாகவும் காணப்படுகிறது. இவ்வுருவத்தில் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஆடையில் ஹூவிஷ்கா தோன்றுகிறார். ஆபரணங்களை ஆடைகளுடன் இணைப்பதற்கென்று பயன்படுத்தப்பட்ட பல்வகையான சாதனங்களும் உள்ளன. அதோடு, தனது வலக் கரத்தில் பேரரசின் செங்கோலையும் இடக் கரத்தில் தோளோடு சாய்ந்துள்ள ஈட்டியுடனும் தோன்றுகிறார் (இந்த ஈட்டியை சிலர் அங்குசம் என்று கூறுவர்). இவரது தங்க நாணயங்களில் பின்புறம் ஓர் அரசன் (1) தன் இடக் கையில் அங்குசத்தையும் வலக் கையில் ஈட்டியையும் பிடித்துக்கொண்டு யானைமீது

சவாரி செய்வது போலவும், (2) ஒரு பாறைமீதோ அல்லது மேகத்தின்மீதோ கால்மேல் கால் வைத்து உட்கார்ந்திருப்பது போன்றும் இருவகைச் சாயல்கள் உள்ளன. இவற்றில் இரண்டாவது சாயலிலுள்ள உருவத்தைச் செம்பு நாணயங்களிலும் காணலாம். அதோடு, செம்பு நாணயங்களில் அரசன் (1) மஞ்சத்தில் சாய்ந்திருப்பது போலவும், (2) நேராகப் பார்த்து உட்கார்ந்திருப்பது போலவும், (3) தன் வலக் கையில் கதை பிடித்து, ஒரு புறம் சாய்ந்து மெத்தையில் உட்கார்ந்திருப்பது போன்றும், வேறு பல சாயல்களும் உள்ளன. இவரது நாணயங்களில், கனிஷ்கரின் நாணயங்களிலுள்ள ஏரானியத் தெய்வங்களில் ஆர்லக்ஞோவைத் தவிர, மற்ற எல்லா உருவங்களும் உள்ளன. இவற்றோடு, **அஹுர - மஜ்தா** (சௌராஷ்டிரியரின் உயர் கடவுள்), **அஷாயிக்ஷோ** (நேர்மையின் உருவகமான அஷா வகிஷ்தா), **ஓ அனிண்டோ** (விருத்ரக்னுவோடு இணைக்கப்படும் பெண் தெய்வமான வனிந்தி), **ஓ அக்ஷோ** (ஒக்சுஸ் நதியின் தெய்வமாக இருக்கலாம்), **ரிஷ்ஞோ** (உண்மையின் உருவகமான ரிஷ்ணு), **ஷாரியோரா** (பேரரசின் மேதையாகவும், கனிப்பொருள்களின் தெய்வமாகவும் கருதப்பட்ட ஷாரிவர்) ஆகிய வேறு பல தெய்வங்களின் உருவங்களையும் ஹுவிஷ்கா புகுத்தியுள்ளார். ஒரு சில நாணயங்களில் **மாவோ** (சந்திரன்), **மிர்ரோ** (சூரியன்) ஆகிய இரண்டையும் சேர்த்து அச்சிட்டிருப்பது விநோதமாக உள்ளது. ஹுவிஷ்காவின் நாணயங்களில் ஏரான் நாட்டுத் தெய்வங்கள் மட்டுமன்றி, வேறு பல தெய்வங்களின் உருவங்களும் உள்ளன, சான்றாக, கிரேக்கத் தெய்வமான ஹெராகிளிஸ், கிரேக்கோ–எகிப்தியத் தெய்வமான செராபிஸ், ஓரோஸ் (எகிப்து நாட்டு ஹோரஸ்) அல்லது ஓரன் (வருணன்) ஆகியவற்றின் உருவங்கள் உள்ளன. ஹுவிஷ்கா அதிகமாகப் பயன்படுத்திய இந்தியத் தெய்வம் சிவன்தான். சில நாணயங்களில் சிவனும் அவரது மனைவி உமாவும் சேர்ந்து காணப்படுகின்றனர்; வேறு சில நாணயங்களில் சிவனது உருவத்தையும் இந்தியத் தெய்வமல்லாத நானா என்ற பெண் தெய்வத்தையும் சேர்த்துப் பொறித்திருப்பது விநோதமாக உள்ளது. சிவனும் உமாவும் தவிர, சில தங்க நாணயங்களில் சிவனின் மகனை கார்த்திகேயனின் உருவமும்

உள்ளது. **மாசேனன்** (மஹாசேனன்) என்ற பெயரில் தனியாகவும், **ஸ்கந்தகுமாரன், விசாகன்** என்ற பெயர்களில் சோடியாகவும் **ஸ்கந்த குமாரன், மஹாசேனன், விசாகன்** என்ற பெயர்களில் மூவராகவும் சிவன் காட்டப்படுகிறார். கார்த்திகேயனுக்கு ஸ்கந்த குமாரன், மஹாசேனன், விசாகன் என்று வேறு மூன்று பெயர்களும் உள்ளன. ஆனால் அக்காலத்தில் இம்மூவரும் வெவ்வேறானவர்களாகக் கருதப்பட்டனர் என்பதை இந் நாணயங்களிலிருந்து அறிய வருகிறோம்.

ஹுவிஷ்காவிற்குப் பின் ஆட்சிக்கு வந்தவர் வாசுதேவர். இவர், கனிஷ்காவைப் போன்றே பலி பீடத்தில் அரசன் நின்றுகொண்டு பலி கொடுப்பது போன்ற சின்னத்தைத் தன் நாணயங்களின் முன்புறம் பொறித்துள்ளார். கனிஷ்கர் நாணயங்களிலுள்ள அரசனின் இடக் கையில் ஈட்டி உள்ளது; ஆனால், இவரது நாணயங்களில் ஈட்டிக்குப் பதிலாகத் திரிசூலம் இருக்கிறது. இவருடைய நாணயங்களில் பின்புறம் பல தெய்வங்களுக்குப் பதிலாக **நானு, ஓஷோ** (சிவன்) ஆகிய இரு தெய்வங்கள் மட்டுமே பொறிக்கப்பட்டுள்ளன. நானு உருவம் ஒரு சில நாணயங்களில் தான் உள்ளது. பெரும்பாலானவற்றில் ஓஷோவின் உருவம் தான் உள்ளது. எனவே, ஓஷோ உருவமுள்ள நாணயங்கள் தான் வெகுகாலமாக வெளியிடப்பட்டிருக்க வேண்டும். அதோடு, இந் நாணயங்கள் ஒரே மாதிரியாக இல்லை. சிறிது சிறிதாக மாறி வருகிறது. இவ் வேறுபாட்டைக் கொண்டு இந் நாணயங்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம். இந் நான்கு வகை நாணயங்களும் எவ்வளவு வித்தியாசமானவையென்றால், இவை அனைத்தையும் ஒரே மன்னர் வெளியிட்டிருக்க முடியாது என்று எண்ணத் தோன்றுகிறது. எனவே, வாசுதேவர் என்ற பெயரில் பலர் இருந்திருக்க வேண்டுமென சில அறிஞர்கள் கருதுவர். வாசுதேவரின் நாணயங்களுக்கிடையே கனிஷ்கர் என்ற பெயரில் மற்றொரு வகை நாணயங்களும் கிடைத்துள்ளன. இவை முதலாம் கனிஷ்கரின் நாணயங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. இவற்றின் பின்புறம் சிவனும் அவரது காளைமாடும் உள்ள சின்னமோ அல்லது (செல்வத்தின் தெய்வமான லட்சுமிக்கு இணையான) அர்டோக்ஷோ என்ற பெண் தெய்வம்

இடக் கையில் செல்வத்தின் சின்னத்தையும், வலக் கையில் மணி முடியையும் கொண்டு உயர்ந்த சிம்மாசனத்தில் உட்கார்ந்துள்ள சின்னமோ உள்ளது. இந் நாணயங்களின் முன்புறம் பல இடங்களில் பிரமி வடிவ வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன; இந்த வாசகங்கள் என்ன என்பதைக் கூறுவது கடினம்.

வாசுதேவருடனும் மூன்றும் கனிஷ்கருடனும் குஷான வமிசமே முடிந்துவிட்டதாகத் தெரிகிறது. எனினும், குஷானப் பேரரசு அழிந்தபோது, அப் பேரரசிற்குட்பட்ட வடமேற்குப் பகுதிகள் சிலவற்றைக் குஷான இனத் தலைவர்கள் சிலர் பங்கு போட்டுக் கொண்டு, அப் பகுதிகளுக்கென்று பல்வேறு நாணயங்களை வெளியிட்டதாக அறிய வருகிறோம். இந் நாணயங்கள் அனைத்தும் வாசுதேவர், மூன்றும் கனிஷ்கர் வெளியிட்ட நாணயங்களைப் போலவே உள்ளன. இவற்றில் பல இடங்களில் பிரமி வாசகங்கள் உள்ளன. ஆனால், வெறும் பெயர்களையோ அல்லது பெயர்களின் சில பகுதிகளையோ மட்டும் கொண்ட இவ் வாசகங்கள் சீன மரபுப்படி மேலிருந்து கீழாகப் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு மன்னன் நின்றுகொண்டிருப்பது போன்ற உருவமும், அவ்வுருவத்திற்கு வலப் புறத்தில் **சாகா, கதாதரா, ஷலாதா** என்னும் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இப் பெயர்கள் குலத்தின் பெயர்கள்போல் தெரிகின்றன. இந் நாணயங்களிலுள்ள மற்ற வாசகங்கள் என்னவென்று தெரியவில்லை.

மேற்கூறிய குஷான மன்னர்களில் கடைசியாக ஆண்டவர்களின் பகுதிகளை முதலாம் அர்டாஷிர் ஆட்சியின்போது (கி.பி. 212–241) சசனீடுகள் கைப்பற்றிக் கொண்டனர். இவ்வாறு கைப்பற்றிய பகுதிகளை அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர்கள் ஆண்டனர். இவர்கள் சொந்தமாகவே நாணயங்களையும் வெளியிட்டிருக்கின்றனர். இவர்களின் பெயர்கள் பெரிய அரசர்களின் பெயர்களைப் போலவே இருந்ததால், இவர்களின் நாணயங்களை அரசர்கள்தான் வெளியிட்டனரென்று சிலர் தவறுகக் கூறுவர். ஆனால், இந் நாணயங்களிலுள்ள உருவங்களின் அம்சங்கள் பல மன்னர்களின் நாணயங்களிலுள்ளதிலிருந்து வேறுக உள்ளன. எனவே, இவ்விரு நாணயங்களும் ஒன்றுதான் எனக் கருதுவது

தவறு. குஷானர் மாநிலங்களில் இவர்கள் வெளியிட்ட நாணயங்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒருவகை நாணயங்கள் சசனீடுகளின் நாணயங்களைப் போன்ற வடிவத்தில் உள்ளன. இவற்றில் முன்புறம் அரசரின் மார்பளவு உருவமும், பின்புறம் வெறும் அக்னி பீடமோ அல்லது அக்னி பீடமும் பலிகொடுப்போரும் சேர்ந்தோ பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வகை நாணயங்களை சாப்பர், முதலாம் அர்டாஷிர், இரண்டாம் அர்டாஷிர், முதலாம் ஃபிரோர், முதலாம் ஹார்மிட் ஆகியோர் வெளியிட்டிருக்கின்றனர். அதோடு **குஷான் மல்கா** (குஷானர்களின் தலைவர்) அல்லது **குஷான மல்கன் மல்கா** (குஷான ஆளுநர்களின் தலைவர்), அல்லது **குஷான ஷா** (குஷான மன்னர்) என்ற வாசகங்கள் பஹலவியில் தங்கம் வெள்ளி, செம்பு நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது வகை நாணயங்கள் தங்க நாணயங்கள்; இவை கிண்ணம் போன்ற வடிவிலுள்ளன. வாசுதேவரின் நாணயங்களைப் போல உள்ளன. இவற்றின் சின்னமாக, நீண்ட கூர்மையான வளைவு கொண்ட தொப்பியும் அங்கியும் அணிந்துள்ள அரசன் அக்னி பீடத்தருகில் நின்றுகொண்டிருக்கும் உருவம் சித்திரிக்கப்பட்டுள்ளது. இவ்வரசனின் தலைமுடி சசனீடுகள் வழக்கப்படி முடிக்கப்பட்டுத் தோள்பட்டையில் விழும்படி சிங்காரிக்கப்பட்டுள்ளது. அதோடு, பைகள் தைக்கப்பட்ட கால் சட்டையை இவ்வரசர் அணிந்துள்ளார். இந் நாணயங்களில் **ஹார்மீட் வுஜுர்க் குஷான ஷா** என்ற வாசகம் குஷான எழுத்தைப் போலுள்ள மொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம், வாசுதேவர் நாணயங்களிலுள்ள தெய்வம் ஒன்றின் உருவம் உள்ளது. ஆனால், இத்தெய்வம் சசனீடுகள் பாணியில் கால் சட்டை அணிந்துள்ளது. இவற்றில் **வுர்ஜவந் யஜ்தா** (மேலான தெய்வம்) என்ற புது வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இந்நாணயங்களை முதலாம் ஹார்மிட் வெளியிட்டதாகக் கூறுவர். இதே போன்ற நாணயங்களை இரண்டாம் ஃபிரோஸ், முதலாம் வராஹரன், இரண்டாம் வராஹரன் ஆகியோரும் வெளியிட்டிருக்கின்றனர். முதலாம் ஃபிரோஸ், இரண்டாம் ஃபிரோஸ், முதலாம் ஹார்மிட், இரண்டாம் ஹார்மிட், முதலாம் வராஹரன், இரண்டாம் வராஹரன் ஆகியோர் மார்பு வரை உருவம் கொண்ட சசனீடுகளின் நாணயங்

களைப் போல் சில செம்பு நாணயங்களையும் வெளியிட்டிருக்கின்றனர். ஆனால், இவற்றில் பின்புறம் சிவனும் அவரது காளையும் மட்டும் பொறிக்கப்பட்டுள்ளது. குஷாணோ—சசனீட் நாணயங்களான இவ்விரு வகை நாணயங்களும் ஒன்றன்பின் மற்றொன்றாக வந்திருக்கவேண்டும் என்பது மட்டுமன்றி, சிவன் தன் காளையோடு தோன்றும் உருவமுள்ள நாணயங்கள் இந்தியாவிற்கென்றும், மற்ற வகை நாணயங்கள் இதர பகுதிகளுக்கென்றும் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

சசனீடு ஆளுநர்கள் ஆண்டு வந்த குஷானப் பகுதிகளை, கிடாரர் அல்லது கிடாரைடர் எனப்படும் பிறிதொரு வகை இனத்தைச் சேர்ந்த மன்னர்கள் கைப்பற்றிக் கொண்டனர். இவ்வினத்தின் முதல் மன்னராக விளங்கிய கிடாரர் என்பவரின் பெயரைக் கொண்டு இந்த இனம் கிடாரர் இனமென அழைக்கப்பட்டிருக்கலாம். இவ்வினத்தினர், ஒன்று குஷானர்களைப் போல் யூச்சி இனத்தவரில் ஒரு பிரிவினராகவோ அல்லது பின்னர் வந்த ஹூனர்களின் இனத்தில் ஒரு பிரிவினராகவோ இருந்திருக்க வேண்டும். இவர்கள் சசனீடுகளைப் போல் கிண்ண வடிவம் போன்ற சில தங்க நாணயங்களையும் வெள்ளி டிராம்ஸ்களையும் வெளியிட்டிருக்கின்றனர். தங்க நாணயங்களில் அக்னி பீடத்தில் நின்றுகொண்டிருக்கும் அதே மன்னனின் உருவம்தான் உள்ளது; ஆனால் இவ்வுருவம் நயமின்றி, பருவெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இவற்றில் **பாகோ கிதாரா வுஜூர்கோ குஷாணோ** என்ற வாசகம் குஷான எழுத்தைப் போன்ற வடிவில் பொறிக்கப்பட்டுள்ளது; வெள்ளி டிராம்ஸ்களில் இதே வாசகம் பிரமியில் **கிடார குஷான ஷா** என்று பொறிக்கப்பட்டுள்ளது. வெள்ளி நாணயங்களிலுள்ள உருவத்தைப் பார்த்தால், இந் நாணயங்களைக் கிடாரா என்னும் ஒரே பெயரைக் கொண்ட இரு மன்னர்கள் வெளியிட்டிருக்கவேண்டுமென்று தெரிகிறது.

மற்றொரு வகை நாணயங்களைக் கிடாரைடர் என்ற இனத்தவர் வெளியிட்டதாகத் தெரிகிறது. இவற்றில் பிற்காலத்திய குஷான மன்னர்கள் வெளியிட்டதைப் போல் தரமற்ற தங்க நாணயங்களும், அதே சமயம் தரமானவையும் இருக்கின்றன. இந் நாணயங்களில் முன்புறம் ஈட்டியைப் பிடித்துக்கொண்டு நிற்கும் மன்ன

ளின் உருவமும், பின்புறம், அர்டோக்ஷோ உட்கார்ந்திருப்பது போன்ற உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. முன்புறமுள்ள மன்னனின் இடக் கரத்திற்குக் கீழே கிடாரர் என்ற பெயர் பிரமி வடிவத்தில் மேலிருந்து கீழாகப் பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம், இடப் பக்கத்தில் பல வகையில் பொறிக்கப்பட்டுள்ள வாசகம் ஒன்று உள்ளது. அதோடு, **ஸ்ரீ சிலாதித்தியன், ஸ்ரீ கிருதவீர்யன், ஸ்ரீ சலோனவீரன், சதோமாலன் சர்வயாஸன்** போன்ற பல பெயர்கள் வெவ்வேறு நாணயங்களில் பிரமியில் பொறிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் மன்னர்களின் பெயர்களாகத்தானிருக்க வேண்டும். ஆனால், இம் மன்னர்கள் நாளடைவில் இந்துக்களாக மாறிய கிடாரர் பரம்பரையைச் சேர்ந்தவர்களா அல்லது கிடாரர் பழக்க வழக்கங்களை மேற்கொண்ட பெயர் தெரியாத இனத்தவர்களா என்று கூறுவதற்கில்லை.

அதிகாரம் 5

(மௌரியர்களுக்குப் பிந்திய, குப்தர்களுக்கு முந்திய) வட இந்தியத் தல நாணயங்கள்

மௌரியப் பேரரசு வீழ்ச்சியடைந்த பின், அப் பேரரசின் ஆதிக்கத்தால் ஒடுக்கப்பட்டிருந்த மக்களும் அரசாங்கங்களும் மறுபடியும் வலிமைபெற்று, தத்தம் தல அரசு, இனவரசு, முடியரசுகளை நிறுவினர். இவ்வாறு தோன்றிய இப் புது அரசுகள் ஏராளமான செம்பு நாணயங்களையும், ஒரு சில வெள்ளி நாணயங்களையும் அச்சிட்டு வெளியிட்டன.

பீஹாரில் பல இடங்களிலிருந்து சதுரமான, நீள் சதுரமான நாணயங்கள் கிடைத்துள்ளன. இவை சுமார் ஒன்றரை அங்குல நீளத்தில், ஓர் அங்குல அகலத்தில் சற்றுத் தடிப்பாக இருக்கின்றன. இவற்றில் ஒரு புறம், ஐந்து பெரிய சின்னங்களும், மற்றொரு புறம் நான்கு சின்னங்களும் முத்திரையிடப்பட்டுள்ளன. இந் நாணயங்களில் தொகுக்கப்பட்டுள்ள ஐந்து சின்னங்களும் மௌரியக் காலத்தின் தொடக்கத்தில் வெளியான வெள்ளி நாணயங்களிலுள்ளதைப் போன்றே இருக்கின்றன ; எனினும், உருவ் அமைப்பில் இவை முற்றிலும் வேறுபட்டவை. இவற்றை, சுமார் கி.மு. 184ஆம் ஆண்டில் மௌரிய சிம்மாசனத்தைப் பிடித்துக் கொண்ட புஷ்யமித்திர சுங்கர் வெளியிட்டிருக்கலாம் எனத் தெரிகிறது. அவருக்குப்.பின் ஆட்சிக்கு வந்தோர் விதிசத்தைத் தம் தலைநகராக மாற்றிவிட்டனர். எனவே, அங்கிருந்தும் முத்திரையிட்ட சில செம்பு நாணயங்கள் கிடைத்துள்ளன. இச் செம்பு நாணயங்கள் ஓர் அங்குல அகலமுள்ளதாயும் தட்டையாயும் இருக்கின்றன. இவற்றில் ஒருபுறம் தெளிவான நான்கைந்து சின்னங்கள் உள்ளன. மறுபுறம் சின்னமேயின்றி வெறுமையாக இருக்கின்றன. இவற்றைச் சுங்க அரசர்களும் அவர்களுக்குப்பின் வந்த

கன்வர்களும் வெளியிட்டிருக்கலாம். இந் நாணயங்கள் சிலவற்றில் பெரிய சின்னம் ஒன்றை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக **ராஜ்யோ ஸ்ரீ சதச** அல்லது **ராஜ்யோ ஸ்ரீ சதகனிச** என்று வாசகத்தைப் பொறித்துள்ளனர். இதிலிருந்து, இந் நாணயங்கள் கன்வர்களுக்குப் பதிலாக ஆட்சி செய்த சாதவாகனர்களுக்கு உரியது எனத் தெரிகிறது.

மௌரிய காலத்திற்குப் பின்பும் குப்தர்களுக்கு முன்பும் முத்திரையிட்ட நாணயங்கள் வேறெதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. அதற்குப் பதிலாக, மௌரிய காலத்தில் வார்ப்பட முறையில் வெளியான நாணயங்களைப் போன்றும், இந்தோ–பாக்டிரிய காலத்தில் புகுத்தப்பட்ட வார்ப்புருவப் படிவத்தைக் கொண்டு செய்த நாணயங்களைப் போலும்தான் நாணயங்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. நாணயங்களைச் செய்யும் முறை மாறிய போதிலும் சின்னங்களைப் பொறிக்கும் வழக்கம் கைவிடப்படவில்லை. இச் சின்னங்களைப் பொறிக்க முதலில் பல்வேறு பொறிப் பாணிகளைப் பயன்படுத்தியிருக்கின்றனர்; பின்னர்தான் எல்லாச் சின்னங்களையும் கொண்ட வார்ப்படத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இவற்றை வெளியிட்டோர் வாசகத்தைப் பொறிக்கும் புதுப்பழக்கத்தையும் மேற்கொண்டிருக்கின்றனர் என்பதை இந் நாணயங்கள் பலவற்றிலிருந்து அறிய வருகிறோம்.

இக்காலத்தில் வெளியான நாணயங்கள் பல வடமேற்கிலுள்ள காந்தாரம், கங்கைச் சமவெளியிலுள்ள கௌசாம்பி, மத்திய இந்தியாவில் உஜ்ஜயினி ஆகிய இடங்களிலிருந்து கிடைத்துள்ளன. இவற்றில் எந்த வாசகமும் இல்லை. காந்தார நாணயங்கள் சிலவற்றில் ஒருபுறம் மட்டும் முத்திரை உள்ளது; வேறு சில வற்றில் இரு பக்கமும் இருக்கிறது. இவற்றில் தொடக்கத்தில் வெளியானவற்றில் முத்திரையிட்ட நாணயங்களிலுள்ளதைப் போன்று சின்னங்கள் காணப்படுகின்றன. ஆனால், சிறிது காலம் கழித்து வெளியானவற்றில் இச்சின்னங்கள் இல்லை. இவற்றிற்குப் பதிலாக பிராணிகளின் உருவங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இப் பிந்திய வகை நாணயங்கள் இந்தோ–பாக்டிரிய நாணயங்களோடும், சக–பஹலவ நாணயங்களோடும் சேர்ந்து ஒரே சமயத்தில் புழங்கியிருக்க வேண்டும் என்பதைத் தட்சசீலத்தி

லிருந்து கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்களிலிருந்து அறிய வருகிறோம். கௌசாம்பியைத் தலைநகராகக் கொண்ட வத்ச நாணயங்கள் வார்ப்பட முறையில் தயாரிக்கப்பட்டவை. இவற்றில் எவ்வித எழுத்தும் இல்லை. இந் நாணயங்களில் ஒரு புறம் மெலிந்த காளை மாட்டு உருவமும் ஓரிரண்டு வேறு சின்னங்களும் சேர்ந்து, அல்லது லட்சுமி நின்றுகொண்டிருப்பது போலவும், அவளுக்கு இரு புறத்திலுமுள்ள இரண்டு யானைகள் அவள்மீது நீரைத் தெளிப்பது போன்றுமுள்ள அபிஷேக லட்சுமியின் உருவம் உள்ளது. மறுபுறம், ஒரு குன்று, மரம், வேறு சில சின்னம் ஆகிய மூன்றும் வெவ்வேறு விதத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. உஜ்ஜயினி நாணயங்கள் எத்தனையோ வகையிலுள்ளன. எனினும், இவை அனைத்திலும் ஒரு புறம் ஒரே சின்னம்தான் உள்ளது. இதை "உஜ்ஜயினி சின்னம்" என்று வழங்குவர். அதாவது, சிலுவை போன்ற இரு கோடுகளும், அக் கோடுகளின் முடிவில் ஒவ்வொரு சிறிய வட்டமும் சேர்ந்ததுதான் உஜ்ஜயினி சின்னம். இவ் வட்டம் பெரும்பாலும் ஒரே கோட்டால்தான் போடப்பட்டுள்ளது; எனினும், சிலவற்றில் இரண்டு கோடுகளால் போடப்பட்ட இரு வட்டங்களும் உள்ளன. வேறு சிலவற்றில் சுவஸ்திகைச் சின்னமோ, அல்லது ஒவ்வொரு வட்டத்திலும் உஜ்ஜயினி சின்னமோ போடப்பட்டுள்ளது. மறுபுறம் முத்திரையிட்ட நாணயங்களில் உள்ளதைப் போன்ற சின்னங்கள் இரண்டு முதல் ஏழு வரை உள்ளன. ஆனால், சில நாணயங்களில் தடியைப் பிடித்து நிற்கும் மனிதனின் உருவம் உள்ளது; இம் மனிதனுக்கு மூன்று தலைகள் இருப்பதைச் சில நாணயங்களில் காணலாம். எனவே, இது சிவனது அல்லது கார்த்திகேயனின் உருவமாகத்தானிருக்க வேண்டுமென்று சிலர் கூறுவர். வேறு சில நாணயங்களில் ஒரு பெண்ணின் உருவமிருப்பதைக் கண்டு, இதை லட்சுமியின் உருவம் என்று கூறுவர். உஜ்ஜயினி சின்னத்திற்குப் பதிலாக, ஒரு தவளையின் சின்னமுள்ள நாணயங்களும் இருக்கின்றன.

இக்காலத்தில் வாசகங்களுடன் வெளியான நாணயங்களை (1) தல நாணயங்கள், (2) இன நாணயங்கள், (3) முடியாட்சி நாணயங்கள் என்று மூன்று வகையாகப் பாகுபடுத்தலாம். தல

நாணயங்களை ஒரு வகையான நகர அரசுகள் வெளியிட்டிருக்கலாம்; எனவேதான், இவற்றில் நகரங்களின் பெயர்கள் உள்ளன. சான்றாக, **ஹிரஞ்சம** (ஹிரண்யாச்ரம) என்ற கரோஷ்தி வாசகமுள்ள சில நாணயங்கள் காந்தாரப் பகுதியிலிருந்து கிடைத்துள்ளன. இந் நகர அரசு அகதோகிளிஸ் காலத்தில் இந்தோ–பாக்டிரிய அரசில் இணைந்திருக்கக்கூடுமெனத் தெரிகிறது. எவ்வாறெனில், இந் நாணயங்களில் ஒரு புறம் இந்தோ–பாக்டிரிய நாணயச் சின்னமும் அகதோகிளிஸின் பெயரும் உள்ளன; மறு புறம், இந்த நகரத்தின் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது. மேலும், கங்கைச் சமவெளியிலிருந்த வாரணசி, சிராவஸ்தி, கௌசாம்பி, கிழக்கு ராஜஸ்தானிலிருந்த உத்தேஹிகா, சுதவபா, மத்திய இந்தியாவிலிருந்த உஜ்ஜயினி, எரகன்யா, மஹிஸ்மதி, குராரா, பகிலா ஆகியவையும் இக்காலத்திலிருந்த நகர அரசுகள் என்பதை அவற்றின் நாணயங்களைக் கொண்டு அறிய வருகிறோம். ஆனால் இந் நகர அரசுகள் ஒரு சிறிது காலம் மட்டுமே இருந்தனவென்றும், பெரும்பாலும் இவற்றில் முடியாட்சிதான் இருந்து வந்ததென்றும் தெரிகிறது. எனவே, இவ்வரசுகளின் நாணயங்களில், குறிப்பாக ராஜஸ்தான் நாணயங்களில் நகரத்தின் பெயரோடு அரசின் பெயரும் உள்ளது.

இந் நகர–அரசுகளில் புஷ்கலாவதி (இன்றைய புஷ்பபுரம்) வெளியிட்ட நாணயம் சிறிய தங்க நாணயமாகும்; இதன் எடை 56 தானியமணிதான். இதில் ஒரு புறம், மகுடம் அணிந்துள்ள பெண்மணி தன் கையில் ஏதோ ஒரு பொருளை வைத்துக்கொண்டு நிற்பது போலவும், அதில் **புக்கலாவதி தேவதா அம்பி** (புஷ்கலாவதி தேவதை அம்பா) என்று கரோஷ்தியிலும் பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம், திமில் பெருத்த காளையும், கிரேக்கத்தில் **டாரஸ்** என்றும், கரோஷ்தியில் **ரிஷபம்** என்றும் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் அமைப்பும் தோற்றமும் கிரேக்க நாணயத்தைப் போலிருப்பதால், இது கிரேக்கச் செல்வாக்கால் உருவாக்கப்பட்டதாகச் சிலர் கூறுவர். ஆனால், இந்தோ–பாக்டிரிய நாணயங்களில் வேறெதிலும் இந்தியக் கடவுளின் உருவம் இல்லை. மேலும், இந் நகரங்களை ஆட்சி செய்யும் முழுப் பொறுப்பை நகரத் தெய்வங்களிடமே ஒப்படைத்து வந்தனர்

என்ற சுவையான செய்தியும் இந் நாணயங்களிலிருந்து கிடைக்கிறது.

இவ்வாறு கடவுளின் தலைமையில் ஆட்சியை ஒப்படைப்பது விநோதமாக இருப்பினும், இது இந்திய வரலாற்றில் சர்வ சாதாரணமாக இருந்து வந்திருக்கிறது. பல இடங்களில் இவ்வாறுதான் ஆட்சி நடைபெற்று வந்தது. சான்றாக, இந் நகர அரசு நடைபெற்றபோது, பஞ்சாப்பில் இருந்த அதும்பரா, குனிந்தா, யௌதேயா ஆகிய இனக் குடியரசுகள் கூடக் கடவுளின் பெயரால்தான் நிர்வகிக்கப்பட்டன. இம் மூன்று இனக் குடியரசுகளும் தத்தம் தலைமை நிர்வாகிகளான மகாதேவர் (சிவன்), சத்ரேஸ்வரர் (சிவன்), பிரமண்யர் (கார்த்திகேயன்) ஆகிய கடவுள்களின் பெயர்களில்தான் தத்தம் நாணயங்களை வெளியிட்டன. இப்பழக்கம் இடைக்காலம் வரை இருந்து வந்தது; இன்றும் கூட ஒரு சில இடங்களில் உள்ளது. சான்றாக, திருவாங்கூர்–கொச்சி சமஸ்தானம் இந்தியாவோடு இணைவதற்கு முன்பு, அதன் நிர்வாகப் பொறுப்பு பத்மனாபர் (விஷ்ணு) என்ற கடவுளிடம் தான் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

மகதப் பேரரசு தோன்றுவதற்கு முன்பு பல்வேறு இனக் குடியரசுகள் பஞ்சாப்பில் இருந்தன. ஆனால், மகதப் பேரரசின் ஏகாதிபத்தியத்தின்போது இவை சுயமாக இயங்க முடியவில்லை. எனினும், பேரரசு வீழ்ச்சியடைந்தவுடன், மறுபடியும் இவைகள் சுதந்திரமான குடியரசை அமைத்துக்கொண்டு, சொந்தமாக நாணயங்களையும் வெளியிட்டிருக்கின்றன. சான்றாக, கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் அக்ரேயா, ராஜன்யா, சிபி, திரிகர்த்தா, யௌதேயா ஆகிய இனக் குடியரசுகள் தத்தம் நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளன. இவற்றில் யௌதேயக் குடியரசு மட்டும் குப்தப் பேரரசு தோன்றும்வரை இருந்திருக்கிறது. அதே போல், கி.மு. முதலாம் நூற்றாண்டில் அதும்பரா, குனிந்தா, விருஷ்னி-ராஜன்யா, வேமகா ஆகிய இனக் குடியரசுகளும், கி.பி. முதலாம் நூற்றாண்டில் மாளவம், குலுதம் ஆகிய இனக் குடியரசுகளும் இருந்ததாக அறிய வருகிறோம். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில்கூட அர்ஜுனயனா என்ற இனக் குடியரசு இருந்திருக்கிறது. இவற்றில் மாளவம், யௌதேயா,

அர்ஜுனயனு ஆகிய மூன்றைப்பற்றி குப்த பேரரசரான சமுத்திர குப்தர் கி.பி. நான்காம் நூற்றாண்டில் பொறித்த அலகபாத் தூண் பட்டயத்திலிருந்து அறிய வருகிறோம். இவ்வினத்தவரில் பலர் பஞ்சாப்பிலேயே தங்கிவிட்டனர்; மற்றவர்களோ அயல் நாட்டுப் படையெடுப்பாளருக்குப் பயந்து ராஜஸ்தானுக்கும் மற்ற இடங்களுக்கும் குடிபெயர்ந்துவிட்டனர்.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்த இனக் குடியரசுகள் அனைத்தும் **ஜனபதங்கள்** என்றே அழைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இவற்றின் நாணயங்களில் **ஜனபதங்கள்** என்றும், ஒரு சில சமயங்களில் தம் நகரத்தின் பெயரையும் பிரமி எழுத்தில் பொறித்துள்ளன. ஏனைய குடியரசுகளெல்லாம் தத்தம் குடியரசின் பெயரையும், **ராஜா** அல்லது **மகாராஜா** என்ற பட்டத்துடன் ஆளுநர்களின் பெயர்களை அல்லது தத்தம் குடியரசுக்குப் பொறுப்பைக் கொண்ட கடவுளின் பெயரையும் தமது நாணயங்களில் பொறித்துள்ளன. இக் குடியரசுகள் அனைத்தும் பெரும்பாலும் செம்பு நாணயங்களையே வெளியிட்டிருக்கின்றன. ஒவ்வொரு குடியரசும் குறிப்பிட்டதொரு எடையிலும், வேறு சில பல்வேறு எடையில் வெவ்வேறு மதிப்பிலும் நாணயங்களை வெளியிட்டதாகத் தெரிகிறது. ஒரு சில குடியரசுகள் வெள்ளி நாணயங்களையும் வெளியிட்டிருக்கின்றன; ஆனால், இவ்வெள்ளி நாணயங்கள் கிடைப்பது அரிது. இவை இந்தோ–பாக்டிரிய மன்னர்கள் வெளியிட்ட ஹெமிடிராம்ஸ்களின் எடை கொண்டவை. யௌதேயர்கள் வெளியிட்ட பிந்திய செம்பு நாணயங்கள் நன்றாகவும் தெளிவாகவும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவை குஷான நாணயங்களைப் போல் இருப்பதால், அவற்றைப் பின்பற்றித்தான் உருவாக்கப்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது. இவற்றில் சின்னங்களைப் பொறிப்பதற்காகப் பழைய சின்னங்களையும் ஒரே முத்திரைப் பொறியில் தொகுத்துப் பயன்படுத்தியிருக்கின்றனர். ஆனால் நாளடைவில் பல்வேறு சின்னங்களைத் தொகுப்பதற்குப் பதிலாக, எளிமையான சின்னங்களையே பயன்படுத்தினர் என்பதைப் பிந்திய சில நாணயங்களிலிருந்து அறிய வருகிறோம். சில நாணயங்களில் இந்தோ–பாக்டிரிய நாணயங்களிலும் இதர நாணயங்களிலும் உள்ளதைப் போல் கடவுள்

களின் உருவங்களையும் புகுத்தியிருக்கின்றனர். சான்றாக, அதும்பாராவைச் சேர்ந்த தரகோஷா கிரேக்க நாணயங்களி லுள்ளதைப் போல் விஸ்வாமித்திரரின் உருவத்தையும், குஷானர் களைப் போல் தனது பெயரையும் தன் நாணயங்களில் பொறித் துள்ளார். அதேபோல், யௌதேயர்கள், தம் நாணயங்களில் தம் கடவுளான கார்த்திகேயரின் உருவத்தையும் அவரது மனைவியின் உருவத்தையும் பொறித்துள்ளனர்.

அக்காலத்தில் கங்கை–யமுனைச் சமவெளிப்பகுதியில் ஒரு சில முடியாட்சிகளும் தோன்றின. இவற்றில் நான்கு மட்டும் பெரிய முடியாட்சி அரசுகளாக இருந்திருக்கின்றன. இவை: (1) மதுரா வைத் தலைநகராகக்கொண்ட சூரசேனம். (2) பாஞ்சாலம்; இதன் தலைநகரம் அஹிச்சத்ரா (பெரெய்லி மாவட்டத்திலுள்ள ராம் நகர்). (3) கௌசாம்பியை (அலகபாத் மாவட்டம்) தலைநக ராகக் கொண்ட வத்சம். (4) கோசலம்; இதன் தலைநகரம் ச்ராவஸ்தி (உத்திரப் பிரேதசத்தில் கோண்டா மாவட்டம்) அல்லது அயோத்தி (ஃபைசாபாத் மாவட்டம்). இந் நான்கில் சூரசேனத்திலிருந்த முடியாட்சி சக–க்ஷத்ரபர்களால் அழிந்து விட்டது; பின்னர் குஷானர்கள் இதை ஆக்கிரமித்துக் கொண்டனர். பாஞ்சாலம், குப்தர்கள் ஆட்சிக்கு வரும்வரை முடியரசாகவேதான் விளங்கி வந்தது. வத்சம் சிறிது காலம் வரை குஷானர்களின் வசமும், பின்னர் புதியதொரு வமிசத்தினர் வசமும் இருந்திருக்கலாம். கடைசியில் இதைச் சமுத்திர குப்தர் தன் ஆட்சியின்கீழ் கொண்டு வந்தார். கோசலம் சிறிது காலத் திலேயே குஷானர்கள் வசம் சிக்கிக்கொண்டது.

கோமித்ரர் என்பவர்தான் சூரசேனத்தை முதன்முதலில் ஆண்டிருக்கிறார் என்பதை அவரது நாணயங்களிலிருந்து அறிய வருகிறோம். அவருக்குப் பின், சூரிய மித்திரர், பிரம்ம மித்திரர், திரித மித்திரர், விஷ்ணு மித்திரர் ஆட்சி செய்தனர். இம் மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில், முன்னர் இருந்த முத்திரைச் சின்னங்கள்தான் உள்ளன. அதோடு, லட்சுமி நின்றுகொண்டிருப்பது போலவும் சின்னம் உள்ளன. மித்திர வமிசத்தினரை தத்தர் என்ற குலப்பெயரைக் கொண்ட மன்னர்கள் ஒழித்துக்கட்டினர். இக் குலத்தைச் சேர்ந்த மன்னர்

களில் சோமதத்தர், காமதத்தர், பவ தத்தர் ஆகியோர் முக்கிய மானவர்கள். இவர்களுக்குப் பின், பலபூதி, அபலாதர் ஆகிய இருவரும் ஆட்சிக்கு வந்தனர். இவர்கள் **ராஜா** என்ற பட்டத்தைப் பொறித்து, நாணயங்களை வெளியிட்டனர். அபலாதர் மட்டும் **மகாராஜா** என்ற பட்டத்தைப் பயன்படுத்தியுள்ளார். இவர்கள் வெளியிட்ட நாணயங்கள் முந்திய மித்திர மன்னர்களின் நாணயங்களைப் போலவே உள்ளன. இவர்களுக்குப் பின் வெளி நாட்டு வமிசத்தினர் ஆட்சி செய்திருக்கின்றனர். இவர்களில் முதன்முதலில் ஆட்சிக்கு வந்தவர் ராஜுவுலா என்பவர்; இவர் பஞ்சாப்பிலுள்ள சில பகுதிகளை ஏற்கெனவே ஆண்டு வந்தவர். தொடக்கத்தில் இவர் வெளியிட்ட நாணயங்கள் வெள்ளி ஹெமிடிராம்ஸ்களாகும். இவை சுத்த வெள்ளியினலன்றி ஈயம் கலந்த உலோகத்தால் செய்யப்பட்டவை. இவை, இந்தோ-பாக்டிரிய மன்னர்களான முதலாம் ஸ்திராதோ, இரண்டாம் ஸ்திராதோவின் நாணயங்களைப் போல் இருக்கின்றன. இவற்றில் முன்புறம், வலப்புறமாகத் திரும்பியுள்ள மன்னனின் உருவமும், அரைகுறையான கிரேக்க மொழியில் **பசிலியஸ் பசிலியன் சாதோரஸ்** என்ற பட்டத்தோடு அவரது பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன. பின்புறம், **பல்லாஸ் ஏதெனின்** உருவமும் கரோஷ்தி வாசகமும் உள்ளன. இந்நாணயங்கள் கங்கை, யமுனை நதிகளுக்கிடையேயும், பஞ்சாப்பிற்குக் கிழக்கேயுமுள்ள சங்கிசா என்னும் பகுதியிலிருந்தும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மேலும், இவர் ஈயத்தினல் செய்யப்பட்ட மற்றொரு வகை நாணயங்களையும் வெளியிட்டிருக்கிறர். இவற்றில் முன்புறம் சிங்கத்தின் உருவமும், பின்புறம் கிரேக்க, கரோஷ்தி வாசகங்களுடன் ஹெராகிளிஸின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. இந் நாணயங்கள் தட்சசீலத்திலிருந்து ஏராளமாகக் கிடைத்துள்ளன. இவர் மதுராவைக் கைப்பற்றியபோது, ஏற்கெனவே அங்குப் புழங்கி வந்த நாணயங்களைப் போல், முன்புறம் நின்றுகொண்டிருப்பது போல் லட்சுமியின் உருவத்தையும், பின்புறம் அபிஷேக லட்சுமியின் உருவத்தையும் பொறித்து, சில நாணயங்களை வெளியிட்டிருக்கிறர். இவற்றில் பிரமியில் மட்டும் பொறிக்கப்பட்ட வாசகங்கள் இருக்கின்றன. ராஜுவுலாவிற்குப்

பின், அவரது மகன்களான சோதசாவும் தோரணதசாவும் பட்டத்திற்கு வந்தனர். பின்பு, சிறிது காலம் வரை ஹகனும் ஹகமசாவும் சேர்ந்தும், அதன் பின்னர் ஹகமசா மட்டும் தனியாகவும் ஆட்சி செய்தனர். இவருக்குப் பின் சிவதத்தரும் சிவகோஷாவும் ஆட்சி செய்துள்ளனர். இவர்களில் ராஜுவுலா, சோதசா ஆகிய இருவரின் நாணயங்களில்மட்டும் மகாக்ஷத்ரபர் என்ற பட்டம் பொறிக்கப்பட்டுள்ளது; மற்றவற்றில் வெறும் க்ஷத்ரபர் என்றுதான் இருக்கிறது.

பாஞ்சாலத்தை ஆண்ட அரசர்கள் அனைவரும் ஒரே மாதிரியான செம்பு நாணயங்களை வெளியிட்டனர். இவற்றில் குறைந்தது இருபத்தொரு மன்னர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அதாவது, ருத்திர குப்தர், ஜெய குப்தர், தாம குப்தர், வங்க பாலர், விசுவபாலர், யஜ்ன பாலர், வசு சேனர், சூர்யமித்திரர், விஷ்ணு மித்திரர், துருவ மித்திரர், இந்திர மித்திரர், அக்கினி மித்திரர், பானு மித்திரர், பூமி மித்திரர், ஜெய மித்திரர், பல்குனி மித்திரர், பிருஹஸ்பதி மித்திரர், அனு மித்திரர், அயு மித்திரர், வருண மித்திரர், பிரஜாபதி மித்திரர் ஆகிய இருபத்தொரு மன்னர்கள் பாஞ்சாலத்தை ஆண்டிருக்கின்றனர். இவர்கள் வெளியிட்ட நாணயங்களிலெல்லாம் ஒரு புறம், மூன்று சிறிய சின்னங்கள் வரிசையாகவும், அவற்றிற்குக் கீழே அவற்றை வெளியிட்ட மன்னரின் பெயரையொட்டிய கடவுளின் உருவமோ அல்லது அக் கடவுளின் சின்னமோ உள்ளது. சான்றாக, சூரிய மித்திரர், பானு மித்திரர் என்ற பெயருள்ள நாணயங்களில் ஒரு சிறு மேடைமீது சூரியன் பொறிக்கப்பட்டுள்ளது. பாஞ்சாலத்தில் கடைசியாகப் புழங்கிய நாணயங்கள் முற்றிலும் வேறுபட்டவை. இவற்றில் ஒரு புறம் சக்கரமும், மறுபுறம் அச்யு என்ற பெயரும் இருக்கின்றன. இந் நாணயங்களை அச்சுதா என்பவர் வெளியிட்டிருக்கலாம் என்பதையும், அவரைச் சந்திர குப்தர் ஒழித்துக் கட்டினார் என்பதையும் அலகபாத்திலுள்ள தூண் பட்டயத்திலிருந்து அறிய வருகிறோம்.

வத்ச முடியாட்சி நாணயங்களில் ஒரு புறம், காளையின் உருவத்தோடு வேறொரு சின்னமும் உள்ளது. மறுபுறம் பட்டயத்தில் வேலிக்குள் ஒரு மரமும் வேறு சில சின்னங்களும் இணைக்

கப்பட்டிருக்கின்றன. அதோடு, மன்னன் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வகையான நாணயங்களை வவகோஷர், அஷ்வகோஷர், பர்வதர், இந்திர தேவர், சுதேவர், மித்திரர், ராதா மித்திரர், அக்கினி மித்திரர், ஜ்யேஷ்ட மித்திரர், பிரஹஸ்பதி மித்திரர், சுர மித்திரர், வருண மித்திரர், போத மித்திரர், சர்ப மித்திரர், பிரஜாபதி மித்திரர், சத்திய மித்திரர், ராஜ மித்திரர், ராக்ஞி மித்திரர், தேவ மித்திரர் ஆகிய பதினெட்டு மன்னர்கள் ஒரே மாதிரியாக வெளியிட்டிருக்கின்றனர். இவர்களுக்குப் பின், ஒரு புதிய வமிசத்தினரும் நாணயங்களை வெளியிட்டதாகத் தெரிகிறது. இவர்களது நாணயங்களும் மேற்கூறிய அதே சின்னங்களுடன்தான் உள்ளன; ஆனால், இவற்றின் அமைப்பு முற்றிலும் வேறுபட்டுள்ளது. இந் நாணயங்களில் பத்ரமாகர், வைஷ்ரவணர், சிவமாகர், சதமாகர், விஜயமாகர், ருத்ரமாகர், யுகமாகர், பிமவர்மர், நாவிகர், புஷ்வஸ்ரி, தன தேவர் ஆகியோரின் பெயர்கள் உள்ளன. அடுத்து, ஒரு புறம் ருத்திரர் என்ற பெயரும், மற்றொரு புறம் காளையின் அருகில் சிவனது உருவமும் பொறிக்கப்பட்ட நாணயம் உள்ளது. இது குஷானர்களின் நாணயத்தைப்போலவே உள்ளது. இதை வெளியிட்ட ருத்திரர் என்பவர் அலஹபாத் கல்தூண் பட்டயத்திலுள்ள ருத்திர தேவராக இருக்கலாம்.

கோசலம் முடியாட்சியாக இருந்தபோது, தொடக்கத்தில் வெளியிட்ட நாணயங்கள் வார்ப்பில் செய்யப்பட்டவை. இவற்றில் முன்புறம் ஒரு தூணும், அதற்கு முன்னால் ஒரு காளையும் அல்லது யானையும் உள்ளது; பின்புறம், முத்திரையிட்ட பழைய நாணயங்களிலுள்ளதைப் போன்று ஐந்தாறு சின்னங்கள் இருக்கின்றன. இந் நாணயங்களை மூலதேவர், வாயுதேவர், விசாக தேவர், தன தேவர் ஆகியோர் வெளியிட்டிருக்கின்றனர். நரதத்தர், ஜ்யேஷ்டதத்தர், சிவதத்தர் ஆகிய மூவரும் வெளியிட்ட மற்றொரு வகை வார்ப்பட நாணயங்களும் இருக்கின்றன. இவையும் மேற்கூறிய நாணயங்களைப் போலவே இருக்கின்றன; ஆனால் இவை மிகச் சிறியவை. சிவ தத்தர் பெயருள்ள வேறு சில நாணயங்களும் கிடைத்துள்ளன. இவற்றில் ஒரு புறம் யானையின் உருவமும், மறுபுறம் அபிஷேக லட்சுமியின் உருவ

முப் உள்ளன. மேலும், முத்திரைப்பொறியால் தயாரித்த சில நாணயங்களில் சிவ தத்தர் என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. ஒருவேளை, இந்தச் சிவதத்தர் வேறொருவராக இருக்கலாம். இவரது நாணயங்களில் வேலிக்குள் மரமும், அம் மரத்திற்கு முன்னால் ஒரு காளையும் பொறிக்கப்பட்டுள்ளன. இது போன்றே நாணயங்கள் ஒரு சில மாறுதல்களுடன் ஹர தத்தர், சிவ பாலிதர், குமுத சேனர், அஜவர்மன், சங்க மித்திரர், விஜய மித்திரர் ஆகியோராலும் வெளியிடப்பட்டுள்ளன. அதோடு, விஜய மித்திரர் ஒரு புதுவகையான நாணயங்களையும் வெளியிட்டிருக்கிறார். இவற்றில் முன்புறம் காளையின் உருவம்மட்டும் உள்ளது; ஆனால் பின்புறத்தில் ஒரு பனைமரமும், அம் மரத்திற்கு முன்னால் **ஹம்சமும்** (அன்னப்பறவை) பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வகை நாணயங்களைச் சத்திய மித்திரர், தேவ மித்திரர், ஆர்ய மித்திரர் ஆகியோரும் வெளியிட்டுள்ளனர்.

மத்திய இந்திய நாணயங்களைப்பற்றிய விவரங்கள் அதிகம் இல்லை. சுங்க மன்னர்களும் கன்வ மன்னர்களும் வெளியிட்டதாகக் கூறப்படும் முத்திரையிட்ட நாணயங்களைப்பற்றி ஏற்கெனவே பார்த்தோம். அதோடு இந் நாணயங்களைப் பின்பற்றித் தான் சாதவாகன மன்னர்களான சதவும் சதகர்ணியும் தத்தம் நாணயங்களில் முத்திரையிட்டு, வாசகமும் பொறித்து வெளியிட்டனர் என்பதையும் கண்டோம். மத்திய இந்தியாவில் சாதவாகர்களுக்குப் பின்னர், கி.பி. 350 வரை மேற்கத்திய க்ஷத்ரபர்கள் ஆட்சி செய்ததாக அவர்களது நாணயங்களிலிருந்து அறிய வருகிறோம். மேலும், உஜ்ஜயினி பகுதியில் வாசகம் ஏதுமின்றி, வெறும் சின்னங்கள்மட்டும் முத்திரையிடப்பட்ட பலவகை நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதையும் ஏற்கெனவே பார்த்தோம். ஆனால், அண்மையில் ஹமுகமா, வாலகா, மஹா, சௌமா ஆகிய பெயர்கள் பொறிக்கப்பட்ட சில செம்பு நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப் பெயர்கள் சகர் பெயர்களைப் போல் இருக்கின்றன. எனவே, கி.மு. முதலாம் நூற்றாண்டில் இப் பகுதிக்கு வந்த சகப் படையெடுப்பாளரின் பரம்பரையைப்பற்றி ஜெயின் ஆதாரங்கள் கூறுவது உண்மையாக இருக்கலாமென்று தெரிகிறது. இந் நாணயங்களில் ஒரு புறம்

பெயரும், மறுபுறம் உஜ்ஜயினி நாணயச் சின்னமும் உள்ளன.

இப் பகுதியிலிருந்த பத்மாவதி அரசு (இன்று குவாலியரிலுள்ள பதம் பவாயா) ஒரு தனி அரசாக இருந்திருக்கலாம். இங்கிருந்து மகாதேவர், சகாதேவர், மகதர், சபலசேனர், அமிதசேனர், சிவ குப்தர் ஆகிய மன்னர்களின் பெயர்களைக் கொண்ட நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம் மன்னர்கள் கிருத்துவ சகாப்தத்திற்குச் சற்று முன்பும் பின்பும் ஆட்சி செய்திருக்கலாம். அதற்குப் பின்னர், கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் நாகர்கள் என்னும் புது வமிசத்தினர் வந்தனர்; இவ் வமிசத்தினர் கி.பி. நான்காம் நூற்றாண்டுவரை இப் பகுதியை ஆண்டிருக்கலாமென்று தெரிகிறது. இவ் வமிசத்தினரில் விருஷர், பீமர், ஸ்கந்தர், வாசு, பிருஹஸ்பதி, விபு, ரவி, பவ, பிரபாகர், தேவர், வியாக்கிரர், கணபதி ஆகிய பன்னிரண்டு மன்னர்கள் ஆட்சி செய்ததாக அவர்களது நாணயங்களிலிருந்து அறிய வருகிறோம். இவர்கள் வெளியிட்ட நாணயங்கள் மிகச் சிறியவை; இவற்றின் எடையோ 9, 18 அல்லது 36 தானியமணிதான். இவற்றில் ஒரு புறம் மன்னனின் பெயர் பிரமியில் பொறிக்கப்பட்டுள்ளது. மறுபுறம், பிராணியோ, பறவையோ அல்லது வேறெந்தச் சின்னமோ உள்ளது. பிராணிகளில் திமில் பெருத்த காளையும், பறவைகளில் மயிலும்தான் பெரும்பாலும் காணப்படுகின்றன.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை, ஒரிசாவின் கிழக்குப் பகுதியில் முத்திரையிட்ட வெள்ளி நாணயங்களைத் தவிர, வேறு நாணயம் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. எனினும், பதக்கமாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு தங்க நாணயம் சிசுபாலகர் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் முன்புறம், குஷானர் நாணயங்களிலுள்ளதைப்போல் நீண்ட இரும்புத் தொப்பி அணிந்துள்ள மன்னன், தன் இடக் கையில் ஈட்டியும் வலக் கையில் பலிகொடுக்கும் பொருளையும் ஏந்தி, பலிபீடத்தில் நின்று கொண்டிருக்கும் சின்னம் உள்ளது. பின்புறம், ரோமானியப் பேரரசு நாணயங்களிலுள்ளதைப்போல் ரோமானிய மனிதனின் தலை பொறிக்கப்பட்டுள்ளது; அதோடு, சில கிரேக்க அல்லது ரோமானிய வாசகமும் இருந்ததாகத் தெரிகிறது. இதில் அயல் நாட்டு நாணயங்களிலிருந்த இரண்டு சின்னங்கள் தொகுக்கப்

பட்டிருப்பதைப் பார்த்தால், வெளிநாட்டு வியாபாரத்தின் வழியாக இச் சின்னங்கள் தெரிந்திருக்க வேண்டுமெனத் தோன்று கிறது. இதன் முன்புறத்தில் இதை வெளியிட்டவரின் பெயர் பொறிக்கப்பட்டிருந்தபோதிலும், அப் பெயர் தெளிவாகத் தெரியவில்லை. எனினும், இந் நாணயம் கி.பி. மூன்றும் நூற்றுண்டில் வெளியாகியிருக்க வேண்டும் என்று கூறப் படுகிறது; ஆனுல், இவை யார் வெளியிட்டது என்று தெரிய வில்லை. இந் நாணயத்தோடு வேறு சில செம்பு நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் குஷான நாணயங்களின் சின்னங்கள்தான் பருவட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றை, பூரி - குஷான நாணயங்கள் என்று அழைத்திருக் கின்றனர். எனினும், இவை பூரிக்கு மட்டும் அல்லது ஓரியா விற்குமட்டும் சொந்தமாக இருந்திருக்க முடியாது. ஏனெனில், பீஹாரை ஒட்டிய வேறு சில இடங்களிலிருந்தும் இவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் முன்புறம் கனிஷ்கர் அல்லது ஹுவிஷ்கரின் நாணயங்களில் உள்ளதைப்போல் அரசன் ஒருவன் நின்றுகொண்டிருக்கும் உருவம் உள்ளது. பின்புறம் மாவோ, மிர்ரோ போன்ற குஷானக் கடவுளின் உருவம் உள்ளது. ஒரு சில நாணயங்களில் முன்புறம் அரசனின் உருவத்திற்குப் பதிலாக யானையும் யானைப்பாகனும் இருப்பதைக் காணலாம். இவை குஷான நாணயங்களைப்போல் இருக்கின்றன; எனினும் இவற்றை எவர், எப்போது வெளியிட்டார் என்பது இதுவரை தெரியவில்லை.

இவ்வதிகாரத்தை முடிக்குமுன்பு, காந்தாரத்தில் வெளி யிடப்பட்ட ஒரு சில செம்பு வில்லைகளைப்பற்றிக் குறிப்பிடவேண் டும். இவ் வில்லைகள் எல்லா வடிவங்களிலும் உள்ளன. இவற்றை வியாபாரிகள் வெளியிட்டதாகவும் தெரிகிறது. இவற்றில் ஒரு சிலவற்றில் ஒரு புறம் **நைகம** (வணிகன் அல்லது வியாபாரி) என்ற சமஸ்கிருதச் சொல்லினைப் பன்மையில் **நேகமா** என்று பிரமியில் பொறித்துள்ளனர். மறுபுறம் **ராலிமதா, அதகதகா, தோஜக்ா** என்ற பெயர்கள் உள்ளன. இவை, இவ் வில்லைகளை வெளியிட்ட வணிக சங்கத்தின் நகரப் பெயராக இருக்கலாம். வேறு சில வில்லைகளில் கரோஷ்தியில் **பஞ்சநேகமே** (ஐந்து நைகமகங்கள்) என்ற வாசகம் இருக்கிறது. இதிலிருந்து,

இவற்றை ஐந்து வணிகச் சங்கங்கள் சேர்ந்து வெளியிட்டிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. இந்த வில்லைகள் நாணயங்களைப் போலிருப்பதால், முதன்முதலில் வணிகர்கள் தாம் இந்திய நாணயங்களை வெளியிட்டிருக்க வேண்டுமென்றும், அதற்குரிய அதிகாரமும் அவர்களுக்கு இருந்ததென்றும் ஒரு சில அறிஞர்கள் கூறுவர். ஆனால், வணிகர்கள் பயன்படுத்திய இவ் வில்லைகள் வெறும் அடையாளச் சீட்டுகளேயன்றி, நாணயங்களல்ல. இவை நாணயங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. இவ்வகை வணிக வில்லைகள் இன்றும்கூடப் பயன்பட்டு வருகின்றன.

அதிகாரம் 6

தென்னிந்திய, மேற்கிந்திய முந்தைய நாணயங்கள்

மகதப் பேரரசு தென்னிந்தியாவில் விரிவடைவதற்கு முன், ஆந்திரம், மூலகம், அஸ்மகம் ஆகிய மூன்று தென்னிந்திய ஜனபதங்களும் (அரசுகளும்) தத்தம் சின்னங்களை முத்திரையிட்டு நாணயங்களை வெளியிட்டு வந்தன என்பதை முன்னரே கண்டோம். ஆனால், மகதப் பேரரசு காலத்தில் அப் பேரரசின் நாணயங்கள்தாம் இங்கெல்லாம் புழங்கிவந்தன என்பதை இப் பகுதிகளிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட வெள்ளி நாணயங்களிலிருந்து அறிய வருகிறோம். இந்தியாவிலேயே முதன்முதலாகத் தென்னிந்தியாவில்தான் முத்திரையிடப்பட்ட வெள்ளி நாணயங்கள் தோண்டி எடுக்கப்பட்டன என்ற செய்தியை அறியும்போது வினோதமாகக்கூட இருக்கிறது. கர்னல் கால்டுவெல் என்பவர் கி.பி. 1800–ல் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள புதையலிலிருந்து அந் நாணயங்கள் மூன்றைக் கண்டுபிடித்தார். அவை தேய்ந்துபோன மகதப் பேரரசின் நாணயங்களாகும். மேலும், தென்னிந்தியப் புதையலிலிருந்துதான் இந் நாணயங்கள் ஏராளமாகத் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன; அதாவது, குண்டூர் மாவட்டத்திலுள்ள அமராவதி என்னுமிடத்திலிருந்து 7,668 நாணயங்கள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால், தென்னிந்தியாவில் கண்டுபிடித்த இந் நாணயங்கள் அனைத்தும் வடநாட்டிலிருந்து வந்தவையேயன்றி, அங்கேயே அச்சிடப்பட்டவையல்ல. மௌரியப் பேரரசு வீழ்ச்சியடைந்த பின்னர்தான் பாண்டிய நாட்டில் முத்திரையிட்ட வெள்ளி நாணயங்கள் வெளியிடப்பட்டன. இவ் வெள்ளி நாணயங்களில் மௌரிய நாணயங்களைப்போல் ஐந்து சின்னங்கள் உள்ளன. அதாவது, மௌரிய நாணயங்களிலுள்ள பதினாறு கதிர்கள் கொண்ட சூரியனுக்குப் பதிலாக, பன்னிரண்டு

கதிர்கள்மட்டும் கொண்ட சூரியன், ஆறு கிளையுள்ள சின்னம் ஆகிய இரண்டும் இவற்றில் அப்படியே இருக்கின்றன. மூன்றாவது சின்னமாக ஸ்தூப வடிவக் கட்டடங்கள் உள்ளன; நான்காவது சின்னமாக அடர்ந்த மரமும், ஐந்தாவது சின்னமாகப் பட்டயத்தில் பொறிக்கப்பட்டுள்ள வேலிக்குள் திரிசூலமும் அமைந்திருக்கின்றன. இந் நாணயங்களின் பின்புறம் கோடுகளைக் கொண்டு தீட்டப்பட்ட மீன் சின்னம் உள்ளது. இந் நாணயங்கள் 16 முதல் 30 தானியமணி எடையுள்ளன; எனவே, இவை மௌரியப் பணத்தில் பாதி அளவாகத் தெரிகிறது. ஆனால் இவை எப்போது செய்யப்பட்டன, எவ்வளவு காலம் வரை புழக்கத்திலிருந்தன என்பது தெரியவில்லை.

மௌரியப் பேரரசு வீழ்ச்சியடைந்த பின், தக்காணம் முழுவதிலும், குறிப்பாக, பாண்டிய நாட்டிலும் ஆந்திராவிலும் அச்சால் அடித்த நாணயங்கள்தாம் புழங்கி வந்தன. இவை, மௌரியப் பேரரசு காலத்தில்கூடப் புழங்கியிருக்கலாம். பாண்டியநாட்டுச் செம்பு நாணயங்கள் நீள் சதுர வடிவத்தில் உள்ளன; இவற்றின் சின்னமாக யானை மட்டுமோ அல்லது யானையோடு வேறு சில சிறிய அடையாளங்களோ பொறிக்கப்பட்டிருக்கின்றன. இச் சின்னங்கள் வட இந்தியாவில் புழங்கி வந்த அச்சால் அடித்த நாணயங்களைப்போலுள்ளன. ஆந்திராவில் இவ்வகை நாணயங்கள் புதையல்களிலிருந்துதான் இதுவரை கிடைத்துள்ளன; எனவே, இவை அதிகமாக இல்லை. இவற்றில் முன்புறம் ஒரு சின்னமும், பின்புறம் வேறொரு சின்னமும்தான் உள்ளன. எனினும், ஒரு சில நாணயங்களில் ஓரிரு சின்னங்கள் சிறியதாய் உள்ளன. இச் சின்னங்களில் பல்வேறான மலைகள், வேலிக்குள் மரங்கள், காளை, சுவஸ்திகை, நந்தியின் பாதம் ஆகிய ஏதாவதொன்றுதான் பெரும்பாலும் உள்ளது.

மௌரியர்களின் ஆதிக்கம் ஒழிந்தவுடன், ஒருவேளை கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த அசோகருக்குப் பின், ஆங்காங்கேயிருந்த மகராஷ்டிரியர், அல்லது மஹாரதிகள் எனப்பட்ட ஆளுநர்கள் சிலர் தாமாகவே இராச்சியங்களை ஏற்படுத்திக் கொண்டு, சொந்தமாக நாணயங்களையும் வெளியிட்டனர். ஒருவேளை, மேலே குறிப்பிட்ட வாசகமில்லாத நாணயங்களில் சில

இவர்களால் வெளியிடப்பட்டவையாயிருக்கலாம். இருந்த போதி லும், மௌரிய ஆட்சிக்குப் பின்பு இவர்கள் வெளியிட்ட நாண யங்கள் அனைத்தும் வாசகம் பொறிக்கப்பட்டவைகளாகும். மேலும், மைசூர்–கனரா பகுதியில் ஒரு மஹாரதி குடும்பத்தினர் தோன்றினர்; இவர்கள் அனைவரும் **சதகனர்** என்ற பட்டப் பெயரைக் கொண்டிருந்ததால், இவர்களை சதகனர் என்றே அழைப்பர். இக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் மூவரைப்பற்றித் தான் அவர்களது நாணயங்களிலிருந்து அறிய வருகிறோம். இந் நாணயங்களில் **சதகன கலாலய மகாரதீச, சதகன சுதுகன்ஹ மகாரதீச, சதகன கனச மகாரதீபுதச** என்ற வாசகங்கள் பிரமி வடிவில் உள்ளன. இம் மூவரில் அரசை உருவாக்கியது யார் என்று இதுவரை தெரியவில்லை; எனினும், முதன் முதலில் தோன்றிய தென்னிந்திய மன்னர்கள் இவர்கள்தாம் எனக் கொள்ளலாம். இவர்களின் நாணயங்களில் முன்புறம் காளைமாடும் வாசகம் ஒன் றும் பொறிக்கப்பட்டுள்ளன; பின்புறம், வேலிக்குள் மரமும் ஆறு வளைவுகளுடைய மலையும் இருக்கிறது; ஒரு சிலவற்றில் மலையும் வேறு சில சிறிய சின்னங்களும் உள்ளன. இந் நாணயங் கள் அனைத்தும் ஈயத்தில் செய்யப்பட்டவை. நமது நாட்டிலிருந்த ஈய நாணயங்களில் இவைதாம் முந்தியவை. இம் மன்னர்கள் மற்ற உலோகங்களை விட்டுவிட்டு ஈயத்தை ஏன் பயன்படுத்தினர் என்று ஊகிக்க முடியவில்லை. எனினும், தென்னிந்திய நாணய வரலாற்றில் ஈயம்தான் முக்கிய உலோகமாகப் பயன்படுத்தப் பட்டது. பின்னர்தான் இப் பழக்கம் மாளவத்திற்கும் குஜராத்திற் கும் பரவியது; அதன் பின்னரே இந்தோ-பாக்டிரிய மன்னரான இரண்டாம் ஸ்திராதோ ஈயத்தைக் கலந்து வெள்ளி நாணயம் செய்யலானர்; அதற்குப் பிறகு சக க்ஷத்ரபரான ராஜுவுலா ஈயத்திலேயே நாணயங்கள் செய்து வெளியிட்டார். சதகன குடும்பத்தினருக்குப் பின், ஆனந்தர் என்றழைக்கப்பட்ட குடும் பத்தினர் பட்டத்திற்கு வந்தனர். இவர்களில் சுதுகுலானந்தர், மூலானந்தர் ஆகிய இருவரும்தாம் அவர்களது ஈய நாணயங்களி லிருந்து அறியப்படுவர். இந் நாணயங்களில், முன்புறம் ஒன்பது சிறிய வளைவுகளைக் கொண்ட சின்னம் பெரியதாய்ப் பொறிக்கப் பட்டுள்ளது. இவ் வளைவுகள், ஒன்றின் மீது ஒன்ருகவும் வரி

சைக்கு நான்காகவும் இரண்டு வரிசைகளிலும், அவற்றிற்கு மேல் பெரியதொரு வளைவுமாகவும் போடப்பட்டுள்ளன. பின்புறம், வேலிக்குள் மரம் ஒன்றும், வேறு சில சிறிய சின்னங்களும் காணப்படுகின்றன. நாணயங்களில் ராஜா **(ராஜ்ஞோ)** என்ற பட்டத்தைப் பொறித்த முதல் தென்னிந்திய மன்னர்கள் இவர்கள்தாம். இந் நாணயங்கள் கார்வார் பகுதியிலிருந்தும் சந்திரவல்லியிலுள்ள கிடங்குகளிலிருந்தும் எடுக்கப்பட்டுள்ளன.

கோல்ஹாபூரைச் சுற்றியுள்ள மகாராஷ்டிரப் பகுதியில் ஒரு மஹாரதி குடும்பத்தினர் தோன்றினர். இவர்களது மூதாதையரான மஹாரதீ குரர் எனப்படுபவர் வெளியிட்ட நாணயங்களில் **மஹாரதீச குரச** என்ற வாசகம்உள்ளது. இவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த விலிவாயகுரர், தாம் வெளியிட்ட நாணயங்களில் முதன் முதலில் **மஹாரதீ** என்ற குலப் பெயரைக் குறிக்கும் வகையில் **மஹாரதீச விலிவாயகுரச** என்ற வாசகத்தைப் பொறித்துள்ளார். பின்னர் **ராஜா** என்ற பட்டத்தையும், அதற்குப் பிறகு தமது பெயரோடு தன் தாய்வழிப் பெயரையும் சேர்த்து **ராஜ்ஞோ வாசிஷ்ட புதச விலிவாயகுரச** என்று பொறித்து நாணயங்களை வெளியிட்டிருக்கிறார். இந்திய நாணய வரலாற்றில் தாய்வழிப் பெயருடன் வெளிவந்த நாணயங்களில் இவைதாம் முதலாவதாகும். எனவே, குர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தாயைக் குடும்பத் தலைவியாகக் கொண்ட சமுதாய முறையை மேற்கொண்டனர் என்று தெரிகிறது. விலிவாயகுரருக்குப் பின், சிவாலகுரர் ஆட்சி செய்தார். இவரது நாணயங்களில் **ராஜ்ஞோ சிவாலகுர** என்றும் **ராஜ்ஞோ மாதரீபுதச சிவாலகுரச** என்றும் வாசகங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. சிவாலகுரருக்குப் பின், இவ் வமிசத்தின் கடைசி மன்னரான கௌதமபுத்திர விலிவாய குரர் ஆட்சிக்கு வந்தார். இவரும், தம் தாய்வழிப் பெயரைச் சேர்த்தே நாணயங்களை வெளியிட்டிருக்கிறார். இம் மன்னர்கள் முதல்முதலில் வெளியிட்ட நாணயங்கள் அனைத்தும் ஈயத்தினால் செய்யப்பட்டவை; எனினும், பின்னர் செம்பு அல்லது செம்பும் ஈயமும் கலந்த உலோகத்திலும் நாணயங்களை வெளியிடலாயினர். இந் நாணயங்கள் அனைத்திலும் முன்புறம் வாசகமும் வில்லும் அம்பும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. பின்புறம், மலை

அல்லது மரமும் மலையும் உள்ளன. குர வமிசத்தினரின் நாணயங்களில் ஒரு விசித்திரமான அம்சத்தை இங்குக் குறிப்பிடவேண்டும். அதாவது, முந்திய முத்திரைமேல் புதிய முத்திரை பொறிக்கப்பட்டிருக்கின்றன. சான்றாக, வாசிஷ்ட புத்ர விலிவாயகுரரின் நாணயங்களில், மாதரிபுத்திர சிவாலகுரரின் சின்னங்கள் முத்திரையிடப்பட்டுள்ளன; அதே போல், இவ்விருவரின் நாணயங்களிலும் கௌதமிபுத்திர விலிவாயகுரரின் சின்னம் மறுபடியும் முத்திரையிடப்பட்டுள்ளன. குர மன்னர்களின் நாணயங்களில் பாதியாகவும், மூன்றில் ஒரு பகுதியாகவும், நான்கில் ஒரு பகுதியாகவும் வெட்டப்பட்ட நாணயங்கள் பிரம்மபுரியில் (கோல்ஹாபூர்) ஏராளமாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஒருவேளை, குறைந்த மதிப்புடைய நாணயங்களாக இவை பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது.

ஆந்திராவின் மத்தியில் மற்றொரு மஹாரதி குடும்பத்தினரும் ஓர் இராச்சியத்தை உருவாக்கியதாகத் தெரிகிறது. ஆனால் இவர்களது நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்கள் அரைகுறையாக இருப்பதால் இவர்களைப்பற்றி ஒன்றும் அறிய முடியவில்லை. மேலும், விதர்ப்பப் பகுதியிலிருந்து **ராஜ்ஞோ திம்பா, ராஜ்ஞோ சேபகா** என்ற வாசகங்கள் கொண்ட நாணயங்களும் கிடைத்துள்ளன. எனவே, இப் பகுதியிலும் ஒரு முடியாட்சி இருந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது.

மஹாரதிகளுக்கும் இதர மன்னர்களுக்கும் பின்னர், **ஆந்திர, ஆந்திரஜாதி** அல்லது **ஆந்திர பிருத்ய** வம்சம் எனப் புராணத்தில் கூறப்படும் வமிசத்தினர் ஆட்சிக்கு வந்திருக்கின்றனர். இவ்வமிசத்தினரை இன்றைய வரலாற்று ஆசிரியர்கள் சாதவாகனர் அல்லது சதகர்ணியர் என்றுதான் அழைப்பர். ஆந்திர-சாதவாகன வமிசம் என்பது சிமுகர் என்பவரிடமிருந்து தோன்றியதாகவும், இவர் சுங்க இராச்சியத்தின் எஞ்சிய பகுதிகளையெல்லாம் ஒழித்துக்கட்டிவிட்டு, கண்வ வமிச அரசரான சூசர்மனையும் கொன்றுவிட்டார். 29 அல்லது 30 ஆந்திர மன்னர்கள் 455 அல்லது 460 ஆண்டுகள் ஆட்சி செய்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. ஆனால், இப் புராணக்கூற்று, வேறு பல ஆதாரங்களைக் கொண்டு நமது அறிஞர்கள் வகுத்துள்ள காலக்கணிப்பு முறைக்கு

மாறானதாக உள்ளது. எவ்வாறெனில், கி.மு. 232-ல், அசோக மன்னர் மறைந்தபோது, ஆந்திர சிமுகர் என்பவர் மௌரியப் பேரரசைக் கவிழ்க்க வேண்டுமென்றுதான் திட்டம் போட்டாரேயன்றி, புராணங்கள் கூறுவதுபோல் கண்வ வமிசத்தைச் சேர்ந்த மன்னர்களுக்கு எதிராக அல்ல என்று சில அறிஞர்கள் கருதுவர். இக் கருத்தின்படி பார்த்தால், சாதவாகனர்கள் கி.பி. மூன்றும் நூற்றுண்டுவரை ஆட்சி செய்திருக்க வேண்டும். ஆனுல், ஆந்திர – சாதவாகனர்களின் நாணயங்களைத் தனியாக ஆராய்ந்து பார்த்தால், முற்றிலும் வேருன உண்மை புலப்படுகிறது. அதாவது, புராணப் பட்டியலிலுள்ள முதல் 21 மன்னர்களைப்பற்றி நாணயங்களிலிருந்து ஒன்றுமே தெரியவில்லை. இந்த 21 மன்னர்களும், அல்லது இவர்களில் எவராகிலும் உண்மையில் இருந்திருப்பார்களேயானுல், இவர்கள் சுதந்திரமாக ஆட்சி செய்திருக்க முடியாது. வேண்டுமானுல், மேற்கிந்தியாவில் ஏதோ மூலை முடுக்குகளிலோ அல்லது தக்காணத்திலோ சுங்க, கண்வ மன்னர்களின்கீழ் ஏதோ சிற்றரசர்களாய் இருந்திருக்கலாம். மேலும், புராணப் பட்டியலிலுள்ள கடைசி ஒன்பது மன்னர்கள் மட்டுமே இருந்திருக்கின்றனர் என்பதை நாணய ஆய்விலிருந்து அறிய வருகிறேம். இந்த ஒன்பது பேரும் செல்வாக்குடன் ஆட்சி செய்திருக்கின்றனர் என்பதும் தெரிகிறது. இவர்களில் ஒவ்வொருவரும் சொந்தமாக நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர். நிற்க, இந்த ஒன்பது பேரைத் தவிர, வேறு சில ஆந்திர – சாதவாகனர்களும் ஆட்சி செய்திருக்கின்றனர் என்பதை இவர்களது நாணயங்கள் எடுத்துரைக்கின்றன; ஆனுல் புராணங்களில் இவர்களைப்பற்றிய குறிப்பே கிடையாது.

கி.மு. 27-ல் சுங்க வமிச, கண்வ வமிச அரசர்கள் வீழ்ச்சியடைந்த பின்னர்தான் விதிசப் பகுதியில் சாதவாகனர்கள் சுதந்திர மன்னர்களாகப் பிரபலமாகி, தமது ஆட்சியை மேற்கிந்தியாவிற்கும் தக்காணத்திற்கும் பரப்பினர் என்பதை நாணயங்களிலிருந்து அறிகிறேம். ஸ்ரீ சாத, ஸ்ரீ சதகர்ணி ஆகியவரின் பெயர்களுடன் முத்திரையிட்ட செம்பு நாணயங்களைப்பற்றி முன்னரே குறிப்பிட்டோம். இவ்விரு மன்னர்களைத்தான் புராணங்களில் ஸ்ரீ ஸ்வாதி, கௌதமிபுத்திர சதகர்ணி என்று

எழுதியுள்ளனர். இவர்கள் விதிசத்தை மட்டுமன்றி, மேற் கிந்தியாவிலும் தக்காணத்திலும் பெரும் பகுதியை ஆட்சி செய்த னர். தம் அரசின் பல்வேறு பகுதிகளுக்கென்று வெவ்வேறு கலைத் திறனும் அமைப்பும் கொண்ட செம்பு, ஈய நாணயங்களை வெளி யிட்டனர். சான்றாக, முத்திரையிட்ட நாணயங்களை விதிசப் பகுதிக்கும், அச்சால் அடித்த நாணயங்களை இதர பகுதிகளுக்கும் வெளியிட்டனர். பழங்கால நகரமான திரிபுரியைச் சுற்றி அவர்கள் வெளியிட்ட நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற் றில் முன்புறம் நின்றுகொண்டிருக்கும் மனிதனின் உருவமும், பின்புறம் நான்கு வகைச் சின்னங்களும் இருக்கின்றன. குஜராத்- மால்வா பகுதியில் வெளியிட்ட நாணயங்களில் சிங்கத்தின் உருவத்தைக் காணலாம். குஜராத்–சௌராட்டிரப் பகுதி நாண யங்களில் ஒரு புறம் யானையும், மறுபுறம் வேறு சில சிறிய சின்னங்களோடு பட்டயத்தில் பொறிக்கப்பட்ட மரமும் இருக் கின்றன. இந் நாணயங்கள் ஈயத்தில் அல்லது செம்பில் செய்யப் பட்டவை. மகாராஷ்டிரத்திலும் விதர்ப்பத்திலுமிருந்து ஏராள மான செம்பு நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு புறம், துதிக்கையைத் தூக்கிக்கொண்டிருக்கும் அல்லது தொங்கவிட்டிருக்கும் யானையும், மறுபுறம் உஜ்ஜயினிச் சின்ன மும் உள்ளன. இந் நாணயங்களை மேற்கூறிய இரு மன்னர்கள் மட்டுமன்றி, வேறு பத்துப் பேரும் வெளியிட்டிருக்கின்றனர். இந்தப் பத்துப் பேரில் ஸ்ரீ புலுமாயி, சிவ ஸ்ரீ புலுமாயி, ஸ்கந்த சதகர்ணி, ஸ்ரீ யஜ்ன சதகர்ணி, விஜய சதகர்ணி, புலஹமாவி ஆகிய ஆறு பேரும் ஸ்ரீ சதகர்ணிக்குப் பின் ஆட்சி செய்தவர் களென்று புராணப் பட்டியல் குறிப்பிடுகிறது. ஏனைய நான்கு பேரான சாக சதகர்ணி, ருத்திர சதகர்ணி, சாக கும்ப சதகர்ணி, கர்ண அல்லது கிருஷ்ண சதகர்ணி ஆகியோரைப் பற்றிப் புராணத்தில் குறிப்பே கிடையாது; ஆனால் இந்நால்வரைப் பற்றி இவர்களது நாணயங்களிலிருந்து அறிகிறோம். இவர்களது நாணயங்களிலிருந்து பிறிதொரு உண்மையும் புலனாகிறது; அதாவது, இவர்களில் 27ஆவது மன்னரான ஸ்ரீ யஜ்ன சதகர் ணிக்குப் பின், இவ் வமிசத்தினர் இரு பிரிவினராக ஆகியிருக் கின்றனர். ஒரு பிரிவினர் மகாராஷ்டிரத்திலும் மற்றப் பிரிவினர்

விதர்ப்பத்திலும் ஆட்சி செய்தனர். ஸ்ரீ யஜ்ன சதகர்ணிக்குப் பின் மகாராஷ்டிரத்தை ருத்திர சதகர்ணியும் விதர்ப்பத்தை ஐந்து பேரும் முறையே ஆண்டனர். இந்த ஐந்து பேரில் மூவரைப் பற்றித்தான் புராணம் குறிப்பிடுகிறது. ஏனைய இருவரான கும்ப சதகர்ணி, கர்ண அல்லது கிருஷ்ண சதகர்ணி ஆகியோரைப்பற்றிப் புராணக்குறிப்பே கிடையாது. ஒருவேளை, இவ்விருவரும் புராணப் பட்டியலிலுள்ள கடைசி மன்னரான புலஹுமாவிக்குப் பின் ஆட்சிக்கு வந்திருக்கலாம்.

தக்காணத்தில் ஸ்ரீ சதி, ஸ்ரீ சதகர்ணி, ஸ்ரீ புலமாவி ஆகியோர் வெளியிட்ட ஈய நாணயங்கள் ஹைதராபாத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் முன்புறம் நன்றாகப் பொறிக்கப் பட்ட மூன்று வளைவுகள் கொண்ட மலையும், பின்புறம் உஜ்ஜயினிச் சின்னமும் உள்ளன. மகாராஷ்டிரத்திலும் தக்காணத்திலும் ஈய நாணயங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவற்றை மூன்று அல்லது நான்கு மன்னர்கள் வெளியிட்டதாகத் தெரிகிறது. இந் நாணயங்களில் குர வமிசத்தினரைப் போல் தாய்வழிப் பெயர்களையும் பொறித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந் நாணயங்கள் பல வகைப்படும்; எனினும், இவற்றில் முன் புறம் மூன்று அல்லது ஆறு வளைவுகள் கொண்ட மலை, குதிரை, சிங்கம், கப்பல், சக்கரம் ஆகியவற்றில் ஏதாவதொன்றுதான் பெரும்பாலும் உள்ளன. பின்புறம் உஜ்ஜயினிச் சின்னம்தான் இருக்கிறது.

சாதவாகன அல்லது **சதவாகன** என்று பொறிக்கப்பட்ட சில செம்பு, ஈய நாணயங்கள் மகாராஷ்டிரத்திலும் தக்காணத்திலும் புழங்கியிருப்பதாகத் தெரிகிறது; ஆனால் இப் பெயரே புராணத்தில் கிடையாது. எனினும், நாணயப் பட்டியலில் இப் பெயர்தான் முதலிடம் பெறுகிறது. சாதவாகனக் குடும்பம் ஒன்றைப்பற்றி நாசிக் பொறிப்புக்களில் காணலாம்; மேலும், நானிகாட் என்னுமிடத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள புடைச் சிலையில் **ராயோ சிமுக சாதவாகன** என்று பொறிக்கப்பட்டுள்ளது. இதனால், புராணத்திலுள்ள ஆந்திர குடும்பத்தினரை வரலாற்று ஆசிரியர்கள் சாதவாகனர் என்றுதான் அழைக்கின்றனர். இக் குடும்பத்தினர் சாதவாகனர் எனப்பட்ட மன்னனின் வழி வந்த

வர்களாகத் தெரிகிறது. ஆனால், சதகர்ணி வெளியிட்ட நாண யங்கள், ஒருபுறம் வட இந்தியாவிலும் கிழக்குத் தக்காணத் திலும் ஸ்ரீ சதி வெளியிட்ட வெவ்வேறு நாணயங்களோடும், மறு புறம், மகாராஷ்டிரத்திலும் மேற்குத் தக்காணத்திலும் சாதவாகனர்களின் நாணயங்களோடும் சேர்ந்து காணப்படுவதைப் பார்க்கும்போது, ஸ்ரீ சதியும் சாதவாகனரும் ஒரே காலத்தில் வெவ்வேறு பகுதிகளை ஆண்டிருக்க வேண்டுமெனத் தோன்று கிறது. ஆனால், இவ்விருவரும் ஒரே குடும்பத்தினரல்லர். சாதவாகனரை ஸ்ரீ சதகர்ணி வென்று ஆட்சிக்கு வந்திருக்கிறார். எனவே, ஸ்ரீ சதகர்ணிக்கு முன்பு ஆண்டவர் சாதவாகனர்தான் என்றும், ஸ்ரீ சதகர்ணிக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர் ஸ்ரீ சதி தான் என்றும் எண்பித்தால்தான் சாதவாகனர் ஆந்திர குடும் பத்தைச் சேர்ந்தவர் என்று நம்ப முடியும். ஆனால், அவ்வாறு எண்பிக்க இயலாது,

வாசிஷ்ட புத்ர புலுமாவி, வாசிஷ்ட புத்ர சதகர்ணி, கௌதமிபுத்திர ஸ்ரீ யஜ்ன சதகர்ணி ஆகியோர் வெறும் செம்பு ஈய நாணயங்களை மட்டுமன்றி, சில வெள்ளி நாணயங்களையும் வெளியிட்டுள்ளனர். இவ் வெள்ளி நாணயங்களில் முன்புறம், இவர்களின் பெயர்கள் பிரமியிலும் பிராகிருதத்திலும் பொறிக்கப் பட்டுள்ளன ; அதோடு, இவர்களின் தலைகள் மட்டும் தத்ரூப மாக கிரேக்க மரபுப்படி தீட்டப்பட்டுள்ளன. பின்புறம் உஜ்ஜயினிச் சின்னமும் ஆறு வளைவுகள் கொண்ட மலையும் உள்ளன; அதோடு, முன்புறமுள்ள இவர்களின் பெயர்கள் தென்னிந்திய மொழியொன்றில் (ஒருவேளை தமிழில்) மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறாக, இந் நாணயங்களில் இரண்டு இந்திய மொழிகள் உள்ளன. இவ் வமிசத்தினரில் கௌதமி புத்திர சதகர்ணிதான் மிகப் பெரிய இராச்சியத்தை ஆண்டு பேரும் புகழும் பெற்றவர். எனினும், இவர் புதிதாக வெள்ளி நாணயம் எதையும் வெளியிடவில்லை. அதற்குப் பதிலாக, தன் பகைவரான மேற்கத்திய க்ஷத்ரப நாகபாணர் வெளியிட்ட வெள்ளி நாணயங்களிலேயே தனது மலைச்சின்னத்தை முத்திரை யிட்டு, **ராஜ்ஞோ கௌதமிபுதச ஸ்ரீ சதகனிச** என்ற வாசகத்தை ஒரு புறமும், உஜ்ஜயினிச் சின்னத்தை மறுபுறமும் பொறித்து

வெளியிட்டிருக்கிறார்.

கிருத்துவ சகாப்தம் தொடங்கியதிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டுவரை இந்தியப் பொருள்களுக்கு மேற்கத்திய நாடுகளில் அதிகக் கிராக்கி இருந்தது; எனவே, தக்காணத்தில் ஆந்திரர் ஆட்சி நடைபெற்ற காலத்தில் இந்தியாவில் பொருள்களை வாங்குவதற்கென்று வந்த ரோமானிய வணிகர்கள் ஏராளமான தங்க, வெள்ளி நாணயங்களைக் கொண்டு வந்தனர். இதனால், தென்னிந்தியாவில் பல இடங்களில் இந் நாணயங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்த ரோமானிய நாணயங்களை மிக எளிய முறையில் இந்திய நாணயங்களாக மாற்றியிருக்கின்றனர். எவ்வாறெனில், ரோமானிய மன்னர்களின் உருவத்தைச் சிற்றுளியால் செதுக்கி எடுத்துவிட்டு, அதில் முத்திரையிட்ட நாணயங்களிலுள்ள சின்னத்தைப் பொறித்து இந்திய நாணயங்களாக மாற்றியிருக்கின்றனர். அதே சமயம், போலி ரோமானிய நாணயங்களாகப் புழக்கத்திலிருந்த சில சிறிய செம்பு நாணயங்களும் மதுரையின் சுற்றுப் புறங்களிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவை மதுரையில் அச்சடிக்கப்பட்ட நாணயங்களைப் போலவே இருப்பினும், ரோமானிய அம்சங்கள் கொண்டவை. இவற்றில் ஒரு புறம், ரோமானியப் பேரரசரின் தலை உருவம் தேய்ந்த நிலையில் உள்ளது; அதோடு, வாசகம் இருந்திருப்பது போலவும் தெரிகிறது. மறுபுறம், ஈட்டியைப் பிடித்துக்கொண்டு நிற்கும் மூன்று ரோமானிய வீரர்களின் சின்னம் உள்ளது. ஒரு வேளை, ரோம நாணயங்களைப் போல தோன்றுகின்ற இந்த நாணயங்களை இங்கு வந்து குடியேறிய ரோமானியர்களே தமது சொந்த உபயோகத்திற்காக அச்சிட்டிருக்கலாம்.

கி.பி. மூன்றாவது நூற்றாண்டில் தக்காணத்தில் ஆட்சி செய்த ஆந்திர—சாதவாகனர்களுக்குப் பின்னர், அநேக புதிய வமிசத்தினர் ஆட்சிக்கு வந்ததாகத் தெரிகிறது. இவர்களுக்குப் பின் இக்ஷ்வாகு வமிசத்தினர் கிழக்குத் தக்காணத்தை ஆண்டிருக்கின்றனர். இவர்கள் ஆந்திர நாணயங்களைப் பின்பற்றி, முன்புறம் யானையும், பின்புறம் உஜ்ஜயினிச் சின்னமும் பொறிக்கப்பட்ட நாணயங்களை வெளியிட்டனர். மேற்குத் தக்காணத்தை

பல்வேறு வமிசத்தினர் ஆண்டதாக இப் பகுதியிலிருந்து கிடைத்துள்ள நாணயங்களிலிருந்து அறிய வருகிறோம். ஆனால், இவ் வமிசத்தினர்களைப்பற்றிய விவரம் ஒன்றும் கிடைக்கவில்லை. எனினும், சில நாணயங்களில் முன்புறம் சுவஸ்திகைச் சின்னமும், **மகா சேனபதி பரதாஜிபுதச சகமன சூடுக** அல்லது **மகா காமிகச மாதரி புதச** என்ற வாசகமும், பின்புறம், உஜ்ஜயினிச் சின்னமும் உள்ளன. முன்புறமுள்ள வாசகத்தில் முதல் பகுதியை மட்டும் கொண்ட சில நாணயங்களில், பின்புறம் உஜ்ஜயினிச் சின்னத்திற்குப் பதிலாக அம்பும், மின்னலின் கருக்கூறு எனக் கருதப்படும் கோலும் பொறிக்கப்பட்டுள்ளன. இவை, மேற்கத்திய க்ஷத்ரபர்களான பூமகர், நாகபாணர் ஆகியோரின் நாணயங்களை நினைவுபடுத்துகின்றன. மற்றும், **மகாகாமிக பகச சிபசேபகச** என்றும் **சிஹ தலவரச** என்றும் பொறிக்கப்பட்ட வேறு சில நாணயங்களும் உள்ளன. இவற்றில் முன்புறம் குதிரையும், பின்புறம் மூன்று வளைவுகளுள்ள மலையும் சின்னங்களாக அமைந்திருக்கின்றன. இந் நாணயங்களிலிருந்து, சாதவாகனரின் மறைவுக்குப் பின், அவர்களின் அதிகாரிகளாகப் பணியாற்றிய சிலர் தாமாகவே இராச்சியத்தை ஏற்படுத்திக் கொண்டதாக அறிகிறோம்.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின்னர், தக்காணத்தின் நாணய வரலாறு, சொல்லப் போனால் தென்னிந்திய நாணய வரலாறே இருளடர்ந்து உள்ளது. கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரை சாலங்காயன வமிசத்தைச் சேர்ந்த சந்திரவர்மன் வெளியிட்ட நாணயங்களும், வாசகம் ஏதுமின்றி விஷ்ணுகுண்டினர் வெளியிட்ட நாணயங்களும், கீழைச் சாளுக்கிய வமிசத்தினரான விஷம்சித்தி வெளியிட்ட நாணயங்களும்தான் கிடைத்துள்ளன. எனவே, கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின், சுமார் மூன்று அல்லது நான்கு நூற்றாண்டுக் காலம் வரை தென்னிந்திய நாணய வரலாறே இருண்ட நிலையில் உள்ளது.

ஆந்திர–சாதவாகன மன்னர்கள் காலத்திலேயே, மேற்கத்திய க்ஷத்ரபர்கள் எனப்பட்ட சக வமிசத்தினர் மேற்கிந்தியாவில் பேரும் புகழும் பெற்றனர். இவர்களில் ஷகராதர்கள், கார்தமகர்கள் என இரு பிரிவினர் இருந்தனர். ஷகராதர்களில் இரு

மன்னர்களும், கார்தமகர்களில் 27 மன்னர்களுக்கு மேலும் இருந்ததாகத் தெரிகிறது. இவர்கள் குஜராத், சௌராட்டிரம், மாளவம் ஆகிய பகுதிகளில் கி.பி. 310ஆம் ஆண்டு வரை, அதாவது, இரண்டரை நூற்றுண்டுகள் ஆட்சி புரிந்தனர். ஷகராத இனத்தில் முதன் மன்னனுக பூமகர் விளங்கினுர். இவர் வெளியிட்ட ஒரு சில செம்பு நாணயங்கள் மட்டும்தான் குஜராத், சௌராட்டிரம், மாளவம் ஆகியவற்றின் கடற்கரைப் பகுதிகளிலிருந்து கிடைத்துள்ளன. இவற்றில் முன்புறம் அம்பு, மின்னலின் கருக்கூருகக் கருதப்படும் கோல், சக்கரப்படை ஆகியவையும், பின்புறம், சக்கரத்திற்கு மேல் பொறிக்கப்பட்ட சிங்கத்தின் சின்னமும் உள்ளன. அதோடு, அரசரின் பெயர் பிரமி வடிவத்தைக் கொண்ட சமஸ்கிருதத்திலும், கரோஷ்தி வடிவத்தைக் கொண்ட பிராகிருதத்திலும் இரண்டு புறமும் பொறிக்கப்பட்டுள்ளன. பூமகரின் நாணயங்களில் முன்புறமுள்ள சின்னத்தையும் வாசகத்தையும், அவருக்குப் பின் ஆட்சி செய்த நாகபாணர், தமது வெள்ளி நாணயங்களில் பின்புறம் அப்படியே பொறித்துள்ளார். இவரது நாணயங்களில் முன்புறம் இவரின் மார்பளவு வரையுள்ள உருவம் உள்ளது. இது, கி.பி. முதல் நூற்றுண்டின் ரோமானியப் பேரரசு நாணயங்களில் உள்ளதைப்போல் இருக்கிறது. இவரது நாணயங்களில் மும்மொழி வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. அதாவது, முன்புறம் பிராகிருத வாசகத்தை கிரேக்க–ரோமானிய மொழிகளையொத்த கலப்பட எழுத்துக்களிலும், பின்புறம், பிரமியிலும் கரோஷ்தியிலும் பொறித்துள்ளார். இவர் ஒரு சில செம்பு நாணயங்களை மட்டும் வெளியிட்டதாகத் தெரிகிறது.

கார்தமக க்ஷத்ரபர்கள் வெளியிட்ட நாணயங்கள் பெரும்பாலும் வெள்ளியினுலும், சில சமயம் செம்பினுலும் செய்யப்பட்டவை. இவ்வினத்தைச் சேர்ந்த ஸ்வாமி மூன்ரும் ருத்திர சேனன் ஒருசில ஈய நாணயங்களை வெளியிட்டதாகத் தெரிகிறது. இவ்வினத்தவரில் முதன்முதலில் ஆட்சி செய்த சஷ்டனுவின் நாணயங்களில் முன்புறம் இவரது உருவம் மார்பளவுவரைபோடப்பட்டுள்ளது ; அதோடு, கிரேக்க-ரோமானிய வாசகங்கள் இருந்ததாகவும் தோன்றுகிறது ; பின்னர், இவ் வாசகங்களுக்குப்

பதிலாக ஆபரணம் போன்ற சின்னம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இவரது நாணயங்களின் பின்புறமுள்ள சின்னங்களைக்கொண்டு இவற்றை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒரு வகையில் சந்திரனும் அதற்கருகில் ஒரு நட்சத்திரமும் உள்ளன; பிறிதொரு வகையில் மூன்று வளைவுகள் கொண்ட மலையும், அதற்கு மேல், இரண்டு வளைவுகளுக்கிடையே சந்திரனும் போடப்பட்டுள்ளது. இச் சின்னத்தைச் சுற்றி மேற்புறம் பிரமி வாசகம் பொறிக்கப் பட்டுள்ளது. இவற்றில் இரண்டாவது வகைச் சின்னத்தை இவ் வினத்தவர் அனைவருமே பயன்படுத்தியுள்ளனர். இம்மன்னர்கள் வெளியிட்ட வெள்ளி நாணயங்களில் முக்கியமானதோர் அம்சம் உண்டு. அதாவது, இவற்றில் மன்னர்களின் பெயர்களும் பட்டப் பெயர்களுமட்டுமன்றி, இவர்களுக்கு முன் ஆட்சி செய்த இவர்களின் தந்தையர் அல்லது உறவினர்களின் பெயர்களும் விவரமாக பிரமியில் பொறிக்கப்பட்டுள்ளன. முதலாம் ருத்திரசிம்மனின் ஆட்சியின்போது, இந் நாணயங்களின் முன் புறத்தில் மன்னனின் எந்த வருஷத்தில் நாணயம் அச்சடிக்கப் பட்டது என்று பொறிக்கும் பழக்கம் புகுத்தப்பட்டது. சக வருடம் மன்னனின் தலைக்குப் பின்னால் போடப்பட்டிருக்கிறது. இந் நாணயங்களின் தோற்றமும் எடையும் இந்தோ-கிரேக்க வெள்ளி நாணயங்களை அல்லது ரோமானிய வெள்ளி நாணயங்களை ஒத்து இருக்கின்றன. இம் மன்னர்கள் வெளியிட்ட செம்பு, ஈய நாணயங்கள் மிகச் சொற்பம்தான். இவற்றில், வெள்ளி நாண யங்களிலுள்ள மன்னனின் மார்பளவு உருவத்திற்குப் பதிலாக, பிராணியின் உருவம் போடப்பட்டுள்ளது. சான்ருக, சஷ்டனு நாணயங்களில் குதிரை உள்ளது; ஜெயதாமன், ஜீவதாமன், முதலாம் ருத்திரசிம்மன் ஆகியோரின் நாணயங்களில் காளை மாடு இருக்கிறது. ஒரு சிலவற்றில் யானையின் உருவம் உண்டு; ஆனால், இந்நாணயங்களை வெளியிட்டவரின் பெயரைக் காணோம். எனவே, இவற்றிலுள்ள வருடத்தைக் கொண்டுதான் யார் வெளியிட்ட தெனக் கூறமுடியும்.

மேற்கத்திய க்ஷத்ரபரின் நாணயங்கள் தோண்டியெடுக்கப் பட்ட புதையல்களில் மகாக்ஷத்ரப ஈஸ்வரதத்தர் என்ற பெயரோடு, முதல் வருடம், இரண்டாம் வருடம் எனப்

பொறிக்கப்பட்ட சில நாணயங்களும் கிடைத்துள்ளன. இவை க்ஷத்ரப நாணயங்களைப் போலவே இருக்கின்றன. இவர் வன்முறையில் ஆட்சியைக் கைப்பற்றியிருக்க வேண்டுமெனத் தெரிகிறது.

போதி அல்லது **ஸ்ரீ போதி, சிவபோதி, சந்திரபோதி, வீரபோதிதத்தர்** ஆகியோரின் பெயர்களைக் கொண்ட ஒரு சில ஈய நாணயங்களும் கிடைத்துள்ளன. இவற்றில் மூன்று வளைவுகள் கொண்ட மலை உள்ளது. இவை 4 முதல் 8 தானியமணி எடையுள்ளன. இந் நாணயங்கள் எங்கு உருவாகினவென்று தெரியவில்லை. இருப்பினும், கி.பி. மூன்றும் அல்லது நான்காம் நூற்றாண்டில் சாதவாகனர்களுக்குப் பின் அல்லது மேற்கத்திய க்ஷத்ரபர்களுக்குப் பின் வந்தோர் இவற்றை வெளியிட்டிருக்கக் கூடும்.

அதிகாரம் 7

குப்தப் பேரரசர்களின் நாணயங்கள்

கி.பி. நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிழக்கு உத்தரப் பிரதேசம் அல்லது பீஹாரின் ஏதோ பகுதியிலிருந்த ஒரு சிறிய நாட்டில் குப்தப் பேரரசர்கள் தோன்றினர். இவர்கள் நிறுவிய பேரரசு இருநூறு ஆண்டுகளுக்குமேல் பேரும் புகழும் பெற்று விளங்கியது. குப்த வமிசத்தைத் தோற்றுவித்தவர் ஸ்ரீ குப்தர் எனக் கூறப்படுகிறது. இவரது பேரனை சந்திர குப்தர் (கி.பி. 319–350) தமது பேரரசின் புகழை எத்திசையிலும் பரப்பி, மிகுந்த சீரும் சிறப்பும் பெற்றார். இவருக்குப் பின் அரியணை ஏறிய இவரது மகன் சமுத்திர குப்தர் (கி.பி. 350–370) தமது பேரரசைப் பரப்புவதற்காகப் பல மன்னர்களோடு போரிட்டு வெற்றி வாகை சூடினர்; அதோடு இவரது பேரரசிற்கப்பால் வடமேற்குப் பகுதியிலும், தென்கிழக்குப் பகுதியிலும் ஆட்சி புரிந்து வந்த மன்னர்களிடமும் இவரது செல்வாக்கு ஓங்கியிருந்தது. இவர் **அசுவமேத யாகம்** (பரி வேள்வி) ஒன்றைப் புரிந்ததாகவும் வரலாறு கூறுகிறது. இவரது மகன் இரண்டாம் சந்திர குப்தர் (கி.பி. 376–414) குப்தப் பேரரசை மேற்கே காஷ்மீர் வரையிலும், கிழக்கே ஒரிசா வரையிலும் விரிவுபடுத்தினர். இவரது மகன், முதலாம் குமார குப்தர் (கி.பி. 415–450) இரண்டு முறை **அசுவமேத யாகம்** புரிந்து, மத்திய இந்தியா, குஜராத், சௌராட்டிரம் ஆகியவற்றின் பெரும் பகுதிகளைத் தம் பேரரசோடு இணைத்தார். இவரது ஆட்சியின் கடைசி காலத்தில், இந்தியாவின்மீது படையெடுத்து வந்த ஹூணர்களால் பல தடங்கல்கள் ஏற்பட்டு, இவரது பேரும் புகழும் மங்கத் தொடங்கின. இவருக்குப் பின் அரியணை ஏறிய ஸ்கந்த குப்தர் (கி.பி. 455–467) ஹூணர்களின் தாக்குதல்களிலிருந்து தமது பேரரசைக் காப்பாற்றுவதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டியிருந்தது; இறுதியில் அவர்களை வென்று வெற்றி மாலை

சூடினர். இவருக்குப் பின், குப்தப் பேரரசு வீழ்ச்சியடையத் தொடங்கியது. புத்த குப்தரின் ஆட்சியின்போது (கி.பி. 496–500) குப்தப் பேரரசு தன் மேற்குப் பகுதியினை இழந்து விட்டது. இவருக்குப் பின், பீஹார், வங்காளம், ஒரிசாவின் சில பகுதிகள் மட்டுமே குப்தப் பேரரசில் இருந்தன. கடைசியில், கி.பி. 543-ல் இப் பேரரசே மங்கி மறைந்துவிட்டது. அவ்வாறு மங்கியிருந்த காலத்தின்போது, மூன்ரும் சந்திர குப்தர், பிரகா சாதித்தியர், வைண்ய குப்தர், நரசிம்ம குப்தர், மூன்ரும் குமார குப்தர், விஷ்ணு குப்தர் ஆகியவர்கள் ஆட்சி செய்து வந்தனர்.

சீரும், செல்வமும், சிறப்பும் ஒருங்கே பெற்ற குப்தப் பேரரசர்கள் பெரும்பாலும் தங்க நாணயங்களையே வெளியிட்டனர். இவர்கள் வெளியிட்ட ஏராளமான தங்க நாணயங்களைக் கண்ட புலவர் ஒருவர் அதைப் "பொன்மாரி" யென்று நயமாகப் புகழ்ந்து பாடினராம். குப்தர்களின் பொன் நாணயங்கள், முன்புறம், பலி பீடத்தில் நின்றுகொண்டுள்ள மன்னரின் உருவமும், பின்புறம், உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்துள்ள அர்டோக்ஷோவின் உருவமும் உள்ள பிந்திய குஷான நாணயங்களை பின்பற்றியது. எனினும், குப்தரின் நாணயங்கள் குஷான நாணயங்களைவிடத் தரமானவை. அதோடு, தனிச் சிறப்பான அம்சம் உள்ளவை. முந்தைய குப்தரின் நாணயங்களிலெல்லாம் அரசன் நிற்கின்ற தோற்றமும் கம்பீரமும் குஷான நாணயங்களிலுள்ளதைப் போன்றே உள்ளன. சான்றுக, குஷான நாணயங்களிலுள்ள அதே நீண்ட மேலங்கியையும் கால் சட்டையும் அணிந்து, நீண்ட தொப்பி மட்டுமில்லாமல் அரசரின் உருவம் உள்ளது. ஆனால் பிந்திய குப்த நாணயங்களில் கால் சட்டைக்குப் பதிலாக, இந்திய மரபுப்படி வேட்டியணிந்து அரசர் தோன்றுகிருர்; மேலங்கியின் அமைப்புக்கூட மாறியிருக்கிறது; ஒரு சில சமயங்களில் ஆடை ஏதுமின்றியே அரசனின் உருவம் உள்ளது. மேலும், குஷான மன்னரின் இடக் கையிலிருந்த திரிசூலத்திற்குப் பதிலாக, குப்த மன்னரின் கையில் ஈட்டியோ, விருதுக் கொடியோ, போர்க்கோடரியோ, வில்லோ அல்லது வாளோதான் காணப்படுகிறது. அதோடு, குஷான நாணயங்களில் வலப்புறமுள்ள திரி

சூலத்திற்குப் பதிலாக, குப்த வமிசத்தினரின் பரம்பரைச் சின்னமான கருடன் உருவமுள்ள கொடி (கருடத்துவஜம்) காணப் படுகிறது. இவ்வளவு மாறுதல்கள் இருந்தபோதிலும், குஷானர் களைப் போலவே குப்த மன்னர்களும் தம் நாணயங்களில் சீன மரபுப்படி மேலிருந்து கீழாகத்தான் தம் பெயரைப் பொறித் துள்ளனர். அரசனின் உருவத்திற்குமேல் நாணயத்தின் ஓரமாக வட்டமாக பிராமியில் வாசகங்களைப் பொறித்துள்ளனர்.

முந்தைய குப்த நாணயங்களில் பின்புறம், அர்டோக்ஷோ, தன் இடக் கையில் செல்வத்தின் (கொம்பு) சின்னத்தையும் கயிற்றையும் பிடித்துக்கொண்டு உயர்ந்த சிம்மாசனத்தில் அமர்ந் திருக்கும் உருவம்தான் உள்ளது; ஆனல், நாளடைவில் அர்டோக்ஷோவிற்குப் பதிலாக, அவளுக்கு இணையான இந்தியத் தெய்வமான லட்சுமியின் உருவத்தைப் பொறித்துள்ளனர். முதலில், கையில் தாமரைப் பூவை வைத்துக்கொண்டு சிம் மாசனத்தில் அமர்ந்திருப்பதுபோல் அவளை வடித்தனர்; பின்னர் தான் தாமரை மலரின்மீது நிற்பது போன்ற லட்சுமியின் உருவத்தைப் பொறித்தனர். குஷான நாணயங்களில் தெய்வத்தின் பெயர் பொறிக்கப்பட்டன; ஆனல் குப்த நாணயங் களிலோ அவற்றை வெளியிட்ட மன்னரின் பட்டப்பெயர்தான் பொறிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக, குப்த நாணயங்கள் அனைத்திலும் மன்னர் தம்இடக் கையில் வில்லைப் பிடித்துக்கொண்டிருக்கும் சின்னம் உள்ளது. இச் சின்னத்தை குப்த வமிசத்தினர் அனைவருமே பயன்படுத்தி யிருக்கின்றனர். அதோடு, மன்னர் தம் வலக் கையில் அம்பைப் பிடித்துக் கொண்டிருக்கும் சின்னமும் இருக்கின்றது. இவ்வகைச் சின்னம் கொண்ட நாணயங்களை இரண்டாம் சந்திர குப்தரும் முதலாம் குமார குப்தரும் வெளியிட்டிருக்கின்றனர்; எனினும் இவ்விருவரின் நாணயங்களுக்குமிடையே பல வேறு பாடுகளைக் காணலாம். அதாவது, மன்னன் இடது சாயலாக நிற்கிருரா அல்லது வலது சாயலாக நிற்கிருரா, ஆடை அணிந் திருக்கிருரா அல்லது ஆடையின்றிக் காணப்படுகிருரா என்பது போன்ற அடிப்படையில் பல வகையான வேறுபாடுகள் உள்ளன. ஆனல், சமுத்திர குப்தரின் நாணயங்களில் அவர் ஈட்டியையோ

கொடியையோ பிடித்துக்கொண்டிருப்பது போன்ற உருவமே உள்ளது. இவ்வகையான நாணயங்களை இரண்டாம் சந்திர குப்தரும் வெளியிட்டிருக்கிறார். சமுத்திர குப்தரின் காலத்தில் கச்ச குப்தர் என்றொருவரும் இருந்திருக்கிறார்; ஒருவேளை, இவர் அரியணைக்கு உரிமை கொண்டாடியிருக்கலாம், அல்லது ஒரு சில நாட்கள் ஆட்சி செய்திருக்கலாம். இவரது நாணயங்களில் ஓரத்தில் சக்கரம் கொண்ட கொடியைப் (சக்கரத்துவஜம்) பிடித்துக்கொண்டு நிற்பதுபோல் மன்னனின் உருவம் உள்ளது. முதலாம் குமார குப்தர் வெளியிட்ட ஒரு வகை நாணயங்களில் கொடிக்குப் பதிலாக வாளை ஏந்திக்கொண்டிருக்கும் மன்னரின் உருவம் இருக்கிறது, சமுத்திர குப்தர் வெளியிட்ட வேறொரு வகை நாணயங்களையும் இவ்வகையில் சேர்க்கலாம்; இவற்றில் சமுத்திர குப்தர் போர்க் கோடரியை வைத்துக்கொண்டு, தம் வலக் கையை இடுப்பில் வைத்துக்கொண்டுள்ளார்; அதோடு, இவருக்கு வலப்புறம் குள்ளன் ஒருவன் நிற்பதையும் காணலாம்.

மேற்கூறிய வகை நாணயங்களைத் தவிர, மேலும் பதினறு வகை நாணயங்களையும் குப்த நாணயச் சாலைகள் வெளியிட்டுள்ளன. இவையனைத்தும் கலைத்திறன் மட்டுமன்றி, தனிச்சிறப்பும் கொண்டவை. இவற்றில், ஒரு வகை நாணயங்களில் அரசரின் உருவத்தோடு ராணியின் உருவமும் பொறிக்கப் பட்டுள்ளது. இவ்வகை நாணயங்களை முதலாம் சந்திர குப்தர், முதலாம் குமார குப்தர், ஸ்கந்த குப்தர் ஆகியோர் வெளியிட்டிருக்கின்றனர். இம் மூவரில் முதலாம் சந்திர குப்தர் இவ்வகை நாணயங்களை மட்டுமே வெளியிட்டதாகத் தெரிகிறது. இந் நாணயங்கள் எவ்வளவு தூரம் தனிச்சிறப்பு மிக்கவையெனில், இவற்றை முதன்முதலில் ஆட்சி செய்த மன்னர்தான் வெளியிட்டாரா என்று சில அறிஞர்கள் சந்தேகப்படுகின்றனர். அதோடு, சமுத்திர குப்தர்தான், தனது பெற்றோரின் நினைவாக, இவற்றை வெளியிட்டிருக்க வேண்டுமென்றும் கருதுகின்றனர். ஏனெனில், இவற்றில் முதலாம் சந்திர குப்தரின் பெயர்மட்டுமன்றி, அவரது ராணியான குமாரதேவியின் பெயரும் உள்ளது. ஆனால், முதலாம் குமார குப்தரோ, ஸ்கந்த குப்தரோ வெளியிட்ட நாணயங்களில் அவரவர்களின்

பெயர்கள்தான் உள்ளனவே யன்றி, ராணியின் பெயர்கள் இல்லை.

சமுத்திர குப்தரும் முதலாம் குமார குப்தரும் மற்ெறாரு வகை நாணயங்களை வெளியிட்டுள்ளனர்; இவற்றில் மன்னர் மஞ்சத்தில் அமர்ந்துகொண்டு வீணை வாசிப்பதுபோல் சித்திரிக்கப் பட்டுள்ளார். இது, இம் மன்னர்களின் இசைப்புலமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அதோடு, இவ்விருமன்னர் களும் இந்தியப் பாணியில் உடையணிந்து, மஞ்சத்தில் அமர்ந்து, கால்மேல் கால் வைத்து ஒய்யாரமாக யாழை மீட்டும் காட்சியும் அற்புதமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, வியக்கத் தக்க வகையில் மன்னரின் உருவத்தைச் சிரத்தையுடனும், பிசகின்றியும் அருமையாகத் தீட்டியுள்ளதைப் பார்க்கும்போது, இவை குப்தர்களின் கலைத்திறனுக்குச் சான்று பகர்வதுபோல் உள்ளன; மேலும், இவற்றைச் செதுக்கிய பொற்கொல்லர்கள் தங்கள் திறமை அனைத்தையும் ஒன்று சேர்த்துக் காட்டி யுள்ளனர். இவ்வகை நாணயங்களைப் போலவே இரண்டாம் சந்திர குப்தரும் ஒரு சில நாணயங்களை வெளியிட்டுள்ளார்; இவற்றில், மஞ்சத்தில் அமர்ந்துள்ள மன்னர் தம் கையில் ஏதோ ஒன்றைப் பிடித்துக்கொண்டிருப்பதுபோல் தெரிகிறது.

குப்தப் பேரரசர்கள் வேட்டையாடுவதிலும், குதிரைச் சவாரி செய்வதிலும் ஆர்வம் மிக்கவர்கள் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் சில வகை நாணயங்கள் உள்ளன. சான்றாக, சமுத்திர குப்தர் வெளியிட்ட சில நாணயங்களில், இவர் புலியைக் கொல்வதுபோல் சித்திரிக்கப்பட்டிருக்கிறார்; இவரது மகனான இரண்டாம் சந்திர குப்தர் சிங்கத்தைக் கொல்வது போன்று சித்திரிக்கப்பட்டுள்ள நாணயங்கள் சிலவற்றையும் காணலாம். முதலாம் குமார குப்தர் இவ்விருவகைச் சின்னங் களையுடைய நாணயங்களையும் வெளியிட்டுள்ளார். இந் நாண யங்கள் அனைத்திலும் சித்திரிக்கப்பட்டுள்ள மன்னர்கள் வேட்டை யாடுவதற்கென்று வில்லையும் அம்பையும் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. மேலும், லக்னோவிலுள்ள தொல்பொருட்காட்சி சாலையில் தனியொரு நாணயம் உள்ளது; இதில் இரண்டாம் சந்திர குப்தர் சிங்கத்தை வாளால் தாக்கும் காட்சி சித்திரிக்கப்

பட்டுள்ளது. குதிரைச் சவாரி செய்வதுபோல் சித்திரிக்கப் பட்டுள்ள நாணயங்களை இரண்டாம் சந்திர குப்தரும், இவரது மகனை முதலாம் குமார குப்தரும் வெளியிட்டுள்ளனர்; இதிலிருந்து குதிரைச் சவாரி செய்வதில் இவர்களுக்கிருந்த ஆர்வம் புலனாகிறது. ஒரு சில நாணயங்களில் குமார குப்தர் யானை மீது சவாரி செய்வதையும் காணலாம்; ஆனால், இவ்வகை நாண யங்கள் கிடைப்பது கடினம். மேலும், முதலாம் குமார குப்தர் சவாரி செய்துகொண்டே வேட்டையாடுவதுபோல் ஒரு சில நாணயங்களை வெளியிட்டுள்ளார். இவற்றில் ஒரு வகை நாணயத்தில் குதிரைமீது இருந்துகொண்டே காண்டா மிருகத்தைத் தாக்குவதுபோலும், வேறொரு வகை நாணயத்தில் யானைமீது அமர்ந்துகொண்டு சிங்கத்தைத் தாக்குவதுபோலும் சித்திரிக்கப்பட்டுள்ளார். அடுத்து, அரசர் நிற்பதுபோலவும், அவருக்குப் பின்னால் குள்ளமான சேவகன் ஒருவன் **சத்ரத்தைப்** (குடை) பிடித்துக்கொண்டு நிற்பது போலவுமுள்ள நாணயங் களும் சில உள்ளன.

அசுவமேத யாகத்தில் பங்குபெற்ற குருக்களுக்குத் தட்சிணை கொடுப்பதற்கென்று, சமுத்திர குப்தரும் முதலாம் குமார குப்தரும் தனிவகை நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர். இவற்றில் ஒரு புறம் (அசுவமேத) யாகக் கம்பமான யூபத்திற்கு முன்னால் பலிக்கான குதிரை நிற்பதையும், மறுபுறம், அரசி தன் கையில் வெண்சாமரத்தைப் பிடித்துக்கொண்டு நிற்பதையும் காணலாம். இரண்டாம் சந்திர குப்தர் சக்ரபுருஷருக்குப் பூஜை செய்ததன் நினைவாக வெளியிட்ட சில நாணயங்களும் இருக் கின்றன. இவற்றில் சக்ரபுருஷர் சக்கரம் போன்ற மூன்று பண்டங்களை அரசருக்கு வழங்குவதுபோல் சித்திரிக்கப் பட்டுள்ளது; இம் மூன்று பண்டங்களும் மூன்று உலகத்தை அல்லது மன்னருக்குள்ள மூன்று வகை அதிகாரத்தைக் குறிப் பிடும் சின்னங்களாகும். இறுதியாக, முதலாம் குமார குப்தர் வெளியிட்ட ஒரு வகை நாணயங்களில் நின்றுகொண்டிருப்பது போன்ற மூன்று உருவங்கள் உள்ளன; ஆனால் இவை எதைப் புலப்படுத்துகின்றனவென்று புரியவில்லை.

இந் நாணயங்கள் அனைத்திலும் ஒரு பெண் தெய்வத்தின்

உருவமும் உள்ளது. இவ்வுருவம் அமர்ந்துகொண்டிருப்பது போல், அல்லது நின்றுகொண்டிருப்பதுபோல் சித்திரிக்கப் பட்டுள்ளது. இது, குஷானர்களின் தெய்வமான அர்டோக் ஷோவைப் போலத்தான் ஆரம்பத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளது; ஆனால் நாளடைவில், நாம் ஏற்கெனவே குறிப்பட்டது போல், அவளை இந்தியத் தெய்வமான லட்சுமியாக மாற்றியிருக்கிறார்கள். எனினும், எல்லா நாணயங்களிலும் அவள் லட்சுமிபோல் தெரிய வில்லை. சான்றாக, சிலவற்றில் அவள் சிங்கத்தின்மீது அமர்ந் திருப்பது, துர்க்கைபோல் இருக்கிறது; வேறு சிலவற்றில் **மகரத்தின்** (முதலை)மீது அமர்ந்திருப்பது கங்கையை நினைவு படுத்துகிறது. சில நாணயங்களில் பின்புறமும் பெண் உருவம் உள்ளது; இப் பெண் பிரம்பு முக்காலியில் அமர்ந்து, பக்கவாட்ட மாகப் பொறிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தால் இவள் தெய்வமாக இருக்க முடியாது. ஏனெனில் பக்கவாட்டமாகத் தெய்வங்களின் உருவங்களைச் சித்திரிக்கும் பழக்கம் இந்தியக் கலாசாரத்தில் இல்லை. எனவே, ஒரு வேளை இவள் பட்டத்து ராணியாக இருக்கலாம். நிற்க, முதலாம் குமார குப்தர் வெளியிட்ட வேறொரு வகை நாணயத்தில் முருகன் (கார்த்திகேயன்) தன் வாகனமான மயிலின்மீது அமர்ந்துள்ள உருவத்தைக் காணலாம்.

குப்த நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்கள்கூட, சின்னங்களைப்போல் கலை நுணுக்கம் கொண்டவை. இவ் வாச கங்கள் பெரும்பாலும் முன்புறமுள்ள சின்னத்தைச் சுற்றியே உள்ளன; ஆனால் இவை கவிதை நடையில் இருக்கின்றன. பெரும் பாலும், மன்னரின் மகத்துவத்தைப்பற்றியும், அவரது நற்பண்பு களால் மறு உலகில் கிடைக்கவிருக்கும் பேரின்ப வாழ்வைப்பற்றி யதுமான வாசகங்கள்தான் பொறிக்கப்பட்டுள்ளன. சமுத்திர குப்தரின் நாணயங்களில் ஆறு வகையான வாசகங்களும், இரண்டாம் சந்திர குப்தரின் நாணயங்களில் பத்து விதமான வாசகங்களும் உள்ளன; முதலாம் குமார குப்தரின் நாணயங் களில் இருபத்து நான்கு வாசகங்களுக்குமேல் இருக்கின்றன.

முந்தைய குப்தப் பேரரசர்கள் எவரும் வெள்ளி நாணயங்களை வெளியிட்டது கிடையாது. இரண்டாம் சந்திர குப்தர்தான் முதன்முதலில் வெள்ளி நாணயங்களை வெளியிட்டவர்; அதுவும்,

குப்த வருடமான 90-ல் (கி.பி. 409) மேற்கிந்திய க்ஷத்ரபர்களின் வெள்ளி நாணயங்கள் புழங்கி வந்த மாளவத்தோடு இவருக்குத் தொடர்பு ஏற்பட்ட பின்னர்தான் வெள்ளி நாணயங்களை அச்சிடுவது மேற்கொள்ளப்பட்டது. சந்திர குப்தர் வெளியிட்ட வெள்ளி நாணயங்கள் பெரும்பாலும் க்ஷத்ரபர்களின் நாணயங்களைப் போலவேதான் உள்ளன. அதாவது முன்புறம் மன்னரின் மார்பளவு உருவமும், இவ்வுருவத்திற்குப் பின்னால் குப்த வருடமும் பொறிக்கப்பட்டுள்ளன. ஆனால், பின்புறம் க்ஷத்ரபர்கள் பயன்படுத்திய மலைக்குப் பதிலாக கருடனின் உருவம் உள்ளது. சந்திர குப்தரின் வெள்ளி நாணயங்கள் அனைத்தும் பெரும்பாலும் மேற்கிந்தியப் பகுதியிலிருந்துதான் கிடைத்துள்ளன; எனினும், இவை ஒரு சிலதான் உள்ளன. அடுத்து, முதலாம் குமார குப்தரும் தம் தந்தையின் நாணயங்களைப் போலவே ஏராளமான வெள்ளி நாணயங்களை வெளியிட்டிருக்கிறார்; ஆனால் இவையனைத்தும், குப்தப் பேரரசில் ஒரு பகுதியாக இருந்த குஜராத்–சௌராட்டிரத்திற்கென வெளியிடப்பட்டவை. இவ் வெள்ளி நாணயங்கள் கலப்பட உலோகத்தால் செய்யப்பட்ட செம்பு நாணயங்கள் போலத் தெரிகின்றன. இந் நாணயங்களின் எடையையும் அமைப்பையும் ஒத்த வேறொரு வகை வெள்ளி நாணயங்களையும் இவர் வெளியிட்டிருக்கிறார்; இவற்றில் கருடனுக்குப் பதிலாகத் தோகை விரித்தாடும் மயிலின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இந் நாணயங்களைத் தம் பேரரசின் கிழக்குப் பகுதிக்கென வெளியிட்டிருக்கிறார். இந் நாணயங்களும் இப்போது கிடைப்பது கடினம். ஸ்கந்த குப்தர் வெளியிட்ட வெள்ளி நாணயங்கள் மேற்கூறிய இரண்டு வகைச் சின்னங்களையும் கொண்டவை. இவை தவிர, வேறிரண்டு புதுவகை நாணயங்களையும் இவர் வெளியிட்டுள்ளார்; இவற்றில் ஒரு வகையில் பின்புறம் காளைமாடும், மற்ற வகையில் தகனப் பலி பீடமும் உள்ளன. ஆனால், தமது தந்தையைப் போல் கலப்பட வெள்ளியைப் பயன்படுத்தாமல், சுத்த வெள்ளியில் செய்யப்பட்ட நாணயங்களையே இவர் வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. குப்த மன்னர்களில் கடைசியாக வெள்ளி நாணயங்களை வெளியிட்டவர் புத்த குப்தர்; இவரது

நாணயங்களனைத்தும் கிழக்கிந்தியப் பாணியில் சின்னம் கொண்டவை; ஆனால், இவை கிடைப்பது மிக அரிது.

குப்த மன்னர்கள் ஒரு சில செம்பு நாணயங்களைத்தான் வெளியிட்டுள்ளனர். இவர்களில், சமுத்திர குப்தர் செம்பு நாணயங்களை வெளியிட்டாரா என்பது சந்தேகம். இரண்டாம் சந்திர குப்தரும் முதலாம் குமார குப்தரும் வெளியிட்ட செம்பு நாணயங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. இவற்றில் முன்புறம், தங்க, வெள்ளி நாணயங்களில் பயன்படுத்தப்பட்ட சின்னங்கள்தான் உள்ளன; இவை ஏழெட்டு வகையில் காணப்படுகின்றன. எனினும், இவற்றின் பின்புறம் பெரும்பாலும் அரசின் சின்னம்தான் உள்ளது; அதாவது மேலே கருடன் பறப்பது போலவும் கீழே மன்னரின் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன. நிற்க, ஹரி குப்தரின் பெயருள்ள சில செம்பு நாணயங்கள் அஹிச்சத்திரத்திலிருந்து கிடைத்துள்ளன; அதோடு, எங்கிருந்து கிடைத்தவையென்று தெரியாத சில செம்பு நாணயங்களும் ஜெயகுப்தர் என்ற பெயரில் உள்ளன. இவை இரண்டாம் சந்திர குப்தர், முதலாம் குமார குப்தர் ஆகியோரின் நாணயங்களைப் போலவே இருக்கின்றன. ஆனால், இவர்களிருவரும் யார் என்று தெரியவில்லை; எனினும், இவர்களது பெயர்கள் குப்தர் என்றிருப்பதாலும், இந் நாணயங்கள் குப்தப் பேரரசர்களின் நாணயங்களைப் போலிருப்பதாலும், இவர்களிருவரும் குப்தப் பேரரசர்களின் உறவினர்களாகத்தான் இருந்திருக்கவேண்டும். ஒரு வேளை, இவர்கள் குப்த வமிசத்தில் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களாயும் இருந்திருக்கலாம்; மற்றபடி, இவர்களைப்பற்றி வேறொன்றும் தெரியவில்லை.

அண்மையில் மாளவத்திலிருந்து, குறிப்பாக விதிசத்திலிருந்தும் எரானிலிருந்தும் சிறிய செம்பு நாணயங்கள் பல கிடைத்துள்ளன. இவை உருவத்திலும் செயற்பாங்கிலும் நாகர்களின் நாணயங்களைப்போல இருக்கின்றன. இவற்றில் ராம குப்தர் என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த ராம குப்தர் யாரென்று விளங்கவில்லை. இரண்டாம் சந்திர குப்தரின் சகோதரனாகவும், துருவ தேவியின் முதல் கணவனாகவும் ராமகுப்தர் என்றொருவர் இருந்ததாகச் சில நூல்களிலிருந்து அறிய வரு

கிறோம். ஒருவேளை அவரே இந் நாணயங்களை வெளியிட்டிருக்கக் கூடும்; ஆனால் சில அறிஞர்கள் இதை ஒப்புக்கொள்ள மறுப்பர். எது எவ்வாறிருப்பினும், இந் நாணயங்களில் பலவகைச் சின்னங்கள் உள்ளன; அதாவது, இவற்றில் இடப்புறமோ வலப் புறமோ படுத்திருப்பது போன்றும் நிற்பது போன்றும் உள்ள சிங்கம், இறக்கைகளை விரித்துள்ள கருடன், பூக்கள் நிறைந்த மலர்ப்படிக்கம், பூக்களேயில்லாத வெறும் மலர்ப்படிக்கம் என்று எத்தனையோ வகைச் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

அதிகாரம் 8

ஹூணர்களின் நாணயங்களும் பிற வம்சத்தினரின் நாணயங்களும்

இந்தியாவிற்கு முன்பு படையெடுத்து வந்த சகர்களேயும் யூச்சிகளேயும்போல் ஹூணர்கள் எனப்படுவோரும் நாடோடி மக்களாவர்; சீன எல்லேப் பகுதியில் வாழ்ந்த இவர்கள் யேதா, ஹெப்தலேட்டுகள் என்று அழைங்கப்பட்டனர். ஏனைய இரு இனத்தவரையும் போன்று, ஹூணர்களும் தம் நாட்டை விட்டு வெளியேறி, மேற்குப் புறமாகக் குடிபெயர்ந்தனர். இவர்கள் இரண்டு பிரிவாகப் பிரிந்து, ஒரு பிரிவினர் வால்காவை நோக்கிப் புறப்பட்டனர். இப் பிரிவினரின் நடவடிக்கைகளேப்பற்றி ரோம் வரலாற்றில் காணலாம்; ஆனல், அவற்றைப்பற்றி இங்குக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லே. மற்றப் பிரிவினர், முதன்முதலில் ஆக்ஸஸ் பகுதிக்குப் போய் குடியமர்ந்தனர்; பின்னர், கி.பி. ஐந்தாம் நூற்ருண்டில் பாரசீகத்தையும் இந்தியாவையும் நோக்கி வந்தனர். சிந்துவைக் கடந்து வந்த இவர்கள் காந்தாரத்தில் குடியமர்ந்தனர்; நாளடைவில் குப்தப் பேரரசிற்குச் சொந்தமான இடங்களே நோக்கி விரைந்தனர். ஆனல், குப்தப் பேரரசராக இருந்த ஸ்கந்த குப்தர் இவர்களேத் தடுத்து நிறுத்திவிட்டார். எனினும், பாரசீகத்திற்குள் இவர்கள் அத்துமீறி நுழைந்து, அட்டூழியங்கள் செய்ததை எவராலும் அடக்க முடியவில்லே. எனவே, பாரசீக மன்னரோடு போரிட்டு, அவரைக் கொன்று விட்டனர். அதன் பின்னர், அங்கு ஒரு பெரிய இராச்சியத்தை உருவாக்கி இறுமாப்புக் கொண்டனர்; நாளடைவில் வலிமை பெற்ற ஹூணர்கள் கி.பி. ஐந்தாம் நூற்ருண்டின் இறுதியில் அல்லது ஆரும் நூற்ருண்டின் தொடக்கத்தில், மறுபடியும் இந்தியாவை நோக்கிப் படையெடுத்தனர். தோரமானர் என்பவரின் தலைமையில் பஞ்சாபை அடைந்த இவர்கள், அங்கிருந்து

முன்னேறி மேற்கிந்தியா, மாளவம் ஆகியவற்றின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றினர். இரண்டு ஆண்டுகளுக்குப்பின் தோரமானருக்குப் பதிலாக தலைமை வகித்த அவரது மகன் மிகிரகுலர் என்பவர் வடஇந்தியாவை நோக்கிப் படையெடுத்து, பல வெற்றியினை அடைந்தார்; அதோடு, சாகலாவைத் (சியால்கோட்) தன் இராச்சியத்தின் தலை நகராகக்கொண்டு ஆட்சி புரிந்தார். ஆனால் இவருக்குக் கீழிருந்த சிற்றரசர்கள் பலர் ஒன்று சேர்ந்து இவருக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்து, அங்கிருந்து இவரை விரட்டிவிட்டனர். அதன்பின் இவர் காஷ்மீரைக் கைப்பற்றினார்; கி.பி. 528ஆம் ஆண்டு இவர் சாகும் வரை, காஷ்மீர் இவரது கைவசமே இருந்தது. அதே சமயம், கி.பி. 565 வரை டிரானுக்சானியா இவர்கள் வசமே இருந்து வந்தது; ஆனால், சசனீடு மன்னரான முதலாம் கோசரோஸ் (குஸ்ரூ) என்பவர், துருக்கியர்களின் உதவியால் ஹூணர்கள் வசமிருந்த டிரானுக்சானியாவை மீட்டார். இவ்வாறாக, இந்தியாவில் இருந்து வந்த ஹூணர்களின் ஆட்சி ஒழிக்கப்பட்டது.

ஹூணர்கள் படையெடுத்து வென்ற இடங்களிலெல்லாம், அந்தந்த இடத்து நாணயங்களையே பின்பற்றினர்; அதாவது, எவ்வித மாற்றமும் செய்யாமல் அந் நாணயங்களைப் போலவே அச்சிட்டு வெளியிட்டனர். சான்றாக, ஆப்கானிஸ்தானத்தில் சசனீடுகளின் நாணயங்களைப் போலவும், இந்தியாவில் குப்தர்களின் நாணயங்களைப் போன்றும், காஷ்மீரில் பிந்திய குஷானர்களின் நாணயங்களைப் போலும் தம் நாணயங்களை உருவாக்கினர். ஹூணர்கள் வெளியிட்ட நாணயங்களனைத்தும் வெள்ளியிலும் செம்பிலும் செய்யப்பட்டவை; தங்க நாணயங்களை இவர்கள் வெளியிட்டதாகத் தெரியவில்லை.

தோரமானர், மிகிரகுலர் ஆகிய இருவரும் வெளியிட்ட வெள்ளி நாணயங்கள் சசனீடுகளின் நாணயங்களைப் போல் மார்பளவு வரையுள்ள உருவம் கொண்டவை. இவற்றின் முன்புறம், அரசரின் மார்பளவு உருவம் பருவெட்டாகவும் கரடுமுரடாகவும் பொறிக்கப்பட்டுள்ளது; பின்புறம், சசனீடுகளின் தகனப் பலி பீடத்தில் இரு பணியாளர்கள் இருக்கின்றனர். தோரமானரின் நாணயங்களில் அவரது பெயர் பொறிக்கப்

படாமல் **சாஹி ஜபுவ்லா** அல்லது **ஜபுலா** என்ற அவரது பட்டப் பெயர் மட்டும் பிரமியில் பொறிக்கப்பட்டுள்ளது. மிகிரகுலர் வெளியிட்ட சில நாணயங்களில் **ஜயது மிகிரகுலா** என்று அவர் பெயர் உள்ளது; வேறு சிலவற்றில் **ஜயது விருஷத்வஜா** என்ற பட்டப்பெயர் மட்டும் பொறிக்கப்பட்டுள்ளது.

தோரமானர் வெளியிட்ட வேறு இரு வகை நாணயங்களும் உள்ளன. இவற்றில் ஒரு வகை நாணயங்களில் பின்புறம், சசனீடுகளைப் போல் இரண்டு பணியாட்களைக் கொண்ட தகனப் பீடம் பொறிக்கப்பட்டுள்ளது. இவற்றில் **சாஹி ஜபுலா** அல்லது **சாஹி ஜனபுலா** என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது வகை நாணயங்களில் முன்புறம், குப்தப் பேரரசின் கிழக்குப் பகுதி நாணயங்களைப் போல் மன்னரின் தலை உருவம் மட்டும் வலது சாயலாக இல்லாமல், இடது சாயலாகப் பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம், மயில் ஒன்று தோகை விரித்தாற்போன்றே அதே சின்னம் இருக்கிறது; வாசகத்தில் கூடப் பெயர் மட்டும்தான் மாற்றப்பட்டிருக்கிறது. வாசகமே யில்லாத சில வெள்ளி நாணயங்கள் வட இந்தியாவின் பகுதிகளி லிருந்து, குறிப்பாக, ராஜஸ்தானத்திலிருந்தும் மாளவத்தி லிருந்தும் கிடைத்துள்ளன. இவற்றில் சசனீடுகளின் நாணயங் களிலுள்ளதைப் போல், மார்பளவு வரையுள்ள உருவமும் தகனப் பலி பீடமும் பொறிக்கப்பட்டுள்ளன. இந் நாணயங் களையும் தோரமானர்தான் வெளியிட்டதாகக் கூறுவர். ஆனல் அவர்தான் வெளியிட்டாரென்று நிச்சயமாகக் கூறமுடியவில்லை.

தோரமானர் வெளியிட்டதாகக் கருதப்படும் சில செம்பு நாணயங்கள் கிழக்குப் பஞ்சாபிலிருந்தும் ராஜஸ்தானிலிருந்தும் கிடைத்துள்ளன. இவற்றில் முன்புறம் சசனீடுகளின் பாணியில் அரசரின் தலை உருவம் உள்ளது; பின்புறம் சூரியன் போன்ற சக்கரமும், **தோரா** அல்லது **ஜபோ** அல்லது **ஜபுலா** என்ற வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளன. குப்தர்களைப் போல் வில்லும் அம்பும் பொறிக்கப்பட்ட செம்பு நாணயங்களையும் தோரமானர் வெளியிட்டிருக்கிருர்; இவற்றில் முன்புறத்திலும் பின்புறத் திலும் குப்த நாணயங்களிலுள்ள சின்னங்கள்தான் உள்ளன; வாசகம் மட்டும்தான் வேருக இருக்கிறது. மேலும், கிடாரக்

குஷானர்களின் நாணயங்களைப் போன்ற செம்பு நாணயங்கள் காஷ்மீரிலிருந்து ஏராளமாகக் கிடைத்துள்ளன. இவற்றில் முன்புறம் நின்றுகொண்டுள்ள அரசனின் உருவமும், **ஸ்ரீ தோரமானர்** என்ற வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளன; பின்புறம், அர்டோக்ஷோவின் உருவம் கையில் தாமரை மலரை வைத்திருப்பதுபோல் அரைகுறையாகவும் பருவெட்டாகவும் தீட்டப்பட்டுள்ளது; அதோடு, **கிடாரா** என்ற வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வகை நாணயங்கள் க்காஷ்மீரின் முஸ்லிம் சுல்தான் நாணயங்களோடு சேர்ந்து அவந்திபூரிலுள்ள அவந்திஸ்வாமி கோயிலுக்கருகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால், கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த வரலாற்றுத் தொகுப்பாளரான ஸ்ரீ வரா என்பவர் தமது காலத்திலேயே தோரமானரின் நாணயங்கள் புழங்கி வந்ததாகக் குறிப்பிடுகிறார். எனவே, இந் நாணயங்களை ஹூணர் வமிசத்தைச் சேர்ந்த தோரமானர்தான் வெளியிட்டாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. வேறொரு தோரமானர் இவற்றை வெளியிட்டிருக்கலாம் என்று ஒரு சிலர் கருதுவர். **இராஜதரங்கிணியில்** ஒரு தோரமானர் குறிப்பிடப்பட்டுள்ளார்; ஆனால் சிறையில் உயிர் நீத்த அவர் எந்த இடத்திலும் ஆட்சி செய்ததே கிடையாது. எனவே, வேறு எந்தத் தோரமானரும் இவற்றை வெளியிட்டிருக்க முடியாது. இந் நிலையில் ஹூணர் வமிசத்தைச் சேர்ந்த தோரமானர்தான் இவற்றை வெளியிட்டிருக்க வேண்டும். ஒரே வகை நாணயங்கள் பல நூற்றாண்டுகள் புழங்கி வந்திருப்பதும், அதே வகையில் நாணயங்கள் வெகுகால முத்திரையிடப்படுவதும், இந்திய நாணய வரலாற்றில் ஏராளமான சான்றுகள் உள்ளன.

மிகிரகுலர், மூன்று வகையான செம்பு நாணயங்களை வெளியிட்டார். இவற்றில் முதல் வகை நாணயங்கள் பெரியதாயும் அகலமாயும் உள்ளன. இவற்றில் முன்புறமுள்ள குதிரை வீரனின் உருவத்தைப் பார்க்கும்போது, குப்த நாணயங்களைப் பின்பற்றி இவை உருவாக்கப்பட்டிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. இரண்டாவது வகை நாணயங்கள், பிற்காலத்திய குஷான நாணயங்களைப் போலுள்ளன; மூன்றாவது வகை நாணயங்கள் சசனீடுகளின் நாணயங்களைப்போல், முன்புறம்

அரசரின் மார்பளவு உருவமும், பின்புறம் திமில் பெருத்த காளையின் உருவமும் கொண்டுள்ளன.

ஹூணர்களின் நாணயங்களில் சில பஞ்சாபிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளன ; இவற்றில் ஏற்கெனவேயுள்ள முத்திரை மீது மறுபடியும் வேறொரு முத்திரையிடப்பட்டுள்ளன. இதனால் இந்நாணயங்களை யார் முதலில் வெளியிட்டது என்பதில் குழப்பம் உள்ளது. ஒரு சில அறிஞர்கள், மிகிரகுலர்தான் இவற்றை முதலில் வெளியிட்டவரென்றும், இவற்றில் தோரமானர் தமது வாசகத்தை முத்திரையிட்டு மறுபடியும் வெளியிட்டாரென்றும் கருதுவர். ஆனால் இதற்கு நேர் மாறாக, இவை தோரமானரின் நாணயங்களென்றும், மிகிரகுலர்தான் தமது வாசகத்தை இவற்றில் முத்திரையிட்டு மறுபடியும் வெளியிட்டாரென்றும் வேறு சில அறிஞர்கள் கூறுவர். இவ்விரு கருத்துக்களில் எது உண்மையென்று தெரியவில்லை. இரண்டாவது கருத்து உண்மையா யிருந்தால், அதில் வியப்பொன்றுமில்லை; ஏனெனில் பின்னால் ஆட்சிக்கு வந்தவர்கள், தமக்கு முந்தியவர்களின் நாணயங் களிலேயே தமது பெயரைப் பொறித்து வெளியிட்டுள்ளனர் என்பதற்கு வரலாற்றில் பல சான்றுகள் உள்ளன. ஆனால், முந்தைய கருத்து உண்மையாயிருந்தால், மிகிரகுலருக்குப் பின் தோரமானர் என்ற பெயருடைய அவரது மகன் ஆட்சி செய்திருக்கலாம் என்று நினைக்கத் தோன்றுகிறது.

வடமேற்குப் பகுதியில் மிகிரகுலருக்குப் பின் ஹூணர் வமிசத்தைச் சேர்ந்த வேறு சில மன்னர்கள் ஆட்சி புரிந்திருக் கின்றனர். இவர்கள் சசனிடுகளின் பாணியில் சில நாணயங்களை வெளியிட்டுள்ளனர். இவர்களில் கிங்கிலர், உதயாதித்யர், நரேந்திராதித்தியர் ஆகிய மூன்று மன்னர்களும் குறிப்பிடத் தக்கவர்.

மேற்குப் பகுதியை எடுத்துக்கொண்டால், கொங்கணியும் மஹாராஷ்டிரியமும் சேர்ந்ததொரு இராச்சியத்தை திரெய் குடாகர் என்ற வமிசத்தினர் ஆண்டதாக அறிய வருகிறோம். இவர்கள், முதலாம் குமார குப்தர் தமது ஆட்சியை குஜராத் திற்கும் சௌராட்டிரத்திற்கும் விரிவாக்கியபோது ஆண்டிருப்ப தாகவும் தெரிகிறது. மேலும், இவர்கள் ஆபிர ராஜ வம்சத்தின

ருக்குச் சொந்தக்காரர்களாய் இருந்திருக்கலாமென்றும், அவர்களுக்குப் போட்டியாக இந்த இராச்சியத்தை ஏற்படுத்தியிருக்கலாமென்றும் தோன்றுகிறது. மேற்குப் பிராந்தியத்தில் குப்தப் பேரரசின் ஆதிக்கம் அழிந்த பின்னர், திரெய்குடாக வமிசத்தைச் சேர்ந்த அரசர்கள் குஜராத்தின் தெற்குப் பகுதியைக் கைப்பற்றி, அப் பகுதிக்கென்று வெள்ளி நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர். அதோடு, கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தாரசேனர், வியாக்கிரசேனர் என்ற இரு மன்னர்கள் இருந்ததாக அவர்களது நாணயங்களிலிருந்து அறிய வருகிறோம். இந் நாணயங்கள் மேற்கத்திய க்ஷத்ரபர்களின் நாணயங்களைப் போல் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

கிழக்கே, மத்தியப் பிரதேசத்திலுள்ள சாட்டிஸ்கர் பகுதியிலிருந்தும், அதையொட்டியுள்ள ஒரிசாவின் பகுதியிலிருந்தும் முற்றிலும் புதுவகையான தங்க நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை மிக மிக இலேசானதாயும், சுமார் 19-20 தானியமணி எடையுள்ளவையாயும் உள்ளன. இவற்றிலுள்ள சின்னத்தைப் பார்த்தால், மறுபுறமிருந்து அடித்து உருவாக்கப்பட்டதுபோல் தெரிகிறது. இந் நாணயங்கள் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் முடிவிலிருந்து ஆறும் நூற்றாண்டின் முற்பகுதி வரை அங்குப் புழங்கியிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. இந் நாணயங்களைப்போல் இந்திய நாணய வரலாற்றில் வேறெந்தக் காலத்திலோ அல்லது வேறெந்தப் பகுதியிலோ இருந்தது கிடையாது. இந் நாணயங்களை இரண்டு வெவ்வேறு வமிசத்தினர் வெளியிட்டிருக்கின்றனர்; அதனுல்தான் இவை இரண்டு வகைச் சின்னங்களைக் கொண்டுள்ளன. முந்திய வகை நாணயங்களை, கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் தென் கோசலத்தை ஆட்சிபுரிந்துவந்த, நள வம்சத்தைச் சேர்ந்த மன்னர்களான வராஹராஜா, பாவதத்தராஜா, அர்த்தபதிராஜா என்ற மூவரும் வெளியிட்டிருக்கின்றனர். இவற்றில் புள்ளிகளால் போடப்பட்ட வட்டமொன்றும், அவ் வட்டத்தில் படுத்திருக்கும் நிலையிலுள்ள காளையும் உள்ளன; காளையின் உருவத்திற்குக் கீழே இவற்றை வெளியிட்ட மன்னரின் பெயர் தெற்கித்திய பிரமி வடிவில் பொறிக்கப்பட்டுள்ளது. பிந்திய

வகை நாணயங்களில் கருடன் தன் இறக்கைகளை விரித்துள்ள சின்னம் இருக்கிறது. இந் நாணயங்களைப் பிரசன்னமாத்திரர், மகேந்திராதித்தியர், கிரமாதித்தியர் ஆகிய மூவரும் வெளியிட்டுள்ளனர். இம் மூவரில் பிரசன்னமாத்திரர் மட்டும் சரபபூரிய வமிசத்தைச் சேர்ந்தவர். ஏனைய இருவரும் அந்த வமிசத்தவரல்லர்; எந்த வமிசத்தைச் சேர்ந்தவர்களென்று தெரியவுமில்லை. இதனால் குப்தப் பேரரசர்களான முதலாம் குமார குப்தரும் ஸ்கந்த குப்தரும் **மகேந்திராதித்தியர், கிரமாதித்தியர்** என்ற பட்டப் பெயர்களுடன் அழைக்கப்பட்டிருப்பதால், இந் நாணயங்களை அவர்களிருவரும்தாம் தம் சொந்த ஊருக்கென்று வெளியிட்டிருக்க வேண்டுமெனச் சில அறிஞர்கள் கூறுவர்.

அதிகாரம் 9

குப்தர்களுக்குப் பிந்திய வட இந்திய நாணயங்கள்

குப்த வமிசத்தினருக்கு பின், அதாவது, குப்தப் பேரரசு வீழ்ச்சியடைந்தது முதல் கி.பி. பன்னிரண்டாம் நூற்றுண்டின் மத்தியில் இந்தியாவில் முஸ்லிம் ஆதிக்கம் தோன்றியது வரை, தங்க நாணயங்களே அதிகமாக வெளியிடப்படவில்லை; வெள்ளி நாணயங்களோ ஒரு சில மட்டும்தான் வெளிவந்தன; செம்பு நாணயங்கள் கூட அதிகமாக வெளி வந்ததில்லை. வெளியிடப்பட்ட நாணயங்களும் தொடர்ச்சியாயில்லாமல், விட்டு விட்டு வந்திருக்கின்றன. எனவே, நாடெங்கிலும் நாணயங்கள் ஒரே சீராகப் புழங்கவில்லை. நாடே பற்பல இராச்சியங்களாகச் சிதறிவிட்டது ; இந்த இராச்சியங்களில் ஒரு சிலதாம் நாணயங்கள் வெளியிட்டன. ஆனுல் எந்த இராச்சியத்தையும் ஆண்ட எல்லா மன்னர்களும், அல்லது ஒரே வமிசத்தைச் சேர்ந்த எல்லா மன்னர்களும் நாணயங்களை வெளியிட்டனராவென்றுல், அதுவும் கிடையாது. இவ்வாருக, நாணயங்களுக்கு முன்பிருந்த மகிமையும் செல்வாக்கும் இப்போது இல்லாமல் போய்விட்டது. வெளியிடப்பட்ட சில நாணயங்களில்கூடப் புதிய அம்சம் ஒன்று மில்லை. எந்த இராச்சியமும் ஒரே உலோகத்தில் நாணயங்களை வெளியிடாமல் வெவ்வேறு உலோகங்களில் வெளியிட்டன. மேலும், ஒரே உலோகத்தால் செய்யப்பட்ட நாணயங்கள் கூடத் தரத்தில் மட்டுமன்றி, கலப்பிலும், வேலைப்பாட்டிலும், உருவத்திலும்கூட மாறுபட்டவையாகும். இவை மட்டுமன்றி, வேறு சில குழப்பங்களும் சேர்ந்து, நாணய வெளியீட்டு முறையையே சீரழித்துவிட்டதுபோல் சில சமயம் எண்ணத் தோன்றுகிறது.

எனினும், வங்காளத்தின் தங்க நாணயங்களையும், வடக்குப்

பிராந்தியத்திலும் மேற்குப் பிராந்தியத்திலுமிருந்த வெள்ளி நாணயங்களையும் பார்க்கும்போது, இவையனைத்தும் குப்த நாணயங்களைப் பின்பற்றி உருவாக்கப்பட்டவையாய் தோன்றுகின்றன. குப்தர்காலத்திற்குப்பின் வங்காளத்தில்தான் முதன்முதலில் தங்க நாணயங்கள் வெளியிடப்பட்டன. இவற்றை சமச்சரதேவர் என்பவரும் ஜெயகுப்த (அல்லது ஜெயநாக) பிரகண்டயசசர் என்பவரும் வெளியிட்டிருக்கின்றனர். இவ்விருவரில் முன்னவர், கி.பி. ஆரும் நூற்ருண்டின் மத்தியில் தம் நாணயங்களை வெளியிட்டிருக்க வேண்டும் என்பதை அவர் பொறித்துள்ள செப்புத்தகட்டு வாசகங்களிலிருந்து அறிய வருகிரேம்; ஆனல் பின்னவரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. இவ்விருவரும் ஒரே வம்சத்தைச் சேர்ந்தவர்களோ அல்லது உறவினர்களோ அல்லர். எனினும் இருவர் வெளியிட்ட நாணயங்களிலுமே குப்த நாணயங்களிலுள்ளதைப் போல், இடக் கையில் வில்லையும், வலக் கையில் அம்பையும் பிடித்துக்கொண்டு இடது சாயலாக நிற்கும் அரசரின் உருவம் உள்ளது. சமச்சரரின் நாணயங்களின் இடப் பக்கத்தில் காளைமாட்டுச் சின்னம் பொறித்த கொடியும், ஜெயகுப்தரின் நாணயங்களில் **சக்கரச்** சின்னமுள்ள கொடியும் இருக்கிறது. மேலும், சமச்சரரின் நாணயங்களில் தன் இடக் கையில் ஒரு தாமரை மலரைக் கொண்டு, தாமரை மலரில் அமர்ந்துள்ள லட்சுமியின் உருவம் உள்ளது; ஜெயகுப்தரின் நாணயங்களிலோ லட்சுமி மட்டுமன்றி, அவளது உருவத்திற்கு இடப்புறம், தாமரை மலரில் நின்று கொண்டிருக்கும் யானையின் உருவமும் இருக்கிறது. சமச்சரத் தேவர் வேருெருவகைச் சின்னம் பொறித்த நாணயங்களையும் வெளியிட்டிருக்கிருர்; இவற்றில் முன்புறம், ஒரு மஞ்சத்தில் இரண்டு பணிப்பெண்களும், அவ்விருவருக்கும் நடுவில் இராஜலீலை செய்வது போன்ற சாயலில் மன்னரும் இருக்கின்றனர். பின்புறம் லட்சுமிக்குப் பதிலாக இரு கரங்களிலும் இரண்டு தாமரை மலர்களை ஏந்தி நிற்கும் சரஸ்வதியும், அவளுக்கருகில் அன்னப்பறவையொன்றும் பொறிக்கப்பட்டுள்ளன.

இந் நாணயங்களுக்குப் பின், கி.பி. 725ஆவது ஆண்டுவரை எந்த நாணயமும் வெளிவரவில்லை. அதற்கு பின்னர்தான் கன்யா

குப்ஜ மௌகாரிகளுக்குப் பகைவராகவும் கௌடாவின் மன்னராகவும் இருந்த சசாங்கரும், தானேசுவரத்தை ஆட்சி செய்த ஹர்ஷவர்த்தனரும் மாற்றுக் குறைந்த தங்க நாணயங்களை வெளியிட்டனர். இத் தங்க நாணயங்களின் முன்புறத்தில் சிவன் தனது காளைமாட்டின்மீது சாய்ந்து நிற்பது போலவும், பின் புறத்தில் ஒரு யானைக்கருகில் லட்சுமி அமர்ந்திருப்பது போலவும் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் வெளியிடப் பட்ட வேறொரு தங்க நாணயமும் கிடைத்துள்ளது. சசாங்கரின் சின்னமுள்ள இந் நாணயத்தை வீரசேனர் என்பவர் வெளியிட்டிருக்கிறார்; ஆனால் இது வங்காளத்தில்தான் வெளியிடப் பட்டதாவென்று தெரியவில்லை. இதன் முன்புறத்தில் காளையின் சின்னமும், பின்புறத்தில் லட்சுமியின் உருவமும் உள்ளன.

அதற்குப் பின்னர், குப்த நாணயங்களைப் பின்பற்றி மாற்றுக் குறைந்த தங்கத்தில் பருவெட்டாகச் செய்யப்பட்ட நாணயங்கள் வங்காளத்தில் பல்வேறு இடங்களில் ஏராளமாக வெளியிடப் பட்டிருக்கின்றன. இவை, கி.பி. ஏழாம் நூற்றாண்டிலும், எட்டாம் நூற்றாண்டிலும் வெளியாகியிருக்க வேண்டும். இந் நாணயங்களின் முன்புறத்தில் வில்லையும் அம்பையும் ஏந்தி நிற்கும் அரசரின் உருவமும், பின்புறத்தில் நின்றுகொண்டிருக்கும் ஒரு பெண் தெய்வத்தின் உருவமும் உள்ளன; ஒரு சில நாணயங்களில் இத் தெய்வத்திற்கு எட்டுக் கரங்கள் இருக்கின்றன. இந் நாணயங்களில் பெரும்பாலும் முன்புறத்தில் வாசகமேதும் கிடையாது; ஒரு சிலவற்றில் மட்டும் **ஸ்ரீ** என்ற சொல்லும் வேறு சில கிறுக்கல்களும் உள்ளன. பின்புறத்தில் ஒரு சில வாசகங்கள் இருந்ததாகத் தெரிகிறது; ஆனால் அவை என்னவென்று புலனாகவில்லை. ஒரு சிலவற்றில் அவை பெயர்கள்போலத் தெரிகின்றன; ஆனால் அவை என்னவென்று யூகிக்கமுடியவில்லை. இந் நாணயங்களை வங்காளத்தில் ஆட்சிபுரிந்து வந்த சில சிற்றரசர்கள் வெளியிட்டிருக்கலாம்; ஆனால் அவர்களைப் பற்றிய விவரம் ஒன்றும் கிடைக்கவில்லை.

மேலும், குப்தர்களின் நாணயத்தைப்போல் சுத்தமாகவும் தெளிவாகவும் உருவாக்கப்பட்டுள்ள தங்க நாணயம் ஒன்று கிடைத்துள்ளது; இது எட்டாம் நூற்றாண்டில் வெளியிடப்

பட்டிருக்கலாம். இதன் முன்புறத்தில் அவலோகிதேஸ்வரர் என்னும் புத்தமதக்கடவுளின் உருவத்திற்கு முன்னால் முடி சூடிய மன்னன் ஒருவன் தன் கரங்களைக் கட்டிக்கொண்டு அமர்ந்திருப்பது சித்திரிக்கப்பட்டுள்ளது; பின்புறத்தில் யானைச் சின்னமுள்ள கொடியும், **விந்திய சக்தி** என்ற பெயரும் பொறிக்கப் பட்டுள்ளன. ஆனால், இப் பெயருடைய மன்னர் எவரும் கிழக்குப் பகுதியில் ஆட்சி செய்ததாகத் தெரியவில்லை. அடுத்து, பால வமிசத்தைச் சேர்ந்த தேவபாலர் என்பவர் (கி.பி. 810–850) வெளியிட்ட தங்க நாணயம் ஒன்றுமட்டும் கிடைத்துள்ளது. இதில் ஒரு புறம் அம்பையும் வில்லையும் கொண்டுள்ள மன்னரின் உருவமும், மறுபுறம் லட்சுமியின் உருவமும் உள்ளன. இவ்வுருவங்கள் பால வமிசத்தினரின் கலைப்பாணியில் அருமையாகப் பொறிக்கப்பட்டுள்ளன; ஆனால், இதிலுள்ள வாசகம்தான் அவ் வமிசத்தினரின் வாசகம்தானா என்று சந்தேகிக்கும் அளவுக்கு மோசமாக உள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் தங்க நாணயங்கள் கிடைப்பது மிக மிகக் கடினம். எனினும், சிவனும் பார்வதியும் சேர்ந்து அமர்ந்திருக்கும் நாணயம் ஒன்று கிடைத்துள்ளது. இதை, தானேசுவரத்தையும் கன்யாகுப்ஜத்தையும் ஆட்சி செய்த பேரரசர் ஹர்ஷவர்த்தனர் என்பவர் வெளியிட்டிருக்கிறார். மேலும், வத்ச தாமர், வாப்புகர், கேசவர் ஆகிய பெயர்கள் பொறிக்கப்பட்ட சில நாணயங்களும் உள்ளன. இவற்றை, பயானாவை (பரத்பூர்) ஆட்சி செய்த சூரசேன வமிசத்தினர் வெளியிட்டதாகக் கூறுவர். இவற்றின் முன்புறத்தில் ஒரு பசு தன் கன்றுக்குப் பால் கொடுப்பது போலும், பின்புறத்தில் வராஹம் தன் காலினால் அரக்கன் ஒருவனை அழிப்பது போன்றும் சித்திரிக்கப்பட்டுள்ளன. இந் நாணயங்கள் கி.பி. எட்டாம் அல்லது ஒன்பதாம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவற்றிற்குப் பின், கி.பி. பத்தாம் நூற்றாண்டு வரை வேறெந்தத் தங்க நாணயமும் வட இந்தியாவில் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

இக் காலத்தில் வெளியான வெள்ளி நாணயங்களை எடுத்துக் கொண்டால், குப்த நாணயங்களைப் போல், கி.பி. ஆறும் ஏழாம் நூற்றாண்டின்போது சில வெள்ளி நாணயங்கள் வெளி

யிடப்பட்டுள்ளன; இவற்றைத் திருமணத்தின்மூலம் உறவினர்களான தானேசுவர வர்த்தனர்களும் கன்யாகுப்ஜ மௌகாரிகளும் வெளியிட்டனர். மேலும், குமார குப்தர், ஸ்கந்த குப்தர் ஆகியோரின் நாணயங்களைப்போல், மௌகாரி வமிசத்தைச் சேர்ந்த ஈசான வர்மர் (கி.பி. 550–576), சர்வ வர்மர் (கி.பி. 576–580), அவந்தி வர்மர் (கி.பி. 580–600) ஆகியோரும், வர்த்தன வமிசத்தைச் சேர்ந்த பிரதாபசீலர் (பிரபாகர வர்த்தனர்), சிலாதித்தியர் (ஹர்ஷவர்த்தனர்) ஆகியோரும் மயிலின் சின்னம் பொறித்த வெள்ளி நாணயங்களை வெளியிட்டனர்; இவற்றில் ஒரே வித்தியாசம் என்னவென்றால், பின்புறமுள்ள தலை வலது சாயலாக இல்லாமல், இடது சாயலாக இருக்கிறது. இவ்வகைச் சின்னம் கொண்ட நாணயத்தை பீமசேனர் அல்லது பீமராஜா என்பவரும் வெளியிட்டிருக்கிறார்; ஆனால் இவர் எந்த வமிசத்தைச் சேர்ந்தவரென்று தெரியவில்லை. மேற்கத்தியச் சின்னங்களுடன் குப்த மன்னர்கள் வெளியிட்ட வெள்ளி நாணயங்களைப்போல் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் மத்தியில் காலசூரி வமிசத்தைச் சேர்ந்த கிருஷ்ணராஜாவும் வெள்ளி நாணயங்களை வெளியிட்டிருக்கிறார். இவற்றில் பின்புறத்தில் ஸ்கந்த குப்தரின் நாணயங்களிலுள்ள காளைச் சின்னம் உள்ளது. இவ்வகை நாணயங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கிடைத்துள்ளன; குறிப்பாக, வடக்கே, மாளவம், ராஜஸ்தான் பகுதிகளிலிருந்தும், தெற்கே நாசிக், சதாரா மாவட்டப் பகுதிகளிலிருந்தும், மேற்கே ஸால்ஸெட், பம்பாய்த் தீவுப் பகுதிகளிலிருந்தும், கிழக்கே பெதுல், அமராவதி மாவட்டங்களிலிருந்தும் இவை கிடைத்துள்ளன. குப்த வமிசத்தினரின் நாணயங்களைப்போல் வெளியிடப்பட்ட வெள்ளி நாணயங்களில் இவைதான் கடைசியாகும்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவின் மையப் பகுதியிலும் மேற்குப் பகுதியிலும் 6–7 தானியமணி எடையுள்ள சிறு வெள்ளி நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவற்றின் முன்புறத்தில் நடந்து செல்லும் யானையின் உருவமும், பின்புறத்தில் **ரண–ஹஸ்தி** என்ற வாசகமும் உள்ளன. இவற்றைப் பிரதிஹார மன்னரான வத்சராஜா (கி.பி. 778–788) என்பவர்

வெளியிட்டிருக்கலாம். இவ்வகைச் சின்னமுள்ள நாணயத்தை வேறு எவரும் பிற்காலத்தில் வெளியிட்டதாகத் தெரியவில்லை. எனினும், வெகு காலத்திற்குப் பின், அதாவது கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் இவ்வகை நாணயங்கள் திடீரெனத் தோன்றியிருக்கின்றன. இவற்றிலும் முன்புறம் அதே போன்ற யானையின் உருவம்தான் உள்ளது. இவற்றைச் சாளுக்கிய மன்னரான ஜெயசிம்ம சித்தராஜா என்பவர் வெளியிட்டிருக்கிறார்; இந் நாணயங்கள் குஜராத்திலிருந்தும் சௌராஷ்டிரத்திலிருந்தும் கிடைத்துள்ளன. இவற்றின் பின்புறத்தில் மூன்று வரிகளில் பொறிக்கப்பட்ட **ஸ்ரீ மஜ்ஜய சிம்ஹ பிரியர்** என்ற நீண்ட வாசகம் உள்ளது.

கிதார இனத்தவரும் ஹூணர்களும் சிறிது காலத்திற்கு முன்பே, சசனீடுகளின் நாணயங்களைப் போன்ற வெள்ளி நாணயங்களை வடமேற்குப் பகுதியில் புகுத்தினர். ஆனால், கி.பி. ஏழாம் நூற்றாண்டிலும் இவ்வகை நாணயங்கள் தொடர்ந்து வெளியிடப்பட்டிருக்கின்றன. இவற்றைச் சசனீடு வமிசத்தினரே வெளியிட்டிருக்க வேண்டும்; அல்லது, பிற்கால ஹூணர்களின் ஆட்சியின்போது ஹூண வமிசத்தினரே வெளியிட்டிருக்க வேண்டும். ஏனெனில், இந் நாணயங்களில் சசனீடுகளின் நாணய அம்சங்களும் ஹூணரின் நாணய அம்சங்களும் சேர்ந்து காணப்படுகின்றன. இதனால் இந் நாணயங்களை ஹெப்தலோ–சசனீடு நாணயங்களென அழைக்கலாம். இவற்றில் ஒரு முக்கியமான அம்சம் உள்ளது; அதாவது, தலைப்பாகை அணிந்துள்ள மன்னனின் உருவமும், அத் தலைப்பாகையின் நடுவில் எருமைமாட்டுத் தலை உருவமும், அதற்கு இருபுறமும் இரண்டு இறக்கைகளும் உள்ளன. இந்நாணயங்களைப் பார்த்தவுடன், இவை பழைய நாணயங்களில் புதுச்சின்னம் பொறிக்கப்பட்டவைபோல் தோன்றுகின்றன; ஏனெனில் பின்புறமுள்ள பலிபீடமும் அதன் பணியாட்களின் உருவங்களும் அழிக்கப்பட்டிருப்பதுபோல் தெரிகின்றன. ஆனால், உண்மையில் இச் சின்னம் அழிந்திருப்பதற்குக் காரணம், இச் சின்னத்தை முத்திரையிட்ட விதம்தான். சாதாரணமாக, இருபுறமும் சின்னங்களைப் பொறிக்கும்போது முன்புறச் சின்னப் பொறியையும்

பின்புறச் சின்னப் பொறியையும் ஒரே நேரத்தில் சேர்ந்தாற்போல் அழுத்தி முத்திரையிடுவதுதான் வழக்கம். ஆனால் இந்த நாணயங்களில் பின்புறச் சின்னத்தை முதலில் போட்டுவிட்டு, பின்னர் அதை அப்படியே குப்புற வைத்து முன்புறச் சின்னத்தை முத்திரையிட்டிருக்கின்றனர். இதனால் பின்புறச் சின்னம் நசுங்கி அழிந்திருக்கிறது. இந்த ஹெப்தலோ-சசனீடு நாணயங்களை மூன்று இனமாகப் பிரிக்கலாம்: (1) பஹ்லவி வாசகம் மட்டும் கொண்ட ஒரு மொழி நாணயங்கள், (2) பஹ்லவி, ஹெப்தலைட்ஸ் ஆகிய இருமொழி வாசகங்கள் கொண்ட நாணயங்கள், (3) பஹ்லவி, ஹெப்தலைட்ஸ், இந்திய மொழி என்று மும்மொழி வாசகங்கள் கொண்ட நாணயங்கள். இவ்வாசகங்களில் ஹெப்தலைட்ஸ் வாசகம் கொச்சையான கிரேக்க எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருக்கிறது; பஹ்லவியிலுள்ள வாசகமோ கவனமின்றி, அரை குறையாகப் பொறிக்கப்பட்டுள்ளது; பிரமியில் பொறிக்கப்பட்ட வாசகம்கூடத் தெளிவாக இல்லை. எனவே, இவ் வாசகங்களின் பொருள் என்னவென்று கண்டுபிடிக்க முடியவில்லை.

இவ்வகையில் சேர்க்கப்பட வேண்டிய சில வெள்ளி, செம்பு நாணயங்கள் உள்ளன; மிக அற்புதமாகவும் தெளிவாகவும் உருவாக்கப்பட்டிருக்கும் இந் நாணயங்களில் **நப்கி, நாப்கி, நேசாகி** அல்லது **நேஜாகி** என்ற பெயர்கள் பஹ்லவியில் பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சிலவற்றில் **மாலேகா** (அரசன்) என்ற பட்டமும் உள்ளது. அதோடு, **ஸ்ரீ யாதெவி மன ஸ்ரீ** அல்லது **வாசு வங்கர** என்ற பிரமி வாசகம் கொண்ட சில நாணயங்களும் உள்ளன. இவற்றை வெளியிட்ட மன்னர் யாரென்று தெரியவில்லை. மேலும், **ஐபுலிஸ்தானம்** (ஐபுலர்களின் அல்லது ஹூணர்களின் இராச்சியம்) என்ற பெயருடைய வேறு சில நாணயங்களும் இருக்கின்றன; இவற்றில் பின்புறம் பலி பீடத்திற்குப் பதிலாக ஒளியுடன் தோன்றும் பெண்ணும் பணியாட்களும் இருக்கின்றனர். இப் பெண்ணின் உருவத்தை, முல்தானின் சூரியனுடைய உருவமோ அல்லது மைத்ரேய போதிசத்வரின் உருவமோ என்று நம்பி வந்தனர்; ஆனால் உண்மையில் குராசன் ஜாரா (குராசனின் மகத்துவம்) என்னும் நகரத்தின்

தெய்வத்தையே இப்படிப் பொறித்துள்ளனர். இவ்வகை நாணயங்களைப் பண்டூர், பன்கூர், மார்தான் ஷா என்றெல்லாம் அழைக்கப்பட்ட வாசுதேவரும், ஷாஹி திஜின் என்ற மன்னரும் தான் வெளியிட்டனர். ஷாஹி திஜின் நாணயங்களில் முன் புறத்தில் "வானுலக மைந்தனும் இந்தியாவிற்கும் பாரசீகத் திற்கும் நற்பேருகக் கிடைத்துள்ள மன்னருமான ஷாஹி திஜின்" என்ற பொருளில், **ஸ்ரீ ஹித்வி – ச ஐரான – ச பரமேஸ்வர ஸ்ரீ ஷாஹி திஜின் தேவஜ** என்ற நீண்ட வாசகம் பிரமியில் பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால், இவ் வாசகமும் இதன் மொழி பெயர்ப்பும் திருப்திகரமாய் இல்லை.

ஹெப்தலோ–சசனீடு நாணயங்களைப் பின்பற்றி உருவாக்கப் பட்ட மாற்றுக் குறைந்த வெள்ளி நாணயங்கள் ராஜஸ்தானம், குஜராத், உத்தரப்பிரதேசம்–பீஹார் வரை விரிந்திருந்த மாளவம் ஆகிய இடங்களிலிருந்து ஏராளமாகக் கிடைத்துள்ளன. இவற்றில் முன்புறம் சசனீடு பாணியில் பொறிக்கப்பட்ட மார்பளவு உருவமும், பின்புறம் அரைகுறையாகப் பொறிக்கப் பட்ட தகனப் பலி பீடமும் உள்ளன. எனவே, இவை "இந்தோ–சசனீடு" நாணயங்கள் என்று அழைக்கப்படுகின்றன. **டிரம்மாக்கள்** என்ற பெயருடைய இந்நாணயங்கள் ஹெப்தலோ–சசனீடு நாணயங்களைப் போல் 67 தானியமணி எடையுள்ளன. இந்த இந்தோ–சசனீடு நாணயங்கள் இவற்றின் மூல நாணயங் களைப் போலவேதான் தட்டையாகவும் இலேசாகவும் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டன. ஆனால், நாளடைவில் இவற்றைச் சிறிய தாகவும் பருமனாகவும் மாற்றி, கடைசியில் மிகச் சிறிய குண்டு குண்டான வடிவத்தில் வெளியிட்டிருக்கின்றனர். இவ்வாறு குண்டு குண்டாய் வெளியிடப்பட்ட நாணயங்கள் கதேய நாணயங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவ்வாறாக, இவற்றின் அளவு குறையக் குறைய, இவற்றின் இருபுறமு முள்ள சின்னங்களும் சிறியதாக ஆகி, கடைசியில் இச்சின்னங்கள், முதன்முதலில் பொறிக்கப்பட்ட சின்னங்கள்தாமா என்று கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு ஆகிவிட்டன. இவற்றில் ஓரிரு எழுத்துக்கள் மட்டுமே பொறிக்கப்பட்டிருக்கின்றன; ஒருவேளை இந்த எழுத்துக்கள் மன்னரின் பெயரிலுள்ள தலைப்

பெழுத்துக்களாகவோ அல்லது அதன் சுருக்கமாகவோ இருக்க லாம். இத் தலைப்பெழுத்துக்களை மட்டும் கொண்ட இவ்வகை நாணயங்கள் ராஜஸ்தானிலிருந்தும், அங்கிருந்து மாளவத் திற்குச் செல்லும் பகுதியிலிருந்தும்தான் பெரும்பாலும் கிடைத் துள்ளன. எனவே, இவற்றை மேவாரில் ஆட்சி புரிந்து வந்த மன்னர்கள்தான் வெளியிட்டிருக்க வேண்டுமென்று அறிஞர் ஒருவர் கருதுகிறார்; ஒருவேளை அவர் கருதுவது உண்மையாக வும் இருக்கலாம். நிற்க, உத்தரப் பிரதேசத்திலுள்ள பல்வேறு இடங்களிலிருந்து கிடைத்துள்ள நாணயங்களிலெல்லாம் **ஸ்ரீ விக்ர** என்ற பெயருள்ளது; எனவே, இவற்றை விக்ரஹ பாலர்தான் வெளியிட்டிருக்க வேண்டும். ஸ்ரீ விக்ர நாணயங் களைப் போலவே வேறு சில நாணயங்களும் இருக்கின்றன. ஆனால், இவற்றின் முன்புறத்தில் விஷ்ணுவின் அவதாரமான வராஹம் பொறிக்கப்பட்டுள்ளது; பின்புறத்தில் இரண்டு வரிகளில் பெரிய எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ள **ஸ்ரீமத் ஆதிவராஹ** என்ற வாசகம் உள்ளது. இவற்றைப் பிரதி ஹார வமிசத்தைச் சேர்ந்த முதலாம் போஜர் என்ற மன்னர்தான் வெளியிட்டிருக்கிறார். இவரது மகனான விநாயகபாலர்கூட இவ்வகை நாணயங்களைச் செம்மையாக உருவாக்காமல் வெளியிட் டிருக்கிறார்.

மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த கொங்கணநாட்டை ஆண்ட சில ஹார மன்னரான சித்தராஜன் என்பவர் கதேய வகை நாணயங் களைப்போல் வெளியிட்டிருக்கிறார். இவரது நாணயங்களில் பின்புறம் இவரின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அதேபோல் ஸ்ரீ சோமலாதேவி என்ற பெயருடைய சில நாணயங்கள் ராஜஸ் தானில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீ சோமலாதேவி என்பவள், சாகம்பரி அரசனான அஜயதேவரின் மனைவியாக இருந்திருக்கலாம். மேலும், மத்தியப் பிரதேசத்திலிருந்தும் இவ்வகை நாணயங்கள் கிடைத்துள்ளன; இவற்றில் பின்புறம், **ஸ்ரீ ஓம்** அல்லது **ஸ்ரீ ஓம்காரா** என்ற வாசகம் உள்ளது. இவை ஓம்கார மாந்தாதா என்னும் கடவுளின் பெயரில் வெளியிடப்பட்டதாகக் கூறப் படுகிறது. இக் கடவுளின் பெயரால் கட்டப்பட்டுள்ள பிரமாண்டமான கோயில் இந்தோருக்கு அருகில் மாந்தாதா

என்னுமிடத்திலுள்ள நர்மதை நதிக்கரையில் உள்ளது.

மேலும், மத்தியப் பிரதேசத்திலுள்ள நிமார் மாவட்டத்திலிருந்தும் சில கதேய நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில், அடையாளம் தெரியாத ஒரு மன்னரின் தலை உருவம் முன்புறத்தில் உள்ளது; பின்புறத்தில் ஒரு குதிரைவீரன் தன் வாளால் இரண்டு சிப்பாய்களோடு சண்டையிடுவது போலவும், மற்றொரு சிப்பாய் பின்புறமிருந்து குதிரை வீரனைத் தாக்குவது போலவும் உள்ள போர்க்காட்சி சித்திரிக்கப்பட்டிருக்கிறது; ஆனால், இப் போர்க்காட்சி ஒரு நாணயத்தில்கூட முழுமையாகத் தெரியவில்லை. மேலும், இந் நாணயங்களை யார் வெளியிட்டதென்றும் புரியவில்லை. மேற்கூறிய இந்தோ–சசனீடு நாணயங்களும் கதேய வகை நாணயங்களும் சுத்த வெள்ளி அல்லது செம்பில் செய்யப்பட்டதுபோல் தெரிகின்றது; ஆனால், உண்மையில் இவையனைத்தும் வெள்ளியும் செம்பும் கலந்த கலப்பட உலோகத்தில் செய்யப்பட்டவை. குறைந்த விகிதத்தில் செம்பு சேர்க்கப்பட்ட நாணயங்கள் வெள்ளிபோல் வெண்மையாகவும், குறைந்த விகிதத்தில் வெள்ளி சேர்க்கப்பட்ட நாணயங்கள் செம்பு போலும் தோன்றுகின்றன.

பஞ்சாபிலிருந்து ஒரே வகையைச் சேர்ந்த நாணயங்கள் ஏராளமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒருபுறம், பிந்திய குஷானர் நாணயங்களைப்போல், சிவனும் காளையும் இருக்கின்றன; மறுபுறம், பக்கவாட்டில் பொறிக்கப்பட்டுள்ள பலவகைச் சின்னங்களைக் காணலாம். சான்றாக, சில நாணயங்களில் வில்லும் அம்பும் கொண்டுள்ள மனிதனின் உருவமும் ஜிஷ்ணு என்று பெயரும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இவற்றை வெளியிட்டவரைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. மாளவத்திலிருந்து கிடைத்துள்ள சில நாணயங்களிலும் ஜிஷ்ணு என்ற பெயர் உள்ளது; இவை மேற்கூறிய பஞ்சாப் நாணயங்கள் வெளியான அதே காலத்தில்தான் வெளியாகியிருக்கின்றன. எனினும், மாளவத்தில் கிடைத்துள்ள நாணயங்கள் சின்னத்தில் மட்டுமன்றி, அமைப்பிலும் வேலைப்பாட்டிலும்கூட வேறாக இருக்கின்றன. இவை 7 முதல் 9 தானியமணி எடை கொண்ட சிறிய நாணயங்களாகும்; இவற்றில் ஒருபுறம் சங்கு அல்லது

சக்கரமும், மறுபுறம் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன.

காஷ்மீரிலிருந்து கிடார நாணயச் சின்னம் பொறிக்கப் பட்டுள்ள நாணயங்கள் கிடைத்துள்ளன; இவற்றில் ஒருபுறம் அமர்ந்திருக்கும் அர்டோக்ஷோவின் உருவமும், மறுபுறம் மன்னரின் உருவமும் உள்ளன. இவற்றில் முதலில் வெளியான நாணயங்கள் சரிவர உருவாக்கப்படவில்லையெனினும், சின்னங்கள் மட்டும் ஓரளவு தெளிவாக இருக்கின்றன. ஆனால், பிற்பாடு, அதாவது கி.பி. எட்டாம் நூற்றாண்டில் கார்க்கோட வமிசத்து மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் சின்னங்கள் சரிவர முத்திரையிடப்படாமலிருப்பதால் குழப்பமாக இருக்கிறது. சான்றாக, நின்றுகொண்டிருக்கும் ஆண் உருவத்திற்கும், உட்கார்ந்துள்ள பெண் உருவத்திற்கும் வித்தியாசம் காண முடியாதபடி, இவ்வுருவங்களின் தலை அழிந்திருக்கிறது. இந்நாணயங்கள் அனைத்தும் மாற்றுக் குறைந்த தங்கத்தாலோ அல்லது தங்கமும் வெள்ளியும் சேர்ந்த கலப்பட உலோகத்தாலோ செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் உண்மையில் இவையனைத்தும் தங்கமோ வெள்ளியோ கலந்த செம்பு நாணயங்கள்தான். இச் செம்பு நாணயங்களில் 12 சதவீதத் தங்கமோ அல்லது 15 சதவீத வெள்ளியோ கலந்திருக்கின்றன. கார்க்கோட வமிசத்தினருக்குப் பின், கி.பி. 885-ல் உத்பல வமிசத்தினர் ஆட்சிக்கு வந்தனர். இவர்கள் செம்பு நாணயங்களை மட்டுமே வெளியிட்டனர். இவை கார்க்கோட நாணயங்களைப் போன்று கிடாரச் சின்னம் கொண்டவை; எனினும் இவை வேலைப்பாட்டுத்திறன் மிக்கவை. எனவே, முன்புறச் சின்னமும் பின்புறச் சின்னமும் தெளிவாகவும் வெவ்வேறாகவும் உள்ளன. அதோடு, இந்நாணயங்களில் இரண்டு பெரிய குண்டலங்கள் அணிந்திருக்கும் பெண் தெய்வம் இருக்கிறது; நாளடைவில் பெண் தெய்வத்தின் கைகளை நீக்கி விட்டு, அவ்விடங்களில் வாசகங்களைப் பொறித்து வெளியிட்டிருக்கின்றனர். கடைசி வரை இவ்வகை நாணயங்களையே வெளியிட்டதாகத் தெரிகிறது.

இவ்வாறாக, கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை வெளியான காஷ்மீர் நாணயங்கள் அனைத்தும் எவ்விதமான அடிப்படை மாறுதலோ புதுமையான அம்சமோ

இன்றி ஒரே மாதிரியாக இருப்பதைப் பார்த்தால், நமக்குச் சலிப்பு ஏற்பட்டுவிடுகிறது. எனினும், ஹர்ஷதேவரின் ஆட்சியின் போது (கி.பி. 1089–1111) வெளியிடப்பட்ட தங்க, வெள்ளி நாணயங்களில் ஓரளவு புதுமை அம்சத்தை காணலாம். இவற்றில் முன்புறத்தில் அலங்கரிக்கப்பட்டுள்ள யானையின் உருவமும், பின் புறத்தில் பெரிய நாகரி எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட வாசகமும் உள்ளன. இந் நாணயங்கள் கர்நாடகத் தங்க நாணயங் களைப்போல் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

காந்தாரப் பகுதியை அல்லது காபூல்—ஓஹிந் பகுதியை கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஷாஹி எனப்பட்ட வமிசத்தினர் ஆண்டு வந்தனர். இம் மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் எடையில் மட்டுமன்றி, சின்னம், வேலைப்பாடு ஆகியவற்றிலும் புதுமாதிரியாக உள்ளன. பெரும்பாலும், இவற் றில் குதிரை வீரன் ஒருவன் தனது வலக்கையில் ஈட்டியையும் இடக்கையில் வேறொரு பொருளையும் வைத்துக்கொண்டிருக்கும் சின்னம்தான் பொறிக்கப்பட்டுள்ளது; மற்றொரு புறத்தில் காளை மாட்டின் முதுகில் ஜூலா (சேனத்துணிமணிகள்) அணிவித்து, அது இடப்புறமாகப் படுத்திருப்பது போன்ற சின்னமும் நாகரியில் பொறிக்கப்பட்ட வாசகமும் உள்ளன. இவ்வகை நாணயங்களை ஸ்பலபதி தேவர் என்பவர்தாம் முதன்முதலில் வெளியிட்ட தாகத் தெரிகிறது. அவருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த வேறு சில மன்னர்கள்கூட இவ்வகைச் சின்னத்தையே பின்பற்றியிருக் கின்றனர்; இவர்களில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர் சாமந்த தேவர். இச் சின்னமுள்ள நாணயங்கள் மிகப் பிரபலியமானவையா யிருந்திருக்க வேண்டும்; ஏனெனில் இவை வட இந்தியாவில் பல்வேறு இடங்களிலிருந்து கிடைத்துள்ளன. மேலும், இவை பலவகை வேலைப்பாடுகளுடன் வெவ்வேறு அமைப்பில் உருவாக்கப் பட்டுள்ளன. மேலும், சாமந்த தேவரின் மறைவுக்குப் பின்னர் கூட இவ்வகை நாணயங்கள் புழங்கி வந்ததாகவும் தெரிகிறது. இதிலிருந்து அவர் இறந்த பின்னர், அவரது பெயருடன் இந் நாணயங்கள் வெளிவந்ததாக அறிய வருகிறோம். சான்றாக, கி.பி. பன்னிரண்டு, பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில் ஆட்சி செய்த பல்வேறு மன்னர்களும் வமிசத்தினரும் அவரது நாணயங்களைப்

பின்பற்றியே செம்பும் வெள்ளியும் கலந்த உலோகத்தில் தம் நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர். அதோடுமட்டுமன்றி, இந் நாணயங்களில் காளைச் சின்னமுள்ள பக்கத்தில் சாமந்த தேவரின் பெயரையே பொறித்துள்ளனர்; தம் பெயர்களைக் குதிரை வீரன் சின்னமுள்ள பக்கத்தில் பொறித்திருக்கின்றனர். அவர்களில் ஒரு சிலர் சாமந்த தேவரின் பெயரோடு ஒரு பட்டப் பெயரையும் சேர்த்துப் பொறித்துள்ளனர். ஆனால் இப் பட்டப் பெயரின் பொருளோ முக்கியத்துவமோ நமக்கு இன்றுவரை விளங்கவில்லை.

பட்டப்பெயரின்றி, சாமந்த தேவர் என்ற பெயரை மட்டும் கொண்ட நாணயங்களைப் பிற்காலத்தில் ஆட்சிக்கு வந்த தோமர மன்னர்களான சல்லட்சண பாலர் (கி.பி. 978–1008), அனங்க பாலர் (கி.பி. 1049–1097) ஆகிய இருவரும் வெளியிட்டனர். இவர்களுக்குப்பின் கஹட்வால வமிசத்தைச் சேர்ந்த மதன பாலத் தேவர் (கி.பி. 1080–1115) என்பவர் வெளியிட்ட நாணயங்களில் **மாதவ ஸ்ரீ சாமந்த தேவர்** என்ற வாசகம் உள்ளது. பின்னர், சாகம்பாரியில் ஆட்சி செய்த சஹமன மன்னர்களான சோமேஸ்வரத் தேவர் (கி.பி. 1162–1166), பிருத்விராஜர் (கி.பி. 1166–1192) ஆகிய இருவரும் தம் நாணயங்களில் **அசாவரி ஸ்ரீ சாமந்த தேவர்** என்ற வாசகத்தைப் பொறித்து வெளியிட்டனர். அடுத்து, காளைச் சின்னமுள்ள பக்கத்தில் **குடமன ஸ்ரீ சாமந்த தேவர்** என்று பொறித்த நாணயங்களை ஸ்ரீ பிபாலர் என்ற மன்னர் வெளியிட்டுள்ளார்; ஆனால் இவர் எந்த வமிசத்தைச் சேர்ந்தவரென்று தெரியவில்லை. நிற்க, குதிரைவீரன் சின்ன முள்ள பக்கத்தில் வாசகமேதுமில்லாமல், காளையின் சின்னமுள்ள பக்கத்தில் மட்டும் தம் பெயரைப் பொறித்து, ஸ்ரீ மஹிபாலத் தேவரும், ஸ்ரீ அசாதபாலர் அல்லது அம்ரிதபாலரும் ஒரு சில நாணயங்களை வெளியிட்டனர். இந் நாணயங்கள் சரியாக உருவாக்கப்படாத நிலையில் உள்ளன. இவற்றை வெளியிட்ட வர்களில் ஸ்ரீ மஹிபாலத்தேவர் மட்டும் (கி.பி. 1103–1128) தோமர வமிசத்தைச் சேர்ந்த மன்னரென்று தெரிகிறது; ஸ்ரீஅசாத பாலர் என்பவர் சுமார் கி.பி. 1200–ல் பதோன் என்ற நாட்டை ஆண்டதாக அறிய வருகிறோம்.

இறுதியாக, இவ்வகைச் சின்னமுள்ள நாணயங்களைப் பிரதிஹார வமிசத்தைச் சேர்ந்த மலயவர்மன் (கி.பி. 1220–1230) என்பவரும், நர்வாரிலிருந்த ஜாஜபல்ல வமிசத்தைச் சேர்ந்த சஹத தேவர் (கி.பி. 1235–1254), அசல்ல தேவர் (கி.பி. 1254–1279), கணபதி (கி.பி. 1291–1298) ஆகியோரும் வெளியிட்டிருக்கின்றனர். ஆனால் இந் நாணயங்களில் ஷாஹி நாணயச் சின்னங்களில் ஒன்று தான் உள்ளது. சான்ருக, மலயவர்மன், அசல்ல தேவர், கணபதி ஆகிய மூவரின் நாணயங்களிலும் குதிரை வீரனின் சின்னம் மட்டுமே இருக்கிறது; இதற்கு மாருக, சஹத தேவரின் நாணயங்களில் காளையின் சின்னம்தான் உள்ளது. இந் நாணயங்களிலிருந்தெல்லாம் சின்னமில்லாத மறுபுறத்தில் இவற்றை வெளியிட்டோரின் பெயர் நாகரியில் பெரிதாகப் பொறிக்கப்பட்டிருக்கிறது. கடைசியில் சாஹம்பரியின் மன்னரான அஜய தேவரின் மனைவி சோமலேகா என்பவர் (சுமார் கி.பி. 1133) வெளியிட்ட நாணயங்களில் முன்புறம் குதிரை வீரனின் சின்னமும் பின்புறம் ராணியின் பெயரும் உள்ளது.

தங்க நாணயங்கள் வெளியிடப்பட்டு, சுமார் முன்னூறு அல்லது நானூறு ஆண்டுகள் மறைந்த பின், மறுபடியும் காலசூரி என்ற வமிசத்தைச் சேர்ந்த காங்கேயதேவர் எனப்படும் மன்னர் (கி.பி. 1015-1045) திரிபுரியை ஆண்டபோது, தங்க நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டார். இத் தங்க நாணயங்களில் ஒருபுறம் நான்கு கரங்கள் கொண்ட லட்சுமி, தன் மேலிரண்டு கரங்களில் தாமரை மலர்களை ஏந்தி, கால்மேல் கால் வைத்து அமர்ந்திருக்கும் காட்சி பொறிக்கப்பட்டுள்ளது; மறுபுறம் **ஸ்ரீமத் காங்கேய தேவ** என்ற வாசகம் பெரிய நாகரி எழுத்துக்களில் மூன்று வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வகைச் சின்னமுள்ள நாணயங்களை வெள்ளியிலும் செம்பிலும்கூட அச்சிட்டு வெளியிட்டார். இவ்வாருக, இந் நாணயங்கள் அனைத்தும் சுத்தமான தங்கம், வெள்ளி, செம்பு நாணயங்களாகக் கருதப் பட்டாலும், பார்ப்பதற்குச் சில சுத்தத் தங்கமாகவும், வேறு சில கலப்படத் தங்கமாகவும், மேலும் சில வெள்ளி போன்ற தங்கமாகவும், ஏனையவை சுத்த வெள்ளி போன்ருே அல்லது சுத்த செம்பு போன்ருே பல மாதிரியாகத் தோன்றுகின்றன. எனவே, இந் நாணயங்க

ளனைத்தும் மூன்று உலோகங்களில்தான் செய்யப்பட்டுள்ளன வென்றும், குறிப்பிட்ட திட்டத்தில் வெளியிடப்பட்டவை யென்றும் கூற முடியாத அளவுக்கு இவை அதிக வித்தியாச மின்றி உள்ளன. அதே போல் இவற்றிலுள்ள லட்சுமியின் உருவங்கூடச் சிலவற்றில் பிரமாதமாகவும் வேறு சிலவற்றில் ஏனோதானோவென்றும், ஏனையவற்றில் இவ்விரண்டுக்கும் இடைப் பட்ட நிலைகளிலும் பொறிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும் போது கங்கேய தேவர் ஆட்சி செய்த இருபத்தைந்து ஆண்டு களில் சின்னம் பொறிக்கும் கலையும் உலோகத்தைக் கலப்படம் செய்யும் முறையும் இவ்வளவு மோசமான நிலைக்கு வந்திருக்க முடியாதெனத் தோன்றுகிறது. எனவே, காங்கேய தேவர் இறந்த பின்னர்கூட இவ்வகை நாணயங்களை அவரது பெயருடன் மற்றவர்கள் வெளியிட்டிருக்க வேண்டும்.

காங்கேய தேவர் பயன்படுத்திய லட்சுமியின் உருவத்தைப் பிற்காலத்திய மன்னர்களில் சிலர் தங்கள் கலப்படமான தங்க, வெள்ளி நாணயங்களில் பயன்படுத்தியிருக்கின்றனர். இந் நாண யங்களைத் தங்க நாணயங்கள், வெள்ளி நாணயங்கள் என்றழைப் பதைவிட, தங்கமும் வெள்ளியும் கலந்த, வெள்ளியும் செம்பும் கலந்த நாணயங்களென்று அழைப்பதுதான் பொருத்தமாகும். லட்சுமியின் சின்னத்தை முதன்முதலில் பின்பற்றியவர்கள் பரமார மன்னரான உதயாதித்தியரும் (உதயதேவர்) (கி.பி. 1059-1080), மாளவ மன்னரான நரவர்மனும் (கி.பி. 1097–1134) ஆவர். அதன் பின்னர் ஜேஜாகபுக்தியைச் சேர்ந்த சந்தேலர்கள் தொடர்ந்து கி.பி. பதினொன்றும் நூற்றாண்டு முடியும் வரை, ஏறக்குறைய இருநூறு ஆண்டு களாக இச் சின்னத்தையே தம் நாணயங்களில் பயன்படுத்தி வந்தனர். வேறு சில மன்னர்கள்கூட இச் சின்னம் பொறித்த நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர் ; அவர்களில் கஹதவாலர் வமிசத்தைச் சேர்ந்த கோவிந்தசந்திர தேவர் (கி.பி. 1114-1154), சஹமன வமிசத்தைச் சேர்ந்த அஜயராஜன், (சுமார் கி.பி. 1133) பயானாவின் யது வமிசத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படும் அஜயபாலர், குமாரபாலர், மஹிபாலர் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

இவ்வாறாக, கி.பி. பதினொன்று பன்னிரண்டாம் நூற்றாண்டு

களில் வெளியான நாணயங்களில் லட்சுமி, காளை, குதிரை வீரன் ஆகிய சின்னத்தை ஏதாவதொரு வமிசத்தினர் தொடர்ச்சியாகப் பயன்படுத்திவந்தனர் என்று தெரிகிறது. பிற்காலத்திய நாணயங்களில்கூட இச் சின்னம்தான் செல்வாக்குப் பெற்று விளங்கியுள்ளது. சான்றாக, முகமது கோரி என அழைக்கப்படும் முகமது பின் சாம் என்பவர் டில்லி சுல்தானாக இருந்தபோது வெளியிட்ட நாணயங்களில் லட்சுமியின் உருவம் பொறிக்கப் பட்டுள்ளது. அதோடு மட்டுமன்றி, அவர் வெளியிட்ட வெள்ளி கலந்த செம்பு நாணயங்களில் காளையின் சின்னமும் குதிரை வீரனின் சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளன. அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த வேறு சிலர்கூட இச் சின்னத்தையே பயன் படுத்தியிருக்கின்றனர். மேலும், கங்ராவில் ஆட்சி செய்த பிற்கால மன்னர்கள்கூட இச் சின்னத்தை அரைகுறையாகப் பொறித்து, தம் நாணயங்களை வெளியிட்டுள்ளனர்.

இக்காலத்திய நாணயங்களில் வேறு இருவகைச் சின்னங்கள் கூடப் பயன்பட்டிருக்கின்றன. இவற்றில் ஒருவகைச் சின்னம் பொறித்த நாணயங்களைக் கி.பி. பன்னிரண்டாம் நூற்றூண்டில் ரத்தினபுரியை ஆட்சி செய்த காலசூரி வமிசத்தினர் வெளி யிட்டனர். இவற்றில் முன்புறம் ஒரு சிங்கம் யானையைத் தாக்குவது போன்ற சின்னம் உள்ளது; பின்புறம், கங்கேய தேவரின் பாணியில் அவர்களது பெயர்கள் பெரிய நாகரி எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன. காலசூரி வமிசத்தினரின் காலத்திலேயே பஸ்தரில் ஆட்சிபுரிந்த நாகர்கள் இரண்டாவது வகைச் சின்னம் பொறித்த நாணயங்களை வெளியிட்டனர். இவர் களது நாணயங்களில் முன்புறம், இக் குலத்தவரின் சின்னமான முழக்கமிடும் புலியும் **(வியாக்ரம்)**, அதற்குக் கீழே பட்டாக் கத்தியும், மேலே சந்திரனும் பொறிக்கப்பட்டுள்ளன; பின்புறம் இவர்களின் பெயர்கள் உள்ளன. ரத்தினபுரி மன்னர்கள் வெளியிட்ட சில செம்பு நாணயங்களில் அனுமார் பறந்து போவது போல், அல்லது அரக்கனை மிதித்து அழிப்பதுபோன்ற சின்னம் உள்ளது. இச் சின்னத்தைச் சந்தேல மன்னர்கள் வெளி யிட்ட செம்பு நாணயங்கள் சிலவற்றிலும் காணலாம். இவ்விரு வகைச் செம்பு நாணயங்களிலும் பின்புறம் பெயர் பொறிக்கப் பட்டுள்ளது.

அதிகாரம் 10

பிற்காலத் தென்னிந்திய நாணயங்கள்

கி.பி. ஏழாம் நூற்றுண்டிலிருந்து பத்தாம் நூற்றுண்டு வரையுள்ள தென்னிந்திய நாணய வரலாறு குழப்பமானதாயுள்ளது என்பதை முன்னரே குறிப்பிட்டோம். பத்தாம் நூற்றுண்டிற்குப் பிந்திய வரலாறுகூட அவ்வளவு தெளிவாக இல்லை. இதுவரை எவ்வளவோ தென்னிந்திய நாணயங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன ; எனினும் அவற்றையெல்லாம் யார் யார் வெளியிட்டது என்பது தெளிவாக இல்லை. பெரும்பாலும், தென்னிந்திய நாணயங்களில் அவற்றை வெளியிட்ட வமிசத்தினரின் கட்டியச் சின்னங்கள்தான் இருக்குமெனக் கூறுவர் ; ஆனல் எல்லா நாணயங்களிலும் அப்படியொன்றும் கிடையாது. சில சமயங்களில், ஒரு வமிசத்தினர் பயன்படுத்திய சின்னங்களை வேருெரு வமிசத்தினரின் நாணயங்களிலும் காணலாம். மேலும், சிங்கம், காளை, யானை போன்ற விலங்கினச் சின்னம் கொண்ட நாணயங்களும் ஏராளமாக இருக்கின்றன. இச் சின்னங்கள் பழங்காலத்திலிருந்தே தென்னிந்திய நாணயங்களில் பயன்பட்டு வந்திருப்பதால், இவற்றைத் தென்னிந்திய பொதுவான பரம்பரைச் சின்னங்களென அழைக்கலாம். தென்னிந்திய நாணயங்களில் பெரும்பாலும் வாசகமே கிடையாது ; அப்படியிருந்தாலும், அது சுருக்கமானதாகத்தானிருக்கும். பெரும்பாலும், இவ் வாசகம் அரசரின் பெயரின் ஒரு பகுதியாகவோ அல்லது அவரின் பட்டப் பெயராகவோதான் இருக்கும். (ஒருசில நாணயங்களில் மட்டுமே அரசரின் முழுப் பெயரையும் காணலாம்). இதனுல் இந் நாணயங்களை யார் வெளியிட்டது என்று தீர்மானமாகக் கூறமுடியவில்லை. இந் நாணயங்கள் எந்த இடத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன

என்பதைக் கொண்டு இவற்றை எந்த வமிசத்தினர் அல்லது மன்னர் வெளியிட்டிருக்கக்கூடுமென்று நாமே ஊகித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் இம் முறை சரியானதென்று கூற முடியாது, ஏனெனில், சில சமயங்களில் இடத்தைக்கொண்டு ஊகிப்பதற்குக்கூடப் போதுமான தகவல்கள் கிடைப்பதில்லை.

எது எவ்வாறிருப்பினும், இக் காலத்தில் வெளியான தென்னிந்திய நாணயங்களில் சிறப்பானதோர் அம்சம் உண்டு. அதாவது, கிறிஸ்து பிறப்பிற்கு முந்தைய பழங்காலத்தில் வெளியான வெள்ளி, செம்பு நாணயங்களில் எந்த முறையில் முத்திரையிடப்பட்டதோ, அதே முறைதான் இக் காலத்திலும் பயன்படுத்தப்பட்டது. இம் முறையைச் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின், அதாவது, கி.பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து பதினொன்றும் நூற்றாண்டின் தொடக்கம் வரை மைசூரிலும் கன்னடத்தில் குடியமர்ந்த கதம்பர்கள்தாம் மறுபடியும் புகுத்தினர். அதாவது, முத்திரைப் பொறியை நாணயத்தின் மையத்தில் வைத்துச் சுத்தியலால் அடித்துத்தான் சின்னங்களைப் பொறித்திருக்கின்றனர். சில சமயங்களில் பலமாக அடித்ததன் விளைவாகச் சில நாணயங்கள் குழிவாக ஆகியிருக்கின்றன. தென்னிந்திய நாணயங்களில் இம் மையச் சின்னத்தைச் சுற்றிலும், தனித்தனி முத்திரைப் பொறிகளைக்கொண்டு பல்வேறு சின்னங்களையும் பொறித்திருக்கின்றனர். இவ்வாறு முத்திரையிடப்பட்ட காரணத்தால் இந் நாணயங்களை "முத்திரையிட்ட தங்க நாணயங்கள்" என்று அக்காலத்திய ஆசிரியர்கள் வழங்கினர். ஆனால் பழங்காலத்து நாணயங்களுக்கும் இக்காலத்து நாணயங்களுக்கும் வித்தியாசமிருக்க வேண்டுமென்பதற்காக இந் நாணயங்கள் **பத்ம தங்கம்** என வழங்கப்படுகின்றன. இந் நாணயங்களின் மையத்தில் தாமரை மலர்ச் சின்னம் இருப்பதால்தான் இப் பெயர், கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது; ஆனால் எல்லா நாணயங்களிலும் இச் சின்னம் கிடையாது.

கதம்பர்கள் வெளியிட்ட தங்க நாணயங்களில் முந்தியவற்றில் முன்புறம், பெரிய தாமரை மலரின் சின்னம் முத்திரையிடப்பட்டுள்ளது; மறுபுறம், சிறியதாக ஆறு சின்னங்கள் பொறிக்கப்

பட்டுள்ளன. இவ்வாறாக, இந் நாணயங்களில் முத்திரையிடும் முறையும், ஒரே அச்சால் சின்னங்கள் பொறிக்கும் முறையும் சேர்ந்து பயன்படுத்தப்பட்டிருப்பது விநோதமாக உள்ளது. இவற்றில் பின்புறமுள்ள ஆறு சின்னங்களில் நான்கு கொஞ்சம் பெரியதாயும் மற்ற இரண்டும் சற்றுச் சிறியதாயும் இருக் கின்றன. இந்த நான்கிலும் சிறிய மலர்ச்சின்னம்தான் உள்ளது. ஏனைய இரண்டும் வெறுமையாக இருக்கின்றன. இவ்வகைச் சின்னமுள்ள நாணயங்களைக் கதம்பர்கள் மட்டுமன்றி, மேலைச் சாளுக்கியர்களும் கீழைச் சாளுக்கியர்களும், சோழர்களும், வேறு பல மன்னர்களும், கடைசியில் தேவகிரியைச் சேர்ந்த யாதவர் களும் வெளியிட்டிருக்கின்றனர்.

கீழைச் சாளுக்கிய மன்னர்களில் முதலாம் ராஜராஜர் (கி.பி. 1019 – 1059) வெளியிட்ட நாணயங்களில், மையத்தில் இடது சாயலாக நிற்கும் ஒரு காட்டுப்பன்றியும், இருபுறமும் இரண்டு விளக்குத்தாங்கிகளும், அவற்றைச் சுற்றிலும் அங்குசம், குடை, இரண்டு வெண்சாமரங்களும் கொண்ட அவர்களது குலச் சின்னமே உள்ளன. இக் குலச் சின்னத்தைச் சுற்றி, நாணயத்தின் ஓரமாக **ராஜ ராஜர்** என்ற வாசகமும் ஓர் எண்ணும் பொறிக்கப் பட்டுள்ளன. இவ் வாசகத்திலுள்ள ஒவ்வொரு எழுத்தும் தனித் தனி முத்திரைப் பொறியால் பொறிக்கப்பட்டிருக்கிறது. இந் நாணயங்கள் சாளுக்கிய நாட்டில் மட்டுமன்றி, சையாமிலும், பர்மாவிலுள்ள அரக்கான் கடற்கரை, அதன் சமீபத்தில் இருக்கும் ரும்ரி, செடுபா தீவுகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதி லிருந்து இவை எவ்வளவு செல்வாக்குப் பெற்று வெளிநாடுகளிலும் புழங்கியதென்று தெரிகிறது. சாளுக்கிய மன்னராக இருந்த சக்தி வர்மர் (கி.பி. 1000–1012) வெகு நாட்களுக்கு முன்பே இவ்வகை நாணயங்களை வெளியிட்டார். மேலும், இவ்வகைச் சின்னம் கொண்ட நாணயங்கள் சிலவற்றில் **ஸ்ரீ சூல நாராயணர், ஸ்ரீ சால்குராயனர்** ஆகிய பெயர்களும் உள்ளன. இவ்விருவரில் ஸ்ரீ சூல நாராயணரின் நாணயங்களில் மையத்திலுள்ள காட்டுப் பன்றி வலப்புறமாகத் திரும்பியுள்ளது; ஸ்ரீ சால்குராயனரின் நாணயங்களில் மையத்தில் ஒரு புலியும் **வெண்சாமரம் கொண்டுள்ள மனிதனும்** இருக்கின்றனர். சாளுக்கிய வமிசச் சின்னமான காட்டுப்

பன்றியின் உருவமுடைய சில நாணயங்களில் முதலாம் ராஜராஜ சோழன் என்ற வாசகம் உள்ளது. அதே போல் சோழவமிசத்தினரின் புலிச்சின்னமுள்ள நாணயங்கள் சிலவற்றில் சாளுக்கிய மன்னரான முதலாம் சக்திவர்மனின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு, சாளுக்கிய நாணயங்களில் சோழவமிசச் சின்னத்தையும், சோழர்களின் நாணயங்களில் சாளுக்கியச் சின்னத்தையும் பார்க்கும்போது வியப்பாக இருக்கலாம். ஆனால், இவ்விரு வமிசத்தினருக்குமிடையே இருந்த உறவைத் தெரிந்து கொண்டால், இதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. வேங்கி நாடு சோழப் பேரரசரின் பாதுகாப்பில் இருந்தபோது, முதலாம் ராஜராஜ சோழன் வெளியிட்ட நாணயங்களில் சாளுக்கிய மன்னரான **ஸ்ரீ சூல நாராயணர்** என்ற பெயரைப் பொறித்திருக்கலாம். அதே போல், சாளுக்கிய மன்னரான முதலாம் சக்திவர்மன் வெளியிட்ட நாணயங்களில் **ஸ்ரீ சால்குராயனர்** என்ற பெயரில் சோழநாட்டுச் சின்னத்தையும் நன்றிக் கடனாய்ப் பொறித்திருக்கலாம்.

கீழைச் சாளுக்கியச் சிற்றரசராக இருந்த முதலாம் ராஜேந்திர குலோத்துங்கன் (கி.பி. 1070–1118) சோழநாட்டு மன்னராகவும் ஆட்சிசெய்தபோது வெளியிட்ட நாணயங்களும் கிடைத்துள்ளன. இவற்றில் மையச் சின்னமாக இரண்டு மீன்களும், நாய் போல் அமர்ந்துள்ள புலியுமிருக்க, இவற்றின் இரு புறத்திலும் இரண்டு அம்புகளும், மேலே ஒரு குடையும் வெண்சாமரமும் முத்திரையிடப்பட்டுள்ளன. இந் நாணயங்களின் ஓரத்தில் (கடாரம் வென்ற) **கடாரங் கொண்ட சோழன்** என்ற சிறப்புப் பெயரோ, அல்லது (மலை நாட்டை வென்ற) **மலைநாடு கொண்ட சோழன்** என்ற பட்டப் பெயரோ பொறிக்கப்பட்டுள்ளன. இவ்விரு பெயர்களும் கடாரத்தையும் (கிழக்கில் இருக்கும் கெடா), கேரளாவையும் வென்றதன் நினைவாகக் குலோத்துங்கனுக்குக் கொடுக்கப்பட்ட பட்டப் பெயர்களாகும்.

மேலைச் சாளுக்கிய மன்னர்களில் இரண்டாம் ஜெயசிம்மர் (ஜகத்தேகமல்லர், கி.பி. 1015–1043), முதலாம் சோமேஸ்வரர் (த்ரைலோக்யமல்லர், கி.பி. 1043–1063), இரண்டாம் சோமேஸ்வரர் (புவனேகமல்லர், கி.பி. 1068–1078), ஆறும் விக்கிர

மாதித்தியர் (கி.பி. 1076–1122) ஆகிய நால்வரும் முத்திரையிட்ட தங்க நாணயங்களை வெளியிட்டனர். இவற்றில் இரண்டாம் ஜெயசிம்மரின் நாணயங்களில் ஒரு சக்கரம் போன்ற வட்டமும், அவ் வட்டத்தின் நடுவில் கோபுரமுள்ள பெரிய கோயிலும் உள்ளன; இந் நாணயங்களின் ஓரத்தில் தனித்தனி பொறிகளைக் கொண்டு தீட்டப்பட்ட அவரது பட்டப் பெயர் உள்ளது. வேருெரு வகை நாணயங்களையும் அவர் வெளியிட்டதாகத் தெரிகிறது. இவற்றில் தனித்தனி பொறிகளால் போடப்பட்ட ஐந்து சின்னங்களும், தனித்தனி பொறிகளால் பொறிக்கப்பட்ட அவரது பட்டப்பெயரும் உள்ளன. அவருக்குப்பின் ஆட்சி செய்த மன்னர்கூட இதே சின்னங்களைப் பயன்படுத்தியிருக்கிருர். அதன்பின், அரியணை ஏறிய இரண்டாம் சோமேஸ்வரர் வெளியிட்ட நாணயங்களில் ஒன்பது சின்னங்கள் முத்திரையிடப்பட்டுள்ளன. அதாவது, தாமரைமலர்ச் சின்னம் ஐந்தும், கன்னடப் பாணியில் **ஸ்ரீ** என்று முத்திரையிடப்பட்ட சின்னம் இரண்டும், எட்டாவது சின்னமாகச் சூரியனும் சந்திரனும், ஒன்பதாவதாக அவரது பெயரும் உள்ளன. அவருக்குப்பின் அரியணை ஏறிய ஆரும் விக்கிரமாதித்தியரின் நாணயங்களில், ஏனைய எட்டுச் சின்னங்களும் அப்படியே பொறிக்கப்பட்டு, ஒன்பதாவது சின்னமான பெயர்மட்டும் **புஜ** என்று மாற்றப்பட்டுள்ளன. சாளுக்கிய ஆட்சியைக் கைப்பற்றிய பிஜ்ஜால திரிபுவனமல்லர் (கி.பி. 1156–1181) வெளியிட்டதாகக் கருதப்படும் நாணயங்களில்கூட ஏனைய எட்டுச் சின்னங்களும் அப்படியே இருக்கின்றன; வாசகம் மட்டும் **காலசூரி** என்று மாற்றப்பட்டுள்ளது. இதேபோன்று ஒன்பது சின்னங்கள் முத்திரையிடப்பட்ட வேறு சில நாணயங்களும் கிடைத்துள்ளன, ஆனல் இவற்றிலுள்ள வாசகம் தெளிவாக இல்லாததால் இவற்றை வெளியிட்ட மன்னரோ வமிசத்தினரோ யாரென்று தெரியவில்லை.

வேறுவகையான ஒன்பது சின்னங்கள் கொண்ட நாணயங்களும் உள்ளன. இவற்றின் நடுவில் அனுமாரின் உருவமும், அதைச் சுற்றி, தனித்தனியாக முத்திரையிடப்பட்ட நான்கு சிங்கங்களும், கன்னடப் பாணியில் **ஸ்ரீ** என்ற எழுத்து இரண்டும், எட்டாவது

சின்னமாக **அங்குசமும்**, கடைசிச் சின்னமாக **கூக** என்ற வாசகமும் இருக்கின்றன. இந் நாணயங்களைப் பார்க்கும்போது, இவற்றைக் கதம்பர் வமிசத்தில் ஒரு பிரிவினரான ஹங்கலர்கள்தான் வெளியிட்டிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது; ஏனெனில் அனுமாரின் உருவத்தைத் தமது கேடயச் சின்னமாகப் பயன் படுத்தியவர்கள் ஹங்கலர்கள்தான்.

எவ்வித வாசகமுமின்றி ஆறு சின்னங்கள்மட்டும் கொண்ட சில நாணயங்களும் இருக்கின்றன. இவற்றில் மையச் சின்னமாக ஒரு காட்டுப்பன்றி உள்ளது; ஏனைய ஐந்து சின்னங்களில் இரண்டு **ஸ்ரீ** என்ற எழுத்தும், அடுத்த சின்னமாக ஒரு தாமரை மலரும், நான்காவது சின்னமாக ஒரு **சங்கும்**, கடைசிச் சின்னமாக ஓர் அம்பும் உள்ளன. வேறொரு வகை நாணயங்களில் ஐந்து முத்திரைகள் உள்ளன. இவற்றில் மைய முத்திரைச் சின்னமாக யானை உருவம் உள்ளது; ஏனைய இரண்டு முத்திரைகள் **ஸ்ரீ** என்ற எழுத்தையும் எஞ்சிய இரண்டும் **பவன, கடவர்** என்ற தெலுங்கு வாசகங்களையும் கொண்டிருக்கின்றன. நான்கு முத்திரை மட்டும் உள்ள மற்றொரு வகை நாணயங்களும் கிடைத்துள்ளன. இவற்றில் **ஸ்ரீ** என்ற எழுத்தில் இரண்டு சின்னங்களும், கோயில் போன்று அல்லது மகுடம் போன்று தெரியும் சின்னம் மூன்றாவதாகவும், **இராயணு** என்ற வாசகம் கடைசிச் சின்னமாகவும் முத்திரையிடப்பட்டுள்ளன. இந் நாணயங்களையெல்லாம் யார், எந்த வமிசத்தினர் வெளியிட்டதென்று தெரியவில்லை.

தேவகிரியை ஆட்சி செய்த யாதவர்கள்கூட முத்திரையிட்ட தங்க நாணயங்களை வெளியிட்டுள்ளனர். யாதவர்களில் முதல் மன்னராக ஆட்சி செய்த ஐந்தாம் பில்லமர் (கி. பி. 1185–1193) வெளியிட்ட நாணயங்களிலும் ஒன்பது சின்னங்கள் உள்ளன. இவற்றில் ஐந்து சின்னங்களில் சிங்கமும், **ஸ்ரீ** என்ற எழுத்தில் இரண்டு சின்னங்களும், எட்டாவது சின்னத்தில் **சங்கும்**, கடைசியில் இரண்டு வரிகளில் **பில்லம தேவர்** என்ற நாகரி வாசகமும் உள்ளன. அடுத்து, சிங்கணர் என்ற மன்னர் (கி. பி. 1200–1247) முதலில் வெளியிட்ட நாணயங்களில் ஆறு சின்னங்களும், பிற்காலத்தில் வெளியிட்டவற்றில் ஐந்து சின்னங்களும் காணப்படுகின்றன. முதலில் வெளியிட்ட நாணயங்

களில் மையத்தில் நடனமாடுவது போன்ற உருவம் உள்ளது; (இது ஒருவேளை கிருஷ்ணரின் உருவமாக இருக்கலாம்). ஏனைய ஐந்து சின்னங்களில் இரண்டு ஸ்ரீ என்ற எழுத்திலும், மூன்றுவது தாமரை மலராகவும், நான்காவது சங்காகவும், கடைசிச் சின்னத்தில் **ஸ்ரீ சிங்கண** என்ற நாகரி வாசகமாகவும் இருக்கின்றன. பின்னர் வெளியிட்ட நாணயங்களில் மையத்தில் தாமரைச் சின்னம் உள்ளது; ஸ்ரீ என்ற எழுத்தில் இரண்டும், நான்காவதாகச் சங்கும், கடைசியாக, அவரது பெயர் நாகரியிலும் இருக்கின்றன. அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த கிருஷ்ணர் (கி.பி. 1247–1261), மகாதேவர் (கி.பி. 1261–1271), ராமச்சந்திரர் (கி.பி. 1271–1310) எனப்பட்ட மன்னர்கள்கூட இவ்வகைச் சின்னங்களையே தமது நாணயங்களில் பொறித்திருக்கின்றனர். ராமச்சந்திரரின் வேறு சில நாணயங்களில் நடுவில் கருடனும், **ராமச்ச** என்ற வாசகமும் காணப்படுகின்றன. யாதவர்களின் சின்னங்களைப் போல் பொறிக்கப்பட்ட தனியொரு நாணயம் கிடைத்திருக்கிறது. ஏனைய நான்கு சின்னங்களும் அப்படியே இருக்க, ஐந்தாவது சின்னமாக வாசகம் மட்டும் **ஸ்ரீ லட்சுமி** என்று நாகரியில் பொறிக்கப்பட்டுள்ளது. ஒருவேளை, இதைச் சிங்கணர் காலத்தில் பம்பகிரி ஆபீரரின் தலைவராக இருந்த லட்சுமிதேவர் வெளியிட்டிருக்கலாம்.

சதாரா என்ற மாவட்டத்திலிருந்து நூதமான V வடிவமுள்ள சில தங்க நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் மூன்று சின்னங்கள்தான் முத்திரையிடப்பட்டுள்ளன. இவற்றின் இரு கூறுகளிலும் கன்னட வாசகமும், அவை ஒன்று சேருமிடத்தில் யானை அல்லது காட்டுப்பன்றியும் உள்ளன. இவற்றிலுள்ள கன்னட வாசகத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவேளை, இந் நாணயங்கள் பதினொன்றும் நூற்றுண்டில் வெளியிடப்பட்டிருக்கலாம்; ஆனால் இவற்றைச் சாளுக்கியர்கள் தாம் வெளியிட்டனராவென்பது சந்தேகம்.

அதேசமயம், ஒரே அச்சுகளால் பொறிக்கப்பட்ட சில நாணயங்களும் இப் பகுதியில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஒரு புறம் மட்டும் சின்னமுள்ள நாணயங்களும், இருபுறமும் சின்னங்களுள்ள நாணயங்களும் உள்ளன; அதே போல்

வாசகமுள்ள நாணயங்களும் வாசகமேயில்லாத நாணயங்களும் இருக்கின்றன. இவற்றைப்பற்றிய விவரம் ஒன்றுமில்லாததால் யார் இவற்றை வெளியிட்டதென்று கூற முடியவில்லை. கோவாவை ஆண்ட கதம்பர்கள்கூடப் பெரும்பாலும் ஒரே அச்சுகளால் பொறிக்கப்பட்ட நாணயங்களைத்தான் வெளியிட்டனர். இவற்றில் முதலாம் ஜயகேசியின் (சுமார் கி.பி. பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதி) நாணயங்கள் இரண்டுவிதமான சின்னங்கள் கொண்டவை. ஒரு வகையில் **கஜ—சார்தூலமும்** (சிங்கம்—யானை), வேறொரு வகையில் வலது சாயலாகத் திரும்பியுள்ள சிங்கமும் உள்ளன. இவ்விரு வகை நாணயங்களிலுமே பின்புறத்தில் திரிசூலமும் **ஸ்ரீ மலைகை பைரவர்** என்ற நாகரி வாசகமும் உள்ளன. அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த சோயிதேவர் வெளியிட்ட நாணயங்களில் முன்புறத்தில் ஒரு சிங்கமும் **ஸ்ரீ சோயி** என்ற நாகரி வாசகமும் உள்ளன; பின் புறத்தில் திரிசூலத்தையும் **ஸ்ரீ மலஹரமாரி** என்ற வாசகத்தையும் காணலாம். அதோடு, வேறொரு தங்க நாணயங்களையும் சோயி தேவர் வெளியிட்டிருக்கிறார். இவற்றில் முன்புறம், பெரிய ஆண்சிங்கம் ஒன்றும் வருடத்தின் பெயரும் உள்ளன; பின்புறம், **ஸ்ரீ சப்தகோடீச லப்தவீர** என்று தொடங்கி, அதன்பின் அவரது பெயரும், கடைசியில் மலஹரமாரி என்ற பட்டத்தோடு முடியும் நீண்ட வாசகம் நாகரியில் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வகை நாணயங்கள் சில சிவசித்தர், ஹெம்மடிதேவர் என்ற பெயர்களிலும் வெளியிடப்பட்டுள்ளன.

ஹொய்சள விஷ்ணுவர்த்தனர் (கி.பி. 1115–1159), நரசிம்மர் (கி. பி. 1159–1171) ஆகிய இருவரும்கூட அச்சுகளால் பொறித்த தங்க நாணயங்கள் வெளியிட்டிருக்கின்றனர். விஷ்ணுவர்த்தனர் வெளியிட்ட நாணயங்கள் இருவகைப்படும். ஒருவகை நாணயங்களில் முன்புறம் சிங்கமும், பின்புறம் **ஸ்ரீ தலகாடுகொண்ட** என்ற பட்டப்பெயரும் உள்ளன. இரண்டாவது வகை நாணயங்களில் முன்புறம், சிங்கத்தின்மீது அமர்ந்திருக்கும் சாமுண்டேஸ்வரியும், பின்புறம் **ஸ்ரீ நானம்பவாடி கொண்ட** என்ற பட்டப் பெயரும் இருக்கின்றன. இவ்விரண்டாவது வகை நாணயங்களை நரசிம்மரும் வெளியிட்டார்; ஆனால் அவரது நாணயங்களில்

ஸ்ரீ பிரதாப நரசிம்மர் என்ற வாசகம் உள்ளது. நிற்க, முன்புறம் மொட்டைத் தலையுள்ள ஒருவன் தன் கையில் நீண்ட வாளுடன் தோன்றும் சில நாணயங்களும் இருக்கின்றன; இவற்றில் பின்புறம், **நிகலம்—கமல—தண்டி—நாகோவா** என்ற கன்னட வாசகம் உள்ளது. இந் நாணயங்களைக் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் பீஜப்பூர், பெல்காம், தார்வார் ஆகிய பகுதிகளில் ஆட்சி செய்த பர்ம-பூபாலர் வெளியிட்டதாகத் தெரிகிறது. மேலும், வீரபத்திர ஸ்வாமியின் உருவமும் **வைரிமார்த்தாண்டர்** என்ற நாகரி வாசகமும் பொறிக்கப்பட்ட வேறு சில நாணயங்களும் கிடைத்துள்ளன; ஆனால் இவற்றை யார் வெளியிட்டதென்று தெரியவில்லை.

வாசகமேயில்லாத ஒரு சில தங்க நாணயங்களும் இருக்கின்றன. அதோடு, மிகச் சிறிய சில நாணயங்களும் கிடைத்துள்ளன. இவற்றில் முன்புறம் கைப்பிடியில்லாத திரிசூலமும் அந்தத் திரிசூலத்திலுள்ள மூன்று கத்திகளுக்கிடையில் சூரியனும் சந்திரனும், பின்புறத்தில் கருடனும் காணப்படுகின்றன. இவற்றைக் கோலாபூரில் ஆட்சி செய்த சிலஹாரர்கள் வெளியிட்டதாகத் தெரிகிறது. மேலும், முன்புறம் யானையும், பின்புறம் இரண்டடுக்குக் கோயிலும் உள்ள வேறு சில நாணயங்களும் கிடைத்துள்ளன; ஆனால் இவை யாருடையதென்று தெரியவில்லை. வாசகமேயில்லாத மூன்று வகை நாணயங்களும் கிடைத்துள்ளன. இவற்றில் முன்புறம் அணிமணி பூட்டப்பட்ட யானையும், பின்புறம் பூப்போன்ற சுருளும் பொறிக்கப்பட்டுள்ளன. "கஜபதி பகோடாக்கள்" என அழைக்கப்படும் இந் நாணயங்கள் பெரும்பாலும் மைசூர்ப் பகுதியிலிருந்துதான் கிடைத்துள்ளன. ஆனால், இதுபோன்ற நாணயங்களைக் காஷ்மீரின் மன்னராக இருந்த ஹர்ஷரும் (கி.பி. 1089-1111) வெளியிட்டிருக்கிறார். எனினும், அவரது நாணயங்கள் கர்நாடக நாணயங்களைப் பின்பற்றி உருவாக்கப்பட்டதாக **இராஜதரங்கிணி** என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இந் நாணயங்களைக் கங்கர்கள் என்ற இனத்தவர்தான் வெளியிட்டிருக்கலாமென்று தெரிகிறது. ஆனால் இவை இன்றும்கூட ஏராளமாகக் கிடைக்கின்றன; இவற்றைப் பார்த்துக் கழுத்தணிகள்கூடச் செய்யப்

படுகின்றன. இதனால் இவற்றை யார் வெளியிட்டதென்பதில் சந்தேகம் எழுந்துள்ளது. விஜயநகர வமிசத்தினரான மல்லிகார்ஜுனர்கள் தான் இவற்றை வெளியிட்டனரென்று அறிஞர் ஒருவர் கூறுகிறார். எனவே இவற்றை வெளியிட்டோரைப்பற்றி ஒன்றும் உறுதியாகத் தெரியவில்லை. ஒரிசாவில் கிடைத்துள்ள சில சிறிய தங்க நாணயங்களில் முன்புறம் படுத்திருக்கும் காளையின் சின்னமும், பின்புறம் தெலுங்கு வருடமும் உள்ளன. இவற்றை, (ஒரிசாவிலுள்ள)கலிங்கத்தில் குடியமர்ந்து, பின்னர்க் கி.பி. ஆறும் நூற்றாண்டிலிருந்து பதினொன்றும் நூற்றாண்டுவரை கலிங்கத்தில் ஆட்சி செய்த கங்கர்கள் வெளியிட்டதாகத் தெரிகிறது.

தமிழ் நாட்டில் சீரும் சிறப்பும் பெற்று ஆட்சி நடத்திய சோழ மன்னர்கள் சில தங்க நாணயங்களை வெளியிட்டனர். ஆனால், இவை அவர்களுடைய சிறப்பிற்கேற்றாற்போலில்லாமல் கலப்படமான தங்கத்தால் செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு சில நாணயங்கள் வெறும் முலாம் பூசப்பட்டவையாயுள்ளன. எனினும், தென்னிந்தியாவிலேயே தரமான வெள்ளி நாணயங்களை வெளியிட்ட பெருமைக்குரியவர்கள் சோழர்கள்தான். ஆனால், அவர்கள் வெளியிட்ட வெள்ளி நாணயங்கள் கிடைப்பது கடினம். சோழமன்னர்களின் தங்க நாணயங்களிலும், வெள்ளி நாணயங்களிலும் ஒரேவிதமான சின்னங்கள்தான் உள்ளன. சோழ மன்னர்களில் உத்தம சோழர்தான் முதன்முதலில் தங்க நாணயங்களையும் வெள்ளி நாணயங்களையும் வெளியிட்டவர். இவற்றில் ஒருபுறம் அவரது பெயர் நாகரியில் பொறிக்கப்பட்டுள்ளது; மறுபுறம் நடுவில் ஒரு குடையும், இருபுறமும் அக் குடையை நோக்கியுள்ள இரண்டு வெண்சாமரங்களும், அக் குடைக்கிடையில் வரிசையாகப் பொறிக்கப்பட்ட குத்துவிளக்கு, வில், அமர்ந்திருக்கும் புலி, ஒரு கோடு, இரு நீண்ட மீன்கள் ஆகியவை உள்ளன. உத்தம சோழருக்குப்பின் ஆட்சிக்கு வந்த முதலாம் ராஜராஜ சோழர் (கி.பி. 985–1016) வெளியிட்ட தங்க, வெள்ளி நாணயங்களிலும் இதே சின்னங்கள்தான் இருபுறமும் முத்திரையிடப்பட்டுள்ளன; அவரது பெயர் மட்டும்தான் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. ராஜேந்திர சோழர் (கி.பி. 1011–1043)

வெளியிட்ட நாணயங்களிலும் இதே சின்னங்கள் தான் உள்ளன. ஆனால் இவற்றில் **ஸ்ரீ இராஜேந்திரன்** என்று அவரது பெயரும் **கங்கைகொண்ட சோழர்** என்ற பட்டப் பெயரும் பொறிக்கப் பட்டுள்ளன. நிற்க, ஒருபுறம் மீனும், அமர்ந்திருக்கும் சிங்கமும், மறுபுறம் **சந்தசோழர்** என்ற தமிழ் வாசகமும் கொண்ட சில தங்க நாணயங்களும் உள்ளன; ஆனால் இவற்றை முதலாம் ராஜாதிராஜர் தாம் வெளியிட்டாரென்பது ஐயத்திற்குரியது.

சில தங்க நாணயங்கள் சிறியதாயும், 6 தானியமணி எடை யிலும் உள்ளன. இவற்றில் முன்புறம் உத்தம சோழரின் நாணயச் சின்னமும், பின்புறம் **யுத்த மல்லர்** என்ற நாகரி வாசகமும் உள்ளன. யுத்த மல்லர் என்ற பட்டப் பெயர் சோழ மன்னர் எவருக்குமே கிடையாது; இப் பெயர் சாளுக்கிய மன்னர்களின் பட்டப்பெயரைப்போலுள்ளது. எனவே, இந் நாணயங்களைச் சிறப்பானதொரு காரணத்திற்காக முதலாம் ராஜேந்திர சோழர் வெளியிட்டிருக்கலாம்; ஒருவேளை அவரது மகளுக்கும் சாளுக்கிய மன்னரான ராஜராஜ நரேந்திர னுக்கும் (கி.பி. 1019–1061) நடந்த திருமணத்தின்போது நன்கொடை கொடுப்பதற்கென்று இவற்றை வெளியிட்டிருக் கலாம். கன்னடத்திலுள்ள வட பகுதியிலிருந்து சில சிறிய வெள்ளி நாணயங்கள் கிடைத்துள்ளன. இவற்றில் முன்புறம் ஒரு புலி அல்லது சிங்கமும், உடைவாள் ஒன்றும் உள்ளன; பின்புறம் (பெரிய நாணயங்களில்) **ராஜாதிராஜன்** என்ற வாசக மும், (சிறிய நாணயங்களில்) **ரா** என்ற எழுத்து மட்டும் பொறிக்கப்பட்டுள்ளன. இந் நாணயங்களைச் சோழ மன்னர்களே தாம் பெற்ற வெற்றிகளின் நினைவாக வெளியிட்டிருக்கலாம்.

செம்பு, வெள்ளி, மாற்றுக்குறைந்த தங்கம் ஆகிய உலோகங் களால் சில நாணயங்களைப் புதுவகையான சின்னத்துடன் முதலாம் ராஜராஜன் வெளியிட்டிருக்கிறார். இவற்றில் முன் புறம் அரசன் நின்றுகொண்டிருப்பது போலவும், பின்புறம் தன் கையில் சங்கொன்றைப் பிடித்துக்கொண்டு அரசர் உட்கார்ந் திருக்க, அருகில் அமர்ந்துள்ள புலி அவரைப் பார்த்துக் கொண்டிருப்பது போலவும் சின்னங்கள் உள்ளன. இச் சின்னங்க ளெல்லாம் கோடுகளால் பொறிக்கப்பட்டுள்ளன; இவற்றின்

பின்புறத்தில் ஸ்ரீ ராஜராஜன் என்ற வாசகம் நாகரியில் உள்ளது. திருநெல்வேலியிலுள்ள கொற்கையை ஆட்சி செய்த பாண்டிய மன்னர்கள் இச் சின்னத்தை முதன்முதலில் பயன் படுத்தியிருக்கலாம் என்று தெரிகிறது. சோழ அரசு செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் இவ்வகைச் சின்னமே பிரபலியமாக இருந்ததாகவும், சிலோன் மன்னர்கள் கூட இச் சின்னத்தைப் பயன் படுத்தியதாகவும் தெரிகிறது. அதனுல்தான் இச் சின்னமுள்ள நாணயங்கள் "சிலோன்–மனிதச்சின்ன" நாணயங்களெனப் பெயர் பெற்றனபோலும். ராஜராஜன் என்ற பெயரில் இச் சின்னமுடைய செம்பு நாணயங்கள் பலவகையான அமைப்பில் இருக்கின்றன. சில நாணயங்கள் பட்டையாக இருக்கின்றன. வேறு சில மிகச் சிறியதாயும் இருபுறமும் புடைத்துத் தோன்று கின்றன. நாளடைவில் இந்த நாணயச் சின்னங்கள் மட்டரகமா யிருக்கின்றன. எனவே, இவ்வகைச் சின்னமுள்ள நாணயங்கள் ராஜராஜன் காலத்திற்குப் பின்னர்கூடப் பல ஆண்டுகள் வெளி யிடப்பட்டிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. இச் சின்னமுள்ள வேறு சில நாணயங்களில் **ஸ்ரீ குலோத்துங்கன்** என்ற வாசகம் தமிழ் எழுத்துகளும் நாகரி எழுத்துகளும் கலந்த வடிவத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது. வேறு சில நாணயங்களில் **ஸ்ரீலங்கேஸ் வரர்**, அல்லது **ஸ்ரீலங்க வீரர்** என்ற வாசகம் உள்ளது. சிலோனை வென்ற முதலாம் ராஜராஜனுக்கு லங்கவீரன் என்ற பட்டப் பெயரும் இருந்திருக்கலாம்.

பாண்டிய மன்னர்கள் முதன்முதலில் முத்திரையிட்ட வெள்ளி நாணயங்களையும் ஒரே அச்சில் அடித்த செம்பு நாணயங்களையும் வெளியிட்டனர். ஆனால், பாண்டியர்களின் வரலாறு மாறி மாறி வந்துள்ளது. பாண்டிய மன்னர்கள் ஆரம்பத்தில் சுதந்திர மன்னர்களாகவே ஆட்சி செய்தனர். பின்னர், பல்லவர்களின்கீழ் ஆட்சி நடத்தினர். அதன் பிறகு மறுபடியும் சுதந்திர மன்னர்களாகி, கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டில் பேரும் புகழுடனும் விளங்கினர். ஆனால், பதினேரும் நூற்றுண்டில் சோழர்களின் ஆதிக்கத்திற்குட் பட்டனர். பதின்மூன்ரும் நூற்றுண்டில் தமிழ்நாட்டில் தலை சிறந்ததாகப் பாண்டியநாடு புகழ்பெற்றது. பின்னர், நாளடைவில்

பாண்டியர்களின் செல்வாக்குக் குறைந்து நலிவுற்றது. இக் காலத்தில் பாண்டிய மன்னர்களின் நாணயங்களாகக் கருதப்படும் சில தங்க நாணயங்கள் உள்ளன ; ஆனால் இவற்றை அவர்கள் தாம் வெளியிட்டனரென்று உறுதியாகக் கூற முடியாது. இந் நாணயங்களில் வில், சங்கு, சக்கரப்படை போன்ற சின்னங் களும் ஒரு மீனோ அல்லது இரண்டு மீன்களோ உள்ளன. சில வற்றில் **ஸ்ரீ பாண்டுவ நரப** என்ற கன்னட வாசகமும், வேறு சில வற்றில் **ஸ்ரீ பாண்டிய தனஞ்சய** என்ற நாகரி அல்லது தெலுங்கு வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் முந்திய வாசக முள்ள நாணயங்களை முதலாம் மாறவர்மர் சுந்தர பாண்டியரோ (கி.பி. 1216–1235), அல்லது முதலாம் ஜடாவர்மர் சுந்தர பாண்டியரோ (கி.பி. 1251–1270) வெளியிட்டதாகவும், பிந்திய வாசகமுள்ளவற்றை இரண்டாம் மாறவர்மர் சுந்தர பாண்டியர் (கி.பி. 1238–1253) வெளியிட்டதாகவும் தெரிகிறது. ஆனால் பிந்திய வாசகமுள்ள நாணயங்கள்கன்னட மாவட்டத்திலிருந்தும் கிடைத்துள்ளன ; எனவே, இவற்றை ஆளுப அரசர்கள்தாம் வெளியிட்டிருக்க வேண்டுமென ஒரு சில அறிஞர்கள் கூறுவர்.

பாண்டியர்களின் செம்பு நாணயங்களில் மீன் சின்னத்தோடு, சோழ நாணயத்திலுள்ள நின்றுகொண்டிருக்கும் மனித உருவமோ, அல்லது சாளுக்கிய நாணயங்களிலுள்ள பிற சின்னங்களோ உள்ளன. இவ்வாறாக, பாண்டிய நாணயங்களில் பிற வமிசத்தினரின் சின்னங்களைப் பொறித்திருப்பது பாண்டியர் கள் பெற்ற வெற்றி தோல்விகளைப் பிரதிபலிக்கிறது. இவற்றில் ஒரு சில நாணயங்களில் **சுந்தர, சுந்தரபாண்டிய** என்ற வாசகமோ அல்லது **சு** என்ற எழுத்து மட்டுமோ உள்ளது. ஆனால், பாண்டிய மன்னர்களில் பலபேருக்குச் சுந்தரபாண்டியன் என்ற பெயர் இருந்திருப்பதால், இது எந்தச் சுந்தரபாண்டியரெனக் கூறமுடியவில்லை. சில நாணயங்களில், இது ஒருபுறம் காட்டுப் பன்றியும், **வீரபாண்டியர்** போல் தெரியும் வாசகமும் உள்ளன. மறுபுறம், வேணுகோபாலனின் (முரளிதரக் கிருஷ்ணர்) உருவம் உள்ளது. இந் நாணயங்களைப் பாண்டிய மன்னர்கள் மட்டுமன்றி, சோழ நாட்டுச் சிற்றரசர்களும் வெளியிட்டதாகக் கூறுவர். எனவே, இவற்றை வெளியிட்டது யாரென்று உறுதியாகக்

கூறமுடியவில்லை. வேறுசில நாணயங்களில் மன்னர்களின் பட்டப் பெயர்கள் மட்டும் உள்ளன; ஆனால் இப் பெயர்கள் யார் யாரைக் குறிப்பிடுகின்றனவென்று தெரிவில்லை. எனினும், கல்வெட்டுக் களிலிருந்து ஒரு சிலரை மட்டும் தெரிந்துகொள்ள முடிகிறது. வேறு சில நாணயங்களில் மீன் சின்னமும், **கோதண்டராமன், காஞ்சி விளங்கும் பெருமாள்** என்ற பட்டப்பெயர்களும் உள்ளன. இவற்றில் சோழன் நின்றுகொண்டும், உட்கார்ந்துகொண்டும் உள்ள சின்னம் உள்ள நாணயங்களில் **பூதல, எல்லாம்தலை, பரசுராம** என்ற பெயர்கள் காணப்படுகின்றன. **குலசேகர** என்ற பட்டப்பெயர் பொறிக்கப்பட்டுள்ள நாணயங்களில் நிற்கும் அரசரின் உருவம் ஒருபுறம் இருக்கிறது. மீன் சின்னம் ஒருபுறமும் மறுபுறம் நிற்கும் அரசனின் உருவம் உள்ள நாணயங்களில் **எல்லாந்தலையானன்** என்ற பெயர் உள்ளது. நிற்க, கருடன் சின்ன முள்ள நாணயங்களில் **சமர கோலாகலன்** என்ற பெயரும், **புவனேகவீரன்** என்ற பெயரும் பொறிக்கப்பட்டிருக்கின்றன; காளைச் சின்னமுள்ளவற்றில் **கோனேரிராயன்** என்ற வாசகமும், இரண்டு பாதங்கள் கொண்ட நாணயங்களில் **கலியுகராமன்** என்ற வாசகமும் உள்ளன.

கேரளாவின் வெள்ளி நாணயங்களில் ஒருபுறம், **வீர கேரளஸ்ய** என்ற நாகரி வாசகம் இரண்டு வரிகளில் இருக்க, அவ்விரு வரிகளுக்கிடையில் இடப்புறமாக நகர்ந்து செல்லும் முதலையின் உருவம் உள்ளது; மறுபுறம், **ஸ்ரீ கந்தராங்குசஸ்ய** என்ற நாகரி வாசகம் இரு வரிகளிலும், அவ் வரிகளுக்கிடையே **கலசமோ** அல்லது **கும்பமோ** இருக்கிறது. இந் நாணயங்களைத் தவிர, வேறெந்த நாணயங்களும் மேற்குக் கடற்கரைப்பகுதியின் தென் கோடியில் இருந்ததில்லை. இந் நாணயங்களை வீர கேரளவர்மா (சுமார் கி.பி. 1127) வெளியிட்டிருக்கலாமெனத் தெரிகிறது.

முஸ்லிம் மன்னர்களின் படையெடுப்பிலிருந்து பாதுகாக்க வேண்டுமென்பதற்காக, கி.பி. 1336ஆம் ஆண்டில் விஜயநகர இராச்சியம் உருவாக்கப்பட்டது; இவ்வாறு விஜயநகர இராச்சியம் தோன்றியதிலிருந்து, தென்னிந்திய நாணய வரலாற்றில் புதியதொரு சகாப்தமே ஆரம்பமாகிவிட்டது. விஜயநகர இராச்சியம் மூன்று பரம்பரை காலமாக, அதாவது, கி.பி. 1565

வரை பெரிய இராச்சியமாகச் செல்வாக்குப்பெற்று விளங்கியது. பின்னர், பதினேழாம் நூற்றாண்டுவரை, சந்திரகிரியைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்த நான்காவது பரம்பரையினர் மன்னர்களாக இல்லாமல், சாதாரணத் தலைவர்களாகவே ஆண்டு வந்தனர். முந்தைய தென்னிந்திய நாணயங்களைப்போல், விஜய நகரத்திலும் பெரும்பாலும் தங்க நாணயங்களே வெளியிடப் பட்டன. இரண்டாம் தேவராயர் மட்டும்தான் (கி.பி. 1422–1446) வெள்ளி நாணயங்களை வெளியிட்டார்; இவ் வெள்ளி நாணயங்கள் 4 தானியமணி எடை கொண்ட சிறிய நாணயங்களாகும். விஜய நகரத்தில் செம்பு நாணயங்களும் வெளியிடப்பட்டன ; ஆனால் அதிகமாக வெளியிடப்படவில்லை. விஜயநகரத்தின் தங்க நாணயங்கள் பருத்தும் சிறியதாயுமுள்ளன. இவற்றில் முன்புறம், பெரும்பாலும் இந்துமதக் கடவுள்களின் உருவங்கள் தான் உள்ளன ; பின்புறம், கன்னடத்திலோ நாகரியிலோ பொறிக்கப்பட்ட மன்னரின் பெயர் மட்டுமே உள்ளது. இந் நாணயங்களின் அமைப்பையும் வேலைப்பாட்டையும் பின்பற்றித் தான் பிற்காலத்திய தல அரசர்களும், ஆங்கிலநாட்டு வர்த்தகக் கம்பெனியும் **பக்கோடா** என்ற நாணயங்களை வெளியிட்டனர்.

சங்கம வமிசத்தின் முதலாவது மன்னரும் விஜயநகர இராச்சி யத்தை நிறுவியவருமான ஹரிஹரர் (கி.பி. 1336–1356) வெளி யிட்ட நாணயங்களில் அனுமாரின் சின்னமும் கருடனின் சின்ன மும்தான் பொறிக்கப்பட்டன. அவருக்குப்பின் ஆட்சி செய்த முதலாம் புக்கர்கூட (கி.பி. 1356–1377) அனுமாரின் சின்னத்தைத் தான் பயன்படுத்தினர். ஹரிஹரருக்குப் பின் கிருஷ்ணராயர்தான் (கி.பி. 1509–1529) கருடனின் சின்னத்தை மறுபடியும் பயன் படுத்தினர். இரண்டாம் ஹரிஹரரின் ஆட்சியின்போது (பிரதாப ஹரிஹரர், கி.பி. 1377–1404) வெளியிடப்பட்ட தங்க நாணயங்களில் உமா–மஹேஸ்வரர், லட்சுமி–நாராயணர், லட்சுமி–நரசிம்மர் ஆகியோரின் உருவங்களும், செம்பு நாணயங் களில் காளைமாட்டுச் சின்னமும் புகுத்தப்பட்டன. அவருக்குப் பின் ஆட்சி செய்த தேவராயர் (கி.பி. 1422–1466) உமா–மஹேஸ் வரரின் உருவங்களைமட்டும் முத்திரையிட்டு, தங்க நாணயங்களை வெளியிட்டார்; செம்பு நாணயங்களில் யானையின் சின்னத்தைப்

புகுத்தினர். அவருக்குப்பின் ஆட்சி செய்த மன்னர்கள்கூட இதே சின்னங்களைத்தான் தொடர்ந்து பயன்படுத்தி வந்தனர். சாளுவ வமிசத்தினர் (கி.பி. 1485–1506) எந்தவித நாணயங்களையும் வெளியிட்டதில்லை. துளுவ வமிசத்தைச் சேர்ந்த மன்னர்கள் (கி.பி. 1506–1570) உமா–மஹேஸ்வரரின் சின்னத்தை அப்படியே பயன்படுத்தியோடு, காளைச் சின்னத்தையும் மறுபடியும் புகுத்தினர். அதோடு, வேங்கடேசரின் உருவமும் கிருஷ்ணரின் உருவமும் புகுத்தப்பட்டன. அச்சுதராயர் (கி.பி. 1530–1542) என்பவர் கண்டபேருண்ட சின்னத்தையும், சதாசிவராயர் (கி.பி. 1542–1570) லட்சுமி–நாராயணரின் உருவங்களோடு, கருடனின் சின்னத்தையும் பயன்படுத்தினர். கர்நாட வமிசத்தைச்சேர்ந்த மன்னர்கள் வைஷ்ணவ மார்க்கத்தைப் பின்பற்றினர்; எனவே, இவர்களது நாணயங்களில் வேங்கடேசரின் உருவம்தான் பெரும்பாலும் உள்ளது. திருமலைராயர் (கி.பி. 1570–1573) வெளியிட்ட நாணயங்களில் விஷ்ணுவின் அம்சங்களைக் குறிக்கும் **சங்கும், சக்கரமும்** மட்டுமன்றி, அவரது வாகனமான **கருடனும்,** அவரது அவதாரங்களாகிய வராஹம், ராமர் ஆகிய உருவங்களும் முத்திரையிடப்பட்டுள்ளன. விஜயநகரத்தின் செம்பு நாணயங்களில் காளைச் சின்னம் மட்டும்தான் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது. விஜயநகர இராச்சியம் சரிவடைந்துவந்த கடைசி முப்பது ஆண்டுகளில் அதன் தலைநகரத்தில் மட்டுமன்றி, பிற நகரங்களிலும் வைஷ்ணவ மார்க்கம்தான் செல்வாக்குப்பெற்றிருந்தது. அப்போது வெளியிடப்பட்ட தல நாணயங்களில் விஷ்ணுவின் அவதார உருவங்கள்தான் சின்னங்களாகப் பயன்படுத்தப்பட்டன. கடைசி காலத்தில் ஆட்சியிலிருந்த அதிகாரம் நலிந்த மன்னர்களும் அவர்களின் பின்தோன்றல்களும் வேங்கடேஸ்வரரின் சின்னத்தையே பெரும்பாலும் பயன்படுத்தினர். ஒரு சில இடங்களில் மட்டுமே சைவ மார்க்கச் சின்னங்கள் பயன்படுத்தப்பட்டன. தல நாணயங்களில் சிங்கம், காளை, யானை, புலி, மான், மயில் ஆகிய விலங்கினச் சின்னங்களும் உள்ளன.

விஜயநகர மன்னர்கள் தம் நாணயங்களில் நாகரி, கன்னடம், தெலுங்கு எழுத்துக்களையே பயன்படுத்தினர்.

தொடக்கத்தில் வெளியான நாணயங்களில் ஹொய்சளப் பாணி யோடும் மேலைச் சாளுக்கியப் பாணியிலும் கலந்திருந்த பழங்காலக் கன்னட எழுத்துக்களே பொறிக்கப்பட்டன. இரண்டாம் ஹரிஹரர் காலத்திலும் (கி.பி. 1377–1404) இரண்டாம் புக்கர் காலத்திலும் (கி.பி. 1404–1406) நந்திநாகரி மட்டும் பயன்படுத்தப்பட்டது. இரண்டு தேவராய மன்னர்களும் (கி.பி. 1406–1446) தம் தங்க நாணயங்களில் தேவநாகரியையும், செம்பு நாணயங்களில் கன்னடத்தையும் பயன்படுத்தினர். தனயகரும் (கி.பி. 1446) மல்லிகார்ஜுனரும் (கி.பி. 1447–1465) இக் காலக் கன்னட எழுத்துக்களைப் பயன்படுத்தினர். ஆனால் கிருஷ்ணராயர் காலத்திலிருந்து (கி.பி. 1509–1530) காளைச் சின்னமுள்ள செம்பு நாணயங்களில் மட்டும்தான் கன்னடமொழி பயன்படுத்தப்பட்டது; மற்ற நாணயங்களிலெல்லாம் நாகரிதான் பயன்படுத்தப்பட்டது. பின்னர், முதலாம் வெங்கடராயர் (கி.பி. 1542) வெளியிட்ட நாணயங்களில் பெரும்பாலும் நாகரி வாசகங்களோடு, ஒரு வரியில் மட்டும் கன்னடத்தைப் பயன் படுத்தினர். சிக்கராயர் (கி.பி. 1614–1615) வெளியிட்ட காளைச் சின்னமுள்ள நாணயங்களில் தெலுங்கு வாசகம் மட்டுமே உள்ளது; எனவே, அவர் வடகிழக்குப் பகுதியில் அரசரின் பிரதி நிதியாக இருந்தபோது இந் நாணயங்களை வெளியிட்டிருக்கலாம்.

விஜயநகரப் பேரரசு அழிந்தபின்னர் வெளியிடப்பட்ட நாணயங்களெல்லாம் பல சிற்றரசர்களால் வெளியிடப்பட்டவை. அவர்களால் தஞ்சை, மதுரை, திருநெல்வேலி முதலிய இடங்களில் ஆட்சி செய்த நாயக்கர்களும், ராமநாதபுரத்தில் ஆட்சி செய்த சேதுபதிகளும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். மதுரையில் ஆட்சி புரிந்த நாயக்க மன்னர்கள் தொடக்கத்தில் வெளியிட்ட நாணயங் களில் பின்புறம் அவர்களின் பெயர்கள் தமிழில் பொறிக்கப் பட்டன; ஆனால் பின்னர் வெளியிட்ட நாணயங்களை வேங்கடேஸ் வரக் கடவுளின் பெயரில்தான் வெளியிட்டனர். சிறிது காலத் திற்குப்பின், மதுரையிலும் திருநெல்வேலியிலும் செம்பு நாணயங்கள் ஏராளமாக வெளியிடப்பட்டன; இவற்றில் பின் புறம் **ஸ்ரீ வீர** என்ற தெலுங்கு வாசகம் உள்ளது; முன்புறம், அனுமார், கணேசர், மனித உருவங்கள், யானை, காளை, சிங்கம்,

சூரியன், சந்திரன் போன்ற பலவகையான சின்னங்கள் உள்ளன.

ஆந்திரப்பிரதேசத்திலிருந்து சில செம்பு நாணயங்கள் கிடைத்துள்ளன. இவற்றில் **ஸ்ரீ மதுகர காகதீய பிரதாபருத்திர தேவ விஜயகடக 2 அங்க** என்ற நீண்ட வாசகம் நாகரியில் உள்ளது. இந் நாணயங்களைக் காகதீய மன்னராக இருந்த பிரதாபருத்திரர் (கி.பி.1291–1323) வெளியிட்டதாகக் கூறுவர்; ஆனால் இவற்றை ஒரிசாவைச் சேர்ந்த கஜபதி வமிசத்து மன்னரான பிரதாபருத்திரர்தான் வெளியிட்டிருக்கவேண்டும். ஏனெனில், இவர்தான் **காகதீயர்** என்ற பட்டத்துடன் கி.பி. 1496 முதல் 1542 வரை கங்கை நதியிலிருந்து ஆந்திரப் பிரதேசத்திலுள்ள நெல்லூர் மாவட்டத்தில் உதயகிரி வரை பரவியிருந்த கிழக்குக் கடற்கரைப் பகுதி முழுவதையும் ஆட்சிசெய்தவர்; மேலும், **அங்க** என்ற மதிப்புச் சின்னத்தைக் கீழைக் கங்கர்களும் கஜபதி மன்னர்களும் மட்டுமே பயன்படுத்தினர். எனவே, இந் நாணயங்கள் தற்போதுள்ள கட்டாக் எனப்படும் விஜயகடகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கலாம்.

அதிகாரம் 11

டில்லி முஸ்லிம் வமிசத்தினரின் நாணயங்கள்

முற்கால இந்திய நாணயங்கள் (வட இந்திய நாணயங்கள், தென்னிந்திய நாணயங்கள், சமஸ்தானங்களும் அந்நியப் படையெடுப்பாளரும் வெளியிட்ட நாணயங்கள் அனைத்திலும்) இருபுறமும் அல்லது ஒரு புறத்திலாவது கட்டியம் சார்ந்த சின்னங்களோ, உருவம் சார்ந்த சின்னங்களோதான் முத்திரையிடப்பட்டன. ஆனால் முஸ்லிம்கள் இந்தியாவிற்கு வந்ததிலிருந்து இந்திய நாணயங்கள் புதிய பாணியில் அச்சிடப்பட்டன. சிலை அல்லது உருவ வழிபாடு இஸ்லாம் சமயத்திற்கே புறம்பானது. எனவே, இந்தியாவில் ஆட்சி செய்த முஸ்லிம் மன்னர்கள், ஏனைய முஸ்லிம் நாடுகளைப் போல், அரேபிய, அல்லது பாரசீக மொழியில் வாசகங்கள் பொறிக்கப்பட்ட நாணயங்களைத்தான் வெளியிட்டனர். அப்படியின்றி, வேறு விதமான நாணயங்களை அவர்கள் வெளியிட்டிருந்தால் அவை விதிவிலக்கானவைகளாகும். இஸ்லாம் சமயத்தின்படி, நாணயங்களில் மன்னர்களின் பெயரைப் பொறிப்பது சாதாரண காரியமல்ல; அதற்குத் தனிச் சிறப்பும் உரிமையும் உண்டு. அங்கீகாரம் பெற்ற மன்னர்கள்தான் அவர்கள் பெயரை நாணயங்களில் பொறிக்கலாம். அதே போல், மன்னர்களின் பெயர்கள் குத்பா என்னும் பொது வழிபாட்டில் சேர்க்கப்படுவதற்கும் அங்கீகாரம் தேவை. இச் சிறப்புரிமை மன்னர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்ததால், ஏதாவதொரு நாட்டையோ அல்லது அரசையோ அவர்கள் வென்றுவிட்டால், அல்லது கோட்டையையோ நகரத்தையோ கைப்பற்றினாலும் கூட, அவர்களின் பெயரோடு ஹிஜ்ரீ சகாப்தத்தின்[1]

[1]ஹிஜ்ரீ சகாப்தத்தின் முதல் வருடம் கி.பி. 622–ல் ஜூலை மாதம் 15-16ஆம் தேதி வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

ஆண்டையும் பொறித்து நாணயங்களை வெளியிட்டு வந்தனர். கி. பி. எட்டாம் நூற்றாண்டில் சிரியாவிலிருந்த கலிஃபாக்கள் முஸ்லிம் மதத்தைப் பரப்ப வேண்டுமென்ற ஆர்வத்துடன், **லா இலாஹ-இல்-அல்லாஹ் முகம்மத் ரசூல் அல்லாஹ்** (அல்லாவை யன்றி, வேறு கடவுளில்லை, அல்லாவின் நபிதான் முகமது) என்ற தமது சமய நம்பிக்கை வாசகத்தைப் பயன்படுத்தினர். நாளடைவில், இவ் வாசகமே முஸ்லிம் நாணயங்களில் முக்கிய மானதோர் அம்சமாக அமைந்தது; இந்தியாவில் வெளியிட்ட நாணயங்களிலும் இக் **கலிமா**வைப் பயன்படுத்தினர்; ஆனால் மிகுந்த ஆர்வத்துடன் அல்ல.

இந்தியாவில் முதன்முதலில் முஸ்லிம் அரசை ஏற்படுத்தியவர் இமாத் உத்தீன் பின் காசீம் என்பவர்தான்; இவர் கி.பி. 712-ல் முஸ்லிம் அரசைத் தோற்றுவித்தார். இவருடைய ஆளுநர்களா யிருந்தவர்கள், கலிஃபாக்களின் நாணயங்களைப் போல் சிறிய வெள்ளி நாணயங்களை வெளியிட்டனர்; இந் நாணயங்கள் பெரும்பாலும் சிந்துவிலிருந்தும் ராஜஸ்தானிலிருந்தும் கிடைத் துள்ளன. எனினும், இவை உள்நாட்டு நாணய பாணியை பாதிக்கவில்லை. ஆனால், பல ஆண்டுகள் கழித்து, கி.பி. 1001 முதல் 1021 வரை கஜ்னி மகமது என்பவர் பல முறை இந்தியாவின்மீது படையெடுத்து வந்து, பல இடங்களில் வெற்றி பெற்றார்; அதிலிருந்து வடமேற்குப் பகுதியின் வழியாக இந்தியாவிற்குள் புகுந்த முஸ்லிம்கள் தமது ஆட்சியை நிறுவ வழி ஏற்பட்டது. கஜ்னி மகமது வந்த பின்னர்தான் இந்திய நாணயங்களில் ஒரு பெரும் மாறுதலே ஏற்படத் தொடங்கியது. கி.பி. 1007-ல் ஒரு முறை கஜ்னி மகமது படையெடுத்து வந்த போதுதான் 180 தானியமணி எடை கொண்ட தங்க நாணயங்களை வெளியிட்டார். இந் நாணயங்களில் முன்புறம் **கலிமாவும், அல்-காதிர் பில்லா, அமீர்-உல்-மோமனீன்** (இஸ்லாமிய சமயத்தாரின் அமீரான கலீஃபா அல்காதிர் பில்லா) என்ற அவரது பட்டப் பெயரும் உள்ளன; பின்புறம் "ஹிஜ்ரீ ஆண்டு 379-ல் (கி.பி. 1007) நடந்த சமயப் போரில் **(ஜெஹாத்)** சரணடைந்த நகர மக்களுக்கென்று அச்சிடப்பட்ட **தினாரா** (தங்க நாணயம்)" என்ற வாசகம் உள்ளது. கஜ்னி மகமது அப்பாசிட் கலிஃபாவாக

இருந்த அல்காதிர் பில்லா என்பவரால் சுல்தானுக அங்கீகரிக்கப்பட்டாரென்றும், அவருடைய தூண்டுதலால்தான் இந்தியாவில் ஒரு சமயப் போரைத் தொடங்கினுரென்றும் இந் நாணயங்களிலிருந்து அறிய வருகிறேம். ஒருவேளை கடினமான போரில் அடைந்த வெற்றியின் நினைவாகக்கூட இந் நாணயங்களை கஜ்னி மகமது வெளியிட்டிருக்கலாம். எது எவ்வாறிருப்பினும், ஹிஜ்ரீ ஆண்டு (418–419-ல்) (கி.பி. 1028) அவர் வெளியிட்ட வெள்ளி **திராம்கள்**தான் மிகப் பிரபலியமானவை. கஜ்னி மகமது பஞ்சாபை வென்று, அதைத் தம் அரசோடு இணைத்த பின் லாகூரிலிருந்து இந்த திராம்களை அச்சிட்டு வெளியிட்டார். லாகூருக்கு மகமத்பூர் என்ற தமது பெயரையும் சூட்டினுர். இத் **திராம்களி**ன் முன்புறம் கலிமாவையும், அதையடுத்து, **அமீன்-உத்-தௌலா வா அமீன் உல்-மில்லத் பிஸ்மில்லா அல்-திர்ஹம் ஜர்ப் பி மஹமத்பூர் ஜர்ப் சன் 418** அல்லது **419** என்ற நீண்ட வாசகத்தையும் கூஃபிக்[1] எழுத்துக்களில் காணலாம்; பின் புறம், நாகரி எழுத்தில் **கலிமாவை** சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்து, **அவ்யக்தமேகம் முகமத் அவதார** என்றும், அதை யடுத்து, **நிருபதி மகமது** என்று மன்னரின் பெயரும் உள்ளன. இவற்றைச் சுற்றிலும் முன்புறமுள்ள கூஃபிக் வாசகத்தின் எஞ்சிய பகுதி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இம் மொழி பெயர்ப்பு (1) **அயம் தங்கம் ஹ மகமுத்பூர் சம்வதி 418** என்றும், (2) **அயம் தங்கம் மகமுத்பூர் கதித தாஜிகியர் சம்வதி 418** அல்லது **419** என்றும் இருவிதமாக உள்ளது. இவ்விரண்டில் இரண்டாவது வாசகம்தான் சிறந்தது; இவ்வாசகத்தின் பொருள், " இந்த **தங்கா** (நாணயம்) அரேபிய ஆண்டு 418 அல்லது 419-ல் மகமத்பூரில் அச்சிடப்பட்டது " என்பதுதான். அல்லா என்னும் முஸ்லிம்களின் தத்துவத்தை **அவ்யக்தம்** (புலனுகாத) என்று சம்ஸ்கிருதத்தில் போட்டிருப்பதைப் பார்க்கும்போது, கஜ்னி மகமது முஸ்லிம் மதத் தத்துவத்தைமட்டுமன்றி, இந்து மதத் தத்துவத்தின் அடிப்படையையும் நன்குணர்ந்திருந்தார் என்று தெரிகிறது. அதோடு, **ஜெஹாத்**தின் (மதப்போர்) வழியாக

---

[1]கூஃபிக் எழுத்தென்பது நேர்கோடு வடிவத்தில் உள்ள பழங்கால அரேபிய எழுத்தாகும்.

இஸ்லாமிய மதத்தைப் பரப்ப வேண்டுமென்ற ஆர்வம் குறைந்து, அவரது ஆதிக்கத்தின் கீழிருந்த மக்களின் சமயப் பற்றுதலை மதிக்கலானுர் என்றும் தெரிகிறது.

கி.பி. 1051-ல் கோரி வமிசத்தைச் சேர்ந்த தலைவர்கள், மகமது குடும்பத்தைச் சேர்ந்த அரசர்களையெல்லாம் லாகூரிலிருந்து விரட்டியடித்துவிட்டு, லாகூரையே தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரியத் தொடங்கினர். அப்போது வெள்ளியும் செம்பும் கலந்த பில்லன் நாணயங்களைச் சிறியதாக உருவாக்கி வெளியிட்டனர். கோரி வமிசத்தினரின் இந் நாணயங்களில் முன்புறம், இந்துக்களின் நாணயங்களிலிருந்த "காளை–குதிரை வீரன்" சின்னங்களில் காளைச் சின்னமும், பின்புறம், அவர்களின் பெயர்களும் பட்டங்களும் கூஃபிக் எழுத்துக்களிலும் அச்சிடப்பட்டன. அதோடு, காளைச் சின்னமுள்ள முன்புறத்தில் **சாமந்த தேவரின்** பெயரையும் பொறித்தனர். லாகூரில் கஜினி வம்சத்தைச் சேர்ந்த மன்னர்கள் ஆட்சி செய்தபோது வெளியிடப்பட்ட நாணயங்களில் ஃபரூக் அஸாத் (கி.பி. 1052–1059), இப்ராஹிம் (கி.பி. 1059–1099), பஹரம் ஷா (கி.பி. 1118–1152), குஸ்ரூ மாலிக் (கி.பி. 1160–1187) ஆகிய நால்வரின் நாணயங்களிலும்கூடக் கிடைத்துள்ளன. இவர்களில் குஸ்ரூ மாலிக் ஆட்சி செய்த போது, முகமது கோரி என்றழைக்கப்படும் முகமது பின் சாம் என்பவர் மாலிக்கைத் தோற்கடித்துவிட்டு, பின்னர் கி.பி. 1192-ல் தானேஸ்வரம் அல்லது தரேயின் என்னுமிடத்தில்–நடந்த இரண்டாது போரில் பிரிதிவிராஜையும் அவரைச் சேர்ந்த இராச புத்திரர்களையும் ஒழித்துக் கட்டிவிட்டு, முதன்முறையாக இந்தியாவில் முஸ்லிம் இராச்சியத்தை ஏற்படுத்தினுர்.

முகமது பின் சாம் இருவகையான தங்க நாணயங்களை வெளியிட்டார். முதல் வகையில் அக்காலத்தில் புழங்கி வந்த நாணயங்களிலிருந்த சின்னமான லட்சுமி அமர்ந்திருப்பது போன்ற உருவத்தை முன்புறமும், **முகமது பின் சாம்** என்ற அவரது பெயரை நாகரி எழுத்துக்களில் பின்புறமும் பொறித்தார். இரண்டாவது வகை நாணயங்களில் துருக்கி நாட்டுக் குதிரை வீரன் ஒருவன் தன் கையிலுள்ள ஈட்டியைப் பாய்ச்சுவது போன்ற சின்னம் உள்ளது. இச்சின்னத்திலுள்ள குதிரை வீரன்

அந்நிய நாட்டவனுக இருந்தாலும், இந்திய நாணயங்களிலிருந்து தான் இச்சின்னம் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். இக் குதிரை வீரனின் சின்னத்தைச் சுற்றி, அரேபியச் சொற்களில் வருடத்தையும் நாகரி எழுத்துக்களில் அவரது பெயரையும் பொறித்தார். பின்புறத்தில், **அல்–சுல்தான் அல்-ஆஜம் முயிஜுத்துனியா வா அல்–தீன் அபூமுஜஃபர் முஹமத் பின் சாம்** என்ற நீண்ட அரேபிய வாசகத்தைக் காணலாம். இந்தியாவில் அவர் ஆட்சி செய்தபோது வெள்ளி நாணயம் எதையும் வெளியிடவில்லை; எனினும், "காளை–குதிரை வீரன்" சின்னத்துடன் பில்லனில் அவர் வெளியிட்ட நாணயங்கள் மிகப் பிரபலியமானவை. இவற்றில் காளைச் சின்னமுள்ள புறத்தில் **ஸ்ரீ முகமது சாம்** என்ற வாசகமும், குதிரை வீரன் சின்னமுள்ள புறத்தில் **ஸ்ரீ ஹமிரா** என்ற வாசகமும் உள்ளன: இவ்விரண்டில் ஏதாவதொரு சின்னம் மட்டும் கொண்ட பில்லன் நாணயங்களும் அவரால் வெளியிடப்பட்டன. இவற்றில், ஒரு புறம் காளையின் சின்னமோ அல்லது குதிரை வீரனின் சின்னமோ முத்திரையிடப்பட்டுள்ளது; மறுபுறம் அரேபிய வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. பில்லன் நாணயங்களோடு செம்பு நாணயங்களையும்கூட அவர் வெளியிட்டதாகத் தெரிகிறது. முகமது பின் சாம் ஆட்சிக்குப் பின்னர்கூட இச்சின்னம் கொண்ட பில்லன் நாணயங்களும் செம்பு நாணயங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவற்றை அவரது அண்ணான் மகனை மஹ்மூதும், தாஜுத்தீன் எல்டூஸ், குத்புதீன் ஐபக் எனப்பட்ட வேறிருவரும் வெளியிட்டதாகத் தெரிகிறது. இவர்களில். எல்டூஸ் என்பவர் கஜினியில் ஆட்சி செய்தவராகையால், அவரது பெயருள்ள நாணயங்களை ஆங்காங்கே ஆட்சி செய்து வந்த அவரது ஆளுநர்கள்தான் வெளியிட்டிருக்க வேண்டுமென்று ஒரு சிலர் கருதுவர். இம் மன்னர்களின் நாணயங்கள் அனைத்திலும் ஒரு புறம், காளையின் சின்னமோ அல்லது குதிரை வீரனின் சின்னமோதான் முத்திரையிடப்பட்டது, இவர்களில் குத்புதீன் ஐபக் என்பவர்தான் டில்லியைத் தலைநகராக ஆக்கிய முதல் சுல்தான் மன்னர்; எனினும், இவரது நாணயங்கள் அவ்வளவாகக் கிடைப்பதில்லை.

அடுத்து ஆட்சிக்கு வந்த இல்துத்மிஷ் என்பவர் (கி.பி. 1211–1236) ராஜஸ்தானிலுள்ள நாகூரிலிருந்து வெளியிட்ட தங்க

நாணயங்களும் வெள்ளி நாணயங்களும் கிடைத்துள்ளன. இவற்றில் முகமது பின் சாம் வெளியிட்ட தங்க நாணயங்களைப் போல் குதிரை வீரனின் சின்னமும் ஹிஜ்ரீ 614 (கி.பி. 1217), 616 (கி.பி. 1219) என்ற வருடங்களும் உள்ளன. மேலும், குதிரை வீரனின் சின்னத்தைச் சுற்றிலும் **கலிமாவும்** அரேபிய எழுத்துக்களில் வருடமும் பொறிக்கப்பட்டுள்ளன. தங்க நாணயங்களில் மட்டும் நாணயச் சாலையின் பெயர் உள்ளது. இந்நாணயங்களின் பின்புறத்தில், **அல்-சுல்தான் அல்–ஆஜம் சம்சுத்துனியா வா அல்–தீன் அபூமுஜஃபர் இல்துத்மிஷ் அல்–குத்பெ புர்ஹான்** (அல்லது **நசீர்**) **அமீர்-அல்-மோமனீன்** என்ற அவரது பெயரும் பட்டங்களும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவை தவிர, வேறுபல வாசகங்கள் கொண்ட வெள்ளி நாணயங்களையும் இல்துத்மிஷ் வெளியிட்டிருக்கிறார். இவற்றுள் சிலவற்றில் **கலிமா** அச்சிடப்பட்டுள்ளது; ஆனால் பெரும்பாலானவற்றில் அப்பாசித் கலிஃபாவான அல்–முஸ்தான்சிர் என்பவரின் பெயரே உள்ளது. இதிலிருந்து, இல்துத்மிஷ் என்பவரின் அரசு உரிமையைக் கி.பி. 1228-ல் கலிஃபா அங்கீகரித்ததாகத் தெரிகிறது. இல்துத்மிஷ் என்பவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த பலர் இவ்வகை நாணயங்களையே வெளியிட்டதாக அறியவருகிறோம். அவர்களில் ருக்னுதீன் பிரோஸ் ஷா (கி.பி. 1235), ஜலாலுதீன் ரஜீயா (கி.பி. 1236–1240), முய்ஜுதீன் பஹ்ரம் ஷா (கி.பி. 1240–1242), அலாவுதீன் மசூத் ஷா (கி.பி. 1242–1246), நசீருதின் மகமது (கி.பி. 1246–1266), கியாசுதீன் பால்பன் (கி.பி. 1266–1287), முய்ஜுதீன் கைக்குபாத் (கி.பி. 1287–1290), சம்சுதீன் கயுமராஸ் (கி.பி. 1290) ஆகிய சுல்தான் மன்னர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். கி.பி. 1242-ல் கலிஃபாவாக இருந்த அல்–முஸ்தான்சிர் இறந்தார்; அவருக்குப் பின் அல்–முஸ்தாசிம் என்பவர் கலிஃபாவாகப் பதவி ஏற்றதால், அவரது பெயர்தான் பிந்திய நாணயங்களில் பொறிக்கப்பட்டது. ஜலாலுதீன் ரஜீயா என்பவள் மட்டும் அவளது பெயருக்குப் பதிலாக அவளின் தந்தையின் பெயரையே நாணயங்களில் பொறித்திருப்பது குறிப்பிடத்தக்கது; இந் நாணயங்களை அவள் தான் வெளியிட்டாள் என்பதை இவற்றிலுள்ள வருடத்தைக் கொண்டும், பின்புறமுள்ள வாசகத்தில் **நஸ்ரத்** என்ற கடைசிச்

சொல்லைக்கொண்டும் நாம் அறிந்துகொள்ளலாம். மேலும், அலாவுதீன் மசூத் ஷா, நசீருதீன் மகமது, பால்பன் ஆகிய மூவர் மட்டும் சில தங்க நாணயங்களையும் வெளியிட்டிருக்கின்றனர் ; வெள்ளி நாணயத்திலுள்ள அதே சின்னங்கள்தான் இத்தங்க நாணயங்களிலும் உள்ளன ; ஆனால் இவை கிடைப்பது அரிது.

இல்துத்மிஷ் வெளியிட்ட மூன்று வகையான பில்லன் நாணயங்களும் கிடைத்துள்ளன : (1) முன்புறம் காளையும், பின்புறம் குதிரை வீரனும் கொண்டவை. இவற்றிலுள்ள பல வகையான வாசகங்களைக் கொண்டு, இந் நாணயங்களைப் பல இனங்களாகப் பிரிக்கலாம். எனினும், பெரும்பாலானவற்றில் காளைச் சின்னமுள்ள புறத்தில் **சுரிதாண ஸ்ரீ சமசதீன்** என்ற நாகரி வாசகமும், குதிரை வீரனுள்ள புறத்தில் **ஸ்ரீ ஹமீரா** என்ற நாகரி வாசகமும் தான் இருக்கின்றன. வேறு சிலவற்றில் கலிஃபாவின் பெயர் உள்ளது ; இவற்றில் ஒரு புறம் **முஸ்தன் சிரா அமீா-லி மோமிண** என்றும், மறுபுறம் **ஸ்ரீ கலி:பா** என்றும் நாகரியில் பொறிக்கப் பட்டுள்ளன. மற்றும் சில நாணயங்களில், ஒரு புறம் **ஸ்ரீ கலி:பா** வென்றும், மறுபுறம் **ஸ்ரீ ஹமீரா** என்றும் உள்ளன. (2) ஒருபுறம் குதிரை வீரனும் **ஸ்ரீ ஹமீரா** என்ற நாகரி வாசகம் அல்லது **சுல்தான் இல்துத்மிஷ்** என்ற அரேபிய வாசகமும், மறுபுறம் அரேபிய வாசகமொன்றும் உள்ளவை. (3) ஒருபுறம் அரேபிய வாசகமும், மறுபுறம் **விக்ரம சம்வத்** என்ற பெயருடன் வேறொரு நாகரி வாசகமும் கொண்டவை. இம்மூன்று வகை நாணயங்களில், அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர்கள் எவருமே மூன்றாவது வகை நாணயங்களை வெளியிடவில்லை ; பெரும்பாலும், முதல் வகை அல்லது இரண்டாவது வகை நாணயங்களைத்தான் வெளியிட்டனர். பால்பன் என்பவர் சுல்தானாக வந்தபோது, இவ்வகை நாணயங்களை அச்சிடும் பழக்கம் நிறுத்தப்பட்டது. நாணயங்களில் உருவங்களைப் பொறிக்கும் பழக்கத்திற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு, அவர் வெளியிட்ட நாணயங்களில் ஒரு புறம் பெரிய வட்டத்தையும், அவ் வட்டத்திற்குள் **பால்பன்** என்ற அவரது பெயரை அரேபிய மொழியிலும், அவ்வட்டத்தைச் சுற்றி **ஸ்ரீ சுல்தான் கதாசதீன்** என்ற நாகரி வாசகத்தையும்

பொறித்தார். மறுபுறத்தில் முன்பு வழக்கத்திலிருந்த அரேபிய வாசகத்தை அச்சிட்டார். முஸ்லிம் மன்னர்கள் வெளியிட்ட செம்பு நாணயங்கள் எல்லாவற்றிலும் இருபுறமும் வாசகங்களே இருக்கின்றன. சிலவற்றில் ஒரு புறம் அவர்களது பெயரும் பட்டமும் பொறிக்கப்பட்டுள்ளன ; மறுபுறம் நாணயச்சாலையின் பெயர் உள்ளது. வேறு சிலவற்றில் பெயர் ஒரு புறமும், பட்டம் மற்றொரு புறமும் இருக்கின்றது ; மேலும் சிலவற்றில் ஒரு புறம் **அத்ல்** என்ற சொல் மட்டும்தான் காணப்படுகிறது.

கி.பி. 1290-ல் டில்லிப் பேரரசு கில்ஜி வமிசத்தினரிடம் சென்றது. இவ் வமிசத்தைச் சேர்ந்த ஜலாலுதீன் பிரோஸ் (கி.பி. 1290-1296), ருக்னுதீன் இப்ராஹிம் (கி.பி. 1296) ஆகிய இரு மன்னர்களும் பால்பனின் நாணயங்களையே பின்பற்றினர். ஆனால் இவர்களுக்குப்பின் ஆட்சிக்கு வந்த அலாவுதீன் முகமது ஷா என்பவர் (கி.பி. 1296–1316), தென்னிந்தியாவில் படையெடுத்து வெற்றியும் கண்டு, நிறைந்த செல்வங்களுடன் டில்லி திரும்பியவர் ; எனவே, இவர் பளுவான நாணயங்களை ஏராளமாக வெளியிட்டார். இவர் மட்டுமன்றி, இவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த குத்புதீன் முபாரக் ஷா என்பவரும் **தங்கா** எனப் பட்ட வெள்ளி நாணயங்களோடு, பளுவான தங்க நாணயங்களையும் வெளியிட்டனர். அலாவுதீன் வெளியிட்ட தங்க நாணயங்கள் 5, 10, 50, 100 தோலா எடையுள்ளவை. அவரது மகன் குத்புதீன் முபாரக் என்பவரோ 5, 10, 20, 30, 40, 50, 60, 70, 80, 90, 100, 150, 200 தோலா எடைகளில் பலதரப்பட்ட தங்க நாணயங்களையும் வெள்ளி நாணயங்களையும் வெளியிட்டார் ; இவை சதுர வடிவத்திலும் வட்டமாகவும் வெளியாயின. ஆனால் இவற்றில் மாதிரிக்குக்கூட இன்று ஒன்றும் கிடையாது. எனினும், இப் பளுவான நாணயங்கள் வெளியானபோது, டில்லி நாணயச்சாலையில் தலைவராகப் பணியாற்றிய தக்கூர் பெரு என்பவர் எழுதி வைத்துள்ள நாணயக்கணக்கு விவரங்களிலிருந்து இவற்றைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. இக் குறிப்பு உண்மையாகத் தான் இருக்க வேண்டுமென்ற வகையில், சிறிது காலம் கழித்து ஆட்சிப் பொறுப்பை ஏற்ற முகலாய மன்னர்கள் கூட இதுபோன்ற பளுவான நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர். ஆனால்,

அழகான முத்திரை கொண்டிருந்த இத் தங்கக் கட்டிகளும், வெள்ளிக் கட்டிகளும் நாணயங்களாகப் புழங்காமல், வெறும் சொத்தாக மட்டும் பாவிக்கப்பட்டுப் பத்திரமாக இருப்பில் வைக்கப்பட்டதாகவும், ஒரு சில சமயங்களில் வெளிநாட்டுத் தூதர்கள், தானாதிபதிகள் போன்ற பெரியவர்களுக்கு இவை நன்கொடையாகவோ பரிசாகவோ மட்டும் கொடுக்கப்பட்ட தாகவும் ஒரு சில அறிஞர்கள் கூறுவர். பெரு மதிப்புடைய நாணயங்களாக இவை புழங்கியதே கிடையாதென்பது அவ்வறிஞர்களின் கருத்து. எவ்வாறிருப்பினும், இவற்றை வெறும் கட்டிகளாகக் குறிப்பிடாமல் தங்க நாணயங்களாகவும் வெள்ளி நாணயங்களாகவும் தக்கூர் பெரு அவர்கள் குறிப்பிடு வதால், அவர் குறிப்பிட்டிருப்பதே உண்மையாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

அலாவுதீன் கில்ஜி அவர்கள், இதுவரை புழக்கத்திலிருந்து வந்த வாசகங்களை மாற்றி, புது வாசகங்களைப் பொறித்துச் சில தங்க நாணயங்களையும் வெள்ளி நாணயங்களையும் வெளியிட் டிருக்கிறார். சான்றாக, ஒரு சிலவற்றில் முன்புறம் பொறிக்கப் பட்ட கலிஃபா என்ற பெயரை நீக்கி விட்டு, அதற்குப் பதிலாக **சிகந்தர் அல்-சானி யமீன்-உல்-கிலா:.பத்** (கலிஃபாவிற்கு வலது கரமாக விளங்கும் இரண்டாவது அலெக்சாண்டர்) என்ற தற்புகழ்ச்சியான வாசகத்தைப் பொறித்திருக்கிறார். குத்புதீன் முபாரக் என்பவரோ இதைக் காட்டிலும் டாம்பீகமான **அல்-இமாம் அல்-ஆஜம் கலி:.பா ரப் அல்-ஆலமின்** (முஸ்லிம் மக்களின் ஒப்பற்ற தலைவரும், மண்ணுலகிற்கு மட்டுமன்றி, விண்ணுலகிற் கும் மன்னராக விளங்கும் கலிஃபா) என்ற வாசகத்தைப் பொறித் திருக்கிறார். முகமது பின் சாம் காலம் தொடங்கி இது வரை டில்லி சுல்தான்களாக இருந்த அனைவரும் எடை, உருவம், வேலைப் பாடு, வாசகம் பொறிக்கும் முறை ஆகிய எல்லாவற்றிலுமே ஒரே மாதிரியான தங்க நாணயங்களையும் வெள்ளி நாணயங்களையும் தான் வெளியிட்டு வந்தனர். சான்றாக, அக்காலத்தில் 170 தானிய மணி எடை ஒரு தோலாவிற்குச் சமமாக இருந்ததால் எல்லா மன்னர்களுமே 170 தானியமணி எடையில்தான் தங்கள் நாணயங்களை வெளியிட்டு வந்தனர்.

பிரோஸ் கில்ஜியும் அலாவுதீன் கில்ஜியும் வெளியிட்ட பில்லன் நாணயங்களில் பின்புறம், பால்பன் நாணயங்களைப்போல் இரண்டு மொழிகளில் வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அதேசமயம், அலாவுதீன் கில்ஜி வெளியிட்ட வேறொரு வகை நாணயங்களும் உள்ளன; இவற்றில் அவரது பெயரும் பட்டமும் பாதிபாதியாக இருபுறமும் பொறிக்கப்பட்டுள்ளன. அவருக்குப் பின் ஆட்சி செய்த சிலர்கூட இதே முறையைக் கையாண்டிருக்கின்றனர். குத்புதீன் முபாரக் அவர்கள் வேறு சில புதிய முறைகளிலும் நாணயங்களை வெளியிட்டிருக்கிறார். சான்றாக, அவரது பில்லன் நாணயங்கள் எல்லாம் **காணி** என்ற பெயரால் வழங்கப்பட்டன. மேலும், இந் நாணயங்களை **ஏக்காணி** (ஒன்று), **துக்காணி** (இரண்டு காணி), **சார்காணி** (நான்கு காணி), **சேகாணி** (ஆறு காணி), **ஆட்காணி** (எட்டு காணி), **பாராகாணி** (பன்னிரண்டு காணி), **சௌபீஸ்காணி** (இருபத்திநான்கு காணி), **அட்தாலிஸ்காணி** (நாற்பத்தெட்டுக் காணி) என்று பல மதிப்புடையவைகளாகப் பாகுபடுத்தினர். இவையனைத்திற்கும் மேலான அறுபது காணி மதிப்புடைய **தங்காவும்** அவரால் வெளியிடப்பட்டது. **காணி** என்னும் சொல் (ரூபாய் என்ற சொல்லைப்போல்) நாணயத்தின் அளவைக் குறிப்பிடும். இதையே கில்ஜி வமிசத்தினர் **ஜித்தல்** என்ற பெயரிலும், கில்ஜி வமிசத்தினருக்குப்பின் **தாம்** என்ற பெயரிலும் வழங்கி வந்தனர். இந் நாணயங்களில் எட்டு **காணி** வரையுள்ளவை அனைத்தும் 56.7 தானியமணி எடையில் வெளியிடப்பட்டன; எனினும், அவற்றிலிருந்த வெள்ளி, செம்புக் கலவையின் விகிதாசாரத்திற்கேற்பத்தான் அவற்றின் மதிப்பு நிர்ணயிக்கப் பட்டன. தக்கூர் பெரு அவர்கள் தரும் விளக்கப்படி, **ஏக்காணி** (ஒரு காணி) நாணயத்தில் 5 சதவீத வெள்ளியும் 95 சதவீதச் செம்பும் கலக்கப்பட்டன; **துகாணியில்** 9.75 சதவீத வெள்ளி சேர்க்கப்பட்டது; **சார்காணி** என்பது 16.4 சதவீத வெள்ளி கொண்டது. இவ்வாறாக, வெள்ளியின் கலவை விகிதம் அதிகரிக்க அதிகரிக்க நாணயத்தின் மதிப்பும் உயர்ந்ததாகப் பாவிக்கப்பட்டது. சௌகாணிக்கடுத்த மதிப்புடைய மூன்று நாணயங்களும் கொஞ்சம் அதிக எடைகொண்டவை; இவற்றின்

மதிப்பும்கூட வெள்ளியின் கலவை விகிதாசாரத்திற்கேற்ப நிர்ணயமாயின. இவ்வாறாக, இந்திய நாணய வரலாற்றில் இந் நாணயங்கள் புதுமையானவைகளாகக் கருதப்படுகின்றன. ஆனால் இந் நாணயங்களில் ஒரு விசித்திரம் உண்டு; அதாவது, எதிலுமே அதன் மதிப்பு அச்சிடப்படவில்லை. எனவே, ஒரே எடையிலிருந்த பல்வேறு மதிப்புடைய நாணயங்களைப் பாகுபடுத்துவதில் மக்கள் சிரமப்பட்டிருக்க வேண்டும். ஒருவேளை இவற்றின் உருவத்தைக் கொண்டு பாகுபடுத்தினார்களா வென்றால், அப்படியும் தெரியவில்லை.

டில்லி சுல்தான்கள் வெளியிட்ட செம்பு நாணயங்கள் பில்லனில் செய்யப்பட்ட காணிகளைவிடக் குறைந்த மதிப்புடையவை. இச் செம்பு நாணயங்கள் முறையே **விசுவா** (1/20 காணி மதிப்புடையது), **சவா–வசுவா** (1/16 காணி மதிப்புடையது), **அதவா** (1/8 காணி மதிப்புடையது), **பைகா** (ஐந்து விசுவா அல்லது $\frac{1}{4}$ காணி மதிப்புடையது) என வழங்கப்பட்டன. தக்கூர் பெரு அவர்களின் கணக்குப்படி இவை முறையே 14.2, 19.7, 35.8, 71.6 தானியமணி எடை கொண்டவையாகும்.

இந்தச் சுல்தான் மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் சிலவற்றில் அவை அச்சடிக்கப்பட்ட நாணயச்சாலைகளின் பெயர்களும் உள்ளன. சான்றாக, இல்துத்மிஷ் நாணயங்களில் அவரது தலைநகரமான டில்லியின் பெயர் உள்ளது. ரஜியாவின் நாணயங்களில் வங்காள ஆளுநர்களின் தலைநகரமான கௌர் எனப்படும் லக்னௌதி என்ற பெயரைக் காணலாம். அலாவுதீன் கில்ஜி தேவகிரிக்குப் படையெடுத்துச் சென்று அதைக் கைப்பற்றியதும் அங்கிருந்தே சில நாணயங்களை வெளியிட்டார்; இவற்றில் தேவகிரியின் பெயர் இருக்கிறது. மேலும், ரந்தம் பூரை அவர் கைப்பற்றியபின், அவ்வூருக்கு தாருல் இஸ்லாம் என்ற பெயரைக் கொடுத்தார்; எனவே அவரது நாணயங்கள் சிலவற்றில் தாருல் இஸ்லாம் என்ற பெயரும் இருக்கிறது. அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த குத்புதீன் முபாரக் என்பவர், தனது நினைவாக தேவகிரியைக் குத்பாபாத் என்று மாற்றினார். இதனால் அவரது நாணயங்கள் சிலவற்றில் குத்பாபாத் என்ற பெயரைக் காணலாம். வேறு சில ஊர்களின் பெயர்களும் சில

நாணயங்களில் உள்ளன. ஆனால் அவ்வூர்கள் அவ்வளவு முக்கியமானவையல்ல. ஒருவேளை அவ்வூர்களில் முகாமிட்டிருந்த மன்னர்கள் அங்கிருந்தே சில நாணயங்களை வெளியிட்டிருக்கலாம்.

கி.பி. 1320-ல் துக்ளக் எனப்படும் வேறொரு இனத்தார் டில்லியின் மூன்றாவது வம்ச சுல்தான்களாயினர். அவர்களில் முதலாவது மன்னரான கியாசுதீன் துக்ளக் என்பவர் தங்கம், வெள்ளி, பில்லன், செம்பு ஆகிய நான்கு உலோகங்களிலும் வெளியிட்ட நாணயங்கள் கில்ஜி வமிசத்தினரின் நாணயங்களைப் போலவே உள்ளன. ஹிஜ்ரி வருடம் 724–725-ல் (கி.பி. 1323–24) அவர் தெலிங்கானாமீது படையெடுத்து, அதைக் கைப்பற்றியதன் நினைவாக முற்றிலும் புதுவகையான நாணயங்கள் சிலவற்றை வெளியிட்டார். இவற்றில் **முல்க்–இ–திலங்கானா** என்ற நாணயச் சாலையின் பெயர் உள்ளது. முகமதுபின் துக்ளக் என்று பிரபலியமாக அழைக்கப்பட்ட அவரது மகனான பக்ருதீன் ஜூனா தன் முன்னோர்களைவிட அழகான நாணயங்களை உருவாக்கி, அவற்றில் வாசகங்களைக் கவர்ச்சியாகப் பொறித்து வெளியிட்ட பெருமைக்குரியவர். அவர் பல்வேறு இடங்களிலிருந்து நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டிருப்பது சிறப்பானதோர் அம்சமாகும். அவரது நாணயங்கள் டில்லி, தாருல்–இஸ்லாம் (ரந்தம்பூர்), தார், லக்னௌதி, சட்காம், சுல்தான்பூர், முல்க்–இ–திலிங்கானா, துக்ளக்பூர் (திர்ஹுத்) ஆகிய பல இடங்களில் அச்சிடப் பட்டன, பின், ஹிஜ்ரி வருடம் 725–727-ல் (கி.பி. 1325–1327) தேவகிரியிலிருந்து வெளியான நாணயங்களில் குத்பாபாத் என்ற பெயரைப் பொறித்தார்; பின்னர், ஹிஜ்ரி ஆண்டு 727-ல் (கி.பி. 1327) வெளியிட்ட நாணயங்களில் தேவகிரி என்றே மாற்றினார். அடுத்த ஆண்டில் ஹிஜ்ரி வருடம் 728-ல் (கி.பி. 1328) அதற்கு தௌலதாபாத் என்ற பெயரைச் சூட்டினார். இவ்வாறாக, அவரது நாணயங்கள் குறைந்தபட்சம் ஒன்பது ஊர்களிலாவது அச்சிடப்பட்டதாகத் தெரிகிறது.

முகமதுபின் துக்ளக், அவரது தந்தையைக் கொன்றுவிட்டு அரியணை ஏறியவர்; எனினும், அவரது ஆட்சிக் காலத்தில் முதல் மூன்றாண்டுகளில் வெளியிட்ட நாணயங்களிலெல்லாம் அவரது பெயரைப் பொறிக்காமல், தந்தையின் பெயரைப்

பொறித்திருப்பது விந்தையாக உள்ளது. அவற்றில் தந்தையின் பெயரைமட்டுமன்றி, **அல்-சஹீத்** (புனிதத் தியாகி) என்ற பட்டத்தையும் சேர்த்துப் பொறித்திருப்பது அவரைக் கௌரவிப்பதற்காக அல்ல; தன்னைக் கொலைகாரனென்று எவரும் சந்தேகிக்கக்கூடாது என்ற நயவஞ்சகமான எண்ணத்தோடுதான் என்று தெரிகிறது. மூன்றாண்டுகளுக்குப் பின்னர் வெளியிட்ட நாணயங்களில் தந்தையின் பெயரை நீக்கிவிட்டு அவரது பெயரையே பொறித்தார். இந் நாணயங்களில் இல்துத்மிஷ் காலத்திற்குப்பின் கைவிடப்பட்ட கலிமாவை மறுபடியும் புகுத்தினார். அப்போதிலிருந்து முஸ்லிம் மன்னர்களின் நாணயங்களிலெல்லாம் கலிமாவைப் பொறிப்பது முக்கியமானதோர் அம்சமாக அமைந்துவிட்டது. எவ்வாறிருப்பினும், நாணயங்களில் பல மாறுதல்களைப் புகுத்த முயன்ற தீரர் என்றும் முகமது துக்ளக் கருதப்படுவர். முதன் முதலில் நாணயத்தின் எடையை மாற்ற முனைந்தார். அவர் அரியணை ஏறிய புதிதில் வழக்கம்போல் தங்கத்திலும் வெள்ளியிலும் 170 தானியமணி எடையுள்ள நாணயங்களைத்தான் வெளியிட்டார். ஆனால் நாளடைவில் தங்க நாணயங்களின் எடையை ஆறில் ஒரு பங்கு அதிகரித்து, 201.5 தானியமணி எடையில் **தினாரம்கள்** என்ற பெயரில் வெளியிட்டார்; ஆனால் அதே சமயம், வெள்ளி, நாணயங்களின் எடையை ஆறில் ஒரு பங்கு குறைத்து, 144 தானியமணி எடையில் **அட்லிஸ்** என்ற பெயருடன் வெளியிட்டார். அதன்பின், ஹிஜ்ரி ஆண்டு 728-ல் (கி.பி. 1328) தென்னிந்திய நாணயச்சாலைகளான தௌலதாபாத், சுல்தான்பூர் ஆகிய இடங்களிலிருந்து வெளியிடப்பட்ட தங்க நாணயங்களின் எடையைக் குறைக்க ஆரம்பித்தார், ஹிஜ்ரி ஆண்டு 729-ல் (கி.பி. 1329) தங்கத்தில் **தினாரம்கள்** வெளியிடுவதை நிறுத்திவிட்டு, வங்காளத்தைத்தவிர மற்றப்பகுதிகளிலெல்லாம் 170 தானியமணி எடையுள்ள பழைய **தங்காக்களையே** வெளியிடத் தொடங்கினார். முகமதுவின் தங்க நாணயங்கள் பல கிடைத்துள்ளன; ஆனால் அவரது வெள்ளி நாணயங்கள் கிடைப்பது கடினமாக இருக்கிறது. அவரது ஆட்சியின்போது முதல் மூன்றாண்டு காலத்தில் **தங்கா** என்ற வெள்ளி நாணயங்களோடு, அவர் வெளியிட்ட அட்லிஸ்

எனப்பட்ட வெள்ளி நாணயங்களும் சேர்ந்து புழங்கியதாகத் தெரிகிறது. ஹிஜ்ரீ வருடம் 727-க்குப்பின் பில்லனில் அவர் வெளியிட்ட **தங்காக்கள்** பிரபலியமானவையாகும். அவற்றில் சில மட்டும் கில்ஜி நாணயங்களைப்போல் பளுவானவை; எனினும் சிறிது காலத்திற்குப் பின்னர், அவற்றை 141.7 தானியமணி எடையுள்ளதாகக் குறைத்தார். இவை கில்ஜி வமிசத்தினரின் **பாராகாணியை**விடக் கனமானவையெனினும், **சௌபீஸ்காணியை** விட இலேசானவை; ஏறக்குறைய 20 காணி எடை கொண்டவையாக மதிப்பிடலாம். இந் நாணயங்களில் கலக்கப்பட்ட வெள்ளியும் செம்பும் கில்ஜி நாணயங்களின் விகிதாசாரத்தில் சேர்க்கப்பட்டது. எனினும், இவற்றில் பொறிக்கப்பட்டுள்ள **தபகாத்–இ–அக்பரி** என்ற வாசகத்தைப் பார்க்கும்போது, இவை **தங்கா–இ–சியாவின்** (கருப்பு தங்கா) மதிப்புடையதாகத் தெரிகிறது; **தங்கா–இ–சியா** என்பது செம்பில் செய்த தங்காவைக் குறிப்பிடுகிறது.

முகமது துக்ளக் வெளியிட்டுவந்த வெள்ளி, பில்லன் தங்காக்களுக்குப் பதிலாக ஹிஜ்ரி ஆண்டு 730-ல் (கி.பி. 1329–30) செம்பு நாணயங்களை வெளியிடத் துணிந்தார். இத்துணிச்சலான செயலை மக்கள் ஆதரிக்கவேண்டுமென்பதற்காக அவற்றில் **மன் அதாயா அல்–சுல்தான்–∴பஹூத–அதாயெ அல்–ரஹ்மான்** (சுல்தானுக்குப் பணிகின்றவன் இரக்கமுள்ள இறைவனுக்கும் பணிகின்றவன் ஆவான்) என்ற வாசகத்தையும், **முஹர் சுத்–தங்கா ரயஜ் தர் ரஜாகர் பந்தா உம்மீத்வாரா** (முத்திரை கொண்ட இத்தங்கா புழக்கத்திற்கு வந்துவிடுமென நம்புகிறேன்) என்ற வாசகத்தையும் மக்களுக்கு ஒரு வேண்டுகோள் போல் பொறித்து வெளியிட்டார். ஆனால் அவரது நம்பிக்கை வீணானது. ஏனெனில் இந் நாணயங்களையும் இவற்றிலுள்ள வாசகத்தையும் எவருமே எளிதாக அச்சிட முடிந்ததால், பலபேர் தங்கள் வீட்டிலேயே அவற்றை அச்சிடத் தொடங்கினர். அக்காலத்திய வரலாற்று மேதை ஒருவர் கூறியதுபோல் ஒவ்வொரு வீடும் ஒரு நாணயச்சாலையாக மாறியது. இதனால் நல்ல நாணயங்களோடு கள்ள நாணயங்களும் சேர்ந்து புழங்கின; எனவே, இவ்விருவகை நாணயங்களையும் வாபஸ் பெற்ற முகமதுக்கு பெரும் நஷ்டம்

ஏற்பட்டது. பின் ஹிஜ்ரி ஆண்டு 732-ல் (கி.பி. 1331–32) இவற்றை வெளியிடுவதை நிறுத்திவிட்டு, மறுபடியும் 55.7 தானியமணி எடை கொண்ட பில்லன் நாணயங்களை வெளியிடலானார்.

முகமது பின் துக்ளக்கை அரசுரிமை கொண்டவராக எந்தக் கலிஃபாவுமே அங்கீகரித்ததில்லை; எனவே, ஹிஜ்ரி வருடம் 741-ல் (கி.பி. 1340–41) தான் சட்டப்படி மன்னர்தானா என்ற சந்தேகம் கொண்ட முகமது வேதனையடைந்தார். ஆனால் கி.பி. 1258ஆம் ஆண்டிலேயே பாக்தாத்தில் இருந்த அப்பாசித் கலிஃபாக்களையெல்லாம் மங்கோலியர்கள் ஒழித்துக் கட்டி விட்டனர். எனவே, தனது அரசுரிமையை அங்கீகரிக்கக்கூடிய கலிஃபா எவராகிலும் இருக்கின்றனரா என்பதை விசாரித்து, எகிப்தில் கலிஃபாவைப்போல் பெயருடைய **அல்–முஸ்தா:பி பில்லா** என்றொருவர் இருப்பதைத் தெரிந்து கொண்டார். பின்னர், அவருக்கு விண்ணப்பம் செய்து அங்கீகாரம் பெற்றதும் தனது பேரரசின் நாணயங்களில் **அல்–முஸ்தா:பி** என்ற பெயரைப் பொறித்து வெளியிடலானார்; இக் கலிபா ஹிஜ்ரி 740-ல் இறந்துவிட்டாலும். ஹிஜ்ரி வருடம் 744 வரை அவரது பெயரிலேயே நாணயங்களை வெளியிட்டார் முகமது. பின்னர், ஹிஜ்ரி ஆண்டு 744-ல் கலிஃபாவாக இருந்த இரண்டாம் அல்-ஹக்கீம் என்பவர் அவரது தூதர் ஒருவர் வழியாக முகமதுக்கு **நசீர் அமீர்–அல்–மோமினீன்** என்ற பட்டத்தை அனுப்பிவைத்தார். அதிலிருந்து அல்-ஹக்கீம் என்ற பெயரிலேயே முகமது நாணயங்களை வெளியிட்டார்; ஆனால் இப் பெயரில் வெளியான நாணயங்கள் அனைத்துமே பில்லனில் செய்யப்பட்டவையாகும்.

முகமது வெளியிட்ட பில்லன் நாணயங்கள் குறைந்தது இருபத்தைந்து வகையாவது இருக்கும். இவை வடஇந்தியாவிற்கென்று டில்லியிலும், தென் இந்தியாவிற்கென்று தௌலதாபாத்திலும் இரண்டு இனங்களாக வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது. டில்லியில் அச்சிடப்பட்ட வெள்ளி **தங்காக்கள்** 48 தரமாகப் பாகுபடுத்தப்பட்டன. தௌலதாபாத்தில் வெளியான **காணிகள்** அல்லது **ஜித்தல்கள்** 50 தரங்களாகப் பாகுபடுத்தப் பட்டன. முகமது வெளியிட்ட செம்பு நாணயங்கள் பன்னிரண்டு

வகைப்படும்; ஆனால் இவை அவ்வளவாகக் கிடைப்பதில்லை.

முகமதுக்குப் பின் ஆட்சிக்கு வந்த பிரோஸ் துக்ளக் என்பவர் முப்பத்தேழு ஆண்டுகள் வரை அமைதியாக ஆட்சி புரிந்தார். அவர் திறமையற்றவராக இருந்ததால் தக்காணத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த ஆளுநர்கள் அவருக்கு விரோதமாகக் கலகம் செய்யத் தொடங்கினர்; ஏனைய ஆளுநர்களும் அவர்களைப் பின்பற்றிக் கலகத்தில் ஈடுபட்டனர். பிரோஸ் காலத்திற்குப் பின்னர், டில்லி சுல்தான் ஆட்சியின்கீழிருந்த பகுதிகள் அனைத்தும் சுதந்திர இராச்சியங்களாக ஆகிவிட்டன; இதனால் சுல்தான் அரசு டில்லியைச் சுற்றி மட்டும் இருந்த சிறிய அரசாக மாறிவிட்டது. கி.பி. 1398-ல் தார்த்தர் வீரரான தைமூர் இந்தியாவில் புகுந்து, துக்ளக் மன்னரைத் தோற்கடித்து, டில்லியைக் கைப்பற்றினார். இச் சீர்கேடான நிலைமைகளில் நாணயங்களும் சீர்குலையத் தொடங்கின.

பிரோஸ் துக்ளக் என்பவர் தனது முன்னோர்களைப்போல் தனது நாணயங்களில் முன்புறம் கலிஃபாவாயிருந்த அப்துல்-அப்பாஸின் பெயரையும், அவருக்குப்பின் கலிஃபாவாக வந்த அப்துல்-ஃபத், அப்துல்லா ஆகியோரின் பெயர்களையும் பொறித்தார்; பின்புறத்தில் அவரது பெயரையும் **சையஃப் அமீர்–உல்–மோமினீன் அபூ–அல்–முஜபர்** என்ற அவரது பட்டத்தையும் பொறித்தார். முகமதுபின் பிரோஸ் என்பவர் காலத்தில் கலிஃபாவின் உண்மையான பெயரைப் பொறிக்காமல், **னல்–இமாம் அல்–மோமினீன்** (இஸ்லாமின் இணையற்ற தலைவர், இஸ்லாமியரின் ஆணையாளர்) என்ற வாசகமே பொறிக்கப்பட்டது. பிரோஸ் ஷா என்பவர் வெளியிட்ட தங்க நாணயங்கள் ஆறு வகைப்படும்; எனினும், இவை ஏராளமாகக் கிடைத்துள்ளன. அவருக்குப்பின் வெளியான தங்க நாணயங்கள் கிடைப்பது அரிது. பிரோஸ் ஷாவின் வெள்ளி நாணயங்கள் கிடைப்பதுதான் கடினம்; பில்லன் நாணயங்கள் ஏராளமாக உள்ளன. இப்பில்லன் நாணயங்கள் அவருக்குப் பின்னும்கூட வெளியிடப்பட்டிருக்கின்றன. முஸ்லிம் காலத்தில் வெளியான நாணயங்களில் ஒரு சில நீங்கலாக, மற்றவற்றிலெல்லாம் டில்லி என்ற பெயர் உள்ளது.

துக்ளக் வமிசத்தைச் சேர்ந்த கடைசி மன்னரான மஹ்மூத் என்பவர் இறந்தபின், முஸ்லிம் ராஜ பரம்பரையினர் தோஆப்பை ஆண்டுவந்த தளபதியான தௌலத்கான் லோடியை அரியணையில் அமர்த்தினர். தௌலத் கான் லோடி கி.பி. 1413-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்ருர். ஆனல் விரைவில் அவரது பதவி பறிபோயிற்று; சையத் வமிசத்தைத் தோற்றுவித்த கிஸிர் கான் என்பவர் வலிமை மிக்கவராய் இருந்ததால் டில்லியைக் கைப்பற்றினர். தௌலத் கான் லோடியும், கிஸிர் கானும் சொந்தமாக நாணயங்களை வெளியிட்டதில்லை. அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த முபாரக் ஷாவும் அவரது பெயரில் நாணயங்களை வெளியிடவில்லை. இம்மூவரும் அக்காலத்தில் புழக்கத்திலிருந்த நாணயங்களைப் பின்பற்றி, வருடங்களை மட்டும் மாற்றி வெளியிட்டனர். இவற்றில் பிரோஸ் துக்ளக்கின் பில்லன், வெள்ளி நாணயங்களிலுள்ள வாசகங்களும், முகமது பின் பிரோஸின் தங்க, வெள்ளி நாணயங்களிலுள்ள வாசகங்களும், முகமது பின் முகமதுவின் வெள்ளி நாணயங்களிலுள்ள வாசகங்களும்தான் அப்படியே அச்சிடப்பட்டுள்ளன. எனினும், முபாரக் என்பவர் ஹிஜ்ரி ஆண்டு 832-ல் (கி.பி. 1429–30) தன் பெயரிலேயே நாணயங்களை அச்சிடத் தொடங்கினர். அவர் அச்சிட்ட தங்க நாணயங்களும் வெள்ளி நாணயங்களும் வழக்கமான எடையில் உள்ளன; செம்பு நாணயங்களின் எடையை மட்டும் 86 தானியமணி எடைக்கு மாற்றியிருக்கிறுர். பில்லனில் அவர் நாணயங்களை அச்சிட்டதில்லை. அவரது நாணயங்கள் அனைத்தும் துக்ளக் மன்னர்களுடையதைப்போலவே இருக்கின்றன. அவருக்குப் பின்னர், அவரது சகோதரர் பரீத் என்பவரின் மகனை முகமது சையத் ஆட்சிக்கு வந்தார். அவர் வெளியிட்டுள்ள பில்லன் நாணயங்களும் பழைய எடையிலேயே உள்ளன. அவருக்குப்பின், சையத் வமிசத்துக் கடைசி மன்னராக ஆட்சி செய்த ஆலம் ஷா என்பவர் வெளியிட்ட நாணயங்கள் ஒரு சில மட்டுமே கிடைத்துள்ளன.

கி.பி. 1451-ல் டில்லி அரசு, லோடி வமிசத்தைத் தோற்றுவித்த பஹ்லோல் லோடி என்பவரின் கைக்கு மாறியது. அவரது காலத்தில் தங்க நாணயங்களும் வெள்ளி நாணயங்களும்

அவ்வளவாகப் புழக்கத்தில் இல்லாததால் அவற்றைக் கைவிட்டு விட்டு, பில்லனிலும் செம்பிலும் மட்டுமே நாணயங்களை அச்சிட்டார். லோடி வமிசத்து மன்னர்களான பஹ்லோல், சிக்கந்தர், இப்ராஹிம் ஆகிய மூவரும் ஒரே மாதிரியான வாசகங்களைப் பொறித்து நாணயங்களை வெளியிட்டனர். அவர்களின் நாணயங்களில் முன்புறம், **அல்–முத்வாக்கல்–அலி** (இரக்கம் நிறைந்த இறைவனை நம்பி) என்ற வாசகமும், வெளியிட்ட மன்னரின் பெயரும், நாணயச்சாலையின் பெயரான டில்லியும் உள்ளன. மறுபுறம், **ஃபி ஜமான் அமீன் அல்–மோமினீன்** (இஸ்லாமிய ஆணையாளரின் ஆட்சியில்) என்ற வாசகமும் **கலதத் கிலாஃபத்** (அவரது அரசு என்றும் நிலைத்திருப்பதாக) என்ற வாசகமும், வருடமும் பொறிக்கப்பட்டுள்ளன. இந் நாணயங்களிலுள்ள வாசகமும் எழுத்துப் பொறிப்பும் ஜோன்பூரில் ஆட்சி செய்துவந்த ஷார்கி மன்னர்களின் நாணயங்களில் உள்ளதைப்போல இருந்தாலும் அவற்றைப் பின்பற்றப்பட்டதல்ல; ஏனெனில் ஷார்கி மன்னர்களுக்கும் சையத் மன்னர்களுக்கும் இடைவிடாமல் சண்டை நடந்தவண்ணம் இருந்தது.

இந்தியாவில் முகலாய வமிசத்தைத் தோற்றுவித்தவர் பாபர். இவர் கி.பி. 1526-ல் பானிப்பட்டு என்னுமிடத்தில் இப்ராஹிம் லோடியைக் கொன்றுவிட்டு டில்லி மன்னரானார். பாபர் ஆட்சி என்பது படைகளால் ஊரை ஆக்ரமிப்பதற்குமேல் ஒன்றுமில்லை. அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த ஹுமாயூன் பத்தாண்டுக்காலம் வரை நிம்மதியின்றி ஆட்சி புரிந்தார். அப்போது, சாதாரணச் சிப்பாயாக இருந்து உயர்ந்த நிலைக்குவந்த ஆப்கானியரான ஷெர்ஷா என்பவர் பீஹாரில் ஆட்சி நடத்தி வந்தார்; ஹிஜ்ரி ஆண்டு 945-ல் (கி.பி. 1538) தனக்கு ஷா என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார்; பின், கி.பி. 1550-ல் ஹுமாயூனை விரட்டியடித்துவிட்டு ஷெர்ஷாவே இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். ஷெர்ஷா பீஹாரிலும் வங்காளத்திலும் ஆட்சி செய்த காலத்திலேயே தன் பெயரில் வெள்ளி நாணயங்களையும் செம்பு நாணயங்களையும் வெளியிட்டிருக்கிறார். டில்லி மன்னரான பின், முன்னர் வெளியிட்டதைப் போன்றே செம்பிலும்,

வெள்ளியிலும் நாணயங்களை அச்சிட்டார். ஆனால் செம்பும் வெள்ளியும் கலந்த பில்லனில் நாணயம் செய்யும் பழக்கத்தை ஒழித்துவிட்டார். அவர் தங்க நாணயங்களை வெளியிட்டதே கிடையாது; எனினும் அவரது பெயருள்ள கள்ளத்தங்க நாணயங்கள் பல கிடைத்துள்ளன.

ஷெர்ஷாவின் வெள்ளி நாணயங்களில் முன்புறம் கலிமாவும் அபூபகர், உமர், உஸ்மான், அலி என்னும் நான்கு கலிஃபாக் களின் பெயர்களும் உள்ளன; பின்புறம், **ஃபரீத்–உத்–துனியா வா தீன் அபு அல்–முஜஃபர் ஷெர்ஷா சுல்தான்** என்ற அவரது பெயரும், **கலத் அல்லா முல்க்** (அவரது அரசை அல்லா என்றும் நிலைத்திருக்கச் செய்வாராக) என்ற பக்தியான வாசகமும், நாணயச்சாலையின் பெயரோடு வருடமும் இருக்கின்றன; அதோடு, நாகரியில் **ஸ்ரீ ஷெர்ஷாஹி** என்று அவரின் பெயர் (பெரும்பாலும் தவருக) பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாசகங்கள் எல்லா நாணயங்களிலும் ஒரே மாதிரியாக இல்லை; இவை பொறிக்கப் பட்டுள்ள மாதிரியைக் கொண்டு இந் நாணயங்களைப் பல்வேறு மதிப்புடையனவாகப் பாவித்திருக்கின்றனர். இந் நாணயங்கள் உஜ்ஜயினி, ஆக்ரா, பாண்டுவா, சுனர், ரந்தாம்பூர், சத்காம், ஷரீஃபாபாத், ஷெர்கர் கோட்டை, ஷெர்கர் எனப்பட்ட கனோஜ், ஷெர்கர் எனப்பட்ட டில்லி, ஷெர்கர் எனப்பட்ட பக்கர், ஃபதாபாத், கல்பி, குவாலியர், மலோத் ஆகிய பல்வேறு நாணயச் சாலைகளில் அச்சிடப்பட்டிருக்கின்றன. சில நாணயங்களில் **ஜஹான்பனு** என்னும் நாணயச்சாலையின் பெயர் உள்ளது. ஒருவேளை, இவை அரண்மனையிலிருந்து அல்லது படை முகாமிருந்த இடத்திலிருந்து வெளியிடப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. ஏனெனில் முகலாயர் காலத்தில் அரசர்கள் முகாமிட்டிருந்த இடங்களிலிருந்து நாணயங்களை வெளியிடும் பழக்கம் பிரபலியமாகியிருக்கிறது. ஷெர்ஷாவின் செம்பு நாணயங்கள் அபூ, ஆக்ரா, ஆல்வார், அயோத்தி, பயானு, சுனர், ஹிஸார், சம்பல், ஷெர்கர் (கன்னேசி), ஷெர்கர் (கோட்டை), ஷெர்கர் (டில்லி), கல்பி, குவாலியர், லக்னே, மலாட், நர்நூல் ஆகிய இடங்களிலிருந்து அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன. அதோடு, நாணயச்சாலையின் பெயரே இல்லாத சில வெள்ளி

நாணயங்களும் செம்பு நாணயங்களும் கிடைத்துள்ளன. இவற்றை ஷெர்ஷா படையெடுத்துச் சென்றபோதும் தனது அரசை ஒருங்கிணைத்தபோதும் வெளியிட்டிருக்கலாமென ஒரு சில அறிஞர்கள் கூறுவர். ஆனால் நாணயச்சாலையின் பெயரைப் பொறிக்கும் பழக்கம் ஏற்பட்ட பின்னரும்கூட ஊர்ப்பெயரின்றிப் பல நாணயங்களை அச்சிட்டிருப்பதைப் பார்க்கும்போது, ஒருவேளை, ஷெர்ஷா முகாமிட்டிருந்த இடங்களிலிருந்தே இவற்றை வெளியிட்டிருக்கலாம் என்றே தோன்றுகிறது. அவரது செம்பு நாணயங்கள் பலவற்றில் முன்புறம் **ஃபீ அஹத் அல்–அமீர் அல்–ஹாமி** (இஸ்லாம் சமயப் பாதுகாவலரும், இஸ்லாம் மக்களின் ஆணையாளருமாயிருந்த காலத்தில்) என்ற வாசகம் உள்ளது. பின்புறம், சுல்தானின் பெயரும், பட்டமும், நாணயச்சாலையின் பெயரும் இருக்கின்றன.

ஷெர்ஷாவிற்குப்பின் சுல்தானாக வந்த இஸ்லாம் ஷா என்பவர் வெளியிட்ட நாணயங்களெல்லாம் ஷெர்ஷாவின் நாணயங்களைப் போலவே இருக்கின்றன. எனினும், இவரது வெள்ளி நாணயங்களில் உஜ்ஜயினி, பாண்டுவா, ரந்தாம்பூர், ஃபாதாபாத், மலாட் ஆகிய நாணயச்சாலைகளின் பெயரையே காணோம்; அவற்றிக்குப் பதிலாக, பயானா, ரெய்சீன், நர்னூல் ஆகிய பெயர்கள் உள்ளன. செம்பு நாணயங்களில் புதிய நாணயச் சாலைகளான பதாவன், ரெய்சீன், ஷாகர், ஷெர்கர் (கன்னோசி) என்ற பெயர்கள் அச்சிடப்பட்டுள்ளன. சூரி வமிசத்தைச் சேர்ந்த முகமது அடில் ஷா பட்டத்திற்கு வந்தபோது அவ் வமிசத்தின் செல்வமே குறைந்துவிட்டது போலும். அதனால்தான் அவரது நாணயங்களெல்லாம் முந்திய நாணயங் களைப் போலவே இருக்கின்றன. இப்ராஹிம், சிக்கந்தர்சூர் ஆகிய இருவரும் முகமது அடில் ஷாவோடு சண்டையிட்டு, டில்லிப் பேரரசின் சில பகுதிகளைப் பெற்று ஆண்டதாகத் தெரிகிறது. இவர்களிருவரும் செம்பிலும் வெள்ளியிலும் நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர்; ஆனால் அவை கிடைப்பது அரிதாக உள்ளது.

சூரி வமிசத்தினர் முந்திய டில்லி சுல்தான்களைப்போல் 170 தானியமணி எடையில் வெள்ளி நாணயங்களை அச்சிடுவதற்குப்

பதிலாக 180 தானியமணி எடையில் வெளியிட்டிருக்கின்றனர்; இவ் வெள்ளி நாணயங்களை இன்று வழக்கிலுள்ள **ரூபியா** என்று அழைத்திருக்கின்றனர். அதேபோல், செம்பு நாணயம் **பைசா** என்று அழைக்கப்பட்டிருக்கிறது; ஆனால் இப் பைசா நாணயங்களின் எடை ஒரே மாதிரியாக இல்லாததால் இதன் அதிகாரபூர்வமான எடை என்னவென்று தெரியவில்லை. சான்றாக, நர்னூலில் அச்சிடப்பட்டவை 328–329 தானியமணி எடையில் உள்ளன; சுனரில் வெளியிடப்பட்டவையோ 304 தானியமணிதான் இருக்கின்றன. எனினும், இவ்வளவு பளுவான நாணயங்களை இதற்குமுன் எவருமே வெளியிட்டது கிடையாது.

அதிகாரம் 12

வட இந்திய முஸ்லிம் அரசுகளின் நாணயங்கள்

டில்லி சுல்தான் இராச்சியத்தின் பகுதிகளைப் பல ஆளுநர்களும் சுல்தானின் பிரதிநிதிகளும் ஆண்டு வந்தனர் ; அவர்களில் வலிமை பெற்ற ஒரு சிலர் தங்கள் பகுதிகளைத் தாமே சுதந்திரமாக ஆளவேண்டுமென்ற பேராசை கொண்டு, வலிமையற்ற சுல்தான்கள் காலத்தில் கலகம் செய்து சுதந்திர அரசர்களானதோடு, சொந்தமாகவே நாணயங்களையும் வெளியிட்டு வந்தனர். அவ்வாறு வெளியிடப்பட்ட நாணயங்களில் முந்தியவை யனைத்தும் டில்லி சுல்தான் நாணயங்களைப்போலவே உருவாக்கப் பட்டன; நாளடைவில், அவர்களது இராச்சியங்களின் நிலைமை களுக்கும் வசதிகளுக்குமேற்ப, தமக்கே உரிய முறையில் சின்னங் களைப்பொறித்து, தனிப்பட்ட வேலைப்பாடுகளுடன் நாணயங்களை வெளியிட்டனர். இவ்வாறு தோன்றிய சுதந்திர அரசுகள் வங்காளம், குஜராத், மாளவம், ஜோன்பூர் ஆகிய பகுதிகளில் இயங்கி வந்தன. அப்போது, காஷ்மீரிலும்கூடச் சுதந்திரமான இராச்சியம் இருந்தது.

வங்காளம்

குத்புதீன் ஐபக் என்ற சுல்தானின் படைத்தளபதியாக இருந்து வந்த முகமது பக்தியார் கில்ஜி என்பவர், கி.பி. 1202-ல் வங்காளத்தின்மீது படையெடுத்து, அதைச் சுல்தான் இராச்சியத் தின் ஒரு பகுதியாக மாற்றினர். அவரே வங்காளத்தின் முதல் ஆளுநராகவும் நியமிக்கப்பட்டார். கி.பி. 1338 வரை வங்காளம், டில்லி சுல்தான் இராச்சியத்தின் கீழ்தான் இருந்து வந்தது. அதன் ஆளுநர்களைச் சுல்தான் மன்னர்களே நியமித்து

வந்தனர். எனினும், டில்லியிலிருந்து வெகுதூரத்தில் இருந்த காரணத்தால் வங்காளத்தில் ஆட்சி செய்து வந்த ஆளுநர்களுக்கு ஓரளவு சுதந்திரம் கொடுக்கப்பட்டிருந்தது. எனவே, வங்காளத்தை ஆண்டு வந்த ஆளுநர்களில் செல்வாக்கும் பேராசையும் கொண்ட சிலர், திறமையற்ற சுல்தான்களின் ஆட்சியின்போதெல்லாம் கலகம் செய்யத் தொடங்கினர். இதனால் வங்காளம் குழப்பமும் கலகமும் நிறைந்த பகுதியாக இருந்து வந்தது. எனவே, கி. பி. 1310-ல் அம் மாநிலத்தை மேற்கு வங்காளம், கிழக்கு வங்காளம் என்று இரண்டாகப் பிரித்து, தனித்தனி ஆளுநர்களை நியமித்து நிர்வாகம் செய்ய முற்பட்டனர். என்றாலும், கி.பி. 1338-ல் கிழக்கு வங்காளத்தில் ஆளுநராக இருந்த பக்ருதீன் முபாரக் ஷா என்பவர், டில்லி சுல்தானுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து. அம்மாநிலத்தை ஒரு சுதந்திர நாடாக ஆக்கினார். அதுவரை ஏறக்குறைய இருபத்தைந்து ஆளுநர்கள் வங்காளத்தை ஆட்சி செய்து வந்தனர். அவர்களில் கியாசுதீன் இவாஜ் (கி.பி. 1211–1226), முகிசுதீன் யுஸ்பக் (கி.பி. 1246–1258), ருக்னுதீன் கய் கௌஸ் (கி. பி. 1291–1302), சம்சுதீன் பிரோஷ் ஷா (கி.பி. 1302–1318), ஷிஹபுதீன் புக்ரா ஷா (கி.பி. 1318), கியாசுதீன் பகதூர் ஷா (கி.பி. 1310–1323) ஆகிய ஆறு ஆளுநர்களும் தம் பெயரிலேயே நாணயங்களை வெளியிட்டனர். அவர்கள் வெளியிட்ட நாணயங்கள் பெரும்பாலும் வெள்ளியில் செய்யப்பட்டவை. சம்சுதீன் பிரோஷ் ஷா என்பவர் மட்டும் தங்க நாணயங்களை வெளியிட்டிருக்கிறார்; ஆனால் அவை இப்போது கிடைப்பதில்லை. இந்த அறுவரில் முந்திய இருவர் மட்டும் தம் நாணயங்களில் கலிமாவையும் வருடத்தையும் ஒரு புறம் பொறித்துள்ளனர்; பின்புறத்தில் அவர்களின் பெயர்களும் பட்டங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றிலுள்ள வேலைப்பாடும் வாசகங்களும் டில்லி நாணயங்களிலுள்ளதைப் போன்றே இருக்கின்றன. ஏனைய நால்வரும், கலிமாவைப் பொறிப்பதற்குப் பதிலாக பாக்தாதில் கலிஃபாவாக இருந்த அல்-முஸ்தாசிம் என்பவரின் பெயரைப் பொறித்திருக்கின்றனர்.

கி. பி. 1339-ல், அதாவது, பக்ருதீன் முபாரக் கிளர்ச்சி செய்த ஒரு வருடத்திற்குள், சம்சுதீன் இலியாஸ் ஷா என்பவர் மறுபடியும்

இரண்டு வங்காளத்தையும் ஒன்றாக இணைத்துவிட்டார். அவ்வாறு இணைக்கப்பட்ட வங்காளத்தில் கி.பி. 1339 முதல் 1538 வரை நான்கு வமிசத்தினர் ஆட்சி செய்து வந்தனர். அதாவது, இலியாஸ் ஷா குடும்பத்தினர் (கி.பி. 1339 முதல் 1406 வரையும் மறுபடி 1442 முதல் 1481 வரை), இந்து அரசரான கணேஷ் குடும்பத்தவர் (கி.பி. 1406 முதல் 1442 வரை), ஹப்ஷி வமிசத்தைச் சேர்ந்த அரச பரம்பரையினர் (கி.பி. 1486 முதல் 1493 வரை), அலாவுதீன் ஹுசைன் ஷா குடும்பத்தவர் (கி.பி. 1493 முதல் 1538 வரை) என்று நான்கு இனத்தவர் ஆண்டனர். அவர்களது ஆட்சிக்குப் பின்னர், சூரி வமிசத்தைச் சேர்ந்த பல சிற்றரசர்கள் வங்காளத்தைச் சுதந்திர இராச்சியமாக ஆண்டனர். கடைசியாக, ஆப்கானியர்களான கராரானி குடும்பத்தவர் ஆண்டு வந்தனர்; அப்போது, கி.பி. 1576-ல் அக்பர் வங்காளத்தை அவரது பேரரசோடு இணைத்துவிட்டார்.

இவ்வாறு வங்காளத்தை ஆண்டு வந்த அரசர்கள் அவர்கள் காலத்திலிருந்த டில்லி சுல்தான் நாணயங்களைப் பின்பற்றியே பெரும்பாலும் தம் நாணயங்களில் வாசகங்களைப் பொறித்தனர். ஆனால், நாணயத்தின் ஓரத்தை ஒதுக்கி விட்டு, நடுப்பகுதியில் மட்டும் பெரியதொரு வட்டமோ, சதுரமோ, அல்லது ஆறு, எட்டு கோண வடிவமோ போட்டு, அதற்குள் தம் வாசகங்களைப் பொறித்திருக்கின்றனர்; ஒரு சிலர் நாணயத்தின் ஓரங்களை மழுப்பியிருக்கின்றனர். இம் மன்னர்கள் அனைவரும் டில்லி சுல்தான்களைப் போல் கிலாஃபாத்தின் சீடர்களாயிருந்தனர்; எனவே, தம் நாணயங்களின் முன்புறத்தில் தமது சமய வாசகங்களையே அச்சிட்டனர். இவ்வாசகங்கள் பெரும்பாலும், **யமீன் கலி.ஃபா அல்லா நசீர் அமீர் அல்–மோமினீன்** (கடவுளின் பிரதிநிதிக்கு வலக் கரமாயும், இஸ்லாமியத் தலைவரின் சீடராயுமுள்ளவர்) என்றோ, **யமீன் அல்–கிலா.ஃபத்** (கிலாஃபத்தின் வலக் கரம்) என்றோ, அல்லது **கவுஸ் அல்–இஸ்லாம் வா அல்–முஸல்மீன்** (இஸ்லாம் மதத்திற்கும் மக்களுக்கும் பேருதவியாளர்) என்றோ தான் இருக்கின்றன. இவற்றில் மூன்றாவது வாசகத்திலுள்ள எழுத்துக்கள் மட்டும் ஒன்றோடொன்று சேர்த்துப் பின்னப் பட்டுள்ளன. ஆஜம் ஷா என்பவர் மட்டும் (கி.பி. 1389)

நசீர் அல்–இஸ்லாம் வா அல்-முஸல்மீன் என்னும் புதிய வாசகத்தைப் பொறித்திருக்கிறார். கணேஷ் ராஜாவின் மகனை ஜலாலுதீன் முகமது ஷா (கி.பி. 1414–1431) ஆர்வமுடன் முஸ்லிம் மதத்தைத் தழுவியவர்; எனவே, ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளாகக் கைவிடப்பட்டிருந்த **கலிமா**வைத் தனது நாணயங்களில் புகுத்தினார்; அவரது நாணயங்களில் பின்புறமும் கலிமாவின் வாசகங்களைப் பொறித்தார். அன்றையிலிருந்து நாணயங்களின் முன்புறத்தில் **கலிமா**வையும், அதற்குக் கீழே நாணயச்சாலையின் பெயரையும் வருடத்தையும் அரேபிய எழுத்துக்களில் பொறிப்பது வழக்கமாகிவிட்டது. அலாவுதீன் ஹுசைன் ஷா என்பவர் அவரது நீண்ட பட்டப்பெயரை இரண்டாகப் பிரித்து, நாணயங்களின் இருபுறமும் பொறித்துள்ளார். அவருக்குப்பின் ஆட்சி செய்த வேறு சிலரும் அவ்வாறே செய்துள்ளனர். சூரி வமிசத்தைச் சேர்ந்த சம்சுதீன் முகமது ஷா காஜி என்பவர், அவரது பரம்பரைப்படி முன்புறம் **கலிமா**வையும் கலிஃபாக்களின் பெயர்களை அதற்குரிய இடத்தில் மட்டுமன்றி, ஓரத்திலும் கூடப் பொறித்திருக்கிறார்.

வங்காளத்தை ஆண்ட சுல்தான்களின் பட்டங்களெல்லாம் டில்லி சுல்தான்களுடையதைப் போலவே உள்ளன; இப் பட்டங்களையெல்லாம் பெரும்பாலும் நாணயங்களின் முன்புறம் தான் பொறித்திருக்கின்றனர்; முன்புறம் இடம் போதாதபோது மட்டும் பின்புறமும் பொறித்துள்ளனர். பெரும்பாலும் இப் பட்டங்கள் **அல்–சுல்தான் அல்–ஆஜம்** (சில சமயங்களில் மட்டும் **அல்–ஆதில்**) என்றுதான் தொடங்குகின்றன; சில நாணயங்களில் **அல்–முயித் ப–தாயீத் அல்–ரஹ்மான்** (இரக்கமுள்ள இறைவனின் அருளால் வலிமைபெற்ற) என்றோ, அல்லது ஃபாத்ஷாவின் (கி.பி. 1481–1486) நாணயங்களிலும், ஹுசைன் ஷாவின் பேரப்பிள்ளைகளின் நாணயங்களிலுமுள்ளதைப் போல், **அல்–சுல்தான் இபின் அல்–சுல்தான்** என்றோ தொடங்குகிறது. இதையடுத்து, **அபுல் முஜாஹித்** அல்லது **அபூ–முஜ:ஃபர்** என்னும் அரசனின் பட்டப்பெயர் உள்ளது; முஜஃபர் ஷாவின் (கி.பி. 1490–93) நாணயங்களில் மட்டும் **அபூ–அல்–நஸ்ர்** என்ற பட்டப்பெயரைக் காணலாம்; இப் பட்டப்பெயரையடுத்து,

அரசரின் உண்மையான பெயரும், **ஷா** அல்லது **அல்-சுல்தான்** என்ற புனைபெயரும் உள்ளன. பிற்காலத்தில் வெளியான நாணயங்களில் காலியிடமிருந்ததால் தந்தை, பாட்டனார், முப்பாட்டனார் ஆகியோரின் பெயர்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வங்காள சுல்தான்களில் சிக்கந்தர் ஷா என்பவர் மட்டும் இமாம் என்பவரைப்போல் டாம்பீகமான பட்டப்பெயரைக் கொண்டிருந்தார். அவரது நாணயங்களில் **அல்-முஜாஹித் ஃபிசபீல் அல்-ரஹ்மான்** (இரக்கமுள்ள இறைவன் வழியைப் பின்பற்றும் மாவீரர்) **அல்-நசீர் அல்-தீன் அல்லா அல்-கஹார் அலி அல்லா** (இறைவனின் நம்பிக்கைக்குத் துணைபுரிபவர், இறைவனுக்குப் பணிந்தவர்)[1] **அல்-வசிக் பி-தாயீத் அல்-ரஹ்மான்** (இரக்கமுள்ள இறைவனின் கருணையில் நம்பிக்கையுள்ளவர்) என்ற பகட்டான பட்டங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாம் மஹ்முத் ஷா என்பவர் (கி.பி. 1489) **கலிஃபா அல்லா ப-லஹுஜ்ஜத் வா அல்-புர்ஹான்** (செயலிலும் சான்றிலும் இறைவனின் பிரதிநிதி) என்ற விநோதமான பட்டத்தைப் பொறித்திருக்கிறார். ஹுசைன் ஷா (கி.பி. 1493-1518) என்பவரோ **அல்-சுல்தான் அல்-ஆதில் அல் பாஜில்** (நேர்மையும் தாராள குணமும் கொண்ட சுல்தான்) என்ற புதுமையான பட்டத்தையும், **வலத் சையித் அல்-முர்சலீன்** என்னும் அவரது தந்தைவழிப் பெயரையும் பொறித்துள்ளார். அலாவுதீன் ஹுசைன் நாணயங்கள் சிலவற்றில் இந்திய நாணய வரலாற்றிலேயே புதுமையான வாசகம் உள்ளது. அதாவது, **அல்-சுல்தான் அல்-ஃபத் அல்-கமரூ வா கம்தா வா ஜாஜ்நகர் வா உரிசா** (கம்ரூ, கம்தா, ஜாஜ்நகர், ஒரிசா ஆகியவற்றை வென்ற சுல்தான்) என்றுள்ளது. ஒருவேளை இவ்விடங்களை அவர் வென்றதன் நினைவாக இந் நாணயங்களை அச்சிட்டிருக்கலாம். இலியாஸ் ஷா என்பவர் (கி.பி. 1339-1358) **இஸ்கந்தர் அல்-சானி** (இரண்டாம் அலெக்ஸாண்டர்) என்ற பட்டத்தை அவரது நாணயங்களில் பொறித்திருக்கிறார். அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த அலி ஷா என்பவர் **சிகந்தர் அல்-ஜமான் அல்-மக்ஸுஸ்**

[1] ஒருவேளை, அல் காஹர் பல்லா (இறைவனின் அருளால் உள்ள வெற்றி வீரர்) என்ற பொருளில் மன்னர் இவ் வாசகத்தைப் பயன்படுத்தியிருக்கலாம்.

பி–இஞயத் ரஹ்மான் (இரக்கம் நிறைந்த இறைவனின் அருளால் உலகின் அலெக்ஸாண்டராகப் புகழ் பெற்றவர்) என்ற பட்டத்தைச் சூட்டியிருந்ததாக அறிய வருகிறோம்.

இம்மன்னர்களின் நாணயங்கள் பல்வேறு நாணயச்சாலைகளில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டிருப்பது சிறப்பானதோர் அம்சமாகும். இவை, லக்னௌதி, பிரோஸா பாத் (பாண்டுவா), சதகான் (ஹூக்ளி அருகில்), சூனர்கான் (ஹூக்ளி அருகில்), முவாஜமாபாத் (மிமென்சிங்காக இருக்கலாம்), ஷாரிநௌ (கங்கை சமீபம்), கியாஸ்பூர் (கௌர் அருகில்), பதபாத் (பரீத்பூர்), ஹுசைனபாத், கலிபதாபாத் (பேஜர்காட்), முஜபராபாத் (பாண்டுவா அருகில்), சடகான் (கிட்டகாங்), மகமூதாபாத், முகம்மதாபாத், அர்கான் (அரக்கான்), தண்டா (கௌர் அருகில்), ரோடஸ்பூர், ஜன்னதாபாத், நஸ்ரதாபாத், பர்பகாபாத், கவாலிஸ்தான் (கம்ரூ) ஆகிய நாணயச்சாலைகளிலிருந்து வெளியிடப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஒரே நகரம் பல பெயர்களில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இது உண்மையாகவும் இருக்கலாம்; ஏனெனில், முஸ்லிம் மன்னர்கள் அவரவர்கள் நினைவாகவும் மட்டுமன்றி, பெற்றோரின் நினைவாகவும், அல்லது முக்கியமான நிகழ்ச்சிகளின் நினைவாகவும் நகரங்களின் பெயர்களை அடிக்கடி மாற்றினர் என்பதை வரலாற்றில் காண்கிறோம்.

அரேபிய வாசகங்கள் கொண்ட நாணயங்கள் மட்டுமன்றி, வங்காள மொழி வாசகங்களுள்ள நாணயங்களும் கிடைத்துள்ளன. இவற்றில் மகேந்திர தேவர், தனுஜமர்தன தேவர் ஆகியோரின் பெயர்கள் உள்ளன. அதோடு, சக வருடம் 1339, 1340 என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. பாண்டு நகர் (பாண்டுவா), சூனர்கான், சத்கான் ஆகிய ஊர்களிலிருந்து இவை வெளியிடப்பட்டிருக்கின்றன. இந் நாணயங்களையெல்லாம் தினஜ்பூர் மாவட்டத்திலுள்ள பட்டூரிய ஜமீன்தார் கணேஷ் ராஜாவின் குடும்பத்தினர்தான் வெளியிட்டிருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. கணேஷ்ராஜா என்பவர் செல்வாக்குப் பெற்ற ஜமீன்தாராக இருந்ததால், கி.பி. 1409-ல் டில்லி சுல்தான் திறமையற்றவராயிருந்தபோது அவருக்கு எதிராகக் கிளர்ச்சி

செய்து, தன்னை ஒரு சுதந்திர மன்னரென்று பிரகடனம் செய்தார். எனினும், அவரது மகன் ஜாது என்பவர் இஸ்லாமிய மதத்தில் சேர்ந்து, ஜலாலுதீன் முகமது என்ற பட்டப்பெயரில் கி.பி. 1414-ல் வங்காள மன்னராக நியமிக்கப்பட்டபோது கணேஷ் ராஜா அவரது அரச பதவியை விட்டுக்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும், கணேஷ் ராஜா அவரது மகனை மறுபடியும் இந்துவாக மாற்ற முயன்று, முடியாது போகவே, கி.பி. 1416-ல் மகனைச் சிறையில் அடைத்துவிட்டு, தனுஜமர்தன என்ற பட்டத்துடன் மறுபடியும் அரியணை ஏறினார்; ஆனால் மறு வருடமே அவர் இறந்துவிட்டார். இவ்வாறாக, அவர் வங்காளத்தின் மன்னராக இருந்த காலத்தில் சக ஆண்டு 1339, 1340 (கி.பி. 1416–17) என்று பொறிக்கப்பட்ட நாணயங்களை வெளியிட்டார். அவருக்குப்பின்னர், வங்காளத்தின் அரசராக மகேந்திர தேவர் இருந்தபோது, சிறையிலிருந்து தப்பி வந்த ஜலாலுதீன் மகேந்திர தேவரை நீக்கிவிட்டு மறுபடியும் அரியணை அமர்ந்தார்.

வங்காளச் சுல்தான் மன்னர்கள் தொடக்கத்தில், டில்லி சுல்தான் மன்னர்களைப்போல் 170 தானியமணி எடைகொண்ட நாணயங்களையே வெளியிட்டனர்; ஆனால் சிறிது காலத்திற்குப் பின் எடையை 166 தானியமணியாகக் குறைத்திருக்கின்றனர். எனினும் இந் நாணயங்களெல்லாம் புழக்கத்திலிருந்தபோது அவற்றைச் சோதித்துப் பார்த்தவர்கள் பல அடையாளங்களைப் போட்டதோடுமட்டுமன்றி, சிறிய உளியால் செதுக்கியும் பார்த்திருக்கின்றனர்; இதனால் இந் நாணயங்களே உருக்குலைந்து உள்ளன. அதோடு, இவை சரியாகச் செய்யப்படாமலும் நன்றாக முத்திரையிடப்படாமலும் வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது. செம்பு நாணயங்களை அவர்கள் வெளியிட்டதாகத் தெரியவில்லை.

குஜராத்

பிரோஸ் துக்ளக்கின் பேரனான மஹ்மூது டில்லி சுல்தானாக இருந்த காலத்தில், கி.பி. 1403-ல் குஜராத் சுதந்திர இராச்சியமானது. கி.பி. 1391-ல் குஜராத்தின் ஆளுநராக இருந்த

ஜாபர்கான் என்பவர் டில்லி சுல்தானோடு இசைந்து ஆட்சி புரிந்து வந்தார். ஆனால் அவரது மகனான டாடார் கான் சுதந்திரமாக குஜராத்தை ஆள விரும்பி, அவரது தந்தையைச் சிறைப்படுத்தி விட்டு குஜராத்தின் சுதந்திர மன்னர் ஆனார். அவர் ஆட்சி செய்த இரண்டு மாத காலத்திற்குள் சொந்தமாக நாணயங்களை வெளியிட்டதாகக் கூறப்படுகிறது; ஆனால் அவரது நாணயம் எதுவும் கிடையாது. அவர் இறந்தபின், அவரது தந்தை மறுபடியும் டில்லி சுல்தானின்கீழ் ஆளுநராகவே ஆட்சிக்கு வந்தார். கி.பி. 1407-ல் தான் குஜராத்தைச் சுதந்திர அரசாகப் பிரகடனம் செய்தார். சுதந்திர அரசராக ஆட்சி செய்த ஜாபர்கானும் சொந்தமாக நாணயங்களை வெளியிடவில்லை. அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த அவரது பேரரனான முதலாம் அகமதுதான் (கி.பி. 1411-1443) அவரது பெயரிலேயே நாணயங்களை வெளியிட்டார். அவர்தான் அஹமதாபாத், அகமது நகர் என்ற ஊர்களைப் பெரிய நகரங்களாக மாற்றியவர். அவரது காலந்தொட்டு சுமார் 125 ஆண்டுகள் வரை குஜராத் சுதந்திர இராச்சியமாகவே இருந்து வந்தது. அந்த 125 ஆண்டுகளில் பதின்மூன்று அரசர்கள் அதை ஆட்சி செய்திருக் கின்றனர். அவர்களின் கடைசி அரசராக ஆட்சி செய்த முஜாபர் என்பவரை முகலாயப் பேரரசரான அக்பர் கி.பி. 1572-ல் தோற்கடித்துவிட்டு, குஜராத்தை மொகலாயப் பேரரசுடன் இணைத்துக்கொண்டார். அதன்பின் பதினேறு ஆண்டுகள் கழித்து மூன்றும் முஜாபர் என்பவர் மறுபடியும் குஜராத்தைச் சுதந்திர இராச்சியமாக்கி அவரே அரியணை ஏறினார்; ஆனால் அவரது ஆட்சி ஐந்து மாதங்களில் முடிந்துவிட்டது. குஜராத்திலிருந்த முகலாயர்களையெல்லாம் விரட்டியடிக்க முயற்சி செய்தபோது அவர் காட்டிக் கொடுக்கப்பட்டுவிட்டார்; அதனால் தற்கொலை செய்து கொண்டார்.

குஜராத் நாணயங்கள் பெரும்பாலும் வெள்ளி அல்லது செம்பில் செய்யப்பட்டவை; ஒரு சில தங்க நாணயங்களும் வெளி யிடப்பட்டதாகத் தெரிகிறது; ஆனால் அவை கிடைப்பது அரிது. பில்லனில்கூட நாணயங்கள் வெளியிட்டதாக ஒரு சிலர் கூறுகின்றனர்; ஆனால் அதற்கு ஆதாரமே கிடையாது. குஜராத்

அரசு வெளியிட்ட நாணயங்களெல்லாம் அஹமதாபாத், அஹமது நகர் (இடார்), முஸ்தாபாபாத் (கிர்ஞர்), முகம்மதாபாத் (சம்பனீர்), கான்பூர் ஆகிய நாணயச்சாலைகளில் அச்சிடப் பட்டவை. எனினும் அஹமதாபாத்தில்தான் பெரும்பாலான நாணயங்கள் அச்சிடப்பட்டதாகத் தெரிகிறது. ஆனல், மூன்ரும் முஜாபர் என்பவர் ஹிஜிரி வருடம் 977, 978-ல் வெளியிட்ட செம்பு நாணயங்களில் மட்டும்தான் அஹமதாபாத்தின் பெயர் அச்சிடப்பட்டிருக்கிறது; ஏனைய நாணயங்களிலெல்லாம் நாணயச் சாலையின் பெயராக **ஷஹர்–இ–முகரம்** என்ற அதன் மறுபெயர் தான் உள்ளது.

குஜராத் நாணயங்கள் தொடக்கத்திலிருந்தே தனிவகையான அமைப்பில் வெளியிடப்பட்டிருக்கின்றன; என்ருலும், அவற்றில் டில்லி சுல்தான் நாணயங்களின் அம்சத்தையும் காணலாம். எல்லா நாணயங்களிலுமே ஒருபுறம் சதுர வடிவமும், அதற்குள் மன்னரின் பெயரும், ஓர் ஓரத்தில் நாணயச்சாலையின் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன; ஒரு சிலவற்றில் சதுரமான வடிவத் திற்குப் பதிலாக, வட்டம், முக்கோணம், நீள் சதுரச்சின்னங்கள் உள்ளன. மறுபுறத்தில் வெளியிட்ட மன்னரின் பட்டப் பெயரும் வருடமும் உள்ளன. இப்பட்டப் பெயர்களெல்லாம் பெரும்பாலும் சாதாரணப் பெயர்களாகவே உள்ளன; அதாவது, **அல்–சுல்தான் அல்–ஆஜம்** என்ற பட்டப் பெயர்தான் அம் மன்னர்களின் மூதாதையர் பெயரோடு காணப்படுகின்றது. அவர்களின் சமயப் பற்றுதலைக் காட்டும் வகையில் **அபூ–அல்–முஹமத், அபூ–முஜ∴பர், கலி∴பா அமீர்–உல்–மோமினீன், அபுல்-∴பாத், அல்-முயீத் பெ தாயீத் அல்-ரஹ்மான், அபுல்-நஸர், அபுல்-∴பஜல், அல்-வாசிக் பல்லா அல்-மன்ஞன், அல்-முஷ்டாசிம் பெ-அல்லா அல்-ரஹ்மான்** போன்ற பட்டப்பெயர்களையும் காணலாம். இவ்வாருக, பெரும்பாலும் சாதாரணப் பட்டப்பெயர்களே இந்நாணயங்களில் உள்ளன; எனினும், வெகு காலத்திற்குப்பின், குப்தர்களின் ஆட்சி முடிவுற்ற பின்னர் இரண்டாம் முகமது ஷா என்பவர் வெளியிட்ட நாணயங் களில் கவிதை நடையிலுள்ள வாசகங்களைக் காணலாம்; இது ஈரடிச் செய்யுள்போல் பாரசீக மொழியில் பொறிக்கப்பட்டுள்ளது:

சிக்கா சுல்தான் கியாசுதீன் முஹமத் ஷா பாத்
பி-தாருல்-ஜர்ப் தா கர்துன் குர்சா மிஹர் வ மா.

(சூரியன், சந்திரன், இந்த நாணயச்சாலையின் அச்சு ஆகியவை எவ்வளவு காலம்வரை நீடித்திருக்குமோ அதுவரை கியாசுதீன் முகமத் ஷாவின் நாணயங்களும் நீடித்திருப்பதாக).

குஜராத் நாணயங்களில் ஒரு சில புதுமையான நாணயங்களும் உள்ளன; இவற்றில் வெளியிட்ட மன்னரின் பெயர் மட்டுமன்றி, அவரது தந்தை, பாட்டனுர், முப்பாட்டனுர் என்று அவரது இனத்தைத் தோற்றுவித்தவர் வரை எல்லோருடைய பெயர்களும் பொறிக்கப்பட்டிருப்பது விநோதமாகவும் வியப்பாகவும் இருக்கிறது; எனவே, இவற்றை "மரபு வழி நாணயங்கள்" என அழைக்கலாம். இவ்வகை நாணயங்களை முதலாம் அஹமது, முதலாம் முகமது, பகதூர் ஷா ஆகிய மூவரும் வெளியிட்டிருக்கின்றனர். ஒருவேளை ஏதாவதொரு விஷேசமான காலத்தில் அவர்கள் இவற்றை வெளியிட்டிருக்கலாம்.

குஜராத் நாணயங்களின் எடைகள் பல்வேருக இருப்பதால் குழப்பமானதாயுள்ளன. மூன்ரும் மகமதுவும், இரண்டாம் முஜஃபரும் வெளியிட்ட தங்க நாணயங்கள் 185 தானியமணி எடையுள்ளன; இதுவரை எந்த வகைத் தங்க நாணயமுமே இந்த எடையில் வெளியிடப்பட்டதே இல்லை. முந்திய அரசர்களின் தங்க நாணயங்களெல்லாம் 176 முதல் 180 தானியமணி எடைதான் உள்ளன. வெள்ளி நாணயங்கள்கூட அப்படித்தான். முழு வெள்ளி நாணயங்கள் 165 முதல் 176 தானியமணி எடையிலும், அரை வெள்ளி நாணயங்கள் சுமார் 88 தானிய மணியிலும், கால் நாணயங்கள் 44 தானியமணி எடையிலும் இருக்கின்றன. அதே சமயம், இரண்டாம் முஜஃபர் வெளியிட்ட நாணயங்களோ 66 தானியமணி எடையிலும் 33 தானியமணி எடையிலும் உள்ளன. செம்பு நாணயங்களை எடுத்துக்கொண்டால் முதலாம் அஹமது அவர்களின் நாணயங்கள் 148 தானியமணி எடையில் மட்டுமே உள்ளன. அவருக்குப் பின்னர் வெளியிடப்பட்ட நாணயங்கள்கூட இதே எடைதான் இருக்கின்றன. எனினும், இரண்டாம் முகமது வெளியிட்ட நாணயங்கள் 224

தானியமணி எடையுள்ளன. முதலாம் மகமது அவர்களோ 185 தானியமணி எடையில் நாணயங்களை வெளியிட்டதோடு, அரை நாணயங்களையும் கால் நாணயங்களையும் வெளியிட்டிருக்கிறார். அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்தோர் தம் நாணயங்களை அவ்வாறே வெளியிட்டனர். அனால் அவற்றோடு, 148 தானியமணி எடையிலும் வெளியிட்டிருக்கின்றனர். இவை மட்டுமன்றி, இன்னும் எத்தனையோ வகை எடையுள்ள நாணயங்களும் இருக்கின்றன.

மாளவம்

இல்துத்மிஷ் காலத்தில் மாளவம் டில்லிப் பேரரசின்கீழ் கொண்டுவரப்பட்டது; அதன் பின்னர் கலகம் ஏற்பட்டு சுதந்திர அரசாக மாறிய மாளவத்தை கியாசுதீன் என்பவர் மறுபடியும் அவரது ஆட்சியின்கீழ் கொண்டு வந்தார். இறுதியாக, கி.பி. 1305-ல்தான் அலாவுதீன் முகமது கில்ஜி என்பவர் அதை நிரந்தரமாக டில்லி ஆதிக்கத்திற்குட்படுத்தினார். கி.பி. 1305-லிருந்து சுமார் நூறாண்டு காலம்வரை மாளவம் டில்லி சுல்தான் இராச்சியத்தின் பகுதியாகவே இருந்து வந்தது. கடைசியில், துக்ளக் வமிசத்தைச் சேர்ந்த முகமது பின் பிரோஸ் எனப்பட்ட சுல்தான் பேரரசர் மாளவத்தின் ஆளுநராக திலாவார்கான் கோரியை நியமித்தார்; ஆனால், பத்தாண்டுகளுக்குப் பின்னர், கி.பி. 1401-ல் திலாவார்கான் மாளவத்தைச் சுதந்திர இராச்சியமாக்கி, அரியணை ஏறினார். எனினும், அவரது பெயரில் நாணயமேதும் வெளியிடப்படவில்லை. அவரது மகன்தான் சொந்தமாக நாணயங்களை முதன்முதலில் வெளியிட்டவர். அவருக்குப் பின், ஹோஷங் ஷா என்னும் பட்டத்துடன் அரியணை ஏறிய ஆல்ப்கான் என்பவரும் அவரது பெயரில் நாணயங்களை வெளியிட்டிருக்கிறார். ஆல்ப்கானுக்குப் பின், அவரது மகனை முதலாம் முகமது ஆட்சிக்கு வந்தார்; ஆனால் அவருடைய மந்திரியாக இருந்த மகமது கில்ஜி (கி.பி. 1436) அவருக்கு விஷத்தைக் கொடுத்துக் கொன்றுவிட்டு, தானே ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். மகமது கில்ஜிக்குப் பின், கியாஸ் ஷா என்பவரும், அவருக்குப் பின்னர்

நசீர் ஷா என்பவரும் ஆட்சி செய்தனர். பின்னர், இரண்டாம் மகமது ஆட்சியின்போது, கி.பி. 1510-ல் மாளவத்தில் உள் நாட்டுப் போர் மூண்டது; அதனால் மாளவ இராச்சியம் வலிமையிழந்து வந்தது. கி.பி. 1530-ல் குஜராத்தில் ஆட்சி புரிந்து வந்த மன்னர் பகதூர் ஷா என்பவர் மாளவத்தின் தலைநகரான மாண்டுவைக் கைப்பற்றி, நான்காண்டுகள்வரை மாளவத்தை குஜராத் அரசின் பகுதியாக வைத்திருந்தார். பின்னர், மறுபடியும் முகலாயப் பேரரசராக இருந்த ஹுமாயூன் அதை டில்லிப் பேரரசுடன் இணைத்தார். கி.பி. 1536 முதல் 1542 வரை குஜராத்தின் ஆளுநராக இருந்த காதிர் ஷா என்பவரே மாளவத்தையும் ஆண்டு வந்தார். அதற்குப்பின், சூரி வமிசத்து மன்னரான ஷெர்ஷா அவரது பிரதிநிதியாக சூஜாகான் என்பவரை நியமித்தார். இறுதியில், கி.பி. 1554 முதல் 1560 வரை சூஜாகானின் மகனான பாஜ்பகதூர் ஆட்சி செய்தபோது மாளவத்தைக் கைப்பற்றிய அக்பர் அதை மொகலாயப் பேரரசுடன் சேர்த்துக்கொண்டார்.

மாளவ அரசைத் தோற்றுவித்த மன்னரைத் தவிர, அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த முந்திய ஏழு மன்னர்களும் தத்தம் பெயரில் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோக நாணயங்களை வெளி யிட்டனர். அவர்களில் புரட்சியாளரான இரண்டாம் முகமது, குஜராத்தின் பகதூர் ஷா, ஏழாவது மன்னரான பாஜ் பகதூர் ஆகிய மூவர் மட்டுமே செம்பு நாணயங்களை வெளியிட்டவர்கள். முதலாம் மஹ்மூது என்பவர்தான் முதன்முதலில் பில்லன் நாணயங்களைப் புகுத்தியவர்; அவருக்குப்பின் ஆட்சிசெய்த மூன்று மன்னர்களும் தொடர்ச்சியாகப் பில்லன் நாணயங்களை வெளி யிட்டனர். மாளவ நாணயங்கள் சதுர வடிவத்திலும் செய்யப் பட்டிருப்பது சிறப்பானதோர் அம்சமாகும். முதலாம் மஹ்மூத் என்பவர்தான் முதன்முதலில் சதுர நாணயங்களை அச்சிடத் தொடங்கினர். அவருக்கு முன் ஆட்சிசெய்த அனைவரும் வெளியிட்ட நாணயங்கள் வட்டமானவையே. மஹ்மூதுவும், அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த கியாஸ் ஷா என்பவரும் இரண்டு வடிவத்திலுமே அச்சிட்டனர்; நசீர் ஷா காலத்திலிருந்து சதுர நாணயங்கள் மட்டுமே வெளியிடப்பட்டன.

மாளவத்தை ஆண்ட முதல் இரண்டு மன்னர்களும் வெளியிட்ட தங்க நாணயங்களும், வெள்ளி நாணயங்களும் டில்லி நாணயங்களைப்போலவே அச்சிடப்பட்டிருக்கின்றன; அரசரின் பெயரையும் பட்டத்தையும் பாதி பாதியாகப் பிரித்து நாணயத்தின் இருபுறமும் பொறித்திருக்கின்றனர்; நாணயத்தின் ஒரு புறம், ஓரமாக நாணயச்சாலையின் பெயரையும் வருடத்தையும் அச்சிட்டிருக்கின்றனர். முதலாம் மஹ்மூது என்பவர் அவரது நாணயங்களில் பின்புறச் சின்னத்தைப் புதுமையாகப் பொறித்தார்; அதாவது, கில்ஜி என்னும் அவரது பெயரின் கடைசி எழுத்தின் **யெ** என்ற எழுத்தை இழுவையாகப் போட்டு, பின்புற முகப்பை இரண்டு சம பாகமாகப் பிரித்திருக்கிறார். கியாஸ் ஷா என்பவர் இம்முறையை அவரது நாணயங்களின் இருபுறமும் கையாண்டிருக்கிறார்; அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த எல்லோரும் அவர்களின் சதுர நாணயங்களிலும் வட்ட நாணயங்களிலும் இம்முறையைப் பின்பற்றியிருக்கின்றனர். முதலாம் மஹ்மூத், கியாஸ் ஷா ஆகிய இருவரும் அவர்களுடைய நீண்ட பட்டப் பெயர்களையும் பொறித்துள்ளனர். சான்றாக, முதலாம் மஹ்மூத்தின் நாணயங்களில் **அல்–சுல்தான் அல்–ஆஜம் அலவுத்துனியா வா தீன் அபூ–முஜஃபர் சிகந்தர்–அல்–சானி யமீன் அல்–கிலாஃபத் நசீர் அமீர்–அல்–மோமினீன்** (ஆற்றல் மிக்க அரசர், வெற்றிக்குரியவர், உலகிலும் சமயத்திலும் உன்னதமானவர், இரண்டாம் அலெக்ஸாண்டர், கலிஃபாவின் வலது கரம், இஸ்லாமிய நாட்டுத் தலைவர்களுக்குப் பாதுகாவலர்) என்ற பட்டப்பெயர்கள் உள்ளன. மற்றவர்களின் நாணயங்களில் இவ்வளவு ஆடம்பரமான வாசகங்கள் கிடையாது; அவற்றிலெல்லாம் பெரும்பாலும், **அபுல் முஜாஹித், அபுல்ஃபத், அல்-பாஜில், அல் வாசிக் பி-அல்-சமத் லம் யஜில்** (முடிவில்லா இறைவனில் நம்பிக்கையுள்ளவர்) என்ற சாதாரண வாசகங்களே உள்ளன. மாளவ நாணயங்களெல்லாம் சாதியபாத் (மாண்டு) என்னுமிடத்தில்தான் அச்சிடப்பட்டன; இப் பெயரை முந்திய மன்னர்களின் நாணயங்களில் காணலாம். நசீர் ஷா காலத்திலிருந்துதான் நாணயச்சாலையின் பெயர் அச்சிடப்படுவது நிறுத்தப்பட்டிருக்கிறது. கியாஸ் ஷா காலத்திலிருந்து வெளியிடப்பட்ட

நாணயங்களில் பல்வேறு ஆபரணச் சின்னங்கள் முத்திரையிடப்பட்டிருக்கின்றன; ஆனால் இச்சின்னங்கள் எதைக் குறிப்பிடுகின்றனவென்று தெரியவில்லை.

மாளவத்தின் தங்க நாணயங்களும் வெள்ளி நாணயங்களும் டில்லி சுல்தான் நாணயங்களைப்போல் 170 தானியமணி எடைதான் உள்ளன; ஆனால், இதில் பாதி எடையில் அரை நாணயங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஒரு சில நாணயங்களின் எடை மட்டும் மாறி இருக்கிறது. செம்பு நாணயங்கள் அனைத்தும் 140 தானியமணி எடையில் மட்டுமே வெளியிடப்பட்டிருக்கின்றன; ஆனால், அரை நாணயங்களும் கால் நாணயங்களும்கூட செம்பில் அச்சிடப்பட்டிருக்கின்றன. கியாஸ் ஷா என்பவரின் ஆட்சியின் கடைசிக் காலத்தில் மட்டும் 176 தானியமணி எடையில் முழு நாணயங்களும், 88 தானியமணி எடையில் அரை நாணயங்களும், 44 தானியமணி எடையில் கால் நாணயங்களும் வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது.

ஜோன்பூர்

இரண்டாம் மகமது துக்ளக்கின் மந்திரியாக இருந்த குவாஜாயி-இ-ஜஹான் என்பவர் டில்லிப் பேரரசின்கீழ் இருந்த கிழக்குப் பிராந்தியங்களின் ஆளுநராகக கி.பி. 1394-ல் நியமிக்கப்பட்டார்; அப்போது அவருக்கு **மலிக்–உஸ்–சர்க்** என்ற பட்டமும் கொடுக்கப்பட்டது. ஆனால், டில்லியில் அடிக்கடி ஏற்பட்ட குழப்பத்தை அவர் சாதகமாக்கிக்கொண்டு அவரது பகுதிகளைச் சுதந்திர இராச்சியமாக ஆக்கிக்கொண்டார். எனினும், அவரது பெயரில் நாணயங்கள் வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை. சிறிது காலத்திற்குப்பின், அவரது வளர்ப்பு மகனை முபாரக் ஷா என்பவரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தார்; முபாரக் ஷா அரியணை ஏறிய சில நாட்களிலேயே மரணம் அடைந்ததால், அவரது சகோதரரான இப்ராஹிம் கி.பி. 1400-ல் அரியணை ஏறினர். அவருக்குப் பின்னர், மஹ்மூது ஷா, முகம்மது ஷா, ஹுசைன் ஷா ஆகிய மூவரும் ஒருவருக்குப்பின்

ஒருவராக கி.பி. 1476 வரை ஆட்சி செய்தனர். ஹுசைன் ஷா ஆட்சி செய்தபோது பஹ்லோல் லோடி என்பவர் சூழ்ச்சி செய்து அரசர் பதவியைக் கைப்பற்றினார். பதவியை இழந்த ஹுசைன் ஷா பீஹாரில் தஞ்சம் புகுந்தார்; மறுபடியும் இழந்த பதவியை அடைவதற்குத் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டேயிருந்தார்; ஆனால் முடியவில்லை.

இந்தச் சுல்தான் மன்னர்கள் அனைவரும் தங்கம், வெள்ளி, பில்லன், செம்பு ஆகிய உலோக நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர்; எனினும், பில்லனிலும் செம்பிலும்தான் பெரும்பாலுமான நாணயங்கள் அச்சிடப்பட்டன. இப்ராஹிம், மஹ்மூது, ஹுசைன் ஆகிய மூவரும் தங்க நாணயங்களையும் வெளியிட்டிருக்கின்றனர். இப்ராஹிம் என்பவரின் நாணயங்கள், டில்லி நாணயங்களையும் வங்காள நாணயங்களையும்போல் அச்சிடப்பட்டுள்ளன; அவருக்குப்பின் ஆட்சி செய்த மன்னர்கள் வங்காள நாணயங்களையே பின்பற்றினர். இப்ராஹிம், மஹ்மூது ஆகிய இருவரின் நாணயங்களிலும் முன்புறம், **ஃபி ஜமான் அல்–இமாம் நாயிப் அமீர்–அல்–மோமினீன் அபுல் ஃபத்** (இஸ்லாமின் இணையற்ற தலைவர் காலத்தில் இருந்த முஸ்லிம் மக்களின் ஆணையாளரின் பிரதிநிதி) என்ற வாசகத்தை துக்ரா எழுத்தில் பொறித்தனர், ஆனால், ஹுசைன் நாணயங்களில் இவ்வாசகத்திலுள்ள **நாயிப்** (பிரதிநிதி) என்ற சொல் நீக்கப்பட்டிருக்கிறது. பின்புறத்தில், மன்னரின் பெயரும் **அல்–வாசிக் ப–தாயீத் அல்–ரஹ்மான்** (அல்லது அல்லா) என்னும் பட்டப் பெயரும் உள்ளது. இப்ராஹிம், மஹ்மூத் ஆகிய இருவரும் வெள்ளி நாணயங்களையும் வெளியிட்டனர்; ஆனால், அவை இப்போது கிடைப்பதில்லை. இம்மன்னர்கள் அனைவரும் ஒரே மாதிரியான பில்லன் நாணயங்களையே வெளியிட்டிருக்கின்றனர்; இவற்றில் முன்புறம், **அல் கிலாஃபத் அமீர்-அல்-மோமினீன் கலதத் கிலாஃபத்** (முஸ்லிம் மக்களின் தலைவர் கலீஃபா; அவரது தலைமை என்றும் நீடித்திருப்பதாக) என்ற வாசகமும் எண்களில் பொறிக்கப்பட்ட வருடமும் உள்ளன. பின்புறம், இப்ராஹிம் நாணயங்களில் அவரது பெயர் மட்டுமே உள்ளது; மற்றவர்களின் நாணயங்களில் அவரவர் பெயர் மட்டுமன்றி, தந்தைவழிப் பெயர்களும் உள்ளன.

இந்த நாணயங்களிலெல்லாம் நாணயச்சாலையின் பெயர் கிடையாது; ஆனால், பிரிட்டிஷ் தொல்பொருட் காட்சிசாலையிலுள்ள நாணயம் ஒன்றில் மட்டும் ஜோன்பூர் என்ற பெயர் இருப்பதாகக் கூறப்படுகிறது. இவர்களின் தங்க நாணயங்களும் வெள்ளி நாணயங்களும் 180 தானியமணி எடையுள்ளன; பில்லன் நாணயங்களோ 140 தானியமணி எடையுள்ளன. செம்பு நாணயங்கள் கூட அதே 140 தானியமணி எடைதான் இருக்கின்றன; எனினும், செம்பு நாணயங்களில் அரை நாணயங்களும் கால் நாணயங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

காஷ்மீர்

கி.பி. 1346-ல் ஸ்வாட் பிரதேசத்தவரான ஷா மிர்ஜா என்பவர் இந்து அரசர்கள் ஆண்டு வந்த காஷ்மீரத்தை வென்று, சம்சுதீன் என்ற பட்டத்தைச் சூடிக்கொண்டு அங்கு முஸ்லிம் அரசை ஏற்படுத்தினர். அன்றையிலிருந்து கி.பி. 1589 வரை சுமார் 250 ஆண்டுகளாக முஸ்லிம் சுல்தான்கள் தான் காஷ்மீரை ஆண்டு வந்தனர். எனினும், அவர்களுக்கிடையே ஹுமாயூனால் நியமிக்கப்பட்ட மொகலாய ஆளுநரான மிர்ஜா ஹைதர் என்பவர் கி.பி. 1541 முதல் 1551 வரை ஆட்சி செய்திருக்கிறார். அவருக்குப்பின், கி.பி, 1551-ல் காஜிகான் சக் என்பவர் ஒருவர் காஷ்மீரத்தின் மன்னராக ஆகியிருக்கிறார்; அவரைத் தொடர்ந்து அவரது வமிசத்தைச் சேர்ந்த இருபத்தேழு பேர் ஆண்டதாகத் தெரிகிறது. கி.பி. 1588-ல் மொகலாயப் பேரரசரான அக்பர் காஷ்மீரத்தைவென்று, அவரது பேரரசோடு இணைத்துவிட்டார்.

காஷ்மீரை ஆண்ட சுல்தான் மன்னர்களில் பதினாறுபேர் வெளியிட்ட நாணயங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. முகமது ஷா (கி.பி. 1481), இப்ராஹிம் (கி.பி. 1552) யூசுப் (கி.பி 1579) ஆகிய மூவரின் தங்க நாணயங்களும் உள்ளன. இவையனைத்தும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. இவற்றில் முன்புறம் ஒரு வட்டத்திற்குள் கலிமா பொறிக்கப்பட்டுள்ளது; பின்புறம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு,

அவற்றில் மன்னரின் பெயர், பட்டங்கள், காஷ்மீர் என்ற நாணயச் சாலையின் பெயர் ஆகியவை பொறிக்கப்பட்டுள்ளன. வெள்ளி நாணயங்கள் 95 தானியமணி எடையில் சதுரமாக இருக்கின்றன. இவற்றின் அளவு, அமைப்பு, வேலைப்பாடு ஆகியவற்றைப் பார்க்கும்போது, அண்மையில் டில்லி சுல்தானை குத்புதீன் முபாரக் வெளியிட்ட பில்லன் நாணயங்களையொட்டி இவை அச்சிடப்பட்டதாகத் தெரிகிறது. இவற்றின் அமைப்பைக் கடைசி வரை மாற்றுமல் அப்படியே வெளியிட்டிருக்கின்றனர். இவற்றில் முன்புறம், அரசரின் பெயரும் **அல்–சுல்தான் அல்–ஆஜம்** என்ற வாசகமும் வருடமும் பொறிக்கப்பட்டுள்ளன; பின்புறம், ஒரு சதுரத்தில் **ஜர்ப் காஷ்மீர்** (காஷ்மீரில் அச்சிடப்பட்டது) என்ற வாசகமும், ஓரத்தில் அரேபிய எண்ணில் பொறிக்கப்பட்ட வருடமும் உள்ளன. சில நாணயங்களிலுள்ள வருடத்தை நம்ப முடியவில்லை; ஒருவேளை நாணயத்தின் அமைப்பிற்கேற்ப வருடம் பொறிக்கப்பட்டது போலும், செம்பு நாணயங்களில் வெள்ளி நாணயங்களிலுள்ள அதே வாசகங்கள்தான் உள்ளன. ஆனல், முன்புற முகப்பின் நடுவில் ஒரு முடிச்சும் அதிலிருந்து நீண்டுள்ள இரண்டு சின்னங்களும் முகப்பை இரண்டாகப் பிரித்திருப்பதுபோல் போடப்பட்டுள்ளன. என்ருலும், இந் நாணயங்கள் அழகாகச் செய்யப்படவில்லை.

அதிகாரம் 13

தென்னிந்திய முஸ்லிம் அரசுகளின் நாணயங்கள்

டில்லி சுல்தான்களான அலாவுதீன் கில்ஜியும் (கி.பி. 1307-10), முகமது துக்ளக்கும் (கி.பி. 1326-27) மத்திய தக்காணத்தின் மீதும், வேறுசில தென்னிந்தியப் பகுதிகளின் மீதும் படையெடுத்து அப் பகுதிகளைத் தமது பேரரசோடு இணைத்தனர். எனினும், அப் பகுதிகளில் எதுவும் அதிக நாட்கள் டில்லிப் பேரரசின்கீழ் இருந்தது கிடையாது. வட இந்தியப் பகுதிகளில் நியமிக்கப்பட்ட ஆளுநர்களைப்போல், தென்னிந்திய ஆளுநர்களும் விரைவில் டில்லி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றனர். அவ்வாறு டில்லி சுல்தான் ஆதிக்கத்தில் சில காலம் மட்டும் இருந்துவந்த தென்னிந்திய முஸ்லிம் அரசுகள் இரண்டு: ஒன்று, மாபர் என்றழைக்கப்பட்ட மதுரை அரசு; மற்றொன்று மத்திய தக்காணத்தில் ஏற்படுத்தப் பட்ட பாமினி அரசு.

மதுரை அல்லது மாபர்

இந்தியாவின் தென்கோடியிலுள்ள மதுரை நகரம், முன்னர் பாண்டிய மன்னர்களின் தலைநகரமாகச் சிறந்து விளங்கியது; இந்நகரை முஸ்லிம் வரலாற்று ஆசிரியர்கள் மாபர் என்றழைத்து வந்தனர். மதுரையில் சுந்தரபாண்டியருக்கும் அவரது சகோதரரான வீரபாண்டியருக்கும் பகை மூண்டபோது, அதை அனுகூலமாக்கிக் கொண்டே அலாவுதீன் கில்ஜி, சுந்தர பாண்டியருக்கு உதவி செய்யும் சாக்கில் மாலிக்காஃபூர் என்பவரின் தலைமையில் பெரும் படையொன்றை மதுரைக்கு அனுப்பிவைத்து, மதுரையைத் தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டு

வந்தார். மாலிக்காஃபூர் மதுரையை அடைந்தபோது, அவரை எதிர்க்க ஆளில்லாத காரணத்தால், மதுரை நகருக்குள் புகுந்து, அங்கிருந்த விலையுயர்ந்த பொருள்களையெல்லாம் கொள்ளை யடித்துத் திரண்ட செல்வத்துடன் டில்லி திரும்பினார். அவ்வாறு டில்லி திரும்புமுன், மதுரையில் டில்லியின் பிரதிநிதி யொருவரை நியமித்தார். அன்றிலிருந்து முகமது துக்ளக் காலம்வரை டில்லி சுல்தான்களால் நியமிக்கப்பட்ட ஆளுநர்களே மதுரையை ஆண்டு வந்தனர். முகமது ஆட்சியின்போது, மதுரை மாநிலத்தின் ஆளுநராக கைத்தலையைச் சேர்ந்த ஜலாலுதீன் அஹ்சன் ஷா என்பவர் நியமிக்கப்பட்டார். அப்போது டில்லி சுல்தானின் அதிகாரம் குன்றி வந்ததைக்கண்ட ஜலாலுதீன் அஹ்சன் ஷா கி.பி. 1333–34-ல் மதுரையைச் சுதந்திரமாக்கி ஒரு சுல்தான் அரசாக மாற்றினார். அதற்கு அவரே முதல் சுல்தானாகவும் இருந்தார். அவ்வாறு தோன்றிய மதுரை அரசு சுமார் அரை நூற்றாண்டுக் காலம்வரை நீடித்திருந்தது. அதன் பின்னர். கி.பி. 1371–ல் அது விஜயநகரப் பேரரசில் மூழ்கியது. சுதந்திர அரசாக இருந்தபோது, மதுரையை ஆண்டுவந்த எட்டு மன்னர்களும் வெள்ளி, பில்லன், செம்பு ஆகிய உலோகங்களிலும், தங்கத்திலும்கூட நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டனர்.

மதுரையை ஆண்ட இவ் வம்சத்தினரில் முதல் சுல்தான் மன்னரான ஜலாலுதீன் அஹ்சன் ஷா என்பவர் தங்க நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டதாகவும், அவற்றில் முன்புறம் **சலத தாஹா வ யாசீன் அபூ-முஜஃபர் அல்-மசாகீன் ஜலாலுத்துனீயல் வ அல்-தீன்** (தாஹா, யாசீன் மரபில் வந்தவர், ஏழைகளுக்குத் தந்தை போன்று எளிமையானவர் ஜலாலுத் துனீயா வதீன்) என்ற வாசகமிருந்ததாகவும் இபின்–பதூதா, என்னும் ஆசிரியர் கூறுகிறார். ஆனால், அத் தங்க நாணயம் மாதிரிக்குக்கூட ஒன்றும் இப்போது கிடையாது. ஏனைய உலோக நாணயங்கள்தான் கிடைத்துள்ளன; இந் நாணயங்களை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒரு வகையில் முன்புறம் ஒரு வட்டத்திற்குள் சுல்தானின் பெயரும், ஓரத்தில் அரேபிய எழுத்துக்களில் வருடமும் பொறிக்கப்பட்டுள்ளன. பின்புறத்தில் மன்னரின் பட்டப்பெயருள்ளது. இரண்டாது வகை நாணயங்களில்

ஒருபுறம் மன்னரின் பட்டப்பெயரும் மறுபுறம் அவரது சாதாரணப் பெயரோடு எண்களில் பொறிக்கப்பட்ட வருடமும் உள்ளன.

இவற்றில் வெள்ளி நாணயங்கள் 47 முதல் 53 தானியமணி எடை வரையுள்ளன. பில்லன் நாணயங்களும் செம்பு நாணயங்களும் 68 முதல் 81 தானியமணி எடையில் உள்ளன. இந் நாணயங்கள் முற்காலத்தில் தென்னிந்திய நாணயங்களின் எடையையொட்டிச் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

பாமினி அரசு

டில்லி சுல்தான் பேரரசில் இருந்த பிற பகுதிகளைப்போல் தக்காணப்பகுதியும் தொடர்ந்து நான்காண்டுகள் கிளர்ச்சியில் ஈடுபட்டு, இறுதியில் கி.பி. 1346–47–ல் டில்லியின் ஆதிக்கத்தி லிருந்து விடுதலை பெற்று சுதந்திர அரசாக மாறியது. அப்போது இஸ்மாயில் முக் என்பவர் நாசிருதீன் இஸ்மாயில் ஷா என்ற பட்டத்துடன் தக்காண அரசை ஆளத்தொடங்கினார். அதோடு, டில்லி நாணயங்களைப்போல் **நாசீருதீன் இஸ்மாயில் ஷா அபுல்–ஃபத்** என்ற வாசகம் பொறித்த நாணயங்களை சுமார் 54 தானியமணி எடையில் வெளியிட்டார். ஆனால் ஒரு வருடம் ஆட்சி செய்தபின் அரச பதவியைத் துறந்தார். அவருக்குப்பின், பாமினி வமிசத்தைத் தோற்றுவித்த ஜாபர் கான் என்பவரும், பின்னர் அவ்வமிசத்தைச் சேர்ந்த ஏனையோரும் கி.பி. 1518 வரை பாமினி அரசை ஆண்டு வந்தனர்; கி.பி. 1518-க்குப் பின்னர்கூட அவ் வமிசத்தவரில் சிலர் மன்னர்கள்போல் ஆட்சி செய்ததாகத் தெரிகிறது.

பாமினி வமிசத்து சுல்தான்கள் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களில் நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர். அவர்கள் வெளியிட்ட தங்க நாணயம் கிடைப்பது கடினம்; ஆனால் செம்பு நாணயங்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. பாமினி அரசை ஆண்ட பதினேழு சுல்தான் மன்னர்களில் முதலாம்

முகமது ஷா (கி.பி. 1358–1375), முஜாஹித் ஷா (கி.பி. 1375–1378), இரண்டாம் முகமது ஷா (கி.பி. 1378–1397), பிரோஸ் ஷா (கி.பி. 1397–1422), இரண்டாம் அகமது ஷா (கி.பி. 1435–1457)–ஹுமாயூன் ஷா (கி.பி. 1457–1461), மூன்ரும் அகமது ஷா (கி.பி. 1461–1463), மூன்ரும் முகமது ஷா (கி.பி. 1463–1482) மஹ்மூத் ஷா (கி.பி. 1482–1518) ஆகிய ஏழு பேர் வெளியிட்ட தங்க நாணயங்கள் கிடைத்துள்ளன. இவர்களில் முஜாஹித் ஷா, பிரோஸ் ஷா ஆகிய இருவர் தவிர, மற்ற ஐந்து பேரின் தங்க நாணயங்கள் அனைத்தும் டில்லி சுல்தான்களின் **தங்காவை**ப்போல் 170 தானியமணி எடையுள்ளன. முஜாஹித் ஷா, பிரோஸ் ஷா ஆகிய இருவரின் நாணயங்கள் முகமது துக்ளக் வெளியிட்ட **தினாரை**ப்போல் 197 தானியமணி எடையில் உள்ளன. பாமினி சுல்தான்களில் கடைசியில் ஆட்சிக்கு வந்த வாலியுல்லா, கலீமுல்லா ஆகிய இருவர் தவிர, மற்றவர்களெல்லாம் வெள்ளி நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர். இவையனைத்தும் 170 தானியமணி எடையுள்ளன; முதலாம் முகமது ஷா என்பவர் மட்டும் 110 தானியமணி எடையில் மூன்றில் இரண்டு பங்கு **தங்காவை** வெளியிட்டிருக்கிருர்; முஜாஹித் ஷாவும், இரண்டாம் முகமது ஷாவும் 56 தானியமணி எடையில் மூன்றில் ஒரு பங்கு தங்காவை வெளியிட்டிருக்கின்றனர். பாமினி சுல்தான்களில் முந்தியவர்களான பாமன் ஷா, முதலாம் முகமது ஷா ஆகிய இருவரும் 27 தானியமணி, 17 தானிய மணி எடையில் சிறிய நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர். செம்பு நாணயங்களை எல்லோருமே வெளியிட்டதாகத் தெரிகிறது. ஆனல், இச்செம்பு நாணயங்கள் ஒரே எடையிலோ, ஒரே மதிப்பிலோ வெளியிடப்பட்டது இல்லை. பல்வேறு எடைகளிலும் மதிப்பிலும் வெளியிடப்பட்டிருக்கின்றன. பிரோஸ் ஷா காலம் வரை ஆட்சி செய்த அனைவரும் 57 தானிய மணி எடை கொண்ட நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு, அவற்றைக் காட்டிலும் அதிக எடையிலும் குறைந்த எடையிலும் தான் பல்வேறு மதிப்புடைய நாணயங்களை வெளியிட்டு வந்தனர். ஆனல், பிரோஸ் ஷா காலத்திலிருந்து இவை முற்றிலும் வேறுபட்ட எடையில் வெளியிடப்பட்டிருக்கின்றன. முதன் முதலில்

255 தானியமணி எடையுள்ள பெரிய நாணயங்களை பிரோஸ் ஷா வெளியிடத் தொடங்கினர்; பின்னர், அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்தோர் இதைக் காட்டிலும் பெரிய நாணயங்களை வெளியிடலாயினர்; அதோடு, அரை, கால், அரைக்கால் நாணயங்களையும் வெளியிட்டிருக்கின்றனர்.

பாமினி வமிசத்தவரில் முதலில் ஆட்சி செய்தோர் வெளியிட்ட நாணயங்களெல்லாம் டில்லி சுல்தான் நாணயங்களைப்போன்றவை. சான்ருக, அவர்களில் முதல் மன்னரான பாமன் ஷா என்பவரின் நாணயங்கள் வேலைப்பாட்டிலும் அமைப்பிலும் கில்ஜி, துக்ளக் வமிசத்தவரின் நாணயங்களைப்போல் உள்ளன. அவரது நாணயங்களில் இருபுறமும் கில்ஜி நாணயங்களிலுள்ள அதே வாசகங்கள் தான் உள்ளன; பெயர் மட்டும்தான் முகமது ஷா என்பதற்குப் பதிலாக பாமன் ஷா என்றுள்ளது. ஆனால், அவரது மகனை முதலாம் முகமது ஷா என்பவர் வெளியிட்ட நாணயங்களில் முற்றிலும் புதிய வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவர் தனக்கு, **சுல்தான்–இல் அஹத் வ ஜமான், ஹாமி உமில்லத்-இ-ரசூல்-இர்-ரஹ்மான்** (இந்த அரசிற்கும் இக்காலத்திற்கும் மன்னர்; இரக்கம் கொண்ட நபியைப் பின்பற்றுவோருக்கு ஆதரவாளர்) என்ற பட்டத்தைச் சூட்டியிருக்கிருர். அதோடு, இவரது நாணயங்களில் **அல்–முவையித் பி–நசரே அல்லா** (இறைவனின் குறிக்கோளுக்கு உதவுபவர்) **அபு–முஜஃபர்** (வெற்றிக்கு மூலமானவர்) என்ற பட்டங்களையும் சேர்த்துள்ளதைக் காணலாம். இவருக்குப் பின் ஆட்சி செய்த அனைவரும் இவற்றிலுள்ள கடைசி வாசகத்தையே பயன்படுத்தி வந்தனர். முஜாஹித் ஷா என்பவர் மட்டும் தான் டில்லி நாணயங்களின் வாசகங்களை மறுபடியும் பயன்படுத்தியிருக்கிருர். அவரது நாணயங்களில் **அல்–முவையித் பி–நசரே அல்லா** என்ற பட்டம் மட்டும் மாற்றப்படாமல் அப்படியே இருக்க, அதோடு, கில்ஜி மன்னர்களின் பட்டப் பெயர்களான **யாமின்–உல்–கிலாஃபத் நாசீர்–இ–அமீர்–அல்–மோமினீன்** (கலிபாஃவின் வலதுகரம் போன்றவர், முஸ்லிம் தலைவர்களுக்கு நண்பர்) என்பவையும் சேர்க்கப்பட்டுள்ளன. அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த எவரும் கலிஃபாத்திடம் நம்பிக்கையை வெளிப்படுத்தும் இவ்வித வாசகம் எதையும் பயன்படுத்தவில்லை. எனினும்

அவர்கள் அனைவரும் இஸ்லாம் மதத்தையே கட்டிப் பேணுபவர்கள் போல் பகட்டான வாசகங்களையும் ஆடம்பரமும் தற்பெருமையும் கொண்ட வாசகங்களையும் பயன்படுத்தியிருக்கின்றனர். அவர்களது பெயர் முடியும் ஷா என்ற சொல்லுக்குப்பின் சுல்தான் என்ற பட்டத்தையும் சேர்த்துப் பொறித்துள்ளனர்; எனினும் இவ்விரு சொற்களுமே இல்லாத சில நாணயங்களும் உள்ளன. வேறு சில நாணயங்களில் வெளியிட்டோரின் பெயர் மட்டுமன்றி, அவரது தந்தை, பாட்டனாரின் பெயர்கள்கூட உள்ளன.

கி.பி. 1490-ல் பாமினி அரசே மறைந்துவிட்டது. எனினும், ஃபதெஹுல்லா இமாதுல்-முல்க், அகமத் நிஜாமுல் முல்க், யூசுப் அதில் கான், சுல்தான் குலி குதுப்-ல்-முல்க் ஆகிய நான்கு ஆளுனர்களும், தலைநகரில் மந்திரியாக இருந்துவந்த அமீர் பாரீத் என்பவரும் அரசுரிமை கொண்டாடியதாகத் தெரிகிறது. ஆனால் மங்கிய பாமினிப் பேரரசைப் பொதுமக்கள் மதித்து வந்தனர் என்பதை அவர்களது நாணயங்களிலிருந்து அறிய வருகிறோம். மாகாண ஆளுநர்களும் வெகுநாட்கள் சொந்தமாக நாணயங்களை வெளியிட்டதும் கிடையாது. எனவே, பெயரளவில் சுல்தான்களாக இருந்த பாமினி சுல்தான்கள் பெயரிலேயே நாணயங்களைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்திருக்கின்றனர். இவ்வாறு பெயரளவில் சுல்தான்களாக இருந்தவர்களில் கடைசி சுல்தான் கலீமுல்லா என்பவர். இவரது நாணயங்கள் இவர் இறந்த பின்னரும்கூட வெளியாகியிருக்கின்றன.

நிஜாம் சாஹி வமிசம்

பீராரின் ஆளுநராக இருந்துவந்த ஃபதேஹுல்லா இமாதுல் முல்க் என்பவர் கி.பி. 1487-ல் பாமினி அரசிலிருந்து பீராரை விடுவித்துச் சுதந்திர அரசாக மாற்றினார். எனினும் அவரது வமிசத்தினர் எவரும் நாணயங்களை வெளியிட்டதாகத் தெரியவில்லை. அடுத்து, மகாராட்டிரத்தில் அஹமதுநகர் ஆளுநராக இருந்த அகமது நிஜாம்-முல்க் பெஹரி என்பவர் கி.பி. 1491-ல்

விடுதலை பெற்று, சுதந்திரமாக அந்நாட்டை ஆளத் தொடங்கினர். அப்போது ஷா என்ற பட்டத்தை அவர் சூட்டிக்கொள்ள விரும்பினர்; ஆனால் அதற்குப் பலமான எதிர்ப்பு ஏற்படவே அம் முயற்சியைக் கைவிட்டுவிட்டார். அவருக்குப் பின் முதலாம் பர்ஹன் என்பவர் ஆட்சிக்கு வந்தார். அப்போது, குஜராத் சுல்தானாக இருந்த பகதூர் ஷா என்பவரின் தூண்டுதலால் ஷா என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்ட பர்ஹன் அவரது பெயரில் நாணயங்களையும் வெளியிட்டிருக்கிறார்.

இந்த நிஜாம் சாஹி வமிசத்தினர் செம்பு நாணயங்களை மட்டுமே வெளியிட்டனர். ஆனால் அவற்றைப் பற்றிய விவரங்கள் அதிக மாகக் கிடைக்கவில்லை. கிடைத்துள்ள சில நாணயங்களில் வெளி யிட்டோரின் பெயரே கிடையாது. எனினும், இவற்றில் ஒரு புறம் நாணயச்சாலையின் பெயரும், மறுபுறம் வருடமும் இருக்கின்றன. இவற்றைக் கொண்டுதான் இவை நிஜாம் சாஹி வமிசத்தவர் நாணயங்களென்றும், இவற்றை முதலாம் பர்ஹன், முதலாம் முர்தாஜா, இரண்டாம் பர்ஹன் ஆகியோர் வெளியிட் டிருக்க வேண்டுமென்றும் தெரிந்துகொள்ள முடிகிறது. இவர்கள் அனைவரும் அகமதுநகரைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்து வந்தனர். முதலாம் பர்ஹன் ஆட்சி செய்தபோது இந்நகரம் அகமதுநகர் என்றே அழைக்கப்பட்டுவந்தது; ஆனால் முதல் முர்தாஜா காலத்தில் முர்த்தாஜி நகர் என்றும், இரண்டாம் பர்ஹான் காலத்தில் பர்ஹானபாத் என்றும் மாற்றினர்கள். பின்னர், இரண்டாம் முர்தாஸா என்பவர் மறுபடியும் இதை அகமதுநகர் என்று மாற்றி, அவர் வெளியிட்ட நாணயங்களில் அவரது பெயரைமட்டுமன்றி, அகமதுநகர் என்ற நாணயச்சாலை யின் பெயரையும் அச்சிட்டார். அவரது ஆட்சியின்போதுதான் முகலாயப் பேரரசரான அக்பரின் மகன் தன்யால் என்னும் இளவரசர் அகமதுநகரைத் தாக்கி அதைக் கைப்பற்றினர். அதோடு, அகமதுநகரிலிருந்த அரசாங்க அலுவலகங்களை முதலில் ஜுன்னருக்கும், சிறிது காலத்திற்குப் பின் தௌலதாபாத்திற்கும் மாற்றினர். அப்போது அகமதுநகர் நிஜாம் சாஹி வமிசத் தினரிடம் இல்லாவிட்டாலும் அவர் வெளியிட்ட நாணயங்களில் அகமதுநகரின் பெயர் பொறிக்கப்பட்டதால் அதையே தலைநகர்

என்று கொண்டிருந்தார்கள். ஆனல், அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த மூன்ரும் பர்ஹான் என்பவர், அவரது நாணயங்களில் தௌலதாபாத் என்றே நாணயச்சாலையின் பெயரைப் பொறித்திருக்கிறர். முர்தாஸாவின் நாணயங்களில் பட்டப் பெயர் எதுவுமின்றி, **முர்தாஜா** என்ற அவரது பெயர்மட்டுமே உள்ளது. மூன்ரும் பர்ஹன் வெளியிட்ட நாணயங்களிலோ அவரது பட்டப் பெயரான **பர்ஹன் நிஜாம் சாஹி** ஒரு புறமும், மற்ருெரு புறம் நாணயச்சாலையின் பெயரோடு வருடமும் காணப்படுகின்றன.

அடில் சாஹி வமிசம்

பிஜப்பூரில் ஆளுநராக இருந்த யூசுப் அடில் கான் என்பவர் கி. பி. 1499-ல் பாமனி ஆதிக்கத்திலிருந்து பிஜப்பூரைச் சுதந்திரமாக்கி, சுல்தானக ஆட்சிபுரியலானர்; அப்போது அவரது பெயரில்தான் குத்பா வாசிக்கப்பட வேண்டுமென்று ஆணையிட்டார். எனினும், அச் சிறப்புக்குரிய முறையில் முஸ்லிம் வழக்கப்படி அவரது பெயரில் நாணயங்களை வெளியிடவில்லை. அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த முதலாம் இஸ்மாயில், மல்லூ அடில் ஷா, முதலாம் இப்ராஹிம் ஆகியவர்கூடச் சொந்தமாக நாணயங்களை வெளியிடவில்லை. அடில் சாஹி இனத்தவரில் முதலாம் ஆலி என்பவர்தான் (கி. பி. 1537–1557) முதன்முதலில் நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டவர். அவருக்குப் பின் ஆட்சி செய்தோரும் சொந்த நாணயங்களை வெளியிட்டு வந்தனர். அவ்வாறு வெளியிடப்பட்ட நாணயங்கள் அனைத்தும் செம்பில் தான் அச்சிடப்பட்டன; எனினும், இச் செம்பு நாணயங்கள் 60, 120, 180 தானியமணி எடைகளில் மூன்று வகை மதிப்புடையவைகளாக வெளியிடப்பட்டன. முகமது ஷா என்பவர் மட்டும்தான் 267 தானியமணி எடைகொண்ட செம்பு நாணயங்களையும் வெளியிட்டிருக்கிறர்.

முதலாம் ஆலி என்பவரின் நாணயங்களில் முன்புறம் **ஆலி இப்னெ அபி தாலிப்** என்ற வாசகமும், பின்புறம் **அசதுல்லா அல்–கலிப்** என்ற வாசகமும் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டாம் இப்ராஹிம் நாணயங்களில் **இப்ராஹிம் அபலா பலி** (நலிந்தோருக்கு வலிமையூட்டும் இப்ராஹிம்) என்ற வாசகம் முன்புறமும், **குலாம் ஆலி முர்தஜா** என்ற வாசகம் பின்புறமும் இருக்கின்றன. இரண்டாம் ஆலி வெளியிட்ட நாணயங்களில், ஒரு புறம் **ஆலி அடில் ஷா** என்றும், மறுபுறம் **குலாம் ஹைதர் ம:ப்தார்** என்றும் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வமிசத்துக் கடைசி மன்னரின் நாணயங்களில் **சுல்தான் சிக்கந்தர் காதீரி குஸ்ரோ கீதி—பனு** என்ற அவரது பட்டம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இவ் வாசகங்களையெல்லாம் பார்க்கும்போது அவர்கள் ஷியா சமயத்தில் பற்றுள்ளவர்களாயும், கலிஃபா ஆலியிடம் நம்பிக்கை கொண்டோராயும் இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. அவர்களில் முகமது அடில் ஷா என்பவர் மட்டும் அவருக்கு முந்திய அரசர்களைப் பின்பற்றுமல், கீழ்க்காணும் ஈரடிச் செய்யுள் நடையில் பாரசீக வாசகத்தைப் பொறித்திருக்கிறுர் :

ஜஹான் ஐ யீன் தோ முஹமத் கிர:ப்த் ஜீனத் வ ஜா
எக் முஹமத் முர்சல் துவம் முகமத் ஷா

(உலகிற்கு வனப்பையும் மதிப்பையும் தந்தவர்கள் இரண்டு முகமதுகள் ஆவர் ; அவர்களில் ஒருவர் முகமது நபி, மற்ருெருவர் முகமது மன்னர்) இவ் வாசகத்தைப் பார்க்கும்போது, கலிஃபாவா யிருந்த ஆலிக்குச் சமமாகத் தன்னை ஒப்பிட்டுக் கூறிய பாட்டனுரைவிட, முகமது நபிக்கே தன்னை ஒப்பிட்டுப் பேசும் முகமது மன்னர் கொஞ்சம் திமிரானவராகவே இருந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. ஆனுல், அவரது ராணியான தாஜ் ஜஹானைப் புகழ்ந்து அவளைச் சாகாவரம் பெற்றவளாக உயர்த்துவதற்காகவும் இவ்வாசகத்தை அவர் பொறித்திருக்கலாம். எவ்வாறெனில் “ இந்த உலகம் (ஜஹான்) தனது மதிப்பையும் வனப்பையும் முகமது நபியிடமிருந்தும் ஜஹான் (ராணியார்) முகமது மன்னரிடமிருந்தும் பெற்றுள்ளனர்” என்று இந்த வாசகத்திற்கு வேருெரு பொருளும் கொள்ளலாம்.

முகமது அடில் ஷா வெளியிட்ட தங்க நாணயங்களைத் தவிர, வேறெவரும் தங்க நாணயங்களை வெளியிட்டது கிடையாது ; முகமது அடில் ஷாவின் தங்க நாணயங்களிலும் செம்பு நாணயங்

களிலுள்ள அதே வாசகம்தான் உள்ளது. ஆனால், இவ்வமிசத்தினரின் வெள்ளி நாணயங்களிலோ இவ்வித வாசகம் எதுவுமே கிடையாது; முற்றிலும் மாறுபட்ட, பிற நாட்டு நாணயங்களைப் போலவேதான் இவ்வெள்ளி நாணயங்கள் வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது. இவை **லாரின்கள்** என்றழைக்கப்பட்டிருக்கின்றன. அதோடு, பாரசீக வளைகுடாவின் முனையில் லார் என்ற இடத்தில் தான் இவை வெளியிடப்பட்டதாகவும், அரேபிய நாட்டு வணிகர்களில் கடல் கடந்து பிற நாடுகளோடு தொடர்புகொண்டிருந்தவர்கள்தான் இவற்றை அதிகமாகப் புழங்கியதாகவும் அறிய வருகிறோம். மெல்லிய வெள்ளித் தகட்டை நடுவில் இரண்டாக மடக்கி, இந்த **லாரின்** செய்யப்பட்டுள்ளது. எனவே, வாசகம் பொறிப்பதற்குப் போதுமான இடமில்லாத காரணத்தால், இவற்றிலுள்ள பொறிப்புக்கள் என்னவென்று முழுமையாகத் தெரியவில்லை. எனினும், இந்த **லாரின்களில்** ஒரு புறம் **சுல்தான் ஆலி அடில் ஷா** என்ற வாசகமும், மறுபுறம், **ஜர்ப் லாரி தங்கி** (அல்லது **டாபுல்**) **சான்** என்ற வாசகமும் இருப்பதாகத் தெரிகிறது. இவற்றிலுள்ள வருடங்களோ கொஞ்சம்கூடத் தெளிவாக இல்லை; என்றாலும், இரண்டாம் ஆலி என்ற பெயர் மட்டும் சிறிதளவுத் தெளிவாக இருக்கிறது. எது எவ்வாறிருப்பினும், இந்த **லாரின்கள்** அடில் சாஹி வமிசத்தவர் ஆண்டு வந்த அரசு முழுவதிலும் புழங்கியதா என்று கூறவும் முடியவில்லை; ஒரு வேளை, அந்த அரசு கொங்கணி கடற்கரைப் பகுதிகள் வரை விரிந்திருந்ததால், அக் கடற்கரைப் பகுதிகளுக்கு மட்டும் இவை வெளியிடப்பட்டிருக்கலாம்.

குதுப் சாஹி வமிசத்தினர்

கோல்கொண்டாவும் வாரங்கல்லும் அடங்கிய தெலிங்கானவை குத்புல் முல்க் சுல்தான் குலி எனப்பட்ட ஆளுநர் பாமினி சுல்தானின் பிரதிநிதிபோல் ஆண்டு வந்தார்; ஆனால், பதினாறும் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து அவர் சுதந்திர மன்னராக ஆட்சி புரியலானார். எனினும், எந்த வருடத்தில் சுதந்திர

மன்னரானுர் என்று திட்டவட்டமாகத் தெரியவில்லை. சுதந்திர மடைந்த பின்னர்கூட அவர் சொந்தமாக நாணயங்களை வெளி யிட்டதில்லை ; அவரது பெயரில் குத்பா வாசிக்கப்படவுமில்லை. அவருக்குப் பின் ஆட்சி செய்தவர்கள்தான் சொந்தமாகச் செம்பு நாணயங்களை மட்டும் வெளியிட்டனர். அச் செம்பு நாணயங்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. இவை ஒரே எடை யிலோ அல்லது ஒரே மதிப்புடையவைகளாக இல்லாமல், பல்வேறு மதிப்புடையவைகளாக வெவ்வேறு எடையில் உள்ளன. மேலும் முகமது குலி குதுப் ஷா, முகமது குதுப் ஷா ஆகிய இருவர் மட்டும் **அபுல் முஸா:ஃபர்** என்றபட்டத்திலும், மற்றவர்களெல்லாம் வெறும் **சுல்தான்** என்ற பட்டத்திலும் ஆட்சி செய்திருப்பதாக இந்நாணயங் களிலிருந்து அறிய வருகிறோம். பெரும்பாலும் இவற்றில் முன் புறம் மன்னரின் பெயரும், பின்புறம் நாணயச்சாலை இருந்த இடத்தின் பெயரும்தான் உள்ளன ; ஒரு சிலவற்றில் மட்டும் பின்புறம் நாணயச்சாலையின் பெயரோடு வருடமும் காணப் படுகிறது. முகமது குலி குதுப் ஷா என்பவர் மட்டும் ஒரு சில நாணயங்களில், அவரது பெயரோடு ஈரடி வாசகம் ஒன்றையும் பாரசீக மொழியில் பொறித்துள்ளார். அவ்வாசகம் வருமாறு :

பைவஸ்தா பி லானதெ-இலாஹி
தாஹிர்தா-ஃபுலூஸ்-இ-சாஹி

(மன்னர் வெளியிட்டுள்ள இந்த ஃபுலூஸ் நாணயங்களைக் குறை கூறுபவன் இறைவனின் கோபத்திற்குள்ளாவானாக). அவரது நாணயங்கள் வேறு சிலவற்றில் இவ் வாசகம் முழுவதும் ஒரே புறத்தில் பொறிக்கப்பட்டு, மறுபுறத்தில் **அதல் முகமத் குலி குதுப் ஷா** என்றும், **தார்–உல்–சல்தனத் கோல்கொண்டா** என்ற நாணயச் சாலையின் பெயரும், 991 அல்லது 992 என்ற ஹிஜ்ரீ வருடமும் அச்சிடப்பட்டிருக்கின்றன. இவ் வாசகங்களைப் பார்க்கும்போது, இந் நாணயங்களை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற பயத்திஞல் அவர்களைப் பயமுறுத்தச் சாபம் போட்டிருக்கிறுர் மன்னர் என்று தெரிகிறது. அடுத்து, அப்துல்லா குதுப் ஷா என்பவரும், அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த அவரது மருமகன் அபுல் ஹசன் குதுப் ஷா என்பவரும் வெளியிட்ட நாணயங்களில்

கதம் பி-அல்-கைர் வ அல்–சாதத் (எல்லாம் நல்ல முறையில் சாதகமாகவே முடிந்துவிட்டது) என்ற விநோதமான வாசகம் இருக்கிறது. இவ்வாசகத்தைப் பார்க்கும்போது, அவர்களது அரசு பெரும் விபத்திற்குள்ளாகி மீண்டபோது, இந் நாணயங்களை அவர்கள் வெளியிட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. மேலும், இவற்றில் 1068, 1095 என்று ஹிஜ்ரீ வருடங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

குதுப் சாஹி அரசின் தலைநகராக இருந்த கோல்கொண்டா என்னும் நகரம், முகமதுநகர் என்று மாற்றப்பட்டதாகவும் அறிய வருகிறோம். தொடக்கத்தில் வெளியான நாணயங்களிலெல்லாம் நாணயச்சாலையின் பெயரான **முகமதுநகர் கோல்கொண்டா** என்றோ **தாருல் சல்தனத் கோல்கொண்டா** என்றோதான் பொறிக்கப்பட்டுள்ளது. எனினும், முகமது குலி ·குதுப் ஷா என்பவரின் காலத்திலிருந்து வெளியிடப்பட்ட நாணயங்களில் **தாருல் சல்தனத் ஹைதராபாத்** என்ற பெயரைப் பார்க்கும்போது, இந் நாணயங்களெல்லாம் ஹைதராபாத்தில் அச்சிடப்பட்டதாகத் தெரிகிறது. அப்துல்லா குதுப் ஷாவின் நாணயங்கள்மட்டும் முகமது நகரிலும் ஹைதராபாத்திலும் அச்சிடப்பட்டதாகத் தெரிகிறது.

பரீத் சாஹி வமிசத்தினர்

பாமினி அரசின் ஆளுநராக இருந்த காசிம் பரீத் என்பவர் சாதாரண **சர்நௌபத்** பதவியிலிருந்து பாமினி அரசின் மந்திரியாக உயர்ந்தவர். இவர் கி.பி. 1490–91 வரை பாமினி அரசிற்குட்பட்ட அதிகாரியாகவே பீடார் பகுதியை ஆட்சி செய்து வந்தார்; ஆனால், அந்த ஆண்டிலிருந்து சுதந்திர மன்னராகப் பீடாரை ஆளத்தொடங்கினார். அவரும், அவருக்குப் பின் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்த மற்றவர்களும் நான்காம் அகமது ஷா, நான்காம் முகமது ஷா, வாலியுல்லா, கலிமுல்லா எனப்பட்ட பாமினி அரசர்களின் பலவீனத்தைச் சாதகமாகக் கொண்டு, சுதந்திர மன்னர்களாகவே பீடாரை ஆண்டு வந்தனர். பீடார் அரசர்

களில் காசிம் பரீத் என்பவர் நாணயங்களை வெளியிட்டதாகத் தெரியவில்லை; ஆனால், அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த முதலாம் அமீர் பரீத் என்பவர் **சாஹிப்–இ–சிக்கா** என்ற பட்டத்தில் ஆட்சி செய்ததாக ஃபரிஷ்டா என்பவர் குறிப்பிடு வதைப் பார்க்கும்போது, அமீர் பரீத் சொந்தமாகவே, நாணயங் களை அச்சிட்டு வெளியிட்டிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. எனினும், அவர் பெயருள்ள நாணயங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. அடுத்து, மூன்றாவது அரசராக ஆட்சி செய்த முதலாம் ஆலி பரீத் என்பவர் ஷா என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டபோதிலும், அவரது பெயரில் நாணயம் எதையும் வெளி யிடவில்லை. அவருக்குப் பின் அரியணை ஏறிய இப்ராஹிம் பரீத் (கி.பி. 1579–1586) என்பவர்தான் அவரது ஆட்சியின் கடைசிக் காலத்தில் சொந்தமாக நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டார். அவ்வாறு வெளியிட்ட நாணயங்களில் பாமினி மன்னரான கலீமுல்லாவின் பெயரை ஒருபுறத்திலும், **சுல்தான் அமீர் பரீத் ஷா** என்ற அவரது பெயரையும் 993 ஹிஜ்ரீ வருடத்தையும் மறு புறத்திலும் பொறித்து முதலில் வெளியிட்டார். ஆனால் பிற்பாடு வெளியிட்ட நாணயங்களில் பாமினி சுல்தானின் பெயரை நீக்கி விட்டு, தன் சொந்த பெயரிலேயே நாணயங்களைப் பொறித்தார். அவருக்குப் பின் ஆட்சி செய்த இப்ராஹிம் பரீத் ஷாவும் மற்றவர் களும் தம் பெயர்களைப் பொறிக்காமலேயே நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டனர். பெயரில்லாத இந் நாணயங்களிலெல்லாம் ஒரு புறத்தில் **சுல்தான் அமீர் பரீத் ஷா** என்னும் வாசகம் மட்டுமே உள்ளது; மறுபுறத்திலுள்ள வாசகங்கள்தான் பல மாதிரியாக இருக்கின்றன. சான்றாக, இப்ராஹிம் பரீத் ஷாவின் நாணயங் களில் பெரும்பாலும் **பி - நஸ்ர் உல்லா அல்–ஆலி** என்ற வாசகத்தைக் காணலாம்; எனினும், ஒரு சிலவற்றில் **அல்–ஆலி** என்ற கடைசிச் சொற்கள் கிடையாது. அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த இரண்டாம் காசிம் பரீத் ஷா (கி.பி. 1587–1592) என்பவரின் நாணயங்களில் பின்புறம் **அல்–முவையித் ப-நஸ்ர் அல்லா சுல்தானி** என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. அவரையடுத்து ஆட்சி செய்த இரண்டு மன்னர்களும் நாணயங்களை வெளியிடவில்லை. அவர்களுக்குப் பின் எட்டாவது அரசராக ஆட்சிக்கு வந்த

மூன்றும் அமீர் பரீத் என்பவரின் நாணயங்களில் முன்புறம் **அல்–முவையித் ப நஸ்ர் அல்லா அல்–முல்க் அல்–கவி அல்–கனி** என்ற வாசகம், பின்புறத்தில் **அல்–சுல்தான் அல்–ஆதில் அமீர் பரீத் ஷா பரக்** என்ற வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளன. அவரது நாணயங்கள் சிலவற்றில் முன்புறமிருந்த வாசகத்தில் **அல்–முல்க் அல்–கவி** என்ற பகுதியும் பின்புறம் **பரக்** என்ற சொல்லும் நீக்கப்பட்டிருக்கின்றன.

பரீத் சாஹி மன்னர்களின் நாணயங்கள் அனைத்தும் செம்பில் செய்யப்பட்டவை. இவை 280, 180, 125, 90 தானியமணி எடைகளில் உள்ளன; ஆனால், இவற்றில் நாணயச்சாலையின் பெயர் கிடையாது.

அதிகாரம் 14

முகலாயப் பேரரசர்களின் நாணயங்கள்

கி.பி. பதினான்காம் நூற்றாண்டிலேயே மங்கோலியரான தைமூர் என்பவர் மேற்காசிய நாடுகளை வென்று, இந்தியாவில் டில்லி வரை புகுந்தாரெனினும், ஐந்து தலைமுறையினருக்குப் பின்னர்தான் முகலாயர் எனப்படும் மங்கோலியர்கள் இந்தியாவில் தமது அரசை நிறுவினர். ஆக்ஸஸ் நதியின் அப்பால் உள்ள நாடுகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட ஜஹீருதீன் பாபர் என்பவர் கி.பி. 1505-ல் ஆப்கானிஸ்தானத்தில் தங்கினார். இருபது வருடங்களுக்குப் பின், அவர் பெரியதொரு படையுடன் இந்தியாவிற்குள் புகுந்து டில்லி சுல்தானாக இருந்த இப்ராஹிம் லோடியைக் கி.பி. 1526-ல் நடந்த பானிப்பட்டுப் போரில் தோற்கடித்து அவரையும் கொன்றுவிட்டார்.

பாபரும் அவரது மகன் ஹுமாயூனும் டில்லி சுல்தான் அரசைக் கைப்பற்றி முகலாய அரசை நிறுவிய பின்னரும் பல தொல்லைகளுக்கு ஆளாயினர். ஹுமாயூன் என்பவர் பலமுறை போரிட்டுத் தனது அரசை வலுப்படுத்த எண்ணினார்; ஆனால், கி.பி. 1542-ல் இந்தியாவிலிருந்தே விரட்டப்பட்டார். அவ்வாறு விரட்டப்பட்ட ஹுமாயூன் பதின்மூன்று ஆண்டுகள் வரை பாரசீகத்திலும் வேறு அநேக இடங்களிலும் அலைந்து திரிந்து விட்டு, மறுபடியும் டில்லியைக் கைப்பற்றி இழந்த அரசை மீண்டும் பெற்றார். இருப்பினும், கி.பி. 1556-ல் அவர் அகால மரணமடைந்தார். அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த அவரது மகன் அக்பர்தான் இந்தியாவில் வலுமிக்க முகலாயப் பேரரசை நிறுவியவர். தமது நீண்டகால ஆட்சியின்போது அவர் வட இந்தியாவிற்கும் மத்திய இந்தியாவிற்கும் முகலாய அரசை விரி வாக்கிய பெருமையைப் பெற்றார்; அதோடு, தான் இறக்குமுன்,

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல போர்களில் வெற்றி பெற்று, தெற்கே வெகு தூரம் வரை தமது பேரரசை விரிவாக்கிவிட்டார்.

பாபர், ஹுமாயூன் ஆகிய இருவர் மட்டுமன்றி, அக்பரும் (தனது ஆட்சியின்போது முதல் மூன்றாண்டுகளில்) வெள்ளியில் செய்யப்பட்ட **ஷாருகிஸ்** என்னும் நாணயங்களை வெளியிட்டனர். இந்நாணயங்களை தைமூர்வம்ச மன்னரான ஷாருக் என்பவர்தான் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆசியாவிலும் பாரசீகத்திலும் புகுத்தியவர்; அதன்பின்னர், ஆக்ஸஸ் அப்பால் உள்ள நாடுகளை ஆண்டுவந்த ஷைபானிடு வமிசத்து மன்னர்களும் இவற்றைப் பயன்படுத்தலாயினர். முகலாயப் பேரரசர்கள் வெளியிட்ட இந்த **ஷாருகிஸ்** நாணயங்கள் 72 தானியமணி எடை கொண்டவை. இவற்றில் முன்புறம் சதுரம், முக்கோணம் போன்ற பல்வேறு வடிவத்திற்குள் கலிமாவும், ஓரங்களில் நான்கு கலிபாக்களின் பெயர்களும் வாசகங்களும் உள்ளன. பின்புறத்தில் ஒரு பகுதியில் மன்னரின் பெயரும், ஓரத்தில் அவரது பட்டங்களோடு நாணயச்சாலையின் பெயரும், வெளியிடப்பட்ட வருடமும் இருக்கின்றன. பாபரின் நாணயங்களில் அவரது பெயரும் பட்டங்களும் **அல்–சுல்தான் அல்–ஆஜம் வ அல்–காகன் அல்–முகரம் ஜஹீருதீன் முஹமத் பாபர் பாதுஷா காஜி** என்று உள்ளன. ஹுமாயூன் நாணயங்களிலும் இதே பட்டங்கள்தான் பொறிக்கப்பட்டுள்ளன; அவரது பெயர் மட்டும் **முஹமத் ஹுமாயூன் பாதுஷா காஜி** என்று உள்ளது. அக்பரின் நாணயங்களில்கூட இதே பட்டங்கள்தான் உள்ளன; பெயர் மட்டும் **ஜலாலுதீன் முஹமத் அக்பர் பாதுஷா** என்றுள்ளது. பாபரின் **ஷாருகிஸ்** நாணயங்கள் இந்தியாவிலுள்ள ஆக்ரா, ஜோன்பூர், காபூல், லாகூர் ஆகிய இடங்களிலிருந்தும், இந்தியாவிற்கப்பாலுள்ள பாதக்ஷான், சாமர்கண்டு ஆகிய இடங்களிலிருந்தும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவற்றில், பாதக்ஷான், சாமர்கண்டு, காபூல் ஆகிய இடங்களிலிருந்து வெளியிடப்பட்ட நாணயங்களை ஷைபானிடு நாணயங்களைத் திருத்தியதுபோல் பாபர் பழைய முத்திரையின்மேல் வேறு முத்திரையிட்டு இருக்கிறார். இவற்றில் பாபரின் புதிய முத்திரைகள் மூன்று வகையானவை. அவற்றில்

(1) ஒரு சிறிய பெட்டிக்குள் ஆபரணம்போல் அழகாக அமைக்கப்பட்டுள்ள **அதீல்பாபர்** என்ற வாசகம், (2) கோடுகளால் தீட்டப்பட்ட நான்கு இதழ்கள் கொண்ட மலரில் **அதீல்பாபர் காஜி** என்ற வாசகம், (3) தலைகீழாகக் காணப்படும் இருதயம் போன்ற சிறிய பெட்டியில் அமைக்கப்பட்டுள்ள **ஜஹீருதீன் முஹமத் பாபர்** என்ற வாசகம் ஆகிய மூன்றும் மறு முத்திரையில் உள்ளன. ஹுமாயூனின் **ஷாருகிஸ்** நாணயங்கள் ஆக்ரா, காபூல், லாகூர், சம்பனீர், காந்தஹார் ஆகிய நாணயச்சாலைகளால் வெளியிடப்பட்டிருக்கின்றன. அக்பரின் ஷாருகிஸ்கள் லாகூரிலிருந்து மட்டும் வெளியிடப்பட்டவையாகும். ஆனால், பழைய ஷைபானீடு ஷாருகிஸ்களையே அக்பர் தனது முத்திரையுடன் வெளியிட்டிருக்கிறார். இவற்றில் **அதில் அக்பர்** என்ற வாசகத்தையும் வருடத்தையும் முட்டைவடிவத்திற்குள் முத்திரையிட்டிருக்கிறார். அதோடு 983, 984 என்ற வருடங்களையும் பொறித்திருக்கிறார். மேலும், அதில் காபூல் என்ற வாசகமும், 963, 964, 968, 982 என்ற வருடங்களும் புதிதாக முத்திரையிடப்பட்ட சில ஷைபானீடு நாணயங்களும் உள்ளன.

ஷாருகிஸ்களைப் போன்ற சில சிறிய தங்க நாணயங்களையும் ஹுமாயூன் வெளியிட்டிருக்கிறார் ; ஆனால், இவற்றில் நாணயச் சாலையின் பெயர் கிடையாது. பாபரும் ஹுமாயூனும் அவர்களின் பெயர்களைப் பொறிக்காமல் வெளியிட்ட செம்பு நாணயங்களும் கிடைத்துள்ளன. இவற்றில் ஒரு புறம் நாணயச்சாலையின் பெயரும், மறுபுறம் வருடமும் உள்ளன. இவை, **ஷாருகிஸ்** வெளியிடப்பட்ட நாணயச்சாலைகளிலிருந்தே வெளியிடப்பட்டிருக்கின்றன. இச் செம்பு நாணயங்களின் எடையெல்லாம் டில்லி சுல்தானாக இருந்த பஹ்லோல் லோடியின் நாணயங்களின் எடையை அடிப்படையாகக் கொண்டவை. ஹுமாயூன் ஆறு மாத காலம் மட்டும் ஆட்சி செய்தபோது வெளியிட்ட வெள்ளி நாணயங்களும் செம்பு நாணயங்களும், அவர் இந்தியாவில் இல்லாத போது சூரி வமிசத்தினரால் வெளியிடப்பட்டு நாடெங்கிலும் புழங்கிவந்த நாணயங்களின் எடையையொட்டி உள்ளன. அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த முகலாய மன்னர்களின் நாணயங்கள் கூட இந்த எடையையொட்டியே இருக்கின்றன.

சூரி வமிசத்தினரின் நாணயங்களின் அமைப்பையும் எடையை யும் பின்பற்றி அக்பர் வெளியிட்ட தங்க, வெள்ளி, செம்பு நாணயங்களும் கிடைத்துள்ளன. இவற்றில் **மொகரா** என்றழைக் கப்பட்ட தங்க நாணயங்கள் 11 **மாஷா** (168–170 தானியமணி) எடையில் உள்ளன. அவரது வெள்ளி ரூபாய் $11\frac{1}{2}$ **மாஷா** (178 தானியமணி) எடையுள்ளன; செம்பு நாணயமான **தாம் 1 தோலா, 8 மாஷா, 8 சுர்க்** (323 தானியமணி) எடையிருக்கிறது. நாற்பது **தாம்கள்** ஒரு ரூபாய்க்குச் சமமாகவும், ஒன்பது ரூபாய்கள் ஒரு தங்க **மொகராவுக்குச்** சமமாகவும் இருந்திருக்கின்றன. மேலும், 186–188 தானியமணி எடையில் பத்து ரூபாய் மதிப்புடைய தங்க நாணயங்களையும், 215 தானியமணி எடையில் பன்னிரண்டு ரூபாய்க்குச் சமமான தங்க நாணயங்களையுங்கூட அக்பர் வெளி யிட்டதாக அபுல்பாஸல் என்பவர் குறிப்பிடுகிறார். ஆனால், பன்னிரண்டு ரூபாய்க்குச் சமமான தங்க நாணயம் எதுவும் இது வரை கிடைக்கவில்லை. ஹிஜ்ரீ 985ஆம் வருடம் வரை ஒன்பது ரூபாய்க்குச் சமமான தங்க நாணயங்களைத்தான் அவர் வெளியிட்டு வந்தார் ; அந்த வருடத்திலிருந்துதான் 186–188 தானியமணி எடைகொண்ட, பத்து ரூபாய்க்குச் சமமான நாணயங்களை வெளி யிட்டார். எனவே, அவரது ஆட்சியின் 42ஆவது ஆண்டு (ஹிஜ்ரீ 1005ஆம் ஆண்டு) வரை குறைந்த மதிப்புடைய தங்க நாணயங்களோடு அதிக மதிப்புடைய தங்க நாணயங்களும் சேர்ந்து புழங்கிவந்தன ; என்றாலும், குறைந்த மதிப்புடைய நாணயங்களைவிட அதிக மதிப்புடையவைதான் முதன்முதலில் அதிகமாகப் புழக்கத்திலிருந்தன ; பின்னர் அதிக மதிப்புடைய வற்றைவிட குறைந்த மதிப்புடைய நாணயங்கள் அதிகமாகி விட்டன. ஹிஜ்ரீ 988ஆம் ஆண்டு வரை எந்த உலோக நாணய மும் அரை, கால் நாணயமாக வெளியிடப்படவில்லை ; ஆனால், அதற்குப்பின் எல்லா உலோகத்திலுமே அரை, கால் என்று சிறு நாணயங்கள் வெளியிடப்பட்டன ; ஆனால், இவை கிடைப்பது கடினமாக உள்ளது.

அக்பர் தொடக்கத்தில் வெளியிட்ட நாணயங்களெல்லாம் வட்ட மானவை ; ஆனால், சிறிது காலம் கழித்து, தங்க நாணயங்களையும் வெள்ளி நாணயங்களையும் சதுரவடிவத்தில் வெளியிடலானார்.

அதன்பின், அவரது ஆட்சியின் 30ஆவது ஆண்டிலிருந்து 35ஆம் ஆண்டு வரை (ஹிஜ்ரீ 993ஆம் ஆண்டிலிருந்து 998 வரை) வட்டமான நாணயங்களையும் சதுரமான நாணயங்களையும் சேர்ந்து வெளியிட்டு வந்தார். 35ஆவது ஆண்டிலிருந்து சதுர வடிவத்தில் வெளியிடுவதை நிறுத்திவிட்டு, வட்டமான நாணயங்களை மட்டும் வெளியிடலானார். அதோடு, **மிஹ்ரபி** வடிவத்திலும் சில தங்க நாணயங்களைச் சிறப்பான நிகழ்ச்சிகளின் நினைவாக வெளியிட்டதாகத் தெரிகிறது. ஆனால், இந்நாணயங்கள் கிடைப்பதே இல்லை.

அக்பரின் நாணயங்கள் வடிவத்திலும் எடையிலுமட்டுமன்றி, வாசகங்களில்கூட இரு வகைப்படும். அவரது ஆட்சியின் 29 ஆண்டுகள்வரை, அதாவது கி.பி. 1585 வரை, வெளியிடப்பட்ட தங்க நாணயங்களிலும் வெள்ளி நாணயங்களிலும் **கலிமா** பொறிக்கப்பட்டுள்ளது. பாபரும் ஹுமாயூனும் முன்னர் வெளியிட்ட **ஷாருகிஸ்** நாணயங்களைப்போல், இவற்றில் முன்புறம் **கலிமா**வும் நான்கு கலீஃபாக்களின் பெயர்களும் உள்ளன; பின்புறம், **ஜலாலுதீன் முஹமத் அக்பர் பாதுஷா காஜி** என்ற அவரின் பெயர், **கலத அல்லா தாலா முல்க் வ சல்தனத்** என்ற புனித வாசகம், நாணயச்சாலையின் பெயர், ஹிஜ்ரீ வருடம் ஆகியவை இருக்கின்றன. ஒரு சிலவற்றில் அவரது பட்டங்கள் **அல்-சுல்தான் அல்-ஆஜம் அல்-காகான் அல்-முகரம்** என்று பொறிக்கப்பட்டுள்ளன. ஹிஜ்ரீ 988ஆம் வருடம் வரை ஹிஜ்ரீ சகாப்தத்தின் வருடங்கள் வரிசையாகப் பொறிக்கப்பட்டு வந்தன; அதன் பின்னர், 1000 ஆண்டுகளைக் குறிக்கும் **அலி:ப்** என்ற சொல்லைப் புகுத்தியிருக்கிறார். அப்போது இஸ்லாமியச் சகாப்தத்தில் ஆயிரம் ஆண்டுகளின் தொகுப்பைக் குறிப்பிட வேண்டுமென்ற ஆசை தோன்றியதால், தனது நாணயங்களிலெல்லாம் **அலி:ப்** என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டுமென்று அவர் ஆணையிட்டார். அதோடு, நாணயச்சாலையின் பெயரைப் பொறிப்பதை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக "வெற்றி தரும் முகாம்" என்ற பொருளில் **உருது-ஜ:பர்-கரீன்** என்ற வாசகத்தைப் பொறிக்கலானார். இப் பழக்கம் கி.பி. 1555 வரை தொடர்ந்து பின்பற்றப்பட்டதாகத் தெரிகிறது. அந்த வருடத்திலிருந்துதான் பரந்த சமய நோக்கம் கொண்டவராய் மாறியதைப்

பிரதிபலிக்கும் வகையில் சிறப்பான முறையில் நாணயங்களை வெளியிடலானார். இந் நாணயங்களில் **கலிமா**வைப் பொறிப்ப தற்குப் பதிலாக, பல மதங்களிலுமுள்ள சிறந்த உண்மைகளை விளக்கும் இலாஹிக் கோட்பாடான **அல்லா அக்பர் ஜல்லா ஜலாலா** என்பதைப் பொறித்துள்ளார். இவ் வாசகத்திலுள்ள **அல்லா** அக்பர் என்ற சொற்கள் அவரது பெயரைக் குறிப்பிடவில்லை யென்று கொண்டால், அக்பர் தனது பெயரையும் பட்டங்களையும் பொறிப்பதைக்கூட நிறுத்திவிட்டார் எனலாம். கி.பி. 1555-க்குப் பின், இலாஹிக் கோட்பாட்டுடன் அவர் வெளியிட்ட நாணயங் களையெல்லாம் நான்கு வகையாகப் பிரிக்கலாம். முதன்முதலில் வெளியான நாணயங்களில் இலாஹிக் கோட்பாடு மட்டுமே உள்ளது. இவற்றில் ஒரு புறம் **அல்லா அக்பர்** என்றும், மறு புறம் **ஜல்லா ஜலாலா** என்றும் உள்ளது. இவ்வகை நாணயங்களை அவரது ஆட்சியின் முப்பதாவது ஆண்டில் வெளியிட்டிருக்கிறார். இரண்டாவது வகை நாணயங்களும் முதல் வகையைப் போன்றது தான்; எனினும், **ஜல்லா ஜலாலா** என்ற வாசகத்தோடு **இலாஹி** என்ற சொல்லும் வருடமும் உள்ளன. இவ்வகை நாணயங்களை அவரது முப்பத்தைந்தாவது ஆண்டு ஆட்சி வரை வெளியிட்ட தாகத் தெரிகிறது. அந்த ஆண்டிலேயே மூன்றாவது வகை நாணயங்களையும் வெளியிட்டிருக்கிறார். இவற்றில் ஒருபுறம் இலாஹிக் கோட்பாடு முழுவதும் பொறிக்கப்பட்டிருக்கிறது; மறுபுறத்தில் இரண்டு வரிகளில் வருடம் போடப்பட்டிருக்கிறது. இதில் மேல்வரியிலுள்ள வருடத்தோடு **இலாஹி** என்ற சொல்லும் உள்ளது; கீழ்வரியில் பாரசீக சகாப்தத்தின் மாதத்தைப் புகுத்தி யிருக்கிறார். நாணய வரலாற்றில் இது ஒரு புதுமையான அம்ச மாகும். அந்த ஆண்டிலிருந்து அவர் மாதந்தோறும் வெளியிட்ட நாணயங்களில் அந்தந்த மாதத்தின் பெயரையும் பொறிக்கலானார். இவ்வாறாக, மாதந்தோறும் நாணயங்களை வெளியிடும் பழக்கத்தை அவர் ஏற்படுத்தினார். இந்த மூன்றாவது வகை நாணயங்களை வெளியிட்டபோது, நாணயச்சாலையின் பெயரை நாணயத்தின் பின்புறத்தில் மறுபடியும் சேர்க்கலானார். இப் பழக்கத்தைத் தனது கடைசிக்காலம் வரை தொடர்ந்து பின்பற்றி வந்தார்.

அக்பர் வெளியிட்ட சில நாணயங்களில் யாப்பு முறைப்படியான

வாசகங்களையும் புகுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வகை வாசகங்களை ஏற்கெனவே குஜராத்தின் சுல்தானுக இருந்த கியாசுதீன் முகமது ஷா என்பவர் தனது நாணயங்களில் பொறித்திருப்பதால், இது ஒன்றும் அக்பரின் நாணயங்களில் புதுமையானதல்ல. என்ருலும், அக்பருக்குப் பின் ஆட்சி செய்தோர் பலர் தமது நாணயங்களில் இவ் வாசகங்களைப் பொறிப்பதை ஒரு பழக்கமாக மேற்கொண்டனர். அவரது ஆட்சியின் நாற்பதாவது ஆண்டில் வெளியிட்ட நாணயங்களில் செய்யுள் போன்ற ஈரடி வாசகத்தைப் பொறிக்கத்தொடங்கினுர்; ஆனுல், விரைவில் அதைக் கைவிட்டு விட்டார். பின் நாற்பத்தொன்பதாவது வருடத்தில் மறுபடியும் அதைப் புகுத்தி, மாதந்தோறும் வெளியிட்ட நாணயங்களிலெல்லாம் அதைத் தொடர்ந்து பயன்படுத்தலானுர். மேலும், அவர் இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன், ஆக்ராவிலிருந்த நாணயச்சாலையின் வழியாக வெளியிட்ட தங்க நாணயங்களில் பிறிதொருவகை யாப்பு முறை வாசகத்தையும் காணலாம். அவரது ஆட்சியின் நாற்பத்தைந்தாவது ஆண்டிலிருந்து அலஹாபாத்திலிருந்து வெளியிட்ட வெள்ளி நாணயங்களிலெல்லாம் இவ்வகை யாப்புமுறை வாசகம்தான் பொறிக்கப்பட்டுள்ளது. அக்பர் பங்தோகார் என்னுமிடத்தை வென்றபோது வெளியிட்ட வெள்ளி நாணயங்களிலும் இவ்வகை வாசகங்கள் உள்ளன. மேலும், அவரது நாணயங்கள் சிலவற்றில் உருவங்களையும் பொறிக்கலானுர். அதாவது, அவரது ஆட்சியின் நாற்பத்தைந்தாம் ஆண்டில்தான் முதன்முதலாக உருவங்களைப் பொறிக்கும் பழக்கத்தை ஆரம்பித்தனர். அஸீர்கார் கோட்டையை அவர் வென்றபோது, அவ் வெற்றியின் நினைவாக வெளியிட்ட தங்க நாணயங்களில் ஒரு புறம் பருந்தையும், மறுபுறம் நாணயச்சாலையின் பெயரோடு வருடத்தையும் பொறித்திருக்கிருர். மேலும், அவ் வெற்றியின் நினைவாகச் சில வெள்ளி நாணயங்களையும் வெளியிட்டதாகத் தெரிகிறது. இவற்றில் அக்பர் குதிரைச்சவாரி செய்யும் உருவம் உள்ளது. அவரின் ஐம்பதாம் ஆண்டு ஆட்சியின் தொடக்கத்தில் நாணயச்சாலையின் பெயரில்லாத தங்க நாணயங்களையும் வெள்ளி நாணயங்களையும் வெளியிட்டிருக்கிருர்; இவற்றில் ராமர்-சீதையின் உருவங்களைப் பொறித்து, நாகரியில்

ராமா—ஸ்ய என்ற வாசகத்தையும் அச்சிட்டுள்ளார். அதே ஆண்டு குர்தாத் என்ற மாதத்தில் ஒருபுறம் வாத்தின் சின்னமுள்ள மூன்ருவது வகை நாணயங்களையும் ஆக்ராவிலிருந்து வெளியிட்ட தாகத் தெரிகிறது.

இஸ்லாமிய மன்னர்கள் தொடக்கத்தில் வெளியிட்ட நாணயங்கள் அனைத்திலும் நாணயச்சாலையின் பெயர் பொறிக்கப்படவில்லை; ஒரு சிலவற்றில்தான் அது பொறிக்கப்பட்டது. ஆனல், அக்பரோ தனது நாணயங்கள் அனைத்திலும் நாணயச்சாலையின் பெயரைப் பொறித்து அதற்கு முக்கியத்துவம் தந்தார். எனவே, அவருக்குப்பின் வெளியிடப்பட்ட முகலாய நாணயங்களிலெல்லாம் நாணயச்சாலையின் பெயரைப் பொறிப்பது முக்கியமானதோர் அம்சமாக உள்ளது. அக்பரின் பேரரசு விரிவடைந்துகொண்டே வந்ததால் நாணயச்சாலைகளும் அதிகமாக்கப்பட்டு வந்தன. சான்ருக, அவரது தங்க நாணயங்கள் இருபதுக்கு மேற்பட்ட நாணயச்சாலைகளிலும், வெள்ளி நாணயங்கள் சுமார் நாற்பத்தைந்து நாணயச்சாலைகளிலும் அச்சிடப்பட்டிருக்கின்றன. என்ருலும் இவற்றில் பல தற்காலிகமாகத்தான் இயங்கிவந்திருக்கின்றன. தனது பேரரசைச் சுற்றிப் பார்ப்பதற்கென்று அக்பர் சென்று தங்கிய ஊர்களின் நினைவாகவும், வென்ற இடங்களின் நினைவாகவும் அந்தந்த ஊர்ப்பெயர்களையே நாணயச்சாலையின் பெயராகப் பொறித்திருப்பதாகவும் தெரிகிறது. அவரது தங்க நாணயங்களெல்லாம் தொடக்கத்தில் ஆக்ரா, லாகூர், ஜோன்பூர் போன்ற மாநிலத் தலைநகரங்களிலிருந்துதான் வெளியிடப்பட்டன. பின்னர் டில்லியிலிருந்தும் வெளியிடப்பட்டன. ஆனல், குஜராத்தை அவர் வென்றபின், டில்லிக்குப் பதிலாக அஹமதாபாத்தையே நாணயச்சாலையாக மாற்றினர். அதேபோல், பீஹாரைத் தனது பேரரசோடு இணைத்தபின், பாட்ணுவையும் நாணயச்சாலையாக ஆக்கினர். இந்த நாணயச்சாலைகள் அனைத்தும் தங்கத்தில் மட்டுமன்றி, வெள்ளியிலும் செம்பிலும்கூட நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டு வந்தன. செம்பு நாணயங்கள் வேறு பல இடங்களிலும் அச்சிடப்பட்டு வெளிவந்ததாகவும் அறிய வருகிறேம்.

அக்பர் இறந்தவுடன் ஜஹாங்கீர் அரியணை ஏறினர்; எனினும்,

பல மாதங்களுக்குப் பின்னர்தான் பட்டம் சூட்டும் விழா நடந்தது. எனவே, டில்லியில் நடந்த அவ் விழா வரை அவரது பெயரில் நாணயங்கள் வெளியிடப்படக் கூடாதென்று ஆணை யிட்டிருந்தார். அப்படியிருந்தும், ஒரு சில நாணயச்சாலைகள் அவரது பெயரில் நாணயங்களை வெளியிட்டதாகத் தெரிகிறது. சான்றாக, அக்பர் இறந்தபின்னரும் அவரது ஆட்சியின் 51ஆவது வருடமென்று பொறிக்கப்பட்ட சில தங்க நாணயங்களை ஆக்ரா நாணயச்சாலை வெளியிட்டிருக்கிறது. அவற்றில்

ஜாத் அஸ்த் அஜ்முஹர் அக்பர் பாதுஷா நூர்
பார் இன் ஜர் நாம் ஷா நூர் அலா நூர்

(அக்பரின் முத்திரையினால் தங்கம் ஒளிமிக்கதாகிறது; நூர், அதாவது நூருதீன் ஜஹாங்கீர் மன்னரின் பெயரால் இத் தங்கம் மேலும் ஒளிமிக்கதாகிறது) என்ற ஈரடி வாசகம் பொறிக்கப் பட்டிருக்கிறது. மேலும், அக்பரின் உருவத்துடன் தங்க மொகராக்களும் வெளியிடப்பட்டன; இவற்றில் ஜஹாங்கீர் ஆட்சியின் முதல் வருடம் என்பதோடு, ஹிஜ்ரீ ஆண்டும் பொறிக்கப்பட்டுள்ளன. அதோடு மட்டுமன்றி, அஹமதாபாத், காபூல் ஆகிய இடங்களிலிருந்து வெள்ளி நாணயங்களும் வெளி யிடப்பட்டிருக்கின்றன: இவற்றில் இளவரசர் **சலீம்** என்று அவர் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது,

மகுட விழா முடிந்தவுடன், ஜஹாங்கீர் தனது தங்க, வெள்ளி நாணயங்களின் எடையை 20 சதவீதம் அதிகரிக்கும்படியும், 202 தானியமணி எடையில் தங்க நாணயங்களையும் 212 தானிய மணி எடையில் வெள்ளி நாணயங்களையும் வெளியிடுமாறும் உத்தரவிட்டார். மேலும், நான்காண்டுகளுக்குப் பின்னர், மறுபடியும் அவற்றின் எடையை 5 சதவீதம் அதிகரிக்கும்படி ஆணையிட்டார். அதன்படி, தங்க நாணயங்கள் 212 தானியமணி எடையிலும், வெள்ளி நாணயங்கள் 222 தானியமணி எடை யிலும் வெளியிடப்பட்டன. ஆனால், இப் பளுவான நாணயங் களைப் புழங்குவது கஷ்டமாக இருந்ததால் பொதுமக்கள் அவரிடம் புகார் செய்தனர். எனவே, ஜஹாங்கீர் தனது ஆட்சியின் ஆறாவது ஆண்டில் அக்பரின் ஆட்சியில் இருந்ததைப்

போல் தங்க நாணய எடையை 170 தானியமணியாகவும், வெள்ளி நாணய எடையை 178 தானியமணியாகவும் குறைத்து வெளியிடலானார். அதிலிருந்து அவரது ஆட்சி முடியும்வரை இதே எடைகளில்தான் நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

ஜஹாங்கீரின் மகுட விழாவிற்குப் பின் வெளியிடப்பட்ட நாணயங்களில் அமீர் அல் உமரா ஷெரீப் கான் என்பவரால் புனையப்பட்ட ஈரடிச் செய்யுள் வாசகத்தைத்தான் பொறிக்க வேண்டுமென அவர் ஆணையிட்டார். அதாவது,

ரூயெ ஜாத்ரா சாக்த் நூரானி பரங்மிஹர் வமா
ஷா நூருதீன் ஜஹாங்கீர் இப்ன் அக்பர் பாதுஷா

(அக்பரின் மகன் நூருதின் ஜஹாங்கீர் ஷாவினால் பணத்தின் முகப்பு சூரியன், சந்திரனின் ஒளிபோல் பிரகாசமாக்கப் பட்டுள்ளது) என்ற வாசகத்தைப் பொறிக்கும்படி ஆணையிட்டார். ஆனால் ஆக்ரா, டில்லி, லாகூர், அக்பர் நகர், காந்தார், காஷ்மீர் ஆகிய நாணயச்சாலைகள் மட்டும்தான் இவ் வாசகத்தைப் பொறித்து நாணயங்களை வெளியிட்டன; அவைகூட மூன்றாண்டுகள் மட்டும்தான் இவ் வாசகத்தைப் பொறித்து வந்தன. அந்த மூன்றாண்டுகளில், ஒருபுறம் கலிமாவையும், மறுபுறம் **நூருதின் முஹமத் ஜஹாங்கீர் பாதுஷா காஜி** என்ற வாசகத்தையும் கொண்ட வேறு நாணயங்களையும் வெளியிட்டிருக்கின்றன. மேலும், இலாஹி சகாப்தத்தின் வருடத்தைக் கை விட்ட ஜஹாங்கீர் அதற்குப் பதிலாக அவரது ஆட்சிக்கால ஆண்டையே பொறிக்கலானார்; இந்த ஆட்சி ஆண்டும் இலாஹி ஆண்டைப்போல சூரிய மண்டலக் கணிப்பை ஆதாரமாகக் கொண்டது. அதிலிருந்து அவரது நாணயங்களில் ஹிஜ்ரீ ஆண்டும் அவரின் ஆட்சிக்கால வருடமும் பொறிக்கப்படலாயின.

ஜஹாங்கீரின் ஆட்சிக்காலத்தின் ஆறாவது ஆண்டிலும் அதற்குப் பின்பும் வெளியிடப்பட்ட நாணயங்களில் ஒருபுறம் **நசீருதீன் ஜஹாங்கீர் ஷா அக்பர் ஷா** என்ற பெயருள்ளது; மறு புறம், அக்பரின் இலாஹி நாணயங்களிலுள்ளதைப் போல நாணயச்சாலையின் பெயர், இலாஹி (பாரசீக)

மாதம், அவரது ஆட்சி வருடம், ஹிஜ்ரீ வருடம் ஆகியவை இருக்கின்றன. இவ்வகை நாணயங்கள் அவரது பத்தொன்பதாவது ஆண்டு ஆட்சிக்காலம் வரை வெளியிடப்பட்டிருக்கின்றன. இவற்றோடு, ஈரடி வாசகம்கொண்ட நாணயங்களும் ஆஜ்மீர், அஹமதாபாத், அக்பர்நகர், ஆக்ரா, அலகாபாத், புர்ஹன்பூர், பாட்னு, டில்லி, பாத்பூர், காந்தஹார், காபூல், காஷ்மீர், லாகூர், மாண்டு ஆகிய இடங்களிலிருந்து வெளியிடப்பட்டிருக்கின்றன. மேலும், ஆருவது ஆண்டுமுதல் ஒன்பதாம் ஆண்டுவரை தனக்குப் பிடித்தமானவர்களுக்குப் பரிசு கொடுப்பதற்கென்று தனது உருவம் பொறித்த நாணயங்களை அச்சிட்டிருக்கிருர். இவை அவரது தந்தையான அக்பர் தனது உருவம் பொறித்து முன்பு வெளியிட்ட நாணயங்களைப் போலவே இருக்கின்றன. நிற்க, ஆருவது ஆண்டில் வெளியிடப்பட்ட உருவச்சின்னமுள்ள நாணயங்களில் அவரது மார்பளவு உருவம் பக்கவாட்டமாக உள்ளது. ஒரு சில நாணயங்களில் மட்டும் அவர் தனது வலது கையில் ஒரு மலரையோ அல்லது கிண்ணத்தையோ வைத்திருக்கிருர். இந் நாணயங்களின் பின்புறம், சிங்கம் ஒன்று வலது சாயலாகவோ இடது சாயலாகவோ காணப்படுகிறது. ஏழாவது ஆண்டில் வெளியிடப்பட்ட நாணயங்களில் ஒரு புறம், தனது வலது கையில் கிண்ணத்துடன் தோன்றும் மன்னர் கால்மேல் கால்போட்டுக்கொண்டு அரியணையில் அமர்ந்திருக்கிருர்; பின்புறம் ஒரு வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. எட்டாவது ஆண்டில் வெளியிட்ட நாணயங்களில் ஒரு புறம், மன்னர் கால் மேல் கால் போட்டு அமர்ந்திருக்க, மறுபுறம் சிங்கத்தின் உருவம் பொறிக்கப் பட்டுள்ளது. இவற்றில் யாப்பு முறையிலான ஈரடிச் செய்யுளில் ஒரு பாதி முன்புறத்திலும், மறு பாதி பின்புறத்திலும் கீழே பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வாருக, எட்டாவது ஆண்டுவரை வெளியிடப்பட்ட உருவச்சின்னம்கொண்ட நாணயங்கள் எதிலும் நாணயச்சாலையின் பெயர் கிடையாது; ஆனால், ஒன்பதாவது வருடம் வெளியிட்ட நாணயங்களில் ஆஜ்மீர் என்று நாணயச் சாலையின் பெயர் உள்ளது. ஒன்பதாவது ஆண்டில் வெளியான இந் நாணயங்களில் முன்புறம், கையில் கிண்ணம் வைத்திருக்கும் மன்னரின் உருவம் பெரிதாக உள்ளது; இவ்வுருவத்திற்கு

வலப்புறத்திலும் இடப்புறத்திலும் யாப்பு இலக்கணச் செய்யுள் பாதி பாதியாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றன. பின்புறத்தில் நடுவில் உதய சூரியனின் சின்னம் உள்ளது ; அதற்கு இடப்புறத்திலும் வலப்புறத்திலும் அவரது ஆட்சி ஆண்டு, ஹிஜ்ரீ வருஷம், யாமுயீனின் துதிப்பாடல் ஆகியவை பொறிக்கப்பட்டுள்ளன. அதோடு, மேற்புறமும் கீழ்ப்புறமும் வேறொரு ஈரடிச் செய்யுள் வாசகம் பாதிப்பாதியாகப் போடப்பட்டுள்ளது.

பதின்மூன்ருவது ஆண்டு ஆட்சியின்போது அவரது நாணயங்களின் பின்புறம் பொறிக்கப்பட்டுவந்த மாதத்தின் பெயருக்குப் பதிலாக, அம் மாதத்திற்குரிய கிரகத்தின் சின்னத்தையே பொறிக்கலாமென்று எண்ணிய ஜஹாங்கீர் இதைத் தனது நாட்குறிப்பில் எழுதி வைத்தார். அவரது எண்ணப்படியே முகாமிலிருந்து வெளியிட்ட தங்க நாணயங்களிலும் வெள்ளி நாணயங்களிலும் ஒரு புறம் இராசி மண்டலத்தின் சின்னத்தைப் பொறிக்கலாஞர். இந் நாணயங்கள் பிரமாதமான வேலைப்பாடு கொண்டவை ; ஆனுல், இப்போது கிடைப்பது கடினம்.

தனது ஆட்சியின் கடைசிக்காலத்தில் ஜஹாங்கீர் நோய்வாய்ப்பட்டு, மதியும் இழந்தார். எனவே, ஆட்சிப்பொறுப்பைத் தனது மகாராணியான நூர்ஜஹானிடம் ஒப்படைத்துவிட்டு, தான் ஒரு சேர் புலாவையும் ஒரு சேர் மதுவையும் மட்டும் சாப்பிட்டுத் திருப்தி பெற்றதாக அவரே கூறியிருக்கிருர். இவ்வாருக, பத்தொன்பதாவது ஆண்டு ஆட்சியின்போது, முகலாயப் பேரரசை நூர்ஜஹானே ஆட்சி செய்து வந்தார். எனவே, அன்றையிலிருந்து ஆக்ரா, அஹமதாபாத் அக்பர் நகர், அலஹாபாத், காஷ்மீர், லாகூர், பாட்ஞ, சூரத் ஆகிய நாணயச்சாலைகளிலிருந்து வெளியான நாணயங்களிலிருந்து நூர்ஜஹான்தான் **உண்மையான பேரரசி** என்பதை அறியலாம். இந் நாணயங்களில் கீழ்க்காணும் ஈரடி வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

பா ஹுகும் ஷா ஜஹாங்கீர் யாஃப்த் சுத் ஜேவர்
பா நாம் நூர்ஜஹான் பாதுஷா பேகம்

(ஜஹாங்கீர் ஷாவின் ஆணைப்படி இத் தங்க நாணயங்களில்

நூர்ஜஹான் பாதுஷா பேகமின் பெயர் இருப்பதால், இத்தங்கத் திற்கு நூறுவகையான வனப்பு ஏற்பட்டுவிடுகிறது.) ஜஹாங்கீர் ஆண்ட கடைசிக்காலம் வரை இவ்வாசகமுள்ள நாணயங்கள் தான் வெளியிடப்பட்டு வந்தன. ஆனுல், ஷாஜஹான் அரியணை ஏறியவுடன், இந் நாணயங்களெல்லாம் நாணயச்சாலைக்கே திரும்பி வந்து உருக்கப்பட வேண்டுமென ஆணையிட்டதோடு, இந் நாணயங்களேயோ அல்லது இராசி மண்டலச் சின்னமுள்ள நாணயங்களேயோ யாராவது வைத்திருந்தால் அவர்கள் மரண தண்டனைக்குள்ளாவர் என்றும் அறிவித்துவிட்டார். அதனுல் இந் நாணயங்களே இப்போது கிடைப்பதில்லை.

ஜஹாங்கீருக்கும் ஷாஜஹானுக்குமிடையே தாவர் பக்ஷ் என்பவர் மூன்று மாதகாலம் மட்டும் ஆட்சி செய்தார். அப்போது அவர் சில வெள்ளி நாணயங்களை லாகூர் நாணயச்சாலையிலிருந்து வெளியிட்டிருக்கிறுர். இவற்றில் ஒருபுறம் **கலிமாவும்,** மறுபுறம் **அபூ-முஜஃபர் தாவர் பக்ஷ் பாதுஷா** என்னும் அவரது பெயரும் உள்ளன. ஷாஜஹான் தனது ஆட்சிக் காலம் முழுவதும், **கலிமா**வையும் நாணயச்சாலையின் பெயரையும் ஒருபுறமும் **சாஹிப்கிரான் சானி சிஹாபுத்தீன் முஹமத்ஷா ஜகாடன் பாதுஷா காஜி** என்னும் அவரது பெயரையும் பட்டங்களையும் மறுபுறமும் கொண்ட நாணயங்களைத்தான் வெளியிட்டு வந்தார். தனது முதல் ஐந்தாண்டுக்கால ஆட்சியின்போது வெளியிட்ட நாணயங் களிலெல்லாம் சாதாரண, மிக எளிமையான மேல் வாசகங் களைத்தான் பொறித்து வந்தார். ஐந்தாவது ஆண்டு முதல் கடைசிவரை தட்டா என்ற நாணயச்சாலையிலிருந்து வெளியிட்ட நாணயங்களில் மட்டும் அதே போன்ற வாசகத்தைப் பொறித்தார்; ஆனுல், மற்ற நாணயச்சாலைகளிலிருந்து வெளி யிட்ட நாணயங்களில் எண்ணற்ற வகையான வாசகங்களைப் பொறிக்கலானுர். முன்புறத்தில் சதுரங்கள், வட்டங்கள், முக்கோணங்கள், ஆறு, எட்டு கோணங்களென்று பல்வேறு வடிவங்களைப் போட்டு, அவற்றின் நடுவில் கலிமாவைப் பொறித்துள்ளார்; பின்புறம் அவரது பெயரைப் பொறித்திருக் கிறுர். அதோடு, முன்புறத்திலுள்ள ஓரங்களில் நான்கு கலிஃபாக்களின் பெயர்களையும் அவர்களது பட்டங்களையும்

மறுபடியும் புகுத்தி அச்சிட்டுள்ளார். பின்புறமுள்ள ஓரத்தில் அவரது பட்டங்களைப் பொறித்திருக்கிறார். மேலும், கடைசிப் பத்தாண்டு காலத்தில் ஈரடிச் செய்யுள் வாசகம் பொறித்த நாணயங்களை ஷாஜஹானாபாத்திலிருந்தும் ஹிஜ்ரீ 1048ஆம் வருடத்தில் அவர் தோற்றுவித்த புதுடில்லியிலிருந்தும் வெளியிட்டிருக்கிறார். அந்த ஈரடி வாசகம் வருமாறு:

சிக்கா ஷாஜஹனபாத் ராயிச் தர் ஜஹான்
ஜாவெதான் பாதா பனும் சானி சாஹிப் கிரான்

(கிரகங்களை இணைக்க வந்த இரண்டாம் தலைவரின் பெயரில் ஷாஜஹானாபாத்திலிருந்து வெளியிடப்படும் இந் நாணயங்கள் என்றென்றும் இவ்வுலகில் புழங்குவதாக.) ஷாஜஹானுக்கு முன் ஆட்சி செய்த எவரும் தற்புகழ்ச்சியான வாசகத்தைப் பொறித்ததில்லை. ஆனால் ஷாஜஹானே **சாஹிப்-இ-கிரான்** (கிரகங்களை இணைக்கும் தலைவர்) என்ற பட்டத்தைப் பயன்படுத்திய தைமூரைப்போல் **சாஹிப் இ கிரான் சானி** (ராசிக் கிரகங்களின் இரண்டாவது தலைவர்) என்ற பட்டத்தையே தனக்குச் சூட்டியிருக்கிறார். ஷாஜஹான் பயன்படுத்திய இப் பட்டத்தைத்தான் அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த எட்டுப் பேரரசர்களும் பயன்படுத்தியிருக்கின்றனர். ஜஹாங்கீர், தனது இரண்டாவது ஆண்டிலிருந்து ஐந்தாவது ஆண்டுவரை வெளியிட்ட நாணயங்களில் பொறித்ததைப்போல் ஷாஜஹானும் தன் நாணயங்களில் தனது ஆட்சி ஆண்டையும் இலாஹி (பாரசீக) மாதத்தையும் பொறித்திருக்கிறார். எனினும், ஜஹாங்கீரைப் போல் இல்லாமல் தனது ஆட்சி வருடம் சந்திரமண்டலக் கணிப்பை ஆதாரமாகக் கொண்ட ஹிஜ்ரீ சகாப்தத்தை ஒத்து பொறித்திருக்கிறார். ஷாஜஹானின் இப் பழக்கத்தை அவருக்குப் பின் ஆட்சி செய்த அனைவருமே பின்பற்றினர்.

கி. பி. 1656–57-ல் ஷாஜஹான் நோயுற்றபோது, அவருடைய மைந்தர்கள் அரசுரிமைக்காகப் போட்டியிட்டனர். அப்போது, ஷா சூஜா, மூரத் பக்ஷ் என்ற இருவரும் அரசுரிமை கொண்டாடித் தத்தம் பெயர்களில் நாணயங்களை வெளியிட்டனர். ஷா சூஜா

என்பவர் வங்காளத்திலிருந்து அக்பர் நகரிலிருந்தும், மூரத் பக்ஷ் என்பவர் குஜராத்திலிருந்து அஹமதாபாத், சூரத், காம்பயாட் என்ற இடங்களிலிருந்தும் தம் நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர். தம் தந்தையைப்போல் இவ்விருவருமே சதுர வடிவத்தில் செய்யப்பட்ட நாணயங்களையே வெளியிட்டுள்ளனர். இவற்றில் ஒருபுறம் **கலிமா**வும், கலிஃபாக்களின் பெயர்களும் உள்ளன ; மறுபுறம் வெளியிட்டவரின் பெயரும் பட்டங்களும் இருக்கின்றன. இருவருமே **சிக்கந்தர்சானி** (இரண்டாம்அலெக்சாண்டர்) என்ற பட்டத்தையே பயன்படுத்தியிருக்கின்றனர்.

அடுத்துப் பட்டத்திற்கு வந்த ஔரங்கசீப் **கலிமா** வாசகமுள்ள நாணயங்களைக் கஃபிர்கள் (முஸ்லீம் அல்லாதோர்) புழங்கினால் அதன் புனிதத்தன்மை கெட்டுவிடுமென நினைத்து, **கலிமா**வை நாணயங்களில் பொறிக்கக்கூடாதென அவசர ஆணையிட்டார். அவரது காலத்திலிருந்து இந்திய நாணயங்களில் **கலிமா** பொறிக்கப்பட்டதே கிடையாது. ஒரு சில ஆண்டுகளாக அவரது நாணயங்களின் முன்புறம் **அபூ-அல்-ஜபர் முஹீயுத்தீன் பஹதூர் ஷா ஆலம்கீர் ஔரங்கசீப் பாதுஷா காஜி** என்று அவரது பெயரையும் பட்டங்களையும் பொறித்து வந்தார். அதன் பின்னர், மர் அப்துல் பாகி ஷாஹபாய் என்பவரால் இயற்றப் பட்ட **சிக்கா ஜாத்தர் ஜஹான் சூ மெஹர்** (அல்லது பதர்)[1] **முனீர் ஷா ஔரங்கசீப் ஆலம்கீர்** [பிரகாசமான சூரியனை (அல்லது சந்திரனைப்) போல் இவ்வுலகில் புழங்குவதற்காக ஔரங்கசீப் அச்சிட்டவை] என்னும் ஈரடி வாசகத்தைப் பொறிக்கலானார். இந்த ஈரடி வாசகத்தைக் கொண்ட நாணயங்களை எல்லா நாணயச்சாலைகளும் ஒரே சமயத்தில் வெளியிடவில்லை ; எனினும், அவரது ஆட்சியின் நான்காவது ஆண்டிலிருந்து கடைசிவரை அக்பராபாத்தைத் தவிர ஏனைய நாணயச்சாலைகள் அனைத்தும் அவ்வாசகத்தைப் பொறித்து வந்தன. அக்பராபாத் அவரது இருபத்தொன்பதாம் ஆண்டில் தான் இதைப் பயன்படுத்தத் தொடங்கியது. மேலும், அக்பரா

[1] மெஹர் என்ற சொல் தங்க நாணயத்திற்கும், பதர் என்ற சொல் வெள்ளி நாணயத்திற்கும் உரியதென கஃபீகான் என்பவர் குறிப்பிட்டுள்ளார் ; ஆனால் எல்லா நாணயங்களிலும் அவர் குறிப்பிட்டுள்ளபடி இச்சொற்கள் பொறிக்கப் பட்டதாகத் தெரியவில்லை.

பாத், ஜுனாகார் ஆகிய இரு நாணயச்சாலைகளும் ஷாஜஹானின் நாணயங்களிலுள்ளதைப் போல் சதுர வடிவமான பகுதியில்தான் இதைப் பொறித்து வந்தன. இவ்வாசகம் கொண்ட நாணயங்களின் பின்புறத்தில் நாணயச்சாலையின் பெயரோடு, **சன் ஜலுஸ் மை மனத்மானுஸ் ஜர்ப்** என்ற அடைமொழி வாசகத்தையும் ஔரங்கசீப் புகுத்தலானார். இதன் பொருள்: "வளமையில் இணைந்த பதவியேற்றபின் (ஆட்சி ஆண்டான) வருடத்தில் (நாணயச்சாலையின் பெயரில்) அச்சிடப்பட்டது" என்பதுதான்.

ஔரங்கசீபின் ஆட்சிக்குப் பின்னர் முகலாயப் பேரரசு சிதறத் தொடங்கியது; அவ்வரசிற்குப் பதிலாக நூற்றுக்கணக்கான அரசுகள் தோன்றி, பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் இந்தியாவையே சிதறடித்துவிட்டதாக வரலாறு கூறுகிறது. எனினும், இவ்வரசுகள் அனைத்தும் முகலாயப் பேரரசின் பெருமையைக் காப்பாற்றி வந்ததுபோல் தோன்றின. முகலாய மன்னர்களின் பெயர்களிலேயே பல அரசுகள் நாணயங்களை வெளியிட்டு வந்தன; ஆனால், உண்மையில் அவை முகலாய அரசின் நாணயங்களல்ல. இவ்வாறாக, ஔரங்கசீப் காலத்திற்குப் பின் நாணய வரலாறே குழம்பியுள்ளது. அதோடு, பருக்ஷியார் என்பவர் நாணயச்சாலைகளைக் குத்தகைக்கு விடும் கொள்கையைக் கடைப்பிடித்ததால் குழப்பம் மேலும் அதிகரித்துவிட்டது. எவ்வாறிருப்பினும், கி.பி. 1857 வரை ஆஜம் ஷா, காம்பக்ஷ், ஷா ஆலம் பஹதூர் (முதலாம் ஷா ஆலம்), ஜஹாந்தர் ஷா, பருக்ஷியார், இரஃபி உத்தார் ஜாட், இரெபி உத்தெளலா (இரண்டாம் ஷாஜஹான்), முகமது இப்ராஹிம் முகமது ஷா, அஹமது ஷா, இரண்டாம் ஆலம் கீர், மூன்றாம் ஷாஜஹான், இரண்டாம் ஷா ஆலம், பேடார் பக்த், இரண்டாம் அக்பர், மூன்றாம் பஹதூர்ஷா ஆகிய முகலாய மன்னர்களின் பெயர்களிலேயே நாணயங்கள் அச்சிடப்பட்டு தொடர்ந்து வெளிவந்தன. அவ்வாறு முகலாய மன்னர்களின் பெயர்களில் நாணயங்களை வெளியிட்ட நாணயச் சாலைகளை எண்ணிப் பார்த்தால், அவை குறைந்தபட்சம் இருநூறாவது இருக்கும்.

முகலாய மன்னர்கள் தங்கத்தில் **மொகராக்**களையும் வெள்ளியில் ரூபாய்களையும் தொடர்ச்சியாக வெளியிட்டுவந்தனர்; அதே சமயம்,

அவ்வப்போது சிறிய நாணயங்களையும் வெளியிட்டனர். இவற்றில் சில நன்கொடை கொடுப்பதற்கென்று வெளியிடப்பட்டன. இச் சிறு நாணயங்களில் பிரபலியமான **நிஸார்** எனப்பட்ட கால் **ரூபா**யை ஜஹாங்கீர், ஷாஜஹான், ஒளரங்கசீப், ஜஹாந்தர ஷா, பரூக்ஷியார் ஆகியோர் வெளியிட்டனர். தங்கத்தில்கூட **நிஸார்கள்** வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது; ஆனால் அவை கிடைப்பதில்லை. இவ்வகைத் தங்க நாணயங்களில் **நூர் அ:ப்ஷன்** (ஒளிபரப்பும்), **காய்ர்கபூல்** (நன்கொடைபெறும்) என்றழைக்கப்பட்ட நாணயங்களை ஜஹாங்கீர் வெளியிட்டார். மேலும் கி.பி. 1679-ல் (முஸ்லிம் அல்லாதோர்மீது விதிக்கப்பட்ட) **ஜெஸியா** வரியை ஒளரங்கசீப் மறுபடியும் விதிக்கலானார்; அவ்வரியைச் செலுத்துவதற்கென்று **தீரம் ஷராய்** (சட்டபூர்வமான தீரம்) எனப்பட்ட நாணயங்களைப் பழையபடியே அச்சிட்டு வெளியிட்டார். இவை சதுர வடிவத்தில் பல்வேறு நாணயச்சாலைகளிலிருந்து வெளியிடப்பட்டன. பரூக்ஷியார் தனது ஆட்சியின் ஆறுவது ஆண்டில் மறுபடியும் **ஜெஸியா** வரியை விதித்து, இந்த **தீரம்களையும்** வெளியிடலானார்.

மேற்கூறிய தங்க **மொகராக்கள்**, வெள்ளி **ரூபாய்கள்** எனப்பட்ட முழு நாணயங்களோடு அரை, கால், நாணயங்களையும் முகலாய மன்னர்கள் வெளியிட்டு வந்தனர், மேலும் அயல்நாட்டுத் தூதர்களுக்கும், தங்களுக்கு வேண்டிய சீமாட்டிகளுக்கும், மற்றவர்களுக்கும் அன்பளிப்பாகக் கொடுப்பதற்கென்று பெரிய தங்க நாணயங்களையும் வெற்றி நாணயங்களையும்கூட அச்சிட்டனர். இந் நாணயங்கள் 2 தோலா முதல் 2000 தோலா எடைவரை அச்சிடப்பட்டன. **அய்னி அக்பாரி, துஸூக்-கி-ஜஹாங்கீரி** எனப் படும் நூல்களில் இவற்றைப்பற்றிய குறிப்புகள் உள்ளன; அதோடு, நமது நாட்டிற்கு வந்த பிற நாட்டவர்கள்கூட இவற்றைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். எனினும், இவற்றில் ஒரு சிலதான் இன்று இருப்பதாக அறியவருகிறோம். பிரிட்டிஷ் தொல்பொருட் காட்சிசாலையில் ஐந்து **மொகரா** நாணயங்கள் இரண்டு இருக்கின்றன. இவ்விரண்டுமே ஆக்ராவில் நாணயச் சாலையில் அச்சிடப்பட்டவை; இவற்றில் ஒன்று அக்பருடையது; பிறிதொன்று ஜஹாங்கீரால் அச்சிடப்பட்டது. மேலும், 200 **மொகரா** நாணயங்களை அச்சிடுவதற்காக ஷாஜஹான் பயன்

படுத்திய வார்ப்பட அச்சு ஒன்றும் பிரிட்டிஷ் தொல்பொருட் காட்சிசாலையில் உள்ளது. ஆனால் அதில் செய்யப்பட்ட நாணயம் கிடையாது. நிற்க, கடந்த நூற்றாண்டில் வாரணசியிலிருந்த ஒரு பணக்காரக் குடும்பத்தில் இவ்வகை நாணயம் இருந்தது. ஆனால் அவர்கள் அதை குவாலியரிலிருந்த சிந்தியா மகாராஜாவிற்கு அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டனர். பனாரஸ் இந்துப் பல்கலைக் கழகத்தின் தொல்பொருட் காட்சிசாலையான பாரத் கலா பவானில் இருபத்தைந்து **மொகரா** நாணயம் செய்வதற்காக ஔரங்கசீப் என்பவர் பயன்படுத்திய ஈயவார்ப்பு ஒன்று இருக்கிறது. மேலும், ஐந்தரைப் பவுண்டு எடையில் ஔரங்கசீப் அச்சிட்ட வெள்ளி நாணயம் ஒன்று டிரெஸ்டனில் இருப்பதாகக் கூறப்படுகிறது. கடைசியாக, பிந்தி ஆட்சி செய்த முகலாய மன்னர்கள் அச்சிட்ட இரண்டு ரூபாய் நாணயங்கள் சில கிடைத்திருக்கின்றன; அதோடு, இரண்டாம் ஷா ஆலம் அச்சிட்ட பத்து ரூபாய் நாணயம் ஒன்றும் கிடைத்துள்ளது.

முகலாயப் பேரரசர்கள் செம்பு நாணயங்களையும் வெளியிட்டிருக்கின்றனர்; ஆனால் இவையனைத்தும் சரிவரச் செய்யப்படாமல் தடித்தடியாயுள்ளன. இவை 320–330 தானியமணி எடையில் ஷெர்ஷா அவர்கள் வெளியிட்ட செம்புக் காசுகளைப் போல் செய்யப்பட்டிருக்கின்றன. ஔரங்கசீபின் ஆட்சிக்காலத்தில் ஐந்தாண்டுகள் வரை இச்செம்பு நாணயங்கள் **தாம்**, அரை தாம், கால் தாம் என்று பல தரங்களில் வெளியிடப்பட்டு வந்தன. ஆனால் அக்பர் ஆண்ட நாற்பத்தைந்தாம் ஆண்டிலிருந்து ஐம்பதாம் ஆண்டு வரை 644 தானியமணி எடை கொண்ட **தங்கா** என்னும் செம்பு நாணயங்களும், அரை, கால் தங்கா செம்பு நாணயங்களும் அவரால் வெளியிடப்பட்டன. அக்பர் வெளியிட்ட **தங்கா** நாணயங்களைக் குறிப்பிட்ட சில நாணயச்சாலைகள் தான் அச்சிட்டன. மேலும், தங்கா நாணயத்தின் அடிப்படையில் தசாம்ச முறையில் அச்சிடப்பட்ட நான்கு தங்கி, இரண்டு தங்கி, ஒரு தங்கி என்னும் புது வகை நாணயங்களையும் அக்பர் அப்போது வெளியிட்டதாகத் தெரிகிறது. ஔரங்கசீப் ஆட்சிக்கு வந்த ஐந்தாம் ஆண்டிலிருந்து செம்பு உலோகத்தின் விலை ஏறியது ; எனவே, அவர் வெளியிட்ட **தாம்களின்** எடையை 220 தானியமணியாகக் குறைத்துவிட்டார்.

எனினும், சிறிது காலம் கழித்து அவரும், முதலாம் ஷா ஆலம், பரூக்ஷியார் ஆகியோரும் வெளியிட்ட கனமான தாம்களும் சில கிடைத்துள்ளன. அக்பரின் செம்பு நாணயங்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன ; ஆனால், அவருக்குப் பிந்திய மன்னர்களின் நாணயங்களோ ஒரு சிலதான் உள்ளன. அக்பரின் செம்பு நாணயங்களின் **தங்கா**வையும் **தங்கி**யையும் தவிர, மற்றவற்றி லெல்லாம் ஊர், பெயர் கிடையாது. இலாஹி வாசகமுள்ள செம்பு நாணயங்களில், அவரது தங்க, வெள்ளி நாணயங்களி லுள்ளதைப் போல், இலாஹி வருடமே பொறிக்கப்பட்டுள்ளது ; இவற்றை அவர் மாதந்தோறும் வெளியிட்டதாகத் தெரிகிறது. அக்பருக்குப்பின் ஆட்சி செய்தவர்களில் ஔரங்கசீபைத் தவிர மற்றவர்களின் நாணயங்களிலெல்லாம் முன்புறம் மன்னரின் பெயரும் ஹிஜ்ரீ ஆண்டும் உள்ளன ; பின்புறம் ஆட்சி செய்த ஆண்டும் நாணயச்சாலையின் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன.

அதிகாரம் 15

இஸ்லாமியர் ஆட்சிக்காலத்திலிருந்த இந்து மன்னர்களின் நாணயங்கள்

இந்தியாவில் இருந்த சுதந்திர அரசுகள், இஸ்லாமியர் ஆட்சி விரிவடைந்து வந்தபோது ஒவ்வொன்ருக மறைந்துவந்தன. எனவே 14, 15, 16 ஆம் நூற்ருண்டுகளில் பிரபலியமான இந்து அரசுகள் என்று ஒன்றும் இந்தியாவில் இல்லாமல் போய்விட்டது. இருப்பினும், சில மூலை முடுக்குகளில் இருந்த சில இந்து மன்னர்கள், தாங்கள் சுதந்திரமானவர்களென்று உரிமை கொண்டாடி வந்தனர் ; அப்போது தம் பெயர்களில் சொந்த நாணயங்களையும் வெளியிட்டனர். ஆனல் அப்போதிருந்த இந்து அரசுகளைப் போல் இந் நாணயங்களின் வரலாறும் தெளிவின்றி, குழப்பமாகவே உள்ளது. என்ருலும், அவ்வரசுகளில் சிலவற்றைப்பற்றிய ஒரு சில விவரங்களை இவ்வதிகாரத்தில் காணலாம்.

கங்ரா

இராவி நதிக்கும் சட்லெஜ் நதிக்கும் இடையேயுள்ள மலைப் பகுதியில் பண்டைக் காலத்திலிருந்தே சிறியதோர் அரசு இருந்து வந்தது. கிருத்துவ சகாப்தத்திற்கு முன்பு அங்கிருந்த இனக்குடியரசு வெளியிட்ட நாணயங்கள் பற்றி முன்னரே குறிப்பிட்டோம். எனினும், இஸ்லாமிய ஆட்சி இந்தியாவில் தோன்றிய பின்னர் தான் அவ்வரசைப்பற்றிய சில விவரங்கள் கிடைத்துள்ளன. கங்ராவை ஆண்டு வந்த மன்னர்கள் அவ்வப்போது இஸ்லாமிய ஆதிக்கத்திற்கு அடி பணிந்து வந்தனர் ; ஆனல், அதே சமயம், சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் தங்களின் அரசைச் சுதந்திரமானதாக ஆக்கினர். அப்போது, இம்மன்னர்கள் நாணயங்களை

வெளியிடலாயினர். அவ்வாறு வெளியிட்ட நாணயங்களில் முதன் முதலில் சாமந்த தேவரின் நாணயங்களைப் போல் ஒருபுறம் காளைச் சின்னத்தையும், மறுபுறம் குதிரைவீரன் சின்னத்தையும் பொறித்து வந்தனர். ஆனால், கி.பி. 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து அவ்வரசை ஆண்ட மன்னர்கள் தம் பெயர்களையும் பொறித்து, செம்பு நாணயங்களை வெளியிட்டு வந்தனர். அவ்வாறு, குதிரை வீரனின் சின்னமும் காளையின் சின்னமும் கொண்ட நாணயங்களில் பிதாம சந்திரன் (கி.பி. 1330) என்ற பெயருள்ள நாணயம் கிடைத்துள்ளது, இதில் **ஸ்ரீ பிதாம சந்திர** என்ற அவரது பெயர் காளைச் சின்னமுள்ள புறத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது. அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த அபூர்வ சந்திரன் (கி.பி. 1335) என்பவரும் காளைச் சின்னமுள்ள புறத்தில் **ஸ்ரீ அபூர்வ சந்திரன்** என்ற தன் பெயரைப் பொறித்துள்ளார். சில நாட்களுக்குப்பின் அவர் வெளியிட்ட நாணயங்களில் பின் பக்கத்தில் காளைச் சின்னம் பொறிப்பதற்குப் பதிலாக, **மகா ராஜ ஸ்ரீ அபூர்வ சந்திர தேவர்** என்ற வாசகத்தை மட்டும் பெரிதாகப் பொறிக்கலானார். அப்போதிருந்து, கி.பி. 17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அந்த வமிசத்தினர் மறையும்வரை எல்லா மன்னர்களும் இவ்வகை வாசகத்தையே பொறித்து நாணயங்களை வெளியிட்டதாக அறிய வருகிறோம். இருந்தபோதிலும், நாளடைவில் வெளியிடப்பட்ட நாணயங்களில் குதிரை வீரனின் சின்னம் சரிவரப் பொறிக்கப் படாமல் வந்ததால், அச்சின்னம் இருப்பதே சில நாணயங்களில் தெரியவில்லை. இவ்வகைச் சின்னமுள்ள நாணயங்களைக் கங்ரா அரசுமட்டுமன்றி, அதற்கருகில் இருந்த குளர் என்னும் அரசும் வெளியிட்டு வந்திருக்கிறது; ஆனால் இவற்றைப்பற்றிய விவரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

மேவார்

ராஜஸ்தானில் மேவார் என்னும் அரசு பண்டைக்காலத்திலிருந்தே நாணயங்களை வெளியிட்டு வந்ததாகத் தெரிகிறது. ஒரு வேளை அந்நாணயங்களெல்லாம் இந்தோ-சாசனீட்டு நாணயங்

களைப் போலவும் கதைய்ய நாணயங்களைப் போலவும் இருந்திருக்கலாம். கி.பி. 15ஆம் நூற்றாண்டிற்குப்பின் மேவாரின் மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள்தான் கிடைத்துள்ளன. இந்நாணயங்கள் அனைத்தும் செம்பில் செய்யப்பட்டிருக்கின்றன. இராணா கும்பர் (கி.பி. 1433–1468) என்பவர்தான் இவற்றை முதன் முதலில் வெளியிட்டவரென்று அறியவருகிறோம். இந்நாணயங்கள் அனைத்தும் சதுர வடிவத்தில்தான் செய்யப்பட்டிருக்கின்றன; இவற்றில் நாகரி வாசகமுள்ளது. இவற்றில் பெரிய நாணயங்களென்றும் சிறிய நாணயங்களென்றும் பல்வேறு தரங்கள் உள்ளன. பெரிய நாணயங்களில் ஒருபுறம், **ஸ்ரீ கும்பலமேரு மகாராணா ஸ்ரீ கும்பகர்ணஸ்ய** என்ற நாகரி வாசகமுள்ளது; மறுபுறத்தில் **ஸ்ரீ ஏகலிங்க பிரசாதாத்** (ஏகலிங்க கடவுளின் ஆசியுடன்) என்னும் நாகரி வாசகமும், விக்கிரம சகாப்தத்தின் வருடமும் பொறிக்கப்பட்டுள்ளன. சிறிய நாணயங்களில் ஒருபுறம், **ஸ்ரீ கும்பலமேரு** அல்லது **கும்பகர்ணன்** என்ற வாசகமும், மறுபுறம், **கும்பகர்ணன்** அல்லது **ஏகலிங்கர்** என்ற வாசகமும் உள்ளன. அடுத்து, இராணா சங்கா அல்லது சங்கராம சிங் (கி.பி. 1509–1527) என்பவர் வெளியிட்ட நாணயங்களும் கிடைத்துள்ளன. இந்நாணயங்கள் மாளவத்திலிருந்த சுல்தான் நாணயங்களைப் போல் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஒரு புறம், **சுல்தான் பின் சுல்தான்** என்ற பாரசீக வாசகமுள்ளது; மறுபுறத்தில் **இராணா சங்கராம சிங்** என்ற அவரது பெயரும் வருடமும் நாகரியில் பொறிக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற நாணயங்களை, அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த ரதன் சிங் (கி.பி. 1527–1532), விக்ரமாதித்யர் (கி.பி. 1532–1535), வனவீரர் (கி.பி. 1536-1541) ஆகிய மூவரும்கூட வெளியிட்டிருக்கின்றனர். வனவீரரின் ஆட்சிக்குப்பின், மேவாரில் குழப்பம் ஏற்பட்டுவிட்டதால், அவருக்குப் பின் ஆட்சி செய்த எவருமே நாணயங்களை வெளியிட்டதாக தெரியவில்லை.

மத்திய இந்தியா

15 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 16ஆம் நூற்றாண்டு

முடியும் வரை கோண்டு எனப்பட்ட வமிசத்தினர் அமரக்கண்டக்கைத் தலைநகராகக் கொண்ட அரசை ஆட்சி செய்து வந்தனர். அவர்களின் அரசு கோசலத்தின் ஒரு பகுதிவரையிலும், அகாரம் (போபாலைச் சுற்றியுள்ள பகுதி) வரையிலும் விரிவடைந்திருந்தது. வீர ராணியார் என்று புகழ்பெற்ற ராணி துர்க்காவதி இவ்வம்சத்தில் பிறந்தவர். கி.பி. 1564-ல் தனது அரசின்மீது படையெடுத்து வந்த முகலாய ஆளுநரான அஸப் கான் என்பவரை வீர ஆவேசத்துடன் எதிர்த்துப் போரிட்டவள் ராணி துர்க்காவதி. அவளது மாமனாரான சங்கராம் ஷா என்பவர் 167 தானியமணி எடையில் வெளியிட்ட தங்க நாணயங்கள் சில கிடைத்துள்ளன. இவற்றில் முன்புறம், சதுரவடிவத்திற்குள் பொறிக்கப்பட்டுள்ள தலை முடியுள்ள சிங்கம் உள்ளது; ஓரங்களில் **புலஸ்த வம்ச ஸ்ரீ சங்கராம சாஹி சம்வத்** என்ற நாகரி வாசகமும், அதையடுத்து எண்களில் பொறிக்கப்பட்ட வருடமும் உள்ளன. பின்புறத்தில், முன்புறமுள்ள வாசகம் மட்டும் நாகரியிலும் தெலுங்கிலும் இருக்கின்றது.

மிதிலை

துக்ளக் வமிசத்தினரின் காலத்தில் ஆய்ன்வாரா என்ற வமிசத்தினர் தமது அரசொன்றை மிதிலையில் (பீஹாரின் வட பகுதி) தோற்றுவித்தனர். இவ்வமிசத்தைச் சேர்ந்த ஏழாவது மன்னரான சிவசிங் (கி.பி. 1410–1414) என்பவர் 14 தானியமணி எடையில் சிறிய தங்க நாணயங்கள் வெளியிட்டிருக்கிறார். இவற்றில் முன்புறம் **ஸ்ரீ** என்ற சொல்லும், பின்புறம் **சிவஸ்யா** என்ற வாசகமும் உள்ளன. மற்றொரு மன்னரான பைரவ சிம்மன் (கி.பி. 1474) என்பவர் 162 தானியமணி எடையில் வெளியிட்ட வெள்ளி நாணயங்கள் சிலவும் கிடைத்துள்ளன. இவற்றில் **மகாராஜ ஸ்ரீ தர்ப்ப நாராயண–அத்மஜ திரிபுக்திராஜ ஸ்ரீ பைரவசிம்மஸ்ய** என்ற நீண்ட வாசகம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, முன்புறத்தில் நடுவில் ஒரு பகுதியும், பின்புற நடுவில் மற்றொரு பகுதியும் சதுரமான வடிவத்திற்குள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. மேலும், ஒருபுறத்தில் நான்கு மூலைகளிலும் அவரது

ஆட்சி வருடமும், அதே போல் மறுபுறமுள்ள நான்கு மூலைகளில் சக சகாப்தத்தின் வருடமும் பொறிக்கப்பட்டுள்ளன.

மிதிலையில் ஆய்ன்வாரா வமிசத்தின் அரசு இருந்தபோது, நேபாளத்திலுள்ள கண்டக் நதியின் இருபுறங்களிலும் பரந்திருந்த அரசொன்றை மற்றொரு வமிசத்தினர் ஆண்டு வந்தனர். அந்த அரசு, ஒரு வேளை கோரக்பூர், சம்பரான் ஆகிய மாவட்டங்களின் பகுதிகளைக் கொண்டதாக இருந்திருக்கலாம். இவ் வமிசத்தைச் சேர்ந்த மன்னர்களில் மதன் சிம்ம தேவர் என்பவர் ஒருவர். இவரது நாணயங்கள் எதுவென்று தெரியவில்லை. ஒருவேளை, முன்புறத்தில் **கோவிந்த-சரண-பிரணவ-மதன** என்ற நாகரி வாசகமும், பின்புறத்தில் **ஸ்ரீ சம்பகாரண்யஸ்ய** என்ற வாசகமும் பொறிக்கப்பட்டுள்ள நாணயங்களை இவரே வெளியிட்டிருக்கலாம்.

அஸ்ஸாம்

பழங்காலத்திலிருந்தே அஸ்ஸாம் வரலாற்றுப் பெருமையுடையதாக இருந்துவந்திருக்கிறது. அப்படியிருந்தும், கி.பி. 1460 வரை அங்கு நாணயங்களே வெளியிடப்படவில்லை. கி.பி. 1467-ல் தான் முதன்முதலாக நாணயங்கள் வெளியிடப்பட்டன. இவற்றை இரத்னமாணிக்யர் திரிபுராவிலிருந்து வெளியிட்டிருக்கிறார். அன்றையிலிருந்து கி. பி. 19ஆம் நூற்றாண்டு முடியும் வரை அங்கு நாணயங்கள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டிருக்கின்றன. இந் நாணயங்கள் அனைத்தும் வட்டவடிவமானவை ; அஸ்ஸாமிய வாசகம் கொண்டவை. இரத்னமாணிக்யர் முதன்முதலில் வெளியிட்ட நாணயங்களில் இருபுறத்திலும் வாசகங்கள் இருக்கின்றன. ஆனால் சிறிது காலத்திற்குப் பின் அவர் வெளியிட்ட நாணயங்களில் பின்புறம் வாசகம் கிடையாது ; அதற்குப் பதிலாக விசித்திரமான சிங்கம் ஒன்று உள்ளது. அவருக்குப்பின் ஆட்சி செய்த தான்யமாணிக்யரும் (கி. பி. 1490) இச்சின்னத்தையே பயன்படுத்தியிருக்கிறார். ஆனால், விஜய மாணிக்யர் காலத்திலிருந்து சிறிது காலம் வரை,

பின்புறம் பொறிக்கப்பட்டு வந்த சிங்கத்தோடு திரிசூலமும் பொறிக்கப்பட்டிருக்கிறது. விஜயமாணிக்யர் இலக்ஷ்ய நதியில் தீர்த்தமாடிய சடங்கின் நினைவாக வெளியிட்ட சில நாணயங்களில் அர்த்தநாரீஸ்வரரின் உருவத்தைப் பொறித்திருக்கிறார். இந் நாணயங்களில் பத்துக் கரங்களுடன் துர்க்கை சிங்கத்தின்மீது அமர்ந்திருக்கும் உருவத்தில் ஒரு பாதியையும், நான்கு கரங்களுடன் சிவன் காளைமீது அமர்ந்துள்ள உருவத்தில் மறு பாதியையும் சேர்த்து அர்த்தநாரீஸ்வரரின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. யசோதரமாணிக்யர் தனது நாணயங்களில் கிருஷ்ணன் புல்லாங்குழல் வாசிப்பது போன்றும், அவருக்கு இரு புறத்திலும் இரு கோபிகைகள் மயங்கி நிற்பது போலவும் உள்ள சின்னத்தை ஒரு புறத்திலுள்ள மேற்பகுதியிலும், சிங்கமும் திரிசூலமும் உள்ள சின்னத்தைக் கீழ்ப்பகுதியிலும் பொறித்திருக்கிறார். மறுபுறத்தில் அவரது பெயரை மட்டும் அச்சிட்டிருக்கிறார். ஒரு சில மன்னர்கள் தமது சமயப்பற்றுதலைப் பிரதிபலிக்கும் வகையிலுள்ள வாசகங்களைப் பொறித்திருக்கின்றனர். சான்றாக, முதல் மன்னரான இரத்னமாணிக்யர், **நாராயண-சரண-பரா;** இரண்டாம் இரத்தினமாணிக்யர், **சிவ-காளிகா-பாத-பத்ம மது** என்ற வாசகங்களைப் பொறித்துள்ளார். மற்றும் சிலர் **சிவ-துர்க்க பாத** என்ற வாசகத்தையும், வேறு சிலர் **இராதா-கிருஷ்ணபாத** என்ற வாசகத்தையும் பயன்படுத்தியுள்ளனர். இந் நாணயங்களில் மற்றுமொரு சிறப்பான அம்சமும் உள்ளது ; அதாவது, அக்காலத்தில் அஸ்ஸாமை ஆண்ட பத்தொன்பது மன்னர்களில் பதினொருபேர் தங்களது ராணிகளின் பெயர்களையும் சில நாணயங்களில் பொறித்துள்ளனர்.

அஸ்ஸாமில் அஹோம் வமிசத்தினர், கூச் இனத்தவர், கச்சாரி வமிசத்தவர், ஜெயந்திய இனத்தவர் என்று நான்கு வமிசத்தினர் நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர். இந்நான்கு இனத்தவரும் நெருங்கிய உறவினர்கள் ஆவர். இவர்களில் அஹோம் இனத்தவர் தங்களது சொந்த இடங்களான ஷான் எனப்படும் நாட்டுப்புறங்களிலிருந்து கி.பி. 1228-ல் பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கின்மீது படையெடுத்து அங்கேயே குடியமர்ந்தனர். பின்னர் கி.பி. 1544-ல் அவர்கள் நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டதன்

மூலமாக அப் பள்ளத்தாக்கின் மேல்பகுதிக்கு ஆட்சியாளர்களாயினர். அவர்களில் சுக்–லெங்–மங் என்ற மன்னர்தான் தன் பெயரில் முதன்முதலாக நாணயங்களை வெளியிட்டவர். இவரது நாணயங்களின் அமைப்பு, வாசகம், மொழி ஆகியவற்றையும், இவற்றிலுள்ள சகாப்த வருடத்தையும் பார்க்கும்போது, இவை உண்மையில் ஈடு இணையற்றவையாயும், சுயமானதாயும் தோன்றுகின்றன. இவற்றின் எடை மட்டும்தான் வங்காளச் சுல்தான்கள் வெளியிட்ட வெள்ளி **தங்கா**வைப் பின்பற்றி நிர்ணயிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இவரது நாணயங்கள் எண் கோண வடிவத்தில் செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, எட்டுப்புறச் சாயலைக் கொண்டதுதான் காமரூபம் என்று வர்ணிக்கும் **யோகினித் தந்திரத்து** விளக்கத்திற்கேற்ப இந் நாணயங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சிலர் கூறுவர். அவருக்குப்பின் ஆட்சி செய்த அஹோம் வமிசத்து மன்னர்களும் இதே மாதிரி நாணயங்களையே வெளியிட்டனர். எனினும், சுக்–லெங்–மங் வெளியிட்ட நாணயங்களிலுள்ள அஹோம் மொழிக்கும் வாசகத்திற்கும் பதிலாக, சமஸ்கிருத மொழியையும் அஸ்ஸாமிய வாசகத்தையும் இவர்கள் பயன்படுத்தியிருப்பதோடு, சக வருடத்தையும் பொறித்துள்ளனர்; ஏதாவதொரு சடங்கின் நினைவாக வெளியிட்ட நாணயங்களில் மட்டும்தான் அஹோமிய மொழியையும் வாசகத்தையும் பயன்படுத்தியிருக்கின்றனர். எது எவ்வாறிருப்பினும், இவ் வமிசத்தினர் கி.பி. 1695-க்கு முன்னரே இந்து மதத்தில் பற்றுள்ளவர்களாக மாறிவிட்டனர் என்பது மட்டும் உறுதி. எப்படியெனில், 1695-க்கு முன்பு வெளியிட்ட நாணயங்களெல்லாம் லெங்குன், தாரா, பெடுசெங் போன்ற அவர்களது குலதெய்வங்களின் வழிபாடுகளையே பொறித்து வந்தனர். ஆனால், சக வருடம் 1618-ல் (கி.பி. 1696) உருத்திரசிம்மன் என்பவர் அச்சிட்ட நாணயங்களின் பின்புறத்தில் **ஸ்ரீ ஹர-கௌரீ-பத்மதுகரஸ்ய** என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. அவருக்குப்பின் வெளியிடப்பட்ட நாணயங்களிலும் இவ் வாசகம்தான் உள்ளது. இதுபோன்ற வாசகமுள்ள நாணயங்கள் சிலவற்றில், சிவசிம்மர் எனப்பட்ட மன்னரின் (கி.பி. 1714–1744) ராணிகளான புலேஸ்வரி

(பரமார்த்தேஸ்வரி என்றும் பெயர் பெற்றவர்), அம்பிகா தேவி, சரஸ்வதி ஆகிய மூவரின் பெயர்களும் உள்ளன. சிவசிம்மரின் ஆட்சி வெகுகாலத்திற்கு நீடிக்காது என்று கூறிய சோதிடனின் கூற்றைப் பொய்யாக்குவதற்கென்று தனது ராணிகளின் பெயர்களையும் அவர் பொறித்ததாகக் கூறுவர். சிவசிம்மர் தனது மனைவிகளை ஒவ்வொருவராகப் பட்டத்து ராணிகளாக்கி, அவர்களுக்கு நாணயங்களை வெளியிடும் உரிமையிலிருந்து எல்லா அரசுரிமைகளையும் கொடுத்ததாகத் தெரிகிறது. சிவசிம்மரும் அவரது மனைவி பரமார்த்தேஸ்வரியும் சேர்ந்து சதுர வடிவில் சில அபூர்வமான நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர். இவற்றில் முகலாயப் பேரரசர்களைப்போல் பாரசீக வாசகத்தையும் ஈரடிச் செய்யுள்நடை வாசகத்தையும் பொறித்திருக்கின்றனர். இவ் வமிசத்தைச் சேர்ந்த பிற்கால மன்னரான இராஜேஸ்வர சிம்மர் என்பவரும் தனது நாணயங்களில் பாரசீக வாசகத்தையே பொறித்திருக்கிறார். அஹோம் வமிசத்தினர் கி.பி. 1821 வரை தொடர்ச்சியாக நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர்.

கூச் வமிசத்து மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில், நரநாராயணர் கி.பி. 1555-ல் (சக ஆண்டு 1477) வெளியிட்ட நாணயங்கள்தான் முந்தியவை. கூச் அரசு, கம்தாபூர் என்ற இராச்சியம் மறைந்தபின், அதே இடத்தில் தோன்றிய அரசாகும்; இதை நரநாராயணரின் தந்தைதான் தோற்றுவித்தார். நரநாராயணர் இறந்தபின், அவரது அரசின் மேற்குப் பகுதியை அவரது மகனை லட்சுமி நாராயணரும், கீழ்ப்பகுதியை அவரது சகோதரரின் குமாரரான ரகு தேவரும் பங்கு போட்டுப் பிரித்துக்கொண்டனர். இவ்விருவரும் தத்தம் பெயர்களில் நாணயங்களை வெளியிட்டு வந்தனர். ஆனால், ரகு தேவரின் இராச்சியம் சிறிது காலத்திற்குப் பின் அஹோமிய அரசோடு இணைந்துவிட்டது; அவ்வாறு இணையுமுன்பு, ரகு தேவரும் அவரது குமாரரான பரீக்ஷிதாவும் மட்டும்தான் நாணயங்களை வெளியிட்டதாகத் தெரிகிறது; ஆனால் அவர்களின் நாணயங்கள் கிடைப்பது மிகக்கடினம். நிற்க, லட்சுமி நாராயணரின் இராச்சியம் முகலாயப் பேரரசிற்குக் கப்பம் கட்டவேண்டியதாக

மாறி விட்டது; எனவே, அந்த இராச்சியம் நாராயண ரூபாய்கள் எனப்பட்ட நாணயங்களில் அரை நாணயங்களை மட்டுமே வெளியிட்டு வந்தது. எனினும், பிராணநாராயணர் என்பவர் முழு நாணயங்களையும் வெளியிட்டிருக்கிறார். இவற்றில் அவர் அரியணை அமர்ந்த ஆண்டு உள்ளது. அதோடு, இவற்றில் இரு புறங்களிலும் வாசகங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன; ஒரு புறத்தில் **ஸ்ரீ ஸ்ரீசிவ-சரண-கமல-மதுகரஸ்ய** என்ற வாசகமும், மறு புறத்தில் **ஸ்ரீ-ஸ்ரீமன்-நரநாராயண பூபாலஸ்ய சகே** என்ற வாசகத்தோடு வருடமும் இருக்கின்றன. அவருக்குப்பின் ஆட்சி செய்தோர்கூட இவ் வாசகங்களையே தத்தம் பெயர்களோடு பயன்படுத்தி வந்தனர். எனினும், சில நாணயங்களில் **சிவ** என்ற சொல்லிற்குப் பதிலாக **ஹர-கௌரி** என்ற வாசகம் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இச் சந்தர்ப்பத்தில் சுவையானதொரு நிகழ்ச்சியைக் குறிப்பிட வேண்டும். அதாவது, கி. பி. 1661-ல் மீர் ஜும்லா என்பவர் கூச்-பீஹாரைக் கைப்பற்றி, அதற்கு ஆலம் கீர்பூர் என்ற பெயரைக் கொடுத்தார்; அதே சமயத்தில் ஔரங்கசீபின் பெயரில் அவர் நாணயங்களை வெளியிட்டார்; ஆனால், விசித்திரமான முறையில் இந் நாணயங்களில் பாரசீக வாசகத்திற்குப் பதிலாக, கூச் மன்னரின் நாராயண ரூபாய்களைப் போல் அஸ்ஸாமிய வாசகத்தை மட்டும் பொறித்திருக்கிறார்.

பிரம்மபுத்திராப் பள்ளத்தாக்கின் மையப்பகுதியில் ஆட்சி செய்துவந்த கச்சாரி வமிசத்தினர் கி.பி. 1736 வரை வலிமை மிக்கவர்களாயிருந்தனர்; ஆனால், அந்த ஆண்டில் அவர்களின் தலைநகரை அஹோம் வமிசத்தினர் கைப்பற்றிக்கொண்டனர். அதன் பிறகு, கச்சார் குன்றுகளின் வடபுறத்தில் புதியதொரு தலைநகரை ஏற்படுத்தி, ஓரளவு சுதந்திரமாக ஆட்சி செய்ய லாயினர். அவர்கள் வெளியிட்ட நாணயங்களில் கூச் வமிசத்தினர் பயன்படுத்தியதைப் போன்ற வாசகங்கள்தான் பொறிக்கப் பட்டிருக்கின்றன. அதாவது, முன்புறத்தில் அவர்களது தெய்வ வழிபாட்டு வாசகமும், பின்புறத்தில் அம் மன்னர்களின் பெயர்களோடு வருடமும் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

ஜெயந்திய வமிசத்து மன்னர்கள் ஜெயந்திய மலைப் பகுதிகளையும், அவற்றிற்கருகில் சூர்மா பள்ளத்தாக்கிலுள்ள ஜெயந்திய

பர்காணுப் பகுதிகளையும் சேர்த்து ஆண்டு வந்தனர், அவர்களின் நாணயங்களில் சக வருடம் 1591-லிருந்து (கி.பி. 1669) வெளியிடப்பட்ட நாணயங்கள்தான் கிடைத்துள்ளன ; அதற்கு முன்பு அவர்கள் நாணயங்களை வெளியிட்டனராவென்று தெரியவில்லை. எனினும், ஜெயந்தி மன்னர்கள் அனைவரும் தாங்கள் அரியணை ஏறிய ஆண்டுகளில் மட்டுமே நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர். இவற்றில் ஒருபுறம், பெரும்பாலும் தெய்வ வழிபாட்டு வாசகம்தான் உள்ளது ; அதுகூட ஒரே மாதிரியாக இல்லை. மறுபுறத்தில் **ஸ்ரீ ஸ்ரீ ஜெயந்தபுர-புரேந்தரஸ்ய** என்ற வாசகத்தோடு, சக வருடமும் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரு சில நாணயங்களில் மட்டும் மன்னரின் பெயரையும் காணலாம்.

அதிகாரம் 16

முகலாயர்களுக்குப்பின் ஆட்சி செய்தவர்கள்

ஔரங்கசீபின் ஆட்சிக்குப்பின், முகலாயப் பேரரசு சிதைவுற்று அழியத் தொடங்கியது. அச்சமயத்தில் மூன்றுவகையான ஆட்சி ஏற்பட்டதும், அப் பேரரசே அடியோடு மறைந்தது. இம் மூன்று வகையான ஆட்சிகளுள் முதல்வகை ஆட்சி : முகலாயப் பேரரசின் உயர் அதிகாரிகளாக இருந்து வந்தவர்கள், அப் பேரரசின் திறமை குன்றிவந்ததைக் கண்டு, தாமாகவே ஆட்சிப் பொறுப்பை ஏற்று, சுதந்திர மன்னர்களாயினர். இரண்டாவது வகையான ஆட்சி சமஸ்தான ஆட்சியாகும். முகலாய நிர்வாகத்தோடு தொடர்பின்றி இருந்துவந்த சமஸ்தான அதிபர்கள் சிலர், திறமையற்ற டில்லி சுல்தான்களின் காலத்தில் அடிக்கடி தமது சொந்த அரசாங்க உரிமையை வலியுறுத்தி வந்தனர்; இறுதியில் சமஸ்தான ஆட்சியை ஏற்படுத்திவிட்டனர். மூன்ருவது வகை ஆட்சியை ஐரோப்பிய வர்த்தகக் கம்பெனிகள் மேற்கொண்டன. வளமிக்க நாட்டில் வாணிகம் செய்வதற்காக வந்த ஐரோப்பிய வர்த்தகக் கம்பெனிகள், இந்தியாவில் ஏற்பட்ட பூசல்களையும் குழப்பங்களையும் சாதகமாக்கிக்கொண்டு, பல்வேறு பகுதிகளைப் படிப்படியாகக் கைப்பற்றி, நாளடைவில் ஆட்சிப் பொறுப்பையும் மேற்கொண்டன.

இம் மூன்றில் முதல் வகை ஆட்சியாளர்கள், முகலாயப் பேரரசின் ஆதிக்கம் மிக மோசமான நிலையை அடைந்த காலத்தில் கூட அப் பேரரசினைக் கௌரவிக்கும் வகையிலேயே தம் நாணயங்களை வெளியிட்டனர். பேரரசின் நாணயங்களைப் போலவே தம் நாணயங்களையும் அச்சிட்டனர். தோற்றத்திலும் எடையிலும் மட்டுமன்றி, வாசகத்திலும் பேரரசின் நாணயங்களையே பின்பற்றினர். அவற்றில் தம் பெயர்களைப் பொறிக்

காமல் இஸ்லாமிய வாசகங்களைப் பொறித்தனர். சின்னங்கள், நாணயச்சாலைகளின் பெயர்கள், சுருக்கெழுத்துக்கள் ஆகியவை மட்டும்தான் வேருக இருந்தன. இருந்தபோதிலும், இவை தனிவகை நாணயங்களாக இல்லாமல் முகலாயப் பேரரசின் நாணயங்களைப் போலவே இருந்து வந்தன. ஆனால் நாளடைவில் மாற்றுக்குறைந்த நாணயங்களாக வெளியிடப்பட்டிருப்பதைக் கொண்டு, இவை முகலாய நாணயங்களல்ல என்று கூறிவிடலாம்.

மராட்டியர்கள்

முகலாயர்களுக்குப்பின், முதன்முதலில் ஆட்சிக்கு வந்தவர்கள் மராட்டியர்கள்தான். கி.பி. 17ஆம் நூற்றுண்டில் சிவாஜி என்பவர்தான் தமது திறமையினுலும் சூழ்ச்சியினுலும் மராட்டிய அரசைத் தோற்றுவித்தவர். கோல்கொண்டா அரசில் சாதாரணச் சிப்பாயாகப் பணிபுரிந்து வந்த அவர், கொங்கணிப் பகுதியில் வலுமிக்க மராட்டிய அரசைத் தோற்றுவிக்கும் அளவுக்கு வலிமை மிக்கவராய் உயர்ந்தார். சிவாஜியின் வலிமையையும் திறமையையும் கண்ட பேரரசர் ஔரங்கசீப் கதிகலங்கினுர். இந்த அளவுக்கு சிவாஜியின் மராட்டிய அரசு வடக்கே உருவாக்கப் பட்ட சமயத்தில், அவரது சகோதரரான வெங்காஜி அல்லது எக்கோஜி என்பவர் தென்னிந்தியாவிலுள்ள தஞ்சாவூரில் தனது அரசை உருவாக்கினுர்; அவ்வாறு தஞ்சையில் உருவாகிய ஏக்கோஜி வமிசத்தினரின் அரசு கி.பி. 19ஆம் நூற்றுண்டின் நடுப்பகுதிவரை நிலைத்து வந்தது; ஆனுல் வடக்கே சிவாஜியால் உருவாக்கப்பட்ட மராட்டிய அரசோ, சிறிது காலத்திற்குப் பின்னர் பீஷ்வாக்களின் கைக்கு மாறிவிட்டது.

சிவாஜியும் அவரது பின்தோன்றல்களும் மட்டுமன்றி, தென்னிந்திய மராட்டிய வம்சத்தினரும்கூடத் தங்கத்திலும் செம்பிலும்தான் தம் நாணயங்களை வெளியிட்டனர். தங்கத்தில் **பக்கோடா** போன்ற நாணயங்களை இவ்விரு அரசுகளும் அச்சிட்டன. இத் தங்க நாணயங்களில் சிவாஜி வெளியிட்ட வற்றில் ஒருபுறம் **சத்திரபதி** என்ற வாசகமும், மறுபுறம்

ஸ்ரீ இராஜசிவா என்ற வாசகமும் நாகரியில் பொறிக்கப்பட்டுள்ளன. தென்னிந்திய மராட்டியப் **பக்கோடாக்கள்** சிலவற்றில் சிவனது உருவம் உள்ளது ; மறுபுறம் வாசகமேயின்றிச் சொரசொரப்பாக இருக்கிறது. ஆனால் இத் தங்க நாணயங்கள் கிடைப்பது அரிது. செம்பு நாணயங்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. சிவாஜியின் செம்பு நாணயங்களில் தங்க நாணயங்களிலுள்ள அதே வாசகம் தான் உள்ளது. மற்றவர்கள் வெளியிட்ட செம்பு நாணயங்களில் ஒரு புறத்தில் **சத்திரபதி** என்ற வாசகமும், மறுபுறத்தில் **ஸ்ரீ இராஜ ஷாஹு** அல்லது **ஸ்ரீ சரபராஜா** என்ற பெயரும் அச்சிடப் பட்டுள்ளன.

மராட்டிய அரசு பீஷ்வாக்களின் வசமாகியபின், அவர்களது அரசு விரிவடைந்து வந்தது. அப்போது அவர்கள் வெளியிட்ட நாணயங்களெல்லாம் முகலாய நாணயங்களைப்போல் செய்யப் பட்டு, முகலாய மன்னர்களின் பெயர்களில் அச்சிடப்பட்டன. அவற்றில் தமது பெயர்களைப் பொறிக்காமல், தம் சின்னங்களை மட்டுமே முத்திரையிட்டு, வெளியிட்டு வந்தனர். பீஷ்வாக்கள் வெளியிட்ட இவ்வகை நாணயங்கள் பூனாவிலுள்ள முஹியாபாத் தில் அச்சிடப்பட்டவைதான் என்று தெரிகிறது ; ஆனால் மராட்டியர்கள் நாணயங்களோ பல்வேறு நாணயச்சாலைகளில் அச்சிடப்பட்டன. பீஷ்வாக்கள் செம்பு நாணயங்களையும் வெளி யிட்டுவந்தனர் ; ஆனால் அவற்றைப்பற்றி எவருமே ஆராயவில்லை யாதலால், அதிகமாக விவரம் ஒன்றும் கிடைக்கவில்லை. இருப்பினும், அவர்கள் சால்செட் எனப்படும் நாணயச்சாலையி லிருந்து வெளியிட்ட நாணயங்கள் சிலவற்றில் ஒரு புறம் **சஷ்தி** என்ற நாணயச்சாலையின் பெயரும், மறுபுறம் ஹிஜ்ரீ ஆண்டும் முத்திரையிடப்பட்டுள்ளன. இவற்றில் நாகரி வாசகம் மட்டுமே பயன் படுத்தப்பட்டுள்ளது.

துரானியர்கள்

முகலாயப் பேரரசு வீழ்ச்சியடைந்து வந்தபோது, வடமேற்கு எல்லைப்பகுதிகளில் சரியான பாதுகாப்பு இல்லாமலிருந்தது ;

எனவே, கி.பி. 1739-ல் நாதீர் ஷா என்பவரின் தலைமையில் பாரசீகப் படையினர் இந்தியாவிற்குள் புகுந்து, டில்லியை அடைந்து, அங்கிருந்த முகலாயப் பேரரசரைக் கைது செய்தனர். அப்போது, பாரசீகப் படையினர் பல இந்திய மக்களைக் கொன்று குவித்ததோடு, டில்லியிலும் கிராமப்புறங்களிலும் கொள்ளையடித்தனர். அவ்வாறு படையெடுத்த ஏராளமான செல்வத்துடன் நாதீர் ஷா டில்லியை விட்டுப் புறப்பட்டு, தம் சொந்த நாட்டிற்குத் திரும்பினர். அவ்வாறு படையெடுத்துவந்த பாரசீகர்கள் சிந்துவிற்கப்பாலுள்ள சிந்துப்பகுதி, காபூல், பஞ்சாபின் மேற்குப்பகுதி ஆகியவற்றையெல்லாம் கைப்பற்றினர். எனவே, இப்பகுதிகளில் பாரசீகப்பாணியில் அச்சிடப்பட்ட நாணயங்களை நாதீர் ஷா தன் பெயரில் வெளியிட்டார். அவர் டில்லியில் செய்த அட்டூழியங்களால் மக்கள் மட்டுமன்றி, முகலாய ஆளுநர்கள்கூட பீதியடைந்திருந்தனர். வெகு தொலைவிலிருந்த பகுதிகளுக்கெல்லாம், நாதீர் ஷா படையெடுத்துச் செல்லவில்லை யெனினும், அப் பகுதிகளின் ஆளுநர்கள்கூட பீதியடைந்து அவரது பெயரிலேயே நாணயங்களை வெளியிடத் தொடங்கினர். அவ்வாறு அவரது பெயரில் வெளியிடப்பட்ட நாணயங்களில் அஹமதாபாத்திலிருந்தும் சஹரான்பூரிலிருந்தும் வெளியான நாணயங்களை மட்டும் இங்குக் குறிப்பிடலாம்.

கி.பி. 1747-ல் நாதீர் ஷா கொல்லப்பட்டார். அதன்பின்னர், அவரது அதிகாரியாக இருந்துவந்த அஹமது ஷா என்பவர், தனக்குத் தானே **துர்–இ–துர்ரான்** (இக்காலத்திற்கெனக் கிடைத்துள்ள முத்து) என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டு ஆப்கானிஸ்தானத்தின் மன்னரானுர்; இதனுல் அவருக்குப்பின் ஆட்சி செய்தோர் துரானியர்கள் என்று அழைக்கப்பட்டனர். அஹமது ஷா ஆப்கானிஸ்தான மன்னரானபின், கி.பி. 1748 முதல் 1767 வரை இந்தியாமீது பலமுறை படையெடுத்துவந்து, பஞ்சாப், காஷ்மீர், சிந்து, சர்ஹிந் ஆகிய பகுதிகளையெல்லாம் வென்று, தனது ஆப்கானிஸ்தான அரசுடன் இணைத்துக்கொண்டார். இப்பகுதிகளைக் கி.பி. 18ஆம் நூற்றுண்டின் இறுதிவரை துரானிய மன்னர்களே லாகூரிலிருந்து ஆட்சிசெய்து வந்தனர். எனினும் அவர்களது அரசுரிமைக்குப் பலமான எதிர்ப்புகளும் இருந்து வந்தன.

துராணியர்கள் வெளியிட்ட நாணயங்களில் பெரும்பாலும் **ரிகாப்** (குதிரை ஜேணக் கால்மிதி) என்ற பெயர்தான் நாணயச்சாலையின் பெயராக முத்திரையிடப்பட்டுள்ளது. இதிலிருந்து, அவர்கள் குதிரைச் சவாரி செய்து படையெடுத்துச் சென்றபோதுதான் இந் நாணயங்களை வெளியிட்டிருக்க வேண்டுமெனத் தோன்று கிறது. துரானிய நாணயங்களை அச்சிட்டு வெளியிட்ட நாணயச் சாலைகளில் பக்கார், திராஜட், பிஷாவர், காபூல், மூல்தான், லாகூர், காஷ்மீர், ஃபரூக்காபாத் ஆகியவை முக்கியமானவைகளாகும். தங்கத்திலும் வெள்ளியிலும் அவர்கள் வெளியிட்ட நாணயங்கள் முகலாய நாணயங்களைப் போலவேயுள்ளன ; இவற்றில் வெளி யிட்டவரின் பெயரும் பட்டமும் முன்புறத்திலும்; நாணயச் சாலையும் வருடமும் பின்புறத்திலும் முத்திரையிடப்பட்டுள்ளன. செம்பு நாணயங்களின் பின்புறத்தில் பெயர் மட்டுமே உள்ளது. துரானியர்களின் நாணயங்கள் சிறந்த வேலைப்பாடு கொண்டவை.

சீக்கியர்கள்

அஹமது ஷா துரானி என்பவர் பஞ்சாபின்மீது அடிக்கடி படையெடுத்து வந்ததால், அங்கிருந்த சீக்கியர்கள் கல்சா எனப் பட்ட சீக்கியச் சங்கத்தை ஏற்படுத்தினர். கி.பி. 1710–ல் அஹமது ஷாவின் ஆட்சி நடைபெற்றுவந்த சர்ஹிந்த் என்னும் தலைநகரைச் சீக்கியர்கள் கைப்பற்றி அழித்தனர். அப்போது கல்சா வின் தலைவராக இருந்த பந்தா என்பவர் **ஸச்சா பாதுஷா** (உண்மையான மன்னர்) என அழைக்கப்படலானார். சர்ஹிந்தைக் கைப்பற்றிய நாளிலிருந்து புதியதொரு சகாப்தத்தையே உரு வாக்கிய அவர் லோகார் என்னுமிடத்திலிருந்து பாரசீக வாசகம் கொண்ட நாணயங்களை வெளியிட்டார். இவற்றில் முன்புறம்,

சிக்கா ஜாத் டர் ஹர் தோ ஆலம் தேக்-இ-நானக்
வாஹிப் அஸ்த்
குரு கோவிந்த் சிங் ஷாஹி-ஷாஹான் பஸ்ல்-சாகா
சாஹிப் அஸ்த்

(இரு உலகிலும் புழங்கும் நாணயம்; நானக்கின் வீர வாள் கொடுப்பது; இறைவனின் மன்னுதி மன்னரான குரு கோவிந்த் சிங் தான் உண்மையாக மன்னர்) என்ற வாசகம் முத்திரையிடப்பட்டுள்ளது; பின்புறத்தில், **ஜர்ப் பெ அமீனுத்தஹெர் மஸ்வராத் ஷெஹர் ஜீனதுல்-தக்த் முபாரக் பக்த்** (இன்னலிலிருந்து விடுவிக்கப்பட்டு, பெருமைக்குரிய அரியணையில் இருப்பிடமாக விளங்கும் கோட்டையில் அச்சிடப்பட்டது) என்ற வாசகம் உள்ளது.

மேலும், கி.பி. 1761-ல்,

சிக்கா ஜாத் டர் ஜஹான் ப-ஃபஜல் அகலா
முல்க் அஹமத் கிராஃப்த் ஜஸ்ஸா கலலா

என்ற ஈரடி வாசகம் பொறிக்கப்பட்ட நாணயமும் வெளியிடப்பட்டதாகக் கூறப்படுகிறது; ஆனால், இவ்வாசகமுள்ள நாணயம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. எனினும், இந்நாணயத்தைப் பற்றி ஒரு கதை உண்டு: அதாவது, காஜிக்களும் முல்லாக்களும் சேர்ந்து இவ்வாசகத்தைப் பொறித்து இருபத்தொரு நாணயங்களைச் செய்ததாகவும், அஹமது ஷா என்பவர் சீக்கியர்கள்மீது ஆத்திரம் கொள்ள வேண்டுமென்பதற்காக அவற்றை அவருக்கே அனுப்பிவைத்ததாகவும் கூறப்படுகிறது. ஆனால், ஒரு சில வரலாற்று அறிஞர்கள், உண்மையிலேயே அந்நாணயங்களை ஜஸ்ஸா சிங் என்பவர் அச்சிட்டுப் புழக்கத்திற்கு விட்டதாகவும் மன்னர் கி.பி. 1764-ல் சீக்கிய குரு மடத்தின் ஆணைப்படி அவற்றை உடனடியாக வாபஸ் பெற்றுக்கொண்டதாகவும் கூறுவர். மேலும், கி.பி. 1777-ல் அமிர்தசரஸில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட நானக் ஷாஹி என்னும் நாணயங்களில் சில உள்ளன. இவற்றின் முன்புறத்தில் லோகாரில் அச்சிடப்பட்ட நாணயங்களின் வாசகம் தான் உள்ளது; பின்புறத்தில் மட்டும் **ஜர்ப் ஸ்ரீ அம்ப்ரத்சர் ஜுலூஸ்-இ-தக்த் அகல் சம்பத்** என்று புதியதொரு வாசகமும் விக்கிரம சகாப்தத்தின் ஆண்டும் முத்திரையிடப்பட்டுள்ளன.

பின்னர், ரஞ்சித் சிங் என்பவர் வெளியிட்ட நாணயங்கள் சிலவற்றில் பாரசீக வாசகமும், வேறு சிலவற்றில் குருமுகி வடிவ வாசகமும் முத்திரையிடப்பட்டிருக்கின்றன. பாரசீக வாசகமுள்ள நாணயங்களில்,

**தேக் தெக் ஃபத் நஸ்ரத்-இ-பெதரங்
யாஃப்த் அஸ் நானக் குரு கோவிந்த் சிங்**

(நானக்கிடமிருந்து நிறைவு, வீரவாள், வெற்றி, உதவி ஆகிய வற்றை உடனடியாகப் பெற்றவர் குரு கோவிந்த் சிங்) என்ற ஈரடி வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. அவரது ஆட்சி முடியும்வரை லாகூரிலிருந்தும் அமிர்தசரஸிலிருந்தும் இவ்வாசகம் கொண்ட நாணயங்களைத் தொடர்ச்சியாக வெளியிட்டிருக்கிறார். அதோடு, கி.பி. 1818-க்குப் பின்னர் முல்தானிலிருந்தும், கி.பி. 1819-க்குப் பின்னர் காஷ்மீரிலிருந்தும், இவ்வகை நாணயங்களை வெளியிட்டிருக்கிறார். நிற்க, பிஷாவர், ஜங், பிண்டுதாதன்கான் ஆகிய இடங்களிலிருந்து சில ரூபாய் நாணயங்கள் கிடைத்துள்ளன. இவை அனைத்திலும் இலையின் சின்னம்தான் முத்திரையிடப்பட்டுள்ளது. விக்கிரமாதித்ய சகாப்த ஆண்டு 1861 முதல் 1863 வரை அமிர்தசரஸிலிருந்து வெளியிடப்பட்ட நாணயங்கள் இரு வகைப்படும். முதலில் வெளியானவற்றில் மயிலின் தோகையும், பின்னர் வெளிவந்தவற்றில் கட்டைவிரலின் அடையாளத்துடன் கூடிய முகக்கண்ணாடியும் உள்ளன. இவற்றுள் பிந்திய நாணயங்களைத் தனக்கு மிகவும் விருப்பமான மோரா என்ற நாடகக்காரியின் நினைவாக ரஞ்சித் சிங் வெளியிட்டதாகக் கூறப்படுகிறது. மேற்குறிப்பிட்ட ஈரடி பாரசீக வாசகம் கொண்ட நாணயங்கள் ரஞ்சித்சிங் இறந்த பின்னரும், விக்கிரமாதித்திய சகாப்த ஆண்டு 1905 வரை (கி.பி. 1848) வெளியிடப்பட்டிருக்கின்றன. மேலும், ரஞ்சித்சிங் குருமுகி வடிவத்தில் வாசகம் பொறித்த நாணயங்களை விக்கிரமாதித்திய சகாப்த ஆண்டு 1885-லிருந்து (கி.பி. 1827) வெளியிடத் தொடங்கியிருக்கிறார். இவ்வாசகம் கொண்ட நாணயங்கள் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய மூன்று உலோகங்களிலும் வெளியிடப்பட்டிருக்கின்றன; ஆனால், இத் தங்க நாணயங்களும் வெள்ளி நாணயங்களும் ஒரு சிலதான் கிடைத்துள்ளன; செம்பு நாணயங்கள்தான் ஏராளமாக உள்ளன. இவையனைத்தும் அமிர்தசரஸிலிருந்து வெளியிடப்பட்டிருக்கின்றன. பெரும்பாலும், இவற்றில் **அகல் சாஹி குரு நானக்** என்ற வாசகத்தைக் காணலாம்.

கடைசியாக, அஹமது ஷா துரானி அவர்கள் பாட்டியாலா என்றதொரு புதிய அரசை உருவாக்கி, அங்கு ஒரு மகாராஜாவை நியமித்தார். அதிலிருந்து அவ்வரசை ஆண்ட மகாராஜாக்கள் அனைவரும், துரானியரின் நாணயங்களைப்போல் பாரசீகத்தில் ஈரடி வாசகம் முத்திரையிடப்பட்ட நாணயங்களையே வெளியிட்டு வந்தனர்; அவற்றில் அவரவர்களின் சின்னங்களைப் பொறித்து வந்ததாகத் தெரிகிறது. எனவே, கோட்லா என்னும் அரசுகூட இதே போன்ற வாசகத்தையே தனது நாணயங்களில் பயன்படுத்தி வந்தது. ஆனால் அவற்றில் வெளியிட்டோரின் சின்னங்களுக்குப் பதிலாக, அவர்களது பெயர்களின் முதலெழுத்துக்கள் பொறிக்கப் பட்டுள்ளன. கி.பி. 1846-க்குப் பின்னர் காஷ்மீரில் ஆட்சி செய்த தோக்ரா, ஜிந்து, நாபா, கைடால் மன்னர்களும் ரஞ்சித் சிங்கைப் போல் பாரசீக மொழியில் ஈரடி வாசகம் பொறித்த நாணயங் களே வெளியிடலாயினர். எனினும், காஷ்மீரில் தோக்ரா மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் சிலவற்றில் கிருத்துவ சமய வாசகத்தின் முதல் எழுத்துக்கள்மட்டும் I.H.S. என்று முத்திரையிடப்பட்டுள்ளன.

அவுத் (அயோத்தி)

சாதத்கான் என்றழைக்கப்பட்ட முகமது அமீன் என்பவர் முகலாயப் பேரரசில் வசீராகப் பணிபுரிந்து, கி.பி. 1720-ல் அவுதின் சுபேதாராக நியமிக்கப்பட்டார். அப்போது, லக்னோ, ஃபைஜாபாத் ஆகிய பகுதிகளும், காஜிபூர், பனாரஸ், கோரக்பூர் முதலிய மாவட்டங்களும் அவரது நிர்வாகத்தில் இருந்தன. பின்னர், கி.பி. 1773-ல் அலகாபாத், கோரா மாவட்டங்களும், அதற்கடுத்த ஆண்டில் ரோஹில்கண்டும் அவரது ஆட்சியில் சேர்க்கப்பட்டன. இப் பகுதிகளையெல்லாம் அவரும் அவருக்குப் பின் வேறு சிலரும் முகலாயப் பேரரசர்களின் சார்பாக நவாப் வசீர் கள் என்ற பெயரில் நிர்வகித்து வந்தனர். ஆனால் கி.பி. 1818-ல் இந்தியாவில் பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரலாக இருந்த ஹேஸ்டிங்ஸ் பிரபு என்பவரின் தூண்டுதலால், அவுதின் நவாப்பாக இருந்து

வந்த காஜியுத்தீன் ஹைதர் என்பவர் டில்லி ஆதிக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, கி.பி. 1819-ல் அவுதின் மன்னராக முடி சூடிக்கொண்டார். கி.பி. 1856 வரை அவுத் தனி நாடாக இருந்து வந்தது. எனினும், கி.பி. 1856-ல் அவுதை ஆண்டு வந்த வஜீத் ஆலி என்பவர் தனது அரசை இழக்க நேரிட்டது; அதன் பின்னர் அது ஆங்கிலேயர்கள் வசமாகியது.

கி.பி. 1737-ல் பனாரஸ், முகமதாபாத் என்ற பெயரில் நாணயச் சாலையாக ஏற்படுத்தப்பட்டது; அவ்வாண்டிலிருந்து அவுதின் நவாப்புகளாக இருந்து வந்த அனைவரும் முகலாயப் பேரரசர்களின் பெயர்களிலேயே நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டு வந்தனர். பனாரஸ் பகுதி கிழக்கிந்தியக் கம்பெனி வசமான பின், ஆஸப் உத்தௌலாவும் அவருக்குப்பின் நவாப்புகளாக நியமிக்கப் பட்டவர்களும் லக்னோவிலேயே நாணயங்களை அச்சிட்டு, அவற்றில் முகமதாபாத் பனாரஸ் என்ற பழைய நாணயச் சாலையின் பெயரையே முத்திரையிட்டு வெளியிடலாயினர். அதன்பின்னர், அவுத்தின் நிர்வாகத்தில் ரோஹில்கண்டும் இணைந்தபின், பரெய்லியிருந்தும் நாணயங்களை வெளியிடத் தொடங்கினர். எனினும், எல்லா நாணயங்களுமே முகலாயப் பேரரசர்களின் பெயர்களில்தான் வெளியிடப்பட்டன.

காஜியுத்தீன் ஹைதர் அவுத்தின் மன்னராக முடிசூடப் பட்ட பின், தன் பெயரில் நாணயங்களை வெளியிட சிறிது காலம் தயங்கினார். அதன் பின்னர், முதன்முதலில் அவர் வெளியிட்ட நாணயங்களில் முன்புறத்தில் இரண்டாம் ஷா ஆலம் அவர்களின் நாணயத்திலிருந்த வாசகத்தை அப்படியே முத்திரையிட்டார்; பின்புறத்தில் மட்டும் இரண்டு மீன்கள் ஒன்றையொன்று எதிர் நோக்கியிருக்க, அவற்றிற்கு மேலே ஒரு மகுடமும், அம்மகுடத்தின் இருபுறத்தில் தூணைப்பற்றிக்கொண்டு நிற்கும் புலியும் கொண்ட தம் பரம்பரைச் சின்னத்தை முத்திரையிட்டார். அதோடு, இந் நாணயங்களில் முகலாயப் பேரரசரின் 26ஆவது ஆட்சி ஆண்டும், ஹிஜ்ரீ 1234ஆம் ஆண்டும் பொறிக்கப்பட்டன. அவர் வெளி யிட்ட பிந்திய நாணயங்களில் புதிய ஈரடி வாசகங்களைப் பொறிக்க லானார். இவற்றில் முன்புறம் பொறிக்கப்பட்ட ஈரடி வாசகங்களை அவருக்குப்பின் ஆட்சி செய்த நசீருதீன் ஹைதர் (கி.பி. 1827–

1837), முகமது ஆலி (கி.பி. 1837–1842), அம்ஜத் ஆலி (கி.பி. 1842–1847), வஜீத் ஆலி (கி.பி. 1847–1856) என்ற மன்னர்களும் பயன்படுத்தியிருக்கின்றனர். அதோடு, காஜியுத்தீன் ஹைதர் என்பவர் புதுவகை நாணயங்களையும் வெளியிட்டிருக்கிறார். அவற்றில், தனது ஆட்சியின் காலத்தை நவாப்பாக நியமனம் பெற்றதிலிருந்து கணக்கிட்டு 5ஆவது ஆண்டு எனப் பொறித்தார்; ஆனால் விரைவில் அவ்வாறு கணக்கிட்டு அச்சிடுவதை நிறுத்திவிட்டு, மன்னராக ஆனதிலிருந்து கணக்கெடுத்து அந்த வருடத்தையே அச்சிடலானார். அவ்வாறு ஆட்சிக்கு வந்த முதலாம் ஆண்டில் அவர் வெளியிட்ட நாணயங்களில் நாணயச் சாலையின் பெயராக **சுபா அவுத் தாருல்-அமரத் லக்னோ** என்று பொறித்திருக்கிறார். இரண்டாம் ஆண்டிலிருந்து வெளியிட்ட நாணயங்களில் **தாருல்-அமரத்** என்ற சொற்களை **தாருல்-சல்தனத்** என்று மாற்றியிருக்கிறார்.

மேற்குறிப்பிட்ட மன்னர்கள் ஐந்து பேரும் தங்கத்தில் **அஷ்ரபி** எனப்பட்ட முழு நாணயத்தையும், அதில் அரை, கால் நாணயத்தையும் அரைக்கால், மாகாணி என்று ஐந்து பகுதி நாணயங்களையும் வெளியிட்டதாகத் தெரிகிறது. எனினும், இவற்றில் வஜீத் ஆலி என்பவர் வெளியிட்ட இந்த ஐந்து வகை நாணயங்கள்தான் கிடைத்துள்ளன. இதேபோல் வெள்ளியிலும் ஐந்து தரமுள்ள நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர். அந்த ஐவரில் முதல் நால்வரும் செம்பில் **ஃபூலூஸ்** என்ற நாணயங்களை மட்டும் வெளியிட்டனர். வஜீத் ஆலி என்பவர் மட்டும் தனது இரண்டாவது ஆண்டு ஆட்சியின்போது அரை, கால், அரைக்கால் ஃபூலூஸ்களையும் வெளியிட்டிருக்கிறார்.

அவுத் மன்னர்கள் அச்சிட்டு வெளியிட்டதாகக் கூறப்படும் இரண்டு பெரிய வெள்ளிப் பதக்கங்களும் கிடைத்துள்ளன. இவற்றில் ஒன்றை சூஜா உத்தெளலா என்பவர் கி.பி. 1774-ல் ரோஹில்லாக்களை வென்றதன் நினைவாக அச்சிட்டதாகத் தெரிகிறது. இரண்டாவது பதக்கத்தை, தான் அரியணை ஏறியதன் நினைவாகக் காஜியுத்தீன் என்பவர் வெளியிட்டதாக அறிய வருகிறோம். இந்த இரண்டாவது பதக்கத்தில் முன்புறத்தில் ஆடை அணிகலன்களுடன் தோன்றும் மன்னரின் உருவம்

உயிருள்ளதுபோல் தீட்டப்பட்டுள்ளது ; பின்புறம் அவரது மரபுச் சின்னம் முத்திரையிடப்பட்டுள்ளது.

கி.பி. 1857-ல் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து நாடே கிளர்ச்சி செய்தபோது, அவுத் மக்கள் ஒன்று சேர்ந்து தமது நவாப் வஸீராக பிரிஜ்ஜிஸ் காதர் என்பவரை அமர்த்தினர். அப்போது அவர்கள் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய மூன்று உலோகங்களிலும் தம் நாணயங்களை வெளியிட்டனர் ; இவை அனைத்திலும் இரண்டாம் ஷா ஆலமின் பெயர், **சுபா அவுத்** என்ற நாணயச்சாலையின் பெயர், ஹிஜ்ரீ வருடம் 1229, ஆட்சி ஆண்டாக 26ஆவது வருடம் ஆகிய வற்றைப் பொறித்துள்ளனர். ஆனால் அப்போது புரட்சியாளர்கள் ஆங்கிலேயர்களால் தூண்டப்பட்ட அவுதின் முடியாட்சியே கூடாதென்று கிளர்ச்சி செய்ததாகக் கூறப்படுகிறது. எனவே, அம்மக்கள் மன்னரின் ஆட்சி வருடத்தைப் பொறிக்காமல் நவாப் வஸரத்தின் ஆட்சி வருடத்தையே முத்திரையிட்டு வந்தனர். அதாவது ஹிஜ்ரீ வருடம் 1229-ல் காஜீயுத்தீன் ஹைதர் என்பவர் அவுதின் அரசராக அமர்ந்தவுடன் கைவிடப்பட்ட அவ் வழக்கத்தைத் திரும்ப ஏற்படுத்தினார்கள்.

மைசூர்

மைசூரின் சேனாதிபதியாக இருந்து வந்த ஹைதர் ஆலி என்பவர், கி.பி. 1761-ல் மைசூரின் மன்னராக மாறி மைசூர் அரசை ஆளத்தொடங்கினார். அப்போது அங்கு விஜயநகர நாணயங்களைப் போன்ற நாணயங்களோடு முகலாயர்களின் நாணயங்களும் சேர்ந்து புழங்கி வந்தன. இவற்றில் முதல்வகை நாணயங்கள்தான் அதிகமாகப் புழக்கத்தில் இருந்தன. எனவே, ஹைதர் ஆலி மன்னர் தங்கத்தில் **பகோடா**க்களைப் போன்ற நாணயங்களையே வெளியிடலானார். இவற்றில் முன்புறம், விஜய நகரப் பரம்பரைச் சின்னமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த ஹர-கௌரியின் உருவத்தை முத்திரையிட்டுச் சொரசொரப்பான பின்புறத்தில், அவரது பெயரின் முதலெழுத்தைப் பாரசீக வடிவில் **ஹெ** என்று பொறித்திருக்கிறார். இதே சின்னங்களைக்

கொண்ட அரைப் **பகோடாக்களை**யும் **பணங்களை**யும் வெளியிட்டிருக்கிறார். இந்நாணயங்கள் அனைத்தும் பெட்னூர் என்றழைக்கப்பட்டு வந்த நகர் என்னும் ஊரில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டவையாகும். கி.பி. 1780–81-ல் யானையின் உருவத்தை முன்புறத்திலும், நாணயச்சாலையின் பெயரையும் வருடத்தையும் பின்புறத்திலும் முத்திரையிட்டுச் செம்பு நாணயங்களை வெளியிடலானார்.

அவரது மகனான திப்பு சுல்தான் என்பவர், தனது பதினாறு ஆண்டுக்கால ஆட்சியின்போது எண்ணற்றவகையில்நாணயங்களை வெளியிட்டுள்ளார். தனது தந்தையைப்போல் **பகோடாக்களை**யும் **பணங்களை**யும் வெளியிட்டதோடு, தங்கத்திலும் வெள்ளியிலும் முகலாய நாணயங்களைப் போலவும் வெளியிட்டிருக்கிறார். தங்கத்தில் **முஹர்களை**யும் அரை **முஹர்களை**யும் அச்சிட்டு வெளியிட்டதோடு, வெள்ளியில் இரண்டு ரூபாய், ஒரு ரூபாய், அரை, கால், அரைக்கால், முப்பத்திரண்டில் ஒரு பங்கு என்று பகுதி ரூபாய்களையும் வெளியிட்டிருக்கிறார். செம்பில் 40, 20, 10, 5, 2½ காசுகளும் அவரால் வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்நாணயங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு பெயர் வைத்தார். சான்றாக, கால் **முஹருக்**குச் சமமான **பகோடா**விற்கு **ஃபருக்கி** என்ற பெயரைத் தந்தார்; இரண்டு ரூபாய் நாணயம் **ஹைதரி** என்றும், ஒரு ரூபாய் **அஹ்மதி** என்றும், 20 காசு நாணயம் **ஜோஹ்ரா** என்றும் அழைக்கப்பட்டன. திப்பு சுல்தான் நாணயங்களை அச்சிட்டு வெளியிட்ட நாணயச்சாலைகள் ஐம்பதிற்குமேல் இருக்கும், இவற்றில் இன்றும் அதேபெயரில் அழைக்கப்பட்டு வரும் நகரம், பெங்களூர், கோழிக்கோடு, தார்வார், பெல்லாரி ஆகிய ஊர்களும் இந்நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

மற்ற நாணயச்சாலைகளெல்லாம் **பைய்ஸ் ஹிஸார், பருக்யாப் ஹிஸார், குர்ஷீட் சாவத், நஜர்பார், பிஞஜீர்** என்ற விநோதமான புனைபெயர்களில் அழைக்கப்பட்டிருக்கின்றன. தனது ஆட்சியின் முதல் நான்காண்டுகளில் அவர் வெளியிட்ட நாணயங்களிளெல்லாம் ஹிஜ்ரீ வருடம் முத்திரையிடப்பட்டுள்ளது. ஆனால், ஐந்தாவது வருடத்திலிருந்து வெளியிட்ட நாணயங்களில் மௌலூதி சகாப்தத்தின் ஆண்டைப் புகுத்தி, இச் சகாப்த

ஆண்டையே கடைசிவரை முத்திரையிட்டு வந்திருக்கிருர். மௌலுதி சகாப்தம் என்பது முகமது நபி பிறந்த வருடத்தில் தொடங்குகிறது; இச் சகாப்தம் சூரிய, சந்திர மண்டலக் கணிப்பை ஆதாரமாகக் கொண்ட சந்திர மண்டலத்தின் மாதங்களையுடையது. நடுநடுவே அதிமாசம் சேர்க்கப்படும். திப்பு சுல்தான் அவர்கள் இந்துக் காலண்டரையொட்டியே இச் சகாப்தத்தைக் கணக்கிட்டாரெனினும், சுழன்று வரும் 60 வருடங்களையும் அவற்றின் மாதங்களையும் அரேபிய மொழிப் பெயர்களால் அழைத்துவந்தார்.

திப்பு சுல்தான் முதலில் வெளியிட்ட **பகோடா** நாணயங்களிலெல்லாம் முன்புறத்தில் ஹைதர் அலியின் பெயரில் முதலெழுத்தான **ஹெ** அப்படியே பொறிக்கப்பட்டிருக்கிறது; பின்புறத்தில் நாணயச்சாலையின் பெயரும் வருடமும் முத்திரையிடப்பட்டுள்ளன. ஒரு சில பகோடா நாணயங்களில் மட்டும் பின்புறத்தில் **ஹுவா அல் சுல்தான் அல்-ஆதில்** (அவர்தான் நேர்மையான சுல்தான்) என்ற வாசகம் உள்ளது. ஒருவேளை இவற்றை ஸ்ரீரங்கப்பட்டணத்திலிருந்து அவர் வெளியிட்டிருக்கலாம். பின்னர், மௌலுதி ஆண்டு 1215-லிருந்து வெளியிட்ட **பகோடா** நாணயங்களில் ஒருபுறத்தில் நாணயச்சாலையின் பெயரோடும் வருடத்தோடும் அந் நாணயத்தின் பெயரும் முத்திரையிடப்பட்டிருக்கிறது. மறுபுறத்தில் **முஹம்மத் ஹுவா அல் சுல்தான் அல்-வதீத் அல்-ஆதில்** (முகமது; அவர்தான் நேர்மையான, ஈடு இணையற்ற சுல்தான்) என்ற வாசகம் உள்ளது. ஏனைய நாணயங்களில்கூட இதுபோன்ற வாசகமும் முகமது நபியின் பெயரும்தான் முத்திரையிடப்பட்டுள்ளன; எதிலும் திப்பு சுல்தானின் பெயர் கிடையாது. இதிலிருந்து அவர் முகமது நபியின்மீது எவ்வளவு உறுதியான நம்பிக்கை வைத்திருந்தார் என்று தெரிகிறது. அவரது செம்பு நாணயங்களில் ஒருபுறம் ஹைதர் ஆலி பயன்படுத்திய யானைச் சின்னமும், மறுபுறத்தில் நாணயச்சாலையின் பெயரும் வருடமும் முத்திரையிடப்பட்டுள்ளன.

திப்பு சுல்தான் இறந்தவுடன், கி.பி. 1799-ல் ஆறுவயது சிறுவனுக இருந்த கிருஷ்ணராஜ உடையாரிடம் மைசூர் அரசைத்

திரும்ப ஒப்படைத்துவிட்டனர். அவ்வாண்டிலிருந்து அவரது பெயரிலேயே **பகோடா, அரைப் பகோடா, பணம்** ஆகிய தங்க நாணயங்கள் வெளியிடப்பட்டன. இவையனைத்தும் விஜயநகர நாணயங்களைப்போல் அச்சிடப்பட்டன. இவற்றின் முன்புறத்தில் அமர்ந்திருக்கும் ஹர-கௌரியின் உருவமும், பின்புறத்தில் **ஸ்ரீ கிருஷ்ணராஜா** என்று மன்னரின் பெயரும் முத்திரையிடப் பட்டுள்ளன. வெள்ளியில் முகலாயரின் நாணயங்களைப் போன்ற ஒரு ரூபாய், அதன் பகுதி நாணயங்கள் ஆகியவை வெளியிடப் பட்டுள்ளன. இவற்றில் முன்புறத்தில் இரண்டாம் ஷா ஆலமின் பெயரும், பின்புறத்தில் **மஹிசூர்** என்ற நாணயச்சாலையின் பெயரும் உள்ளன. இவை மட்டுமன்றி, தன் குலதெய்வமான சாமுண்டீஸ்வரியின் உருவம் கொண்ட சிறிய பகுதி ரூபாய் நாணயங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. சாமுண்டீஸ்வரியின் சின்னமுள்ள கால் ரூபாய் நாணயத்தில் ராஜாவின் பெயர், வருடம், நாணயச்சாலையின் பெயர் ஆகியவை பாரசீக எழுத்துக் களில் முத்திரையிடப்பட்டுள்ளன ; அரைக்கால் ரூபாய் போன்ற மிகச் சிறிய நாணயங்களில் அவற்றின் மதிப்பும், **மயிலி** என்ற கன்னடச் சொல்லும்தான் இருக்கின்றன. கிருஷ்ணராஜாவின் செம்பு நாணயங்களை எடுத்துக்கொண்டால், முதலில் வெளியிடப் பட்டவற்றில் முன்புறம் யானையின் சின்னத்தோடு, சூரியனும் சந்திரனும்கூட முத்திரையிடப்பட்டுள்ளன ; பின்புறத்தில் மன்னரின் பெயர் நாகரியில் உள்ளது. பின்னர் வெளியிட்ட நாணயங்களில் முன்புறத்தில், யானையின் சின்னத்தை அப்படியே முத்திரையிட்டு, அதோடு **ஸ்ரீ** அல்லது **ஸ்ரீ சாமுண்டி** என்ற சொல் புதிதாகச் சேர்க்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவற்றின் பின் புறத்தில் **மயிலி காசு** என்ற சொற்கள் ஆங்கிலத்திலும் கன்னடத் திலும் முத்திரையிடப்பட்டிருக்கின்றன. முதலில் வெளியிடப் பட்ட நாணயங்களெல்லாம் மைசூரிலேயே அச்சிடப்பட்டன. ஆனால் கி.பி. 1833-லிருந்து வெளியான நாணயங்கள் பெங்க ளூரில் அச்சிடப்படலாயின. எனினும் கி.பி. 1843-ல் நாண யங்கள் அச்சிடுவதை மைசூர் அரசு நிறுத்திவிட்டது.

அதிகாரம் 17

இந்தோ-ஐரோப்பிய நாணயங்கள்

பண்டைக்காலத்திலிருந்தே மேலைநாடுகளுடன் இந்தியா வணிகம் செய்து வந்தது; ஆனால், கி.பி. ஏழாம் நூற்றாண்டில் செங்கடலிலும் இந்தியக் கடலிலும் முழு ஆதிக்கம் செலுத்திவந்த அரேபியர்கள், அவ் வணிகத்தைக் கைப்பற்றிக்கொண்டனர். இதனால் வெனிஸிலும் ஜெனோவாவிலுமிருந்த வியாபாரிகள் இந்தியப் பண்டங்களையெல்லாம் இந்தியாவிடமிருந்து நேரடியாக வாங்குவதற்குப் பதிலாக அரேபியர்களிடமிருந்து வாங்கிவந்தனர். கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிவரை இது நீடித்து வந்தது. எனினும், அப்போது, புதிய பல நாடுகளையும், புதிய கடல் வழியையும் கண்டுபிடித்ததன் வாயிலாக, பல நாடுகளுக் கிடையே நடைபெற்றுவந்த வணிகத்தில் அடிப்படையான பல மாற்றங்கள் ஏற்பட்டன. ஐரோப்பியர்களுக்கு நேரடியாக இந்தியாவில் வாணிகம் செய்ய வேண்டுமென்ற ஆர்வம் தோன்றியது. எனவே, போர்த்துகீசியர், டச்சுக்காரர்கள், டேனியர்கள், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள் என்று ஒவ்வொரு நாட்டவராக இந்தியாவிற்கு வந்தனர். அவ்வாறு, வளமிக்க இந்தியாவில் வாணிகம் செய்வதற்காக வந்த மேலை நாட்டவர்கள், நாளடைவில் இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் தலையிட்டு, தம் ஆட்சியையும் நிலைநாட்டி, தத்தம் நாணயங் களையும் வெளியிட்டனர்.

போர்த்துகீசியர்

இந்தியாவிற்கு முதன்முதலில் வந்தவர்கள் போர்த்துகீசியர்கள் தான். இந்தியாவிற்குக் கடல்வழியைக் கண்டு பிடிப்பதற்காக, கி.பி. 1497–ல் வாஸ்கோ-ட-காமா என்பவர் தமது நாட்டு

லிஸ்பன் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு, கி.பி. 1498 மே மாதத்தில் மலபார் கடற்கரையிலுள்ள கோழிக்கோடு என்னும் இடத்தை அடைந்தார். சாமரின் எனப்படும் கோழிக்கோட்டு ராஜாவிடமிருந்து தமது நாட்டு வணிகர்கள் அங்கு வாணிகம் செய்வதற்கு இசைவு பெற்ருர். இவ்வாருக, இந்தியாவோடு நேரடியாக வியாபாரம் செய்யத் தொடங்கிய போர்த்துகீசிய வணிகர்கள் பல வணிக ஒப்பந்தங்கள் செய்து, கிழக்கு நாடுகளோடு நடைபெற்றுவந்த வியாபாரத்தையெல்லாம் தமதாக்கிக் கொண்டனர். பேராசை கொண்ட போர்த்துகீசியர், ஒப்பந்தங்களின்படி வியாபாரம் செய்வதற்குப் பதிலாக, கீழ்த்திசைக் கடலில் ஏகபோக உரிமை கொண்டாடவும் முற்பட்டனர். அதோடுமட்டுமன்றி, இந்திய அரசுகளின் அரசியல் விவகாரங்களிலும் தலையிடத் தொடங்கினர். இந்திய விவகாரங்களுக்கென்று போர்த்துகீசிய அரசாங்கம் ஆளுநரையும் நியமித்து வந்தது. அவ்வாறு நியமனம் பெற்ற ஆளுநரான அல்போன்சோடி ஆல்புகர்க் என்பவர், கி.பி. 1510 நவம்பர் மாதத்தில் வளம் நிறைந்த கோவா துறைமுகப்பட்டினத்தைக் கைப்பற்றி, அங்குப் போர்த்துகீசிய நிலைக்களனைத் தோற்றுவித்தார். நாளடைவில், மேற்குக் கடற்கரையோரத்திலுள்ள டையூ, டாமன், சால்செட், பஸ்ஸீன், சௌல், பம்பாய் ஆகிய இடங்களையும், சென்னையிலுள்ள சாந்தோம், வங்காளத்திலுள்ள ஹூக்ளி ஆகிய இடங்களையும் போர்த்துகீசியர் தமது நிலைக்களன்களாக மாற்றினர். சிலோனிலும் தமது ஆதிக்கத்தைப் பரப்பினர். ஆனல், சிறிது காலம் கழித்து, அவர்களின் ஆதிக்கமும் செல்வாக்கும் ஒடுக்கப்பட்டன; அதனுல் தம் ஆதிக்கத்திலிருந்த பெரும்பகுதிகளை அவர்கள் இழக்க நேரிட்டது. கடைசியில் கோவா, டையூ, டாமன் ஆகிய இடங்கள் மட்டுமே அவர்களுக்குச் சொந்தமாக இருந்து வந்தன. ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் அந்த இடங்களும் இந்தியக் குடியரசோடு சேர்க்கப்பட்டுவிட்டன.

கி.பி. 1510-ல் கோவாவைக் கைப்பற்றிய போர்த்துகீசியர் உடனடியாகத் தங்கத்திலும் வெள்ளியிலும் அச்சிடப்பட்ட நாணயங்களை வெளியிடலாயினர். அப்போது, **பக்கோடாக்கள், ஹொான்கள்** எனப்பட்ட நாணயங்கள் அங்குப் புழக்கத்திலிருந்து

வந்தன; அவற்றையெல்லாம் திரும்பப்பெற்று உருக்கிவிடவேண்டு மென்று ஆல்புகர்க் என்பவர் ஆணையிட்டிருந்தார்; எனவே, அளவிலும் எடையிலும் மட்டுமன்றி மதிப்பில்கூட அவைகளை யொத்த **குருஸேடோ** அல்லது மெஞேயெல் எனப்பட்ட நாணயங்களை அவர்கள் வெளியிட்டனர். தங்கத்தில் **மெஞேயெல்** நாணயங்களோடு, **மியோ மெஞேயெல்** என்றழைக்கப்பட்ட அரை நாணயங்களையும் வெளியிட்டனர்; அதேபோல் வெள்ளியில் **எஸ்பெரா** என்ற முழுநாணயத்தோடு **மியோ எஸ்பெரா** எனப்பட்ட அரை நாணயத்தையும் வெளியிட்டனர். **மெஞேயெல்** என்ற தங்க நாணயத்திலும், **எஸ்பெரா** என்ற வெள்ளி நாணயத்திலும் ஒரே வகைச் சின்னத்தை முத்திரையிட்டனர். முன்புறத்தில் ஏசு நாதரின் சிலுவையையும், பின்புறத்தில் வானக் கோளங்கள் இயங்குவதைக் காட்டும் மாதிரிக் கோளங்களையும் முத்திரை யிட்டனர். அரை நாணயங்களில் ஒருபுறம், முழு நாணயங் களின் பின்புறச் சின்னத்தை அப்படியே முத்திரையிட்டு, மறுபுறம் MEA என்ற சொல்லிற்கு மேற்புறம் ஒரு மகுடத்தையும் முத்திரையிட்டனர். கி.பி. 1519-ல் இவ்வகை நாணயங்கள் அச்சிடப்படுவதை நிறுத்திவிடும்படி கோவா ஆளுநரிடமிருந்து ஆணை பிறந்தது. கி.பி. 1549-ல் மறுபடியும் தங்கத்திலும் செம்பிலும் நாணயங்கள் அச்சிடப்பட்டு வெளியாயின. அப்போது, ஏசுநாதரின் சீடர்களில் ஒரு வரான புனித தோமையாரை இந்தியாவின் பாதுகாவலராக வழிபடத் தொடங்கினர் போர்த்துகீசியர்; எனவே, தம் நாணயங் களில் புனித தோமையாரின் உருவத்தை அச்சிட்டு, அவற்றைச் **சாந்தோம்** என அழைக்கவேண்டுமென்று தீர்மானித்திருந்தனர். அதன்படி, தங்கத்திலும் வெள்ளியிலும் செய்யப்பட்ட நாணயங் களில் ஒரு புறத்தில், நின்றுகொண்டோ அமர்ந்துகொண்டோ இருப்பது போன்ற புனிதத் தோமையாரின் உருவத்தையும், S.T. என்ற எழுத்துக்களையும் முத்திரையிட்டனர்; மறுபுறத்தில் போர்த்துகீசிய நாட்டுக் கேடயச் சின்னமும், அதற்குமேல் மகுடமும் அச்சிடப்பட்டு, போர்த்துகீசிய மன்னரின் பெயரிலிருந்த முதலெழுத்துக்களையும் முத்திரையிட்டு வந்தனர். ஒருசிலவற்றில் சிறிய வாசகத்தையும் அச்சிட்டனர். மூன்றும் ஜோஸ்

மன்னரின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1521–1557) போர்த்துகல் நாட்டில் புழங்கிவந்த **சாவ்விகான்டோஸ்** என்ற நாணயங்களைப் போலவே சில தங்க நாணயங்களை லிஸ்பனில் அச்சிட்டு, அவற்றை கோவாவில் வெளியிட்டார். ஒருவேளை அவற்றைத் தன் நினைவுச் சின்னங்களாக அவர் வெளியிட்டிருக்கலாம். அவற்றில் புனிதத் தோமையார் சின்னமிருந்த புறத்தில் INDIA. TIBI CESSIT என்ற வாசகத்தையும், மறுபுறத்தில் IOA ill. POR. ET. AL. R. என்ற சுருக்கெழுத்துக்களையும் முத்திரையிட்டார். பின்னர், கி.பி. 1728-ல் வெளியான தங்க நாணயங்களில் புனிதத் தோமையாரின் உருவத்திற்குப் பதிலாக அவரது சிலுவைச்சின்னம் முத்திரையிடப் பட்டது. அதற்குப்பின், சூழ்நிலைக்கும் அவசியத்திற்குமேற்ப, தங்க நாணயத்தின் சின்னம் அடிக்கடி மாற்றப்பட்டு வந்தது; எனினும் மேற்குறிப்பிட்ட சின்னத்தையொட்டியே மாறுதல்கள் செய்யப்பட்டன. அப்போது 20, 10, 5, 2½ **ஸெராபிம்ஸ்** என்று வெவ்வேறு மதிப்புடைய தங்க நாணயங்களும் வெளியிடப் பட்டன.

டி. சபாஸ்டியாத் என்பவரின் ஆட்சியின்போது (கி.பி. 1557–1578) புனித செபஸ்தியாரின் உருவம் பொறித்த வெள்ளி நாணயங்கள் வெளியிடப்பட்டன; **பாஸ்தியாட்** அல்லது **ஸெராபிம்** என்றழைக்கப்பட்ட இந் நாணயங்கள் 300 **ரெய்ஸ்** எடை கொண்டவை. மேலும், அம்புச் சின்னம் கொண்ட வெள்ளி **தங்கா** நாணயங்களையும் அவர் வெளியிட்டார். முதலாம் டி. பிலிப் ஆட்சியின்போது (கி.பி. 1580–1598) ஒரு **தங்கா**, அரை **தங்கா** நாணயங்கள் மட்டுமே வெளியிடப்பட்டன. இவற்றில் நின்றுகொண்டிருக்கும் புனித பிலிப்பின் உருவம் முத்திரையிடப் பட்டது. அடுத்து, இரண்டாம் பிலிப்பின் ஆட்சியின்போது (கி.பி. 1598–1621) 1614-ல் வெள்ளியில் இரண்டு **தங்கா**, ஒரு **தங்கா**, அரை **தங்கா** நாணயங்கள் வெளியிடத் தீர்மானிக்கப் பட்டது; பின்னர், 1619-ல் 30, 20, 10, **பசாரக்காஸ்** எடைகளில் வெள்ளி நாணயங்களை வெளியிடத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, வெளியிடப்பட்ட நாணயங்களிலெல்லாம் புனித பிலிப்பின் உருவத்திற்குப் பதிலாக, கல்வாரி மலையில் ஏசுநாதர்

உயிர் நீத்த சிலுவையின் சின்னமே முத்திரையிடப்பட்டது. மூன்றும் டி. பிலிப் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1621–1640) அவிஸின் சிலுவைச் சின்னமே பயன்படுத்தப்பட்டது. அவரது ஆட்சியின் இறுதியில் புனிதர்களின் உருவம் கொண்ட சில நாணயங்களும் வெளியிடப்பட்டன. நான்காம் டி. ஜோஸின் ஆட்சியின்போதும் (கி.பி. 1640–1656) இவ்வகை நாணயங்களே வெளியிடப்பட்டன. ஆனால் அவரது நாணயங்களில் புனித ஜானின் உருவம் முத்திரை யிடப்பட்டது. கி.பி. 1650-ல் புனித ஜானின் உருவத்திற்குப் பதிலாக, ஏசுவின் சிலுவைச் சின்னத்தை முத்திரையிட்டு, புது நாணயங்களை வெளியிட்டார். கி.பி. 1726 வரை இச்சின்னம் தான் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்தது.

இவ்வாண்டில் ஆட்சி செய்த ஆறும் டி. ஜயோஸ் என்பவர், அதிக மதிப்புடைய நாணயங்களில் ஏசுவின் சிலுவைக்குப் பதிலாக மன்னரின் மார்பளவு X உருவச் சின்னத்தைப் புகுத்தினர். **தங்கா** நாணயங்களில் மட்டும் ஏசுவின் சிலுவை பயன்படுத்தப் பட்டது. 1775-ல் இரண்டு **ஸெராபிம்ஸ்** நாணயங்களில் **ருபியா** என்ற சொல் புகுத்தப்பட்டது; அதிலிருந்து போர்த்துகீசிய நாணயங்களின் மதிப்பு ரூபாயில்தான் நிர்ணயிக்கப்பட்டது. 1869-ல் கோவாவிலிருந்த நாணயச்சாலை மூடப்பட்டது. அந்த ஆண்டிலிருந்து போர்த்துகீசிய இந்திய நாணயங்கள் பம்பாயி லிருந்த ஆங்கிலேயர்களின் நாணயச்சாலையில்தான் அச்சிடப் பட்டன.

1568-ல் தங்க, வெள்ளி நாணயங்களை அச்சிடுவதற்கென்று கொச்சியில் நாணயச்சாலையொன்றை அமைக்கும்படி ஆணையிடப் பட்டது. ஆனால் கொச்சி நாணயச்சாலை இயங்கியதா, நாணயங்களை வெளியிட்டதா என்று உறுதியாகத் தெரியவில்லை. கி.பி. 1611-ல் பஜாருக்கோஸ் என்ற செம்பு நாணயங்களை வெளியிடுவதற்காக பேசின், டாமன் ஆகிய இரண்டு இடங் களிலும் நாணயச்சாலைகள் தொடங்கப்பட்டன. சிறிது காலத் திற்குப்பின் இந் நாணயச்சாலைகள் **துத்தநாக** நாணயங்களையும் வெளியிடத் தொடங்கின. ஆனால் கி.பி. 1739-ல் இந் நாணயச் சாலைகள் இரண்டும் மூடப்பட்டுவிட்டன. மேலும், 1644-ல் சௌல் என்னுமிடத்தில் ஒரு நாணயச்சாலை தொடங்கப்பட்ட

தாகத் தெரிகிறது. ஆனால் 1740-ல் அந்த இடம் மராட்டியர் கைவசமாகிவிட்டது. அதற்குமுன் அந் நாணயச்சாலை வெளியிட்ட **பஜாருக்கோஸ்** என்ற செம்பு நாணயங்களில் ஒருபுறம் போர்த்துகீசிய நாட்டுச் சின்னக் கேடயமும், மறுபுறம் ஒரு கட்டு அம்புகளும் முத்திரையிடப்பட்டுள்ளன. நிற்க, 1684-ல் டையூ என்ற இடத்தில் தொடங்கப்பட்ட நாணயச்சாலை 1859 வரை இயங்கிவந்தது; எனினும் அது ஒழுங்காகச் செயலாற்றவில்லை. இருப்பினும், அந்த நாணயச்சாலையிலிருந்து **ஸெராபிம்ஸ்** வெள்ளி நாணயங்களும் **துத்தநாக** நாணயங்களும் வெளியிடப்பட்டன இவற்றில் முதலில் வெளியிடப்பட்ட நாணயங்களில் நாணயச் சாலையின் பெயரே கிடையாது; பின்னர் வெளியானவற்றில் மட்டும் DO, Da, OO என்ற சுருக்கெழுத்திலோ அல்லது DIO என்ற முழுப்பெயரிலோ நாணயச்சாலையின் இடம் பொறிக்கப் பட்டது.

1684–85-ல் வெளியிடப்பட்ட **ஸெராபிம்ஸ்** வெள்ளி நாணயங் களில் ஒருபுறத்தில் போர்த்துகீசிய நாட்டுக்கேடயமும் மகுடமும் பொறிக்கப்பட்டுள்ளது; மறுபுறத்தில் ஜார்ஜ் என்ற புனித வானின் சிலுவை முத்திரையிடப்பட்டுள்ளது. ஆனால் இவற்றி லுள்ள சின்னங்கள் முரட்டுத்தனமாகப் பொறிக்கப்பட்டிருக் கின்றன. இந் நாணயங்களனைத்தும் கோவாவில் வெளியிடப் பட்டவற்றைப் போலில்லாமல், அமைப்பிலும் எடையிலும் மாறு பட்டிருக்கின்றன; எனவே, 1688-ல் போர்த்துகீசிய நாட்டுச் சின்னத்தில் மகுடம் ஒருபுறத்திலும், ஏசுவின் சிலுவை மறுபுறத் திலும் முத்திரையிடப்பட்ட புது நாணயங்கள் வெளியிடப் பட்டன. 1729-ல் புனித தோமையாரின் உருவச் சின்னம் கொண்ட **ரூபியா, ஸெராபிம்** அல்லது **பார்த்தியோ** (அரை ரூபாய்க்குச் சமமானது) ஆகிய நாணயங்கள் வெளியிடப்பட்டன. 1741-ல் வெளியான நாணயங்களில் மறுபடியும் செயின்ட் ஜார்ஜின் சிலுவைச் சின்னம் புகுத்தப்பட்டது; இச் சிலு வையிலுள்ள நான்கு முனைகளிலும் வருடம் பொறிக்கப் பட்டுள்ளது. 1806-ல் மறுபடியும் புனித தோமையாரின் சிலுவைச் சின்னத்தை முத்திரையிட்டு நாணயங்களை வெளி யிட்டனர். நாணயச்சாலை மூடப்படும்வரை இச் சின்னமே

தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது. மேலும், இந்த நாணயச்சாலை 1781-ல் வெளியிட்ட நாணயங்களில் மூன்றும் டி. பெட்ரோ, முதலாம் மரியா ஆகிய இருவரின் மார்பளவு உருவங்களையும் சேர்த்து முத்திரையிட்டிருக்கின்றனர்.

செம்பு நாணயங்களில் **அடியா** என்ற முழு நாணயங்களும், அதில் அரை, கால் பகுதி நாணயங்களும் வெளியிடப்பட்டன; இவற்றில் ஒரு சிலவற்றில் மட்டும் போர்த்துகீசிய நாட்டுச் சின்னமும் ஏசுவின் சிலுவைச் சின்னமும் முத்திரையிடப் பட்டுள்ளன. மேலும், 1745 முதல் 1828 வரை **பஜாருக்கோஸ்** என்னும் நாணயங்களில் துத்தநாகத்தில் அடிக்கடி வெளி யிட்டிருக்கின்றனர். ஆனால் இந் நாணயங்கள் எண்ணற்ற வகையில் வெளியிடப்பட்டிருப்பதால், இவற்றை விவரித்துக் கூற இயலாது.

டச்சுக்காரர்கள்

பதினாறாம் நூற்றாண்டில் ஹாலந்து நாட்டிலுள்ள புரூஜெஸ், ஆன்ட்வெர்ப், ஆம்ஸ்டர்டாம் ஆகிய மூன்று நகரங்களும் பிரபலிய மான வணிகத் தலங்களாகச் சீரும் சிறப்பும் பெற்று விளங்கின. கீழைநாட்டுப் பண்டங்களைக் கொண்டுவந்த போர்த்துகீசியர் இந் நகர வியாபாரிகளுக்கே அவற்றை விற்று வந்தனர்; பின்னர் அவ் வியாபாரிகள் அவற்றை ஜெர்மானியர்களுக்கும் ஆங்கிலேயர் களுக்கும்கூட விற்று, நிறையச் சம்பாதித்து வந்தனர். இதனால் கீழை நாடுகளுடன் நேரடியாகவே வணிகம் செய்ய வேண்டுமென்ற ஆசைகொண்டனர் டச்சுக்காரர்கள். எனவே, கி.பி. 1596-ல் கார்னிலியஸ் ஹாட்மன் என்ற டச்சுக்காரர் நன்னம்பிக்கை முனை வழியாக விரைந்து வந்து சுமத்திரா, பாண்டாம் என்ற இடங்களை அடைந்தார். அவரைத் தொடர்ந்து பல டச்சுக்காரர்கள் கீழை நாடுகளுக்கு வந்து பண்டங்களை வாங்கத் தொடங்கினர். எனவே, ஐந்தாண்டு காலத்திற்குள் அறுபத்தைந்து டச்சுக் கப்பல்களுக்கு மேல் இந்தியத் தீவுகளுக்கு வந்து வணிகம் செய்துவந்தன. அதோடு, ஹாலந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வணிகர்கள்

நூற்றுக்கணக்கான கம்பெனிகளைத் தொடங்கி நடத்திவந்தனர். ஆனால் கி.பி. 1602-ல் ஹாலந்து அரசாங்கம் அக் கம்பெனிகளை யெல்லாம் ஒருங்கிணைத்து "யுனைடெட் ஈஸ்ட் இந்தியா கம்பெனி ஆஃப் நெதர்லாண்ட்ஸ்" என்ற பெயரில் ஒரு தேசியக் கம்பெனி யை உருவாக்கி, கீழை நாடுகளுடன் வணிகம் செய்யும் உரிமையை 21 ஆண்டுகளுக்கு அக்கம்பெனிக்கு மட்டுமே கொடுத்துவிட்டது. கி.பி. 1609-ல் அக்கம்பெனியார் இந்தியாவில் பழவேற்காடு என்ற இடத்தில் தம் வணிகக் களத்தை ஏற்படுத்தினர். 1616-ல் சூரத்தையும் தமது நிலைக்களனாக மாற்றினர். பின்னர் 1661 முதல் 1664 வரை மிளகு விளைச்சலுக்குப் பெயர் பெற்றிருந்த மலபார் கடற்கரையோரப் பகுதிகளில் போர்த்துகீசியரோடு போரிட்டு அவர்கள் வசமிருந்த இடங்களையெல்லாம் கைப்பற்றினர். 1664-ல் மசூலிப் பட்டினம், சோழமண்டலக் கடற்கரையோரப் பகுதிகளிலிருந்த பல இடங்கள், காளிம்பஜார், வங்காளத்திலுள்ள டாக்கா, பீஹாரிலுள்ள பாட்னா, சூரத், வடஇந்தியாவிலுள்ள அஹமதா பாத், ஆக்ரா முதலிய இடங்களிலெல்லாம் தமது வணிகக் களன் களை ஏற்படுத்தினர். மலபாரிலும் அவர்களுக்கு ஏழு வணிகக் களன்கள் இருந்தன. இவ்வாறாக, டச்சுக்காரர்கள் இந்திய வர்த்தகத்தில் ஐரோப்பிய நாடுகளுக்குத் தேவைப்பட்ட பொருள் களில் பெரும் பலம் பெற்றார்கள். எனவே, ஹாலந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையே கெடுபிடியான கடற்போர் 1652–54, 1665–67, 1672–74 ஆகிய வருடங்களில் நடந்தது; மேலும், 1672 முதல் 1713 வரை பிரான்ஸ் நாட்டோடும் தொடர்ந்து போரிட நேர்ந்தது. இக் கடும்போர்களால் ஹாலந்து நாட்டிற்குப் பெருத்த நட்டம் ஏற்பட்டது. அதோடு, இந்தியக் கடற்கரையோரப் பகுதிகளையெல்லாம் ஹாலந்து இழக்க நேரிட்டது. கடைசியாக, வங்காளத்தில் சின்சூரா என்ற இடம் மட்டுமே டச்சுக்காரர்களுக்குச் சொந்தமாக இருந்தது. ஆனால் ராபர்ட் கிளைவ் பிரபு என்பவர் ஆங்கிலக் கப்பற் படையுடனும் காலாட் படையுடனும் சென்று அந் நகரைத் தாக்கி, டச்சுக்காரர்களைத் தஞ்சம் அடையச் செய்தார். நிற்க, 1795 முதல் 1811 வரை நடை

பெற்ற பெரும் பிரெஞ்சுப் போரின்போது ஹாலந்து நாட்டின் குடியேற்றப் பகுதிகளையெல்லாம் ஆங்கிலேயர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி தம் ஆதிக்கத்தின் கீழிருந்த எல்லா இடங்களுக்கும் பொதுவான பல்வேறு நாணயங்களைத் தமது சொந்த நாட்டிலேயே அச்சிட்டு வெளியிட்டு வந்தன. ஹாலந்து நாட்டின் மாநில நாணயச்சாலைகளான உட்ரெக்ட், ஸீலாந்து, கெல்டர்லாந்து, ஓவரிசிசல் ஆகியவை "சில்வர் ரைடர்" எனப் புகழ்பெற்ற **துகாதூன்கள்** நாணயங்களை வெளியிட்டு வந்தன. இவற்றின் முன்புறத்தில் போர்க் கவசம் அணிந்துள்ள குதிரை வீரனின் சின்னம் முத்திரையிடப்பட்டுள்ளது; அச் சின்னத்திற்குக் கீழே மாநில அரசின் சின்னம் பொறிக்கப் பட்டுள்ளது; அதோடு MON: FOED: BELG: PRO: (HOLL :) USUM SOCIET : IND : ORIENT என்றும் பொறிக்கப் பட்டுள்ளன. (இதில் அடைகுறியிலுள்ள HOLL என்பது ஹாலந்து மாநிலத்தைக் குறிப்பிடுகிறது; மற்ற மாநில நாணயச் சாலைகள் வெளியிட்ட நாணயங்களில் அவற்றின் பெயரை இந்த இடத்தில் காணலாம்.) பின்புறத்தில் அந் நாட்டின் சின்னக் கேடயத்தை இரண்டு சிங்கங்கள் தாங்கிக்கொண்டிருப்பது போலவும், அதற்குக் கீழே அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்ட பட்டயமொன்றில் கம்பெனியைக் குறிப்பிடும் VOC என்ற சுருக்கெழுத்துக்களும் முத்திரையிடப்பட்டுள்ளன; அதோடு, சின்னமுள்ள கேடயத்தின் உச்சியில் மகுடமும் அதற்குமேல் வருடமும் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும் CONCORDIA RES PARVAE CRESCUNT என்ற வாசகமும் உள்ளது. கம்பெனியின் புழக்கத்திற்கென்று வெளியிடப்பட்ட இந்த **துகாதூன்கள்** நாணயங்களோடு, மூன்று **கில்டர்**, ஒரு **கில்டர்**, அரைக் **கில்டர்** என்ற வெள்ளி நாணயங்களும் நான்கு மாநில நாணயச்சாலை களால் வெளியிடப்பட்டன. இவற்றில் ஒருபுறத்தில் நின்று கொண்டிருப்பதுபோன்ற பல்லாஸின் (பிற்காலத்தில் நீர்லாந்தியா என்று அழைக்கப்பட்டது) உருவமும், வருடமும், HAC NITIMVR—HANC TVEMVR என்ற வாசகமும், அதையடுத்து நாணயத்தை வெளியிட்ட மாநிலப் பெயரின் சுருக்கெழுத்துக்

களும் முத்திரையிடப்பட்டுள்ளன. 1726-ல் செம்பில் அச்சிடப்பட்ட **டாயிட்டுகள்** என்ற முழு நாணயங்களும், பின் 1749-ல் அரை **டாயிட்டுகளும்** கம்பெனியின் புழக்கத்திற்கென்று வெளியிடப்பட்டன. இவற்றில் ஒரு புறத்தில் மகுடம் சூட்டப்பட்ட மாநில அரசின் கேடயச் சின்னம் உள்ளது ; மறுபுறத்தில் கம்பெனியினைக் குறிப்பிடும் VOC என்ற சுருக்கெழுத்துக்கள் உள்ளன. இந்தியாவில் கொச்சியிலும் சோழமண்டலக் கடற்கரைப் பகுதிகளிலும் இந் நாணயங்கள் புழங்கிவந்தன.

டச்சுக் கம்பெனி, ஏற்கெனவே இந்தியாவில் புழங்கிவந்த பாரசீக அப்பாசிட் நாணயங்கள், இந்தோ–போர்த்துகீசிய **தங்கா** நாணயங்கள், சூரத்தில் அச்சிடப்பட்ட **லாரின்**, ரூபாய் ஆகிய முகலாய நாணயங்கள் ஆகியவற்றில், தம் கம்பெனி முத்திரை யிட்டு அவற்றையும் வெளியிட்டு வந்தது. அதோடு மட்டுமன்றி, பழவேற்காடு, நாகபட்டினம், மசூலிப்பட்டினம், பாண்டிச்சேரி, கொச்சி முதலிய தல நாணயங்களைப் போல் செய்யப்பட்ட நாணயங்களையும் வெளியிட்டது. மேலும், பரங்கிப் பேட்டையின் **பக்கோடா** நாணயங்களைப் போல் நாகபட்டினத்திலிருந்தும், மசூலிப்பட்டினத்திலிருந்தும் சில நாணயங்களை வெளியிட்டது ; இவற்றின் பின்புறம் புடைத்து சொரசொரப்பாகவும் இருக்கும் ; முன்புறத்தில் நான்கு கைகளுடைய பெண் தெய்வத்தின் உருவத்தைக் காணலாம். நிற்க, பழவேற்காட்டிலிருந்து சில **பக்கோடாக்**களையும் **பணங்க**ளையும் வெளியிட்டதாகவும் தெரி கிறது. **அப் பக்கோடா**க்களில் புரியாத நாகரி வாசகமும் **பணங்**களில் புரியாத பாரசீக வாசகமும் முத்திரையிடப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. மேலும், அவற்றில் ஒரு பெண் தெய்வத்தின், ஒரு வேளை லட்சுமியின் உருவம் முத்திரையிடப்பட்டிருந்ததாகவும் கூறுவர். டச்சுக்காரர்கள் சில வெள்ளி நாணயங்களை நாக பட்டினத்திலும் பழவேற்காட்டிலும் அச்சிட்டு வெளி யிட்டனராம். அவற்றில் "ஐக்கிய மாநிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் புழக்கத்திற்கென்று அமைப்பிலும் எடையிலும் சிக்கா நாணயங்களைப் போல் அச்சிடப்பட்ட வெள்ளி நாணயம்" என்ற பொருள்படும் பாரசீக வாசகம் இருந்ததாகச் சொல்லப்

படுகிறது. ஆனால் அப்படிப்பட்ட நாணயம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. எவ்வாறிருப்பினும், இது போன்ற வாசகத்தை அவர்கள் பொறித்திருப்பார்களாவென்பது சந்தேகம்; ஒருவேளை, முகலாயர்களைப் போல் பாரசீக மொழி வாசகத்தை வேண்டுமானால் அவர்கள் பயன்படுத்தியிருக்கக்கூடும். கொச்சியிலிருந்து வெளியிடப்பட்ட சில வெள்ளி நாணயங்கள் கிடைத்துள்ளன. இவற்றில் ஒருபுறம் பெண் தெய்வத்தின் X உருவம் (காளியின் உருவமோ?) முத்திரையிடப்பட்டுள்ளது; மறுபுறத்தில் படுகிடையாக அச்சிடப்பட்டுள்ள J என்ற எழுத்தும், அதற்கு மேலே OC என்ற கம்பெனிப் பெயரின் (Oostindische Compagnies) சுருக்கெழுத்தும், கீழே பன்னிரண்டு புள்ளிகளும் அச்சிடப்பட்டுள்ளன. இந்த நாணயங்களை வேண்டுமானால் டச்சுக்காரர்கள் வெளியிட்டதென்று கூற இடமுண்டு. மற்றப்படி வெள்ளி நாணயம் எதையும் டச்சுக்காரர்கள் வெளியிட்டதில்லை.

செம்பு, ஈயம், வெள்ளீயம் ஆகிய உலோகங்களில்கூட டச்சுக்காரர்கள் தம் நாணயங்களை வெளியிட்டதாகக் கூறுகின்றனர். நாகபட்டினத்திலிருந்து 15 **காசு**, 10 **காசு**, 4 **காசு**, 2 **காசு**, 1 **காசு** என்று செம்புக் **காசுகள்** வெளியிடப்பட்டதாம். அவற்றில் ஒரு புறத்தில் டச்சுக் கம்பெனியின் சின்னமாக VOC என்ற எழுத்துக்களும் அதற்கு மேலோ அல்லது கீழோ நாகபட்டினத்தைக் குறிப்பிடும் N என்ற எழுத்தும், பின்புறத்தில் இரண்டு வரிகளில் பொறிக்கப்பட்ட **நாகபட்டணம்** என்ற தமிழ்ப் பெயரும் முத்திரையிடப்பட்டிருந்ததாகக் கூறுகின்றனர். இதே போன்ற முத்திரைகளில் சில ஈயக்காசுகளையும் நாகபட்டினத்திலிருந்து வெளியிட்டதாகவும் கூறுவர். மேலும், கி.பி. 1695-ல் ஒரு புறத்தில் அரைகுறையாகப் பொறிக்கப்பட்ட பெண் தெய்வத்தின் உருவத்திலும், மற்றொரு புறத்தில் **நாகபட்டணம்** என்ற தமிழ்ப் பெயரிலும் இரண்டு **ஸ்திவர்கள்**, **டாயிட்டுகள்**, அரை **டாயிட்டுகள்** என்றழைக்கப்பட்ட செம்பு நாணயங்களையும் அவர்கள் வெளியிட்டதாகக் கூறுகின்றனர். ஆனால், இது போன்ற சின்னம் கொண்ட செம்புக் **காசுகள்** சில புதுச்சேரி என்ற தமிழ் வாசகத்துடன் பாண்டிச்சேரியிலிருந்து வெளியிடப்பட்டதாக அறிய வருகிறோம். ஒருவேளை, இவ்வகை நாணயங்களை

யெல்லாம் அவர்கள் 1693-லிருந்து 1698 வரை வெளியிட்டிருக்கலாம்.

மேலும், வெள்ளிப் **பணங்களின்** முத்திரைச் சின்னத்துடன் **ராசி**, அரை **ராசி** என்றழைக்கப்பட்ட செம்பு நாணயங்களைக் கொச்சியிலிருந்து வெளியிட்டனர். அவற்ரோடு 1663 முதல் 1724 வரை கம்பெனியின் முத்திரை கொண்ட **பஜாருக்கோஸ்** எனப்பட்ட செம்பு நாணயங்களையும் கொச்சியிலிருந்து வெளியிட்டதாகவும் அறிய வருகிரோம். ஆனல் அந்த மாதிரியான செம்பு நாணயம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. எனினும், வெள்ளீயத்தில் அச்சிடப்பட்ட சில **பஜாருக்கோஸ்** நாணயங்கள் கிடைத்துள்ளன; ஆனல் இவற்றின் பின்புற முத்திரை ஒரே மாதிரியாக இல்லை. பழவேற்காட்டிலிருந்துகூட, சில செம்பு நாணயங்கள் வெளியிடப்பட்டதாகக் கூறுவர். 1646-க்கு முன்னர் இரண்டு காசு, ஒரு காசு நாணயங்களை இந்த நாணயச்சாலை வெளியிட்டதாகவும், அவற்றில் ஒருபுறத்தில் பழவேற்காட்டைக் குறிப்பிடும் P என்ற எழுத்தும், கம்பெனியின் முத்திரையும், மற்ருரு புறத்தில் **இரத்னீரி பாரகா** என்ற புதிரான நாகரி வாசகமும் முத்திரையிடப்பட்டிருந்ததாகக் கூறுகின்றனர். ஆனல் 1646-க்குப் பின் வெளியிடப்பட்ட நாணயங்களில் பின்புறம், கோல்கொண்டா மன்னரின் முத்திரையிலிருந்த **ராப் சுல்தான் அல்த்** என்ற பாரசீக வாசகம் இருந்ததாக அறியவருகிரோம். இந்த வாசகம் தொடக்கத்தில் நீண்டதாகவும் பொருள் நிறைந்ததாகவும் இருந்திருக்க வேண்டும்; நாளடைவில் அது சுருக்கப்பட்டுச் சீர்கெட்ட வாசகமாக நாணயங்களில் முத்திரையிடப்பட்டதாகத் தெரிகிறது. கடைசியாக, பதினெட்டாம் நூற்ருண்டில் பழவேற்காட்டிலிருந்து வெளியான **காசில்** பின்புறம் PALEACATTA என்ற பெயரோடு, a, G என்ற இரண்டு எழுத்துக்களும் முத்திரையிடப்பட்டன; இதில் a, G என்ற எழுத்துக்கள் அங்கிருந்த ஜெல்ரியா என்னும் கோட்டையைக் குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

டேனியர்கள்

டென்மார்க்கின் மன்னராக இருந்த நான்காம் கிறிஸ்தியன் என்பவரின் விருப்பப்படி, கி.பி. 1616-ல் கோபன் ஹேகன் என்னுமிடத்தில் டேனியக் கிழக்கிந்தியக் கம்பெனியொன்று தொடங்கப்பட்டது. 1618, ஆகஸ்டு மாதத்தில் அக்கம்பெனிக்குச் சொந்தமான **ஓரிஸண்ட்** என்றழைக்கப்பட்ட கப்பல் ரோலண்ட் கிரேப் என்ற டச்சுக்காரரின் தலைமையில் டென்மார்க்கிலிருந்து புறப்பட்டது. ஆனால், சோழமண்டலக் கடற்பகுதியில் வந்து கொண்டிருந்த அக் கப்பலைப் போர்த்துகீசியர் தாக்கி, அதை மூழ்கடித்துவிட்டனர். அதற்குப்பின், 1618 நவம்பர் மாதத்தில் டென்மார்க்கிலிருந்து புறப்பட்டுவந்த ஐந்து கப்பல்களும் இந்தியக் கடற்கரையை அடைந்தன. 1620-ல் தஞ்சாவூரில் ஆட்சி செய்து வந்த நாயக்கருடன் டேனிய வணிகர்கள் ஒப்பந்தம் செய்தனர். அதன்படி ஆண்டொன்றுக்கு ரூ. 4000 கப்பம் கட்டுவதாகக் கூறி, நாகபட்டினத்திலிருந்து 18 மைல் தொலைவி லுள்ள தரங்கம்பாடியையும் அதைச் சுற்றியுள்ள பதினைந்து கிராமங்களையும் நாயக்கரிடமிருந்து பெற்றனர். மறு வருடமே தரங்கம்பாடியில் டேன்ஸ்பர்க் என்றழைக்கப்பட்ட கோட்டை யைக் கட்டி, குடியமர்ந்தனர். நாளடைவில், டேனிய வணிகர்கள் பரங்கிப்பேட்டை, வங்காளத்திலுள்ள சிராம்பூர், பலசோர் முதலிய இடங்களிலும் தமது வணிகக்களன்களை நிறுவினர். எனினும், தரங்கம்பாடிதான் அவர்களது முக்கியமான வணிகக்களனாய் இருந்து வந்தது. இவ்வாறாக இந்தியாவில் குடியமர்ந்த டேனியர்கள், ஏனைய ஐரோப்பிய நாட்டு வணிகர் களைப் போல் உள்நாட்டு அரசியலில் தலையிடாமல், அருகிலிருந்த அரசுகளுடன் நட்புறவு கொண்டு வியாபாரத்திலேயே கண்ணும் கருத்துமாயிருந்தனர். ஆனால், 1807-ல் இங்கிலாந்து டென் மார்க்குடன் போர் தொடுத்தபோது, சென்னையிலிருந்த ஆங்கிலப் படையினர் தரங்கம்பாடியைக் கைப்பற்றினர்; பின்னர், 1714-ல் ஏற்பட்ட சமாதான ஒப்பந்தப்படி அதை மறுபடியும் டேனியர்கள் வசம் ஒப்படைத்து விட்டனர். அதையன்றி, வேறெந்த விதமான குழப்பமுமின்றி அமைதியான முறையில்

வணிகம் செய்து வந்தனர் டேனியர்கள். ஆனால் 1845-ல், ஆங்கிலேயர்கள் இரண்டு மில்லியன் **க்ரோனர்** கொடுத்துத் தரங்கம்பாடியை விலைக்கு வாங்கினர்.

இருநூறு ஆண்டுகளுக்கு மேல் இந்தியாவில் தங்கியிருந்த டேனியர்கள் நாட்டை ஆளவேண்டுமென்ற பேராசையின்றி, தம் வணிகத்தில் மட்டும் அக்கறை கொண்டிருந்தனர். அதற்காக தங்கம், வெள்ளி, செம்பு, ஈயம் ஆகிய உலோகங்களில் தம் நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டுவந்தனர். அதற்கிடையில் 1729-ல் டேனியக் கிழக்கிந்தியக் கம்பெனி மூடப்பட்டு விட்டது. ஒரு சில ஆண்டுகளுக்குப்பின், ஆறும் கிறிஸ்தியன் என்பவரின் ஆட்சியின்போது, 1732-ல் டேனிய ஆசியக் கம்பெனி என்ற பெயரில் புதியதொரு கம்பெனி தொடங்கப்பட்டது. 1839 வரை அது இயங்கி வந்தது.

டேனியர்கள் முதன் முதலில் வெளியிட்ட நாணயங்களெல்லாம் ஈய நாணயங்கள்தான். ஆனால் அவை கிடைப்பது மிகக் கடினம்; அப்படியே கிடைத்தாலும், அவை தூர்ந்து போனதாகவே இருக்கும்; எனவே, அவற்றில் என்ன முத்திரை இருந்ததென்று சொல்வதற்கில்லை. நான்காம் கிறிஸ்தியன் என்பவரின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1620–1648), 1640-ல்தான் முதல் முறையாக ஈய நாணயங்கள் வெளியிடப்பட்டன. அவருக்குப்பின் மூன்றும் பிரெடரிக் (கி.பி. 1648–1670), ஐந்தாம் கிறிஸ்தியன் (கி.பி. 1670–1699) ஆகிய இருவரும் ஈய நாணயங்களைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தனர். அம் மூவருக்குப் பின்னர் வேறெவருமே ஈய நாணயங்களை வெளியிடவில்லை. அந்த ஈய நாணயங்களில் அவற்றின் மதிப்பு முத்திரையிடப்படவில்லை. எனினும் அவையனைத்தும் **காசு** என்றுதான் அழைக்கப்பட்டு வந்தன. மூன்றும் பிரெடரிக் ஆட்சியின்போது கி.பி. 1667-ல்தான் முதன் முதலில் செம்பு நாணயங்கள் வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது. அச்செம்பு நாணயங்களும் **காசு** என்றுதான் அழைக்கப்பட்டு, 10, 2, 1 **காசு** என்று மூன்று விதமாக வெளியிடப்பட்டன. எனினும், மூன்றும் பிரெடரிக் காலத்திலும், ஐந்தாம் கிறிஸ்தியன் காலத்திலும் கூட அவற்றின் மதிப்பு முத்திரையிடப்படவில்லை. ஐந்தாம் பிரெடரிக் ஆட்சியின்போதுதான் (கி.பி. 1699–1730) நாணயங்

களின் மதிப்பை முத்திரையிடும் பழக்கம் தொடங்கியது. அவர் நிர்ணயித்தபடிதான் கடைசி வரை டேனிய நாணயங்களில் அவற்றின் மதிப்பு முத்திரையிடப்பட்டுவந்தது. ஐந்தாம் கிறிஸ்தியன் காலத்தில்தான் **பணம்** என்றழைக்கப்பட்ட நாணயத்தைப்போல் **பஞே** என்ற வெள்ளி நாணயம் 1693-ல் புகுத்தப்பட்டது. அந்த **பஞே** என்னும் வெள்ளி நாணயம் அக்காலத்தில் தென்னிந்தியாவில் இருந்த பணத் திட்டத்திற்கு ஏற்றதாகவே இருந்தது. எனினும், 1755-ல் அதற்குப்பதிலாக **ராயலின்** எனப்பட்ட புது வெள்ளி நாணயம் புகுத்தப்பட்டது. அப் புது நாணயம்கூட அவ்வளவு மாறுபட்டதல்ல. **பஞே**வைப் போல அதுவும் அரைக்கால் **சிக்கா** ரூபாய்க்கு, அல்லது 80 செம்புக் காசுகளுக்குச் சமமானதாகவே இருந்தது. பின்னர், 1816-ல் மறுபடியும் **பஞே** நாணயமே புகுத்தப்பட்டு, 1818 வரை நீடித்து வந்தது. 1818-ல் வெள்ளி நாணயம் அச்சிடப்படுவதே நிறுத்தப் பட்டது. ஏழாம் கிறிஸ்தியன் காலத்தில் மட்டும்தான் (கி.பி. 1766–1808) **ஹான்கள்** அல்லது பக்கோடாக்கள் போன்ற தங்க நாணயங்களும் வெளியிடப்பட்டன ; ஆனால் இன்று அவை கிடைப்பதில்லை.

மேற்குறிப்பிட்ட டேனிய நாணயங்கள் அனைத்திலும் ஒரு புறத்தில், மன்னரின் பெயரிலிருந்த முதல் எழுத்து மட்டும்தான் உள்ளது ; ஒரு சிலவற்றில் மட்டும் மகுடமும் காணப்படுகிறது. அந்தக் காலத்தில் டேனிய மன்னர்கள் அனைவரும் கிறிஸ்தியன், பிரெடெரிக் என்ற இரு பெயர்களில்தான் மாறிமாறி ஆட்சி செய்து வந்தனர். எனவே, அப் பெயர்களால் எத்தனையாவது மன்னர் என்பதை அவரவரின் முதலெழுத்தோடு சேர்த்து முத்திரையிட்டு வந்தனர். கிறிஸ்தியன் என்ற பெயர் கொண்ட மன்னர்களின் நாணயங்களில் C என்ற முதலெழுத்துக்குள்ளேயே எண்ணும் முத்திரையிடப்பட்டுள்ளது ; பிரெடெரிக் மன்னர்களின் நாணயங்களில் F என்ற எழுத்தோடு எண் பிணைக்கப் பட்டுள்ளது. சில நாணயங்களில் மன்னரின் பெயரைக் குறிக்க இரண்டு எழுத்துக்கள் முத்திரையிடப்பட்டுள்ளன. சான்றாக, ஆறாம் பிரெடெரிக், எட்டாம் கிறிஸ்தியன் இருவரும் தத்தம் பெயரின் முதலெழுத்தோடு, அரசரைக் குறிப்பிடும் Rex என்ற

சொல்லின் முதலெழுத்துத்தான் R என்ற எழுத்தையும் சேர்த்து முத்திரையிட்டு, அதற்குக் கீழே தத்தம் எண்களை ரோமானிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளனர்.

இந் நாணயங்களின் பின்புறத்தில் கம்பெனிப் பெயரின் முதலெழுத்துக்களை மன்னரின் மகுடத்துடன் சேர்த்துப் பொறித்துள்ளனர். ஒரு சிலவற்றில் மட்டும் மகுடத்திற்குக் கீழே பொறித்துள்ளனர். தனித்தனி பெயர்களில் இரண்டு கம்பெனிகள் இயங்கிவந்ததால், அவற்றின் முதலெழுத்துக்களும் வெவ் வேருகவே உள்ளன. சான்ருக, முதல் கம்பெனியின் பெயரை (Dansk Ostindisk Compagni) 'DOC' என்று பொறித்துள்ளனர்; இதில் D-யும் C-யும் O-வுடன் பிணைந்துள்ளன. இரண்டாவது கம்பெனியின் பெயர் DAC என இருந்துள்ளது. இதில் D-யும் C-யும் A-வுடன் பிணைந்துள்ளன. ஒரு சில நாணயங்களில் மட்டும் DC என்ற இரண்டெழுத்துக்கள்தான் உள்ளன. டேனியர்களின் வெள்ளி நாணயங்களில் மூன்று சிங்கங்கள் இடப்புறமாக ஓடுவது போன்ற அவர்களது நாட்டுச் சின்னமுள்ள கேடயம் மகுடத்தின் கீழ் முத்திரையிடப் பட்டுள்ளது. ஒரு சிலவற்றில் அம்மகுடத்தின் இரு புறமும் இரண்டு துணிக்கச்சைகள் தொங்குவதுபோலுள்ளன.

மேற்குறிப்பிட்ட நாணயங்களைத் தவிர, இந்தியாவில் புழங்கு வதற்கென்று **துகட்** எனப்பட்ட சில தங்க நாணயங்களும் கோபன் ஹேகன் நாணயச்சாலையில் அச்சிடப்பட்டதாகக் கூறுகின்றனர். அவற்றில் மூன்ரும் பிரெடெரிக் வெளியிட்ட **துகட்களில்** மட்டும் பின்புறத்தில் நடுவில் ஒரு கப்பலும், இரு புறங்களிலும் **தண்டம்** எனப்பட்ட வண்டிகளும், அக் கப்பலைச் சுற்றிலும் **டோமினேஸ் ப்ரோவிதெபித்** என்ற வாசகமும் உள்ளன.

பிரெஞ்சுக்காரர்கள்

கிழக்கத்திய நாடுகளும் தாமும் வணிகம் செய்து இலாபம் பெற வேண்டுமென்று எண்ணிய பிரெஞ்சுக்காரர்கள் கி.பி. 1664-ல் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியைத் தொடங்கினர். 1668-ல்

இந்தியாவிற்கு வந்து சூரத் என்னுமிடத்தில் பிரெஞ்சு வணிகத் தளத்தை முதன்முதலாக ஏற்படுத்தினர். பின்னர், 1669-ல் கோல்கொண்டாவில் இருந்த சுல்தானின் அனுமதிபெற்று மசூலிப் பட்டினத்தில் மற்றொரு வணிகத் தளத்தைத் தொடங்கினர். 1672-ல் சென்னையிலுள்ள சாந்தோமைக் கைப்பற்றினர் ; ஆனால் சிறிது காலம் கழித்து அதை டச்சுக்காரர்களிடம் ஒப்படைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. 1673-ல் வாலிகொண்ட புரத்தில் இருந்த முகலாய ஆளுநரிடமிருந்து ஒரு சிறிய கிராமத்தைப் பெற்றனர் ; அக் கிராமம்தான் பின்னர் பிரெஞ்சுக் காரர்களின் முக்கியமானதோர் நிலைக்களனாக வளர்ந்து பாண்டிச் சேரி என்ற பெயரைத் தாங்கியுள்ளது. 1674-ல் வங்காளத்தி லிருந்த நவாப்பிடமிருந்து ஒரு காலியிடத்தைப் பெற்று, அவ்விடத்தில் சந்திரநாகூர் என்ற பெயரில் பெரியதொரு வணிகக்களனை 1690-92-ல் தொடங்கினர். ஆனால், டச்சுக்காரர் களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்குமிடையே ஏற்பட்ட பகையினால் யுத்தம் ஏற்பட்டு, பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் கொண் டிருந்த பல தளங்களை இழக்க நேரிட்டது. 1693-ல் பாண்டிச் சேரியையும் டச்சுக்காரர்கள் கைப்பற்றினர் ; எனினும், 1697-ல் அது மறுபடியும் பிரெஞ்சுக்காரர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. சில காலத்திற்குப் பின்னர், அதாவது, பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தம்வசமிருந்துவந்த பாண்டம், சூரத், மசூலிப்பட்டினம் ஆகிய தளங்களை பிரெஞ்சுக்காரர்கள் கைவிட நேரிட்டது ; அதே சமயம் ஏனைய இடங்களிலும் அவர் களின் செல்வாக்குக் குறைந்தது. இதனால் பிரெஞ்சுக் கம்பெனிக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டது. எனவே, 1720ஆம் வருடம் ஜூன் மாதம் அக்கம்பெனி நிரந்தரமாக வணிகம் செய்யும் வகையில் திருத்தி அமைக்கப்பட்டு, மறுபடியும் செல்வாக்குடனும் வளத்துடனும் வளரத் தொடங்கியது. 1725-ல் மலபார் கடற் கரையிலுள்ள மாஹி என்னுமிடத்தையும், பின் 1739-ல் காரைக் காலையும் பிரெஞ்சுக்காரர்கள் பற்றினர். அப்போதெல்லாம் வணிக நோக்கமே பிரெஞ்சுக்காரர்களின் எண்ணத்தில் இருந்தது. ஆனால், 1742-க்குப் பின்னர் இந்தியாவில் பேரரசை நிறுவ வேண்டுமென்ற பேராசை பிறந்தது. அதனால் ஆங்கிலேயர்

களின் பகையும் மூண்டது. இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் நடந்த நெடுங்காலப் போரில் ஆங்கிலேயரின் கை ஓங்கியது; எனவே இந்தியாவிலிருந்து வந்த பிரெஞ்சு ஆதிக்கம் ஒடுக்கப் பட்டது.

பிரெஞ்சுக்காரர்கள் தம் ஆதிக்கத்திலிருந்த இந்தியப் பகுதி களுக்கென்று வெளியிட்ட நாணயங்கள் இருவகைப்படும். முதல் வகை நாணயங்கள் முகலாயப் பாணியில் அச்சிடப்பட்டு வந்தன. இவற்றை 1736-ல் ஆற்காட்டு நவாப்பின் அனுமதியுடன் ஆற்காடு என்ற நாணயச்சாலையின் பெயருடன் பாண்டிச்சேரியி லிருந்து வெளியிட்டு வந்தனர். கி.பி. 1830-ல் பாண்டிச்சேரி நாணயச்சாலை மூடப்பட்டது. அதுவரை இந் நாணயங்களைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தனர். ஆனால், 1761–1763, 1778–1783, 1793–1802, 1803–1816 ஆகிய ஆண்டுகளில் மட்டும் பாண்டிச்சேரியை ஆங்கிலேயர்கள் ஆக்கிரமித்துக்கொண்டதால் இந் நாணயங்கள் வெளியிடப்படவில்லை. இந் நாணயங்களையெல் லாம் முகமது ஷா, அஹமது ஷா, இரண்டாம் ஆலம் கீர், இரண்டாம் ஷா ஆலம் ஆகிய முகலாயப் பேரரசர்களின் பெயர் களிலேயே வெளியிட்டு வந்தனர். இவற்றில் முக்கியமான சின்னமாகச் சந்திரனையும் முகலாய வாசகங்களையும் முத்திரை யிட்டு வந்தனர். இரண்டாம் ஷா ஆலமின் பெயரில் அச்சிடப் பட்ட நாணயங்களைக் கி.பி. 1806-ல் அவர் இறந்த பின்னரும் தொடர்ந்து வெளியிட்டனர். இந் நாணயங்களில் தொடக்கத்தில் வெளியிடப்பட்டவற்றிலெல்லாம் முகலாய மன்னரின் ஆட்சி ஆண்டும், ஹிஜ்ரீ வருடமும் முத்திரையிடப்பட்டன. ஆனால், கி.பி. 1817-க்குப் பின்னர், எந்த ஆண்டில் வெளியிடப்பட்ட நாணயமாக இருந்தாலும் அவற்றில் 1221 என்ற ஒரே ஹிஜ்ரீ ஆண்டையும், அவ்வாண்டிற்குரிய ஆட்சி ஆண்டான 45ஆவது வருடத்தையுமே முத்திரையிட்டுள்ளனர். 1751-லிருந்து 1759 வரை மசூலிப்பட்டினத்தில் அச்சிடப்பட்ட சில நாணயங் களில் நாணயச்சாலையின் சின்னமென்று திரிசூலத்தை முத்திரை யிட்டிருக்கின்றனர். 1749-ல் சூரத்திலிருந்த நவாப்பின் அனுமதியுடன் சூரத்திலேயே சில நாணயங்களை அச்சிட்டு, அவற்றில் முகலாயப் பேரரசராயிருந்த அஹமது ஷாவின்

பெயரையும், அவரது ஆட்சியின் 2ஆவது வருடத்தையும் (கி.பி. 1749–50) பொறித்து வெளியிட்டிருக்கின்றனர். மேலும், கி.பி. 1793-லிருந்து 1816 வரை பிரெஞ்சுக்காரர்கள் பாண்டிச்சேரியிலிருந்து விரட்டப்பட்டுவிட்டதால், அப்போதும் இரண்டாம் ஷா ஆலமின் பெயரில் சூரத் நாணயச்சாலை யிலேயே தம் நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டதாகத் தெரிகிறது. ஆனால் இவற்றில் நாணயச்சாலையின் பெயர் கிடை யாது; எனினும், இவற்றில் சூரத் கலைஞர்களின் திறமை காணப் படுகிறது. 1738-ல் வங்காளத்தில் நாணயங்களை அச்சிடும் உரிமை பிரெஞ்சுக்காரர்களுக்கு வழங்கப்பட்டது. எனவே, அவர்களுக்குச் சொந்தமான சந்திரநாகூரில் சில நாணயங்களை அச்சிட்டதாகத் தெரிகிறது; ஆனால், அந்த நாணயங்களிலும் மூர்ஷிதாபாத் என்ற நாணயச்சாலையின் பெயர் இருப்பதால், சந்திரநாகூரில் அச்சிடப்பட்ட நாணயங்கள் எவையென்று கண்டுபிடிக்க முடியவில்லை.

பிரெஞ்சுக்காரர்கள் வெளியிட்ட மற்றொரு வகை நாணயங்கள் தென்னிந்திய நாணயங்களைப் போன்றவை. தங்கத்தில் அச்சிடப் பட்ட சில **பக்கோடா** நாணயங்களைப் பாண்டிச்சேரியிலிருந்தும் ஏனமிலிருந்தும் வெளியிட்டனர்; அவற்றில் சொரசொரப்பான பின்புறம் நடுவில் சந்திரனின் சின்னத்தை முத்திரையிட்டனர். முன்புறத்தில் பாண்டிச்சேரி நாணயங்களில் லட்சுமியின் உருவத்தையும், ஏனம் நாணயங்களில் மும்மூர்த்திகளின் உருவங் களையும் முத்திரையிட்டனர். அடுத்து, வெள்ளியில் இரண்டு பணம், ஒரு பணம், அரைப்பணமென்று மூவகை நாணயங்களை வெளியிட்டனர். ஆனால், அவற்றின் சின்னம் அடிக்கடி மாற்றப் பட்டு வந்தது. சான்றாக, முதன்முதலில் கி.பி. 1700-ல் வெளி யிடப்பட்ட பணங்களில் ஒரு புறத்தில் **ஃபுளூய்யெ-தெ-லிஸ்**[1] ஒன்றையும் அதைச்சுற்றி 'PONDICHERY 1700' என்ற வாசகத் தையும் அச்சிட்டனர். மறுபுறத்தில் நடுவில் வேறொரு **ஃபுளூய்யெ-தெ-லிஸையும்** அதன் நான்கு மூலைகளிலும் ஒன்றையொன்று நோக்கியிருப்பதுபோல சோடி சோடியாக L என்ற எழுத்தைத்

---

[1] **ஃபுளூய்யெ-தெ-லிஸ் என்பது மூன்று அல்லி மலர்கள் கொண்ட சின்ன மாகும்.**

தலைகீழாகவும் அச்சிட்டனர். *1720*-ல் வெளியிட்ட பணங்களில் ஒரு புறம், **ஃபுளுய்யெ-தெ-லிஸ்** ஒன்றையும் ஒரு மகுடத்தையும் முத்திரையிட்டனர்; மறுபுறத்தில் வேறொரு ஃபுளுய்யெ-தெ-லிஸை ஒரு வட்டத்தில் பொறித்து, அதைச் சுற்றி நான்கு புறங்களிலும் சோடி சோடியான L என்ற எழுத்துக்களை ஒன்றையொன்று உள்நோக்கியிருப்பதுபோல் அச்சிட்டனர். *1750*-ல் தல நாணயங்களைப் போலவே அச்சிட்டுத் தம் நாணயங்களை வெளியிட்டனர். இவற்றில் ஒரு புறத்தில் **ஃபிரான்ஸி கம்பெனி** என்னும் பாரசீக வாசகத்தையும், மற்றொரு புறத்தில் 'Phulcheri San *1750*' என்ற வாசகத்தையும் பெரிய P என்ற எழுத்தையும் முத்திரையிட்டனர். *1837*-ல் ஒருபுறம் மகுடத்தையும் மற்றொரு புறம் ஐந்து ஃபுளுய்யெ–தெ-லிஸ்களையும் கொண்ட நாணயங்களை வெளியிட்டனர்.

அதே சமயம், ஃபுளுய்யெ-தெ-லிஸ்களுக்குப் பதிலாக இறக்கை விரித்துள்ள சேவற்கோழியின் உருவத்தைக் கொண்ட நாணயங்களையும் வெளியிட்டனர். செம்பில் **தௌடா**, **அரைத் தௌடா** நாணயங்களையும் **காசு**களையும் வெளியிட்டு வந்தனர். முதலில் வெளியிட்ட செம்பு நாணயங்களிலெல்லாம் ஒருபுறம் **ஃபுளுய்யெ–தெ–லிஸ்** ஒன்றையும், மறுபுறம் **புதுச்சேரி** என்ற தெலுங்குப் பெயரையும் முத்திரையிட்டனர். ஆனால் *1936*-ல் வெளியிட்ட செம்பு நாணயங்களில் **ஃபுளுய்யெ–தெ–லிஸு**க்குப் பதிலாக வெள்ளி நாணயங்களில் பொறித்த சேவற்கோழியையும் வருடத்தையும் முத்திரையிட்டனர். ஒரு சில நாணயங்களில் ஒருபுறம் **காரைக்கால்** என்ற பெயரையும், மறுபுறம் **புதுச்சேரி** என்ற பெயரையும் தெலுங்கில் அச்சிட்டிருக்கின்றனர். மேலும், **பிச்சே**, அரைப் **பிச்சே** என்றழைக்கப்பட்ட செம்பு நாணயங்களும் கிடைத்துள்ளன. ஒரு வேளை இவை மாஹியில் அச்சிடப்பட்டிருக்கலாம். இச்செம்பு நாணயங்களில் ஒருபுறம் **ஃபுளுய்யெ–தெ–லிஸ்** ஒன்றும் மறுபுறம் வருடமும் உள்ளன. இவற்றில் *1730*, *1750*, *1792*, *1820* என்ற வருடங்களைக் காணலாம். அவ்வாறு வருடம் பொறிக்கப்பட்டுள்ள புறத்தில் நாணயத்தின் ஓரம் குமிழ் குமிழாக இருக்கிறது.

ஆங்கிலேயர்கள்

இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்களில் ஆங்கிலேயர்கள்தாம் கடைசியில் வந்தனர் என்று சொல்ல முடியாது ; எனினும், மற்ற வர்களைக் காட்டிலும் அதிக நாட்கள் இங்குத் தங்கியவர்கள் அவர்கள்தாம். கீழை நாடுகளுடன் போர்த்துகீசியர் வணிகம் செய்து நிறைய இலாபம் திரட்டி வந்தனர். அதைக் கண்ட ஆங்கிலேயர்கள் தாமும் வணிகம் செய்யவேண்டுமென்று விரும்பி, டச்சுக்காரர்கள் வந்த அதே சமயத்தில் அவர்களும் இந்தியாவிற்கு வந்தனர். இலண்டன் வணிகர்கள் நிறுவிய கிழக்கிந்தியக் கம்பெனி முதலாம் எலிசபெத் ராணியால் கி.பி. 1600-ல் அங்கீகாரம் பெற்றது; கிழக்கிந்தியத் தீவுகளுடன் பதினைந் தாண்டுகள் வணிகம் செய்யும் முழு உரிமையை அக் கம்பெனியார் ராணியிடமிருந்து பெற்றனர். இருந்தபோதிலும், கி.பி. 1608-ல் இருந்தே இந்தியாவில் ஒரு வணிகத்தலத்தை உண்டாக்க முயற்சி செய்து வந்தனர். ஆனால், 1613-ல்தான் முகலாயப் பேரரசராயிருந்த ஜஹாங்கீரின் இசைவு பெற்று, சூரத்தில் தமக்கென்று நிரந்தரமானதொரு வணிகக்களனைத் தொடங்கினர். நாளடைவில், ஆக்ரா, அஹமதாபாத், புரோச் முதலிய இடங் களிலும் தம் வணிகத்தலங்களைக் கட்டினர். அதோடு, இரண்டாம் சார்லஸ் என்ற ஆங்கில மன்னர் போர்த்துகீசிய மன்னரின் மகளான காதரீனை மணந்தபோது, போர்த்துக்கீசிய மன்னர் தம் மகளுக்குச் சீதனமாக பம்பாயைக் கொடுத்தார்; சார்லஸ் மன்னர் கி.பி. 1668-ல் ஆண்டொன்றுக்குப் பத்துப் பவுன் குத்தகைக்கு பம்பாயைக் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்குக் கொடுத்தார். இயற்கைத் துறைமுகமான பம்பாயைக் கம்பெனியார் விரிவாக் கினர். 1687-ல் சூரத்தைக் காட்டிலும் பெரிய நிலைக்களனாக பம்பாய் வளர்ச்சி பெற்றது. 1611-ல் தென் கிழக்குக் கடற் கரையில் மசூலிப்பட்டினம் என்னுமிடத்திலும் தம் வணிகத் தலத்தை உருவாக்கினர். 1625-ல் மற்றொரு வணிகத் தலத்தை ஆர்மகான் என்னுமிடத்தில் தொடங்கினர். பின்னர், கி.பி. 1639-ல் சந்திரகிரி மன்னரிடமிருந்து சென்னையைக் குத்தகை விலைக்கு வாங்கினர் ; அங்கு வணிகப் பொருள்களைச் சேமித்து வைப்பதற்

கென்று கிடங்கு ஒன்றையும் செயின்ட் ஜார்ஜ் கோட்டை எனப் பட்ட கோட்டையையும் கட்டினர். சோழமண்டலக் கடற்கரையில் தமது தலைமைச் செயலகமிருந்த மசூலிப்பட்டினத்தைக் காட்டிலும் பெரிய நகரமாகச் சென்னை வளர்ந்தது. அடுத்து, வட கிழக்குப் பகுதியிலும் கம்பெனியார் ஆதிக்கம் விரிவடையத் தொடங்கியது. 1633-ல் மகாநதி டெல்டாப் பகுதியிலுள்ள அரிஹரபுரத்திலும், அதற்குப்பின், பலசூரிலும் தம் வணிகத் தலங்களை உருவாக்கினர். 1651-ல் ஹூக்ளியிலும், அதற்குப் பின்னர், பாட்னா, காசிம்பஜார் ஆகிய இடங்களிலும் கம்பெனி யாரின் வணிகத் தலங்கள் தோன்றின. இவ்வாறாக, பதினேழாம் நூற்றாண்டின் மத்தியில் முக்கியமான இந்திய நகரங்களெல்லாம் கம்பெனியாரின் வணிகத் தலங்களாக ஏற்பட்டு பலப்பட்டு விட்டன. ஆனாலும், அதுவரை கம்பெனியாரின் கவனம் வணிகத் திலேயேதான் இருந்துவந்தது. அதற்குப் பின்னர், மெதுவாக உள்நாட்டு அரசியலில் தலையிடத் தொடங்கிய கம்பெனியாரின் உள்ளத்தில் நாட்டை ஆள வேண்டுமென்ற பேராசையும் பிறந்தது. எனவே, நாளடைவில் துணை கண்டமான இந்தியா விற்கே அவர்கள் ஆட்சி செய்வோராயும் மாறினர்; அவர்களின் பேராசையும் நிறைவேறியது. கி.பி. 1834-லிருந்து இந்தியா கம்பெனியாரின் ஆட்சிக்கு அடிமைப்பட்டுவிட்டது. என்றாலும், 1857-ல் அந்நியர் ஆட்சியை எதிர்த்து இந்திய மக்கள் போராடினர்; அப்போராட்டம் வெற்றி பெறவில்லை என்றாலும் அப்போராட்டத்தினால் அதிருப்தியடைந்த பிரிட்டிஷ் அரசாங்கம் கம்பெனியாரின் ஆட்சிக்கு முடிவு கட்டிவிட்டு, இந்தியாவை நேரடியாகவே ஆளத் தொடங்கியது. இவ்வாறாக, இந்தியா பிரிட்டிஷ் பேரரசின் ஒரு பகுதியாக மாறிவிட்டது. என்றாலும் அந்நியர் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்காக இந்திய மக்கள் தொடங்கிய கிளர்ச்சி ஓயவில்லை. கடைசியில் 1947-ல் இந்தியா சுதந்திரம் பெற்றது; ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு வெளியேறினர்.

ஏனைய ஐரோப்பிய நாட்டுக் கம்பெனிகளுக்குத் தேவைப் பட்டதுபோல் ஆங்கிலநாட்டுக் கம்பெனிக்கும் வணிகம் செய்யப் பணம் தேவைப்பட்டது. அதற்காக, நேர்வழி, முறைகேடான

வழியென்று பாராமல் எல்லா வழிகளிலும் நாணயங்களை அச்சிட லாயினர். சென்னைப்பட்டினத்தை அவர்கள் குத்தகை ஏற்ற போது அங்கிருந்து புழங்கின நாணயங்களை வெளியிட அனுமதியும் பெற்ருர்கள். அடுத்து, இரண்டாம் சார்லஸின் மனைவிக்குச் சீதனமாகக் கொடுக்கப்பட்ட பம்பாயை அக்கம்பெனியார் குத்தகைக்கு எடுத்த பின்னர், பம்பாய் நாணயச்சாலையிலிருந்து நாணயங்களை அச்சிட்டு வெளியிடலாயினர்; அந் நாணயங்களில் ஆங்கில வாசகமிருந்ததால், அவை எல்லா இடங்கிலும் புழங்கவில்லை; பல வணிகர்கள் அவற்றை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டனர். அதனுல் கம்பெனிக்கு ஒரு பிரச்சினை எழுந்தது. தம் சொந்த நாணயச்சாலையில் முகலாய நாணயங்களைப்போல் தம் நாணயங்களையும் அச்சிட்டு வெளியிடுவதா, அல்லது தம்மிடமிருந்த உலோகக் கட்டிகளை முகலாய நாணயச்சாலைகளுக்கே அனுப்பி அச்சிட்டுக்கொள்வதா என்ற பிரச்சினை ஏற்பட்டது. பம்பாயிலிருந்த தம் நாணயச்சாலையில் முகலாய நாணயங்களைப் பின்பற்றி, சொந்தமாகவே அச்சிட்டுக்கொள்ள முடிவு செய்தனர். அவ்வாறு அவர்கள் வெளியிட்டபோது, தம் நாணய வெளியீட்டு உரிமையைக் கள்ளத்தனமாக அவர்கள் பயன்படுத்துவதாக இந்திய ஆளுநர்கள் குற்றம் சாட்டினர். எனவே, அக் கள்ள வழியை நேர்வழியாக்குவதற்கென்று எடையிலும் தரத்திலும் இந்திய நாணயங்களைப்போலவே தம் நாணயங்களையும் அச்சிடுவதற்கு இங்கிலாந்து நாட்டு மன்னர் இரண்டாவது ஜேம்ஸ் என்பவரிடமிருந்து 1686-ல் அனுமதி பெற்றனர். ஆனுலும், அவ்வாறு இங்கிலாந்தின் மன்னரின் அனுமதி பெற்று அச்சிடுவது தவறு என்பதை அவர்கள் மறந்துவிடவில்லை. எனவே அதற்கான உரிமையை எப்படியும் முகலாய மன்னரிடமிருந்து பெற்றுவிட வேண்டுமென்று முயற்சிசெய்து வந்தனர். கடைசியில், 1717-ல் பருக்ஷியாரிடமிருந்து அவ்வுரிமையைப் பெற்றனர். அதேபோல் ஆற்காடு என்ற நாணயச்சாலையின் பெயரில் முகலாய நாணயங்களைப் பின்பற்றிச் சென்னையில் அச்சிடுவதற்கு 1742-ல் அனுமதி பெற்றனர். வங்காளத்தில் 1759 வரை கம்பெனியார் நாணயங்களை அச்சிட்டு வெளியிடவில்லை. அதற்குப் பதிலாக, தம்முடைய உலோகக் கட்டிகளை டாக்கா மாநில நவாப்பிற்குச்

சொந்தமாயிருந்த பாட்னு, மூர்ஷிதாபாத் ஆகிய நாணயச் சாலைகளுக்கனுப்பி, தம் நாணயங்களை அச்சிட்டு வந்தனர். ஆனால், 1759-ல் கல்கத்தாவிலேயே நாணயங்களை அச்சிடும் உரிமை பெற்றனர். பின்னர், 1764-ல் வங்காளத்தை ஆளும் பொறுப்பே கம்பெனியாருக்குக் கிடைத்துவிட்டது; எனவே, யாருடைய தயவுமின்றி வங்காளத்தில் சொந்தமாகவே நாணயங்களை அச்சிடும் உரிமையையும் பெற்றனர். எனவே கல்கத்தாவிலிருந்த தம் நாணயச்சாலையில் மூர்ஷிதாபாத் என்ற நாணயச் சாலையின் பெயரை அச்சிட்டு, முகலாயப் பேரரசின் பெயரில் தம் நாணயங்களை வெளியிட்டு வந்தனர், என்றாலும் கம்பெனியாரின் நாணயங்கள் வங்காளத்தின் கீழ்ப்பகுதியில் மட்டுமே புழங்கின. மேல்பகுதியில் பனாரஸ், ஃபரூக்காபாத் ஆகிய நாணயச்சாலைகள் வெளியிட்ட நாணயங்கள்தாம் தொடர்ந்து புழங்கி வந்தன. 1835-லிருந்து இங்கிலாந்தைப்போல் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் பொதுவான வகையில் முகலாயப் பேரரசரின் பெயருக்குப் பதிலாக, இங்கிலாந்து நாட்டு மன்னரின் தலை உருவச் சின்னத்தை முத்திரையிட்டு, தம் நாணயங்களை வெளியிடத் தொடங்கினர். இந்த வகைதான் இந்தியாவில் 1947ஆம் வருடம் வரையில், அதாவது ஆங்கிலேயர்கள் வெளியேறும் வரையில் புழங்கியது. இவ்வாறாக, ஆங்கிலேயர்கள் இந்தியாவில் வெளியிட்ட நாணயங்கள் பலவகைப்படும். அவற்றைப்பற்றி விரிவாக இப்போது காணலாம்.

தென்னிந்தியப் பாணியில் மதரூஸ் நாணயங்கள் : மதராஸில் முதன்முதலில் வெளியிடப்பட்ட நாணயங்கள் பழைய தென்னிந்திய நாணயங்களின் தரத்திலும் சின்னத்திலும் அச்சிடப்பட்டவை. தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய மூன்று உலோகங்களிலும் செய்யப்பட்டவை. மூன்று சுவாமி **பக்கோடாக்கள்** என்றழைக்கப்பட்ட **பக்கோடா** நாணயங்கள் தங்கத்தில் வெளியிடப்பட்டன. இவற்றில் ஒரு புறத்தில், தம் இரண்டு மனைவிகளுடன் வேங்கடாசலபதியின் உருவம் முத்திரையிடப்பட்டுள்ளது; மறுபுறம் குவிந்தும் சொரசொரப்பாகவும் இருக்கிறது; அதில் எவ்வித முத்திரையும் கிடையாது. இது போன்ற **பக்கோடா** நாணயங்களை டச்சுக்காரர்கள் ஏற்கெனவே

நாகப்பட்டினத்திலிருந்து வெளியிட்டதாகச் சிலர் கூறுவர். ஆனால் டச்சுக்காரர்களின் நாணயங்களைப் பின்பற்றி ஆங்கிலேயர்கள் இவற்றைச் செய்தனரா, அல்லது சொந்தமாகவே இப்படி அச்சிட்டனரா என்று தெரியவில்லை. எனினும், 1691-ல் வெளியிட்ட நாணயங்கள் டச்சுக்காரர்களின் நாணயங்களைப் பின்பற்றி அச்சிடப்பட்டவை. அதாவது, பரங்கிப்பேட்டையி லிருந்து டச்சுக்காரர்கள் வெளியிட்ட **பக்கோடாக்களைப்** போலவே, ஆங்கிலேயரும் தம் நாணயங்களின் முன்புறத்தில் விஷ்ணு வின் உருவத்தை முத்திரையிட்டு, பின்புறத்தில் எவ்விதச் சின்னமுமின்றி அதைக் குவிவானதாகவும் சொரசொரப்பான தாகவும் அச்சிட்டு, டச்சு நாணயங்களோடு சேர்ந்து புழங்கும்படி வெளியிட்டனர். அடுத்து, 1730-ல் நடுவில் விஷ்ணுவின் உரு வத்தையும், அதற்கு இரு புறங்களிலும் M என்ற எழுத்தையும் முத்திரையிட்டு, வேறொரு வகைப் **பக்கோடா** நாணயங்களை வெளி யிட்டனர். ஆனால் அந்நாணயங்களை எவருமே ஏற்றுக்கொள்ள வில்லை; கருவூலங்கள் கூட அவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டன. எனவே, 1735-க்கும் 1741-க்குமிடையில் புதுவகை நாணயங்களை வெளியிட்டனர். அவற்றில் முன்புறத்தில் விஷ்ணுவின் உருவத்தையும் அதற்கு மேலே ஒரு நட்சத்திரத்தை யும் பொறித்து, சொரசொரப்பான பின்புறத்தில் ஐந்து முனைகள் கொண்ட நட்சத்திரச் சின்னத்தை முத்திரையிட்டனர். இச் சின்னம் கொண்ட பக்கோடா நாணயங்கள் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரை தென்னிந்தியாவில் புழங்கி வந்தன. 1807-ல் இலேசானதும் பெரியதுமான **பக்கோடா**, இரண்டு **பக்கோடா** என்ற நாணயங்களைப் புகுத்தினர்; அவற்றில் அரைகுறையாகப் பொறிக்கப்பட்ட விஷ்ணுவின் உருவத்தை ஒரு புறத்திலும், இந்துக் கோயிலின் கோபுரத்தை மற்றொரு புறத்திலும் முத்திரையிட்டனர்; மேலும், ஒரு புறத்தில் பாரசீகத்திலும் ஆங்கிலத்திலும், மற்றொரு புறத்தில் தமிழிலும் தெலுங்கிலுமாக அவற்றின் மதிப்பை அச்சிட்டனர். சில வருடங்களுக்குப்பின், கி.பி. 1815-ல் தங்கத்தில் **பக்கோடா** நாணயங்களை வெளியிடுவதை நிறுத்திவிட்டு, அவற்றிற்குப் பதிலாக **முஹர்** எனப்பட்ட நாணயங்களைத் வெளியிட

தொடங்கினர். அதாவது, முன்புறத்தில் கம்பெனியின் சின்னக் கேடயத்தோடு ‘ENGLISH EAST INDIA COMPANY’ என்ற பெயரையும், பின்புறத்தில் பாரசீக வாசகமொன்றையும் முத்திரையிட்டு, ஒரு **முஹர்**, அரை **முஹர்** என்ற நாணயங்களை வெளியிட்டனர். மேலும், ஐந்து **ரூபாய்** தங்க நாணயத்தையும் அவற்றோடு வெளியிட்டனர். தங்க ஐந்து ரூபாயில் முன்புறத்தில் மகுடம் பொறிக்கப்பட்ட கேடயத்தைச் சிங்கம் ஒன்று தாங்கிக்கொண்டிருக்கும் சின்னத்தோடு, ‘EAST INDIA COMPANY’ என்ற பெயரையும், பின்புறத்தில் பாரசீக வாசகமொன்றையும் முத்திரையிட்டனர்.

ஆங்கிலக் கம்பெனியார் இரண்டு **பணம்**, ஒரு **பணம்**, அரைப் **பணம்** என்று வெள்ளி நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டனர். அவற்றில் முதன்முதலில் வெளியிடப்பட்ட **பணங்களில்** முன் புறத்தில் விஷ்ணுவின் உருவத்தையும் பின்புறத்தில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட இரண்டு C எழுத்துக்களும் முத்திரையிடப்பட்டுள்ளன. இந்த C எழுத்து இரண்டும் சார்லஸ் மன்னரைக் குறிப்பிட்டதாகக் கூறுவர். பிற்பாடு வெளியிடப் பட்ட பணங்களில் ஒரு புறத்தில் ஒரு வட்டம், சிலுவை, CCE என்ற எழுத்துக்கள் ஆகியவையும், மறுபுறத்தில் அந்தந்த இடத்து மொழியில் அவற்றின் மதிப்பும் முத்திரையிடப் பட்டுள்ளன. அவற்றிற்குப் பின்னர், ஒருபுறம் **விஷ்ணுவின்** உருவமும், மறுபுறம் கோபுரச் சின்னமும் கொண்ட அரைப் **பக்கோடா**, கால் **பக்கோடா** மதிப்புடைய வெள்ளி நாணயங்கள் வெளியிடப்பட்டன. அதோடு, ஐந்து **பணம்**, இரண்டு **பணம்** ஒரு **பணம்** என்ற நாணயங்களும் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. இப் **பணங்களில்** ஒருபுறத்தில் ஆங்கிலத்திலும் பாரசீகத்திலும் மற்றொருபுறத்தில் தமிழிலும் தெலுங்கிலும் அவற்றின் மதிப்பு மட்டுமே முத்திரையிடப்பட்டுள்ளன. இந்நாணயங்கள் கி.பி. 1812 வரை புழக்கத்தில் இருந்துவந்தன.

மதராஸில் வெளியிடப்பட்ட செம்பு நாணயங்கள் **பைசா** அல்லது **ஃபுலூஸ்**, **டூடி** அல்லது **டப்**, **காசு** என்று பல வகைப்படும். இவை முதன்முதலில் எப்போது வெளியிடப்பட்டன என்று உறுதியாகக் கூறமுடியவில்லை. அதோடு இவற்றில் முதலில்

வெளியிடப்பட்டது எது, பின்னர் வெளியிடப்பட்டது எது என்றும் தெரியவில்லை. இவற்றில் சிலவற்றின் பின்புறம் தங்க நாணயங்களைப்போல் சொரசொரப்பாக இருக்கிறது. சில நாணயங்களில் முன்புறம் **ஸ்ரீ** என்ற தமிழ்ச்சொல்லும், பின் புறம் தமிழில் **கும்பினி** என்ற முத்திரையும் உள்ளன. வேறு சிலவற்றில் ஒருபுறம் ஏழு முனைகொண்ட நட்சத்திரமும், மறு புறம் **கும்பினி** என்ற தமிழ்வாசகமும் முத்திரையிடப்பட் டுள்ளன. மற்றும் சிலவற்றில் ஒருபுறம் **ஸ்ரீரங்கா** என்ற சொல்லும், மறுபுறம் ஒரு வட்டமும் சிலுவைச் சின்னமும் முத்திரையிடப்பட்டுள்ளன. அவ்வாறு வட்டமும் சிலுவைச் சின்னமும் கொண்ட நாணயங்கள் சிலவற்றில் CCE என்ற எழுத்துக்களும், பின்புறம் வெளியிடப்பட்ட வருடமும் உள்ளன. இந்த வருடங்களைக்கொண்டு இவை பதினேழாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரை தொடர்ச்சியாக வெளியிடப்பட்டிருக்கின்றனவென்று தெரிந்து கொள்ளலாம். 1802-ல் பெரிய இயந்திரங்களில் அச்சிடப் பட்ட 10 **காசு**, 5 **காசு**, 1 **காசு** நாணயங்களும் வெளியிடப் பட்டிருக்கின்றன. இவற்றில் 10, 5 காசு நாணயங்களில் ஒரு புறத்தில் கம்பெனியின் கேடயச் சின்னமும், 'EAST INDIA COMPANY' என்ற வாசகத்தோடு வருடமும் முத்திரையிடப் பட்டுள்ளன; மறுபுறத்தில் அவற்றின் மதிப்பை ஆங்கிலத்திலும் பாரசீகத்திலும் முத்திரையிட்டுள்ளனர். 1 காசு நாணயத்தில் மகுடத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும் சிங்கம் முத்திரையிடப் பட்டுள்ளது. கடைசியாக, 1807-ல் வெளியிடப்பட்ட செம்பு நாணயங்களில் அவற்றின் மதிப்பு மட்டுமே முத்திரையிடப் பட்டுள்ளது; ஒருபுறத்தில் ஆங்கிலத்திலும் பாரசீகத்திலும் மறுபுறத்தில் தமிழிலும் தெலுங்கிலும் அம்மதிப்பு அச்சிடப் பட்டுள்ளது.

ஆங்கிலப் பாணியில் பம்பாய் நாணயங்கள்: இங்கிலாந்தின் மன்னர் சார்லஸிடமிருந்து பெற்ற பம்பாய்த் தீவில் கம்பெனியார் கோட்டையைக் கட்டி, அதில் தம்மிஷ்டப்படி வணிகத்தலத்தை அமைத்து, யாருடைய தலையீடுமின்றி ஆட்சி புரிந்து வந்தனர். அங்கு ஆங்கில நாட்டு நாணயங்களைப் போல் நாணயங்களை

அச்சிட்டு வெளியிட வேண்டுமென்று எடுத்தவுடனே ஒரு திட்டமிட்டனர்; அந்நாணயங்கள் முதன்முதலில் பம்பாயிலும், பின்னர் படிப்படியாக இந்தியாவின் பிறபகுதிகளிலும் புழங்கிவிடுமென்று நினைத்து, பம்பாயில் நாணயச்சாலையொன்றை அமைத்தனர். சூரத் நாணயச்சாலையில் அச்சிடப்பட்டுப் புழங்கி வந்த முகலாய நாணயங்களின் எடையிலும் தரத்திலும் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய மூன்று உலோக நாணயங்களையும் அச்சிட்டு வெளியிட்டால் அவை பம்பாயில் மட்டுமன்றி, போர்த்துகீசியப் பகுதி, மராட்டியப் பகுதி, தக்காணம் ஆகிய எல்லா இடங்களிலும் பொதுவான நாணயங்களாகப் புழங்கிவிடும் என்று திட்டமிட்டனர். அதன்படி, தாம் வெளியிடும் தங்க நாணயங்களைச் சார்லஸ் மன்னரின் நினைவாகக் **கரோலின** என்றும், வெள்ளி நாணயங்களைத் தம் நாட்டின் நினைவாக, **ஆங்கிலன** (அல்லது ஆங்கிலியான) என்ற பெயரிலும், செம்பு நாணயங்களைக் **கோபரூன்** என்றும், வெள்ளீய நாணயங்களை **டின்னி** என்றும் வழங்க முடிவு கட்டினர். தம் திட்டத்தை நிறைவேற்ற 1672 டிசம்பரில் பம்பாய் நாணயச்சாலையை இயக்கத் தொடங்கினர். ஆனால், அப்போது போதிய அளவு தங்கம் இல்லாத காரணத்தால் தங்க நாணயங்களை அச்சிடவில்லை. வெள்ளி, செம்பு, வெள்ளீய நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டனர். அவற்றில் ஒரு புறம் தம் கம்பெனியின் (மேற்புறம் இரு ஓரங்களில் இரண்டு ரோசாப்பூ வடிவ முடிகள், நடுப்பகுதியை நான்காகப் பிரித்து, அவற்றில் இரண்டு சிங்கங்கள், இரண்டு அல்லிப் பூக்கள், கீழே மூன்று கப்பல்கள் கொண்ட) சின்னக் கேடயத்தை முத்திரையிட்டனர். அதோடு, (Honorabilis Sociatas Anglicana Indiarum என்பதைக் குறிப்பிடும்) HON : SOC : ANG : IND : ORI: என்ற வாசகத்தை ஒரு புறத்திலும், மற்றொரு புறத்தில், நடுவில் 'MON BOMBAY ANGELIC REGIMIS A° 7°' என்றும், அதைச் சுற்றிலும் 'A : DEO PAX : & : INCREMENTVM' என்றும் முத்திரையிட்டனர். ஆனால் இம் முத்திரைச் சின்னம் கொண்ட நாணயங்கள் பெருமளவில் வெளியிடப்படவில்லை. அடுத்து, 1673-ல் அச்சிடப்பட்ட வெள்ளி நாணயங்களில் ஒரு புறம் கம்பெனியின் சின்னம் கொண்ட கேடயத்தையும், மறுபுறத்தில் வருடத்தோடு

CR என்ற எழுத்துக்களையும் முத்திரையிட்டனர்; ஒரு வேளை CR என்ற எழுத்துக்கள் சார்லஸ் மன்னரைக் குறிப்பிட்டிருக்கலாம். அதற்குப் பின் 1677-ல்தான் புதுவகையான சின்னம் கொண்ட நாணயங்களை வெளியிட்டனர். அவற்றில் முன்புற நடுவில் 'THE RVPEE OF BOMBAIM' என்ற வாசகத்தையும், அதைச் சுற்றிலும் 'BY AUTHORITY OF CHARLES THE SECOND 1677' என்றும் முத்திரையிட்டனர்; பின்புறத்தில் நடுவில் மகுடம் ஒன்றையும், அதற்குக் கீழே இங்கிலாந்து மன்னரின் சின்னம் கொண்ட கேடயத்தையும் 'KING OF GREAT BRITAINE FRANCE & IRELAND' என்ற வாசகத்தையும் முத்திரையிட்டனர். இச்சின்ன முத்திரை கொண்ட நாணயங்களை மறு வருடத்திலும் வெளியிட்டனர். அதன் பின்னர் வெளியிட்ட நாணயங்களில் ஒரு புறத்தில் கம்பெனியின் போர்க்கருவிச் சின்னத்தையும் மறுபுறம் நடுவில் 'PAX DEO' என்றும், அதைச் சுற்றிலும் 'MONETA BOMBAIENSIS' என்றும் முத்திரையிட்டனர். இவ்வகை நாணயங்கள் 1687 வரை தொடர்ச்சியாக வெளியிடப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகு ஆங்கிலேயப் பாணியில் வெள்ளி நாணயங்கள் அச்சிடுவதைக் கைவிட்டு விட்டனர்.

பதினேழாம் நூற்றாண்டில் செம்பிலும் வெள்ளீயத்திலும் நாணயங்களை வெளியிட்டனரா என்று தெரியவில்லை. ஆனால், பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெள்ளீயத்தில் அச்சிடப்பட்ட இரண்டு **பைசா**, ஒரு **பைசா** நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர். அவற்றின் முன்புறத்தில், ஆங்கில நாட்டு மன்னரின் மகுடம், (ஜார்ஜ் மன்னரைக் குறிப்பிடும் George Rex) G R என்ற எழுத்துக்கள், 'BOMB' என்ற வாசகம் ஆகியவையும், பின்புறத்தில் 'AVSPICIO REGIS ET SENATVS ANGLIAE' என்ற வாசகமும் முத்திரையிடப்பட்டுள்ளன. சிறிது காலத்திற்குப் பின்னர் பின்புறத்தில் கம்பெனியின் கேடயச் சின்னத்தை முத்திரையிட்டிருக்கின்றனர். அதற்குப் பின்னர் பம்பாய் நாணயச்சாலையில் அச்சிடப்பட்ட செம்பு நாணயங்களின் முன்

புறத்தில் கம்பெனியின் பாரச்சின்னத்தையும்[1] பின்புறத்தில் ஒரு திராசோடு **அதல்** என்ற பாரசீகச் சொல்லையும் முத்திரையிட்டிருக்கின்றனர். எனினும், எந்தெந்தச் சின்னம் கொண்ட செம்பு நாணயங்கள் எந்தெந்த வருடத்தில் வெளியிடப்பட்டன என்ற விவரங்கள் கிடையாது.

முகலாயப் பாணி நாணயங்கள்: ஆங்கிலேயக் கம்பெனியார் இந்திய அரசாங்க அனுமதி ஏதுமின்றி, சூரத் நாணயச்சாலை அச்சிட்டு வெளியிட்டு வந்த முகலாயப் பேரரசு நாணயங்களை அப்படியே பின்பற்றி பம்பாய் நாணயச்சாலையில் அச்சிடப்பட்ட நாணயங்களையும் தமது வணிகத்தில் பயன்படுத்தி வந்தனர். அவ்வாறு அவர்கள் வெளியிட்ட நாணயங்களுக்கும் முகலாய நாணயங்களுக்கும் கொஞ்சம்கூட வித்தியாசமே இல்லாமல் இருந்தது. அவ்வாறு வெளியிடுவதற்குரிய உரிமையை முகலாய மன்னர்களிடமிருந்து பெறுவதற்குப் பதிலாக, 1686-ல் இங்கிலாந்து நாட்டு மன்னரிடமிருந்து பெற்றனர். இவ்வாறாக, இங்கிலாந்து நாட்டுப் பாணியில் நாணயங்களை அச்சிடுவதை நிறுத்திவிட்டு, முகலாயப் பாணியில் தம் நாணயங்களை அச்சிட்டு, அவற்றில் இங்கிலாந்து நாட்டு மன்னரின் பெயரை முத்திரையிட்டு வெளியிட்டுவிட்டால், அவையும் முகலாய நாணயங்களைப் போலவே முகலாய ஆட்சிப் பகுதிகளிலெல்லாம் தாராளமாகப் புழங்கும் என்று எண்ணினர். எனவே, தம் வெள்ளி நாணயங்களின் முன்புறத்தில் **சிக்கா ஜாத் தௌரான் கிங் வில்லியம் யீன் க்யீன் மேரி** (வில்லியம் மன்னரும் மேரி ராணியும் ஆட்சி செய்யும் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்கள்) என்ற வாசகத்தையும், பின்புறத்தில், **சிக்கா ஜலூஸ் அங்கரேஸ் கம்பெனி ஜார்ப் மும்பை** (ஆங்கிலக் கம்பெனியார் பம்பாயில் அச்சிட்டுள்ள உகந்த நாணயங்கள்) என்ற வாசகத்தையும் முத்திரையிட்டு வெளி

[1] இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதியான பொருள்கள் பாரம் பாரமாய் வந்தன; அவற்றில் இதயம் போன்ற அடையாள முத்திரையில் V.E.I.C. என்ற எழுத்துக்களும், அவற்றிற்கு மேலே 4 என்ற எண்ணும் முத்திரையிடப்பட்டு வந்தன. இச்சின்னமே, பாரச் சின்னமென அழைக்கப்பட்டு, பிற்காலத்தில் வெளியான செம்பு நாணயங்களின் சின்னமாகவும் முத் திரையிடப் பட்டு வந்தது.

யிட்டனர். இவ்வகை நாணயங்கள் ஒரு சில கிடைத்துள்ளன. இவற்றைக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால் இவ்வகை நாணயங்கள் மூன்ரும் வில்லியம் என்ற மன்னரின் ஆட்சியின்போது ஐந்தாவது வருடமும் ஆருவது வருடமும், அதாவது 1692, 1693-ல் வெளியிடப்பட்டதாக அறிய வருகிறோம். அதற்கு முன்பு இவ்வகை நாணயங்கள் வெளியிடப்பட்டதாவென்று தெரியவில்லை. எவ்வாறிருப்பினும், இந்நாணயங்கள் வெளியிடப் பட்டதைக் கண்ட ஔரங்கசீப் ஆங்கிலக் கம்பெனியாருக்கு எதிராகப் பொங்கியெழுந்தார். அவர்களை இந்தியாவிலிருந்தே விரட்டியடிக்க வேண்டுமென்றுகூட எண்ணினுர். ஆனுல் அவர்களின் முறைகேடான அச்செயலைப்பற்றி விசாரணை நடத்துவதற்காக அனுப்பப்பட்ட கஃபிகான் என்பவர் தனது சாதுரியத்தால் ஔரங்கசீபைச் சமாதானப்படுத்தியதால் ஆங்கிலேயர்கள் தப்பித்துக்கொண்டனர். அவர்கள் வெளியிட்ட நாணயங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டனர்; இதனுல் அந்நாணயங்கள் ஒரு சில மட்டுமே கிடைத்துள்ளன, அதன் பின்னர் முகலாயப் பாணியில் நாணயங்களை அச்சிடுவதையே நிறுத்தி விட்டனர். எனினும், கி.பி. 1717-ல் பரூக்ஷியார் என்ற முகலாய மன்னரின் இசைவுடன் மறுபடியும் பம்பாய் நாணயச் சாலையின் பெயருடன் முகலாயப்பாணி நாணயங்களை அச்சிட்டு வெளியிடத் தொடங்கினர். கி.பி. 1744 வரை வெளியிடப்பட்ட இவ்வகை நாணயங்கள் முகலாய மன்னரின் பெயரிலும், மும்பை என்ற நாணயச்சாலையின் பெயரிலும் அச்சிடப்பட்டிருக்கின்றன. அதன் பின்னர், ஏறக்குறைய இருபது ஆண்டுகள் பம்பாயில் வெள்ளி நாணயங்கள் அச்சிடப்படுவது நிறுத்தப்பட்டுவிட்டது.

கி.பி. 1793-ல் பம்பாய் மாநிலத்தில் புழங்குவதற்கென்று முகலாய மன்னர்கள் சூரத் நாணயச்சாலையில் அச்சிட்டு வெளியிட்ட ரூபாய் நாணயங்களைப் போலவே அச்சிடப்பட்ட நாணயங்களைக் கம்பெனியார் வெளியிடத் தொடங்கினர். அதற்காகச் சூரத்திலிருந்த நவாப்புடன் ஒப்பந்தம் செய்துகொண்டனர். அந்த ஒப்பந்தத்தின்படி சூரத் நவாப்பின் நாணயங்களோடு தமது நாணயங்களையும் சேர்த்துப் புழங்கவிட்டனர். அவ்வாறு, புழங்கி வந்த கம்பெனியாரின் ரூபாய்க்கும் நவாப்பின் ரூபாய்க்கும்

கொஞ்சம்கூட வித்தியாசமே கிடையாது. கி.பி. 1800-ல் நவாப்பின் ஆட்சி ஒழிக்கப்பட்டது; அதிலிருந்து கல்கத்தா, பம்பாய் ஆகிய இரண்டு நாணயச்சாலைகளிலும் அச்சிடப்பட்ட நாணயங்கள் சூரத் என்ற நாணயச்சாலையின் பெயரிலேயே வெளியிடப்பட்டன. பம்பாய் நாணயச்சாலை தொடர்ந்து இந்தியப் பாணி நாணயங்களையே அச்சிட்டு வெளியிட்டது; கல்கத்தா நாணயச்சாலை இயந்திரங்களில்அச்சிடப்பட்ட நாணயங் களை வெளியிட்டதாகத் தெரிகிறது. 1802-ல் பம்பாய் நாணயச் சாலை இந்திய முறையில் வெளியிட்ட நாணயங்களில் முட்டை வடிவமான சின்னத்தையும், 1802 என்ற வருடத்தையும் காண லாம். அதேபோல் 1825 என்ற வருடம் பொறிக்கப்பட்டு அதே சின்னமுள்ள நாணயங்கள் 1825-லும் வெளியிடப்பட்டிருக் கின்றன. பம்பாயில் அச்சிடப்பட்ட நாணயங்களில் 1804 வரை நாணயச்சாலையின் சின்னமாக மகுடம் அணிந்துள்ள தலை உருவம் முத்திரையிடப்பட்டு வந்திருக்கிறது. ஆனால், 1804-ல் எல்லா நாணயங்களிலும் ஒரே சின்னம்தான் இருக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, 1804-க்குப்பின் வெளியிடப் பட்டநாணயங்களிலெல்லாம் ஹிஜ்ரீ வருடமோ அல்லது வேறெந்த சகாப்தத்தின் வருடமோ பொறிக்கப்படாமல், இரண்டாம் ஷா ஆலமின் 46ஆவது ஆட்சி ஆண்டு மட்டுமே முத்திரையிடப்பட்டு வந்திருக்கிறது. அதோடு, நாணயச்சாலையின் சின்னமும் மாற்றப் பட்டு, பின்புறத்தில் மகுடச்சின்னம் மட்டும்தான் முத்திரையிடப் பட்டிருக்கிறது. 1800-லிருந்து கல்கத்தா வெளியிட்ட நாண யங்கள் இயந்திரங்களில் அச்சிடப்பட்டவை. அந்த ஆண்டில் அச்சடிக்கப்பட்ட நாணயங்களில் முன்புறத்தில் 1215 என்ற ஹிஜ்ரீ வருடம் முத்திரையிடப்பட்டு அந்நாணயங்களின் விளிம் பும் ஓரமும் மழமழப்பாக ஆக்கப்பட்டிருக்கின்றன. இவ்வகை நாணயங்கள் எந்த ஆண்டு வரை வெளியிடப்பட்டனவென்று தெரியவில்லை. ஆனால் 1818-லிருந்து கல்கத்தா அச்சிட்ட நாணயங்களில் சூரத் என்ற நாணயச்சாலையின் பெயர் அச்சிடப் படுவது நிறுத்தப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. அப்படியானால், பம்பாய் நாணயச்சாலை இந்தியப் பாணியில் மட்டுமன்றி இயந் திரங்களைக் கொண்டும் நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டிருக்

கலாம் என்று தோன்றுகிறது. மேலும், இயந்திரத்தில் அச்சிடப்பட்ட வேறு சில நாணயங்களும் கிடைத்துள்ளன. இவற்றின் விளிம்பில் நேர் நேரான பல்வெட்டுக்களும், இரு புறங்களிலுமுள்ள ஓரங்களில் விளிம்பைக் காட்டும் வட்டமான முத்திரையும் உள்ளன. இவை 1818 முதல் 1825 வரை வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது. அடுத்து, 1825 முதல் 1835 வரை இயந்திரங்களால்; அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட நாணயங்களும் உள்ளன. இவற்றின் இருபுறங்களிலும் ஓரங்கள் சமதளமாகவே உள்ளன. விளிம்பு மட்டும் ரம்பத்தின் பற்கள் போல் வெட்டப்பட்டுள்ளன.

ஆங்கிலக் கம்பெனியார் மதருஸிலிருந்தும் முகலாயப்பாணியில் நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இவ்வகை நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவற்றில் மதருஸ் மாநிலத்தைக் குறிக்கும் வகையில் **சென்னப்பட்டினம்** என்ற நாணயச்சாலையின் பெயர் உள்ளன. எனவே, சென்னப்பட்டினத்திலும் ஆங்கிலேயரின் நாணயச்சாலையொன்று இருந்ததாகவும், அது முகமது ஷா என்ற மன்னரின் ஆட்சிக் காலம் வரை இயங்கிவந்ததாகவும் தெரிகிறது. சென்னப்பட்டின நாணயச்சாலை வெளியிட்ட நாணயங்களில் ஔரங்கசீப், முதலாம் ஷா ஆலம், ஜகந்தர் ஷா, பருக்கியர் முகமது ஷா ஆகியோரின் பெயரில் அச்சிட்ட சில நாணயங்கள் மட்டும்தான் கிடைத்துள்ளன. அதோடு, **மயிலாப்பூர்** என்ற நாணயச்சாலையின் பெயருள்ள நாணயங்களும் கிடைத்திருக்கின்றன. மயிலாப்பூர் என்பதும் சென்னப்பட்டினத்தருகில் இருந்திருக்கிறது. இந்நாணயச்சாலை வெளியிட்ட நாணயங்களில் ஔரங்கசீப், முதலாம் ஷா ஆலம் ஆகியோரின் பெயர்களுள்ள நாணயங்களே இருக்கின்றன. நிற்க, மசூலிப்பட்டினத்திலிருந்தும் முகலாயப்பாணியில் அச்சிடப்பட்ட நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர். மசூலிப்பட்டினம் என்பது சோழ மண்டலக் கடற்கரைப் பகுதியில் ஆங்கிலேயரின் பிரபலியமானதொரு வணிகத்தலமாக இருந்துவந்தது, அங்கிருந்து வெளியிட்ட நாணயங்களில் ஔரங்கசீப் பெயருள்ள நாணயங்களும் இரண்டாம் ஷாஜஹான் காலத்திலிருந்து இரண்டாம் ஷாஆலம் காலம் வரை அச்சிடப்பட்ட நாணயங்களும் கிடைத்துள்ளன.

மேற்குறிப்பிட்ட சென்னப்பட்டினம், மயிலாப்பூர், மசூலிப்பட்டினம் ஆகிய நாணயச்சாலைகள் வெளியிட்ட நாணயங்களெல்லாம் ஆங்கிலேயக் கம்பெனியாரால்தான் என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது; இப் பகுதிகளெல்லாம் அவர்கள் வசம் இருந்தன என்பது ஒன்றுதான் அதற்கு சான்று. இவையனைத்தும் முகலாய மன்னர்களின் அனுமதியின்றி வெளியிடப்பட்டதாகவும் இருக்கலாம்.

மேலும், ஆற்காடு என்ற நாணயச்சாலையின் பெயரில் பாண்டிச்சேரியிலும் சென்னையிலுமிருந்த நாணயச்சாலைகளில் அச்சிடப்பட்ட முகலாயப் பாணி நாணயங்களையும் கம்பெனியார் வெளியிட்டிருக்கின்றனர். இந்நாணயங்களையெல்லாம் ஆற்காட்டுப் பகுதியில் வணிகம் செய்து வந்த ஆங்கிலக் கம்பெனியார் அங்கு ஆட்சிப் பொறுப்பிலிருந்த நவாப்புக்களின் இசைவு பெற்று வெளியிட்டதாக அறிய வருகிறோம். அவ்வாறு அனுமதி பெற்ற பின்னர், கி.பி. 1742-ல் முகமது ஷா என்ற மன்னரின் பெயரில் ஆற்காடு என்னும் நாணயச்சாலையின் பெயரை முத்திரையிட்டு இவற்றை வெளியிடத் தொடங்கியிருக்கின்றனர், பின்னர், இரண்டாம் ஆலம்கீரின் 6ஆவது ஆண்டு ஆட்சியிலிருந்து வெளியிடப்பட்ட ஆற்காட்டு ரூபாய் நாணயங்களிலெல்லாம் அவரது 6ஆவது ஆண்டு ஆட்சி வருடத்தையே பொறித்து வெளியிட்டிருக்கின்றனர். இரண்டாம் ஆலம்கீர் இறந்த பின்னரும்கூட அவரது 6வது ஆட்சி ஆண்டு முத்திரை கொண்ட நாணயங்களையே வெளியிட்டு வந்ததாகத் தெரிகிறது. மேலும், 1815 முதல் 1834 வரை ஆற்காடு என்ற நாணயச்சாலையின் பெயரில் கல்கத்தா, மதரூஸ் நாணயச்சாலைகளில் இயந்திரங்களைக் கொண்டு அச்சிடப்பட்ட நாணயங்களையும் வெளியிட்டிருக்கின்றனர். இவற்றில் மதரூஸில் அச்சிடப்பட்ட நாணயங்களில் மதரூஸைக் குறிப்பிடுவதற்குத் **திரிசூலச்** சின்னமொன்றையும், கல்கத்தாவில் வெளியிடப்பட்டவை என்பதைக் குறிப்பிட **ரோசாப்பூ** சின்னத்தையும் காணலாம். இந்த நாணயங்களிலும் ஆட்சி ஆண்டாக 6வது வருடமும், ஹிஜ்ரா சகாப்தத்தின் 1172ஆம் வருடமும்தான் முத்திரையிடப்பட்டுள்ளன.

நிற்க, மதரூஸ் நாணயச்சாலையில் வங்காள நாணயங்களைப்

போல் நாணயங்களை அச்சிட்டு, அவற்றை வங்காளத்திலும் இதர வட இந்தியப்பகுதிகளிலும் பயன்படுத்துவதற்கென்று வெளியிட்டிருக்கின்றனர். ஆனால் 1756-ல் கல்கத்தா நகரைக் கைப்பற்றிய ஆங்கிலேயப் படையினர், அதுவரை அங்கு நவாப்பாக ஆட்சி செய்து வந்த சிராஜ்—உத்—தௌலா என்பவரை வெளியேற்றுமுன் ஓர் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. அதன்படி, அலிநகர் என்று அழைக்கப்பட்டு வந்த கல்கத்தாவில் மூர்ஷிதாபாத் நாணயங்களைப்போல் அச்சிட்டு வெளியிடும் உரிமையை ஆங்கிலக் கம்பெனியார் முகலாயப் பேரரசரிடமிருந்து பெற்றுவிட்டனர். எனவே உடனடியாகக் கல்கத்தா நாணயச்சாலையின் பெயரோடு இரண்டாம் ஆலம்கீர் என்னும் முகலாய மன்னரின் பெயரில் ரூபாய் நாணயங்களை அச்சிட்டு வெளியிடத் தொடங்கினர். இரண்டாம் ஆலம்கீருக்குப் பின்னர், இரண்டாம் ஷா ஆலமின் பெயரில் இந்த ரூபாய் நாணயங்களை வெளியிட்டு வந்தனர். பின்னர், முகலாயப் பேரரசர் ஆங்கிலக் கம்பெனியாரிடம் சரணடைந்தபோது, நாட்டின் நிர்வாகமே கம்பெனியாரின் கைக்கு வந்துவிட்டது. அப்போது மூர்ஷிதாபாத், (அஜீமாபாத் என்றழைக்கப்பட்டு வந்த) பாட்னு, (ஜஹாங்கீர் நகர் என்றழைக்கப்பட்டு வந்த) டாக்கா ஆகிய மூன்று நாணயச்சாலைகளும் கம்பெனியார் வசமாகிவிட்டதால், கல்கத்தா என்ற நாணயச்சாலையின் பெயரிலேயே தம் நாணயங்களை வெளியிட வேண்டிய அவசியம் நீங்கிவிட்டது. எனவே, 1763-லிருந்து கல்கத்தாவில் அச்சிடப்பட்ட நாணயங்களில் ஆற்காடு, மூர்ஷிதாபாத், பரூக்காபாத் ஆகிய பெயர்களை நாணயச்சாலையின் பெயராகப் பயன்படுத்தத் தொடங்கினர்.

மூர்ஷிதாபாத், பாட்னு, டாக்கா ஆகிய மூன்று நாணயச்சாலைகளையும் பெற்றுவிட்ட கம்பெனியார், மூர்ஷிதாபாத் நாணயச்சாலையில் அதன் பெயருடன் கல்கத்தாவில் இயந்திரங்களைக் கொண்டு ஐரோப்பிய முறையில் அச்சடிக்கப்பட்ட நாணயங்களைப் போல் அச்சிட வேண்டுமென்று திட்டம் வகுத்தனர். அதன்படி, 1176ஆம் ஹிஜ்ரீ வருடத்தை, அதாவது அவர்களின் 4ஆவது ஆண்டு ஆட்சி வருடத்தைக் கொண்ட ஒரு சில நாணயங்களை வெளியிட்டனர்; அதன் பின்னர், அந்தத்

திட்டத்தையே கைவிட்டுவிட்டு, இந்திய முறையிலேயே நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டு வந்தனர். அடுத்து, தம் ஆட்சியின் பத்தாவது ஆண்டிலிருந்து (கி.பி. 1768) மூர்ஷிதாபாத் நாணயச்சாலையில் இந்திய முறையில் அச்சடிக்கப்பட்ட நாணயங்களையும், கல்கத்தாவில் இயந்திர முறையில் அச்சிடப்பட்ட நாணயங்களையும் சேர்ந்தாற்போல் வெளியிட்டு வந்தனர். 1777-ல் தமது ஆட்சியின் 19ஆவது ஆண்டின்போது, தமது ஆட்சியின் வருடத்தை மட்டும் கொண்ட ரூபாய் நாணயங்களை வெளியிடத் தொடங்கினர். அந்த ஆண்டிலிருந்து, அதாவது ஹிஜ்ரீ வருடம் 1191-லிருந்து 1205 வரை (கி.பி. 1777–1791) வெளியிட்ட எல்லா ரூபாய் நாணயங்களிலுமே ஹிஜ்ரீ வருடத்தையும் தமது 19ஆவது ஆண்டு ஆட்சி வருடத்தையும் மட்டுமே முத்திரையிட்டு வந்ததாக இந் நாணயங்களிலிருந்து அறிய வருகிறோம்.

1793 முதல் 1818 வரை வெளியிட்ட நாணயங்களில் ஹிஜ்ரீ வருடத்தை முத்திரையிடாமல் வெறும் 19ஆவது ஆட்சி ஆண்டை மட்டுமே காணலாம்; இந் நாணயங்களின் விளிம்பில் சாய்வான பல்வெட்டுக்களும் உள்ளன. பின்னர் 1818-லிருந்து வெளியிடப்பட்ட நாணயங்களின் விளிம்பில் சாய்வான பல்வெட்டுகளுக்குப் பதிலாக நேரான பல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வாறு விளிம்பில் நேர்நேரான பல்வெட்டுக்கள் கொண்ட நாணயங்கள் 1832 வரை வெளியிடப்பட்டிருக்கின்றன. 1833-ல் நாணயத்தின் எடையும் இலக்கும் மாற்றப்பட்டுவிட்டன; 180 தானியமணி எடைகொண்ட, மாற்றுக் குறைந்த வெள்ளி நாணயங்களை வெளியிடத் தொடங்கினர். இவற்றில் 85 சதவீத வெள்ளியோடு 15 சதவீதம் வேறு உலோகம் கலக்கப்பட்டது. அதோடு விளிம்பில் பல்வெட்டுக்களைப் பொறிப்பதை நிறுத்திவிட்டு, நாணயத்தின் முகப்பின் ஓரத்தில் புள்ளிகளாலான வட்டத்தைப் பொறிக்க முற்பட்டனர். இவ்வகை நாணயங்களை 1834 வரை வெளியிட்டு வந்தனர். 1834-ல் முகலாயப் பாணியில் அச்சிடுவதற்குப் பதிலாக ஆங்கிலேயப் பாணியில் நாடு முழுவதற்கும் பொதுவான நாணயங்களை அச்சிட்டு வெளியிடத் தொடங்கினர்.

பாட்னு, டாக்கா ஆகிய நாணயச்சாலைகள் இரண்டும் கி.பி. 1700 வரை தம் வழக்கப்படி பழைய முகலாய நாணயங்களைப்போலவே அச்சிட்டு வெளியிட்டு வந்தன. ஆனால் 1700-ல் நாணயச் சாலையின் சின்னமாக முகலாயச் சின்னத்தைக் கைவிட்டுவிட்டு, புதிய சின்னங்களைப் பயன்படுத்தத் தொடங்கின. எனினும் கி.பி. 1771 அல்லது 1772-ல் இந்த நாணயச்சாலைகள் இரண்டும் மூடப்பட்டுவிட்டன, அதன் பின்னர், 1793-ல் அவை மறுபடியும் திறக்கப்பட்டு, மூர்ஷிதாபாத் என்னும் நாணயச்சாலையின் பெயரில் நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டு வந்தன. 1796-ல் அவை நிரந்தரமாக மூடப்பட்டுவிட்டன. எனவே, 1796-லிருந்து 1834 வரை மூர்ஷிதாபாத் என்ற நாணயச்சாலையின் பெயரில் வெளியிட்டு வந்த நாணயங்கள் அனைத்தும் கல்கத்தாவில் அச்சிடப்பட்டவையாகும்.

மேற்குறிப்பிட்ட நாணயச்சாலைகள் மட்டுமன்றி, வடஇந்தியாவில் பனாரஸ், பரூக்காபாத் ஆகிய வேறிரு முக்கியமான நாணயச் சாலைகளும்கூட ஆங்கிலக் கம்பெனியாரின் நாணயங்களை அச்சிட்டு வந்தன. பனாரஸில் 1734-லிருந்தே ஒரு நாணயச்சாலை இயங்கி வந்தது. ஆனால் 1775-ல் அவுதை (அயோத்தியை) ஆண்டுவந்த நவாப்பிடமிருந்த பனாரஸை ஆங்கிலக் கம்பெனியார் கைப் பற்றினர். பின்னர், பனாரஸில் ஆட்சிசெய்து வந்த சேத் சிங் என்பவரிடம் அந்த நாணயச்சாலையை ஒப்படைத்தனர். அவர், அதுவரை அந்த நாணயச்சாலை வெளியிட்டுவந்த நாணயங்களையே தொடர்ந்து வெளியிட்டு வந்தார். எனினும், முகலாயப் பேரரசரான இரண்டாம் ஷா ஆலத்தின் 17ஆவது ஆண்டு ஆட்சியின் போது பனாரஸை ஆங்கிலக் கம்பெனியார் கைப்பற்றியதன் நினைவாக, அந்த ஆண்டு மட்டும் மாற்றப்படாமல் பனாரஸின் நாணயங்களில் பயன்படுத்தப்பட்டு வந்தது; ஆண்டுதோறும் ஹிஜ்ரீ வருடம் மட்டும்தான் மாற்றப்பட்டு வந்தது. பின்னர், 1779-லிருந்து பனாரஸைக் கைப்பற்றிய 17ஆம் ஆட்சி ஆண்டோடு, இரண்டாம் ஷா ஆலமின் உண்மையான ஆட்சி ஆண்டும் முத்திரையிடப்பட்டது. தமது 40ஆவது ஆண்டு ஆட்சியின்போது ஷா ஆலம் காலமானார். அதிலிருந்து பனாரஸின் நாணயங்களில் அந்த 17ஆவது ஆண்டோடு, இந்த 40ஆம் ஆண்

டும் முத்திரையிடப்பட்டு வந்தது. பின்னர், 1811-ல் கல்கத்தா நாணயச்சாலையைப் போல் பனாரஸிலும் இயந்திரங்களைக் கொண்டு நேர்நேரான பல் வெட்டுக்கள் கொண்ட விளிம்புடன் நாணயங்கள் அச்சிடப்படலாயின. எனினும், இப் புதிய வகை நாணயங்களில்கூடப் பழைய ஆட்சி வருடங்கள் இரண்டும் அப்படியே முத்திரையிடப்பட்டு, 1229 என்று ஹிஜ்ரீ வருடமும் சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வகை நாணயங்கள் 1819 வரை வெளியிடப்பட்டன. அதன் பின்னர், பரூக்காபாத் என்ற நாணயச் சாலையின் பெயரில்தான் பனாரஸின் நாணயங்கள் அச்சிடப் பட்டன. கி.பி. 1830-ல் பனாரஸ் நாணயச்சாலை மூடப்பட்டு விட்டது.

அவுதை (அயோத்தியை) ஆண்டு வந்த நவாப் தன் ஆட்சியின் கீழ் இருந்து வந்த பரூக்காபாத்தைக் கி.பி. 1802-ல் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் ஒப்படைத்தார். அந்த வருடம் வரை அங்கிருந்த நாணயச்சாலை வெளியிட்ட நாணயங்களிலெல்லாம் 31ஆம் ஆட்சி ஆண்டையே முத்திரையிட்டு வந்தது. 1797-லிருந்தே இந்த வருடத்தைத்தான் பயன்படுத்தி வந்தது. கம்பெனியாருக்குச் சொந்தமான பின்னர்கூட, அதே போன்ற நாணயங்களைத்தான் 1805 வரை வெளியிட்டு வந்தது. பின்னர் 1805 முதல் 1819 வரை கல்கத்தா நாணயச்சாலையைப் போல் விளிம்பில் நேர்பற்கள் வெட்டப்பட்ட நாணயங்களை இயந்திர மூலமாக அச்சிட்டு வெளி யிட்டது, அவை அனைத்திலும் ஹிஜ்ரீ வருடம் கிடையாது; 45ஆவது ஆட்சி ஆண்டுமட்டுமே முத்திரையிடப்பட்டுள்ளது. 1819-க்குப் பின்னர், பரூக்காபாத்தில் அச்சிடப்பட்ட ரூபாய்கள் தான் பனாரஸ் மாநிலத்தின் தல நாணயங்களாக ஆக்கப்பட்டன. அதோடு, அந்த ரூபாய் நாணயங்களில் அச்சிடப்பட்டு வந்த நேரான பல்வெட்டுக்களுக்குப் பதிலாகச் சாய்வான பல் வெட்டுக்கள் பொறிக்கப்பட்டு வந்தது. இவ்வகை நாணயங்கள் பரூக்காபாத்தில் மட்டுமன்றி, பனாரஸ், கல்கத்தா நாணயச்சாலை களிலும் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. சில ஆண்டுகளுக்குப் பின்னர், பரூக்காபாத் நாணயச்சாலை மூடப்பட்டது; எனினும் அதன் பெயரில் அச்சடிக்கப்பட்ட நாணயங்களை பனாரஸ், கல்கத்தா, சாகர் முதலிய நாணயச்சாலைகள் வெளியிட்டு வந்தன.

இவற்றில் சாகர் நாணயச்சாலை 1818-ல் கம்பெனியாருக்குச் சொந்த மானது. பனாரஸ் நாணயச்சாலை மூடப்பட்ட பின்னர்கூட இவ்வகை நாணயங்களை மற்ற இரண்டு நாணயச்சாலைகளும் 1833 வரை வெளியிட்டு வந்தன. 1833-லிருந்து விளிம்பில் நேர் பல் வெட்டுக்கள் பொறிக்கப்படுவது நிறுத்தப்பட்டது; எனவே, 1834 வரை வெளியிட்டதுமான நாணயங்களிலெல்லாம் சாதாரண விளிம்பும், சமதளமான ஓரமும்தான் இருக்கும்.

மேலும், பரெய்லி, அலஹாபாத் ஆகிய இடங்களைக் கைப்பற்றிய ஆங்கிலக் கம்பெனியார், அந்த இடங்களிலிருந்த நாணயச்சாலை களையும் ஒரு சில காலம் பயன்படுத்தி வந்தனர். எனினும், இவ்விரண்டு நாணயச்சாலைகளும் வெளியிட்ட நாணயங்களைப்பற்றிய விவரம் ஒன்றும் கிடையாது.

இந்த நாணயச்சாலைகள் அனைத்தும் அவ்வப்போது தேவைப் பட்டபோதெல்லாம் தங்க நாணயங்களையும் அச்சிட்டு வெளியிட்டு வந்தன. ஆனால் அவையனைத்தும் வெள்ளி நாணயங்களைப் போலவே அச்சிடப்பட்டு வந்ததால், அவற்றைப்பற்றி விவரிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் இந்நாணயச்சாலைகள் அச்சிட்டு வந்த செம்பு நாணயங்களைப்பற்றி இங்குக் குறிப்பிடவேண்டும். பொது மக்களும் வணிகர்களும் தம்மிடமிருந்த செம்பு உலோகக் கட்டிகளை இந் நாணயச்சாலைகளில் கொடுத்து, நாணயங்களாக அச்சிட்டு வந்தனர். ஆனால், 1772 முதல் பாட்னா, டாக்கா, மூர்ஷிதாபாத் ஆகிய நாணயச்சாலைகள் மூடப்பட்ட காலத்தி லிருந்து 1783 வரை வங்காள மாநிலத்தில் செம்பு நாணயங்களே அச்சிடப்படவில்லை. அதன் பின்னர், பிரின்சப் என்பவருடன் (பனாரஸ் நாணயச்சாலையின் நிபுணராகப் புகழ்பெற்ற ஜேம்ஸ் பிரின்சப் அல்லர் இவர்) ஒப்பந்தம் செய்து, ஒரு பைசா, அரைப் பைசா, கால் பைசா. அரைக்கால் பைசா என்று செம்பு நாணயங் கள் வெளியிடப்பட்டன. எனவே, இப் பைசா நாணயங்களெல்லாம் கல்கத்தா பைசாக்கள் என்றும் பிரின்சப் பைசாக்கள் என்றும் அழைக்கப்பட்டன. இவற்றில் முன்புறத்தில் **பாதுஷா ஷா ஆலம்** என்ற வாசகத்தோடு 1195 என்ற வருடமும், பின்புறத்தில் **சான் ஃபலூஸ் 22** என்பதோடு 5 நட்சத்திரச் சின்னங்களும் முத்திரையிடப்பட்டுள்ளன. 1795-ல் எடுக்கப்பட்ட முடிவின்

படி கல்கத்தா நாணயச்சாலையிலிருந்து ஒரு பைசா, அரைப் பைசா என்று இரு வகைநாணயங்கள்மட்டுமே வெளியிடப்பட்டன. இவற்றில் முன்புறத்தில் **ஷா ஆலம் பாதுஷா 37** என்றும், பின்புறத்தில் இவற்றின் மதிப்பு **ஏக் பை சிக்கா, நீம் பை சிக்கா** என்று நாகரியில் மட்டுமன்றி, பாரசீகம், வங்காள மொழி ஆகியவற்றிலும் முத்திரையிடப்பட்டுள்ளன. எனினும், ஒரு சில நாணயங்களில் வங்காள மொழியில் மதிப்புப் பொறிக்கப்படவில்லை. இப் பைசா நாணயங்கள் மறுபடியும் 45ஆம் ஆண்டு வெளியிடப்பட்டிருக்கின்றன, 1809-ல், கம்பெனியின் கேடயச் சின்னத்தையும் வருடத்தையும் ஒரு புறத்திலும், மறுபுறத்தில் பாரசீகம், வங்காளம், ஆங்கிலம் ஆகியவற்றில் மதிப்பையும் பொறித்துச் செம்புக் காசுகளை வெளியிட எண்ணினர். ஆனால் அதன்படி வெளியிட்டதாகத் தெரியவில்லை. பின்னர், 1825-ல் 4, 2, 1 பைசா நாணயங்களை வெளியிட்டனர். இவற்றில் முன்புறத்தில் கம்பெனியின் கேடயச் சின்னமுள்ளது; பின்புறத்தில் 1240ஆம் வருடத்தோடு, இவற்றின் மதிப்பு ரோமானிய எண்களிலும் பாரசீகச் சொற்களிலும் முத்திரையிடப்பட்டுள்ளன.

ஆங்கிலக் கம்பெனியார் தாம் வங்காளத்தில் வெளியிட்டதைப் போல் பனாரஸிலிருந்தும் செம்பு நாணயங்களை வெளியிட்டனர். ஆனால் இவை தொடர்ச்சியாக வெளியிடப்படவில்லை என்றே தோன்றுகிறது. 1806–1807ஆம் ஆண்டிலும், 1813-லும் வெளியிட்ட நாணயங்கள் மட்டும் கிடைத்துள்ளன. இவற்றில் முன்புறத்தில் **திரிசூலம்** ஒன்றும், **ஃபலூஸ் ஷா ஆலம்** என்ற வாசகமும், வருடமும் முத்திரையிடப்பட்டுள்ளன. பின்புறத்தில் **ஜர்ப் பனாரஸ்** என்ற வாசகமும், 1806–1807ஆம் ஆண்டு நாணயங்களில் 48 என்ற எண்ணும், 1813-ல் வெளியானவற்றில் 49 என்ற எண்ணும் முத்திரையிடப்பட்டுள்ளன. இவை இரண்டு பைசா, ஒரு பைசா, அரைப் பைசா என்று மூன்று விதமாக வெளியிடப்பட்டுள்ளன.

நாட்டிற்கே பொதுவான நாணயங்கள் : 1834-ல் நாடெங்கிலும் கம்பெனியாரின் ஆட்சிதான் பரவிவிட்டது. எனவே, கல்கத்தா நாணயச்சாலைக் குழுவினர் எல்லா இடங்களுக்கும் பொதுவான நாணயங்களை வெளியிடத் திட்டமிட்டனர். அதன்

படி, முதலில் முகலாயப் பாணியில் நாணயங்களை அச்சிடுவதை நிறுத்திவிட்டனர். 1835–ல் முப்பது ரூபாய் மதிப்புக்கொண்ட இரண்டு **முஹர்**, பதினைந்து ரூபாய் மதிப்பில் **முஹர்**, பத்து ரூபாய், ஐந்து ரூபாய் என்ற தங்க நாணயங்களையும், **ரூபாய்**, அரை **ரூபாய்**, கால் **ரூபாய்** எனப்பட்ட வெள்ளி நாணயங்களையும் வெளியிட்டனர். இவை அனைத்திலும் முன்புறத்தில் இங்கிலாந்து மன்னரான நான்காம் வில்லியம் என்பவரின் மொட்டைத்தலையும், 'WILLIAM IIII' என்று அவருடைய பெயரும் முத்திரையிடப்பட்டுள்ளன. தங்க நாணயங்களின் பின்புறத்தில் சிங்கம், பனைமரவகை மரம், 'EAST INDIA COMPANY' என்று கம்பெனியின் பெயர் ஆகியவையும், ஆங்கிலத்திலும் பாரசீகத்திலும் அவற்றின் மதிப்பும் முத்திரையிடப்பட்டுள்ளன. வெள்ளி நாணயங்களில் ஒரு மலர் வளையத்திற்குள் அவற்றின் மதிப்பும், 'EAST INDIA COMPANY' என்றும் முத்திரையிடப்பட்டுள்ளன. இத் தங்க, வெள்ளி நாணயங்களோடு **பைசா**, இரண்டு **பைசா**, (பன்னிரண்டில் ஒரு பகுதியான) **பைசா** எனப்பட்ட செம்புக் காசுகளையும் வெளியிட்டனர். இக் காசுகளின் முன்புறத்தில் கம்பெனியின் சின்னம் கொண்ட கேடயமும் வருடமும் உள்ளன. பின்புறத்தில் மலர் வளையத்திற்குள் இவற்றின் மதிப்பை ஆங்கிலத்திலும், பாரசீக மொழியிலும் முத்திரையிட்டு, அதைச்சுற்றிலும் 'EAST INDIA COMPANY' என்று பொறித்துள்ளனர். இவற்றின் மதிப்பு ஆங்கிலத்தில் அணுக் கணக்கிலும், பாரசீகத்தில் பைசாக் கணக்கிலும் அச்சிடப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் **பைசா** என்ற பெயரைக் காலணுவிற்கு மட்டுமன்றி, பன்னிரண்டில் ஒரு பகுதி அணுவிற்கும் பயன்படுத்தியிருப்பது விந்தையாக உள்ளது. இச் செம்பு நாணயங்களை எவ்வித மாறுதலுமின்றி, தொடர்ச்சியாக 1844 வரை வெளியிட்டு வந்தனர், 1844-ல்தான் இவற்றில் வருடம் மாற்றப்பட்டுள்ளது; அதோடு, அந்த வருடத்தில் அரைப் பைசா என்ற புதிய நாணயத்தையும் வெளியிட்டிருக்கின்றனர்.

1840-ல் தம் தங்க நாணயங்களையும் விக்டோரியா ராணியின் பெயரில் வெளியிடத் தொடங்கினர். எனவே, இவற்றின் முன்புறத்தில் ராணியின் தலை உருவமும் 'VICTORIA QUEEN' என்று அவரது பெயரும் உள்ளன. பின்புறம் முன்னர் வெளியிட்ட

நாணயங்களின் சின்னங்கள்தான் முத்திரையிடப்பட்டுள்ளன; வெள்ளி நாணயங்களிலுள்ள மலர்வளையம் மட்டும் வேறுவித மாக உள்ளது. எனினும், தங்கத்தில் **முஹர்** எனப்பட்ட நாணயம் மட்டுமே வெளியிடப்பட்டது; ஆனால் அதேசமயம் புதிய வெள்ளி நாணயமான இரண்டு **அணா** 1841-ல் வெளியிடப்பட்டிருக் கிறது. பின்னர் 1858ஆம் ஆண்டில் ஏறக்குறைய 250 ஆண்டு களாக நடைபெற்று வந்த கம்பெனியாரின் ஆட்சி முடிவு பெற்றது; எனவே, அவ்வாண்டிலிருந்து இந்தியாவை விக்டோரியா ராணியாரே ஆளத்தொடங்கினர். இதனால் அந்த ஆண்டில் வெளியிடப்பட்ட வெள்ளி நாணயங்களிலும் செம்பு நாணயங் களிலும் புதுச் சின்னங்கள் முத்திரையிடப்பட்டுள்ளன. முன் புறத்தில் பேரரசின் மகுடத்தைத் தலையில் அணிந்து, வேலைப் பாடுகள் நிறைந்து விலையுயர்ந்த உடுப்புடன் தோன்றும் ராணியின் மார்பளவு உருவம் முத்திரையிடப்பட்டுள்ளது. மேலும் இடப் புறத்தில் 'VICTORIA' என்றும், வலபுறத்தில் 'QUEEN' என்றும் அச்சிடப்பட்டுள்ளன. பின்புறத்தில் பழைய சின்னங்கள் அப் படியே உள்ளன. இவ்வகை நாணயங்கள் 1862-ல்தான் முதன் முதலாக வெளியிடப்பட்டிருக்கின்றன. அதன் பின்னர் 1872வரை எந்தவிதமான மாற்றமுமின்றி, இவை தொடர்ந்து வெளியிடப் பட்டுள்ளன. ரூபாய் நாணயங்களில் மட்டும் பின்புறத்திலுள்ள வட்ட மலர்ச்சின்னத்திற்கு மேலும் வருடத்திற்குக் கீழும் ஒன்று முதல் பத்துப்புள்ளிகள் வரை பொறிக்கப்பட்டுள்ளன. இப் புள்ளிகள் எத்தனையாவது ஆண்டில் இவை வெளியிடப்பட்டவை என்பதைக் குறிக்கும். அதற்குப் பின்னர், 1873 முதல் 1876 வரை வெளியிடப்பட்ட இந் நாணயங்களில் அந்தந்த வருடம் முத்திரை யிடப்பட்டுள்ளது. 1870-லிருந்து ஏனைய மதிப்புடைய நாணயங்களிலும் வருடம் முறையாகப் பொறிக்கப்பட்டுள்ளது. 1871-ல் இரண்டு அணா நாணயம் மட்டும் வெளியிடப்படாமல், ஏனைய நாணயங்களெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. அதோடு, முதலில் வெள்ளி நாணயங்களும், பின்னர் தங்க செம்பு நாணயங்களும் வெளியிடப்பட்டன.

நிற்க, 1877-ல் விக்டோரியா ராணிக்கு இந்தியாவின் மகாராணி என்ற பட்டம் சூட்டப்பட்டது. அதனால் நாணயங்

களின் முத்திரைப் பொறியில் ஒரு சிறு மாற்றம் செய்யப்பட்டது. முன்புறச் சின்னத்தில் இருந்து வந்த 'QUEEN' என்ற சொல்லை நீக்கிவிட்டு, அதற்குப்பதிலாக 'EMPRESS' என்ற சொல் புகுத்தப் பட்டது. வேறெந்த மாற்றமும் செய்யப்படவில்லை. இவ்வாறாக, 1877-லிருந்து ஆண்டுதோறும் நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. 1891-ல் இரண்டு **பைசா** நாணயம் வெளியிடப் படுவதை நிறுத்திவிட்டனர்.

விக்டோரியா ராணியார் இறந்த பின்னர், 1901-ல் ஏழாம் எட்வர்டு அரியணை ஏறினார். எனவே, அந்த வருடத்திலிருந்து அவரது பெயரில் இந் நாணயங்கள் வெளியிடப்பட்டன. இவற்றில் முன்புறத்தில் 'EDWARD VII KING AND EMPEROR' என்ற வாசகமும் அவரது மொட்டைத் தலை உருவமும் உள்ளன. பின்புறத்தில், செம்பு நாணயங்களில் மட்டும் விக்டோரியா மகாராணியின் சின்னம் அப்படியே உள்ளது. வெள்ளி நாணயங்களில் ஒரு தாமரை மலரும், அம்மலரின் இரண்டு இதழ்களில் ஆங்கிலத்திலும் பாரசீகத்திலும் அவற்றின் மதிப்பும், அம்மலருக்கு மேலே மகுடமும் முத்திரையிடப்பட்டுள்ளன. அவரது ஆட்சியின் போது தங்க நாணயங்களே வெளியிடப்படவில்லை. அடுத்து, 1906 அல்லது 1907-ல் ஒரு **அணா** நாணயத்தின் அமைப்பை மாற்றுவதற்கும், சிறிது காலமாக வெளியிடப்படாமலிருந்த அரை **அணா** நாணயத்தை மறுபடி வெளியிடுவதற்கும் முடிவு செய்தனர். அவற்றை எந்த அமைப்பில் வெளியிடுவதென்பதற்கு நிக்கலில் மாதிரி நாணயங்களைச் செய்தனர்; ஆனால் முடிவில் அரை அணா நாணயத்தை மறுபடியும் வெளியிடும் திட்டத்தைக் கைவிட்டு விட்டு, புது மாதிரியான அணா நாணயத்தை மட்டும் வெளியிட்டனர். இப் புது அணா நாணயம் பன்னிரண்டு கோணங்களில் பன்னிரண்டு வளைவான முனைகளுடன் வெளியிடப் பட்டது. இதுவரை அவர் வெளியிட்டு வந்த வெள்ளி நாணயங்களிலும் செம்பு நாணயங்களிலும் பிரிட்டன் நாணயங்களில் முத்திரையிடப்பட்டு வந்த உருவம்தான் பொறிக்கப்பட்டு வந்தது; ஆனால் இந்த நிக்கல் நாணயத்தில் மட்டும் அவரது உருவம் வேறு மாதிரியாகப் பொறிக்கப்பட்டது. இதில் தலையில் மகுடமும் உடலில் முழு அங்கியும் அணிந்து தோன்றும் அவரது மார்பளவு

உருவம் முத்திரையிடப்பட்டது. இம் மாறுபட்ட உருவத்தைப் பார்த்த பலர் பலவிதமான கருத்துக்களை வெளியிட்டனர். சான்றாக, லண்டன் **டைம்ஸ்** பத்திரிகையின் கருத்துப்படி, இந்தியர்களின் எண்ணப்படி மன்னர் என்றால் மகுடம் அணிந்திருக்க வேண்டும்; அப்படியின்றி, இதுவரை தலையில் மகுடம் ஏதுமின்றி, வெறும்தலை மட்டும், அதுவும் மொட்டைத் தலை மட்டும் பொறிக்கப் பட்டு வந்தது மாபெரும் அரசியல் தவறு; எனவே, அத் தவறைப் போக்கும் முறையில் மகுடத்துடன் மன்னரின் தலையைப் பொறித் திருப்பது வரவேற்கத்தக்கது. மேலும், பம்பாய் வணிகக் குழுவினரும் வேறு சில நிறுவனத்தினரும்கூட அது வரை முத்திரையிடப்பட்டு வந்த மொட்டைத் தலை உருவத்திற்குப் பலமான எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். அதோடு மட்டமன்றி, ஒரு சிலர், அக்காலத்தில் சென்னையில் நடந்த பெரும் குழப்பங்களுக்கெல்லாம் காரணமாயிருந்தது இந்த மொட்டைத் தலைச் சின்னம்தான் என்றுகூடக் கூறலாயினர். எனவே, பெரும் அரசியல் தவறாகக் கருதப்பட்டு வந்த குறை இப் புதிய நிக்கல் நாணயத்தினால் நீங்கி விட்டது என வைத்துக்கொண்டாலும், மற்ற மதிப்புடைய நாணயங்களிலெல்லாம் அரசரின் மொட்டைத் தலைதான் பொறிக்கப்பட்டு வந்தது.

ஏழாம் எட்வர்ட்டுக்குப் பின் ஐந்தாம் ஜார்ஜ், மன்னராக மகுடம் சூட்டப்பட்டார். 1911-ல் டில்லியில் அரச **தர்பார்** விழா நடந்தபோது, அவரது பெயரில் அச்சிடப்பட்ட நாணயங்கள் வெளியிடப்பட்டன. இவற்றில் மகுடத்துடன் மட்டுமன்றி, ராஜகம்பீரமான ஆடையுடனும் மன்னரின் உருவம் முத்திரையிடப்பட்டது. எனவே, ஏழாம் எட்வர்டின் நாணயங்களில் முத்திரையிடப்பட்டு வந்த மொட்டைத்தலை அரசரின் உருவத்தைக் குறைகூறி வந்தவர்களுக்கு இச்சின்னம் திருப்தி அளித்திருக்கலாம். என்றாலும், இப் புதிய **ரூபாய்** நாணயங்களைக் கண்ட முஸ்லிம் இனத்தவருக்கு எரிச்சல் ஏற்பட்டது. ஏனெனில் மன்னர் அணிந்திருந்த ராஜகம்பீரமான ஆடை அணிமணிகளில் யானையின் உருவம் பொறிக்கப்பட்ட அணியும் இருந்தது. அதில் யானையின் தும்பிக்கை சரிவரத் தீட்டப்படாமலிருந்ததால் அது பன்றி வாய்போல் தோன்றியது. எனவே, இந்த நாணயத்தில்

பன்றி இருக்கிறது என்ற வதந்தி நாடெங்கிலும் பரவிவிட்டது. அதை முஸ்லிம் இனத்தவர் நம்பினர். எனவே, டைம்ஸ் ஆஃப் இந்தியா என்னும் பத்திரிகை விளக்கத்தின்படி, இப் புதிய நாணயத்தை எல்லோரும் குறை கூறினதோடு மட்டுமன்றி, எவ்வளவுதான் எடுத்துக் கூறினாலும் முஸ்லிம்களின் அவ நம்பிக்கையை அகற்ற முடியவில்லை. எனவே, இப் புதிய **ரூபாய்** நாணயங்களை வெளிவந்த ஒரு மாதத்திற்குள் நாணயச்சாலைகள் திரும்பப் பெற்றுக்கொண்டன. அதற்குப் பதிலாகக் கச்சிதமான முறையில் தீட்டப்பட்ட யானையின் உருவம் கொண்ட புது **ரூபாய்** நாணயங்கள் 1912-ல் ஜுலை மாதம் வெளியிடப்பட்டன.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் ஆட்சியின்போது 1922 வரைதான் வெள்ளி **ரூபாய்** நாணயங்கள் வெளியிடப்பட்டன. அதற்குப்பின், அவ் வெள்ளி ரூபாய் நாணயங்கள் அச்சிடப்படுவது நிறுத்தப் பட்டுவிட்டதா, அல்லது 1922 அல்லது அதற்கு முந்திய வருடங் களின் முத்திரைப் பொறியால் அச்சிடப்பட்ட நாணயங்களே தொடர்ந்து வெளியிடப்பட்டதா என்று தெரியவில்லை. அதோடு, வெள்ளியில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டு வந்த அரை **ரூபாய்**, கால் **ரூபாய்**, **இரண்டணு** நாணயங்கள் 1918-லேயே நிறுத்தப் பட்டு, அவற்றிற்குப் பதிலாக, செம்பும் நிக்கலும் கலந்த உலோ கத்தில் அவை அச்சிடப்பட்டு வெளிவந்தன. பின்னர், இக் கலவை உலோகத்தில் அச்சிடப்பட்டு வந்த அரை **ரூபாய்** நாணயம் 1919-லும், கால் **ரூபாய்** நாணயம் 1921-லும் நிறுத்தப்பட்டன. எனினும், இவ்விருவகை **ரூபாய்** நாணயங்களும் மறுபடியும் வெள்ளியில் அச்சிடப்பட்டு வெளிவந்தன. கடைசிவரை நிக்கலி லேயே அச்சிடப்பட்டு வந்தது **இரண்டணு** நாணயம் மட்டும்தான். நிற்க, அவரது ஆட்சியின்போது, செம்பில் அச்சிடப்பட்ட **காலணு**, அரைப் **பைசா**, பைசா நாணயங்களும் வெளியிடப்பட் டிருக்கின்றன; ஆனால் ஆண்டுதோறும் வெளியாகவில்லை. அவரது ஆட்சிக் காலத்தில் நான்கைந்து ஆண்டுகள்தான் **பைசா** நாணயங் கள் வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது. அடுத்து, 1918-ல் தங்கத்தில் அச்சிடப்பட்ட பதினைந்து **ரூபாய்** நாணயம் வெளி யிடப்பட்டது; அதில் **ரூபாய்** நாணயத்தின் சின்னம்தான் பொறிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னருக்குப் பின் கொஞ்ச நாட்கள் மட்டுமே ஆட்சி செய்த எட்டாம் எட்வர்டு நாணயங்களை வெளியிட்டதில்லை. பின்னர், ஆறும் ஜார்ஜ் அரியணை ஏறியபோது, 1937-ல் **ரூபாய்** நாணயத்தைத் தவிர, மற்ற எல்லா வகை நாணயங்களையும் வழக்கம்போல் வெளியிட்டார்; அதாவது வெள்ளியில் அரை **ரூபாய்**, கால் **ரூபாய்** நாணயங்களையும், செம்பும் நிக்கலும் சேர்ந்த கலவையில் **இரண்டணு**, ஓரணு நாணயங்களையும், செம்பில் **காலணு**, அரைப் **பைசா**, **பைசா** நாணயங்களையும் வெளியிட்டார். பின்னர், 1940-ல் வெள்ளி **ரூபாய்** நாணயமும் வெளிவந்தது. மேலும், செம்பு-நிக்கல் கலவையில் அச்சிடப்பட்டு வந்த **இரண்டணு, ஓரணு** நாணயங்கள் 1942-லிருந்து அலுமினிய வெண்கலக் கலவையில் அச்சிடப்பட்டு, 1946 வரை ஆண்டு தோறும் வெளியிடப்பட்டன. 1945-ல் வெள்ளிக்குத் தட்டுப் பாடு இருந்ததால், வெள்ளியில் அச்சிடப்பட்டு வந்த நாணயங்களெல்லாம் ரத்து செய்யப்பட்டன; அந் நாணயங்களெல்லாம் செம்பு-நிக்கல் கலவையில் அச்சிடப்பட்டு 1946-ல் வெளியிடப் பட்டன. அந் நாணயங்களின் பின்புறச் சின்னமும் மாற்றப் பட்டது. அதாவது, பழைய சின்னத்திற்குப் பதிலாக, ஒரு புலியும், ஆங்கிலம், ஹிந்தி, பாரசீகத்தில் அவற்றின் மதிப்பும், வருடமும் முத்திரையிடப்பட்டன. 1942-ல் அலுமினியம்-வெண்கலக் கலவையில் அச்சிடப்பட்ட புது அரையணு நாணயம் வெளியிடப்பட்டது. மேலும், 1941-ல் செம்பில் பன்னிரண்டில் ஒரு பகுதி அணு நாணயம் மெல்லியதாக வெளியிடப்பட்டது. ஆனால் 1943-ல் அதுவும் அரைப் **பைசா** நாணயத்தோடு நிறுத்தப்பட்டுவிட்டது. நிற்க, செம்பு உலோகத்திற்குத் தட்டுப்பாடு இருந்ததால், அதைச் சரிக்கட்டும் வகையில் 1943-ல் நடுவில் பெரிய துவாரம் கொண்ட மெல்லிய காலணு நாணயம் வெளியிடப்பட்டது. இதில் ஒருபுறம், பூ வேலைப்பாட்டுச் சின்னமும், மறுபுறம் மன்னரின் மகுடம், வருடம், ஆங்கிலம், ஹிந்தி, பாரசீகம் ஆகியவற்றில் அதன் மதிப்பு ஆகியவையும், 'INDIA' என்ற பெயரும் முத்திரையிடப்பட்டன. இந் நாணயங்களெல்லாம் 1947 வரை தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வந்தன.

இந்தியா சுதந்திரமடைந்ததும் அவை அச்சிடப்படுவது நின்று விட்டது.

1835 முதல் 1947 வரை பம்பாயிலும் கல்கத்தாவிலுமிருந்த நாணயச்சாலைகள் எவ்வித வித்தியாசமுமின்றி, ஒரே மாதிரியான நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டு வந்தன. விக்டோரியா ராணியின் ஆட்சியின் தொடக்கத்தில் இவ்விரு நாணயச்சாலைகளும் வெளியிட்ட நாணயங்களில் எவ்வித வித்தியாசத்தையும் காண முடியாது. ஆனால் ஒரு சில ஆண்டுகளுக்குப் பின்னர் வெளியிடப்பட்ட நாணயங்களில் கல்கத்தாவில் அச்சிடப்பட்டவற்றின் பின்புறத்தில் மலர் வளையச் சின்னத்தின்மீது மிகச் சிறியதாக C என்ற எழுத்து முத்திரையிடப்பட்டுள்ளது. பம்பாய் நாணயங்களில் வருடத்திற்குக் கீழே ஒரு சிறு புள்ளியைக் காணலாம். நாணயச்சாலைகளின் இவ்வடையாளங்கள் கடைசி வரை பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. நிற்க, 1947-ல் பாகிஸ்தான் நாடு தோன்றுவதற்குச் சற்று முன்னர், லாகூரிலும் ஒரு நாணயச்சாலை தொடங்கப்பட்டது. லாகூரில் அச்சிடப்பட்ட நாணயங்களில் பின்புறத்தில் ஏதோ ஒரு மூலையில் L என்ற சின்னமுள்ளதாகக் கூறுகின்றனர். இறுதியாக, கம்பெனியாரின் ஆட்சியின்போது மதருஸ் நாணயச்சாலை மிகத் திறமையுடன் இயங்கி வந்தது; ஆனால் அதை 1867-ல் மூடிவிட்டனர்.

அதிகாரம் 18

சுதேச சமஸ்தானங்களின் நாணயங்கள்

முகலாயப் பேரரசு சிதறி வந்தபோது, திறமை மிக்க மராட்டிய ஆதிக்கமும் பிரிட்டிஷ் ஆதிக்கமும் தோன்றிய அதே சமயத்தில் இந்திய சுதேச அரசுகளும் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றிவிட்டன என்பதை முன்னரே குறிப்பிட்டோம். அவ்வாறு தோன்றிய இந்திய அரசுகள் சொந்தமாகவே நாணயங்களை அச்சிடும் உரிமை கொண்டாடி, தம் நாணயங்களை வெளியிட்டுவந்தன. அவ்வாறு வெளியிடப்பட்ட நாணயங்களனைத்தும் முகலாயப் பேரரசரின் பெயருடன் முகலாய நாணயங்களைப் போலவே அச்சிடப்பட்டன. ஏன் அவ்வாறு அச்சிடப்பட்டன என்பதற்கு அரசியல், பொருளாதாரக் காரணங்களோ அல்லது வேறு காரணங்களோ இருந்திருக்கலாம். எனினும், அந் நாணயங்கள் முக்கிய நாணயங்களல்ல என்பதற்காக அவற்றில் தம் அணிமணியையும் அல்லது சுருக்கெழுத்துக்களையும் முத்திரையிட்டு வந்தன. இருப்பினும், அவற்றில் எவையெவை எந்தெந்த அரசால் வெளியிடப்பட்டன என்று கூறுவது கடினம். அவற்றைப்பற்றிய விவரங்கள் இன்று ஒன்றுமே கிடையாது. அவ் விவரங்களையெல்லாம் எளிதாகச் சேகரித்திருக்கக்கூடிய காலத்தில் நாணய ஆய்வாளர்களும் சேகரிப்பாளரும் அவற்றை அசட்டை செய்துவிட்டனர். எனவே அந் நாணயங்களைப்பற்றி விவரமாக எழுதுவதற்கு முடியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் உறுதி. அதாவது, கி.பி. 1858-ல் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை இங்கிலாந்து நாட்டு அரசு தானே ஏற்றுக்கொண்டபோது, நூற்றுக்கு மேற்பட்ட இந்திய அரசுகள் சொந்தமாகவே நாணயங்களை அச்சிட்டு வந்தன.

1857-ல்தான் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு எதிராக இந்தியர்கள் கிளர்ச்சி செய்தனர்; எனினும் அதற்கு முன்பே

ஆங்கிலேயரின் ஆதிக்கம் இந்தியாவில் தோன்றிவிட்டது. இந்தியாவின் பெரும் பகுதியை ஆண்டு வந்த ஆங்கிலேயர்கள், இந்திய அரசுகளுடன் நல்லுறவு கொண்டு, ஒப்பந்தங்களும் செய்து கொண்டு செல்வாக்குப் பெற்றிருந்தனர்; அவைகளைத் தமது ஆதிக்கத்திற்குட்பட்ட அரசுகளாகவே நடத்தி வந்தனர். என்றாலும், அவைகள் வெளியிட்டு வந்த நாணயங்களில் சிறிதளவும் தலையிடவில்லை. இதனால் இந்திய அரசுகள் அனைத்தும், பிறருடைய குறுக்கீடின்றி, தாமாகவே முகலாயப் பாணியில் நாணயங்களை அச்சிட்டு வந்தன. ஆனால் 1857-ல் நடந்த கிளர்ச்சிக்குப் பின்னர் கடைசி முகலாய மன்னராக ஆட்சி செய்து வந்த பகதூர் ஷா ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டார். அதனால் இங்கிருந்த சூழ்நிலையே மாறிவிட்டது. அந்நிலையில் முகலாய மன்னரின்பெயரில் நாணயங்களை வெளியிடுவது அர்த்தமற்றதாகிவிட்டது. அப்போது, இந்திய அரசுகள் அனைத்தும் தம் நாணயங்களில் இங்கிலாந்து நாட்டு ராணியின் உருவத்தையோ அல்லது தமது ராஜபக்தியை வெளியிடக்கூடிய வேறு சின்னத்தையோ முத்திரையிட வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் விரும்பினர். அப்படிச் செய்தால்தான் இந்திய அரசுகள் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இருந்து வந்ததற்குச் சான்றாகும் என்று அவர்கள் கருதினர். எனவே, இந்திய அரசாங்கத்திற்குத் தம் கருத்தை வெளியிட்டனர். ஆனால், 1857-ல் நடந்த கிளர்ச்சியினால் குழப்பமடைந்திருந்த இந்திய அரசாங்கம், இந்திய அரசுகளைக் கட்டாயப்படுத்தி, அவ்வாறு முத்திரையிடச் சொன்னால் தமது செல்வாக்குக் குறைந்து விடலாம் என்று அஞ்சியது. எனவே பிரிட்டிஷ் அரசாங்கம் எவ்வளவு நெருக்கடி செய்த போதிலும், அவற்றைப்பற்றிக் கவலைப்படாத இந்திய அரசாங்கம் அதற்கென்று எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

எவ்வாறிருப்பினும், இந்திய அரசுகள் அனைத்தும் தம் நாணயங்களில் முகலாய மன்னரின் பெயரைப் பொறிப்பது ஏளனத்திற்குரியது என்பதை உணர்ந்துவிட்டன. எனவே, ஒரு சில அரசுகள், எவ்விதக் கட்டாயமுமின்றி, தாமாகவே முன்வந்து பிரிட்டிஷ் அரசாங்கத்தின்மீது பற்றுள்ள வகையில் தம் நாண

யங்களை அச்சிடத் தொடங்கின. 1846ஆம் ஆண்டிலேயே கட்ச் பகுதியை ஆண்டு வந்த இராவ் தமது நாணயங்களில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பெயரையே முத்திரையிட வேண்டுமெனத் தீர்மானித்தார். அடுத்து, ரேவா மகாராஜாவாயிருந்த ரகுராஜ் சிங் என்பவர் மிகுந்த ஆர்வத்துடன் 1849-ல் வெளியிட்ட நாணயங்களில் ஆங்கிலப் பிரதிநிதியாயிருந்த புஷ்பி என்பவரின் பெயரை அச்சிட்டார். என்றாலும் 1857-க்குப் பின்னர்தான் இந்திய அரசுகளை ஆண்டு வந்த ராஜாக்களும் நவாப்புகளும் தம் நாணயங்களில் முகலாய மன்னரின் பெயரை நீக்கத் தொடங்கினர்; 1872-ல் வெளியிட்ட எந்த நாணயங்களிலும் முகலாய மன்னரின் பெயரோ அல்லது முகலாய வாசகமோ முத்திரையிடப்படவில்லை. ஆனாலும், எல்லா அரசுகளும் தம் நாணயங்களில் இங்கிலாந்து நாட்டு ராணியின் பெயரை முத்திரையிடவில்லை.

அதே சமயம், இந்தியாவிலிருந்த ஆங்கில அரசாங்கம் சொந்தமாக நாணயங்களை அச்சிடுவதற்கு இந்திய அரசுகள் கொண்டிருந்த உரிமையைத் தீவிரமாகப் பரிசீலனை செய்யத் தொடங்கியது. முடிவில் தகுதி பெற்றதாகக் கருதப்பட்ட முப்பத்திநான்கு அரசுகளுக்கு மட்டுமே அவ்வுரிமையைத் தந்தது. அந்த முப்பத்தி நான்கு அரசுகளில் ஆல்வார், பரத்பூர், பிக்கானீர், பூண்டி, தேவாஸ், தார், ஜெய்ப்பூர், ஜெய்ஸால்மர், ஜலாவார், ஜோத்பூர், கரௌலி, கட்ச்வான், கிஷன்கர், கோடா, கட்ச், டோங்க் ஆகிய அரசுகள் மட்டுமே முகலாய மன்னரின் பெயருக்குப் பதிலாக விக்டோரியா ராணியின் பெயரை முத்திரையிட்டன. இவற்றில் பரத்பூரைத் தவிர, ஏனைய அரசுகள் அனைத்தும் விக்டோரியா ராணியின் பெயரோடு அவரது பட்டத்தையும் முத்திரையிட்டன. பரத்பூர் மட்டும் விக்டோரியா ராணியின் உருவத்தையும் முத்திரையிட்டது. விக்டோரியா ராணியின் பெயரில் வெளிவந்த அந் நாணயங்களில் அவரது பெயரும் பட்டமும் ஒரே மொழியில் முத்திரையிடப்படவில்லை. பூண்டி அரசைத் தவிர மற்றவையெல்லாம் தம் வழக்கப்படி பாரசீக மொழியில் பொறித்தன. பூண்டி அரசு மட்டும்தான் ராணியின் பெயரை ஆங்கிலத்தில் பொறித்ததோடு, கிருத்துவ சகாப்த ஆண்டையும்

முத்திரையிட்டது. ராணியின் பெயரை முத்திரையிடாத அரசுகளில் மேவார் மட்டும் தனது நாணயங்களில் **தோஸ்தி லண்டன்** (லண்டனின் நண்பன்) என்ற வாசகத்தைப் பொறித்து நல்ல பெயர் வாங்கிக்கொண்டது. போபால், ஜௌரா, இரட்லம், சைலானு ஆகிய நான்கு அரசுகளின் அதிபர்களும் தம் நாணயங்களில் ராணியின் பெயருக்குப் பதிலாகத் தத்தம் பெயர்களைப் பொறிக்காமல் அரசுகளின் பெயர், நாணயத்தின் மதிப்பு, வருடம் ஆகியவற்றை மட்டும் பொறித்துத் தப்பித்துக்கொண்டனர். மற்ற அரசுகளை ஆண்டவர்களோ ராணியின் பெயருக்குப் பதிலாகத் துணிச்சலுடன் தம் பெயர்களை முத்திரையிட்டனர்.

மேலும், இந்தியாவிலிருந்த ஆங்கில அரசாங்கம் 1876-ல் இந்த அரசுகளுக்கெல்லாம் ஒரு சலுகை அளித்தது; அச் சலுகையைப் பெறுவதற்கு நிபந்தனையொன்றையும் விதித்தது. அதாவது, இவ்வரசுகள் தம் நாணயச்சாலைகளை மூடிவிட்டு, தம்மிடமிருந்த உலோகங்களை ஆங்கில நாணயச்சாலைக்கு அனுப்பி, பிரிட்டிஷ் நாணயங்களைப்போலவே தம் நாணயங்களையும் கட்டணமேதுமின்றி அச்சடித்துக் கொள்ளலாம் என்று கூறியது. ஒரு சில அரசுகள் தான் இச்சலுகையையும் நிபந்தனையையும் ஏற்றுக்கொண்டன. அவற்றில் ஆல்வார், பிக்கானீர் ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்கவை. இவ்விரு அரசுகளின் நாணயங்களும் கிடைத்துள்ளன. இவற்றில் முன்புறத்தில் ராணியின் மார்பளவு உருவம் முத்திரையிடப்பட்டுள்ளது; பின்புறத்தில் அவ்வரசையாண்டவர்களின் பெயர், வருடம் ஆகியவை உள்ளன. எனினும் 1893-ல் அச் சலுகை ரத்து செய்யப்பட்டது. அவ்வாறு சலுகை ரத்து செய்யப்பட்டதால், இந்திய அரசுகளின் நாணயங்களின் மதிப்புக் குறைந்துவிட்டதாகவும், அதனுல் அவ்வரசுகளில் பல தம்மிடமிருந்த நாணயங்களையெல்லாம் நடப்பு விலையில் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கே விற்றுவிட்டு, தம்மிடமிருந்த நாணய வெளியீட்டுரிமையை விட்டுக் கொடுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. அப்போது ஹைதராபாத், மேவார் (உதயபுரி), ஜெய்ப்பூர், டோங்க், ஓர்ச்சா, திருவாங்கூர் ஆகிய அரசுகள் மட்டும் வெள்ளியிலும் செம்பிலும், பூண்டி, கட்ச், ஜெய்ஸால்மர், கிஷன்கர் ஆகிய அரசுகள்

வெள்ளியிலும், பஹவல்பூர், பரோடா, குவாலியர், இந்தூர், ஜோத்பூர், ஜூனாகர், புதுக்கோட்டை, இரட்லம், சைலானு ஆகிய அரசுகள் செம்பிலும் நாணயங்களை வெளியிடும் உரிமையை வைத்துக்கொண்டிருந்தன. இருந்தபோதிலும், இவற்றில் ஒர்ச்சா, ஜெய்ஸால்மர், கிஷன்கர் ஆகிய அரசுகள் தம் உரிமையைப் பயன் படுத்தியதாகத் தெரியவில்லை; அவை வெளியிட்ட நாணயம் எதுவும் கிடையாது. அடுத்து, டோங்க், பூண்டி, ஜூனாகர், பஹவல்பூர், இரட்லம், சைலானு, புதுக்கோட்டை முதலிய அரசுகள் எப்போதாவதுதான் தம் நாணயங்களை வெளியிட்டு வந்தன; அவையும் தம் நாணயங்களை பிரிட்டிஷ் நாணயச் சாலையில் அச்சடித்ததாகத் தெரிகிறது. ஹைதராபாத், மேவார் (உதயபுரி), ஜெய்ப்பூர், திருவாங்கூர், கட்ச், குவாலியர், ஜோத் பூர், இந்தூர், பரோடா ஆகிய அரசுகள் மட்டும்தான் அவை இந்தியக் குடியரசோடு இணையும்வரை, ஆண்டுதோறும் தம் நாணயங்களை வெளியிட்டு வந்தன.

இவற்றில் கட்ச், ஜோத்பூர் ஆகிய இரு அரசுகள் மட்டும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின்மீது தாம் கொண்டிருந்த ராஜபக்தி யைக் காட்டும் வகையில் தம் நாணயங்களில் பிரிட்டிஷ் மன்னரின் பெயரைப் பொறித்து ஆண்டுதோறும் வெளியிட்டு வந்தன. எட்டாம் எட்வர்டு பெயரில்கூட 1936-ல் தம் நாணயங்களை வெளியிட்டன; ஆனால் அவரது சொந்த நாட்டில்கூட அவரது பெயரில் நாணயங்கள் வெளியிடப்படவில்லை. இதனால் இந் நாணயங்களுக்கு அதிகக்கிராக்கி இருந்து வருகிறது. அடுத்து, மேவார் (உதயபுரி) அரசு பல்வேறு மதிப்புடைய நாணயங்களை வெளியிட்டு வந்தது; எனினும் 1951-லிருந்தே அவையனைத்தும் ஒரேமாதிரியான சின்னத்தையே பயன்படுத்தியிருக்கிறது. இவற் றில் முன்புறத்தில் **தோஸ்தி லண்டன்** என்ற வாசகமும், பின் புறத்தில் **சித்திரகூட உதய்பூர்** என்ற வாசகமும்தான் நாகரியில் பொறிக்கப்பட்டுள்ளன. அதோடு, இவற்றில் 1832-க்கு முன்பு வெளியிடப்பட்ட நாணயங்களிலெல்லாம் இந்திய முறையில் அச்சிடப்பட்டிருக்கின்றன; இவையனைத்தும் கல்கத்தா நாணயச் சாலையில் அச்சிடப்பட்டதாகத் தெரிகிறது. அடுத்து, ஹைதரா பாத் அரசு 1858-ல் முன்புறம் **நிஜாம்-அல்-முல்க் அசப் ஜா**

என்ற பாரசீக வாசகமும், பின்புறம் முகலாயப்பாணியின் வாசகமும் கொண்ட நாணயங்களைத்தான் வெளியிட்டது. ஆனால் 1903–04-ல் இயந்திரத்தில் அச்சிடப்பட்ட புதுவகையான நாணயங்களை வெளியிட்டிருக்கிறது. இவற்றின் முன்புறத்தில் ஹைதராபாத்தின் நினைவுச்சின்னமான சார்மினாரும், அதைச் சுற்றி சற்றுமுன் குறிப்பிட்ட வாசகமும் முத்திரையிடப் பட்டுள்ளன ; பின்புறத்தில் பழைய முகலாயப்பாணி வாசகமும் நாணயத்தின் மதிப்பும் இருக்கின்றன. ஆனால் இந்நாணயங்களில் ஹைதராபாத் நிஜாமின் பெயர் பொறிக்கப்படாமல், அவரது பெயரின் முதலெழுத்துக்கள் மட்டும் முன்புறத்திலுள்ள சார்மினாரின் மேல்வளைவில் பொறிக்கப்பட்டுள்ளன. அதோடு, இவையனைத்தும் பிரிட்டிஷ் இந்திய நாணயங்கள் அச்சிடப்பட்ட அதே உலோகங்களிலும் அதே தரங்களிலும்தான் வெளியிடப் பட்டிருக்கின்றன. ஜெய்ப்பூர் அரசு வெளியிட்டு வந்த நாணயங் களில் முன்புறத்தில் வழக்கம்போல் முகலாயப் பாணியில் பாரசீக வாசகமும் இங்கிலாந்து நாட்டு மன்னரின் பெயரும் உள்ளன ; பின்புறத்தில் ஜெய்ப்பூர் மகாராஜாவின் பெயர் உள்ளது. 1944-ல் ஜெய்ப்பூர் செம்பு-வெண்கலக் கலவையில் அச்சிடப்பட்ட அணா நாணயத்தை வெளியிட்டது. அதில் முன் புறம் மூன்றாம் மாதூ சிங் அவர்களின் உருவத்தையும் ஹிந்தி யில் பொறிக்கப்பட்ட அவரது பெயரையும் காணலாம் ; பின் புறம் இங்கிலாந்து மன்னரின் பெயர், நாணயத்தின் மதிப்பு, நாணயச்சாலையின் பெயர் ஆகியவை உள்ளன. 1944-க்குப் பின்னர் அவ்வரசு நாணயங்களை வெளியிட்டதா என்று தெரிய வில்லை. இறுதியாக, குவாலியர், இந்தூர், பரோடா ஆகிய மூன்று அரசுகளும் வெளியிட்டு வந்த நாணயங்களில் பெரும்பாலும் அவற்றை ஆண்டுவந்த ராஜாக்களின் உருவம்தான் உள்ளது.

அதிகாரம் 19

இந்தியக் குடியரசு நாணயங்கள்

1947-ல் இந்தியா சுதந்திரமடைந்து, விரைவில் ஒரு குடியரசாகியது. ஆனால், 1950 வரை புதிய நாணயம் எதுவும் வெளியிடப்படவில்லை. 1950-ல்தான் முதன் முறையாகச் சுதந்திர இந்தியாவின் நாணயங்கள் வெளியிடப்பட்டன. எனினும், அவையனைத்தும் பழைய ஆங்கில - இந்திய நாணயங்களைப் போலவேதான் அச்சிடப்பட்டு வெளிவந்தன. அந் நாணயங்களின் மதிப்பு, எடை, வேலைப்பாடு, உலோகம் ஆகிய எதிலும் புதிய அம்சம் ஒன்றுமில்லை. தோற்றத்தில் மட்டும்தான் கொஞ்சம் மாறுதல் இருந்தது; அதுவும்கூடச் சுதந்திர இந்தியாவைப் பிரதிபலிப்பதாக அமையவில்லை. இந்நாணயங்களின் முன்புறத்தில் மன்னரின் உருவத்திற்குப் பதிலாக இந்தியக் குடியரசின் சின்னமான அசோகரின் சாரநாத் தூண் தலைப்பும், மன்னரின் பெயருக்குப் பதிலாக 'GOVERNMENT OF INDIA' என்னும் சொற்களும் முத்திரையிடப்பட்டன. பின்புறத்தில் பூ வேலைப்பாடு கொண்ட சின்னத்திற்குப் பதிலாக இரண்டு புறமும் இரு கோதுமைக் கதிர்களும் அவற்றிற்கு நடுவில் ரோமானிய எண்களில் நாணயத்தின் மதிப்பும் முத்திரையிடப்பட்டன; அதோடு, கீழ்ப்புறம் வருடமும் ஆங்கிலத்தில் அதன் மதிப்பும், மேல்புறம் ஹிந்தியில் அதன் மதிப்பும் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரு **ரூபாய்**, அரை **ரூபாய்**, கால் **ரூபாய்** ஆகிய நாணயங்களில் பின்புறம் இச்சின்னம்தான் முத்திரையிடப்பட்டுள்ளது. ஏனைய நாணயங்களில் மட்டும் பின்புறம் அச்சிடப்பட்ட சின்னங்கள் நமது நாணயச்சாலையின் திறமைக்கும் நிதித்துறையின் நுட்பத்திற்கும் எடுத்துக்காட்டாக உள்ளன. அதாவது, **இரண்டணா**, **ஓரணா**, **அரையணா** நாணயங்களில் காளைமாட்டுச் சின்னமும், செம்பில் அச்சிடப்பட்ட **பைசா** நாணயங்களில் பறப்பது போன்ற குதிரை

யின் சின்னமும் முத்திரையிடப்பட்டன. மேலும், இவ்வகை நாணயங்கள் 1956 வரை தொடர்ந்து வெளியிடப்பட்டு வந்தன.

1957-ல் இந்தியப் பழக்க வழக்கங்களில் மெட்ரிக் அல்லது தசாம்ச முறை புகுத்தப்பட்டது. இதனால் நாணயங்களும் தசாம்சமுறைக் கணக்கில் மதிப்பிடப்பட்டன. எனினும், இந்த தசாம்ச முறை, சிலர் நினைப்பது போல் அவ்வளவு புதுமையானதல்ல. வேதகாலத்தில் பிந்திய ஆண்டுகளில் நூறு அலகு மதிப்புள்ள நாணயத்தைச் **சதமானம்** என்றழைத்து வந்திருக்கின்றனர். மேலும், ஸ்ரௌத சூத்திரங்களில் பத்துப்பத்தாகக் கணக்கிடப்பட்டுக் கூறப்பட்ட பல சொற்கள் குறிப்பிடப்பட்டுள்ளன ; ஆனால் அக்காலத்திய மக்கள் அம் முறையை அவ்வளவாக விரும்பாத காரணத்தால், அது உடனடியாகக் கைவிடப்பட்டுவிட்டது. அடுத்து, பதினான்காம் நூற்றாண்டில் ஆட்சி செய்து வந்த துக்ளக் மன்னர்களும் கில்ஜி மன்னர்களும் தசாம்ச முறையையொத்த (ஐந்தை ஆதாரமாகக் கொண்ட) திட்டத்தில் தமது நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர். அதன் பிறகு, முகலாயர் ஆட்சிக் காலத்தில் பேரரசரான அக்பர் தனது செம்பு நாணயங்களைப் பஞ்சாம்ச - தசாம்ச முறையின் அடிப்படையில் வெளியிட்டிருக்கிறார். நமது நாட்டை ஆண்டு வந்த ஆங்கிலேயர்கள்கூட தசாம்ச முறையில் தம் நாணயங்களை வெளியிடத் திட்டமிட்டனர். சான்றாக, 1851-ல் (சென்னை) செயின்ட் ஜார்ஜ் கோட்டை நாணயச்சாலையில் நாணய மதிப்பீட்டு அதிகாரி ஒருவர் ஓரணா[1] நாணயத்தில் நூற்றில் ஒரு பகுதி நாணயத்தை வெளியிடத் திட்டமிட்டிருந்தார் ; ஆனால், மதராஸ் நாணயச்சாலையை மூடிவிடலாமென்ற பேச்சு அப்போது இருந்ததால் அவரது திட்டம் செயல்படவில்லை. இறுதியாக, ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கு ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர், அமெரிக்க நாணய முறையைப் போல் இந்தியாவிலும் நாணயங்களை வெளியிட வேண்டுமெனத் திட்டமிட்டனர். அதற்காகப் பல நடவடிக்கை

---

[1] **பதிவுச் சான்றில் ஓரணா என்றுதான் பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஒரு வேளை ஒரு ரூபாய் என்பதைத்தான் ஓரணா என்று கவனக்குறைவாகப் பதிந்து விட்டனர் போலும்.**

களையும் மேற்கொண்டனர்; அத்திட்டத்தின்படி நாணயங்களை அச்சிடுவதற்கென்று நாணயச்சாலைகள் பிரத்தியேகமான முத்திரைப் பொறிகளைக்கூடத் தயார் செய்துவிட்டன. ஆனால் அத்திட்டத்திற்கு மகாத்மா காந்தி அவர்கள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தார். அவரது எதிர்ப்பைக் கண்ட ஆங்கிலேயர்கள் பேசாமல் அத்திட்டத்தை நழுவவிட்டனர். இருந்தபோதிலும், சுதந்திரம் பெற்ற பின்னர் நமது அரசியல் தலைவர்களும் பொறுப்பு மிக்க நிர்வாக அதிகாரிகளும் உலகத்தோடு ஒத்து வாழ வேண்டுமென நினைத்து, இரண்டாயிரம் ஆண்டுகளாக நமது நாட்டில் நல்ல முறையில் செயல்பட்டு வந்த கால்பகுதி முறை நாணயத் திட்டத்தைக் குறைகூறி அதைக் கைவிட்டனர். அதற்குப் பதிலாக, பிரான்ஸ் நாட்டில் தோன்றி பல்வேறு நாடுகள் பின்பற்றிய மெட்ரிக் முறையை இங்கும் புகுத்தினர்.

இப் புதிய முறைப்படி ஒரு **ரூபாய்** என்பது நூறு பைசாக்களுக்குச் சமம். ஆனால், பழைய பைசாவிற்கும் வித்தியாசமிருக்க வேண்டுமென்பதற்காக, புதுப்பைசாவிற்கு **நயா பைசா** என்ற பெயர் வழங்கப்பட்டது. இப் புதுத் திட்டத்தின்படி ஒரு **ரூபாய்**, 50 **நயே பைசே**, 25 **நயே பைசே**, 10 **நயே பைசே**, 5 **நயே பைசே**, 2 **நயே பைசே**, ஒரு **நயா பைசா** என்று பல வகை நாணயங்கள் வெளியிடப்பட்டன. இவற்றில் முன்புறம் பழைய நாணயச் சின்னங்களே உள்ளதெனினும், ' GOVERNMENT OF INDIA ' என்பதற்குப் பதிலாக **பாரத்** என்று ஹிந்தியிலும், 'INDIA' என்று ஆங்கிலத்திலும் முத்திரையிடப்பட்டுள்ளன. பின்புறத்தில் **ரூபாய்க்** கணக்கிலும், **பைசாக்** கணக்கிலும், அதனதன் மதிப்பு முத்திரையிடப்பட்டு வந்தது. நாளடைவில் பழைய **பைசா** நாணயங்கள் புழக்கத்திலிருந்து குறைந்து 1964-ல் முழுவதும் மறைந்துவிட்டன. எனவே, அந்த ஆண்டிலிருந்து வெளியிடப்பட்ட நாணயங்களிலெல்லாம் **நயா** என்ற சொல் நீக்கப்பட்டு, **பைசா** என்ற சொல் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அதே ஆண்டில் மூன்று **பைசே** என்ற புது நாணயம் அலுமினியத்தில் வெளியிடப்பட்டது. அதற்கடுத்த 1965ஆம் ஆண்டில் 2 **பைசே** நாணயம் நிக்கலுக்குப் பதிலாக அலுமினியத்தில் வெளியிடப்பட்டது. பின்னர், 1967-ல் நிக்கலில் வெளியிடப்பட்டு

வந்த 5 **பைசே** நாணயமும் அலுமினியத்தில் வெளிவந்தது. கடைசியில் 1968-ல் 10 **பைசே** நாணயமும் அலுமினிய நாணயமாக வெளியிடப்பட்டது. அதோடு, அந்த ஆண்டிலேயே 20 **பைசே** புதிய நாணயம் வெளியிடப்பட்டது. இவ்வாருக, ஒரு **ரூபாய்**, 50 **பைசே**, 25 **பைசே** ஆகிய மூன்று நாணயங்கள் மட்டும் தான் இன்று நிக்கலில் வெளியிடப்பட்டு வருகின்றன. இவை கூட ஒரு சில ஆண்டுகளில் அலுமினியத்திலோ அல்லது இலேசான வேறு உலோகத்திலோ வெளியிடப்பட்டால் ஆச்சரியப் படுவதற்கில்லை.

இவ்வாருக, இந்திய நாணய வரலாற்றின் முடிவுக்கு நாம் வந்துவிட்டோம். எனினும், 1964-ல் பண்டித ஜவஹர்லால் நேருவின் நினைவாக ஒரு **ரூபாய்**, 50 **பைசே** நாணயங்கள் வெளியிடப்பட்டதை மறந்துவிடக்கூடாது. இந்நாணயங்களின் முன்புறத்தில் நடுவில் இடதுசாயலாக உள்ள நேருவின் குல்லாயற்ற தலையும், மேலே ஆங்கிலத்தில் அவரது பெயரும், கீழே 1889–1964 என்ற வருடங்களும் முத்திரையிடப்பட்டுள்ளன. பின்னர் வெளியிடப்பட்ட 50 **பைசே** நாணயத்தில் அவரது பெயர் நாகரியில் உள்ளது. இந் நாணயங்களின் பின்புறத்தில் மேலே அசோகரின் தூண் தலைப்பு உள்ளது; அதோடு, ஆங்கிலத்திலும் நாகரியிலும் அவற்றின் மதிப்பும், **பாரத்** என்று நாகரியிலும் ‘INDIA’ என்று ஆங்கிலத்திலும் முத்திரையிடப் பட்டுள்ளன.

துணை நூல்கள்

அதிகாரம் 1

A. Cunningham, *Coins of Ancient India.*

S. K. Chakraborty, *Ancient Indian Numismatics.*

A. S. Altekar, " Origin and Early History of Coinage in Ancient India ", (*J.N.S.I.*, XV).

V. S. Agarwala, Presidential Address, Numismatic Society of India, Nagpur Session (*J.N.S.I.*, XII).

அதிகாரம் 2

P. L. Gupta, *Punch-marked Coins in Ancient India* (Unpublished thesis, Banaras Hindu University).

P. L. Gupta, *Punch-marked Coins in the Andhra Pradesh Government Museum.*

P. L. Gupta, *Amaravati Hoard of Silver Punch-marked Coins.*

P. L. Gupta, *Bibliography of the Hoards of Punch-marked Coins.*

E. H. C. Walsh, *Punch-marked Coins from Taxila.*

Durga Prasad, *Silver Punch-marked Coins of Ancient India* (*N.S.* XLV, XLVII).

Numerous articles on the subject in *The Journal of the Numismatic Society of India.*

அதிகாரம் 3

P. Gardiner, *Catalogue of Indian Coins in British Museum, Greek and Scythic Kings of Bactria and India.*

R. B. Whitehead, *Catalogue of Coins in the Punjab Museum*, Vol. I.

A. K. Narain, *Indo-Greeks.*
A. Cunningham, *Coins of Alexander's Succces-sors in the East.*

அதிகாரம் 4 P. Gardiner, *Catalogue of Indian Coins in British Museum, Greek and Scythic Kings of Bactria and India.*
R. B. Whitehead, *Catalogue of Coins in the Punjab Museum*, Vol. I.
V. Smith, *Catalogue of Coins in the Indian Museum*, Vol. I.
A. Cunningham, *Coins of Indo-Scythians.*
B. Chattopadhyaya, *The Age of Kushanas—A Numismatic Study.*
J. Rosenfield, *Dynastic Arts of the Kushanas.*

அதிகாரம் 5 J. Allan, *Catalogue of Coins in the British Museum, Ancient India.*
V. Smith, *Catalogue of Coins in the Indian Museum*, Vol. I.
S. K. Chakraborty, *Ancient Indian Numisma-tics.*
Numerous articles on the subject in the *The Journal of the Numismatic Society of India.*

அதிகாரம் 6 E. J. Rapson, *Catalogue of the Coins of the Andhra Dynasty, the Western Kshatrapas, etc. in the British Museum.*
P. L. Gupta, *Roman Coins from Andhra Pradesh.*
Numerous articles in *The Journal of the Numismatic Society of India.*

அதிகாரம் 7

J. Allan, *Catalogue of the Coins of the Gupta Dynasties in the British Museum.*

A. S. Altekar, *The Coinage of the Gupta Empire.*

A. S. Altekar, *Catalogue of the Gupta Gold Coins in the Bayana Hoard.*

அதிகாரம் 8

A. Cunningham, *Coins of the Indo-Later Scythians.*

A. Cunningham, *Coins of Medieval India.*

J. F. Fleet, "Coins and History of Toramana", (*I.A.* XVIII).

R. K. Chaudhary "A Critical Study of the Coinage of the Hunas" (*J.N.S.I.*, XXV).

U. Thakur, "The Huna Coinage" (*J.N.S.I.*, XXIX).

B. C. Jain, "Repousse Gold Coins from Chanda District" (*J.N.S.I.*, XVI).

அதிகாரம் 9

A. Cunningham, *Coins of Medieval India.*

R. Burn, "Some Coins of the Maukharis and of the Thanesar Line" (*J.R.A.S.*, 1906).

J. M. Unvala, "Hepthalite Coins with Pahlav Legends" (*J.N.S.I.*, IV).

L. Gopal, *Early Medieval Coin-types of Northern India.*

Numerous articles in *The Numismatic Supplement and The Journal of the Numismatic Society of India.*

அதிகாரம் 10

W. Elliot, *Coins of Southern India.*

M. H. Krishna, *The Deccan Numismatics* (Unpublished thesis, London University).

C. H. Biddulph, *Coins of the Pandyas.*

C. H. Biddulph, *Coins of the Cholas.*

R. P. Jackson, *The Dominions, Emblems and Coins of the South Indian Dynasties.*

E. Loventhal, *The Coins of Tinnevelly.*

R. H. C. Turfnell, *Hints to Coin Collectors in South India.*

Vidya Prakash, *Coinage of South India, An Introductory Survey.*

அதிகாரம் 11 H. N. Wright, *The Coinage and Metrology of the Sultans of Delhi.*

H. N. Wright, *Catalogue of the Coins in the Indian Museum*, Vol. II.

S. Lanepoole, *Catalogue of Coins in the British Museum, Sultans of Delhi.*

Prayag Dayal, *Catalogue of Coins of the Sultans of Delhi, Lucknow Museum.*

அதிகாரம் 12 S. Lanepoole, *Catalogue of Coins of the Muhammudan States of India in the British Museum.*

H. N. Wright, *Catalogue of Coins in the Indian Museum*, Vol. II.

A. Karim, *The Corpus of the Coins of the Sultans of Bengal.*

C. R. Singhal, *Catalogue of the Coins of Gujarat Sultans in the Prince of Wales Museum, Bombay.*

L. Whiteking, "History and Coinage of Malwa" (*Numismatic Chronicle*, 1903, 1904).

H. M. Whittel, " The Coinage of the Sharqi Kings of Jaunpur " (*N.S.*, XXXVI).

C. J. Rodgers, " The Square Coins of the Muhammadan Kings of Kashmir " (*J.A.S.B.*, 1885).

E. Hultzch, "Coinage of the Sultans of Madura" (*J.R.A.S.*, 1909).

அதிகாரம் 13 M. A. Wali Khan, *Bahmani Coins.*

F. J. Thanawala, "Copper Coins of the Nizam Shahi or Ahmadnagar Dynasty of Deccan" (*N.S.*, VII).

A. H. Siddiqui, "Copper Coins of Burhan Nizam Shah III" (*J.N.S.I.*, XXVI).

G. P. Taylor, "Some Copper Coins of the Adil Shahi Dynasty of Bijapur" (*N.S.*, XV).

M. A. Wali Khan, *The Qutb Shahi Coins.*

H. Kaus, "The Copper Coins of the Barid Shahi Kings of Bidar" (*J.N.S.I.*, VII, XI).

அதிகாரம் 14 C. J. Brown, *Catalogue of the Mughal Coins in the Provincial Museum*, Lucknow, 2 Vols.

S. Lanepool, *Catalogue of the Coins of the Mughal Emperors in the British Museum.*

R. B. Whitehead, *Catalogue of the Coins of the Mughal Emperors in the Punjab Museum.*

H. N. Wright, *Catalogue of Coins in the Indian Museum*, Vol. III.

S. N. Hodivala, *Studies in Mughal Numismatics.*

Numerous articles scattered through *The Journal of the Royal Asiatic Society*, *Journal of the Asiatic Society of Bengal*, *Indian Antiquary*, *Numismatic Supplements* and *The Journal of the Numismatic Society of India.*

அதிகாரம் 15 A. Cunningham, *Coins of Medieval India.*

C. J. Rodgers, " Coins of the Maharajahs of Kangra " (*J.A.S.B.*, 1880).

Roshanlal Samar, *Coins of Mewar.*

H. R. Nevill, " A New Coin of Garha Mandla " (*N.S.*, XXXIX).

J. Allan, "The Coinage of Assam" (*N.C.*, 1909).

Some articles in *The Journal of the Numismatic Society of India.*

அதிகாரம் 16 M. G. Ranade, " Currencies and Mints under Maratha Rule " (*J.B.B.R.A.S.*, 1902).

R. B. Whitehead, *Catalogue of Coins in the Punjab Museum*, Vol. II. Durrani.

C. J. Rodgers, " The Coins of the Sikhs " (*J.A.S.B.*, L).

J. Allan, *Catalogue of Coins in the Indian Museum*, Vol. IV.

Prayag Dayal, *Catalogue of Coins of the Kings of Awadh in Lucknow Museum.*

அதிகாரம் 17 J. G. D'Cunha, " Contributions to the Study of Indo-Portuguese Numismatics " (*J.B.B. R.A.S.*, XIV, XV and XVI).

B. A. Fernandis, " Indo-Portuguese Coins, Silver Issues of Diu" (*J.N.S.I.*, III).

H. Heras, " The Danish Coins of Tranquebar " (*N.S.*, XLV).

E. Hultzsch, "Danish Coins from Tranquebar" (" Indian Antiquary ", XXII).

J. C. Holm, *Trankebar Monter* (in Danish).

Vilhelm Bergsoe *Trankebar Monter* (in Danish).

C. F. Rasmussen, *Beskrivelse of Danske Monter Fra Trankebar* (in Danish).

C. Scholten, *The Coins of the Dutch Overseas Territories.*

E. Zay, *Histoire Monetaire des Colonies Francaises* (in French).

E. Thurston, *History of the Coinage of the Territories of the E.I.C. in the Indian Peninsula and Catalogue of the Coins in the Madras Museum.*

Edward Thomas, " Coins of the E.I.Co. in Bombay, under the Charters of Charles II " (*Numismatic Chroncile*, 1883).

J. M. C. Johnston, *Coinage of the E.I. Company.*

P. L. Gupta, " Silver Coins of Bombay in the Names of William III and Mary " (*J.N.S.I.*, XXI).

H. W. A. Linecar, *British Commonwealth Coinage.*

L. V. W. Wright, *Colonial and Commonwealth Coins.*

அதிகாரம் 18 A. F. R. Hoernle, " Notes on Coins of Native States " (*J.A.S.B.*, 1897).

W. W. Webb, *Currencies of Rajputana.*

James Prinsep, *Useful Tables.*

O. Codrington, " Coinage of Kutch and Katthiawar " (*Num. Chron*, 1898).

W. H. Valentine, *The Copper Coins of India.*

J. Allan, *Catalogue of Coins in the Indian Museum*, Vol IV.

B. N. Reu, *Coins of Marwar.*

Roshanlal Samar, *Coins of Mewar.*

வாசகர்கள் இந்நூல்களை மட்டும் படித்தால் போதாது. இவற்றோடு, C. R. Singhal & P. L. Gupta எழுதியுள்ள " Bibliography

of Indian Coins" (2 பாகங்கள்) என்ற நூலையும் அதன் இணை வெளியீடுகளையும் பார்ப்பது நன்று. இந்நூலில் இந்திய நாணயங்களைப்பற்றிய எல்லா நூல்களுமே குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், நாணயங்களைப்பற்றிய புதிய விவரங்களைத் தெரிந்து கொள்வதற்கு "The Journal of the Numismatic Society India" என்பதையும் வாசிப்பது நல்லது.

நாணயத் தொகுப்புப் படங்கள்

நாணயத் தொகுப்புப் பட விளக்கக் குறிப்பு

படம் 1

முத்திரையிட்ட நாணயங்கள் :

1. **உத்தர பாஞ்சாலம்.** *வெள்ளி.* **முன்புறம் :** *யானைப்பாகன் அமர்ந்துள்ள இடது சாயலாக யானை.* **பின்புறம் :** *ஒன்றுமில்லை.*
2. **தட்சிண பாஞ்சாலம்** *வெள்ளி.* **முன்புறம் :** *வட்டம். புள்ளிகள், சதுரம் போன்றவைகளைக் கொண்ட சின்னம்.* **பின்புறம் :** *பல சிறிய சின்னங்கள் (விளக்கம் இல்லை).*
3. **அஸ்மகம்.** *வெள்ளி. கிண்ணம் போன்றது.* **முன்புறம் :** *இரண்டு கணைக்கோல்களுடன் ஓர் உருளை. மேலே கொக்கி போன்றதொன்று.* **பின்புறம் :** *ஒன்றுமில்லை.*
4. **காந்தாரம்.** *(வளைவான நீண்ட துண்டு). வெள்ளி.* **முன்புறம் :** *இரு ஓரங்களிலும் புள்ளிகளால் ஒவ்வொரு வட்டமும், அதைச் சுற்றி ஆறு கிளைகளும், நான்கு சிறிய சின்னங்களும்.* **பின்புறம் :** *ஒன்றுமில்லை.*
5. **காந்தாரம்.** *(வட்டம்). வெள்ளி.* **முன்புறம் :** *ஒரு வட்டம், அதைச் சுற்றி ஆறு கிளைகள் கொண்ட சின்னம்.* **பின்புறம் :** *ஒன்றுமில்லை. (4ஆவது நாணயத்தில் பாதி).*
6. **கோசலம்.** *(முந்திய வகை). வெள்ளி.* **முன்புறம் :** *நான்கு சின்னங்கள்: (1) ஒரு வட்டத்தைச் சுற்றி மூன்று S; (2) எதிர் எதிராக வைக்கப்பட்ட இரு இலைகள்; (3) ஒரு அரை வட்டத்தில் ஆறு புள்ளிகள்; (4) அரை வட்டங்கள் கொண்ட ஒரு முக்கோணம்.* **பின்புறம் :** *ஒன்றுமில்லை.*
7. **கோசலம்.** *(பிந்திய வகை). வெள்ளி.* **முன்புறம் :** *நான்கு சின்னங்கள் : (1) ஒரு வட்டத்தைச் சுற்றி மூன்று S ; (2) ஒரு வட்டமும் அதில் ஒரு புள்ளியும், கீழே ஒரு சந்திரன்; (3) ஒரு பகுதியில் எருது போன்ற சின்னம் ; (4) இடது சாயலாக ஒரு காளை.* **பின்புறம் :** *மிகச் சிறிய சின்னங்கள் (விளக்கம் இல்லை).*

8. **காசி**. *வெள்ளி.* **முன்புறம்:** *இரண்டு ஜோடி சின்னங்கள் ஒன்றையடுத்து மற்றொன்றாக வைக்கப்பட்டுள்ளது.* **ஒன்று** *சுருள்களைக் கொண்டது, மற்றொன்று தாமரை போன்றது. வேறு மூன்று சிறிய சின்னங்கள்.* **பின்புறம்** *: ஒன்றுமில்லை.*

9. **மகதம்** *[உள்ளூர் (தல) வகை]. வெள்ளி.* **முன்புறம்** *: நான்கு சின்னங்கள் ; இரண்டு பெரியவை, வேறிரண்டு சிறியவை ; ஜாலிவகைகள் போன்று காட்டப்பட்டுள்ளன.* **பின்புறம் :** *ஒன்றுமில்லை.*

10. **மகதம்.** *[உள்ளூர் (தல) வகை]. வெள்ளி. 9ஆவது நாணயத்தில் பாதி.* **முன்புறம் :** *வளைவுகோடுகளால் ஒரு வட்டமான சின்னம்.* **பின்புறம் :** *ஒன்றுமில்லை.*

11. **மகதம்.** *[உள்ளூர் (தல) வகை; மெல்லிய தகடு]. வெள்ளி.* **முன்புறம் :** *இரண்டு சின்னங்கள்—ஒன்று, ஒரு புள்ளியைச் சுற்றி ஆறு கிளைகள் ; மற்றொன்று* **ஜாலி** *வகை.* **பின்புறம்**: *ஒன்றுமில்லை.*

12. **சேடி**. *வெள்ளி.* **முன்புறம் :** *நான்கு சின்னங்கள்: அவற்றில் இரண்டு யானைகள் (பொம்மைபோல் தீட்டப்பட்டுள்ளது); (3) தேளும் புல்லின மரமும்; (4) எருது போன்ற நீண்ட சின்னம்.* **பின்புறம் :** *ஓரிரண்டு சிறிய சின்னங்கள் (தெளிவாக இல்லை).*

13. **ஆந்திரம்**. *வெள்ளி.* **முன்புறம் :** *நான்கு சின்னங்கள்: (1) வலது சாயலாக யானை ஒன்று; (2) மரபுப் பாணியில் ஒரு மரம்; (3 & 4) நடுவில் ஒரு திட்டமான வட்டமும், அதைச் சுற்றி நான்கு வட்டங்களும், அவற்றிற்கிடையே புள்ளிகளும் கொண்ட சின்னம்.* **பின்புறம் :** *ஒன்றுமில்லை.*

14. **தெரியாதது**. *வெள்ளி.* **முன்புறம் :** *நான்கு சின்னங்கள்: (1) இடது சாயலில் ஒரு யானை; (2) புள்ளிகள் கொண்ட ஒரு நீள் சதுரச் சின்னம் : (3 & 4) ஒரு சக்கரம்.* **பின்புறம் :** *ஒன்றுமில்லை.*

15. **மகதம்.** *(பேரரசுக்குரியது ; முந்திய வகை). வெள்ளி.* **முன்புறம் :** *ஐந்து சின்னங்கள் : (1) சூரியன் ; (2) ஆறு கிளைகள் கொண்ட சின்னமும், மூன்று அம்புகளும் மூன்று முட்டை வடிவங்களும் ஒன்று மாறி ஒன்று வைக்கப் பட்டுள்ளது ; (3) வலது சாயலாக ஒரு சிங்கம் ; (4) நண்டு போன்றதொன்று ; (5) ஒரு முக்கோணம்.* **பின்புறம் :** *ஒரு சில சிறிய சின்னங்கள் (தெளிவாக இல்லை).*

16. **மகதம்.** (பேரரசுக்குரியது ; முந்திய வகை). வெள்ளி. **முன்புறம் :** ஐந்து சின்னங்கள் : (1) சூரியன்; (2) 15-ல் உள்ளதைப் போல் ஆறு கிளைகள் கொண்ட சின்னம் ; (3) சதுரமொன்றில் ஒரு சக்கரம் ; (4) ஒவ்வொன்றிலும் ஒரு புள்ளியுள்ள நான்கு பாகங்களைக் கொண்டதொரு நீள் சதுரம்; (5) ஒரு மரக்கிளை. **பின்புறம் :** சில மிகச் சிறிய சின்னங்கள் (தெளிவாக இல்லை).

17. **மகதம்.** (பேரரசு வகை). வெள்ளி. **முன்புறம் :** ஐந்து சின்னங்கள்: (1) சூரியன் ; (2) ஆறு கிளைகள் கொண்ட சின்னம்; (3) நீண்ட மரம் ; (4) வலது சாயலாக ஒரு காளை; (5) வலது சாயலில் ஒரு யானை. **பின்புறம் :** ஒரு சில சின்னங்கள் (தெளிவாக இல்லை).

18. **மகதம்.** (பேரரசு வகை). வெள்ளி. **முன்புறம் :** ஐந்து சின்னங்கள்: (1) சூரியன் ; (2) ஆறு கிளைகள் கொண்ட சின்னம்; (3) ஒரு வட்டத்தைச் சுற்றி மூன்று மீன்கள் ; (4) அரை வட்டத்திற்குள் எருது போன்றதொன்று ; (5) ஒரு சதுரத்தில் ஐந்து புள்ளிகள். **பின்புறம் :** மிகச் சிறிய சில சின்னங்கள் (தெளிவாக இல்லை).

19. **மகதம்.** (பேரரசு வகை ; நாடெங்கிலும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது). வெள்ளி. **முன்புறம் :** ஐந்து சின்னங்கள்: (1) சூரியன்; (2) ஆறு கிளை கொண்ட சின்னம்; (3) காண்டா மிருகம் ; (4) சதுரத்தைச் சுற்றி நான்கு மீன்கள்; (5) ஒரு யானை. **பின்புறம் :** மிகச் சிறிய பல சின்னங்கள் (தெளிவாக இல்லை).

20. **மகதம்.** (பேரரசு வகை; நாடெங்கிலும் கண்டுபிடிக்கப் பட்டது.) வெள்ளி. **முன்புறம் :** ஐந்து சின்னங்கள் : (1) சூரியன் ; (2) ஆறு கிளை கொண்ட சின்னம்; (3) ஆறு வளைவுகள் கொண்ட குன்று ; (4) வட்டத்தைச் சுற்றி எருது போன்ற ஆறு உருவங்கள் ; (5) குடை போன்ற சின்னம். **பின்புறம் :** மிகச் சிறிய பல சின்னங்கள் (தெளிவாக இல்லை).

21. **மகதம்.** (பேரரசு வகை ; நாடெங்கிலும் கண்டுபிடிக்கப் பட்டது). ஐந்து சின்னங்கள் : (1) சூரியன் ; (2) ஆறு கிளை கொண்ட சின்னம் ; (3) ஆறு வளைவுள்ள குன்று ; (4) S போன்ற வடிவத்திற்குள் இரண்டு மீன்கள் ; (5) நீள் சதுரத்திற்குள் இரண்டு மீன்கள். **பின்புறம் :** சில சிறிய சின்னங்கள் (தெளிவாக இல்லை).

22. **மகதம்.** (பேரரசு வகை; நாடெங்கிலும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது). வெள்ளி. **முன்புறம்:** ஐந்து சின்னங்கள்: (1) சூரியன்; (2) ஆறு கிளை கொண்ட சின்னம்; (3) குன்றின் மீது ஒரு முயல்; (4) வலது சாயலாக ஒரு காளை; (5) ஒரு மரம். **பின்புறம்:** சில சிறிய சின்னங்கள் (தெளிவாக இல்லை).

23. **மகதம்.** (பேரரசு வகை; பிந்தியது. நாடெங்கிலும் கண்டு பிடிக்கப்பட்டது). **முன்புறம்:** ஐந்து சின்னங்கள்: (1) சூரியன்; (2) ஆறு கிளை கொண்ட சின்னம்; (3) மூன்று நுழை வாயில்கள்; (4) வாயில் குட்டியைக் கவ்வியுள்ள ஒரு முயல்; (5) ஒரு யானை. **பின்புறம்:** ஒரு சில சிறிய சின்னங்கள் (தெளிவாக இல்லை).

24. **மகதம்.** (பேரரசு வகை; பிந்தியது. நாடெங்கிலும் கண்டு பிடிக்கப்பட்டது). வெள்ளி. **முன்புறம்:** ஐந்து சின்னங்கள்: (1) சூரியன்; (2) ஆறு கிளையுள்ள சின்னம்; (3) ஒரு சதுரத்தில் காளை; அக் காளைக்குப் பின்னால் ஒரு மீன்; அதன் வாயருகில் மற்றொரு மீன்; (4) வட்டத்தைச் சுற்றி எருது போன்ற உருவம்; (5) குறடுபோன்ற சின்னம். **பின்புறம்:** ஒரு சில சிறிய சின்னங்கள் (தெளிவாக இல்லை).

படம் 2

25. **மகதம்.** (மௌரியர்; நாடெங்கிலும் கண்டுபிடிக்கப்பட்டது). வெள்ளி. **முன்புறம்:** ஐந்து சின்னங்கள்: (1) சூரியன்; (2) ஆறு கிளையுள்ள சின்னம்; (3) மூன்று வளைவுகொண்ட குன்றின்மேல் சந்திரன்; (4) நான்கு சதுரப் பட்டயத்தில் மூலையில் ஒரு மரக்கிளை; (5) ஒரு காளை. **பின்புறம்:** பெரிய சின்னம் ஒன்று (தெளிவாக இல்லை).

26. **மகதம்.** (மௌரியர்; நாடெங்கிலும் கண்டுபிடிக்கப்பட்டது). வெள்ளி. **முன்புறம்:** தனித்தனியாகப் பொறிக்கப்பட்ட மூன்று மனித உருவங்கள்; நான்கு சதுரப் பட்டயத்தில் ஒரு மூலையில் மரக்கிளையொன்று; (5) ஒரு யானையும் ஒரு சிலந்தியும். **பின்புறம்:** ஒரு பெரிய சின்னம் (தெளிவாக இல்லை).

27. **மகதம்.** (மௌரியர்; நாடெங்கிலும் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் கிடைப்பது கடினம்). வெள்ளி. **முன்புறம்:** ஒரே பொறியில் முத்திரையிடப்பட்ட மூன்று மனித உருவங்கள்;

குன்றின்மீது ஒரு மயில்; ஒரு எஃகு முற்றம். **பின்புறம்:** ஒரு பெரிய சின்னம் (தெளிவாக இல்லை).

28. **மகதம்.** (மௌரியர்; மெல்லிய நாணயம்; மேற்குறிப்பிட்டவற்றில் பதினாறில் ஒரு பங்கு எடையுள்ளது; நாடெங்கிலும் கண்டுபிடிக்கப்பட்டது; ஆனால் கிடைப்பது மிகக் கடினம்). வெள்ளி. **முன்புறம்:** ஆறு கிளை கொண்ட சின்னம் (முழுமையாக அச்சிடப்படவில்லை). **பின்புறம்:** ஒன்றுமில்லை.

29. **மகதம்.** (மௌரியர்; பீஹாரில் மட்டும் இருந்தது). செம்பு. **முன்புறம்:** ஐந்து சின்னங்கள்: (1) சூரியன்; (2) ஆறு கிளையுள்ள சின்னம்; (3) மூன்று வளைவுள்ள குன்றிற்குமேல் சந்திரன்; 25ஆவது நாணயத்தில் உள்ளதைப் போலல்ல; (4) J வடிவச் சின்னம்; (5) ஒரு வட்டமும் அதற்கு இடப்புறத்தில் ஒரு கொக்கியும். **பின்புறம்:** நான்கு சின்னங்கள்: (1) ஒரு தாமரை; (2) ஒரு சங்கு; (3) ஒரு சதுரம்; அதன் நான்கு முனைகளிலும் நான்கு கிளைகள்; (4) ஒரு ஸ்தூபமும் சந்திரனும்.

30. **எரான்-பெஸ்நகரப் பகுதி** (சுங்கமாக இருக்கலாம்). செம்பு. **முன்புறம்:** ஐந்து சின்னங்கள்: (1) ஆறு கிளையுள்ள சின்னம்; (2) இடது சாயலில் ஒரு யானை; (3) பட்டயத்தில் முக்கோணத் திட்டு; (4) காளை போன்ற சின்னம்; (5) வளைந்து ஓடும் நதியில் மீன்கள். **பின்புறம்:** ஒன்றுமில்லை.

பழங்கால வார்ப்பு நாணயங்கள்:

31. **வடஇந்தியா முழுவதும்.** செம்பு. **முன்புறம்:** இடது சாயலில் ஒரு யானை. **பின்புறம்:** மூன்று வளைவுகொண்ட மலைமீது பிறை.

32. செம்பு. 30ஆவது நாணயத்தைப் போன்றது. ஆனால் இரண்டு நாணயங்கள் ஒட்டியுள்ளன.

இந்தோ-பாக்டிரிய நாணயங்கள்:

33. **டெக்காடிராம்ஸ்** (பாபிலோனியாவில் செல்யூகஸ் வெளியிட்டதாக இருக்கலாம்). வெள்ளி. **முன்புறம்:** இருவர் அமர்ந்துள்ள யானை பின்வாங்கிச் செல்ல, ஈட்டியைக் கையில் வைத்துள்ள குதிரை வீரன் அதைத் தடுத்து நிறுத்துவது; இது அலெக்ஸாண்டருக்கும் புருஷோத்தமனுக்கும் நடந்த

யுத்தத்தைப் பிரதிபலிக்கிறதென்பர். **பின்புறம்:** *கிரேக்கக் கடவுளான ஜீயஸின் உருவத்தில் அலெக்ஸாண்டர்.*

34. **யூதிதேமுஸ்.** *வெள்ளி.* **முன்புறம்:** *மகுடம் அணிந்த மன்னரின் மார்பளவு உருவம்.* **பின்புறம்:** *வலது கரத்தில் மகுடம் ஏந்தி ஆடை ஏதுமின்றி நிற்கும் ஹெராகிளிஸ்; இடது கரத்திற்குக் கீழே தடியும் சிங்கத்தின் தோலும். அவருக்கு வலதுபுறம்* **பசிலியோஸ்** *என்றும் இடது புறத்தில்* **யூதிதேமுஸ்** *என்றும் உள்ளன.*

35. **தெமெத்ரியஸ்.** *வெள்ளி.* **முன்புறம்:** *யானைச் சின்னமுள்ள மகுடமணிந்துள்ள அரசரின் மார்பளவு உருவம்.* **பின்புறம்:** *தனது கையினால் முடிசூட்டிக்கொண்டு, இடது கையில் ஒரு கோலையும் அதற்குக் கீழே சிங்கத்தின் தோலையும் பிடித்துக் கொண்டு ஆடை ஏதுமின்றி நேராகப் பார்த்து நிற்கும் ஹெராகிளிஸ். வலதுபுறத்தில்* **பசிலியோஸ்;** *இடதுபுறத்தில்* **தெமெத்ரியஸ்.**

36. **பந்தாலியன்.** *செம்பு.* **முன்புறம்:** *இடது சாயலில் ஒரு பெண் சிங்கம்; மேலே* **பசிலியோஸ்**; *கீழே* **பந்தோலியன்தோஸ்.** **பின்புறம்:** *ஒரு பெண் உருவம்;* **ரஜேனெ பதலேவஷா** *என்ற நாகரி வாசகம்.*

படம் 3

37. **அகதோகிளிஸ்.** *வெள்ளி.* **முன்புறம்:** *சிங்கச் சின்னமுள்ள தொப்பி அணிந்து வலது சாயலில் அலெக்ஸாண்டரின் தலை; வலதுபுறத்தில்* **அலெக்ஸாண்ட்ரோ**; *இடதுபுறத்தில்* **டாய் பிலிப்போ.** **பின்புறம்:** *கையில் நீண்ட செங்கோல் ஏந்தி அரியணையில் இடது சாயலாக அமர்ந்துள்ள ஜீயஸ். வாசகம்:* **பசிலியோன்தோஸ் திக்கியோ அகதோ கிளியோ.**

38. **அந்திமாகுஸ்.** *வெள்ளி.* **முன்புறம்:** *தொப்பி அணிந்துள்ள மன்னரின் மார்பளவு உருவம்.* **பின்புறம்:** *வலது கரத்தில் திரிசூலத்தையும் இடது கரத்தில் குருத்தோலையையும் ஏந்தி முன்புறமாக நிற்கும் பொசிய்டோன். வாசகம்:* **பசிலியோஸ் தியோ அந்திமாக்ஸோ.**

39. **யூகிரதிதெஸ்.** *வெள்ளி.* **முன்புறம்:** *மேற்புறம் கூர்மையான தொப்பியணிந்துள்ள மன்னரின் மார்பளவு உருவம்.*

பின்புறம் : *குதிரைமீது அமர்ந்துள்ள டியேஸ்கௌராய் வலது புறமாகச் சண்டையிடுவது. வாசகம்* : **பசிலியோஸ் மெகலோவ் யூகிரதிதோ.**

40. **யூகிரதிதெஸ்.** *வெள்ளி.* **முன்புறம்** : *தொப்பி அணிந்துள்ள மன்னரின் மார்பளவு உருவம்.* **பின்புறம்:** *இடது கையில் அம்பையும் வலது கையில் ஈட்டியையும் பிடித்து இடது சாயலில் நிற்கும் அபொல்லோ. வாசகம்* : **பசிலியோஸ் யூகிரதிதோ.**

41. **யூகிரதிதெஸ்.** *வெள்ளி.* **முன்புறம்** : *கவசமணிந்துள்ள யூகிரதிதெஸின் மார்பளவு உருவம். வாசகம்* : **பசிலியோஸ் மெகாஸ் யூகிரதிதோ. பின்புறம்** : *ஹெலியோகிளிசும் லயோடைக்கும் சேர்ந்து தோன்றும் மார்பளவு உருவங்கள். வாசகம்* : **ஹெலியோகிளியோ கை லோதிகீவ்.**

படம் 4

42. **ஹெலியோகிளிஸ்.** *வெள்ளி.* **முன்புறம்** : *மகுடம் அணிந்துள்ள மன்னரின் மார்பளவு உருவம்.* **பின்புறம்** : *மின்னலின் கைக்கூறை வலது கையிலும் நீண்ட செங்கோல் இடது கையிலும் ஏந்தி நிற்கும் ஜீயஸ். வாசகம்* : **பசிலியோஸ் திக்கய்யோ ஹெலியோகிளியோஸ்.**

43. **மெனண்டர்.** *வெள்ளி.* **முன்புறம்** : *தொப்பி அணிந்துள்ள மன்னரின் மார்பளவு உருவம்.* **பசிலியோஸ் சொதெரோஸ் மெனண்ட்ரோ** *என்ற கிரேக்க வாசகம்.* **பின்புறம்** : *வலது கையில் கேடயத்தைத் தூக்கிப் பிடித்துக்கொண்டும், இடது கையில் மின்னலின் கைக்கூறைச் சுற்றிக்கொண்டும் இடது சாயலில் நிற்கு'' பல்லாஸ். கரோஷ்தியில் வாசகம்:* **மஹாராஜச ட்ரதரச மெனண்டிரச.**

44. **அபொல்லோதாதஸ்.** *செம்பு.* **பின்புறம்** : *இரண்டு கரங்களிலும் அம்பைப் பிடித்துக்கொண்டு வலது சாயலில் நிற்கும் அபொல்லோ. கிரேக்க வாசகம்* : **பசிலியோஸ் சொதெரோஸ் அபொல்லோதாதஸ். பின்புறம்** : *முக்காலி. கரோஷ்தி வாசகம்* : **மஹாராஜச ட்ரதரச அபொல்லோதாதச.**

45. **ஹிப்பாஸ்திரதஸ்.** *வெள்ளி.* **முன்புறம்** : *தொப்பியுடன் மன்னரின் மார்பளவு உருவம். கிரேக்க வாசகம்* : **பசிலியோஸ்**

மகலோவ் சொதெரோஸ் இப்போஸ்திரதோ. பின்புறம்: *குதிரைமீது அமர்ந்து வலது பக்கமாகச் சாயும் மன்னர். கரோஸ்தி வாசகம்:* **மஹாராஜச ட்ரதரச மஹாதச ஹிபுஸ்திரதச.**

46. ஹிப்பாஸ்திரதஸ். *வெள்ளி.* **முன்புறம்:** *தொப்பியுடன் மன்னரின் மார்பளவு உருவம். கிரேக்க வாசகம்:* **பசிலியோஸ் சொதெரோஸ் இப்பாஸ்திரதோ. பின்புறம்:** *செல்வத்தின் சின்னத்தை ஏந்தி இடது சாயலில் நிற்கும் பெண் தெய்வம். கரோஷ்தி வாசகம்:* **மஹாராஜச ட்ரதரச ஹிபுஸ்திரதச.**

படம் 5

47. அகதோகிளியாவுடன் ஸ்திராதோ. *வெள்ளி.* **முன்புறம்** *அகதோகிளியாவும் ஸ்திராதோவும் சேர்ந்த மார்பளவு உருவங்கள். கிரேக்க வாசகம்:* **பசிலியோஸ் சொதெரோஸ் ஸ்திராதஞேஸ் கை அகதோகிளியாஸ். பின்புறம்:** *43-ல் உள்ளதைப் போல் இடது சாயலில் பல்லாஸ். கரோஷ்தி வாசகம்:* **மஹாராஜச ட்ரதரச த்ரமிகாச ஸ்திராதச.**

48. ஹெர்மாயஸ். *வெள்ளி.* **முன்புறம்:** *மகுடத்துடன் இடது சாயலில் மன்னரின் மார்பளவு உருவம். கிரேக்க வாசகம்:* **பசிலியோஸ் சொதெரோஸ் எர்மாயோ. பின்புறம்:** *இடது கையில் நீண்ட செங்கோலுடன் அரியணையில் இடது சாயலாக அமர்ந்துள்ள ஜீயஸ். வலது கை நீட்டியுள்ளது. கரோஷ்தி வாசகம்:* **மஹாராஜச ட்ரதரச ஹெரமாயச.**

சக, பார்த்திய நாணயங்கள்:

49. மாயஸ். *செம்பு.* **முன்புறம்:** *கழுத்தில் மணிகள் அணிந்து தும்பிக்கையை மேலே உயர்த்தி, வலது சாயலாக ஒரு யானையின் தலை.* **பின்புறம்:** *கடுசியஸ். கிரேக்க வாசகம்:* **பசிலியோஸ் மாயோவ்.**

50. ஏஸெஸ். *வெள்ளி.* **முன்புறம்:** *ஈட்டியைப் பிடித்துக் கொண்டு குதிரைச் சவாரி செய்யும் மன்னர். கிரேக்க வாசகம்:* **பசிலியோஸ் பசிலியோன் மெகலோவ் அஜோவ். பின்புறம்:** *வலது கையில் மின்னலின் கைக்கூறும், இடது*

கையில் நீண்ட செங்கோலும் கொண்டு நிற்கும் ஜீயஸ். கரோஷ்தி வாசகம்: **மகாராஜச ராஜராஜச மகாதச அயாச.**

51. **ஏஸெஸ்.** செம்பு. **முன்புறம்**: உயர்ந்த தலையணையில் கால்மேல் கால் போட்டு அமர்ந்து, தலையை இடதுபுறமாகச் சாய்த்துள்ள மன்னர்; உடலில் நீண்ட வாள், வலது கையில் ஓர் அங்குசம். கிரேக்க வாசகம்: **பசிலியோஸ் பசிலியோன் மகலோவ் அஜோவ்.** **பின்புறம்:** தனது கைக்கோலுடன் இடது புறமாக நடக்கும் ஹெர்மிஸ். கரோஷ்தி வாசகம்: 50-ல் உள்ளதைப்போல்.

52. **ஏஸெஸ்.** செம்பு. **முன்புறம்:** இடது கையில் செல்வச் சின்னங்களை வைத்துக்கொண்டு, வலது கையை உயர்த்தி அரியணையில் அமர்ந்திருக்கும் தெமெதர். கிரேக்க வாசகம்: 50-ல் உள்ளதைப் போல். **பின்புறம்:** இடது கையில் தன் கோலைப் பிடித்துக்கொண்டு இடது சாயலாக ஹெர்மிஸ். கரோஷ்தி வாசகம்: 50-ல் உள்ளதைப்போல்.

53. **ஏஸெஸ்.** செம்பு. **முன்புறம்:** வலது சாயலாக ஒரு திமில் பெருத்த காளை. கிரேக்க வாசகம்: 50-ல் உள்ளதைப் போல். **பின்புறம்:** இடது சாயலில் ஒரு சிங்கம். கரோஷ்தி வாசகம்: 50-ல் உள்ளதைப்போல்.

படம் 6

54. **அஜீலிசெஸ்.** வெள்ளி. **முன்புறம்:** வலது கையில் ஒரு அங்குசத்துடன் குதிரைமீது மன்னர். கிரேக்க வாசகம்: **பசிலியோஸ் பசிலியோன் மகலோவ் அஜீலிசோவ்.** **பின்புறம்:** தன் வலது கையை உயர்த்தி, இடது கையில் செங்கோலுடன் நிற்கும் ஜீயுஸ். கரோஷ்தி வாசகம்: **மகாராஜச ராஜாதிராஜச மகாதச ஆயிலிசாஷா.**

55. **அஜீலிசெஸ்.** வெள்ளி. **முன்புறம்:** 54-ல் உள்ளதைப் போல் (விளக்கமில்லை). **பின்புறம்:** இனம் தெரியாத ஒரு கடவுளும் பெண் தெய்வமும். கரோஷ்தி வாசகம்: 54-ல் உள்ளதுதான்.

56. **அஜீலிசெஸ்.** வெள்ளி. **முன்புறம்:** 54-ல் உள்ளதுதான் (விளக்கமில்லை). **பின்புறம்:** இரண்டு தண்டுகளும் இலைகளும் கொண்ட தாமரை மலரில் நேராகப் பார்த்து நிற்கும் லட்சுமி. ஒவ்வொரு இலையிலும் ஒரு யானை நின்றுகொண்டு அவள்மீது

நீரைத் தெளிக்கிறது (அபிஷேக லட்சுமி). கரோஷ்தி வாசகம்: 54-ல் உள்ளதுதான்.

57. அஜீலிசெஸ். வெள்ளி (சரியாகச் செய்யப்படவில்லை). **முன்புறம்:** கையில் ஈட்டியுடன் குதிரைமீது சவாரி செய்யும் மன்னர். கிரேக்க வாசகம்: 54-ல் உள்ளதுதான். **பின்புறம்:** இடது கையில் குருத்தோலையும் வலது கையில் தீப்பந்தத்தையும் பிடித்துக்கொண்டு நிற்கும் பெண் தெய்வம். கரோஷ்தி வாசகம்: 54-ல் உள்ளதுதான்.

58. கொண்டொ·:பாரெஸ். செம்பு. **முன்புறம்:** வலது கையை உயர்த்திக்கொண்டு குதிரைமீது சவாரி செய்யும் மன்னர். கிரேக்க வாசகம்: **பசிலியோஸ் பசிலியோன் மகலோவ் உண்டோ·:பெரோவ். பின்புறம்:** வலது கையை உயர்த்திக் கொண்டு இடது கையில் நீண்ட செங்கோலுடன் இடது சாயலாக நிற்கும் ஜீயஸ். கரோஷ்தி வாசகம்: **மகாராஜச ராஜாதிராஜ திராதரச தேவவ்ரத குடுபாரச.**

59. கொண்டொ·:பாரெஸ். செம்பு. **முன்புறம்:** மகுடம் அணிந்துள்ள மன்னரின் மார்பளவு உருவம் இடது சாயலாக. கிரேக்க வாசகம்: **பசிலியோஸ் சோதெரோஸ் உண்டோ·:பெரோவ். பின்புறம்:** மலர் வளையமும் குருத்தோலையும் பிடித்துக்கொண்டுள்ள நைக் இறக்கைகளுடன் தோன்றும் காட்சி. கரோஷ்தி வாசகம்: தெளிவின்றிக் கொச்சையாக உள்ளது.

குஷானர்கள் நாணயங்கள்:

60. குஜூலா கட்பீஸஸ். செம்பு. **முன்புறம்:** மகுடம் அணிந்துள்ள ஹெர்மீயஸின் மார்பளவு உருவம். கிரேக்க வாசகம்: **பசிலியோஸ் சொதெரோஸ் எர்மாய்யோ. பின்புறம்:** இடது கையில் சிங்கத்தின் தோலுடன் ஹெராகிளிஸ்; வலது கையில் குண்டாந்தடி. கரோஷ்தி வாசகம்: **குஜூலா காசச குஷான யாவுகாச த்ரமிதிடாச.**

61. குஜூலா கட்பீஸஸ். செம்பு. **முன்புறம்:** மகுடம் அணிந்துள்ள ரோமப் பேரரசரின் தலை. கிரேக்க வாசகம்: **ஜொபன்கு ஜூலூ கோஜல கடா·:பெஸ். பின்புறம்:** முக்காலி போன்ற ஆசனத்தில் தனது வலது கையை நீட்டிக் கொண்டு அமர்ந்திருக்கும் மன்னர். கரோஷ்தி வாசகம்: **குஷாசை யாவ்வாச குயுலா கபாசச சசத்ராமதிடாச.**

62. **விமா கட்பீஸஸ்**. தங்கம். **முன்புறம் :** வலது கையில் மின்னலின் கைக்கூறுடன், தன் தலையை இடது புறம் திரும்பித் தாழ்வான ரதத்தில் அமர்ந்துள்ள மன்னர். கிரேக்க வாசகம் : **பசிலியஸ் ஊயெமோ கட்பீஸஸ். பின்புறம் :** தனது வலது கையில் திரிசூலம் கொண்டு, காளை முன்னல் நிற்கும் சிவ பெருமான். **மகாராஜச ராஜாதிராஜச சர்வலோக ஈஸ்வரச மஹீஸ்வரஸ விமா கதாபிசச** என்னும் கரோஷ்தி வாசகம்.

63. **விமா கட்பீஸஸ்**. தங்கம். **முன்புறம் :** முக்காலி போன்ற ஆசனத்துடன், தனது தலையை வலப்புறமாகத் திருப்பி மேகங்களில் அமர்ந்திருக்கும் மன்னர். 62-ல் உள்ள கிரேக்க வாசகம். **பின்புறம் :** 62-ல் உள்ளதுதான்.

படம் 7

64. **விமா கட்பீஸஸ்**. தங்கம். **முன்புறம்:** இடது கையில் ஈட்டியுடன் தனது தலையை இடப்புறம் திருப்பி பலி பீடத்தில் நின்று கொண்டு வலது கையால் பலிகொடுக்கிறர். **பசிலியோஸ் பசிலியோன் சோதர் மெகாஸ் ஊயெமோ கட்பீஸஸ்** என்ற கிரேக்க வாசகம். **பின்புறம் :** 62-ல் உள்ளதுதான்.

65. **கனிஷ்கர்**. தங்கம். **முன்புறம் :** இடது கையில் ஈட்டியும் வலது கையில் பலிப்பொருளும் கொண்டுள்ள மன்னர் பலி பீடத்தில் நின்று பலி தரும் சின்னம். **பசிலியஸ் பசிலியோன் கனேஷ்கௌ** என்னும் கிரேக்க வாசகம். **பின்புறம்**: தன் வலது கையை உயர்த்தி, இடது சாயலாக நிற்கும் ஹெலியோன். **ஹிலியோஸ்** என்ற கிரேக்க வாசகம்.

66. **கனிஷ்கர்**. தங்கம். **முன்புறம் :** 65-ல் உள்ள சின்னம்தான்; ஆனல் **ஷாவோ நனே ஷாவோ கனேஷ்கி குஷானே** என்னும் இரானிய வாசகம். **பின்புறம் :** தன் வலது கையில் நாடாவை வைத்துக்கொண்டு இடப்புறமாகத் திரும்பியுள்ள தாடியுடன் தோன்றும் இரானியத் தெய்வம். **அத்ஷோ** என்னும் வாசகம்.

67. **கனிஷ்கர்**. தங்கம். **முன்புறம் :** 66-ல் உள்ளதுபோல். **பின்புறம் :** செல்வச் சின்னத்துடன் வலது சாயலாக நிற்கும் பெண் தெய்வம்.

68. **கனிஷ்கர்**. தங்கம். **முன்புறம் :** 66-ல் உள்ளதுதான். **பின்புறம் :** நின்றுகொண்டிருக்கும் புத்தர். **பொத்தோ** என்னும் வாசகம்.

69. கனிஷ்கர். செம்பு. **முன்புறம் :** 66-ல் உள்ளதுதான். **பின்புறம் :** கால்மேல் கால் போட்டு நேர்சாயலில் அமர்ந்துள்ள புத்தர். **ஓதுவேபோ சகாம** என்னும் வாசகம்.

70. ஹுவிஷ்கர். தங்கம். **முன்புறம்:** தன் வலது கையில் செங்கோலும், இடது கையில் அங்குசமும், தலையில் ஒளி வீசும் மகுடமும் கொண்ட மன்னரின் இடுப்பு வரையான உருவம். **ஷாவோ நனோ ஷாவோ ஓயெஷ்கி கொஷானோ** என்ற வாசகம். **பின்புறம் :** வலது சாயலாகத் தோன்றும் தாடியுள்ள கடவுள். **அத்ஷோ** என்ற வாசகம்.

71. ஹுவிஷ்கர். தங்கம். **முன்புறம் :** 70-ல் உள்ளதுதான். **பின்புறம் :** வலது கையில் பணப்பையும், இடது கையில் நீண்ட செங்கோலும், தலையில் ஒளிவிடும் மகுடமும் கொண்டுள்ள ஆண் தெய்வம். **பாரோ** என்னும் வாசகம்.

72. ஹுவிஷ்கர். தங்கம். **முன்புறம் :** 70-ல் உள்ளதுதான். **பின்புறம் :** வலது கையில் குண்டாந்தடியும் இடது கையின் மேல் சிங்கத்தின் தோலும் கொண்டு தாடியுடன் இடது சாயலாகத் தோன்றும் ஹெராகிளிஸ். **ஹிராகிளோ** என்ற வாசகம்.

படம் 8

73. ஹுவிஷ்கர். செம்பு. **முன்புறம் :** வலது சாயலாக அமர்ந்துள்ள மன்னர். 70-ல் உள்ள வாசகம்தான் (தெளிவின்றி உள்ளது). **பின்புறம் :** இடது சாயலாக நிற்கும் கடவுள். **மியிரோ** என்ற (தெளிவில்லாத) வாசகம்.

74. ஹுவிஷ்கர். செம்பு. **முன்புறம் :** இடது கையில் செங்கோலைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு கால்மேல் கால் போட்டு திண்டின்மீது அமர்ந்திருக்கும் மன்னர். 70-ல் உள்ள வாசகம்தான். **பின்புறம் :** நான்கு கரங்களுடன் இடது சாயலாக நிற்கும் தெய்வம். **மாயோ** என்ற வாசகம்.

75. ஹுவிஷ்கர். செம்பு. **முன்புறம் :** தாழ்வான, திண்டுள்ள சாய்மஞ்சம்மீது அமர்ந்துள்ள மன்னர். 70-ல் உள்ள வாசகம்தான். **பின்புறம் :** நான்கு கரங்களுடன் இடது சாயலாகத் தோன்றும் சிவபெருமான். **ஓயெஷோ** என்ற வாசகம்.

76. **ஹூவிஷ்கர்.** செம்பு. **முன்புறம்:** இடதுசாயலில் யானை மீது சவாரி செய்யும் மன்னர். 70-ல் உள்ள வாசகம்தான். **பின்புறம்:** வலது கையில் திரிசூலமும், இடது கையில் சுரைக்குடுக்கையும் கொண்டு இடது சாயலாகத் தோன்றும் சிவபெருமான். **ஒயெஷோ** என்ற வாசகம்.

77. **வாசுதேவர்.** தங்கம். **முன்புறம்:** இடது சாயலில் தோன்றும் மன்னர் பலிபீடத்தில் நின்று இடது கையில் திரிசூலமிருக்க வலது கையால் பலி கொடுக்கும் காட்சி. **ஷாவோ நனோ ஷாவோ பஜோடிவோ கொஷானோ** என்ற வாசகம். **பின்புறம்:** காளையின் முன்னால் வலது கையில் திரிசூலத்துடன் தோன்றும் சிவபெருமான். **ஒயெஷோ** என்ற வாசகம்.

78. **குஷானர் (பிந்தியது).** தங்கம். **முன்புறம்:** 77-ல் உள்ளது தான். வாசகம் தெளிவாக இல்லை. **பின்புறம்:** 77-ல் உள்ளதுதான்.

79. **மூன்றாம் கனிஷ்கர்.** தங்கம். **முன்புறம்:** 77-ல் உள்ளது தான். வாசகம் தெளிவில்லை. **பின்புறம்:** இடது கையில் செல்வத்தின் சின்னத்தையும் (கொம்பையும்) வலது கையில் பின்னல் கயிற்றையும் கொண்டு உயர்வான சாய்வுள்ள அரியணையில் முன்புறம் பார்த்து அமர்ந்திருக்கும் தெய்வம். **அர்டோக்ஷோ** என்ற வாசகம்.

80. **குஷான இனம்.** தங்கம். **முன்புறம்:** 77-ல் உள்ளதுதான். மன்னருக்கு வலப்புறம் சாகர். சுற்றி வாசகமில்லை. **பின்புறம்:** 79-ல் உள்ளதுதான்.

81. **குஷான இனம்.** தங்கம். **முன்புறம்:** 77-ல் உள்ளதுதான். சுற்றி வாசகமில்லை. **பின்புறம்:** 79-ல் உள்ளதுதான்.

82. **குஷானோ-சாசனிடு.** தங்கம் (கிண்ணவடிவில்). **முன்புறம்:** இடது சாயலாக நிற்கும் மன்னர். **ஹார்மிஜ்ட் வஜ்ரக் குஷான் ஷா** என்ற வாசகம். **பின்புறம்:** காளையும் சிவ பெருமானும். **உர்ஜ்வண்ட் யஜ்தா** என்னும் பஹலவி வாசகம்.

படம் 9

83. **கிடாரர்.** தங்கம். **முன்புறம்:** 77-ல் உள்ளதுதான். ஆனால் செம்மையாக இல்லை. மன்னரின் கரத்திற்குக் கீழே **கெதாரா** என்ற வாசகம். **பின்புறம்:** 79-ல் உள்ளதுதான். ஆனால் பருவெட்டாக உள்ளது.

மௌரியருக்குப்பின் வட இந்தியத் தல நாணயங்கள் :

84. **தட்சசீலம்.** செம்பு. **முன்புறம்:** இரண்டு சின்னங்கள் (1) கூம்பு வடிவில் உலோகத்துண்டு. (2) மூன்று வளைவுகளுள்ள குன்றின்மீது சந்திரன். **பின்புறம்:** ஒன்றுமில்லை.

85. **தட்சசீலம்.** செம்பு. **முன்புறம் :** இரண்டு சின்னங்கள் (1) மூன்று வளைவுகள் கொண்ட குன்றிற்குமேல் சந்திரன், (2) வேலிப்பட்டயத்தில் மரம். **பின்புறம் :** ஒன்றுமில்லை.

86. **தட்சசீலம்.** செம்பு. **முன்புறம் :** நான்கு சின்னங்கள் (1) மூன்று வளைவுகள் கொண்ட மலைமீது சந்திரன், (2) வேலிப் பட்டயத்தில் பொறிக்கப்பட்ட மரம், (3) எருது போன்ற உருவம், (4) ஸ்வஸ்திகை. **பின்புறம் :** ஒன்றுமில்லை.

87. **தட்சசீலம்.** செம்பு. **முன்புறம் :** நான்கு சின்னங்கள் (1) மூன்று வளைவுகளுள்ள குன்றின்மீது சந்திரன், (2) ஸ்வஸ்திகை, (3) ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கப்பட்ட பத்துக் குண்டுகள், (4) நெளிவுள்ள கோடு. **பின்புறம் :** ஒன்றுமில்லை.

88. **தட்சசீலம்.** செம்பு. **முன்புறம் :** வலது பக்கமாகச் செல்லும் யானை ; மூன்று வளைவுகள் கொண்ட மலைக்கு மேலே ஒரு சந்திரன். **பின்புறம் :** இடது சாயலில் ஒரு சிங்கம்; மூன்று வளைவுகள் கொண்ட சிறிய குன்றும் அதன்மீது ஒரு சந்திரனும், பின்புறம் மேலே ஒரு ஸ்வஸ்திகையும்.

89. **கௌசாம்பி.** செம்பு (பொறிக்கப்பட்டது). **முன்புறம் :** ஒரு கம்பத்திற்கு முன்னால் மெலிந்ததொரு காளை ; பின்னால் ஒரு சின்னம். **பின்புறம் :** ஆறு வளைவுகள் கொண்ட மலை; அதற்குமேல் பட்டயத்தில் ஒரு மரம்; இடப்புறம் ஒரு சக்கரம்; வலது புறம் உஜ்ஜயினிச் சின்னம்.

90. **எரான்.** செம்பு. **முன்புறம்:** நான்கு சின்னங்கள் (1) வேலிப் பட்டத்தில் ஒரு மரம், (2) தாமரைப்பூ, (3) ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு ஸ்வஸ்திகா கொண்ட உஜ்ஜயினிச் சின்னம், (4) அரைவட்டமான தடாகத்தில் மீன். **பின்புறம் :** ஒன்றுமில்லை.

91. **உஜ்ஜயினி.** செம்பு. **முன்புறம் :** வலது கையில் கோலும் இடது கையில் பாண்டமும் கொண்டு நேராகப் பார்த்து நிற்கும் தெய்வம் ; அதற்கு இடப்புறம் பட்டயத்தில் ஒரு வலது புறத்தில் ஆறு கிளைகள் கொண்ட சின்னம். **பின்புறம் :** உஜ்ஜயினிச் சின்னம்.

92. **ஹிரண்யாஸ்ரமா**. *செம்பு*. **முன்புறம்:** *இடது சாயலில் ஒரு குதிரை; அதற்கு முன்னால் ஆறு வளைவு கொண்ட மலை; பின்னால் மூன்று வளைவுகொண்ட குன்றும் சந்திரனும்.* **ஹிதுஜசமே** *என்ற கரோஷ்தி வாசகம்.* **பின்புறம்:** *ஒரு ஸ்வஸ்திகை; வலது பக்கத்தில் ஒரு புல்லின மரமும் இடது பக்கத்தில் ஒரு சந்திரனும் கொண்ட மூன்று வளைவுள்ள மலை. இவற்றையெல்லாம் நோக்கி நிற்கும் ஒரு யானை.*

93. **உத்தேஹிகா**. *செம்பு*. **முன்புறம்:** *வலது சாயலாக ஒரு காளை; அதற்கு மேல் படுக்கையாக உள்ள பட்டத்தில் மரம்.* **பின்புறம்:** *மூன்று சின்னங்கள் (1) உஜ்ஜயினிச் சின்னம், (2) சதுரப்பகுதியில் இரண்டு மீன்கள், (3) வேலிப் பட்டயத்தில் மரம். இவற்றிற்குக் கீழே* **உதேஹகி** *என்ற பிராமி வாசகம்.*

94. **திரிபுரி**. *செம்பு*. **முன்புறம்:** *வெறும் சிலுவையும் மூன்று வளைவுள்ள குன்றும் சந்திரனுடன். இவற்றிற்கு மேலே* **திரிபுரி** *என்ற பிராமி வாசகம்.* **பின்புறம்:** *ஒன்றுமில்லை.*

படம் 10

95. **புஷ்கலாவதி** (*பெஷாவர்*). *தங்கம்*. **முன்புறம்:** *தலையில் கிரீடமும் வலது கையில் ஏதோ ஒரு பொருளையும் வைத்துக்கொண்டு நேராகப் பார்த்து நிற்கும் பெண் உருவம்.* **புக்கலாவதி தேவதா அம்பே** *என்ற கரோஷ்தி வாசகம்.* **பின்புறம்:** *வலது சாயலிலுள்ள திமில் பெருத்த காளை. அதற்கு மேலே கிரேக்க எழுத்துக்களில்* **தௌரோஸ்** *என்றும் கரோஷ்தியில்* **உஷபெ** *என்றும் உள்ளது.*

96. **ஔதும்பரா**. *செம்பு*. **முன்புறம்:** *இடது பக்கத்தில் பட்டயத்தின்மீது மரம்; வலது சாயலிலுள்ள யானையின் முன்பாகம்; கீழே அலை அலை போன்ற கோடு.* **மஹாதேவச ராஜயோ ருத்திரதாசாச** *என்னும் கரோஷ்தி வாசகம்.* **பின்புறம்:** *கோபுரமுள்ள சிவபெருமான் கோயில்; அதற்கு முன்னால் திரிசூலக் கம்பம். கரோஷ்தியின் வாசகம் அப்படியே பிராமியில்.*

97. **ஔதும்பரா**. *வெள்ளி*. **முன்புறம்:** *தனது வலது கையை உயர்த்தி, நேராகப் பார்த்து நின்றுகொண்டிருக்கும் விசுவா*

மித்திரர். விஸ்பாமித்ரர் என்ற கரோஷ்தி வாசகம்; அவ்வாச கத்தைச் சுற்றி **மஹாதேவச ரஞ தாரகேஷாச** என்று. **பின்புறம் :** ஒரு இடத்திற்குள் திரிசூலக் கோடாரியும் அதற் கருகில் மரமும்; சுற்றிலும் முன்புறமுள்ள வாசகமே பிராமியில் உள்ளது.

98. **குனிந்தா.** வெள்ளி. **முன்புறம் :** வலது சாயலாக நிற்கும் மானைப் பார்த்துக்கொண்டு அருகில் நிற்கும் பெண் உருவம்; மானுக்குப் பக்கத்தில் ஒரு சில சிறிய சின்னங்கள். சுற்றிலும் கரோஷ்தி வாசகம். **ராக்ருஹ குனிந்தஸ்ய அமோகபூதீயா மகாராஜஸ்ய. பின்புறம்:** ஆறு வளைவு கொண்ட மலையும் அதன் உச்சியில் ஒரு குடையும்; அதற்கு வலப்புறத்தில் ஒரு ஸ்வஸ்திகையும் முக்கோண வடிவமுள்ள கொடியும்; அதை யடுத்துப் பட்டயத்தில் ஒரு மரமும் மேலே நந்தி பாதமும். சுற்றிலும் முன்புறமுள்ள வாசகம் பிராமியில்.

99. **குனிந்தா.** செம்பு. இருபுறமும் 98-ல் உள்ளதைப் போல் தான்; ஆனால் வாசகம் முழுமையாக இல்லை.

100. **யௌதேயா.** செம்பு. **முன்புறம் :** ஆறு முகம் கொண்ட கார்த்திகேயர் தன் வலது கையில் வேல் கம்பும் இடது கையை இடுப்பிலும் வைத்து நேராக நின்றுகொண்டிருக்கிறார். சுற்றிலும் **பகவதாச சமிஞ பிரமண்யதேவச குமாராச** என்னும் பிராமி வாசகம். **பின்புறம் :** ஆறு முகம் கொண்ட பத்ரா தெய்வம் நேராக நின்றுகொண்டுள்ளது. அத் தெய்வத் திற்கு வலதுபுறம் ஆறு வளைவு கொண்ட மலை, குடையுடனும் நந்தியின் பாதத்துடனும்; இடது புறம் பட்டயத்தில் ஒரு மரம்.

101. **யௌதேயா.** செம்பு. **முன்புறம் :** இடது கையை இடுப் பிலும், வலது கையில் வேலும் வைத்துக்கொண்டு நேராக நிற்கும் **கார்த்திகேயர்.** இடதுபுறம் அவரது காலருகில் மயில். **யௌதேயா கணஸ்ய ஜயத்வி** என்ற பிராமி வாசகம். **பின்புறம் :** இடது கையை இடுப்பில் வைத்து, வலது கையைத் தூக்கி ஒய்யாரமாக நடந்து செல்லும் பெண் தெய்வம்; இடதுபுறம் சங்கு; வலது புறம் நாகர் சின்னம்.

102. **மதுரா. புருஷதத்தர் மன்னர்.** செம்பு. **முன்புறம் :** வலது கையை உயர்த்தி, நேராகப் பார்த்து நிற்கும் லட்சுமி; இடப்புறமும் வலப்புறமும் சில சின்னங்கள்; மேலே **புருஷதத்தஷா** என்ற பிராமி வாசகம். **பின்புறம் :** யானைப் பாகர் அமர்ந்துள்ள மூன்று யானைகள் (தெளிவாக இல்லை).

103. **மதுரா. சிவதத்தர் மன்னர்.** *செம்பு.* **முன்புறம்:** *இடது சாயலில் ஒரு குதிரை.* **பின்புறம்:** *நேராகப் பார்த்து நிற்கும் லட்சுமி; இரு பக்கத்திலும் பல சின்னங்கள்; கீழே* **காதபாச சிவதத்தஷா** *என்ற பிராமி வாசகம்.*

104. **மதுரா. க்ஷத்ரப்ப ராஜுவுலா.** *மாற்றுக் குறைந்த வெள்ளி.* **முன்புறம்:** *மகுடம் அணிந்த மன்னரின் மார்பளவு உருவம்;* **பசிலியோஸ் பசியோன் சொதெரோஸ் ராஜு** *என்ற வாசகம்.* **பின்புறம்:** *தனது வலது கையில் சுழன்று கொண்டிருக்கும் மின்னலின் கைக்கூறையும், இடது கையில் கேடயத்தையும் வைத்துக் கொண்டுள்ள தெய்வமான பல்லாஸ்.* **அப்ரதிஹாத சக்ராசா க்ஷத்ரபாசா ராஜுவுலாசா** *என்ற கரோஷ்தி வாசகம்.*

படம் 11

105. **பாஞ்சாலம். பல்குனிமித்திரர்.** *செம்பு.* **முன்புறம்:** *ஒரே வரிசையில் மூன்று சின்னங்கள்; கீழே* **பாகுனிமித்ரஷா** *என்ற பிராமி வாசகம்.* **பின்புறம்:** *நேராகப் பார்த்து நிற்கும் பெண் தெய்வம்; இடது புறம் ஒரு சின்னம்.*

106. **பாஞ்சாலம். அச்சுதர்.** *செம்பு.* **முன்புறம்:** *ஒரு சக்கரம்.* **பின்புறம்:** *பெரிய பிராமி எழுத்துக்களில்* **அச்சியு** *என்ற வாசகம்.*

107. **கௌசாம்பி. நவா மன்னர்.** *செம்பு.* **முன்புறம்:** *வலது சாயலாக ஒரு காளை; மேலே ஒரு வட்டம்.* **பின்புறம்:** *பட்டயத்தில் மரம்; இடது புறம் ஈட்டி; வலது புறம் திரிசூலம்; கீழே* **நெவாசா** *என்று பிராமி எழுத்துக்களில்.*

108. **அயோத்தி, விஷாகதேவ மன்னர்.** *செம்பு.* **முன்புறம்:** *ஒரு கம்பத்திற்கு முன் இடது சாயலில் ஒரு காளை; மேலே,* **விஷாக தேவசா** *என்று பிராமியில்.* **பின்புறம்:** *வேலைப்பாடு கொண்ட வட்டத் தட்டு; அதைச் சுற்றி பல சின்னங்கள்.*

109. **அயோத்தி. ஹரிதத்தர் மன்னர்.** *செம்பு.* **முன்புறம்:** *நடுவில் ஒரு சக்கரம்; அடுத்து ஒரு காளை; அதையடுத்து பட்டயத்தில் ஒரு மரம். பின்னர் பிராமியில்* **ஹரிதத்தசா.** **பின்புறம்:** *நான்கு அம்புகள் முக்கோண வடிவத் தலை கொண்ட சின்னம், நந்திபாதம் ஆகியவை கொண்ட குழப்பமான சின்னம்.*

110. அயோத்தி. மன்னர் சிவபாலிதர். *செம்பு.* **முன்புறம் :** *நடுவில் முரட்டு மனித உருவம் ; காளை, அடுத்து பட்டத்தில் மரம். அதையடுத்து பிராமியில்* **சிவபாலிதசா** *என்ற வாசகம்.* **பின்புறம் :** *109-ல் உள்ள சின்னம்தான்.*

111. அயோத்தி. மன்னர் குமுதசேனர். *செம்பு.* **முன்புறம் :** *இடது சாயலாக காளை, அடுத்து பட்டயத்தில் மரம் ; கீழே* **ராஜா குமுதசேனசா** *என்று பிராமியில்.* **பின்புறம் :** *109-ல் உள்ள சின்னம்தான்.*

112. அயோத்தி. மன்னர் சத்யமித்திரர். *செம்பு.* **முன்புறம் :** *ஒரு சின்னக் கொடிக்கு முன்னால் இடது சாயலில் நிற்கும் காளை ; கீழே பிராமியில்* **சத்ய மித்திரசா. பின்புறம் :** *புல்லின மரம் ; அதற்கு முன்னால் ஒரு அன்னப்பறவை.*

113. கலிங்கம் *(பூரி–குஷான நாணயம் எனப்படும் குஷானப் பாணியில்) செம்பு.* **முன்புறம் :** *குஷான நாணயங்களைப் பின்பற்றிச் செய்யப்பட்ட அரைகுறையான மன்னர் உருவம்.* **பின்புறம் :** *குஷான நாணயங்களைப் பின்பற்றி அரைகுறையாகப் பொறிக்கப்பட்ட* **மாயோ** *தெய்வத்தின் உருவம்.*

114. வணிகச்சங்க வில்லை. *செம்பு.* **முன்புறம் : நெகமா** *என்று பிராமியில்.* **பின்புறம் :** *எஃகு முற்றம் ; மேலே* **தொஜாகா** *என்ற கரோஷ்தி வாசகம்.*

115. வணிகச்சங்க வில்லை. *செம்பு.* **முன்புறம் :** *பதினாறு ஆரங்களுடன் சக்கரம் ஒன்று ; மேலே மூன்று வளைவுள்ள மலை.* **பின்புறம் :** *எருது போன்ற இரண்டு சின்னங்களுக்கு நடுவில் ஒரு ஸ்வஸ்திகை ; கீழே* **பன்சானெகாமெ** *என்ற கரோஷ்தி வாசகம்.*

படம் 12

முற்காலத் தென்னிந்திய நாணயங்கள் :

116. பாண்டிய நாடு : *வெள்ளி (முத்திரை பொறிக்கப்பட்டது).* **முன்புறம் :** *ஐந்து சின்னங்கள் (1) சூரியன் ; (2) ஆறு கிளையுள்ள சின்னம் ; (3) ஸ்தூபம் ; (4) மரம் ; (5) பட்டயத்தில் ஒரு கைக் கோடரி.* **பின்புறம் :** *117-ன் பின்புறமுள்ள மீன் (விளக்கமில்லை).*

117. பாண்டிய நாடு. செம்பு. **முன்புறம்:** ஒரு கம்பத்திற்கு முன் வலது சாயலாக யானை ஒன்று; மேலே சில சிறிய சின்னங்கள். **பின்புறம்:** மீன்.

118. ஆந்திரா. செம்பு. **முன்புறம்:** பட்டயத்தில் மரம்; இடது புறம் ஸ்வஸ்திகை; வலதுபுறம் எருது போன்ற உருவம்; கீழே அலை போன்ற கோடு. **பின்புறம்:** ஒன்றுமில்லை.

சாதவாகனருக்கு முந்திய நாணயங்கள்:

119. மகாராத்தி. சதகன கலாலயர். ஈயம். **முன்புறம்:** இடது சாயலாக நிற்கும் திமில் பெருத்த காளை. **சதகன கலாலய மகாராத்திசா** என்ற பிராமி வாசகம். **பின்புறம்:** வேலிப்பட்டத்தில் மரம்; அதற்கருகில் மூன்று வளைவுள்ள மலையும் சந்திரனும்.

120. ஆனந்த வமிசம். மூலானந்தர். ஈயம். **முன்புறம்:** இரண்டடுக்கில் வளைவுகள் கொண்ட சிறிய மலைகள்; அவற்றிற்கு மேலே பெரிய வளைவு; **ரஞோ முலானந்தசா** என்ற பிராமி வாசகம். **பின்புறம்:** வேலிப் பட்டத்தில் மரம்; அதற்கிரு புறங்களிலும் பல சின்னங்கள்.

121. குரா வமிசம். குரார். ஈயம். **முன்புறம்:** வில்லும் அம்பும்; சுற்றிலும் **மகாராத்திசா குராசா** என்ற பிராமி வாசகம். **பின்புறம்:** பட்டத்தில் மரம்.

122. குரா வமிசம். வசிஷ்திபுத்திர விலிவாயகுரார். பொதின். **முன்புறம்:** வில்லும் அம்பும்; சுற்றி **ரஞோ வசிஷ்திபுத்தசா விலிவாயகுராசா. பின்புறம்:** ஆறுவளைவுள்ள குன்று, மேலே ஒரு மரம்; ஏதாவதொரு பக்கம் சிறிய சின்னங்கள்.

123. குரா வமிசம். மதாரிபுத்திர சிவாலகுரார். ஈயம். **முன்புறம்:** வில்லும் அம்பும்; சுற்றிலும் **ரஞோ மதாரிபுத்தசா சிவால குராசா** என்று பிராமியில். **பின்புறம்:** ஒன்றையடுத்து ஒன்றாக நான்கு மலைகளும் வேலிப்பட்டத்தில் நான்கு மரங்களும்.

124. குரா வமிசம். கௌதமபுத்திர விலிவாயகுரார். ஈயம். **முன்புறம்:** வில்லும் அம்பும்; சுற்றிலும் **ரஞோ கௌதம புத்தசா விலிவாயகுராசா. பின்புறம்:** ஒன்றையடுத்து ஒன்றாக நான்கு மலைகளும், வேலிப்பட்டத்தில் நான்கு மரங்களும்.

125. செபாக வமிசம். செபாகர். செம்பு. **முன்புறம்:** ஆறு வளைவுள்ள மலையின் கீழே வலது சாயலில் ஒரு காளை; கீழ்ப்

புறம் ஒரு அலை அலையான கோடும் மீன்களும். மேலே **ரஞோ செபாகசா** என்று பிராமியில். **பின்புறம்**: மூன்று சின்னங்கள் (1) பெரியதொரு நந்தி பாதம்; (2) நாகர் சின்னம்; (3) புள்ளிகளாலான ஒரு வட்டம்.

சாதவாகனர் நாணயங்கள்:

126. **ஸ்ரீ சதா**. செம்பு. (முத்திரையிடப்பட்டது.) **முன்புறம்**: ஐந்து முத்திரைகள் (1) வேலிப்பட்டத்தில் முக்கோணத் தலைப்புக்கொண்ட சின்னம்; (2) உஜ்ஜயினிச் சின்னம்; (3) யானை; (4) ஆற்றுச் சின்னம்; (5) **ஸ்ரீ சதசா** என்ற பிராமி வாசகம். **பின்புறம்**: ஒரு உஜ்ஜயினிச் சின்னமும் அதில் ஒரு வட்டத்தில் ஒரு சந்திரனும்.

127. **ஸ்ரீ சதகர்னி**. செம்பு (முத்திரை பொறிக்கப்பட்டது). ஐந்து முத்திரைகள். இவற்றில் முதல் நான்கும் 126-ல் உள்ளது போல்; ஐந்தாவது **ரஞோ ஸ்ரீ சதகனிசா** என்று பிராமியில்.

படம் 13

128. **ஸ்ரீ சதா** (விதிசப் பகுதி). செம்பு. **முன்புறம்**: நேராக நோக்கி நிற்கும் மனிதன், சுற்றிலும் **ராஞோ ஸ்ரீ சதசா** என்று பிராமியில். **பின்புறம்**: யானையின் வேறு சில சின்னங்களும்.

129. **ஸ்ரீ யக்ஞ சதகர்னி** (மகராஷ்டிரப்பகுதி). **முன்புறம்**: வலது சாயலாக நிற்கும் யானை; மேலே பிராமியில் **ஸ்ரீ யான சதகனிசா**. **பின்புறம்**: உஜ்ஜயினிச் சின்னம்.

130. **வசிஷ்டிபுத்திர ஸ்ரீ புலமாவி** (ஆந்திரப் பகுதி). ஈயம். **முன்புறம்**: மூன்று வளைவு மலை; கீழே நெளிவான கோடு; சுற்றிலும் **ரஞோ வசிஷ்டிபுத்திரசா ஸ்ரீ புலமாவிசா** என்று பிராமியில். **பின்புறம்**: உஜ்ஜயினிச் சின்னம்.

131. **கௌதமீபுத்திர ஸ்ரீ யக்ஞ சதகர்னி**. வெள்ளி. **முன்புறம்**: மன்னரின் மார்பளவு உருவம். சுற்றிலும் **ரஞோ கௌதம புதாசா ஸ்ரீ யாஞ சதகனிசா** என்று பிராமியில். **பின்புறம்**: உஜ்ஜயினிச் சின்னம்; மேலே ஒன்றையடுத்து ஒன்றாக ஆறு சந்திரனும், ஆறு வளைவு கொண்ட மலையும். கீழே நெளிவான கோடு; சுற்றிலும் முன்புறமுள்ள வாசகம் தமிழில்.

மேற்கத்திய க்ஷத்ரபர் நாணயங்கள் :

132. பூமகர். *செம்பு.* **முன்புறம் :** *சிங்கமும் சக்கரமும் கொண்ட தூணின் தலைப்பு. சுற்றிலும்* **க்ஷஹாரதாசா க்ஷத்ரபசா பூமகசா** *என்று பிராமி வாசகம்.* **பின்புறம் :** *அம்பும் மின்னலின் கைக்கூறும் ; கரோஷ்தியில் முன்புற முள்ள அதே வாசகம்.*

133. நாகபாணர். *வெள்ளி.* **முன்புறம் :** *மன்னரின் மார்பளவு உருவம் ; கிரேக்க எழுத்துக்களில் வாசகம் (அழிந்துள்ளது).* **பின்புறம் :** *அம்பும் மின்னலின் கைக்கூறும்.* **ராஜ்ஞோ சஹாரதாசா நாகபாணசா** *என்ற வாசகம் பிராமியிலும் கரோஷ்தியிலும்.*

134. முதலாம் ருத்திரசிம்மன். *வெள்ளி.* **முன்புறம் :** *மன்னரின் மார்பளவு உருவம் ; தலைக்குப் பின்னால் வருடம் 306.* **பின்புறம் :** *மூன்று வளைவுள்ள மலையும் சந்திரனும் ; ஏதாவதொரு பக்கத்தில் சூரியனும் சந்திரனும் ; சுற்றிலும்,* **ராஜ்ஞோ மகாக்ஷத்ரபசா ருத்திரதாம புத்ரசா ராஜ்ஞோ மகாக்ஷத்ரபசா ருத்திரசிஹசா** *என்ற வாசகம்.*

135. இனம் தெரியாதது. *செம்பு.* **முன்புறம் :** *நேராகப் பார்க்கும் காளை.* **பின்புறம் :** *மூன்று வளைவுள்ள மலையும் சந்திரனும் ; பக்கத்தில் சூரியனும் சந்திரனும்.*

குப்த வமிச நாணயங்கள் :

136. முதலாம் சந்திரகுப்தர் : *தங்கம்.* **முன்புறம் :** *ஒருவரையொருவர் எதிர்நோக்கியுள்ள மன்னரும் ராணியும் ; இடது புறத்தில்* **ஸ்ரீ குமார தேவி ;** *மன்னரின் வலது கைக்குக் கீழே* **சந்திரகுப்தர். பின்புறம் :** *இடது கையில் வளத்தின் சின்னத்தையும், வலது கையில் பின்னல் கயிற்றையும் கொண்டு சிங்கத்தின்மீது அமர்ந்துள்ள தெய்வம் ; வலது பக்கம்* **லிச்சவாயா** *என்ற வாசகம்.*

137. சமுத்திர குப்தர். *தங்கம்.* **முன்புறம் :** *இடது சாயலாக நிற்கும் மன்னர் ; இடது கையில் கொடியைப் பிடித்துக் கொண்டு பலி பீடத்தில் வலது கையால் பலி கொடுக்கிறார். இடது பக்கத்தில் கருடனின் சின்னம். மன்னரின் இடது கைக்குக் கீழே* **சமுத்திர** *என்ற வாசகம். சுற்றிலும்* **சமரசதவிததவிஜயோ ஜிதாரிபூர் அஜிதோ திவம் ஜயதி**

என்ற வாசகம். **பின்புறம் :** இடது கையில் செல்வத்தின் சின்னத்தை(கொம்பை)யும், நீட்டிக்கொண்டுள்ள **வலது** கையில் பாசத்தையும் பிடித்து உயர்ந்த அரியணையில் அமர்ந்துள்ள பெண் தெய்வம். இடது பக்கத்தில் **பராக்ரமா** என்ற வாசகம்.

138. **சமுத்திர குப்தர்.** தங்கம். **முன்புறம் :** இடது கையில் வில்லும் வலது கையில் அம்பும் கொண்டு இடது சாயலாக நிற்கும் மன்னர் ; இடது பக்கத்தில் கருடன் உள்ள கொடி ; மன்னரின் இடது கைக்குக் கீழே **சமுத்திர** என்ற வாசகம். சுற்றிலும் **அப்ரதிரதோ விஜித்ய க்ஷிதிம் சுசரிதைர் திவம் ஜயதி. பின்புறம் :** 137-ல் உள்ளதுதான். ஆனால் வாசகம் மட்டும் **அப்ரதிராரத.**

139. **சமுத்திர குப்தர் :** தங்கம். **முன்புறம் :** வலது கையை இடுப்பில் வைத்துக்கொண்டு, இடது கையில் சிறிய கோடரி கொண்டு இடது சாயலாக நிற்கும் மன்னர் ; இடது பக்கம் குள்ளன் ஒருவன் ; பின்னால் மேற்புறம் சந்திரனுள்ள கொடி ; இடது கரத்தின் கீழ் **சமுத்திரர்.** சுற்றிலும் **க்ருதாந்தபரசுர் ஜயத்யஜிதராஜேஜெதாஜிதா. பின்புறம் :** 137-ல் உள்ளதுதான் ; ஆனால் செல்வத்தின் சின்னத்திற்குப் பதிலாகத் தாமரை ஏந்திக்கொண்டு, **க்ருதாந்தபரசுஹ்** என்ற வாசகம்.

படம் 14

140. **சமுத்திர குப்தர்.** தங்கம். **முன்புறம் :** பலிக்கம்பத்திற்கு முன்னால் இடது சாயலாக நிற்கும் குதிரை. சுற்றிலும் **ராஜாதிராஜ பிருத்விம் ஆவித்வா திவம் ஜெயத்யா அப்ரதிரவாரயவீர** என்ற வாசகம். **பின்புறம் :** தனது வலது கையில் கொண்டுள்ள வெண்சாமரத்தை வலது தோளுக்குமேல் வைத்துக்கொண்டு இடது சாயலில் நிற்கும் ராணி. இடது புறத்தில் ஈட்டி ; **அஸ்வமேதபராக்ரமா** என்ற வாசகம்.

141. **இரண்டாம் சந்திரகுப்தர்.** தங்கம். **முன்புறம் :** இடது கையில் வில்லும் வலது கையில் அம்பும் கொண்டு இடது சாயலாக நிற்கும் மன்னர். இடது பக்கத்தில் கருடன் சின்ன

முள்ள கொடி. இடது கைக்குக் கீழே **சந்திரன்** என்ற பெயர். **தேவ-ஸ்ரீ மகாராஜாதி ராஜ ஸ்ரீ சந்திர குப்த** என்ற வாசகம். **பின்புறம் :** *139*-ல் உள்ளதைப்போல் வாசகம் **ஸ்ரீ விக்ரம.**

142. **இரண்டாம் சந்திர குப்தர்.** *தங்கம்.* **முன்புறம் :** *ஆடையேதுமின்றி இடது சாயலாக நின்றுகொண்டு வலது பக்கம் பார்க்கும் மன்னர். இடது பக்கத்தில் கருடன் சின்னமுள்ள கொடி.* **சந்திர** *என்று வலது கைக்கு வெளியே 141-ல் உள்ள வாசகம்தான்.* **பின்புறம் :** *வலது கையில் பின்னல் கயிற்றையும் இடது கையில் தாமரையையும் வைத்துக் கொண்டு தாமரை மலரில் அமர்ந்திருக்கும் பெண் தெய்வம்.* **ஸ்ரீ விக்கிரம** *என்ற வாசகம்.*

143. **இரண்டாம் சந்திர குப்தர்.** *தங்கம்.* **முன்புறம் :** *இடது கையில் அம்பைப் பிடித்துக்கொண்டு, வலது கையால் அதிலுள்ள நரம்பைத் தன் காது வரை இழுத்துக்கொண்டு சிங்கத்தை வேட்டையாடும் மன்னரின் சின்னம் இடது பக்கத்தில்.* **நரேந்திரசந்திர பிரதிதரஞேரனே ஜெயத்யா ஜய புவி சிம்மவிக்ரம** *என்ற வாசகம்.* **பின்புறம் :** *வலது கையில் தாமரை மலருடன், இடது கையைச் சிங்கத்தின்மீது வைத்துக்கொண்டு, அதில் சவாரி செய்யும் பெண் தெய்வம்.* **சிம்மவிக்ரம** *என்ற வாசகம்.*

144. **இரண்டாம் சந்திர குப்தர்.** *தங்கம்.* **முன்புறம் :** *தன் வாளால் சிங்கத்தை வெட்டும் மன்னர் வலது சாயலாக. 143-ல் உள்ள வாசகம்.* **பின்புறம் :** *வலது கையில் பின்னல் கயிற்றையும் இடது கையில் தாமரை மலரையும் வைத்துக் கொண்டு அமர்ந்துள்ள பெண் தெய்வம் அருகில் படுத்திருக்கும் சிங்கத்தை நோக்குகிறுர். வாசகம் :* **சிம்ம விக்கிரம.**

145. **இரண்டாம் சந்திர குப்தர்.** *தங்கம்.* **முன்புறம் :** *வில்லும் அம்பும் கொண்டு சிங்கத்தை வேட்டையாடும் மன்னர் வலப்புறமாக. 143-ல் உள்ள வாசகம்தான் (ஒரு பகுதி மட்டும் தெளிவாக உள்ளது).* **பின்புறம் :** *144-ல் உள்ளதைப் போல்.*

146. **இரண்டாம் சந்திர குப்தர்.** *தங்கம்.* **முன்புறம் :** *சேணம் பூட்டிய குதிரைமீது சவாரி செய்யும் மன்னர் இடது சாயலாக.* **பரமபாகவத மகாராஜாதிராஜ ஸ்ரீ சந்திர**

குப்த *என்ற வாசகம்.* **பின்புறம்:** *நீட்டிய வலது கையில் நாடாவும் இடது கையில் தாமரை மலரும் கொண்டு இடது சாயலாக முக்காலியில் அமர்ந்துள்ள பெண் தெய்வம்.* **அஜிதவிக்ரமஹ** *என்னும் வாசகம்.*

147. **இரண்டாம் சந்திர குப்தர்.** *தங்கம்.* **முன்புறம்:** *தன் கால்களை மடக்கி மஞ்சத்தில் வைத்துக்கொண்டு இடது சாயலாக ஆடையின்றி அமர்ந்துள்ள மன்னர். 146-ல்* **உள்ள** *அதே வாசகம்.* **பின்புறம்!** *தன் இடது கையை மஞ்சத்தின் மீது வைத்துக்கொண்டு வலது கையில் தாமரை மலருடன் மஞ்சத்தில் இடது சாயலாக அமர்ந்துள்ள பெண் தெய்வம். வாசகம்:* **விக்கிரமாதித்ய.**

148. **இரண்டாம் சந்திர குப்தர்.** *தங்கம்.* **முன்புறம்.** *தன் இடது காலைத் தொங்கவிட்டு, வலது காலை மடக்கி ஆடை ஏது மின்றி மஞ்சத்தின்மீது அமர்ந்துள்ள மன்னரின் இடது சாயல் உருவம்.* **தேவ ஸ்ரீ மகாராஜாதிராஜ ஸ்ரீ சந்திரகுப்தஸ்ய** *என்ற வாசகம்.* **பின்புறம்:** *தன் இடது கரத்தில் தாமரை மலருடன் சாய்மானமில்லாத அரியணையில் நேராகப் பார்த்து அமர்ந்துள்ள பெண் தெய்வம்.* **ஸ்ரீ விக்கிரம** *என்ற வாசகம்.*

149. **இரண்டாம் சந்திர குப்தர்.** *தங்கம்.* **முன்புறம்:** *இரண்டு ஒளி வளைவுகளுடன் வலது சாயலாக நிற்கும் சக்கர புருஷர் குருத்தோலையில் கட்டப்பட்டுள்ள மூன்று வட்டமான பொருள்களைத் தனக்கு முன்னால் நிற்கும் மன்னருக்குப் பரிசளிக்கிறார்.* **பின்புறம்:** *தன் இடது கையில் தாமரை மலர்கொண்டு இடது சாயலாக நிற்கும் பெண் தெய்வம். வாசகம்:* **சக்ர விக்கிரமஹ.**

படம் 15

150. **முதலாம் குமார குப்தர்:** *தங்கம்.* **முன்புறம்:** *சேணம் பூட்டிய குதிரைமீது சவாரி செய்யும் மன்னர் வலது சாயலில்.* **குப்தகுல-வியோமசசி ஜெயத்யஜேயோ ஜிதமஹேந்திர** *என்ற வாசகம்.* **பின்புறம்:** *தன் இடது கையில் தாமரை மலருடன் முக்காலியில் அமர்ந்துள்ள பெண் தெய்வம் அருகிலுள்ள மயிலுக்குப் பழம் ஊட்டுகிறாள்.* **அஜித மஹேந்திர** *என்ற வாசகம்,*

151. **முதலாம் குமார குப்தர்.** *தங்கம்.* **முன்புறம் :** *வில்லும் அம்பும் கொண்டு புலியைத் தாக்கும் மன்னரின் உருவம் இடது சாயலில். இடது கரத்திற்குக் கீழே* **கு** *என்ற எழுத்தும் அதற்கு மேலே சந்திரனும்.* **ஸ்ரீமான் வியாக்ரபலபராக்ரம** *என்ற வாசகம்.* **பின்புறம் :** *தாமரை மலரை இடது கையில் பிடித்து முக்காலியில் இடது சாயலாக அமர்ந்துள்ள பெண் தெய்வம் மயிலுக்குப் பழம் ஊட்டும் சின்னம்.* **குமாரகுப்தோ திராஜ** *என்ற வாசகம்.*

152. **முதலாம் குமார குப்தர்.** *தங்கம்.* **முன்புறம் :** *இடது சாயலாக நின்று கொண்டு வலது கையிலுள்ள பழங்களை மயிலுக்கு ஊட்டும் மன்னர்.* **ஜெயதி ஸ்வகுணைர்-குணராசி மகேந்திரகுமார** *என்ற வாசகம்.* **பின்புறம் :** *தனது தோளுக்குமேல் இடது கையில் வேலைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு மயிலில் அமர்ந்துள்ள கார்த்திகேயரின் உருவம் இடது சாயலாக.* **மகேந்திரகுமார** *என்ற வாசகம்.*

153. **முதலாம் குமார குப்தர்.** *தங்கம்.* **முன்புறம் :** *இடது சாயலாக ரதத்தில் அமர்ந்துள்ள மன்னர் தனது தொடையில் வைத்துக்கொண்டு வீணை வாசிக்கிறார்.* **மகாராஜாதிராஜ ஸ்ரீ குமார குப்த** *என்ற வாசகம் (ஒரு பகுதி மட்டும் தெளிவாக உள்ளது.)* **பின்புறம் :** *வலது கையில் தாமரை மலர் கொண்டு இடது கையைத் தேரில் வைத்து ராணி (அல்லது பெண் தெய்வம்) தேரில் அமர்ந்திருப்பது.* **குமாரகுப்தர்** *எனும் வாசகம்.*

154. **முதலாம் குமார குப்தர்.** *தங்கம்.* **முன்புறம் :** *ஒருவரை யொருவர் எதிர்நோக்கி நிற்கும் மன்னரும் ராணியும்; உடைவாளின் பிடியின்மேல் இடது கையை வைத்துக்கொண்டு வலது கையில் ஒரு மலரைப் பிடித்துக்கொண்டிருக்கிறார் மன்னர்.* **பின்புறம் :** *வலது கையில் தாமரை மலருடன் சிங்கத்தின்மீது அமர்ந்திருக்கும் பெண் தெய்வம்;* **ஸ்ரீ குமார குப்த** *எனும் வாசகம்.*

155. **முதலாம் குமார குப்தர்.** *தங்கம்.* **முன்புறம் :** *பலி கொடுக்கும் கம்பத்திற்கு முன்னால் வலது சாயலாக நிற்கும் குதிரை;* **தேவோ ஜிதசத்ரு குமாரகுப்தோதிராஜ** *எனும் வாசகம்.* **பின்புறம் :** *தனது வலது கையிலுள்ள வெண் சாமரத்தைத் தோளுக்குமேல் தூக்கிப் பிடித்துக்கொண்டு இடது சாயலாக நிற்கும் ராணி. பலியிடப் பயன்படுத்தும்*

ஈட்டி முன்னால் உள்ளது. **ஸ்ரீ அஸ்வமேத மஹேந்திர** எனும் வாசகம்.

156. **முதலாம் குமார குப்தர்**. தங்கம். **முன்புறம் :** பலி கம்பத்திற்கு முன்னால் இடது சாயலாக நிற்கும் குதிரை. 155-ல் உள்ள அதே வாசகம். **பின்புறம் :** 155-ல் உள்ளதுதான்.

157. **முதலாம் குமார குப்தர்.** தங்கம். **முன்புறம் :** இடது சாயலாக குதிரைமீது அமர்ந்துள்ள மன்னர் தனது வலது கையிலுள்ள வாளால் காண்டாமிருகத்தைத் தாக்குகிறார். **பர்த்தா கட்கத்ரதா குமாரகுப்தோ ஜயத்யானிசம்** எனும் வாசகம். **பின்புறம் :** ஒரு முதலையின்மீது இடது சாயலாக நிற்கும் கங்கா தேவி; பின்னால் வெண்சாமரம் ஏந்தி நிற்கும் பணிப் பெண். **ஸ்ரீ மகேந்திர-கட்க** எனும் வாசகம்.

158. **முதலாம் குமார குப்தர்**. தங்கம். **முன்புறம் :** வலது கையில் அங்குசக் கோலுடன் யானைமீது சவாரி செய்யும் மன்னர் இடது சாயலில்; அவருக்குப் பின்னால் வெண்சாமரம் வீசும் பணியாள் உட்கார்ந்துள்ளான். வாசகம்: **க்ஷதாரிபு குமாரகுப்தராஜா ஜெயதி ரிபூன்**. **பின்புறம் :** வலது கையில் தாமரை, இடது கையில் செல்வத்தின் சின்னம் ஏந்தி நேராகப் பார்த்து நிற்கும் பெண் தெய்வம்; கீழே வலது பக்க ஓரத்தில் ஒரு சங்கு. **ஸ்ரீ மகேந்திர-கஜ** எனும் வாசகம்.

159. **முதலாம் குமார குப்தர்**. தங்கம். **முன்புறம் :** நடுவில் நேராகப் பார்த்து நிற்கும் மனித உருவம்; இரண்டு புறத்திலும் அவ்வுருவத்தோடு பேசிக்கொண்டிருப்பது போன்ற பல மனித உருவங்கள். நாணயத்தின் ஓரமெல்லாம் வாசகம் உள்ளது; ஆனால் சரியாகத் தெரியவில்லை. **பின்புறம் :** நேராகப் பார்த்து தாமரை மலரில் நிற்கும் பெண் தெய்வம். **அப்ரதிக** எனும் வாசகம்.

படம் 16

160. **கதோத்கச குப்தர்** (கிரமாதித்யர்). தங்கம். **முன்புறம் :** உடைவாளின் பிடியில் வலது கரத்தை வைத்துக்கொண்டு, இடது சாயலாக நிற்கும் மன்னர்; அவரது தலைக்குமேல் வெண்சாமரம் வீசும் குள்ளமான பணியாள். வாசகம் தெளிவாக இல்லை. **பின்புறம் :** தனது வலது கையில்

நாடாவும் இடது கையில் தாமரை மலரும் கொண்டு இடது சாயலாக நிற்கும் பெண் தெய்வம். **கிரமாதித்ய** எனும் வாசகம்.

161. **ஸ்கந்த குப்தர்.** தங்கம். **முன்புறம்:** தன் இடது கையில் **வில்லும்** வலது கையில் அம்பும் கொண்டு இடது சாயலில் வலதுபுறம் பார்த்து நிற்கும் மன்னர்; அவரை நோக்கி ராணி; உயர்த்தப்பட்டுள்ள ராணியின் வலது கரத்தில் ஒரு கிளி. மன்னருக்கும் ராணிக்கும் நடுவில் கருடன் சின்னமுள்ள கொடி. **ஜயதி மஹிதலம் ஸ்கந்த குப்தோ சுதன்வீ** எனும் வாசகம். **பின்புறம்:** இடது கையில் தாமரை மலருடன் தாமரையில் அமர்ந்துள்ள பெண் தெய்வம். **ஸ்ரீ ஸ்கந்தகுப்த** எனும் வாசகம்.

162. **புத்த குப்தர்.** தங்கம். **முன்புறம்:** இடது கையில் **வில்லும்** வலது கையில் அம்பும் பிடித்துக்கொண்டு இடது சாயலாக நிற்கும் மன்னர். இடது கரத்திற்குக் கீழே **புத்தா** என்ற சொல். வாசகம் தெளிவாக இல்லை. **பின்புறம்:** 161-ல் உள்ளதைப்போல், ஆனுல் வாசகம் **ஸ்ரீவிக்கிரம** என்றுள்ளது.

163. **நரசிம்ம குப்தர்.** தங்கம். **முன்புறம்:** 162-ல் உள்ளதைப் போல்தான்; ஆனுல் இடது கரத்திற்குக் கீழே **நர** என்றுள்ளது. **பின்புறம்:** 161-ல் உள்ளதைப் போல்தான்; ஆனுல் **பாலாதித்யா** என்ற வாசகம்.

164. **பிரகாசாதித்யர்.** தங்கம். **முன்புறம்:** குதிரைமீது வலது சாயலாக அமர்ந்துள்ள மன்னர் தனது வாளால் சிங்கத்தைத் தாக்குகிருர். **விஜித்ய வசுதாம் திவம் ஜயதி** என்ற வாசகம். **பின்புறம்:** 161-ல் உள்ளதைப்போல்; ஆனுல் வாசக மட்டும் **ஸ்ரீ பிரகாசாதித்ய** என்று.

165. **முதலாம் குமார குப்தர்.** வெள்ளி. (மேற்கிந்தியா). **முன்புறம்:** வலது சாயலில் மன்னரின் தலை; வலது பக்கத்தில் சீர்கெட்டுப்போன கிரேக்க வாசகம் பின்பற்றப்பட்டுள்ளது. **பின்புறம்:** நேராகப் பார்த்திருக்கும் கருடன். சுற்றிலும் **பரமபாகவத மகாராஜாதிராஜ ஸ்ரீ குமார குப்த மகேந்திராதித்ய** எனும் வாசகம்.

166. **முதலாம் குமார குப்தர்.** வெள்ளி. (கிழக்கிந்தியா). **முன்புறம்:** வலது சாயலாக மன்னரின் தலை. **பின்புறம்:** தோகை விரித்தாடும் மயில்; சுற்றிலும் **விஜிதாவனிர் அவனீபதி குமாரகுப்தோ திவம் ஜயதி** என்ற வாசகம்.

167. ஸ்கந்த குப்தர். வெள்ளி. **முன்புறம்:** வலது சாயலில் மன்னரின் தலை. **பின்புறம்:** நெருப்புப் பீடம்; சுற்றிலும் **பரமபாகவதோ ஸ்ரீ விக்ரமாதித்ய ஸ்கந்த குப்த** என்ற வாசகம்.

ஹூணர்களின் நாணயங்கள்:

168. தோரமானர். செம்பு. **முன்புறம்:** மன்னரின் மார்பளவு உருவம் (சாசனீட்டு மார்பளவு உருவத்தை அரைகுறையாகப் பின்பற்றப்பட்டது). **பின்புறம்:** சூரியனின் சின்னம்; கீழே பிராமியில் **தோரா** என்று.

169. தோரமானர். வெள்ளி. **முன்புறம்:** இடது சாயலில் மன்னரின் தலை (குப்த வெள்ளி நாணயங்களைப் பின்பற்றியது). **பின்புறம்:** தோகை விரித்துள்ள மயில். சுற்றிலும் பெயர் மட்டும் மாற்றி 166-ல் உள்ள வாசகத்தைப்போல்.

170. மிகிரகுலர். செம்பு. **முன்புறம்:** வலது சாயலில் மன்னரின் மார்பளவு உருவம்; முகத்திற்கு முன்னால் பிராமியில் **மிகிர குலர்** என்று. **பின்புறம்:** இடது சாயலில் நிற்கும் காளை; கீழே பிராமியில் **ஜயது விரிஷ** என்று.

குப்தர்களுக்குப் பின் வங்காள நாணயங்கள்:

171. சசாங்கர். தங்கம். **முன்புறம்:** இடதுபுறமுள்ள காளை மீது இடது சாயலாகச் சாய்ந்துள்ள சிவபெருமான். வலது புறம் **ஸ்ரீ சா** என்றும், கீழே **ஜெயா** என்றும் உள்ளது. **பின்புறம்:** தாமரையில் நேராக அமர்ந்துள்ள பெண் தெய்வம்; ஏதாவதொரு பக்கத்தில் ஒரு யானை. **ஸ்ரீ சசாங்க** என்ற வாசகம்.

படம் 17

172. வீரசேனர். தங்கம். **முன்புறம்:** நேராக நிற்கும் காளை; மேலே **ஸ்ரீ வீரசேன**. **பின்புறம்:** அமர்ந்துள்ள பெண் தெய்வம். **கிரமாதித்ய** எனும் வாசகம்.

173. ஊர், பெயரற்றது. (குப்த நாணயங்களைப் போன்றது). தங்கம். **முன்புறம்:** இடது கையில் வில்லும் வலது கையில் அம்பும் கொண்டு இடது சாயலாக நிற்கும் மன்னர். இடது கரத்திற்குக் கீழே குதிரையொன்று; இடது புறம் கொடி. **பின்புறம்:** வலது சாயலில் நின்றுகொண்டிருக்கும் இறக்கையுள்ள (?) பெண் தெய்வம்.

குப்தர்களுக்குப் பின் வட இந்திய நாணயங்கள் :

174. நப்கி மாலிக். *வெள்ளி.* **முன்புறம்** *: இறக்கையுடன் கூடிய எருமைமாட்டுத் தலை உருவத்தைத் தலைப்பாகையாகக் கொண்டு வலது சாயலில் தோன்றும் மன்னரின் மார்பளவு உருவம்.* **நப்கி மாலெக்** *என்று* **பஹலவி** *வாசகம்.* **பின்புறம் :** *பணியாட்களுடன் சாசனீட்டுத் தீப் பலி பீடம்.*

175. சாஹி திஜின். *வெள்ளி.* **முன்புறம் :** *வலது சாயலில் மன்னரின் மார்பளவு உருவம். வட்டமாக* **ஸ்ரீ ஹித்விசா ஐரான்சா பரமேஸ்வர ஸ்ரீ சாஹி திஜின் தேவஜ** *என்னும் பிராமி வாசகம்.* **பின்புறம் :** *தலையைச் சுற்றி ஒளி வட்டமான பெண் தெய்வம் (குரசன் ஜர்ரா) ; சுற்றிலும் பஹலவி வாசகம்.*

176. ஊர், பெயர் இல்லாதது. *பில்லன்.* **முன்புறம் :** *சாசனீட்டுப் பாணியில் மன்னரின் மார்பளவு உருவம்.* **பின்புறம் :** *பணியாளருடன் சாசனீட்டு நெருப்புப் பீடம் அரைகுறையாகப் பொறிக்கப்பட்டுள்ளது.*

177. ஊர், பெயர் இல்லாதது : *பில்லன்.* **முன்புறம்** *: சாசனீட்டுப் பாணியில் மன்னரின் மார்பளவு உருவம்.* **பின்புறம் :** *பணியாளருடன் சாசனீட்டு நெருப்புப் பீடம் ; சரியாய்ப் பொறிக்கப்படாதது.*

178. ஊர், பெயர் இல்லாதது *: பில்லன் (கதைய்ய).* **முன்புறம்:** *பருவெட்டாகவும் மோசமாகவும் உள்ள மன்னரின் மார்பளவு உருவம்.* **பின்புறம்** *: புள்ளிகளாலும் கோடுகளாலும் தீட்டப்பட்ட சாசனீட்டுத் தகனப் பீடம்.*

179. ஸ்ரீ விக்ரா. *பில்லன் (கதைய்ய பாணியில்).* **முன்புறம் :** *மன்னரின் மார்பளவு உருவம் (செம்மையற்றது). அதற்கு முன்னுல்* **ஸ்ரீ** *என்றும், கீழே* **விக்ரா** *என்றும் நாகரி எழுத்துக்களில்.* **பின்புறம்** *: சாசனீட்டு தீப்பலி பீடமும் பணியாளரும் (ரொம்ப மோசமாகத் தீட்டப்பட்டுள்ளது.) நடுவில்* **சா** *என்ற எழுத்துத் தெரிகிறது.*

180. முதலாம் போஜன். *(பிரதிஹார வமிசம்). பில்லன்.* **முன்புறம் :** *வலது சாயலாக விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்ருன வராகம்.* **பின்புறம்** *:* **ஸ்ரீமதா வராகதி** *என்று முற்கால நாகரி எழுத்துக்களில் ; கீழே நெருப்புப் பலி பீடமிருந்த அடையாளங்கள்.*

காஷ்மீர் நாணயங்கள் :

181. **யசோவர்மன்** *(கார்கோட வமிசம்). எலக்ட்ரம்.* **முன்புறம்:** *குஷான மன்னர் நிற்பதுபோல் கரடு முரடாக உள்ளது. இடது கைக்குக் கீழ் கிடாரர் என்றுள்ளது.* **பின்புறம் :** *அமர்ந்துள்ள பெண் தெய்வம், காட்டுத்தனமாகத் தீட்டப் பட்டுள்ளது.* **ஸ்ரீ யசோவர்மா** *என்ற வாசகம்.*

182. **நந்தி குப்தர்** *(உத்பால வமிசம்). செம்பு.* **முன்புறம் ;** *வலது சாயலில் நிற்கும் மன்னர் ;* **ரத தேவா** *எனும் வாசகம்.* **பின்புறம் :** *பெண் தெய்வம்; இடது புறம்* **ந** *என்றும், வலது புறம்* **ந்தி கு** *என்றும் உள்ளது.*

காளை-குதிரை வீரன் சின்னமுள்ள நாணயங்கள் :

183. **ஸ்பலபதி தேவர்** *(ஓஹிந்த்). வெள்ளி.* **முன்புறம் :** *வலது கையில் ஈட்டியுடன் குதிரைச் சவாரி செய்யும் மன்னர்.* **பின்புறம் :** *வலது சாயலாகப் படுத்திருக்கும் காளை ;* **ஸ்ரீ ஸ்பலபதிதேவ** *என்ற வாசகம்.*

184. **சமந்த தேவர்** *(ஓஹிந்த்). வெள்ளி.* **முன்புறம் :** *183-ல் உள்ள குதிரை வீரர்.* **பின்புறம் ;** *183-ல் உள்ள காளை ; ஆனால்* **ஸ்ரீ சமந்த தேவ** *என்ற வாசகம்.*

185. **அசதபாலர்** *அல்லது* **அம்ரிதபாலர்**. *வெள்ளி.* **முன்புறம் :** *183-ல் உள்ள குதிரை வீரர் ; ஆனால் சீர்கெட்டுள்ளது.* **பின்புறம் :** *இடது சாயலில் காளை (கரடு முரடாக உள்ளது); மேலே* **அச** *(அல்லது* **அம்ரி)** **தபாலர்** *என்று பழங்கால நாகரி எழுத்துக்களில்.*

படம் 18

இடைக்காலப் பிற்பகுதியின் தங்க நாணயங்கள் :

186. **காங்கேய தேவர்** *(காலசூரி வமிசம்). தங்கம்.* **முன்புறம் :** *கால்மேல் கால் போட்டுள்ள பெண் தெய்வம்.* **பின்புறம் :** *பெரிய நாகரி எழுத்துக்களில் (1)* **ஸ்ரீமத்-கா** *(2)* **ங்கேயதே** *(3)* **வர்** *என்று மூன்று வரிகளில் வாசகம்.*

187. **கோவிந்த சந்திர தேவர்.** *வெள்ளி.* **முன்புறம் :** *186-ல் உள்ளதுதான் ; ஆனால் செம்மையாகத் தீட்டப்படவில்லை.*

பின்புறம் : *பெரிய நாகரி எழுத்துக்களில் (1)* **ஸ்ரீமத்-கோ** *(2)* **விந்தசந்திர** *(3)* **தேவர்** *என்று மூன்று வரி* **வாசகம்.**

188. **ஜஜ்ஜல்ல தேவர்** *(ரத்னபுரி காலசூரி வமிசம்).* **தங்கம். முன்புறம்** *: யானையும் சிங்கமும் சண்டை போடுவது.* **பின்புறம் :** *பெரிய நாகரி எழுத்துக்களில் (1)* **ஸ்ரீமஜ்ஜ** *(2)* **ஜல்ல தேவர்** *என்று இரு வரி வாசகம்.*

பிற்காலத் தென்னிந்திய நாணயங்கள் :

189. **கோவா கடம்பர்கள் :** *தங்கம்.* **முன்புறம் :** *மலர் உள்ள நான்கு பெரிய சின்னங்களும், ஒன்றுமில்லாத இரண்டு சிறிய முத்திரைகளும்.* **பின்புறம் :** *முகப்பு முழுவதும் பெரிதாக முத்திரையிடப்பட்ட தாமரை மலர்.*

190. **கீழைச் சாளுக்கியர். முதலாம் ராஜ ராஜன்.** *தங்கம்.* **முன்புறம் :** *நடுவில் வலது சாயலாக ஒரு வராகம், அதையடுத்து வரிசையாகக் குத்து விளக்கு. மேலே ஓர் அங்குசம், சக்கரம், இரண்டு வெண்சாமரங்கள். சுற்றிலும் தனித்தனி எழுத்துப் பொறிகளால் பொறிக்கப்பட்ட* **ஸ்ரீ ராஜ ராஜ ச** *என்று கன்னட வாசகமும் எண்ணும்.*

191. **மேலைச் சாளுக்கியர்** *(ஜெகதேக மல்லா).* **தங்கம். முன்புறம் :** *நடுவில் இந்துக் கோயில்; அதன் அடிப் பாகத்தில்* **ஜெகதேக மல்ல** *என்ற பொறிப்பு. ஓரத்தில்* **ஸ்ரீ** *என்று மூன்று முத்திரைகள்,* **ஜெகதேக மல்லா** *என்று நான்கு முத்திரைகள்* **பின்புறம் :** *ஒன்றுமில்லை.*

192. **முதல் 196. ஊர். பெயர் தெரியாதவை.** *தங்கம்.* **முன்புறம் :** *சிங்கமுள்ள ஐந்து சின்னங்கள், வேறு நான்கு சின்னங்கள். இவற்றை யார் எங்கு வெளியிட்டதெனத் தெரியவில்லை.*

197. **ஊர், பெயர் தெரியாதது.** *தங்கம்.* **முன்புறம் :** *நடுவில் அனுமாரின் சின்னம்; சூரியச் சின்னம் நான்கும்* **ஸ்ரீ** *என்ற கன்னடச் சின்னம் நான்கும் ஒன்றையடுத்து மற்றொன்றாக உள்ளது.*

198. **இனம் தெரியாதது.** *தங்கம்.* **முன்புறம் :** *நடுவில் இடது சாயலாக ஒரு யானை அல்லது காட்டுப் பன்றி;* **ஸ்ரீ** *என்ற இரண்டு முத்திரைகள்; இரண்டு தாமரைச் சின்னங்கள்; வாசகங்கள் கொண்ட நான்கு சின்னங்கள்; ஆனால் வாசிக்க முடியாதது.*

199. இனம் தெரியாதது. *தங்கம்*. **முன்புறம் :** *நான்கு சின்னங்கள்;* **ஸ்ரீ** *என்று கன்னடத்தில் இரண்டு; கூம்பு வடிவக் கோபுரம் ஒன்று; புரியாத வாசகம் ஒன்று.*

படம் 19

200. ஊர், பெயர் தெரியாதது. *தங்கம்*. **முன்புறம் :** *நான்கு முத்திரைகள். இரண்டில் சின்னமேதுமில்லை.*

201. இனம் தெரியாதது. *தங்கம்*. **முன்புறம் :** *நான்கு முத்திரைகள்; அவற்றில் ஒன்று வாசகமுள்ளது.*

202. இனம் தெரியாதது. *தங்கம்*. **முன்புறம் :** *ஐந்து முத்திரைகள். நடுவிலுள்ளது ஒரு வேளை மனித உருவமாக இருக்கலாம்; இரண்டில்* **ஸ்ரீ** *என்று கன்னடத்தில் வாசகமுள்ள மற்றொன்று.*

203. தேவகிரி யாதவர். ராமச்சந்திரர். *தங்கம். ஐந்து முத்திரைகள் நடுவில் தாமரைப் பூ; கன்னடத்தில்* **ஸ்ரீ** *என்று இரண்டு; ஒன்றில் சங்கு; ஐந்தாவது* **ஸ்ரீ ராமா** *என்று நாகரி வாசகம்.*

204. பிந்திய சதாரா சாளுக்கியர், *தங்கம்* (**V** *வடிவம்*). *மூன்று சின்னங்கள். மேலே காட்டுப்பன்றி;* *இடது புறத்தில்* **த்ராஹூி** *என்றும், வலது புறத்தில்* **மச்சா** *என்றும் கன்னடத்தில் உள்ளது.*

205. கோவா கடம்பர்கள். *தங்கம்*. **முன்புறம் :** *இடது புறமாக நிற்கும் சிங்கம்.* **பின்புறம் :** *ஐந்து வரிகளில் நாகரி வாசகம்.* **ஸ்ரீ கோடீச சரண லப்த வர வீர** *என்று தொடங்கி மன்னரின் பெயரில் முடிகிறது; ஆனால் அப்பெயர் தெளிவாக இல்லை.*

206. ஹொய்சளர். விஷ்ணுவர்த்தனர். *தங்கம்*. **முன்புறம் :** *வலது சாயலில் சிங்கம்.* **பின்புறம் : ஸ்ரீ தாலகாட கொண்டா.**

207. கொங்கு நாடு. *தங்கம்*. **முன்புறம் :** *வலது சாயலில் ஒரு யானை.* **பின்புறம் :** *மலர் அலங்காரம்.*

208. சோழர். உத்தம சோழன். *வெள்ளி*. **முன்புறம் :** *மாடத்திற்கடியில் அமர்ந்துள்ள புலி; அதனருகில் சாமரை; அதற்கடுத்து இரண்டு மீன்கள்.* **பின்புறம் :** *நாகரியில்* **உத்தம சோழன்** *என்ற பெயர்.*

209. **சோழர். ராஜேந்திர சோழன்.** *வெள்ளி.* **முன்புறமும் பின்புறமும்** : *208-ல் முன்புறமுள்ள சின்னம்தான். அதற்குக் கீழே* **ஸ்ரீ ராஜேந்திரன்.**

210. **சோழர். முதலாம் ராஜாதிராஜன்.** *வெள்ளி.* **முன்புறம்:** *இடது சாயலில் சிங்கம்.* **பின்புறம்: ரா** *என்று நாகரி எழுத்து.*

211. **சோழர். ராஜ ராஜன்.** *செம்பு.* **முன்புறம் :** *சிறுகோடுகளால் பருவெட்டாகத் தீட்டப்பட்ட மன்னரின் உருவம்.* **பின்புறம் :** *கையில் சங்குடன் அமர்ந்துள்ள மன்னர். மேலிருந்து கீழாக இரண்டு வரிகளில்* **ராஜ ராஜன்** *என்று நாகரி வாசகம்.*

212. **பாண்டியர். தனஞ்சய பாண்டியன்.** *தங்கம்.* **முன்புறம் :** *நடுவில் இரண்டு மீன்கள் ; மேலே இரண்டு நட்சத்திரம்; கீழே ஒரு தேள் அல்லது நண்டு.* **பின்புறம் : ஸ்ரீ தனஞ்சய பாண்டிய** *என்று தெலுங்கில்.*

213. **பாண்டியர். தனஞ்சய பாண்டியன். தங்கம். முன்புறம் :** *ஒரு மாடத்தின் அடியில் இரண்டு மீன்கள் ; அருகில் இனம் தெரியாத சின்னம்.* **பின்புறம்: ஸ்ரீ தனஞ்சய பாண்டிய** *என்று நாகரியில்.*

214. **விஜயநகரம். சதாசிவன்.** *தங்கம்.* **முன்புறம் :** *அமர்ந்துள்ள ஹரர்-கௌரி.* **பின்புறம் : ஸ்ரீ சதாசிவ** *என்று நாகரி எழுத்துக்களில்.*

படம் 20

கஜினி மகமது நாணயம் :

215. **கஜினி மகமது.** *வெள்ளி.* **முன்புறம் :** *நடுவில் கலிமாவும்* **அமீனுதௌலா வ அமினுல்-மில்லத் பிஸ்மல்லா** *என்ற வாசகமும். சுற்றிலும்,* **அல்-திர்ஹம் ஜர்ப் மகமத்பூர் ஜர்ப் சங்** *என்றும் வருடமும்.* **பின்புறம்:** *நடுவில்* **அவ்யக்தமேக முகமத் அவதாரா ந்ருபதி மகமது** *என்று நாகரியில். சுற்றிலும்* **அவ்யக்தீயநாமே அயம் தர்க்கம் ஹத மஹ்மத்பூர் சம்வதி** *என்றும் பின்னர் வருடமும்.*

டில்லி முஸ்லிம் சுல்தான்கள் நாணயங்கள் :

216. **முகமது பின் சாம் (கோரி முகமது).** *தங்கம்.* **முன்புறம்:**

அமர்ந்துள்ள லட்சுமி (பருவெட்டாக உள்ளது). **பின்புறம் : ஸ்ரீ மகமது விணி சம்** *என்று நாகரியில்.*

217. மகமது பின் சாம் *தங்கம்.* **முன்புறம் :** *ஒரு வட்டத்தில் ஈட்டிவைத்துள்ள குதிரை வீரன். சுற்றிலும்,* **தஸாய உஷ்ர ரம்ஜான் சங் அஹ்திவசத்மாய** *என்று அரபியிலும்* **ஸ்ரீ மகமத் சாம்** *என்று நாகரியிலும்.* **பின்புறம் : அல்-சுல்தான் அல்-ஆஜம் முய்சூத்-துனியா வ அல்-தீன் அபூ அல்-முஜ:.பர் முகமது பின் சாம்** *என்று அரபி வாசகம்.*

218. முகமது பின் சாம். *பில்லன்.* **முன்புறம் :** *வலது சாயலில் குதிரை வீரன். குதிரையின் பின்பகுதியில்* **ஜலால** *என்று அரபியில்.* **பின்புறம் :** *இடது சாயலாகப் படுத்திருக்கும் காளை. மேலே* **ஸ்ரீ முகமது சாமி** *என்று நாகரியில்.*

219. முகமது பின் சாம். *பில்லன்.* **முன்புறம் :** *குதிரை வீரன் ஈட்டியைப் பாய்ச்சும் சின்னம் இடது சாயலில்.* **பின்புறம் : அல்-சுல்தான் அல்-ஆஜம் முகமது பின் சாம்** *என்று அரபி வாசகம்.*

220. சம்சுதீன் இல்துத்மிஷ்: *வெள்ளி.* **முன்புறம்** *: வட்டத்தில் ஈட்டியுடன் குதிரை வீரன். சுற்றிலும் கலிமா, வருடம்,* **பதாரிக் சங் சாத் அசார வ சத்மயா** *என்ற வாசகம்.* **பின்புறம் : அல்-சுல்தான் அல்-ஆஜம் சம்சுத்துனியா வ அல்-தீன் அபூ அல்-முஜ:.பர் இல்துத்மிஷ் அல்-குத்பீ நசீர் அமீர் அல்-மோமினீன்** *என்ற வாசகம் சதுரமாக ஒரு வட்டத்தில் உள்ளது.*

221. ருக்னுதீன் பிரோஸ் ஷா. *வெள்ளி.* **முன்புறம் :** *ஒரு வட்டத்திற்கு இரண்டு சதுரமாக கலிமாவும்,* **அல்-முல் தான்சீர் அமீர் அல்-மோமினின்** *என்ற வாசகமும் உள்ளது.* **பின்புறம் : அல்-சுல்தான் அல்-அஜம் ருக்னு துனியா வ அல்-தீன் அபூ அல்-முஜ:.பர் பிரோஸ் ஷா** *பின் சுல்தான் என்ற வாசகம். சதுரமாக ஒரு வட்டத்தில். தனியாக* **நசீர் அமீர் அல்-மோமினின்.**

222. ஜலாலுதீன் ரஸியா. *வெள்ளி.* **முன்புறம் :** *சதுரத்தில்* **:.பி அஹ்த் அல்-இமாம் அல்-முஸ்தான்சீர் அமீர் அல்-மோமினின்.** *சுற்றிலும்.* **ஜர்ப் ஹஎந்தா அல்-காஸ்பா :.பி ஷஹ்வார் சஹூஹ் காம்ச வ சபசேய்ன் வ சபாமயா.** **பின்புறம் :** *சதுரமாக* **அல்-சுல்தான்**

அல்-ஆஜம் சம்சுத்துனியா வ அல்-தீன் இல்துத்மிஷ் அல்-சுல்தான் நஸ்ரத் அமீர் அல்-மோமினின். *சுற்றிலும் முன்புற வாசகம்தான்.*

223. **முதலாம் நசுருத்தீன் முகமது.** *தங்கம்.* **முன்புறம் :** *ஒரு வட்டத்திற்குள்* **ஃபி அஹ்த் அல்-இமாம் அல்-முஸ்தாசீம் அமீர் அல்-மோமினின்.** *சுற்றிலும்,* **ஜர்ப் ஹாந்தா அல்-சிக்கா ப-ஹஜரத் டெல்ஹி ஃபி சன்ஹ தலத் கம்சேயன் வ சபமாய. பின்புறம் : அல்-சுல்தான் அல்-ஆஜம் நசீர் அல்-துனியா வ அல்-தீன் அபூ அல்-முஜஃபர் மஹ்மூத் அல்-சுல்தான்** *சுற்றிலும் முன்புற வாசகம்தான்.*

படம் 21

224. **கியாசுத்தீன் பால்பன்.** *தங்கம்.* **முன்புறம்:** *வட்டத்தில்* **அல்-சுல்தான் அல்-ஆஜம் கியாஸ் அல்-துனியா வ அல்-தீன் அபூ அல்-முஜஃபர் பால்பன் அல்-சுல்தான்.** *சுற்றிலும்,* **ஜர்ப் ஹாந்தா அல்-சிக்கா பா-ஹஜரத் டெல்ஹி ஃபி சங் அஹதி வ சபையின் வ சபமாய. பின்புறம் :** *வட்டத்தில்* **அல்-இமாம் அல்-முஸ்தாசீம் அமீர் அல்-மோமினின்.** *சுற்றிலும் முன்புறமுள்ள வாசகமே.*

225. **ஜலாலுதீன் ஃபிரூஸ் கில்ஜி.** *தங்கம்.* **முன்புறம் :** *ஒரு வட்டத்தில்* **அல்-இமாம் அல்-முஸ்தாசீம் அமீர்த அல்-மோமினின்.** *சுற்றிலும் 224-ல் உள்ள வாசகம் தான் ; வருடமும்* **சங் அஹிடி வ டாசியாய்ன் வ சத்மயாஹ்** *என்பது மட்டும் வேறு.* **பின்புறம் : அல்-சுல்தான் அல்-ஆஜம் ஜலாலுதுனியா வ அல்-தீன் அபூ அல்-முஜஃபர் பிரோஸ் ஷா அல்-சுல்தான்.**

226. **குத்புதீன் முபாரக் கில்ஜி.** *தங்கம்.* **முன்புறம் : அல்-இமாம் அல்-ஆஜம் கலிஃபா ராப் அல்-அமீன் குத்ப் அல்-துனியா வ அல்-தீன் அபூ அல்-முஜஃபர் முபாரக் ஷா. பின்புறம் :** *சதுரமாக* **அல்-சுல்தான் இப்ன் அல்-சுல்தான் அல்-வாசிக் ப-அல்லா அமீர் அல்-மோமினீன். ஜர்பத் ஹாந்தா அல்-சிக்கா ப-ஹஜரத் தாருல்-கிலாபத் ஃபி சன்ஹ சமான் உசர் வ சபாமாயே.**

227. கியாசுதீன் துக்ளக். *வெள்ளி.* **முன்புறம் :** *இரண்டு சதுரங்களில்* **அல்-சுல்தான் அல்-காஜி கியாசுத்துனியா வ அல்-தீன் அபூ அல்-முஜ:ப்ர். பின்புறம் :** *ஒரு வட்டத்தில்* **துக்ளக் ஷா அல்-சுல்தான் நசீர் அமீர் அல்-மோமினீன் ;** *சுற்றிலும்* **ஜர்ப் ஹாந்தா அல்-சிக்கா ப-ஹஜரத் டெல்ஹி :பி சன்ஹ அஸ்னி வ அஸ்ராய்ன் வ சப்மாயே.**

228. கியாசுதின் துக்ளக். *பில்லன்.* **முன்புறம் : அல்-சுல்தான் அல்-காஜி கியாஸ் அல்-துனியா வ அல்-தின். பின்புறம் :** *வட்டத்தில்* **துக்ளக் ஷா ;** *சுற்றிலும்* **ஸ்ரீ சுல்தான் காயசுதி** *என்று நாகரியில்.*

229. முகமது பின் துக்ளக் : *பில்லன்.* **முன்புறம் :** *ஆறு வட்டக்கோடுகளுக்குள்* **ஜர்ப் :பி ஜமான் அல்-அபீத் அல்-ரஜி ரஹ்மத் அல்லா முகம்மத் பின். பின்புறம் : அல்-சுல்தான் அல்-சையத் அல்-சாஹித் துக்ளக் ஷா சன்ஹ சமான் வ உஸ்ரேய்ன் வ சபாமாயே.**

230. முகமது பின் துக்ளக். *வெள்ளி.* **முன்புறம் :** *இரட்டை வட்டத்தில்* **அ சஹீத் இன் லா அல்லா அல்-அல்லா வ அ சஹாத் இன் முகம்மதா அப்தா வ ரசூலா. பின்புறம் :** *வட்டத்தில்* **அல் வாசிக் பெ-தாயீத் அல்-ரஹ்மான் முகம்மத் ஷா அல்-சுல்தான்.** *சுற்றிலும்,* **ஜர்ப் ஹாந்தா அல்-திஞர் ப-ஹஜரத் டெல்ஹி சஞஹ் சத் வ அஸ்ரேய்ன் வ சபாமாயே.**

231. முகமது பின் துக்ளக். *தங்கம்.* **முன்புறம் : :பி ஜமான் அல்-இமாம் அல்-முஸ்தாக்:பி ப-அல்லா அமீர் அல்-மோமினீன் அபூ ரபிய்யா சுலைமான் கல்த் அல்லா கிலா:பத். பின்புறம் : ஜர்ப் ஹாந்தா அல்—திஞர் அல்-கலி:பாதி :பி அல்-துல்தபாத் சாஹ்வார் சன்ஹ கம்சா வ அர்பேய்ன் வ சபமாயே.**

232. முகமது பின் துக்ளக். *வலுவந்தமாகப் புகுத்தப்பட்டது (செம்பு).* **முன்புறம் :** *வட்டத்தில்* **மான் அதயா அல்—சுல்தான் :பகதா அதயா அல்ரஹ்மான்.** *சுற்றிலும்,* **இக்லிம் துக்ளக்பூர் அர்:ப் திர்ஹத் சால் பார் ஹ:ப்சாத் சி ஏக். பின்புறம் : முஹர் ஷாத் தவ்கா யீயாஜ் தர் யோஜ்கார் பௌதக் உனிமேத்வார் முகம்மத் துக்ளக்.**

படம் 22

233. பிரோஸ் ஷா துக்ளக். *தங்கம்*. **முன்புறம் : பிரோஸ் ஷா சுல்தானி. பின்புறம் : அல்-மோமினின் தலீப் அமீர் 786**.

234. பிரோஸ் ஷா துக்ளக். *தங்கம்*. **முன்புறம் :** *வட்டத்தில்,* **ஃபி ஜமான் அல்-இமாம் அமீர் அல்-மோமினின் அபி அப்துல்லா கல்தத் கிலாஃபத்**. *சுற்றிலும்,* *மேற்குறிப் பிட்ட நாணயங்களில் விளக்கியதைப் போல் வருடமும் நாணயச்சாலையின் பெயரும்*. **பின்புறம் : அல்-சுல்தானி சயீஃப் அமீர் அல்-மோமினின் அபூ அல்-முஜஃபர் பிரோஸ் ஷா அல்-சுல்தானி கல்தத் மம்லுகாத்.**

235. பஹ்லோல் லோடி. *பில்லன்*. **முன்புறம் : ஃபி ஜமான் அல்-மோமினின் அமீர் கல்தத் கிலாஃபத் 858. பின்புறம் : அல்-முத்வாக்கல் அலி அல்-ரஹ்மான் பஹ்லோல் ஷா சுல்தான் ப·ஹஜரத் டெல்ஹி.**

236. ஷெர் ஷா. *வெள்ளி*. **முன்புறம்** *: வட்டத்தில் கலிமா ; சுற்றிலும்* **அபாபகீர் உமர் உஸ்மான் அலி அல்-சுல்தான் அல்-அதில். பின்புறம்:** *வட்டத்தில்* **ஷெர் ஷா அல்-சுல்தான் கலத் அல்லா முல்கா வ சல்தாஞ 949.** *சுற்றிலும்,* **ஃபரீத் அல்-துனியா வ அல்-தீன் அபூ அல்-முஜஃபர் ஜர்ப் ஜஹான்பஞ.**

237. ஷெர் ஷா *வெள்ளி*. **முன்புறம் :** *சதுரத்தில் கலிமா; சுற்றிலும்,* **அபா பகீர் அல்-சித்திக் ; உமர் அல்-ஃபரூக்; உஸ்மான் அல்-அஃபான் அல்-அலி அல்-முர்தாஜி. பின்புறம் :** *சதுரத்தில்,* **ஷெர் ஷா சுல்தான் 947 கல்த் அல்லா முல்கா ;** *கீழே* **ஸ்ரீ ஷெர்ஷாஹி** *என்று நாகரியில்; சுற்றிலும் 236-ல் உள்ளதைப்போல்.*

238. ஷெர் ஷா. *செம்பு*. **முன்புறம்** *:* **ஃபி அஹாத் அல்-அமீர் அல்-ஹக்கிமி அல்-தீன் அல்-துனியா 950. பின்புறம் : அபூ அல்-முஜபர் ஷெர் ஷா சுல்தான் கல்த் அல்லா முல்கா.**

239. இஸ்லாம் ஷா. *வெள்ளி*. **முன்புறம் :** *சதுரத்தில் கலிமாவும், கீழே இடது மூலையில்* **953** *வருடமும் ; சுற்றிலும்* **அபூ பக்ர் அல்-சித்திக், உமர் அல்-ஃபருக், உஸ்மான் அல்-அஃபான், அலி அல்-முர்தாஜி. பின்புறம் :** *சதுரத்தில்* **சுல்தான் இஸ்லாம் ஷா ஷெர் ஷா கல்த் அல்லா முல்கா ;**

அதற்குக் கீழே **ஸ்ரீ சலீம் சாஹி** *என்று நாகரியில். சுற்றிலும்* **அபூ அல்-முஜ.:.பர் ஜலால் அல்-துனியா வ அல்-தீன் ஜர்ப் சூனர்.**

240. **இஸ்லாம் ஷா.** *வெள்ளி.* **முன்புறம் :** *வட்டத்தில் கலிமா ; சுற்றிலும்* **அப பகீர் சித்தீக் ; உமர் கிதாப், உஸ்மான் அ.:.பான், அலி முர்தாஜி அல்-சுல்தான் அல்-அதில். பின்புறம் :** *வட்டத்தில்* **இஸ்லாம் ஷா இப்ன் ஷெர் சுல்தான் கல்த் அல்லா முல்கா வ சல்தானு வ அலி உம்ரா வ ஷானு.** *சுற்றிலும்,* **ஜலால் அல்-துனியா வ அல்-தீன் அபூ அல்-முஜ.:.பர்** *என்றும், பின்னர் நாகரியில்* **ஸ்ரீ இஸ்லாம் ஷா,** *அதற்கடுத்து* **ஜர்ப் சத்கோன் 952.**

படம் 23

வங்காள சுல்தான்களின் நாணயங்கள் :

241. **சை.:.புதீன் ஹம்ஜா ஷா.** *வெள்ளி.* **முன்புறம் :** *பல்வேறு பகுதிகளில்* **சை.:.ப் அல்-துனியா வ அல்-தீன் அபூ அல்-முஜஹித் ஹம்ஜா ஷா பின் ஆஜம் ஷா பின் சிகந்தர் ஷா பின் இல்யாஸ் ஷா பின் சுல்தான். பின்புறம் : நசீர் அமீர் அல்-மோமினின் கௌஸ் இஸ்லாம் வ அல்-முசல்மீன் கல்த் அல்லா.** *சுற்றிலும்* **ஜர்ப் ஹ¯ந்தா அல்-சிக்கா .:.பி ஹஜரத் பி.:.ரோஸாபாத் சன்ஹ் 814.**

242. **சிஹாபுதீன் பையஜீத் ஷா.** *வெள்ளி.* **முன்புறம் :** *பல்வேறு பகுதிகளில்* **அல்-முய்த் ப-தயீத் அல்-ரஹ்மான் சிஹாப் அல்-துனியா வ அல்-தீன் அபூ முஜ.:.பர் பைய்ஜீத் ஷா அல்-சுல்தான். பின்புறம் :** *வட்டத்தில்* **நசீர் அமீர் அல்-மோமினின் கௌஸ் இஸ்லாம் அல்-முஸல்மீன்.** *சுற்றிலும், நான்கு கலிபாக்களின் பெயர்களோடு* **ஜர்ப் ஃபிரோஸாபாத் சனு 817.**

243. **ஜலாலுதின் முகம்மத் ஷா.** *வெள்ளி.* **முன்புறம் :** *துக்ராவில்* **ஜலால் அல்-துனியா வ அல்-தீன் அபூ அல்-முஜ.:.பர் முகம்மத் ஷா அல்-சுல்தான். பின்புறம் :** *வட்டத்தில்* **நசீர் அல்-இஸ்லாம் வ அல்-முஸல்மீன் கலத் முல்கா.** *சுற்றிலும்,* **ஜர்ப் ஹ¯ந்தா அல்-சிக்கா .:.பி சதகோன் சன்ஹ் 834.**

244. **அலாவுதீன் பிரோஸ் ஷா.** *வெள்ளி.* **முன்புறம் : அல்-சுல்தான் பின் அல்-சுல்தான் அலவால்-துனியா வ அல்-தீன் அபூ அல்-முஜஃபர் பிரோஷ் ஷா பின் அல்-சுல்தான். பின்புறம் : நசரத் ஷா பின் ஹுஸேன் ஷா அல்-சுல்தான் அல்-ஹுசைனி கலத் அல்லா முல்கா முகம்மதாபாத் 938.**

245. **கியாசுதீன் மகமூத் ஷா.** *வெள்ளி.* **முன்புறம் :** *நடுவில் சிறியதொரு வட்டத்தில்* **பத்ர் ஷாஹி.** *முகப்பு முழுவதிலும்* **அல்-சுல்தான் பின் அல்-சுல்தான் கியாஸ் அல்-துனியா வ அல்-தீன் அபூ அல்-முஜஃபர் மகமூத் ஷா. பின்புறம்:** *நடுவில் சிறியதொரு வட்டத்தில்* **பத்ர் ஷாஹி.** *முகப்பு முழுவதிலும்* **அல்-சுல்தான் பின் ஷா சுல்தான் ஹுஸேன் கலத் அல்லா முல்கா வ சல்தானத் ஹுஸைனுபாத்.**

246. **தௌத் ஷா கர்ரனி.** *வெள்ளி.* **முன்புறம் :** *கலிமா.* **பின்புறம் :** *சதுரத்தில்* **தௌத் ஷா சுலேமான் ஷா கர்ரனி கலத் அல்லா முல்கா வ சல்தானத் ;** *அதற்குக்கீழே* **ஸ்ரீ தௌத் சாஹி** *என்று நாகரியில் ; சுற்றிலும்* **ஜர்ப் தண்டா** *என்றும், 984 என்று வருடமும்.*

குஜராத் சுல்தான்களின் நாணயங்கள் :

247. **முதலாம் மகமூத் ஷா.** *வெள்ளி.* **முன்புறம் : அல்-சுல்தான் அல்-ஆஜம் அபூ அல்-ஃபத் நசீர் அல்-துனியா வ அல்-தீன். பின்புறம் :** *சதுரத்தில்* **அல்-சுல்தான் மகமூத் ஷா ;** *சுற்றிலும்* **ஷாகர் முகரம் முகம்மதாபாத்** *894.*

248. **இரண்டாம் முஜஃபர் ஷா.** *தங்கம்.* **முன்புறம் : அல்-முவைத் ப-தாயீத் அல்-ரஹ்மான் சம்சா அல்-துனியா வ அல்தீன் அபூ அல்-நாசர். பின்புறம் : அல்-சுல்தான் முஜஃபர் ஷா பின் மஹ்மூத் ஷா** *924.*

249. **மூன்றும் முஜஃபர் ஷா.** *வெள்ளி.* **முன்புறம் :** *248-ல் உள்ளதைப்போல்.* **பின்புறம் :** *சதுரத்தில்* **அல்-சுல்தான் முஜஃபர் ஷா கலத் அல்லா முல்கா.**

படம் 24

மாளவ சுல்தான்களின் நாணயங்கள் :

250. ஹோஷாங் ஷா. *வெள்ளி.* முன்புறம் : அல்-சுல்தான் அல்-ஆஜம் ஹுசைன் அல்-துனியா வ அல்-தீன். பின்புறம் : அபூ அல்-முஜஹித் ஹோஷாங் ஷா அல்-சுல்தான்.

251. மகமூது ஷா கில்ஜி. *தங்கம்.* முன்புறம் : அல் சுல்தான் அல்-ஆஜம் அலா அல்-துனியா வ அல்-தீன் கில்ஜி அபூ அல்-முஜ.:.பர் மஹ்மூத் ஷா கலத் அல்லா கிலா.:.பதா. பின்புறம் : *வட்டத்தில்* சிகந்தர் அல்-சானி யாமீன் அல்-கிலா.:.பத் நசீர் அமீர் அல்-மோமினின். *சுற்றிலும்* ஜர்ப் ஹுந்தா அல்-சிக்கா ப-ஹஜரத் சதியாபாத் சன்ஹ சபாயீன் வ சமனமயாத்.

252. கியாஸ் ஷா கில்ஜி. *தங்கம்.* முன்புறம் : அல்-வாசிக் ப-அல்-முல்க் அல்-முல்தாஜி அபுல் .:.பாத் கியாஸ் ஷா. பின்புறம் : பின் மஹ்மூத் ஷா அல்-சுல்தான் அல்-கில்ஜி கலத் முல்கா *880.*

253. நசீர் ஷா கில்ஜி. *தங்கம்.* முன்புறம் : அல்-வாசிக் அப்-அல்-சமாத் லம் இஸ்லி அபூ அல்-முஜ.:.பர் நசீர் ஷா. பின்புறம் : இப்ன் கியாஸ் ஷா அல்-கில்ஜி அல்-சுல்தான் கலத் முல்கா *908.*

ஜான்பூர் சுல்தான்களின் நாணயங்கள் :

254. இப்ராஹிம் ஷா. *பில்லன்.* முன்புறம் : அல்-கலி.:.பா அமீர் அல்-மோனின் கல்தாத் கிலா.:.பத்தா *என்றும் வருடமும்.* பின்புறம் : இப்ராஹிம் ஷா சுல்தானி கல்தாத் மமல்காத்.

255. மகமது ஷா. *பில்லன்.* முன்புறம் : *254-ல் உள்ளதைப் போல்.* பின்புறம் : மஹ்மூத் ஷா இப்ராஹிம் ஷா சுல்தானி கல்தாத் மமல்காத்.

256. ஹுசேன் ஷா. *தங்கம்.* முன்புறம் : *துக்ராவில்* அல்-முயீத் ப-தயீத் அல்லா அபூ-அல்-முஜ.:.பர் ஹுசேன் ஷா மஹ்மூத் ஷா இப்ராஹிம் ஷா.

காஷ்மீர் சுல்தான் நாணயங்கள் :

257. **முகம்மது அலி.** *வெள்ளி.* **முன்புறம் : பாதுஷா முகம்மத் அலி ஜஹீருதின்** *என்றும் வருடமும்.* **பின்புறம் :** *சதுரத்தில் 987* **ஜர்ப் காஷ்மீர் ;** *சுற்றிலும் அரேபியச் சொற்களில் வருடம்.*

பாமினி வமிச நாணயங்கள் :

258. **இரண்டாம் முகம்மது ஷா.** *வெள்ளி.* **முன்புறம் : அல்-நசீர் அல்-தீன் அல்-தியான் அல்-அமி அல்-ஷா அல்-ஈமான். பின்புறம் : அல்-வாசிக் ப-தாயீத் அல்-ரஹ்மான் அபூ அல்-முஜ:பர் முகம்மத் ஷா அல்-சுல்தான்.** *வருடம் ௯௰௬.*

259. **தாஜுத்தீன் :பிரோஸ் ஷா.** *வெள்ளி.* **முன்புறம் : சுல்தான் அல்-அஹத் வ அல்-ஜமான் அல்-வாசிக் ப-தயீத் அல்-ரஹ்மான் அபூ அல்-முஜ:பர். பின்புறம் :** *சதுரத்தில்,* **தாஜ் அல்-துனியா வ அல்-தீன் :பிரோஸ் ஷா அல்-சுல்தான்.** *சுற்றிலும்* **ஜர்ப் ப-ஹஜரத் அஹ்சனுபாத்** *803-*

260. **இரண்டாம் அலாவுதீன் அஹமத் ஷா.** *வெள்ளி.* **முன்புறம் : அல்-சுல்தான் அல்-ஆலீம் அல்-கரீம் அல்-ரவூப் அலி இபாத் அல்லா அல்-கனி அல்-முஹிமான். பின்புறம் :** *சதுரத்தில்* **அபூ அல்-முஜ:பர் அல்லா அல்-துனியா வ அல்-தீன் அஹமத் ஷா பின் அஹமத் ஷா அல்-வாலி அ-ல்பாமினி.** *சுற்றிலும்,* **ஜர்ப் ப-ஹஜரத் முகம்மதாபாத்** *என்றும் வருடமும்.*

261 **அலாவுதீன் ஹுமாயூன் ஷா.** *வெள்ளி.* **முன்புறம் : அல்-முதவக்கல் அலி அல்லா அல்-காஜி அல்-கனி அபூ அல்-முகஜி. பின்புறம் : அலா அல்-துனியா வ அல்-தீன் ஹுமாயூன் ஷா பின் அஹ்மத் ஷா அல்-வலீ அல்-பாமினி** *சுற்றிலும் 260-ல் உள்ளதுபோல்.*

படம் 25

262. **இரண்டாம் சம்சுதீன் முகம்மது ஷா.** *தங்கம்.* **முன்புறம் : ப-அல்லா அல்-முதாசீம் அபூ அல்-முஜ:பர் ஷாம்ஸ்**

அல்-துனியா வ அல்-தீன். பின்புறம்: *சதுரத்தில்* **முகம்மது ஷா பின் ஹுமாயூன் ஷா அல்-சுல்தான் கலத் முல்கா.** *சுற்றிலும் 260-ல் உள்ளதைப்போல்.*

263. கலீமுல்லா ஷா. *செம்பு.* **முன்புறம்: அல்-முவாயித் ப-நஸ்ர் அல்லா. பின்புறம்: கரீமுல்லா அல்-சுல்தான் அல்-பாமனி.**

அடீல் சாஹி வமிச நாணயங்கள்:

264. முதலாம் அலி அடீல் ஷா. *செம்பு.* **முன்புறம்: அலி இப்ன் அபீ தலீப். பின்புறம்: ஆசாத் அல்லா அல்-காலீப்.**

265. முகம்மது அடீல் ஷா. *செம்பு.* **முன்புறம்:** *(ஈரடிச் செய்யுள் நடை).* **ஜஹான் ஜா இன் தோ முகம்மத் கிரா:ப்த் ஜீனத் வ ஜா. பின்புறம்: ஏக் முகம்மத் முரசால் துவம் முகம்மத் ஷா.**

266. இரண்டாம் அலி அடீல் ஷா. *வெள்ளி (லாரின்).* **முன்புறம்: சுல்தான் அலி அடீல் ஷா ஜர்ப் லாரி டங்கி சன்ஹ்** *1077.*

முகலாயப் பேரரசர்கள் நாணயங்கள்:

267. பாபர். *வெள்ளி (ஷாருகீ).* **முன்புறம்:** *வட்டத்தில் கலிமா;* *சுற்றிலும்* **அபா பகிர் அல்-சித்தீக். உமர் அல்-பரூக். உஸ்மான் அல்-அ:பன். அலி அல்-முர்தாஜி. பின்புறம்:** *நீண்ட சதுரத்தில்* **ஜகீருதீன் முகம்மது பாபர் பாதுஷா காஜி** *936. மேலே* **அல்-சுல்தான் அல்-ஆஜம் காகான் அல்-முகரம். கீழே கல்த் அல்லா முல்கா வ சல்தாஹு......லாகூர்.**

268. ஹுமாயூன். *வெள்ளி (ஷாருகீ).* **முன்புறம்:** *267-ல் உள்ளதைப்போல்.* **பின்புறம்:** *வேலைப்பாடு கொண்ட நீண்ட சதுரப் பகுதியில்* **முகம்மத் ஹுமாயூன் பாதுஷா காஜி சாயீத் அல்-சலாதீன்.** *சுற்றிலும்,* **அல்-சுல்தான் அல்-ஆஜம் அல்-ககான் அல்-முகரம் கலத் அல்லா தலா முல்கா சான்ஹ்** *942.*

269. *ஹுமாயூன். வெள்ளி* **(***ரூபாய்***). முன்புறம்:** *சதுரத்தில் கலீமா; சுற்றிலும் 267-ல் உள்ளதைப்போல்.* **பின்புறம் முகம்மத் ஹுமாயூன் பாதுஷா காஜி** *962. சுற்றிலும்......* **அல்-அடீல் அபூ அல்-முஜ:பர்.**

270. **அக்பர்.** *வெள்ளி.* **முன்புறம் :** *கலிமா ; சுற்றிலும் கலிஃபாக்களின் பெயர்கள்.* **பின்புறம் :** நடுவில் **ஜலாலுதீன் முகம்மது அக்பர் பாதுஷா காஜி ;** மேலே **கலத் அல்லா முல்கா ;** கீழே **ஜர்ப் லாகூர்.**

271. **அக்பர்.** *தங்கம்.* **முன்புறம் :** *சதுரத்தில் கலிமா ; சுற்றிலும் கலிஃபாக்களின் பெயர்கள். பின்புறம் : 270-ல் உள்ளதுதான் ;* **ஆனல்,** இடம் வேறு ; கீழே......**ஷாகாரப் பட்டினம்.**

272. **அக்பர்** *வெள்ளி (சதுரம்).* **முன்புறம் :** *ஓரத்திலுள்ள வாசகங்கள் ஒதுக்கப்பட்ட நடுப்பகுதியில் கலிமா ; ஓரத்தில் கலிபாக்களின் பெயர்கள்.* **பின்புறம் : கலத் அல்லா தலா முல்கா ஜலாலுதீன் முகம்மத் அக்பர் பாதுஷா காஜி ஜர்ப் உர்து ஜாபர் காரின் :** வருடம் **அலீப்** மேலே **அக்பர்.**

படம் 26

273. **அக்பர்.** *தங்கம்.* **முன்புறம்** : *ஓரத்திலுள்ள வாசகங்கள் ஒதுக்கப்பட்ட நடுப்பகுதியில் கலிமா; ஓரத்தில் கலிஃபாக்களின் பெயர்கள் ; கீழே மூலையில் 984 வருடம்.* **பின்புறம் : ஜலாலுதீன் முகம்மத் அக்பர் பாதுஷா காஜி ஜர்ப் முகம்மதாபாத் உர்ஃப் உதைய்ப்பூர்.**

274. **அக்பர்.** *தங்கம் (மிஹ்ரபி).* **முன்புறம் :** *கலிமாவும், கலிஃபாக்களின் பெயர்களும்,* *981 வருடமும்.* **பின்புறம் : கலத் முல்கா ஜலாலுதீன் முகம்மத் அக்பர் பாதுஷா காஜி ஜர்ப் பல்தாத் ஆக்ரா.**

275. **அக்பர்.** *வெள்ளி.* **முன்புறம் : அல்லா அக்பர் ஜல்லா ஜலலா. பின்புறம்: அப்ன் இலாஹி ஜர்ப் அஹமதாபாத்** *30.*

276. **அக்பர்.** *வெள்ளி.* **முன்புறம் :** *வேலைப்பாடுகொண்ட எட்டுக்கோணமுடைய பகுதியில் 275-ல்* **உள்ளதைப்போல் இலாஹி** வாசகம். **பின்புறம் :** *முன்புறமுள்ளதைப்போன்ற பகுதியில்* **அமர்தாத் இலாஹி** *50* **ஜர்ப் ஆக்ரா.**

277. **அக்பர்.** *தங்கம். (மிஹ்ரபி).* **முன்புறம் :** *275-ல்* **உள்ளதைப் இலாஹி** வாசகம். **பின்புறம்: அமர்தாத் இலாஹி** *49* **ஜர்ப் ஆக்ரா.**

278. **அக்பர்.** *வெள்ளி. (ஈரடிச் செய்யுள்).* **முன்புறம்: ஹமேஷா**

ஹம்சு ஜர் மிஹ்ர் வ மா ரயீஜ் பாத். பின்புறம் : பக்காரூப் வ சர்க் ஜஹான் சிக்கா அலஹாபாத்.

279. அக்பர். *தங்கம்.* **முன்புறம் :** *வேலைப்பாடு நிறைந்த தரையில் வலது சாயலாகப் பருந்து ஒன்று.* **பின்புறம் : அல்லா அக்பர் இஸ்ஃபந்தர்முஸ் இலாஹி** *49* **ஜர்ப் அசீர்.**

280. அக்பர். *தங்கம்.* **முன்புறம் :** *வேலைப்பாடு கொண்ட தரையில் வலது சாயலாக ஒரு வாத்து.* **பின்புறம் : அல்லா அக்பர் குர்தாத் இலாஹி 50 ஜர்ப் ஆக்ரா.**

281. அக்பர். *வெள்ளி.* **முன்புறம் :** *கையில் வில்லுடன் ராமரும் அவருக்குப் பின்னால் சீதையும் ; மேலே* **ராமர்-சீதை** *என்று சிறிய நாகரி எழுத்துக்களில்.* **பின்புறம் : அமர்தாத் இலாஹி** *50.*

282. அக்பர். *வெள்ளி. (குஜராத் அமைப்பில்).* **முன்புறம் :** *கலிமா.* **பின்புறம் : ஜலாலுதீன் முகம்மத் அக்பர் பாதுஷா காஜி.**

283. அக்பர். *செம்பு.* **முன்புறம் : ஜர்ப் ஃபலூஸ் நர்நூல். பின்புறம் : நஹ்சாத் சாஸ்ஹித் சிஹ்** *(அதாவது பாரசீகச் சொற்களில் 963 என்பது).*

284. ஜஹாங்கீர். *தங்கம். (சதுர வடிவம்).* **முன்புறம் : ஷா நூரு தீன் ஜஹாங்கீர் இப்ன் அக்பர் பாதுஷா.** *அக்பர் என்ற பெயருக்கு மேலே ஆட்சி வருடம் 3.* **பின்புறம் : ருய் ஜர் ர சாஹ்த் நுரானி பாரங் மெஹர் வ மா, ஜர்ப்லாகூர்,** *இதில் இரண்டாவது வரிக்கு வலது பக்கம் 1016 ஹிஜ்ரி ஆண்டு.*

படம் 27

285. ஜஹாங்கீர். *தங்கம்.* **முன்புறம் :** *ஜஹாங்கீரின் மார்பளவு உருவம். இடதுபுறத்தில்* **சாஹிப் ஜஹாங்கீர் ஷா அக்பர் ஷா :** *வலதுபுறம்* **சன்ஹ் 6 ஜலூஸ்.**

286. ஜஹாங்கீர். *தங்கம்.* **முன்புறம் :** *அரியணையில் அமர்ந்திருக்கும் ஜஹாங்கீர் இடது சாயலாக ; வலது கையில் சின்னம் ; இருபக்கமும் ஈரடி வாசகம் :* **காஜா பார் சிக்கா ஜர் கார்ட் தாசாவீர் ; ஷாஹிப் ஷா ஜஹாங்கீர். பின்புறம் :** *நடுவில் சூரியன் ; சுற்றிலும் ஈரடிச் செய்யுள்*

நடை வாசகம். **ஹரூஃப் ஜஹாங்கீர் வ அல்லா அக்பர்; ஐ ரோஜ் அஜ்ல் தர் அதாத் சுத் பராபர்.**

287. **ஜஹாங்கீர்.** *தங்கம்.* **முன்புறம்:** *இடது சாயலாக ஆடு (மேஷ இராசிச் சின்னம்); கீழே* **சன் ஜலூஸ்** *13.* **பின்புறம்:** *(ஈரடிச் செய்யுள்நடை வாசகம்)* **யஃப்த் தர் ஆக்ரா ருயி ஜர் ஜெவார்; அஜ் ஜஹாங்கீர் ஷா ஷா அக்பர்.** *இடது புறமுள்ள மூன்றாவது வரிசையில் ஹிஜ்ரி ஆண்டு 1028.*

288. **ஷாஜஹான்.** *தங்கம்.* **முன்புறம்:** *சதுரத்தில் கலிமா; சுற்றிலும்* **ப-சித்தீக் அபீ பக்ர் வ அத்ல் இமாம் ப-ஜர்ம் உஸ்மான் வ இல்ம் அலி. பின்புறம்:** *சதுரத்தில்* **பாதுஷா காஜி ஷாஜஹான்;** *சுற்றிலும்,* **சிஹாபுதீன் முகம்மத் சாஹிப் கிரான் சானி;** *அதையடுத்து நாணயச்சாலையின் பெயர்.*

289. **ஷாஜஹான்.** *தங்கம்.* **முன்புறம்:** *கலிமாவும் அதையடுத்து* **ஜர்ப் அஹமதாபாத் இலாஹி சன்** *3* **குர்தாத் மா. பின்புறம்: சிஹாபுதீன் முகம்மத் ஷாஜஹான் பாதுஷா காஜி சாஹிப் கிரான் சானி.** *இரண்டாவது வரியில் ஹிஜ்ரி ஆண்டு 1038.*

290. **ஷாஜஹான்.** *தங்கம்.* **முன்புறம்:** *வட்டத்தில் கலிமா; சுற்றிலும் 288-ல் உள்ளதைப் போல்.* **பின்புறம்:** *வட்டத்தில்,* **பாதுஷா காஜி ஷாஜஹான்;** *சுற்றிலும் ஈரடிச் செய்யுள்நடை வாசகம்:* **சிக்கா ஷாஜஹானுபாத் ரய்ஜ் தர் ஜஹான்; ஜவிதன் பாத் பணம் சானி சாஹிப் கிரான்.**

291. **ஔரங்கசீப்.** *வெள்ளி.* **முன்புறம்** *(ஈரடிச் செய்யுள் நடையில்):* **சிக்கா ஜாத் தர் ஜஹான் சு மெஹர் முனீர்; ஷா ஔரங்கசீப் ஆலம்கீர். பின்புறம்: ஜர்ப் தாருல்-அமன் முல்தான் மைம்னுத் மானுஸ் ஜலூஸ் சன்** *3.*

292. **முதலாம் ஷா ஆலம் பகதூர்.** *தங்கம்.* **முன்புறம்: சிக்கா முபாரக் ஷா ஆலம் பஹதூர் பாதுஷா காஜி** *1132.* **பின்புறம்: ஜலூஸ் மைம்னுத் மானுஸ் சன்** *5* **ஜர்ப் முஸ்திகிருல்-முல்க் அக்பராபாத்.**

293. **முகம்மத் ஷா.** *வெள்ளி.* **முன்புறம்: சிக்கா முபாரக் பாதுஷா காஜி முகம்மத் ஷா** *1150.* **பின்புறம்: மானூஸ் மைம்னுத் சன் ஜலூஸ்** *20* **ஜர்ப் இதவா.**

294. **இரண்டாம் ஷா ஆலம்.** *தங்கம்.* **முன்புறம்:** *சுற்றிலும் ரோசாப்பூக்கள், மூவிதழ் புல் மலர்கள், முட்செடிப் பூக்கள்*

ஆகியவற்றால் செய்யப்பட்ட மலர் வளையம்; (அதற்குள்ளே ஈரடிச் செய்யுள்): **சிக்கா ஐத் சாஹிப் கிரானி ஐ தயீத் அல்லா; ஹமீ தின் முகம்மத் ஷா ஆலம் பாதுஷா. பின்புறம்:** *மேற்குறிப்பிட்ட மலர் வளையத்தின் நடுவில்* **ஐரப் தாருல்-கிலா:.பத் ஷாஜஹானாபாத் ஜலூஸ் மைம்னத் மானுஸ் சன்** *47*.

படம் 28

அசாம் நாணயங்கள்:

295. பிரமத சிம்ஹா *(கி.பி. 1744–1754) வெள்ளி. அஹோம்.* **முன்புறம்:** *அஹோம் எழுத்துக்களில்* **சாயோ சுனென் பா பின் குன் லக்னி கத்-கெ-யு** *[கத்கெயு வருடம் (கி.பி. 1744) சுனென்பா என்ற கடவுள் (பிரமத சிம்ஹா) மன்னரானார்.]* **பின்புறம்: கயோ பாய் ப லெண்டன் ஹெ-யு சு** *(லெண்டன், அதாவது இந்திரன் பெயரில் நான் செபிக்கின்றேன்). கீழே இடது சாயலாக ஒரு வேதாளம். (அஹோம் வாசகமுள்ள இவ்வகை நாணயங்கள் மன்னர்களின் மகுடமணியும் விழாவின்போதுதான் வெளியிடப்பட்டன.)*

296. சர்வானந்த சிம்ஹா *(கி.பி. 1793–1795) வெள்ளி. அஹோம்.* **முன்புறம்:** *அசாமிய மொழியில்:* **ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ண சரண கமல மகரந்த மதுகரஸ்ய. பின்புறம்: ஸ்ரீ ஸ்ரீ ஸ்வர்க்கதேவ ஸ்ரீ சர்வானந்த சிம்ஹ நிருபஸ்ய சகே** *1716. கீழே இடதுசாயலில் ஒரு வேதாளம்.*

297. லட்சுமி நாராயண *(கி.பி. 1587–1622). வெள்ளி. கோச்.* **முன்புறம்:** *அசாமிய மொழியில்:* **ஸ்ரீ ஸ்ரீ சிவ சரண கமல மதுகரஸ்ய. பின்புறம்: ஸ்ரீ ஸ்ரீமல்லட்சுமீ நாராயணஸ்ய சகே** *1509.*

298. யசோ நாராயண தேவ *(கி.பி. 1583). வெள்ளி. கச்சாரி.* **முன்புறம்:** *அசாமிய மொழியில்:* **ஹர கௌரீ சரண பராயண ஹோசெங் ஷா வன்சஜ. பின்புறம்: ஸ்ரீ ஸ்ரீ யசோ நாராயண தேவ பூபாலஸ்ய சகே** *1505.*

299. லட்சுமி நாராயண *(கி.பி. 1670–1697). வெள்ளி. ஜெயந்தி.* **முன்புறம்:** *அசாமிய மொழியில்:* **ஸ்ரீ ஸ்ரீ சிவ சரண கமல மதுகரஸ்ய. பின்புறம்: ஸ்ரீ ஸ்ரீ ஜெயந்திபுர புரேந்தரஸ்ய சகே** *1592.*

மராத்திய நாணயங்கள்:

300. **ஷா அலி கௌஹர்** *பெயரில். வெள்ளி.* **முன்புறம்: (சிக்கா முபாரக் பாதுஷா காஜி) ஷா அலி (கௌஹர்). பின்புறம்: (மானுஸ் மௌனத் சன்) ஜலூஸ் ஜர்ப் (முஹியாபாத் பூனா).** *அடைப்புக் குறியிலுள்ளவை அழிந்திருக்கின்றன. நாணயச்சாலையின் சின்னம் அங்குசம்.*

301. **இரண்டாம் ஷா ஆலமின்** *பெயரில். வெள்ளி.* **முன்புறம்: (சிக்கா முபாரக்) பாதுஷா (காஜி) ஷா ஆலம். பின்புறம்:** *300-ல் உள்ளதுதான். அடைப்புக் குறியிலுள்ளவை அழிந்துள்ளன. நாணயச்சாலையின் சின்னமாக மூக்குக்கண்ணாடி.*

சீக்கிய நாணயம்:

302. **வெள்ளி. முன்புறம்: குரு கோவிந்த் சிங்** *என்ற பெயருடன் வாசகம்: ஆனால், வாசகம் முழுமையாக இல்லை.* **பின்புறம்:** *முடிவு பெறாத வாசகம்:* **ஜர்ப் ஸ்ரீ அம்பிரத்சர் ஜலூஸ்-இ-தக்த் அகால சம்பத்** *1812.*

படம் 29

துரானிய நாணயங்கள்:

303. **நாதிர் ஷா.** *வெள்ளி.* **முன்புறம்:** *(ஈரடிச் செய்யுள்):* **சுல்தான் ஹாஸ்த் பர் சலாதீன் ஜஹான்; ஷா ஷஹான் நதிர் சாஹிப்-கிரான் பின்புறம்: கல்த் அல்லா முல்கா ஜர்ப் தாருல்-கிலா:.பத் ஷாஜஹானாபாத்** *1151.*

304. **நாதிர் ஷா.** *வெள்ளி.* **முன்புறம்: அல்-சுல்தான் நாதிர். பின்புறம்: கல்த் அல்லா முல்கா ஜர்ப் தாருல்-சுல்தானத் லாகூர்** *1152.*

305. **நாதிர் ஷா.** *வெள்ளி.* **முன்புறம்:** *(ஈரடிச் செய்யுள்):* **தாதா ஜெப் தஜாப் ரு பர் மிஹ்ர் வ மா; அஜ் சிக்கா நாதிர் ஷா கிதி பனா.** *1151.* **பின்புறம்: சான் அஹ்த் ஜலூஸ் மைமனத் மனூஸ் ஜர்ப் முர்ஷிதாபாத்.**

306. **அஹமது ஷா.** *தங்கம்.* **முன்புறம்:** *(நடுவில்)* **அஹமத் ஷா துர்-ரி-துரான்.** *சுற்றிலும் (ஈரடியில்)* **ஹுக்ம் ஷுத் அஜ் காதிர் பெசுன் பஹ்மத் பாதுஷா: சிக்கா ஜர் பர் சிம்**

வ ஜர் அஜ் யோஜ் மஹே த பமா. *1169.* பின்புறம் : சன் 5 ஜலூஸ் மைமனுத் மனூஸ் ஜர்ப் தாரு-உல்-அமன் முல்தான்.

307. அஹமது ஷா. *வெள்ளி.* முன்புறம்: *306-ல் உள்ள ஈரடிகளோடு 1173* வருடம். பின்புறம்: ஜர்ப் ஆன்லா *என்பதைத் தவிர மற்றது 306-ல் உள்ளதுபோல்.*

308. தைமூர் ஷா. *வெள்ளி.* முன்புறம்: *(ஈரடியில்)* சிக்கா மி அர்த் திலா வ நுக்ரா அஜ் குர்ஷித் வ மா ; த காங் பர் செஹ் நாக்ஷ் சிக்கா தைமூர் ஷா. பின்புறம்: ஜர்ப் அஸ்ர ஃபல்-இ-பிலாத் அஹமத் ஷாஹி *1207/21.*

309. நூருதீன் ஷா. *வெள்ளி.* முன்புறம்: *(ஈரடியில்)* சிக்கா சுத் ரோஷன் ஐ ஷா நூருதீன் ரய்ஜ் அஜ் மக்தூம். குத்ப்-அல்-அர்ஃபின். பின்புறம் : ஜர்ப் கித்தா காஷ்மீர் சன் அஹ்த்.

அயோத்தி நாணயங்கள்:

310. காஜியுதீன் ஹைதர். *வெள்ளி.* முன்புறம்: *(ஈரடியில்)* சிக்கா ஜர் பர் சிம் வ ஜர் அஜ் ஃபஜி ரப் ஜோ அல்மனுன். காஜியுதீன் ஹைதர் அலி நசாப் ஷா ஜமான் *1234.* பின்புறம்: *புலிகள் கொண்ட அயோத்தியின் கேடயம். அதோடு* தாருல்-இமராத் லக்னேவ் ஜலூஸ் மானூஸ் : சுபா அவாத். *நடுவில்* சன் 5.

311. முகமது அலி. *வெள்ளி.* முன்புறம்: பஜுத் வ கரம் சிக்கா ஐத் தார் ஜஹான் ; முகம்மத் அலி பாதுஷா ஜமான் *1257.* பின்புறம்: *அயோத்தியின் சின்னம் இரண்டு பணியாளருடன். சுற்றிலும்,* ஜர்ப் முல்க் அவாத் பைத்துல்-சுல்தானத் லக்னேவ். சன் ஜலூஸ் மைம்னுத் மனூஸ்.

மைசூர் நாணயங்கள் :

312. திப்பு சுல்தான். *வெள்ளி.* முன்புறம்: முகம்மத் அஹமத் தின் தர் ஜஹான் அஸ்த் ரோஷன் 2 ஃபத் ஹைதர் ஹைதரி பத்தான் சாலா சதா சன் *1218.* பின்புறம் : ஹுஅலோ அல்சுல்தான் ஹைதர் தரீக் சல் சன். அல்-அதில் ஜலூஸ் சயோம் பஹரி சிஹ் 8 ஜலூசி.

313. **திப்பு சுல்தான்.** *வெள்ளி.* **முன்புறம் : முகம்மத் ஹு அல் சுல்தான் ஹைதர் அலூ அல்-அதில் சன்** ***1218.*** **பின்புறம் : சன் 8 பகரி ஹேற பத்தான்.**

314. **திப்பு சுல்தான்.** *செம்பு.* **முன்புறம் :** *இடது சாயலாக ஒரு யானை ; மேலே கொடி ; வாலிற்கு மேலே வருடம்* ***1219.*** **பின்புறம் : ஜரப் தாருல் சல்தனத் உஸ்மானிப் பட்டணம்.**

படம் 30

இந்தோ-போர்த்துகீசிய நாணயங்கள் :

315. **சால்** *(1557–78). செம்பு.* **முன்புறம் :** *போர்த்துகல் நாட்டுச் சின்னம்.* **பின்புறம் :** *வில்லும் அம்புகளும் (4 பஜாருக் கோஸ்).*

316. **டையூ** *(1683–1706). வெள்ளி.* **முன்புறம் :** *போர்த்துகல் நாட்டுச் சின்னம்.* **பின்புறம் :** *செயின்ட் ஜார்ஜ் சிலுவை ; அதற்கு மேலே குருத்தோலை (ஸெராபிம்).*

317. **பேசின்** *(1706–50). ஈயம்.* **முன்புறம் :** *போர்த்துகல் நாட்டுச் சின்னம் ; இடது புறம் C, வலது புறம் B.* **பின்புறம் :** *புனித கத்தரீனின் சிலுவைச் சின்னம். (10 பஜாருக்கோஸ் மதிப்பில் ரோடா).*

318. **கோவா** *(?) (1740). வெள்ளி.* **முன்புறம் :** *போர்த்துகல் நாட்டுச் சின்னம்.* **பின்புறம் :** *ஏசுநாதரின் சிலுவை வடிவம். சிலுவை முகப்பில் வருடம் 1740 (ஸெராபிம்).*

319. **கோவா** *(1777–86). தங்கம்.* **முன்புறம் :** *போர்த்துகல் நாட்டுச் சின்னம்.* **பின்புறம் :** *புனித தோமையார் சிலுவை. மேலே 12 X , கீழே 178 (12 ஸெராபிம்ஸ் மதிப்புள்ள சாந்தோம்).*

இந்தோ-டேனிஷ் நாணயங்கள்:

320. **ஏழாம் கிறிஸ்தியன்** *(1766–1808). செம்பு.* **முன்புறம் :** *மகுடம் கீழே C 7.* **பின்புறம் :** *X காஸ் 1790.*

321. **ஆறும் ஃபிரெடரிக்** *(1808–1839). வெள்ளி.* **முன்புறம் :** *மகுடம் ; கீழே FR VI.* **பின்புறம் :** *2 ஃபனோ 1818.*

322. **எட்டாம் கிறிஸ்டியன்** *(1839–48). செம்பு.* **முன்புறம் :** *மகுடம், கீழே CR VIII.* **பின்புறம் :** *X காஸ் 1842.*

இந்தோ-டச்சு நாணயங்கள் :

323. *வெள்ளி (சில்வர் ரைடர் எனப்பட்ட துகாதூன்).* **முன்புறம் :** *வலதுபுறமாக ஓடும் குதிரைமீது கவச உடையணிந்த வீரன்; கீழே மேற்கு ஃபிரிசிய மாநில அரசின் சின்னமும்* MON : FOED : BELG : PRO :WEST F. IN USUM SOCIENT: IND : ORIENT *என்ற வாசகமும்.* **பின்புறம் :** *மத்திய அரசின் சின்னம்கொண்ட கேடயத்தைத் தாங்கியிருக்கும் இரு சிங்கம்; கீழே* VOC *மகுடத்திற்கு மேல் 1728 என்று வருடம்.* CONCORDIARES PARVAE CRESCENT *என்ற வாசகம்.*

படம் 31

324. வெள்ளி. *(3 கில்டர்).* **முன்புறம் :** *(நீர்லாந்தியா என்று பின்னர் பெயர்பெற்ற) பல்லாஸ், சுதந்திர குல்லாய் அணிந்து ஈட்டியைப் பிடித்துக்கொண்டு நிற்கும் சின்னம். வாசகம் :* MAC NITTMVR HANCNVCMUR. **பின்புறம் :** *மத்திய அரசின் கேடயச் சின்னம்; இடது புறம் 3 என்றும் வலதுபுறம்* GC *என்றும்; கீழே* VOC *வாசகம்.* MO : ARG ORD : FOED : BELG : TRAI.

325. செம்பு. *(டாயிட்டு).* **முன்புறம் :** *மேற்கு ஃபிரிசியாவின் கேடயம் மகுடம் சூட்டப்பட்டுள்ளது.* **பின்புறம் :** *நடுவில்* VOC, *மேலே வில் போன்ற முடிச்சும் டர்னிப் கிழங்கும்; கீழே 1736.*

326. செம்பு. *(இரண்டு ஸ்திவர்).* **முன்புறம் :** *பருவெட்டாகப் பொறிக்கப்பட்ட பெண் தெய்வம்.* **பின்புறம் :** *தமிழில் நாகப்பட்டணம்.*

இந்தோ-பிரெஞ்சு நாணயங்கள் :

327. செம்பு. *(பிச்சே).* **முன்புறம் :** *5 ஃபுளுய்யெ-தெ-லிஸ்.* **பின்புறம் :** *1730.*

328. வெள்ளி. முன்புறம் : *பாரசீக மொழியில்* **:.பிரான்ஸ் கம்பெனி. பின்புறம் : புதுச்சேரி சன்** *1738; அதோடு* P *என்ற எழுத்தும்.*

329. **செம்பு**. **முன்புறம்:** *பூமி உருண்டைமீது இறக்கை விரித்துள்ள சேவல்; கீழே 1836.* **பின்புறம்:** *தமிழில்* **புதுச்சேரி.**

கிழக்கிந்தியக் கம்பெனி நாணயங்கள்:

330. **தங்கம்.** *(மதராஸ் வெளியீடு).* **முன்புறம்:** *மூன்று தெய்வ வடிவங்கள்.* **பின்புறம்:** *குவியலாகவும் கரடுமுரடாகவும்.*

331. **தங்கம்.** *(மதராஸ் வெளியீடு).* **முன்புறம்:** *வேங்கடாசலபதி.* **பின்புறம்:** *கரடுமுரடாக உள்ள முகப்பில் ஐந்து முனைகள் கொண்ட நட்சத்திரம்.*

332. **வெள்ளி.** *(மதராஸ் வெளியீடு).* **முன்புறம்:** *நின்றுகொண்டிருக்கும் விஷ்ணு.* **பின்புறம்:** *ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட இரண்டு ( ).*

333. **வெள்ளி.** *(மதராஸ் வெளியீடு).* **முன்புறம்:** *ஒன்பது நட்சத்திரங்களும் இந்துக் கோயிலின் கோபுரமும். ஆங்கிலத்தில்* QUARTER PAGODA *என்றும், பாரசீகத்தில்* **நிம் ஹுன் பூலி** *என்றும்.* **பின்புறம்:** *புள்ளிகளாலான மூன்று வட்டத்திற்குள் நின்றுகொண்டிருக்கும்* **விஷ்ணுவின்** *உருவம்; அதைச் சுற்றிலும்* **கால் வராகன்** *என்பதைக் குறிக்கும் தமிழ், தெலுங்கு வாசகங்கள்.*

334. **செம்பு**. *(பம்பாய் வெளியீடு).* **முன்புறம்:** *கம்பெனியின் சின்னம் கொண்ட கேடயம்; சுற்றியுள்ள வாசகம்:* HON : SOC : ANG : ENG : IND : ORI (*தொகுக்கப்பட்டுள்ள படத்தில் இது விளிம்பிற்கு வெளியே போய்விட்டது*). **பின்புறம்:** *நடுவில்* MON BOMBAYE ENGLIC REGIMS A°7° *அதைச் சுற்றிலும்* A : DEO. PAX & INCREAMENTVM. (*இதில் ஒரு பகுதிதான் நாணயத்தில் உள்ளது*).

335. **தங்கம்.** *(பம்பாய் வெளியீடு).* **முன்புறம்: சிக்கா முபாரக். ஆலம்கீர் பாதுஷா காஜி சன்** *1184 என்று பாரசீகத்தில்.* **பின்புறம்:** BOMBAY 1770, 15 RUP. S.

படம் 32

336. **வெள்ளி.** *(பம்பாய் வெளியீடு).* **முன்புறம்:** THE RUPEE OF BOMBAIM; *அதைச் சுற்றிலும்* BY THE AUTHORITY OF CHARLES THE SECOND 1877. **பின்புறம்: இங்கிலாந்து**

மன்னரின் மகுடமும் முத்திரைக் கேடயமும்; அதோடு KING OF GREAT BRITTAINE FRANCE X IRELAND.

337. வெள்ளி. *(பம்பாய் வெளியீடு).* **முன்புறம்: சிக்கா ஜாத் தௌரான் கிங் வில்லியம் ஜீன் குயீன் மேரி. பின்புறம்; சிக்கா ஜலூஸ் ஆங்கிரஸ் கம்பெனி ஜர்ப் மும்பாய் 6.**

338. வெள்ளி. *(முகலாயப் பாணியில், பம்பாய் வெளியீடு).* **முன்புறம்: சிக்கா முபாரக் பாதுஷா காஜி ஆலம்கீர். பின்புறம்: மைமனத் மனூஸ் சன் ஜலூஸ் 9 ஜர்ப் மும்பாய்.**

339. வெள்ளி. *(முகலாயப் பாணியில், சூரத் நாணயச்சாலை).* **முன்புறம்: சிக்கா முபாரக் பாதுஷா காஜி** *(ஷா ஆலம்),* **பின்புறம்: சன் ஜலூஸ் ஜர்ப் சூரத்;** *ஆங்கிலத்தில் 1825.*

340. வெள்ளி. *(முகலாயப் பாணியில், ஆற்காடு நாணயச்சாலை).* **முன்புறம்: சிக்கா முபாரக் பாதுஷா காஜி முஹம்மத் அஸீசுதீன் ஆலம்கீர்** *1192.* **பின்புறம்: மைம்னத் மனூஸ் சன் ஜலூஸ் 6 ஜர்ப் ஆற்காட்.** *நாணயச்சாலை சின்னமாகத் திரிசூலம்.*

341. வெள்ளி. *(முகலாயப் பாணியில், கல்கத்தா நாணயச்சாலை).* **முன்புறம்: சிக்கா ஐத் பர் ஹ∴ப்த் கிஷ்வர் சாயஹ் ∴பஸ்ல் ஷா ஆலம் பாதுஷா ஹமி தின் அல்லா முகம்மத்** *1186.* **பின்புறம்: ஜர்ப் கல்கத்தா சன்** *4 என்பதைத் தவிர, மற்றவை 320-ல் உள்ளதுதான்.*

342. வெள்ளி. *(முகலாயப் பாணி, முர்ஷிதாபாத் நாணயச் சாலை).* **முன்புறம்:** *321-ல் உள்ளதுதான்.* **பின்புறம்: ஜர்ப் முர்ஷிதாபாத் சன்** *19 என்பதைத் தவிர, மற்றது 321-ல் உள்ளபடியே.*

343. செம்பு. *(வங்காள வெளியீடு).* **முன்புறம்: ஷா ஆலம் பாதுஷா சன் ஜலூஸ்** *37.* **பின்புறம்: அத் பாய் சிக்கா** *என்று வங்காள, பாரசீக, கைத்தி எழுத்துக்களில்.*

344. தங்கம் *(இரண்டு மொஹர்).* **முன்புறம்:** *நான்காம் வில்லியம் மன்னரின் தலை; அதைச் சுற்றி* WILLIAM III KING *1835.* **பின்புறம்:** *புலியும் புல்லின மரமும். மேலே* EAST INDIA COMPANY *கீழ்* TWO MOHURS *என்று ஆங்கிலத்திலும் பாரசீகத்திலும்.*

345. விக்டோரியா ராணி *வெள்ளி.* **முன்புறம்:** *விக்டோரியா ராணியின் தலை; சுற்றிலும்* VICTORIA QUEEN. **பின்புறம்:**

நடுவில் ONE RUPEE என்று ஆங்கிலத்திலும் பாரசீகத்திலும்; சுற்றி EAST INDIA COMPANY 1840.

பிரிட்டிஷ் நாணயங்கள் :

346. விக்டோரியா மகாராணி. *வெள்ளி.* **முன்புறம் :** *மகுடமும் உடுப்பும் அணிந்துள்ள விக்டோரியா ராணியின் மார்பளவு உருவம்; சுற்றிலும்* VICTORIA EMPRESS. **பின்புறம் :** *மலர் வளையம் நடுவில்* ONE RUPEE INDIA 1895.

347. ஏழாம் எட்வர்டு. *வெள்ளி.* **முன்புறம் :** *மன்னரின் மொட்டைத்தலை ; சுற்றிலும்* EDWARD KING EMPEROR. **பின்புறம் :** *மலர் வளைவிற்குள்* ½ PICE INDIA 1903.

348. ஐந்தாம் ஜார்ஜ். *வெள்ளி.* **முன்புறம் :** *மகுடம் அணிந்துள்ள மன்னரின் தலை ; சுற்றிலும்* GEORGE V KING EMPEROR. **பின்புறம் :** *மலர் வளைவிற்குள்* ONE RUPEE INDIA 1911, *பாரசீகத்தில்* **ஏக் ருபிய்யா.**

349. ஐந்தாம் ஜார்ஜ். *நிக்கல்.* **முன்புறம் :** *348-ல் உள்ளதைப் போலவே.* **பின்புறம் :** *நடுவில்* INDIA 1919 8 ANNAS. *சுற்றிலும் மலர் வளைவுக்குள் நாகரி, பாரசீகம், தமிழ், வங்காள மொழிகளில் அதன் மதிப்பு.*

350. ஆறும் ஜார்ஜ். *செம்பும் நிக்கலும்.* **முன்புறம் :** *மகுடத்துடன் மன்னரின் தலை ;* GEORGE VI KING EMPEROR. *348-ல் உள்ளதைப்போல்தான் ; வருடம் மட்டும் வேறு.*

351. ஆறும் ஜார்ஜ். *(துவாரமுள்ளது). செம்பு.* **முன்புறம் :** *மகுடம்,* INDIA 1947. 1 PICE. **ஏக் பைசா** *என்று நாகரியிலும் பாரசீகத்திலும்.* **பின்புறம் :** *மலர் வளைவு.*

படம் 34

இந்திய அரசுகள்:

352. பாரத்பூர் *(ஜஸ்வந்த் சிங், கி.பி. 1825–1893). வெள்ளி.* **முன்புறம் :** *விக்டோரியா ராணியின் தலை ; சுற்றிலும்,* **ஜளுப் மல்கா முவாஜமா மல்கா குயின் விக்டோரியா ஃபிர்மன் ரவாய்-ஹிந்த் வ இங்கிலாந்த் சன் 1858. பின்புறம் : சிக்கா சர்க்கார் ஜவலா குத்ரர் (?) ஆங்கி ரெஜி ஜர்ப் பிரிஜ் இந்தெர்பூர்.**

353. **ஜெரா** *(முகம்மது இஸ்மாயில்). செம்பு.* **முன்புறம் :** நடுவில் *ஒரு கொடி ; மேலே* **சன் 1311;** *கீழே* **தோ பைசா.** *சுற்றிலும்* **சர்க்கார் ஜெரா 1951** *என்று நாகரியில்.* **பின்புறம் :** *பாரசீகத்தில்* **ஜர்ப் சர்க்கார் ஜெரா.** *சுற்றிலும் ஆங்கிலத்தில்* H. H. THE NAWAB OF JAORA 1894.

354. **இந்தூர்** *(சிவாஜி, கி.பி. 1886–1903). செம்பு.* **முன்புறம் :** *இடது சாயலாகப் படுத்திருக்கும் காளை ; சுற்றிலும் நாகரியில்* **ஸ்ரீ மந்த் மகாராஜா ஒல்கார் சர்க்கார் இந்தூர். பின்புறம் :** *மலர் வளைவிற்குள் நாகரியில்* **பாவ் அணா** *1949.*

355. **குவாலியர்** *(இரண்டாம் மாதோ ராவ், 1886). செம்பு.* **முன்புறம் :** *நடுவில் சுருண்டுகொண்டிருக்கும் நல்ல பாம்பில் ஒரு செங்கோலும் திரிசூலமும். சுற்றிலும்,* நாகரியில் **ஸ்ரீ மாதவராவ் ம சின்தே அலிஜபஹாதூர். பின்புறம் :** *மலர் வளைவிற்குள்,* **குவாலியர் பாவ் அணா சம்மத்** *1954 என்று நாகரியில்.*

356. **ஜோத்பூர்** *(எட்டாம் எட்வர்டு பெயரில்) செம்பு.* **முன்புறம் :** *பாரசீகத்தில்* **ஷா இங்கிலிஸ்தான் எம்பரர் ஹிந்துஸ்தான் எட்வர்ட் அஷ்டம் முபாரக் ப ஜமான்** *என்றும், நாகரியில்* **ராம்** *என்றும்.* **பின்புறம் : மகாதிராஜ ஸ்ரீ உம்மெத் சிங் பஹாதூர் 1936 ஜர்ப் ஜோத்பூர் பாவ் அணா.** *(இவ்வாசகம் நாணயத்தில் முழுமையாக இல்லை.)*

357. **தார்** *(ஆனந்த ராவ், 1857–1898). செம்பு.* **முன்புறம் :** *இடதுசாயலாக அனுமாரின் உருவம்.* **பின்புறம் :** நாகரியில் **தார் ச** *128.*

358. **புதுக்கோட்டை.** *செம்பு.* **முன்புறம் :** *அமர்ந்திருக்கும் பிரகதாம்பாள் (பார்வதி).* **பின்புறம் : விஜயா** *எனத் தெலுங்கில்.*

359. **மைசூர்.** *(கிருஷ்ணராஜ உடையார்). செம்பு.* **முன்புறம் :** *இடது சாயலில் நேராகப் பார்த்துக்கொண்டிருக்கும் சிங்கம்; கன்னடத்தில்* **ஸ்ரீ சாமுண்டி. பின்புறம் :** நடுவில் **கிருஷ்ணன்** *என்று கன்னடத்தில். சுற்றிலும்,* **ஜரப் மஹிசூர்** *என்று பாரசீகத்தில்,* **மயிலி காசு 20** *என்று கன்னடத்தில்,* XX CASH *என்று ஆங்கிலத்தில்.*

360. **திருவாங்கூர்.** *வெள்ளி.* **முன்புறம் :** *மலர் வளையத்தில் சங்கு ; சுற்றிலும் மலையாளத்தில்* **திருவிதாங்கூர் அர ரூபா**

1064. பின்புறம்; நடுவில் HALF RUPEE 1889; சுற்றிலும் RAMA VURMA TRAVANCORE.

361. ஹைதராபாத். வெள்ளி. **முன்புறம்**: நடுவில் **சார்மினார்.** பாரசீகத்தில் **நிஜாமுல் முல்க் அச:ப்ஜா பகதூர் சன் 1327.** சார்மினாரின் நுழைவாயிலில் **மிம்** என்ற எழுத்துக்கள். **பின்புறம்**; நடு வட்டத்தில் அதன் மதிப்பு. சுற்றிலும் **ஜலூஸ் மைமனத் மனூஸ் ஜர்ப் :.பர்குந்தா பன்யாத்.**

இந்தியக் குடியரசு நாணயங்கள் :

362. வெள்ளி. (நினைவு நாணயம்). **முன்புறம்**: ஜவஹர்லால் நேருவின் வெறும் (குல்லாயற்ற) தலை; மேலே JAWAHAR-LAL NEHRU; கீழே **1889–1964. பின்புறம்**: அசோகத் தூணின் தலைப்பு; கீழே பெரிதாக **1**; மேலே **பாரத்** என்று நாகரியிலும் INDIA என்று ஆங்கிலத்திலும்; கீழே **ருபியா** என்று நாகரியிலும், RUPEE என்று ஆங்கிலத்திலும்.

363. செம்பும் நிக்கலும் ($\frac{1}{2}$ ரூபாய்). **முன்புறம்**: அசோகத்தூண் தலைப்பு; சுற்றிலும் GOVERNMENT OF INDIA **பின்புறம்**: நாணய மதிப்பு ஆங்கிலத்திலும் நாகரியிலும் வருடம் **1956.**

364. செம்பு. பைசா. முன்புறம்: 363-ல் உள்ளதைப் போல் (விளக்கமில்லை.) **பின்புறம்**: பறந்து செல்லும் குதிரை. ONE PICE என்று ஆங்கிலத்திலும் **ஏக் பைசா** என்று ஹிந்தியிலும்; கீழே **1953.**

365. செம்பு. பைசா (தசாம்ச முறையில்). **முன்புறம்**: 363-ல் உள்ளதுபோல்தான்; ஆனால் நாகரியில் **பாரத்** என்றும், ஆங்கிலத்தில் INDIA என்றும் கிடையாது. **பின்புறம்**: நடுவில் பெரிய **1**; மேலே **ருபயே கா சோன்வா பாகர்**; கீழே நாகரியில் **ஏக் பைசா** என்பதோடு **1964** வருடமும்.

366. அலுமினியம். பைசா (நடப்பிலுள்ளது). 365-ல் உள்ளதைப்போல். **பின்புறம்**: நடுவில் பெரிய **1**; அதற்கிரு புறங்களிலும் **பைசா** என்று நாகரியிலும் ஆங்கிலத்திலும்; கீழே வருடம் **1967.**